உ

# திருக்குறள் - உரைவளம்

## அறத்துப்பால்

தொகுப்பாசிரியர்

**மகாவித்வான், தண்டபாணிதேசிகர்**

எழுதிய

குறிப்புரை ஆராய்ச்சிப் பேருரை முதலியவற்றுடன்

★

ஏவிளம்பி

1957

முதற் பதிப்பு—1950
திருத்திய இரண்டாம் பதிப்பு—1957

பதிப்புரிமை தொகுப்பாசிரியர்க்கே

## இரண்டாம் பதிப்பின்

# முகவுரை

சிவகாமி யம்மையுடன் எழுந்தருளியுள்ள ஆனந்தக் கூத்தப் பெருமான் திருவருளால் திருக்குறள் அறத்துப் பால் உரைவளம் இரண்டாம் பதிப்பு வெளிவருகிறது. இப் பதிப்பில் ஓர் உரையும் புதிதாகச் சேர்க்கப் பெற்றுள்ளது. இவ்வுரை பெரும்பாலும் மணக்குடவர் உரையை ஒத்திருத்தலின் வேறுபட்டுள்ள இடங்களும், விசேட வுரைகளிற் சில பகுதிகளுமே அங்கங்கே சேர்க்கப் பெற்றன. இது பரிப்பெருமாள் உரையென்று அதன் பிரதியிற் குறிக்கப்பெற்றுள்ளது.

மணக்குடவர், பரிமேலழகர், பருதி. பரிப்பெருமாள் உரைப் பிரதி ஏடுகள் சில கணியம்பாடி, திருநெல்வேலி, முதலிய பல இடங்களிலிருந்தும் கிடைத்தன. அதனால் இப்பதிப்பு பல திருத்தங்களைப் பெற்றது.

பரிப் பெருமாள் உரைப் பிரதியின் காகிதக் கையெழுத்துப பிரதி ஒன்றை உதவி முதன் முதலில் பேருக்கந் தந்தவர் சென்னை கிறிஸ்தவ உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் வித்வான், உயர்திரு. இலந்தையடிக் கவுணிய இரா. சாம்பசிவ சர்மா அவர்கள். அவர்கள் காலத்தாற் செய்த நன்றி மிகமிகப் பாராட்டுதற்குரியது.

செந்தமிழ்ப் பேரறிஞர்களாகிய நண்பர்கள் சிலர் என் மீது வைத்த பேரன்பால் முதற் பதிப்பிற் சில திருத்தங்களைத் தெரிவித்தார்கள். அவைகளும் இப்பதிப்பில் இடம் பெற்றுள்ளன.

மேற்கோட்பகுதி, ஒப்புமைப் பகுதிகளில் இருநூறுக்கு மேற்பட்ட குறிப்புக்கள் புதிதாக இணைக்கப்பெற்றுள்ளன. இப் பகுதி மேலும் வளர்ச்சிக்குரியது.

இப் பதிப்பு வெளிவர ஆயிரக்கணக்கான ரூபாய்கள் தேவையாக இருந்தது. அதனை என் உழுவலன்பரும், செந்தமிழ்த் தொண்டரும், வலக்கை செய்வது இடக்கைக்கும் தெரியாத

வண்ணம் அடக்கத்துடன் உதவுபவரும் ஆகிய நாகை, மஞ்சட் கொல்லை உயர்திருவாளர் ராம. சம்பந்தமூர்த்தி முதலியார் அவர்களிடமும், அவர்கள் தம்பி என் மாணுக்கர் ராம. திருநாவுக்கரசு முதலியார் பி. ஏ. ராம. மாணிக்க முதலியார் அவர்களிடமும் தெரிவித்துக் கொண்டேன். அவர்கள் நூலின் சிறப்பையும், அதன் தேவையையும் எண்ணி எனக்கு உதவி செய்து ஏராளவேனும் பொருளாதாரத் துறையிலும் என்னை உயர்த்த வேண்டும் என்ற உபகார சிந்தையுடன், தேவையான பொருளை முன் பணமாகக் கொடுத்து விற்பனையினின்று திரும்பப் பெற்றுக் கொள்ளுவதாக உதவினர்கள். அவர்களுடைய பெருந்துணையின் றேல் இப்பதிப்பு வெளிவந்திராது.

இத்தகைய செந்தமிழ்ச் செல்வர்களின் அருமைத் தந்தையார் மஞ்சட் கொல்லை **இராமசாமி முதலியார்** அவர்கள் மிக இளகிய மனமுடையவர்கள். சிவநெறி பிறழாத சிந்தையர். உதார குணம் உடையவர்கள். தமிழுக்கும் சைவத்திற்கும் சமூகத்திற்கும் உற்றவிடத்துதவி வந்தவர்கள். எனக்கு மிக நெருங்கிய நண்புடையவர்கள். அவர்களுடைய **நினைவு மலராக** இப்பதிப்பை வெளியிடுகிறேன்.

எவ் வகையினும் தளர்ச்சியுண்டாகா வண்ணம், பல்லாற்றானும் உதவியும் ஊக்கந் தந்தும் குறிப்பறிந்து அடியேனைப் பாதுகாத்து வரும் திருவாவடுதுறை யாதீனம் இருபத்தோராவது குருமகா ஸந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ **சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகளுடைய** திருவடிக் கமலங்களை வாழ்த்தி வணங்குகின்றேன்.

அடியேன் விண்ணப்பித்துக் கொண்ட போது அருளாணை தந்துதவி அடியேனை அவையேற வைத்த **அருட்குரு தருமபுர ஆதீனம்** இருபத்து நான்காவது குருமகா ஸந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ **சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள்** அவர்கள் திருவடிகட்கும் என்றென்றும் நன்றிமறவாக் கடப்பாடுடையேன். செய்ந்நன்றி கொன்ற மகனுக்கு உய்வில்லை என்பதை என்றும் கடைப்பிடித்து ஒழுக முயற்சிப்பவன் என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடியேற்கு அறிவூட்டிப் பல்வகையானும் தமிழ்ப் பணிக்கென்று ஆளாக்கிய ஆசிரியப் பெருந்தகை மகாமகோபாத்யாய ஐயரவர்களின் திருவடி என்றும் என் நெஞ்சை விட்டகலா.

அவ்வண்ணமே சிதம்பரத்திற் கலைக் கோயில் கட்டி அதில் முதன் மாணவனாக என்னைச் சேர்த்துக் கொண்டு மாகாண முதல் மாணவனாகவே தேர்ச்சியடைய உதவிய வள்ளல் **ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார்** அவர்களுக்கும், அவர்கள் அருமைத் திருக்குமாரர் பெருவள்ளல் **ராஜா ஸர் முத்தையாச் செட்டியார்** அவர்களுக்கும் என்றென்றும் என்நன்றி யுரியதாகுக. பல நூல்களுக்கு ஆசிரியனாகவும், பதிப்பாளனாகவும் ஆக்கிய பெருமை இவர்களையே சாரும்.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை தாபகரும், அதிபரும் ஆகிய உயர்திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்கள் உள்ளும் புறமும் ஒத்துப் பழகும் ஒழுக்கமும் அன்பும் உடையவர்கள். அவர்கள் உதவியே இப்பதிப்பு வெளிவர உறுதுணையாயிருந்தது. ஆதலின் அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றி.

இதனைச் சீரிய முறையில் அச்சிட்டுக் கொடுத்த அருட்பெருஞ் ஜோதி யச்சக உரிமையாளர் உயர்திரு மா. இராசமாணிக்கம் பிள்ளை அவர்களுக்கும், ஒப்பு நோக்கியும், ஏடுகள் தந்தும், படிகள் தந்தும் உதவிய அனைவருக்கும் அடியேனுடைய நன்றி.

இப் பதிப்பும் முற்பதிப்பைப் போலவே செந்தமிழ்ச் செல்வர்களின் நன்மதிப்பைப் பெறும். அடுத்து, ஏனைய பால்களும் பலவகையான திருத்தங்களுடனும், புதிய சேர்க்கைகளுடனும் வெளிவரும் என்ற எதிர் நோக்கு உடையேன்.

என்னை யறியாமலே இப்பதிப்பினும் குற்றங்கள் கலந்திருக்கக் கூடும். அதனை அன்பர்கள் அடியேற்கு எடுத்துக் காட்டின் அடுத்த பதிப்பில் திருத்திக் கொள்வதோடு, என்றும் மறவா நன்றியும் உடையனுவேன் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ச. தண்டபாணி**

தமிழ் ஆராய்ச்சி விரிவுரையாளன்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

சிதம்பரம்
16—9—57

முதற்பதிப்பின்

# முகவுரை

**" எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பதறிவு."**

உலகத்தார் உள்ளத்துளெல்லாம் உள்ள ஒரு நூல் திருக்குறள். சொல்லுறுதியும் ஒழுக்க உயர்வும் ஒரு சேர அளிக்கும் திருநூல் திருக்குறள். அளவிற் சிறிதாய் ஆழத்தில் பெரிதாய் இருக்கும் அனுபவக் கடல் திருக்குறள். தான் தோன்றிய காலத்திலேயே எல்லாக் கவிஞர் நாவிலும் தவழ்ந்து கருத்தில் குடியேறி கவிதை மாளிகையில் அரசு வீற்றிருக்கின்ற தமிழரசியின் குழந்தை திருக்குறள். திருவள்ளுவ தேவநாயனாரின் வாழ்க்கைச் சாணையில் ஒளி தீட்டப்பெற்ற அறிவுமணிகள் திருக்குறள். ஒரு விதி நூலுக்கு அமைய வேண்டிய இலக்கணங்கள் முழுதும் செறிந்த அழகிய நூல் திருக்குறள்.

நமது வாழ்நாளிலேயே நாம் கண்ட கவியாகிய பாரதியார் திறமான புலமைக்கு வரம்பு கட்டுகிறார் வெளிநாட்டார் வணக்கஞ் செய்தலை. அங்ஙனமாக, இந்நூலை உலகமுழுதும் போற்றுகின்றது. இந்நூலைத் தமதாக்கிக் கொள்வதால் வேற்றுமொழிகள் விளக்கம் பெற விழைகின்றன. இந்நூலுள் வேண்டாத சொற்களைக் காண்டல் அரிது.

**குறள் கூறுவது என்ன !**

ஒரு மனிதன் வாழ்வாங்கு வாழவேண்டும். வாழ மனையும், மனையாளும், மக்களும், மாண்பும், மன்னனும், மாட்சி சால் ஆட்சியும் தேவை. தேவை நிறைந்துள்ள இடத்திலே தோன்றுவது இன்பம். புறத்தேவைகள் அனைத்தும் பொருந்திய இடத்திலே அகத் தேவையாகிய இன்பநிலையும் தானேவந்து எய்தும் அல்லவா? ஆதலால் மனிதன் ஒழுக்கத்தோடு வாழ்தலையும், பணம் தேடுதலையும், பாதுகாக்கப் பெறுதலையும், ஊடியும் கூடியும் இன்பம் நுகர்தலையும், தொட்டனுபவிக்கும் இந்த இன்பத்தையே விட்டனுபவிக்கும் வீட்டின்பத்திற்கு வாயிலாக்கும் உள்ளத்துறவு நிலையினையும் உணர்த்தி முப்பாலுள் நாற்பால் கூறுவது இந்நூல்.

**குறளின் குறிக்கோள் :**

உரைகள் மாறுபட்டாலும் திருக்குறள் முழுதும் ஊடுருவி யுள்ளதான ஒரு அடிப்படையான கருத்து இல்லாமல் இல்லை. மக்கள் அனைவரும் ஓரினம் ; மறை ஓதுவான் பார்ப்பான் ; மண் ணுள்வான் மன்னன் ; உணவு அளிப்பான் உழவன் ; விற்பான் வாணிகன் ; இப்படி மக்களுக்குள் தொழில் பாகுபாட்டைக் கண் டது. தொழில் மாறினல் பாகுபாடும் மாறும். இங்ஙனம் தொழில் மாற்றம் இருப்பினும் அனைவர்க்கும் வாழ்க்கை பொது. அவ்வாழ்க்கை தூயதாய் இருத்தல் வேண்டும். ‘தூய வாழ்க் கைக்குத் தோன்றும் இடையூறுகள் இவை’ ‘அவற்றை நீக்கும் உபாயங்கள் இவை’ என்பனவற்றை மனிதன் அறிந்து நடந்து கொள்ள வேண்டும். படிப்பும் பழக்கமுமே உலக நடைக்கு இரண்டு கால்கள். மனிதனுக்கு ஒன்று இருந்து ஒன்று இல்லா விட்டாலும் நொண்டியே. ஆதலால் மனிதன் அகக் கண்ணும் பெற்று; அறிவுத் துணைகொண்டு மெய்ப்பொருள் கண்டுவாழ்ந்து, வாலறிவன் திருவடி போற்றி உய்யவேண்டும் என்பது இந்நூலின் அடிப்படையான குறிக்கோள்.

இத்தகைய சிறந்த குறிக்கோளுடன் ஆக்கப்பெற்ற இந்நூல் புலவருடைய புலநிலத்திற்கு ஒரு அளவுகோல் போல்வது. திருமால் ஈரடியால் அளந்த மண்ணை வள்ளுவர் ஓரடிமுக்காலால் அளந்தார் என்பர் ஒருவர். ஆம்! அது உண்மைதான். தருமர் முதலாகப் பரிமேலழகர் இறுதியாக உள்ள பத்துப்பேர்களுடைய அறிவையும் அநுபவத்தையும் அளந்துவிட்டது இந்நூல். அங்ஙனம் அளந்தும் அவர்கள் அறிவின் அளவாக அடங்கி விடாது அதற்கும் அப்பாற்பட்டதாய், வருகின்ற பலருடைய அறி வையும் அளந்து காட்டிக்கொண்டு அவர்கட்கும் அப்பாற்பட் டிருக்கிறது.

**திருக்குறளும் - சிவமும் :**

தொன்று தொட்டு ஆறு ஆருகப் பிரிக்கப்பெற்ற சமயங் களாலும் ஆராயப்படும் நூல் இது. அந்தந்தச் சமயவாதிகளும் தங்களுடையது தங்களுடையது என்று உரிமை வழக்காட நிற்பது இது. இந்தச் சமயவாதிகளின் அறிவுநிலையைக் கடந்து நிற்கும் ஒரு தனிச் செம்பொருளாய் உள்ளது இது. காலத்தோடும் சாதி சமயச் சூழலோடும் பொருந்தி விதிவிலக்குகளைப் பகுக்கின்ற வேதாகமங்களின் இலட்சியத்திற்கு அப்பாற்பட்டது இந்நூல்;

உணர்ச்சிப் பெருக்கெடுத்த ஒவ்வொருவர் உள்ளத்திலும் உணர்வாய் மன்னி இருப்பது இந்நூல்; மக்களைத் திருத்தும் வகையிலும் வளர்க்கும் வகையிலும் தாயும் தந்தையுமாய் இருப்பது இந்நூல்; உலகமெங்கும் வியாபித்து இருப்பது இந்நூல்;' என்ற எண்ணங்கள் என்மனத்து எழுகின்றபோது, "அறுவகைச் சமயத்தோர்க்கும்" என்ற சித்தியார் சிவவணக்கச் செய்யுளில் அடியேனுடைய கள்ளமுங் கலந்து,

**அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேறும்**
**குறியது உடைத்தாய் வேதாகமங்களின் குறியிறந்து அங்கு**
**அறிவினுள் அறிவாய் மன்னி அம்மையோடு அப்பனுகிச்**
**செறிவொழியாது நின்ற திருக்குறள் சிந்தை சேர்ப்பாம்.**

என்ற பாடல் வரும். நான் அதனைப் பாடி இன்புறுவதுண்டு.

**உரை பலவாயினது ஏன் ?**

இந்நூலுக்கு, பத்துப்பேர் உரை வகுத்துள்ளார்கள். இன்றுவரையில்கூட திருக்குறளுக்கு உரைகாணும் முயற்சி ஓய்ந்தபாடில்லை. எத்தனையோ விளக்க உரைகள்; குமரர் உரைகள்; குழந்தை உரைகள். காலம் போகப்போக மக்களின் கருத்து எப்படி எப்படியோ உருவாகிக்கொண்டுவருகின்றது. அவற்றிற்கு ஏற்பத் திருக்குறளுக்கு உரையும் பெருகிக்கொண்டே வருகிறது. திருக்குறள் கண்ணுடியிலே அவரவர்களும் தங்கள் தங்கள் முகத்தைப் பார்க்கும்போது அதுதான் அக்கண்ணுடியில் இருப்பதாக அறிகிருர்கள். இவற்றின் வேருக நின்று எல்லாவற்றையும் ஒருசேர இயைத்துப் பார்த்து அறிபவனே இவற்றின் ஏற்றத் தாழ்வுகளைக் காண இயலும். அதுநிற்க.

**ஏனைய உரைகள் :**

பதின்மர் உரைகளுள், பரிமேலழகர் உரை எழுந்த பின்பு ஏனையோர் உரைகள் பரவுதல் ஒழிந்தன. 'பரித்த உரை எல்லாம் பரிமேலழகன், தெரித்த உரையாமோ தெளி' என்ற தெளிவுமொழி பிறந்தபொழுது ஏனைய ஒன்பதின்மர் உரைகளையும் பார்ப்பார் யார்? ஆதலால் அவ்வுரைகள் போற்றுவார் அற்றுப் போயின. புலமை வளம்பேணும் புலவர் வீட்டில் பரணலங்காரப் பொருள்களாய் ஆயின. சிதலும் செல்லும் சுவைத்தன. சிற்சில சமயங்களில் புலவர் நாவில் பொருந்தி உரைமணம் வீசத் தொடங்கின. ஆராய்ச்சிக் கட்டுரைகள் வாயிலாக மாதத்தாள்

களில் மலிந்தன. அவ்வுரைகள் அத்துணைச் சொல்லழகும் நடையமைதியும் அற்றனவேயானாலும் கருத்துக்குப் பஞ்சமில்லை என்பதைக் காட்டி நின்றன. உணர்ச்சி வசப்பட்ட அறிவுடை உலகம் புற அழகாகிய நடையழகை நாடாது, அக அழகாகிய கருத்தில் ஈடுபட்டது. அதனால் கருத்துமாற்றத்தில் அழகும் ஆழமும் அமைதியும் கண்டு மகிழ்ந்து வந்தது. அதனை அடியேனும் பல கால் பார்த்து மகிழ்ந்து வருவதுண்டு. அதனாலேயே அவற்றை எல்லாம் ஒருசேரத் தொகுத்து எழுதிப் பார்த்தேன்.

**இலக்கியங்களில் குறள் :**

இலக்கியக் கருவூலங்களில் அங்கும் இங்குமாகக் குறள் மணிகள் சிந்திக் கிடந்தன. கவிப்பொற்கொல்லர்கள் கவிதைப் பொன்னில் குறள் மணிகளைத் தேய்த்தும், உரைத்தும், பிரித்தும், விளக்கியும் வைத்து இழைத்த அணிகளும் பல இலக்கியக் கருவூலத்தில் விளங்கின. அவற்றை எல்லாம் ஒருசேரத் தொகுத்துப் பார்ப்பதில் அடியேனுக்குப் பெருவிருப்பு உண்டாயிற்று. புலவர் வகுப்புக்குப் பாடஞ்சொல்லத் தொடங்கிய 1928-ம் ஆண்டுமுதல் இலக்கண இலக்கிய நூல்களை ஆயும்போதும் பாடஞ் சொல்லும்போதும், முத்தி நிச்சயம் முதலிய சாத்திரப் பேருரை நூல்களை அச்சிட ஆராய்ந்தபோதும் அவ்வுரை நூல்களில் எடுத்தாளும் குறள் பகுதிகளுக்குப் பொருட்சிறப்பு இருப்பதையும் கண்டு மகிழ்ந்து வந்தேன். அவற்றையும் ஒருசேரத் தொகுக்கும் பணியில் ஓய்ந்தநேர வேலையாகப் பல ஆண்டுகள் ஈடுபட்டு வந்தேன். அவற்றை எல்லாம் தொகுத்து எழுதத் தொடங்கிய காலத்தும், ஒப்பு நோக்கித் திருத்திக்கொள்ள நேர்ந்த காலத்தும் பெரிய புத்தக சாலைகளின் உதவியை நாடினேன். அன்றாட வேலையில் உண்டான அலைவால் இந்தத் திருக்குறள் வேலை சிறிது இடையீடுபட்டது. அப்போதெல்லாம் அடியேனுக்கு அறிவுத் துணையாயிருந்து ஊக்கி வந்த உறுதிமொழி 'இடுக்கண் வருங்கால் நகுக ; அதனை அடுத்தூர்வது அஃது ஒப்பது இல்' என்ற வள்ளுவர் வாய்மொழியேயாகும். இடைக்கிடையே 'உலைவு இன்றித் தாழாது உஞற்றுபவர் ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்ற வழித்துணை உள்ளத்திருந்து ஊக்குவிக்கும். அடிக்கடி இந்த ஆராய்ச்சிப்பணி இனிது நிறைவேறுமோ என்ற ஐயம் நிகழும்போதெல்லாம் 'அருமையுடைத்து என்று அசாவாமை வேண்டும், பெருமை முயற்சி தரும்' என்ற குறள் புத்துணர்ச்சியை எழுப்பும்.

**உழைப்பும் ஊக்கமும் :**

சுமார் நான்கு ஆண்டுகட்கு முன்பு சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த்துறைத் தலைவர் **திரு. ரா. பி. சேதுப் பிள்ளை** அவர்களிடம் இதன் அமைப்பையும் தொகுப்பு முறையையும் ஆராய்ச்சிக் குறிப்புக்களையும் காட்டினேன். அவர்கள் ஊக்க உரை பல உதவினார்கள். எனது உயிரமைதியை உபதேச மொழிகளால் உதவும் ஞானநுபவச் செல்வர் ஒருவர் 'உழைப்பிற்கு என்றும் மதிப்பு உண்டு; பொறுமைத் தீயால் அறிவமுதம் குழைந்துவிடாது; ஆறவைத்துப் பலருக்கும் படைக்க; காலமும் கருணையும் உதவப் போகின்றன; பொறுத்து இரு' என்று உபதேசித்தார்கள்.

பின்னர், ஆராய்ச்சிக்கு வேண்டிய எண்ணாயிரம் புத்தகங்களைக் கொண்டு விளங்கும் தருமபுர ஆதீனப் புத்தகசாலையால் இந்த ஆண்டு இந்தப்பணி இறைவன் திருவருளால் இனிது நிறைவேறுவதாயிற்று. புத்தக வெளியீட்டிற்கு என்று இந்த ஆண்டில் 22,000 ரூபாய் உதவி அநேக அழகிய நூல்களை வெளியிட்டவர்களும் தமிழ்ப்பணியும் தெய்வப் பணியுமே தமது ஆட்சி நாளின் அணி எனக்கொண்டு விளங்குபவர்களும் ஆகிய **குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள்** இதனை வெளியிடத் திருவுள்ளங் கொண்டார்கள்.

தமிழ்த்தாயின் உயிர் திருவாசகம்; உடல் திருக்குறள். உடலின்றி உயிரும், உயிரின்றி உடலும் காரியப்படுவதில்லை என்பது வெளிப்படை. ஆதலால் சென்ற ஆண்டில் மண்சுமந்து கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு புண்சுமந்த திருமேனிச் செந்தமிழ்ச் சொக்கரது பண்சுமந்த பாடலாகிய திருவாசக உயிர் நூலை ஆவணிமூலத் திருநாளில் **ஸ்ரீ-ல-ஸ்ரீ** மகாசந்நிதானம் அவர்கள் வெளிவரச் செய்தார்கள். இந்த ஆண்டு தமது **பிறந்தநாட் பெருவிழாவில்** தமிழ்த்தாயின் உடல் நூலாகிய திருக்குறள் வெளிவரத் திருவுள்ளம் பற்றினார்கள். அவர்கள் அருளால் பல ஆண்டுகளாக நடைபெற்ற பணி இப்பொழுது வெளிவருகிறது. இதில் நான்கு பகுதிகள் அமைக்கப் பெறுகின்றன.

**அடியேன் தொண்டு :**

**உரைப்பகுதியில் :** பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காளிங்கர் என்ற நால்வர் உரைகளும் முறையே வைக்கப்பட்டிருக்கின்றன. பரிமேலழகர் காலத்தால் எல்லாரினும் பிற்பட்டவராயினும் சிறப்புடைப்பொருளை முந்துறக்கிளத்தல் முறையாகலானும்

எல்லாராலும் போற்றப்பெற்று பல வகுப்புக்குப் பாடமாக இருத்தலானும் அவர் உரை முன் வைக்கப்பெற்றது. தருமர், தாமத்தர், நச்சர் முதலியோரது பழைய உரைகள் சில பாடல்களுக்கே கிடைத்தன. அவையும் ஆங்காங்குத் தொகுக்கப் பெற்றுள்ளன.

**உரைவிளக்கப்பகுதியில் :** மாறனலங்கார உரையாசிரியராகிய காரிரத்ன கவிராயர் பரிமேலழகர் உரைக்கு எழுதிய குறிப்பாகிய நுண் பொருள் மாலையும், புதுவை இராமாநுஜ கவிராயர் எழுதிய விளக்க உரையும் ஆங்காங்கே சேர்க்கப்பெற்றுள்ளன.

**மேற்கோள்பகுதியில் :** தொல்காப்பியம் முதலிய இலக்கண உரைகளிலும், கலித்தொகை முதலான இலக்கிய உரைகளிலும் பிற உரைகளிலும், எடுத்தாளப் பெற்ற திருக்குறள்கள் அந்தந்தப் பகுதிகளில் அமைந்துள்ள குறிப்புக்களோடு தொகுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் இலக்கணக் குறிப்புக்களாலும் பொருள் மாற்றம் இருத்தலைக் காணலாம்.

**ஒப்புமைப்பகுதியில் :** எட்டுத் தொகை முதல், விநாயக புராணம் வரையிலுள்ள இலக்கியங்களில் குறளும் குறள் கருத்துக்களும் வந்துள்ள பாடல்கள் அடியேனால் தொகுக்கப்பெற்றுள்ளன. இவை ஆராய்ச்சியாளருக்குப் பெரிதும் பயன் தரலாம்.

அடிக்குறிப்பாக அண்மையில் வெளிவந்த கவிராஜபண்டிதர் உரைக்குறிப்புக்களும், சிற்சில இடங்களில் அடியேனுடைய கருத்துக்களும் தரப்பட்டுள்ளன. பரிமேலழகர் உரையிலும் ஏனையோர் உரைகளிலும் காணப்படும் பாடபேதங்களும், குறட் பாடபேதங்களும் ஆங்காங்கு காட்டப்பெற்றுள்ளன.

நூலின் முற்பகுதியில் நூலாசிரியர் உரையாசிரியர்களின் வரலாற்றுக் குறிப்புக்களும் எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளன. இறுதியில் திருக்குறள் அறத்துப்பால் குறளகராதியும், குறட்சொல் அகராதியும், ஆய்வார்க்கு அநுகூலமாகச் சேர்க்கப்பெற்றுள்ளன.

**சாதனங்கள் :**

குறள்களின் வைப்புமுறையில் உரையாசிரியர்கள் ஒவ்வொருவரும் தம்முள் மாறுபடுகின்றனர். பலநாட் பழகி வந்த காரணத்தால் இந்த வெளியீட்டில் பரிமேலழகர் வைப்புமுறையே பின்பற்றி

இருக்கிறது. அவரவர் உரையின் இறுதியிலும் அவரவர் வைப்பு முறையெண் காட்டப்பெற்றுள்ளது.

இந்த வெளியீட்டிற்கு உதவியாகக் கிடைத்த ஏடுகள் பரிமேலழகர் உரைப்பிரதி இரண்டும், பழைய உரை என்பது ஒன்றும். பருதியார் உரை ஒன்றும். காளிங்கர் உரை ஒன்றுமாகிய இந்த ஐந்து ஆகும்.

இவற்றின் விவரம் வருமாறு :—

1. தருமபுர ஆதீனத்துப் புத்தகசாலை பரிமேலழகர் உரை 1.
2. சைவஎல்லப்ப நாவலர் வீட்டு ௸ உரைப்பிரதி 2
3. இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை, சோமசுந்தர தேசிகர் வீட்டுக் காகிதப்பிரதி *(பழையவுரை) 1.
4. ஈரோடு, வித்துவான். திரு. வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களின் பருதியார் உரை 1.
   ௸ காளிங்கர் உரை 1.

இவைகளில் எல்லப்பநாவலர் வீட்டுப்பிரதி முழுதும் உள்ளது. அதனால் இப்பதிப்பு அடைந்த திருத்தங்கள் சில. பரிதியார் உரை ஏட்டில், பரி......என்ற அளவிலேயே பெயர் சிதைந்து காணப்படுகிறது. இம்முதலைக்கொண்டு பரிதி, பரிமேலழகர், பரிப்பெருமாள் என்ற மூவரையும் எண்ணலாம். வெளிவந்த பரிமேலழகர் பரிப்பெருமாள் உரைகள் இதனில் முழுதும் வேறான வையே. ஆதலின் இது பரிதியார் உரை என்று துணியப்பட்டது, ஆனால் **திருமந்திரமணி திருவாளர், துடிசைகிழார், சிதம்பரனார்** அவர்கள் பரிதியார் உரையாக அனுப்பித்தந்த பாயிரப் பகுதி நான்கு அதிகாரங்களின் உரை இதனில் வேறுபட்டதும் விரிவானதும் ஆகும். அவர்கள் ஆதீனத்திற்குச் சுமார் பத்து ஆண்டுகட்கு முன்பு மேற்குறித்த பாயிரப் பகுதியை அனுப்பி யிருந்தார்கள். அடியேனுக்கும் இரண்டு ஆண்டுகட்கு முன்பு மேற்குறித்த பகுதியின் படியினை அனுப்பினார்கள். இரண்டையும்

*இது சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலையிலிருந்து அவர்கள் பிரதி செய்தது. இதற்குச் சைவவுரை என்று பெயர் சூட்டப் பட்டுளது. முதல் 11 அதிகாரம் வரையில் சிறிது வேறுபட்டு, பிற்பகுதி முழுதும் பரிதியார் உரையையே ஒத்துள்ளது.

ஒப்புநோக்கியதில் அடியேனுக்கு அனுப்பியது முன்னையதினும் பல நுண் கருத்துக்களை உடையதாக, விரிவானதாக்க திருத்த மானதாக இருந்தது. அது தனியே அச்சிடற்குரியது என எண்ணியும் முழுதும் கிடையாமையாலும் இத்துடன் சேர்க்கப்பெற வில்லை.

இவ்வெளியீட்டின் சிறப்பிற்குக் காரணமாகிய பருதியார் காளிங்கர் உரைகளை அடைய விரும்பி ஏட்டுச் செல்வத்தைத் தேடித் தொகுத்து வைத்திருக்கின்ற **திரு தெய்வசிகாமணிக் கவுண்டர்** அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். செந்தமிழ் நூல்களில் வைத்த ஆர்வத்தால் அந்த ஏடுகளை அவர்கள் தாமே எடுத்துக்கொண்டு வந்து உதவினார்கள் இவர்களின் உதவி மிக மிகப் போற்றற்குரியது.

திருப்பதி கீழ்க்கலை ஆராய்ச்சிக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர். **திரு. T. P. பழனியப்பப் பிள்ளையவர்கள்** 1948-ம் ஆண்டு பரிப்பெருமாள் காளிங்கர் உரைகளை வெளியிட்டார்கள். அதில் அறத்துப்பால் 31-ம் அதிகாரமாகிய வெகுளாமையிலிருந்து அறத்துப் பால் முடிய 8 அதிகாரமே வெளிவந்துள்ளன. அவற்றுள்ளும் ஏடுகளின் சிதைவால் விடுபட்ட பகுதியில் அறத்துப்பால் முழுமையும் திருத்தமாக வெளிவருகிறது. நுண் பொருண்மாலை முழுவதும் செந்தமிழ்த் தொகுதியிலிருந்து எடுக்கப்பெற்றனவாகும். தருமர், நச்சர் உரைகள் தமிழ்ப்பொழில் வெளியீட்டிலிருந்து தொகுக்கப்பெற்றன. மணக்குடவர் உரைப்பகுதி முழுவதும் கப்பலோட்டிய தமிழர், தமிழ்ப் பேரறிஞர் **வ. உ. சிதம்பரம் பிள்ளை** அவர்கள் பதிப்பையும், **கா. பொன்னுசாமி நாடார்** அவர்கள் பதிப்பையும் ஒப்புநோக்கி வெளியிடப்பெற்றன.

உரை மேற்கோள்களைத் தொகுக்கும்போது சென்னைத் தமிழ் ஆசிரியர் **புலவர் திரு. சீனிவாசன்** அவர்கள் உடனிருந்து தொகுத்து ஊக்கவுரையும் வழங்கிவந்தார்கள். ஒப்புமைப்பகுதிகளைத் தொகுக்கும் போது உடனிருந்து எழுதவும், ஆயவும் அச்சியற்றுங்கால் ஒப்புநோக்கவும் உறுதுணையாயிருந்தவர்கள் இடையீடில்லாத உழைப்புடைப் பெருந்தொண்டர்களும் ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர்களுமாகிய வித்துவான் **திரு M. ஆறுமுகம்** வித்துவான் **திரு. V. S. குருசாமி** ஆகியோர்கள்.

இவ்வண்ணம் இவ்வெளியீடு இனிது நிறைவேற எல்லாரையும் ஒன்று கூட்டுவித்து ஆட்கொண்ட செந்தமிழ்ச் சொக்கர் திருவருளை நாவார மனமார வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம் செந்தமிழ்ச் சொக்கர் திருவருளில் வழிப்படுத்தி எங்களை எல்லாம் இயக்கிப், பணிகொள்ளும், அருங்கலை விநோதர்களாகிய ஸ்ரீலஸ்ரீ சந்நிதானம் அவர்களுக்குச் 'சொல்லுவதறியேன் வாழி' எனத் தோத்தரிப்பதை விட அடியேன் என்ன கைம்மாறு செய்ய இயலும்.

இந்நூலை நன்கு ஆராய்ந்து தக்கமுறையில் மதிப்புரைகள் வழங்கிய பேரறிவாளர்கள் அனைவருக்கும் நன்றி உரித்தாகுக.

செந்தமிழ்த்தாய், மிகவிரிவான முறையில் பிரபந்தங்கள், முதுமொழி வெண்பாக்கள், பாரதியார் வரையில் ஒப்புமைப்பகுதிகளைப் பெற்று விளங்கும் குறளணியை மிக அண்மையில் புனைந்து கொள்வாள். அதற்கு வெள்ளோட்டவேலையாகவே அடியேனது வெள்ளறிவின் முயற்சி அமைகிறது என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்

தருமபுரம், 1—11—50.

ச. தண்டபாணி,
தொகுப்பாசிரியன்.

# மதிப்புரைகள்

சென்னை மராமத்து இலாகா மந்திரி கனம். **எம். பக்தவச்சலம்** அவர்கள் "உரைவளம் மகிழ்ச்சியுடன் வரவேற்கத்தக்கது. இது மிகவும் சிறந்த ஒரு வெளியீடாகும்."

டாக்டர் **ரா. க. சண்முகஞ் செட்டியார் அவர்கள்** M. A. "இவையெல்லாம் ஒன்றாக இது வரையில் தொகுக்கப்படவில்லை, இந்த உரைவளம் எல்லா வகையிலும் பாராட்டத்தக்கது. தமிழ்ப் பண்பாட்டின் சரித்திரத்தில் இந்த வெளியீடு ஓர் சிறந்த நிகழ்ச்சியாகும். திருக்குறள் உரைவளம் தமிழ் மக்களுக்குக் கிடைத்த ஒரு களஞ்சியமாகும். அவர்கள் அதை நன்றியோடு பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றனர். திருக்குறளை ஆழ்ந்து படிப்பவர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் இப்பதிப்பு ஓர் சிறந்த கருவூலமாய்ப் பயன்படும்."

* * * *

ரஸிகமணி **திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள்** "திருக்குறள் உரைவளம் அரிய கருவியாக இருக்கிறது. அரிய உதவி தமிழுக்கு."

அண்ணமலைப் பல்கலைக்கழகத்தமிழ்ப் பேராசிரியர் **டாக்டர் அ. சிதம்பரநாத செட்டியார்** அவர்கள் M. A. இப்பதிப்பில் ஒவ்வொரு திருக்குறட்பாவின் பின்னர்ப் பரிமேலழகர், மணக்குடவர், பழைய உரையாளர் காளிங்கர், ஆகியோர் உரைகளும், இராமநுஜ கவிராயர் நுண்பொருள் மாலையுடையார் ஆகியோர் உரைவிளக்கங்களும் இலக்கண உரையாசிரியர்கள் முதலியவர்கள் அவ்வத் திருக்குறளை எடுத்துக் காட்டிய இடங்களும் தெளிவுற அமைத்துக் காட்டப்பட்டுள்ளன. இலக்கண இலக்கிய மேற்கோட் பகுதிகளும், குறளொடு ஒத்த கருத்தமைந்த பிற இலக்கியப் பகுதிகளும் நிரம்ப எடுத்துக் காட்டபபட்டுள்ளன. இவ்வாறு இவற்றை எடுத்துக் காட்டுதலின் கண், பதிப்பாசிரியர் வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களின் ஆழ்ந்த புலமையும், விரிந்த அறிவும், உலையா முயற்சியும், ஆராய்ச்சித் திறனும் விளங்கியுள்ளன.

இப்பதிப்பு அறிஞர்கள் பல உரைகளையும் ஒப்புநோக்கி இவ்விக் குறட்பாவிற்கு இந்த உரையாளர் கருத்து சிறப்புடைத்து என ஆய்ந்து கோடற்கு மிக்க உதவி செய்யத் தக்கது. திருக்குறளில் அறத்துப்பாலில் உள்ள முப்பத்தெட்டு அதிகாரங்களுக்கும் இம்முறையில் செவ்வன் அமைந்த பதிப்பினைத் தமிழுலகிற்கு வழங்கியுள்ள திரு. தேசிகரவர் பாராட்டத்தக்கவர்கள்.

# நூல் ஆசிரியர்

திருவள்ளுவருடைய பிறப்பு முதலிய வரலாறுகள் பலவாறுக விரித்துப் பேசப்படுகின்றன. கபிலரகவல் போன்ற நூல்கள் அதற்குத் துணை செய்கின்றன. ஞானமிர்தம் சற்றுமாற்றம் வகுக்கின்றது. ஆனாலும் உண்மையைத் துணிந்து சொல்ல உறுதியான சான்று கிடைத்திலது. ஆதலால் அறத்துப்பால் வரையில் உள்ள அகச்சான்றுகொண்டு இவரது கொள்கையின் வரலாற்றைப் பொதுவகையில் குறிப்பிடுவோம்.

இவர் கடவுளைப்பற்றி உருவ வழிபாட்டு முறையால் கூருது, அறிவுருவ வழிபாட்டு முறையால் கடவுளுடைய இயல்புகளைக் கூறி அறிவிக்கிருர். கடவுள், இயற்கையே தூய்மையான முற்றறிவுடையவர் ; விருப்பு வெறுப்பற்றவர் ; அவரிடத்து பொறிபுலன்கள் சேட்டியா. ஆதலால் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையாக விளங்குபவர் ; அத்தகைய கடவுள், இறை, செம்பொருள் என்ற பெயர்களால் வழங்கப்படுகிருர். இடைவிடாது தியானிப்பவர்களுடைய உள்ளக் கமலமே அவருக்கு உறையுள் என்பது. அவரது கடவுட்கொள்கையின் முடிவு.

கடவுட் கொள்கையின் முடிந்த முடிபாகிய வீட்டியலைப்பற்றி ஒரே வார்த்தையில் முடிக்கின்ருர். அது, விருப்பு வெறுப்பு அற்ற கடவுளை விரும்பினல், விருப்பு வெறுப்பு நம்மாட்டும் இல்லையாகும். ஆகவே, விளையும் வினையும் இல்லையாம். சிறப்பென்னும் செம்பொருளைக் காண்பதாகிய உண்மை ஞானம் தோன்றும். அதுவே வீட்டிற்கு வாயில் என்பது.

மக்கள் ஒரே இனத்தராய், ஒரே நாட்டினராய் இருந்தும், அவர்களுக்குள் துன்ப இன்பங்கள் வேறுபடுதற்குக்காரணம் வினை என்பது இவருடைய முடிபு. இக்காலத்துச் சிலர் வினை என்பதற்கு முற்பிறவில் செய்த வினையன்று, அவ்வப்போது செய்யப்படும் தொழில்களேயாகும் என்பர். வினை என்பது பொது வகையான் தொழிலை உணர்த்துமாயினும், செந்தமிழ்நாட்டுப் பெருங்குடி வணிகனுகிய கோவலன் "இம்மைச் செய்தனயானறி நல்வினை" என்று மாடலன் உறுதி கூறுகிருன். ஆயினும் கோவலனுக்கும் கொலையுண்ணும் தீவினை ஒன்று சார்த்தப்

படுமானல், அதுபழவினையின் பயனன்றி, வேறு எதுவா யிருத்தல் கூடும்? தீவினை, செய்தவனை நிழல்போலத் தொடரும் என்று பேசுகிறார். ஆதலால் வள்ளுவருக்குப் பழவினை வந்து பற்றும் என்பதில் உறுதியான எண்ணம் உண்டு. ஊழை வகுத்த வள்ளுவருக்குப் பழவினையில் உறுதி இல்லாமல் இருக்க முடியுமா? இருவினையின் வகையாகத் 'தீவினையார் அஞ்சார்' 'தீவினை செய்தார் கெடுதல்' 'நல்வினை மேற்சென்று செய்யப் படும்' என்ற பகுதிகள் நல்வினை தீவினைகளின் உண்மையை உணர்த்துகின்றன. இருவினைகளின் உறுபயனாகிய புண்ணிய பாவங்களைப்பற்றியும் பேசாமல் இல்லை. 'பகை பாவம்' என்று பாவத்தை எடுத்தாளுகின்றனர். அழுக்காற்றை 'ஒருபாவி' என்றே குறிக்கின்றார். புண்ணியத்தை இவர் குறிப்பது அறம் என்ற சொல்லொன்றாலேயே.

**வேள்வியைப் பற்றி :—** உயிர்க்கொலைவேள்வியில் இவர்க்கு ஒரு சிறிதும் பற்றில்லை. விருந்தோம்பலையே வேள்வி என்று அழைப்ப தில் இவருக்கு விருப்பம். வேள்வி, வேட்டல் முதலியன விருப்பம் என்ற பொருளைத்தரும் வேள் என்ற பகுதியின் அடியாகப்பிறந்த தொழிற்பெயர்கள். அது விருப்பத்தை நிறைவேற்றும் யாகத் துக்கும், மனத்திற்கும் ஆகுபெயராகச் சென்றியைந்தன. யாகப் பசுவைக்கொன்று தேவர்க்குத்தானம்பண்ணி விருப்பத்தைத் தேடுவதைக்காட்டிலும், ஓருயிரையும் கொல்லாது விருந்தோம் பலே உண்மை வேள்வி என்பது இவரது முடிபு.

**மக்களுள் பாகுபாடு :—** மக்கட் பாகுபாடுகள், தொழில்பற்றி வந் தனவே என்பதனை 'சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்' என்று வரையறுத்த வள்ளுவர், அந்தணர், பார்ப்பான், வேட்டுவன், வாணிகஞ் செய்வார், உழுவார், வேந்தன் (இறை) என்ற சொல்லாட்சியால் சாதிப்பெயர்களைக் குறிக்கின்றாரே என லாம். ஆனல் அந்தணர், முனிவர், நீத்தார், துறந்தார் என்ற பெயர்கள் உலகத்து உயிர்கள் எல்லாவற்றையும் தம்போல் பேணும் தண்ணளிவாய்ந்த முற்றத்துறந்த முனிவர் பெருமக் களையே குறிக்கும் என்பதனைப் பல குறள்கள் விளக்குகின்றன. 'மறப்பினும் ஒத்துக்கொளலாகும்' என்ற குறளில் வேதமோதும் தொழிலுடையார் பார்ப்பனர் என்பது வலியுறுக்கப்படுகிறது. ஓதி உணர்ந்து தெளிந்து உற்று நோக்கிச் செம்பொருள் கண்டு அது அதுவாய் நிற்கும் நிலை அந்தணர்க்குரியது என்பது இவருடைய குறட்போக்கின் தெளிவு.

'வாணிகம் செய்வார்' என்ற குறள் பொதுவகையான் தொழில் பற்றி விற்பனையாளரைக் குறித்ததன்றி ஒரு குறிப்பிட்ட சாதியை உணர்த்தியதாகுமா? இங்ஙனமே ஏனைய சொற்களும். மறவன். வேட்டுவன் முதலிய பெயர்களும் அங்ஙனம் தொழில் பற்றிப் பிறந்தனவே என்பதை 'ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்' என்ற தொல்காப்பியச் சூத்திரவுரையில், நச்சினார்க்கினியர், வேட்டுவத்தொழில் புரிவான் வேட்டுவன் எனத் தொழில் பற்றி வந்ததாகக் குறிப்பதும் ஈண்டு ஒப்புநோக்குதற் குரியது.

**காலம் :-** திருவள்ளுவர் நூலைப் பெரிதும் சுவைத்த அருமைப் பாட்டினால் அதன் காலத்தையோ அரங்கேறிய அவையினையோ ஆராயும் நோக்கம் மக்களுக்கு உண்டாகவில்லை. ஆதலால் ஆசிரியர் காலத்தை அறுதியிட யாரும் துணியவில்லை. ஆராய்ச்சிக்குத் தனி மதிப்பு எற்பட்ட பிற்காலத்தில், ஸ்ரீ மு. ராகவையங்கார் சுவாமிகள் திருவள்ளுவர், கி. மு. நான்காம் நூற்றாண்டுக்குப் பின்னும், கடைச்சங்ககாலத்திற்கு முன்னும் விளங்கினவராகலாம் என்கிறார்கள். திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் கி. மு. 12-ம் நூற்றாண்டிற்கும் 5-ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவர் என்பார்கள். திரு, மறைமலையடிகள் அவர்கள் கிறிஸ்து பிறப்பதற்கு முப்பது ஆண்டுகட்கு முற்பட்டவர் என்பார்கள்' சாத்தூர், திரு. கந்தசாமி முதலியார். M.A., B.L. அவர்கள், சங்ககாலத்துப் புலவர் பெருமக்களாகிய காக்கைபாடினியார் முதலியவர் பாடல்களை எடுத்துக்காட்டிக் குறட்கருத்து காணப்படுதலின் அவர்கள் காலத்துக்கு முற்பட்டவர் என்றும், புத்தமதக்கொள்கைகளை மறுப்பதால் கௌதமபுத்தர்க்குப் பிற்பட்டவர் என்றும் கூறி கி. மு. 3-ம் நூற்றாண்டு என்று முடிவுகட்டுகிறார்கள். இப்போது தமிழ்நாட்டில் பெருவழக்காகத் திருவள்ளுவர் யாண்டு 1981. என்று வழங்கி வருகிறது. எல்லாவகையாலும் வள்ளுவர் கி. மு. முதல நூற்றாண்டிற்கு முந்தியவர் என்பது துணிவு.

# உரையாசிரியர்கள்.

**பரிமேலழகர் :**

திருக்குறளுக்கு உரை வகுத்தோருள் இவர் சிறந்தவர். இவரது ஊர் காஞ்சீபுரம். மரபு உலகளந்தபெருமாள்கோயில் அர்ச்சகர் பரம்பரை. இவர் இயற்றிய உரைகள் இதுவும்: பரிபாடல் உரையுமாம். திருமுருகாற்றுப்படைக்கு இவர் எழுதியதாக உரை ஒன்று இருக்கிறது. ஆனால் அவ்வுரை இவ்வுரைகளோடு வைத்து ஒருங்கெண்ணத் தக்கதன்று என்பது வெளிப்படை.

இவர் எடுத்துக்காட்டிய மேற்கோள்களிலிருந்தும், உரைப் போக்கிலிருந்தும் இவரது இருமொழிப் புலமை நன்கு அறியப்படும். இவருடைய காலம் கி. பி. 1272 என்று சாசனக்கவி தமிழ்ச் சரிதம் என்ற நூலில் மு. ராகவையங்கார் அவர்கள் முடிவுகட்டியுள்ளார்கள்.

ஒவ்வோரதிகாரத்திலும் வந்துள்ள குறட்கருத்துக்கள் முழுவதையும் தழுவி அதிகாரத்தோற்றுவாய் அழகாக எழுதுவர். முன்னர்ச்சென்ற அதிகாரத்துக்கும் இதற்கும் இயைபும் எடுத்துக் காட்டுவர் ஒவ்வோர் குறளுக்கும் பொழிப்புரையும் விசேட உரையுமாக எழுதுவர். பொழிப்புரையில் இசையெச்சமாக இன்றியமையாத சொற்களையும் விரித்து எழுதுதல் இவரது பெரும்பான்மையான வழக்கம். விசேட உரையில் சில தொகைச் சொற்கட்கு, சொற்பொருள் விரித்தலாக விளக்கி எழுதுவர். தாம் காட்டும் பொருளுக்குத்தக்க மேற்கோள்களை இந்நூலிலிருந்தும் பிறநூலிலிருந்தும் எடுத்துக் காட்டி விளக்குவர். அங்ஙனம் விளக்குங்கால் சுருங்கிய சொல்லால் செறிவு தோன்ற அமைப்பர். சொற்சோதனை செய்து சொல்லின் பொருளை நிலை நிறுத்துவதில் இவருக்குத் தனித்ததோர் தகுதி உண்டு. பிறரை மறுத்துரைக்குங்கால் கருத்துப் பொருந்தாமைக்குக் காரணங்காட்டி கண்ணியமாக மறுப்பர். கருத்து விளக்கத்துக்காக ஏற்ற உவமைகளைக் கையாளுவதுமுண்டு. முன்னுக்குப் பின் மாறுபட்டனவாக மயங்க நிற்கும் குறள்களுக்கு ஆதாரத்துடன் அமைதியும் காட்டுவர். சிறந்த பிறர் கருத்துக்கு மதிப்புக் கொடுப்பதில் இவர் பின்வாங்குவதில்லை. இது இவர் உரையின்கண் உள்ள சிறந்த மாண்புகள்.

**மணக்குடவர் :**

இவருடைய பெயர் மணக்குடியர், மணக்குடையர் என்றெல்லாம் வழங்கப்பெறுகின்றது. இவருடைய பிறப்பு ர்விலாறு, ஒன்றும் அறியக்கூடவில்லை. மணக்குடியர் என்பதுதான் இவரது இயற்பெயர் என்று சாதிப்பவர்கள் சிலர். அவர்கள் இவர் பிறந்த ஊர் மணக்குடி ஆதலால் இடமடியாக இவர் வழங்கப்பெற்றார் என்பர். மணக்குடி என்னும் பெயர் உள்ள ஊர்கள் சோழ பாண்டிய நாடுகளில் பலவுள்ளன. அவற்றுள் எது என்று துணிவது முடியாதகாரியம்.

இவருடைய உரைப்போக்கு, மிக எளிய இனிய தமிழ்நடையால் ஆனது. பொழிப்புரை - சிற்சில இடங்களில் கருத்துரையாகவும் காட்டிச்செல்வர். இவர் குறளுக்குக் கொண்ட பாடம் சிற்சில இடங்களில் வேறுபட்டுள்ளன. அவை இவ்வெளியீட்டின் அடிக்குறிப்பாகக் குறிக்கப்பெற்றுள்ளன. பரிமேலழகர் மறுக்கும் இடங்களில் சில இவருடையனவே. அறத்துப்பால் வரை 128, 205, 223, 229, 254, 278, 297, 299, 334, 338, 369 எண்ணுள்ள குறள்களில் காணலாம். மணக்குடவர் உரை வ. உ. சி. பதிப்பில் 'புதல்வர்ப்பேறு' என்பதற்குப் பதில் 'மக்கட்பேறு' என்று காணப் பெறுகின்றது. இவர் குறளின் முறைவைப்பிலும் பரிமேலழகரினும் மாறுபட்டுள்ளார்.

**பருதியார் :**

இவர் பரிதியார் எனவும் வழங்கப்பெறுகிறார். "தருமர் மணக்குடவர்" என்ற பாடலில் தருமர் என்ற எதுகை நோக்கிப் பருதி என்றிருத்தலே பொருத்தம் பருதி - பரிதி இரண்டுமே சூரியனை உணர்த்தும் பெயர்கள். இவர் குறட் கருத்தை வாங்கிவைத்து எழுதுவாரேயன்றிப் பொழிப் பாகவோ - பதவுரையாகவோ எழுதுவது வழக்கமில்லை. இவர் பழுத்த சைவசித்தாந்தி என்பதைப் பல இடங்களில் அறியலாம். 'நற்றாள்' என்பதற்கு 'அறிவாளனை சிவன்சீபாதம்' என்றும், 'இறைவன் பொருள் சேர்புகழ் புரிந்தார்மாட்டு இருவினை சேரா என்பதற்கு 'மும்மலவித்தாகிய பாவமானது சிவகீர்த்தி பாராட்டுவானிடத்து இல்லை' என்றும், 'அறவாழியந்தணன் - பரமேசுவரன் என்றும் 'மெய்யுணர்வு இல்லாதார்க்கு' என்பதற்கு - 'மெய்யுணர்வாகிய சிவஞானம் அறியாவிடில்' என்றும், இடமிடங்கள் தோறும் சிவனையே குறித்துச் செல்கின்றார்.

இவருடைய காலமுதலியன அறியக்கூடவில்லை. 'நோயெல்லாம்' (320) என்ற குறட் கருத்தை விளக்கப் பிராமணச் சிறுவன்

ஒருவன் பிர்மராக்ஷஸனை ஓட்டிய கதையொன்றைக் குறிப்பிடுகிருர். ஏழு அதிகாரங்களுக்கு மேல், வெஃகாமை, கூடாவொழுக்கம், கொல்லாமை, அவாவறுத்தல், ஊழ் என்ற அதிகாரங்கட்கு வரைவிலக்கணம் தொடங்கும்போது 'தீது' என்று எழுதிச் செல்கிருர். இவற்றுள் கூடாவொழுக்கம் தீதாகலாம்; வெஃகாமை முதலியன தீதாகல் எப்படிப் பொருந்துவதாகும், ஆதலாம் அவற்றை அடியேன் பதிப்பிக்கவில்லை.

புறங்கூருமை, தவம், வெகுளாமை, இன்னுசெய்யாமை, நிலையாமை இவற்றை 'மத்திபம்' எனக்குறிப்பிடுகின்ருர். மற்றைய எல்லாவற்றையும், நன்று' என்று கூறுகின்ருர். இங்ஙனம் இவர் பிரித்து எழுதிய தன் குறிக்கோள் அறியக்கூடாமையின் அக் குறிப்புக்கள் விடப்பெற்றன.

**காளிங்கர் :**

காலிங்கர் எனவும் சிலபிரதிகள் தெரிவிக்கின்றன. இவர் உரைப் போக்கிலிருந்து இவரைச் சைனராகக் கருதலாம்போலும். ஆகிலும் தம் கொள்கையை வெளிப்படுத்தாது நூற்பொதுமைக் கேற்ப உரை வகுத்தல் இவரிடமுள்ள சிறந்த குணம். இவர் குறளுக்குக் கொள்ளும் பாடபேதங்கள் மிகச் சிறந்த நயமுடையன. இதனை 194, 358, 363, என்பன போன்ற பல இடங்களில் காணலாம். குறள் முறைவைப்பிலும் இவர் ஏனைய உரை ஆசிரியர்களைக் காட்டிலும் பெரிதும் வேறுபட்டுள்ளார். ஓரதிகாரத்திற்கும் மற்ருேரதிகாரத்திற்கும் உள்ள இயைபை இவர்கூறும் பத்தாங் குறளில் தவருது குறிப்பிடுவார். இவரும் பரிமேலழகர்க்குக் காலத்தால் முற்பட்டவர் என்பது வெளிப்படை. சிற்சில இடங்களில் இவருரையும் பருதியார் உரையும் ஒத்தனவாக அமைந்திருக்கின்றன.

**பழையஉரை :**

இதன் உரையாசிரியர் பெயர் முதலியன அறியப்பெறவில்லை. முதற் பதிஞெரு அதிகாரம் வரையில் இந்தவுரைக்கும் பருதியார் உரைக்கும் வேறுபாடுகள் காணப்பெறுகின்றன. அதற்குமேல் வேறுபாடு காணப்பெருமையான் பருதியார் உரையென்றே பதிப்பிக்கப்பெற்றது. இந்தப் பழைய உரை சென்னை, கையெழுத்துப் புத்தகசாலையிலுள்ள ஏட்டின் படியாகும். இதற்குச் 'சைவவுரை' என்றும் ஒருபெயர் குறிக்கப்பெறுகின்றது. இப்பெயர்க்கு ஏற்பக் கடவுள்வாழ்த்துப் பகுதியில் சைவ மரபுக்கேற்ப இறையிலக்கணம்

உரைக்கப் பெறுகின்றது. நீத்தார் பெருமையில், 'குணமென்னும்' என்ற குறளுக்கு இவர் எழுதிய உரை மிக நுட்பமான கருத்துடையதாகும்.

**நுண்பொருண்மாலை ஆசிரியர் :**

இவரது இயற்கைப் பெயர் காரிரத்ன கவிராயர். ஊர் தென் திருப்பேரை ; திருக்குருகைப் பெருமாள் கவிராயரிடம் கல்வி பயின்றவர். மாறனலங்காரத்திற்குச் சிறந்த உரையியற்றியவரும் இவரே. தொல்காப்பியத்திற்கும் திருக்குறள் பரிமேலழகர் உரைக்கும் நுண்பொருண்மாலை என்றபெயரால் சிறந்த குறிப்புரை எழுதியிருக்கிறார். பரிமேலழகர் உரையில் விளக்கங்காணவேண்டிய சிறந்த பகுதிகட்கு உரையும், மேற்கோளும் இலக்கணக்குறிப்பும் எழுதுகிறார். பெரும்பாலும் திருக்கோவையாரிலிருந்தும் திருக்குறளிலிருந்துமே மேற்கோள் காட்டப்படுகின்றன. ஆகுபெயர் அன்மொழித்தொகை யாராய்ச்சியில் பரிமேலழகருடைய உள்ளக்கிடக்கை அறிதற்கு அரியதாயிருப்பதை 'ஊழிற்பெருவலி' என்னும் (380) குறளுரையில் எடுத்துக்காட்டுதல் மிகப்போற்றற்குரியது. முதற்குறளில் உலகு என்றது ஈண்டு உயிர்களை ; காணப்பட்ட உலகத்தால் காணப்படாத கடவுட்கு உண்மைகூற வேண்டலின் என்ற பரிமேலழகர் உரையில் உலகு உயிராகுமானால் அது காணப்படுமாறியாங்ஙனம் என்ற குறை இருப்பதை விளக்க, 'காணப்பட்டவுலகு உயிர்மேனின்றால் காணப்படுதல் எவ்வாறு எனின் ; முன்னர். "உலகம் வழங்கிவருவதால்" ( குற 1) என்பதற்கு உயிர் உடம்பொடு காணப்பட்டு வருதலால் என்னும் உரையானும் 'உயிரீரும் வாள்' என்பதனாலும் காணப்படும், எனக்குறிப்பு எழுதுதல் எவ்வளவு நுணுக்கமானது.

**இராமாநுஜகவிராயர் :**

இவர் இராமநாதபுரத்தில் பிறந்தவர். இவருடைய ஆசிரியர் திருவாவடுதுறைச் சோமசுந்தரக் கவிராயர். இவர் பெரும்பாலும் வசித்த இடம் சென்னையும் புதுவையும். கிறித்தவப்பாதிரிமார்கள் சிலருக்குத் தமிழ்க் கல்வி கற்பித்தவர். நன்னூலுக்கும் குறளில் அறத்துப்பால் இல்லற இயலுக்கும் உரைவகுத்தவர். பார்த்தசாரதிமாலை, வரதராசர் பதிற்றுப்பத்தந்தாதி, முதலியன இவரியற்றிய வேறு நூல்கள். பரிமேலழகர் உரைக்கு விளக்க உரை எழுதியவர். சிற்சில இடங்களில் வேறுரை என்ற தலைப்பில் தமது கருத்தையும் விளக்கி இருக்கிறார். கருத்துக்கள் மிகவும் நுட்பம் வாய்ந்தன.

# ஆராய்ச்சிக் குறிப்புகள்

**உவமைகள் :**

இறைவனுக்கு அகரம் 1.

துறந்தார் பெருமைக்கு உலகத்து இறந்தாரை எண்ணுதல். 22.

அன்பில்லாத உயிரை அறங்காய்தலுக்குப் புழுவை வெயில் காய்தல் 77.

அன்பில்லா வாழ்க்கைக்குப் பாலையில் வற்றல்மரம் தளிர்த்தல் 78.

இன்சொல் இருக்க வன்சொல் வழங்குவதற்குக் கனியிருப்பக் காய் கவர்தல் 100.

பயன் கருதார் செய்த உதவியின் நன்மையின் பெருமைக்குக் கடல் 103.

சான்றோரின் நடுவு நிலைமைக்குத் தராசுக்கோல் 118.

பொறியடக்கமுடையார்க்கு ஆமை 126.

தீமை, செய்தாரைவிடாமைக்கு அடிநீங்கா நிழல் 208.

பேரறிவாளன் திருவுக்கு ஊருணிநீர் நிறைதல் 215.

நடுநிலையுடையான் செல்வத்துக்கு உள்ளூரில் பழுத்த மரம் 216.

பெருந்தகையான் செல்வத்துக்குத் தப்பாமருந்துமரம் 217

ஊன் உண்பார் மனத்துக்கு படைகொண்டார் மனம் 253.

துன்பத்தால் வருந்தித் தவஞ் செய்வார்க்கு ஒளிவிடும் பொன் 267.

கூடாஒழுக்கமுடையானுக்குப் புலித்தோல் போர்த்த பசு 273.

தவத்தில் மறைந்து அவம் செய்தலுக்கு, வேட்டுவன் புதல் மறைந்து புள்சிமிழ்த்தல் 274.

அகத்தூய்மை தரும் வாய்மைக்கு புறத்தூய்மையளிக்கும் நீர். 298.

சினந்தான், கேடுறுதலுக்கு நிலமெறிந்தவன் கை 307.

இன்னுமைக்கு எரி 308.

பொருளினது ஆக்கத்துக்கும் அழிவுக்கும் கூத்து மேடையில் மக்கள் கூடுதலும் போதலும் 332.

வாழ்நாளுக்கு வாள். 334.

உடலுயிர் நட்புக்கு குடம்பையைவிட்டபுள். 338.

பிறப்பு இறப்புகட்கு உறக்கமும் விழிப்பும். 339.

அகழ்வாரை நிலம் தாங்குதலுக்கு இகழ்வாரைப் பொறுத்தல். 151.

விருந்தினருக்கு அனிச்சப்பூ. 90.

**ஒரு நீதிக்கு ஒரு நீதி உவமையாய்வந்தன :**

*வறுமையுட் சிறந்த விருந்தோம்பாமைக்கு வன்மையுள் சிறந்த மடவார்ப்பொறை. 153.

அருளில்லாதவர்க்கு மறுமை இன்பம் இல்லாமைக்கு, பொருளற்றூர்க்கு இம்மை இன்பம் இல்லாமை. 247.

அருளாதான் செய்யும் அறத்துக்குத் தெருளாதான் மெய்ப்பொருள் கண்டது. 249.

புலால் உண்பாரிடம் அருளின்மைக்குப் போற்றுதார்க்குப் பொருளின்மை. 252.

களவறிந்தார் நெஞ்சின் வஞ்சத்திற்கு அளவறிந்தார் நெஞ்சத்து அறம். 288.

*விருந்தினரை நீக்குதல் தள்ளத்தக்கது. பிழை செய்த மடவாரைப் பொறுத்தல் கொள்ளத்தக்கது. ஆகலின் தள்ளத்தக்க தொன்றனைக் கொள்ளத்தக்கதொன்றுக்கு உவமை கூறல் அமையுமாறு யாங்ஙனம் எனில், விருந்து பேணமை மிகத்தரித்திரமானற் போல மடவாரைப்பொறுத்தல் மிகவன்மையாம் என மிகுதியளவுக்குமட்டும் உவமையாயிற்று என்க. இழிவிற் சிறந்தது விருந்தோம்பாமைபோல உயர்விற் சிறந்தது பொறையாயிற்று என்பது கருத்து.

—தொகுப்பாசிரியர்.

**ஏனைய அணிகள்:—** எடுத்துக்காட்டுவமை 1, 153. ஏகதேச உருவகம் 8, 10, 24, 29, 306, 358. சொற்பொருட்பின் வருநிலை 200, 320. குறிப்பு வேற்றுமை 9. நிரனிறை 45, 182. சமாதி 358, இல்பொருள் உவமை 273. பாவிகம் 2, 18, 21, 31, 41, 61, 77, 82, 110, 113, 126, 134, 150, 151, 178, 181, 184, 191, 204, 220, 228, 237, 241, 259, 266, 273, 282, 297, 310, 321, 337, 344, 354, 363, 373.

**வானுலகம்:—** வான் 18, 50. புத்தேளுலகம் 213, 290. மேல் உலகம் 222, வானம் 353, அவ்வுலகம் 247, புத்தேளிர்வாழுமுலகு 58. வானகம் 111. அகல் விசும்பு 25.

**வீட்டுலகு:—** வானோர்க்குயர்ந்த உலகு 346.

**தெய்வங்குறித்த பெயர்கள்:—** தெய்வம் 43, 50, 55. புத்தேள் 213, 290. புத்தேளிர் 58. வானோர் 18, 346. தவ்வை 167. தென்புலத்தார் 43.

**இலக்குமி:—** செய்யாள் 84. செய்யவள் 167.

**கூற்றம்:—** கூற்று 326. கூற்றம் 269.

**கடவுளைக் குறிக்கும் சொற்கள்:—** ஆதிபகவன் 1. வாலறிவன் 2. மலர்மிசை ஏகினான் 3. வேண்டுதல் வேண்டாமையிலான் 4. இறைவன் 5. பொறிவாயிலைந்தவித்தான் 6. தனக்குவமையில்லாதான் 7. அறவாழி அந்தணன் 8. பற்றற்றான் 350.

**பால்வரை தெய்வம்:—** தெய்வம் 43, 55. வகுத்தான் 377.

**வினை உண்மை அறிவிப்பன:—** 44, 63, 201, 297, 209, 279, 210, 208, 335.

**மறுபிறப்புண்மை:—** எழுபிறப்பு 72, 107.

**வேள்விகள்:—** அவிவேள்வி 259. விருந்துவேள்வி 87.

**அளவைப் பெயர்கள்:—** தினை 104, 144, பனை 104. ஆயிரம் 259. கோடி 337, 377.

**வள்ளுவர் கூறும் அறம்:—** மனத்துக்கண் மாசிலனாதல் 34. அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது 35. இல்வாழ்க்கை 49. இன்சொல் 93. அல்லவை தேய்வது 96. கொல்லாமை 32.

**வள்ளுவர் இன்பமாக அறிவிப்பன:—** அறத்தான் வருவதே இன்பம் 65. மக்கள் மெய்தீண்டலும் சொற்கேட்டலும் இன்பம் 65. ஈத்துவக்கும் இன்ப்ம் 228.

**சான்றோரிலக்கணமாகக் குறிப்பன:—** பொய்யா விளக்கம் பெறுதல் 299. நடுவுநிலைமை 115. பிறர்மனை நோக்காதபேராண்மை 148. பயனில சொல்லாமை 197. ஒருபாற் கோடாமை 198. கொன்றுகுமாக்கம் பெருமை. 328.

**தொகைச் சொற்கள்:—** இயல்புடையமூவர் 41. ஐம்புலத்தாறு 43. எழுபிறப்பு 62, 107. நான்கு 35, 146. இருவேறுலகத்தியற்கை 374. மூன்றன்நாமம் 360. ஐயுணர்வு 354 ஐந்தன்புலம் 343 ஐந்தவித்தான் 25.

**பறவை விலங்கின் பெயர்கள்:—** பெற்றம் 273, புலி 273. ஆமை 126. புள் 274, 338.

**மரவகைகள் முதலியன:—** அனிச்சம் 90, பயன்மரம் 216, மருந்து மரம் 217. குன்றி மணி 277. கனி 100. காய் 100. வித்து 24, 85, 138, 361. வற்றன் மரம் 78.

**இசைக்கருவி:—** குழல் 66. யாழ் 279.

**போர்க்கருவி:—** கணை 279. வாள் 334.

**அவை:—** கூத்தாட்டவை 332. அவையம் 67.

**இன்மையும்-வன்மையும்:—** இன்மையுள் இன்மை விருந்தினரைப் புறந்தராமை. வன்மையுள் வன்மை மடவாரைப் பொறுத்தல் 153.

**உணவுவகை:—**அமிழ்தம் 11, 64. கூழ் 4. ஊன் 251.

**நீர் நிலைகள்:—** ஊருணி 215. கடல் 10, 17, 103.

**இடப்பெயர்கள்:—** மலை 124. நிலம் 3, 28, 68, 233, 307, வையம் 22, 189, 238, 353. கடல் 10, 17, 103.

**காலப்பெயர்கள்:—**கணம் 29. நாள் 334.

**ஊர்தி:—** சிவிகை 37.

# இதில் அடங்கியவை

| | |
|---|---|
| இரண்டாம் பதிப்பின் முகவுரை | க |
| முதற்பதிப்பின் முகவுரை | ச |
| மதிப்புரை | கூ |
| நூலாசிரியர் வரலாறு | கச |
| உரைஆசிரியர்கள் வரலாறு | கள |
| ஆராய்ச்சிக்குறிப்புகள் | உக |
| எடுத்தாண்ட நூல்கள் | உரு |
| அதிகார அட்டவணை | உஅ |
| திருக்குறள் அறத்துப்பால் | கூ |
| குறள் முதற்குறிப்பகராதி | சஅஎ |

## ஒப்புமைப் பகுதியில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பு அகராதி.

அகம் - அகநானூறு
அடியார்க் - அடியார்க்கு நல்லார் உரை
அதி - அதிகரணம்
அப்பர் - அப்பர் தேவாரம்
அரும்பத-அரும்பத உரையாசிரியர்
அறநெறி - அறநெறிச் சாரம்
ஆத்தி - ஆத்திசூடி
இராமா - இராமாநுஜ கவிராயர்
இ. கொ - இலக்கணக் கொத்து
இலிங்க - இலிங்க புராணம்
இளம் - இளம் பூரணம்
இறை - இறையனூர் அகப்பொருள்
இன்ன - இன்னா நாற்பது
இனியவை - இனியவை நாற்பது
உண்மை - உண்மை விளக்கம்
ஐங்குறு - ஐங்குறு நூறு
கந்த் - கந்தபுராணம்
கம்ப - கம்பராமாயணம்
கல் - கல்லாடம்
கலிங் - கலிங்கத்துப் பரணி
கலி - கலித்தொகை
காசி - காசிகண்டம்
காரிரத்ன - காரிரத்னகவிராயர்
காளிங் - காளிங்கர்
குண்டல - குணடலகேசி
குண - குணசாகரர் உரை
குறிஞ்சி - குறிஞ்சிப்பாட்டு
குறுந் - குறுந்தொகை
கொன்றை - கொன்றைவேந்தன்
கோயினுன்மணி - கோயினுன்மணி மாலை
சங்கர - சங்கர நமச்சிவாயர்
சம்பந் - சம்பந்தர் தேவாரம்
சிலப் - சிலப்பதிகாரம்
சிவஞான - சிவஞான சுவாமிகள்
சிவஞானசித் - சிவஞான சித்தியார்
சிவஞானபோ - சிவஞான போதம்
சிறுபஞ்ச - சிறுபஞ்சமூலம்
சிறுபாண் - சிறுபாணாற்றுப்படை
சீவக - சிந்தா- சீவகசிந்தாமணி
சுந்தரர் - சுந்தரர் தேவாரம்
சுவாமி - சுவாமிநாத தேசிகர்
சூ - சூத்திரம்
சூளா - சூளாமணி
சேன - சேனவரையம்
தக்க - தக்கயாகப்பரணி
தகடூர் - தகடூர்யாத்திரை
தண்டி - தண்டியலங்காரம்
தனிக் - தனிக்கவி
திரிகடு - திரிகடுகம்
திருக் - திருக்குறள்
திருக்கோ-கோவை - திருக்கோவையார்
திருக்கழு - திருக்கழுமல மும்மணிக் கோவை
திருநாவு - திருநாவுக்கரசர் தேவாரம்
திருமந் - திருமந்திரம்
திருமுரு - திருமுருகாற்றுப்படை
திருவருள் - திருவருட்பயன்
திருவா - திருவாசகம்
திருவாய் - திருவாய்மொழி
திருவிளை - திருவிளையாடற் புராணம்
தெய்வச் - தெய்வச்சிலையார்
தொல் - தொல்காப்பியம்
நக் - நக்கீரனர்
நச் - நச்சினர்க்கினியர்
நற் - நற்றிணை
நன் - நன்னூல்

நாலடி - நாலடியார்
நான்மணி - நான்மணிக்கடிகை
நீலகேசி - நீலகேசித் தெருட்டு
நுண் - நுண்பொருண்மாலை
நெஞ்சுவிடு - நெஞ்சுவிடு தூது
நெடுநல் - நெடுநல்வாடை
பதிற்று - பதிற்றுப்பத்து
பருதி - பருதியார்
பரிபா - பரிபாடல்.
பழ - பழமொழி
பழைய - பழைய உரை
பாரத - பாரதவெண்பா
புறப்பொருள் - புறப்பொருள் வெண்பாமாலை
புறநா - புறம் - புறநானூறு
பேரா - பேராசிரியர் உரை
பெரிய - பெரியபுராணம்
பெருங் - பெருங்கதை
பெருந்தே - பெருந்தேவனர் உரை

பொருந - பொருநராற்றுப்படை
பொன்வண் - பொன்வண்ணத் தந்தாதி
மணக் - மணக்குடவர்
மணிமே - மணிமேகலை
மயிலை - மயிலைநாதர்
மாற - மாறனலங்காரம்
முத்தி - முத்திநிச்சயப்பேருரை
முதுமொழிக் - முதுமொழிக் காஞ்சி
மேருமந் - மேருமந்தர புராணம்
யசோதர - யசோதரகாவியம்
யா. கா - யாப்பருங்கலக் காரிகை
வளையா - வளையாபதிச் செய்யுட்கள்
விநா - விநாயகபுராணம்
வில்லி - வில்லிபுத்தூரர்ழ்வார் பாரதம்
வீரசோ - வீரசோழியம்
வெள்ளி - வெள்ளியம்பலவாணர்

அறத்துப்பால்

# அதிகார அட்டவணை


| | |
|---|---|
| அடக்கமுடைமை | 189. |
| அருளுடைமை | 327. |
| அவாவறுத்தல் | 463. |
| அழுக்காருமை | 236. |
| அறன்வலியுறுத்தல் | 58. |
| அன்புடைமை | 121. |
| இல்வாழ்க்கை | 73. |
| இனியவைகூறல் | 149. |
| இன்னாசெய்யாமை | 403. |
| ஈகை | 297. |
| ஊழ் | 474. |
| ஒப்புரவறில் | 285. |
| ஒழுக்கமுடைமை | 201. |
| கடவுள்வாழ்த்து | 3. |
| கள்ளாமை | 370. |
| கூடாவொழுக்கம் | 359. |
| கொல்லாமை | 414. |
| செய்ந்நன்றியறில்ம | 161. |
| தவம் | 348. |
| தீவினையச்சம் | 264. |
| துறவு | 438. |
| நடுவுநிலைமை | 176. |
| நிலையாமை | 424. |
| நீத்தார்பெருமை | 40. |
| பயனிலசொல்லாமை | 265. |
| பிறனில் விழையாமை | 212. |
| புகழ் | 313. |
| புதல்வரைப்பெறுதல் | 106. |
| புலான்மறுத்தல் | 337. |
| புறங்கூருமை | 255. |
| பொறையுடைமை | 224. |
| மெய்யுணர்தல் | 449. |
| வாய்மை | 381. |
| வாழ்க்கைத்துணைநலம். | 90. |
| வான்சிறப்பு | 25. |
| விருந்தோம்பல் | 135. |
| வெகுளாமை | 393. |
| வெஃகாமை | 247, |

வள்ளுவம் வாழ்க !

# திருக்குறள்

## உரைப்பாயிரம்

**பரிமேலழகர்:—** இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமிலின்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியெனை உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடென்பன. அவற்றுள் வீடென்பது சிந்தையும் மொழியுஞ் செல்லாநிலைமைத்து ஆகலின், துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவது அல்லது இலக்கணவகையாற் கூறப் படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்.*

அவற்றுள், அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டமென மூவகைப்படும்.

அவற்றுள், ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தந்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற்கோதிய அறங்களின் வழுவாதொழுகுதல்.

வழக்காவது ஒரு பொருளைத் தனித்தனியே எனது எனது என்றிருப்பார், அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருண்மேற் செல்வது. அது கடன்கோடன் முதல் $ பதினெட்டுப் பதத்ததாம்.

---

*"தொல்காப்பியர் வீடு கூறுரோ எனின், அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் வீடு பேற்றிற்கு நிமித்தம் கூறுதலன்றி, வீட்டின் தன்மை, இலக்கணத்தாற் கூறுர் என்று உணர்க; அஃது "அந்நிலைமருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய என்ப" (தொல், பொருள், 418.) என்பதனானும் உணர்க. இக்கருத்தானே வள்ளுவனாரும் முப்பாலாகக் கூறி, மெய்யுணர்தலான் வீடுபேற்றிற்கு நிமித்தம் கூறினார்." —தொல், எழுத், சிறப், நச், உரை.

$ கடன்கோடல், உபநிதி, கூடிமேம்படல், நல்கியதை நல்காமை, ஒப்பிப் பணி செய்யாமை, கூலிகொடாமை, உடையன்அல்லான்விற்றல், விற்றுக்கொடாமை, கொண்டுஉள்ளம்ஒப்பாமை, கட்டுப்பாடு கடந்தல், நிலவழக்கு, மாதர்ஆடவர் தருமம், தாயபாகம், வன்செய்கை, சொற்கொடுமை, தண்டக்கொடுமை, சூது ஒழிபு,

தண்டமாவது அவ்வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழீஇயினரை அந்நெறி நிறுத்துதற் பொருட்டு ஒப்பநாடி அதற்குத்தக ஒறுத்தல்.

இவற்றுள் வழக்கும் தண்டமும் உலகநெறி நிறுத்துதற் பயத்த வாவதல்லது ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு உறுதி பயத்தற் சிறப்பு இலவாகலானும், அவைதாம் நூலானேயன்றி உணர்வு மிகுதியானும் தேயவியற்கையானும் அறியப்படுதலானும், அவற்றை யொழித்து, ஈண்டுத் தெய்வப் புலமைத் திருவள்ளுவரால் சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதுதான் நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடு உடைமையின், சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகள் ஒழித்து, எல்லார்க்கும் ஒத்தலிற் பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றி இல்லறம் துறவறம் என இருவகை நிலையால் கூறப்பட்டது.

அவற்றுள், இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லு கின்ற நெறிக்கணின்று அதற்குத் துணையாகிய கற்புடைமனைவியோடுஞ் செய்யப்படுவதாகலின், அதனை முதற்கட் கூறுவான் தொடங்கி, எடுத்துக் கொண்ட இலக்கியம் இனிது முடிதற்பொருட்டுக் கடவுள் வாழ்த்துக் கூறுகின்றார்.

**பரிப் பெருமாள் :**—உலகத்து மக்கட்கு உறுதிபயத்தல் காரணமாகப் பல வகைப்பட்ட சமய நூல்களெல்லாவற்றுள்ளுந் துணிந்துரைத்த அறம் பொருளின்பம் வீடு எனப்பட்ட பொருள் நான்கினையும் அருங்கின முகத்து ணர்த்துவான் எடுத்துக்கொண்டார்; அவற்றுள் வீடாவது அறஞ்செய் தாரது பயனாதலின் அவ்வீடு பேற்றை அறத்தினுளடக்கி, அறத்துப் பால், பொருட் பால், காமத்துப் பால் என்றார் அறமானது அறமுத லான பொருள் நான்கினையும் பயத்தலின் முற்படக்கூறினார். பொருளா னது வீடொழிந்த பொருண் மூன்றினையும் பயத்தலின் அதற்பின் கூறினார் என்று கொள்ளப்படும்.

இனி அறமாவது தானம், தவம், விரதம், பூசையென நால்வகைப் படும். தானமும்,பூசையும் இல்வாழ்வாரறஞ் செய்யப்படுதலானும், தவமும் விரதமும் துறந்தாரறஞ் செய்யப்படுதலானும், அவை இல்லறம் துறவறம் என இரண்டு பகுதியாக்கி அறத்துப்பால் கூறப்பட்டது.

அதனுட் கடவுள் வாழ்த்தும், வான்சிறப்பும், நீத்தார் பெருமையும், அறன் வலியுறுத்தலும் ஓரோரதிகாரமாகவும், இல் வாழ்க்கை முதலாகப் புகழ் ஈறுக இல்லறம் இருபததிகாரமாகவும். அருளுடைமை முதலாக அவாவறுத்த லீருகத் துறவறம் பதின் மூன்றதிகாரமாகவும், ஊழ் ஓரதிகாரமுமாக முற்பட முப்பத்தெட்டதிகாரங்கள் கூறப்பட்டன.

# அறத்துப்பால்

## க. பாயிரவியல்

## 1. கடவுள் வாழ்த்து

**பரிமேலழகர்** :— அஃதாவது கவி, தான்வழிபடுங் கடவுளை யாதல் எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளையாதல் வாழ்த்துதல். அவற்றுள் இவ்வாழ்த்து ஏற்புடைக் கடவுளை எனவறிக. என்னை? சத்துவம் முதலிய * குணங்களான் மூன்றாகிய உறுதிப் பொருட்கு அவற்றான் மூவராய முதற்கடவுளோடு இயைபுண்டாகலான். அம்மூன்று பொருளையுங் கூறலுற்றார்க்கு அம்மூவரையும் வாழ்த்து தல் முறைமையாகலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரென வுணர்க.

**மணக்குடவர்** :—*கடவுள் வாழ்த்தாவது கடவுளை வாழ்த்துதல்.*

**பரிப்பெருமாள்** :—*அவற்றுட் கடவுள் வாழ்த்தாவது தெய்வ வணக்கங் கூறுதல். "வழிபடு தெய்வ வணக்கஞ்செய்ய வெடுத்துக் கொண்ட தினிது முடியும்', என்பதனானும், கடவுள் வழிபாடு நால்வகைப்பட்ட வறத்தினும் பூசையாதலானும், இவரை வழிபடாதார் செய்வதோரறமில்லை யென்பதினானும் இவ்வதிகாரம் முற்படக் கூறப்பெற்றது. இதனுடன்—*

**1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பக்வன் முதற்றே உலகு. (க)**

**உரைப் பகுதி** :—

**பரிமேலழகர்** :— எழுத்தெல்லாம் அகரம் முதல - எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய முதலையுடையன; உலகு ஆதி பகவன் முதற்று - (அதுபோல) உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து.

இது தலைமைபற்றிவந்த எடுத்துக்காட்டு உவமை. அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கை யுணர்வானன்றி இயற்கை யுணர்வான் முற்றும் உணர்தலானுங் கொள்க. தமிழெழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கும் முதலாதல் நோக்கி எழுத்தெல்லாம்

---

* "எல்லாச் சமயத்தோராலும் வணங்கப்படும் படைப்பு முதலிய ஐந்தொழிற்கு முரிய எல்லாக் கடவுளாகியும் நின்றான் ஒருவனே" என்று சங்கர நமச்சிவாயர் கூறுவது (நன். சூ. 56) "குணங்களான்....மூவரையும் வாழ்த்துதல்" என்னும் பரிமேலழகர் உரையை மறுக்குங் கருத்தாகும்.

என்றார். ஆதி பகவன் என்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூல்முடிபு. உலகென்றது ஈண்டு உயிர்கள்மேனின்றது. காரணப் பட்ட உலகத்தால் காணப்படாத கடவுட்கு உண்மை கூற வேண்டு தலின் 'ஆதிபகவன் முதற்றே' என உலகின்மேல் வைத்துக்கூறினார்; கூறினாரேனும், உலகிற்கு முதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக் கொள்க. ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. இப்பாட்டான் முதற் கடவுளது உண்மை கூறப்பட்டது.

**மணக்குடவர்:**—*எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய எழுத்தைத் தமக்கு முதலாகவுடையன; அவ்வண்ணமே உலகம் ஆதியாகிய பகவனைத் தனக்கு முதலாகவுடைத்து என்றவாறு.* (1)

**பரிப்பெருமாள்:**—*என்பது என்ன சொன்னவாறோவெனின்; சொல்லும் பொருளும் என்னும் இரண்டனுள்ளும் சொல்லிற்குக் காரணமாகிய எழுத்தும் சொல்லும், பொருளும், அகரத்தைத் தமக்கு முதலாக உடையவாறு போலத் தோன்றுகின்ற எல்லாப் பொருட்கும் காரணமாகிய உலகமும் நீர் தீ வளி ஆகாயமாகி ஒன்றோடொன்றொவ்வாத பெற்றியதாயிருப்பினும் ஆதிபரமேஸ்வரனைத்தமக்கு முதலாக வுடையதாதலால் அவனை வழிபட வேண்டுமென்ற வாறாயிற்று. அன்றியும் உலகம் என்பதனை உயர்ந்தோர் ஆக்கி எல்லாப் பொருளிலும் உயர்வு உடைத்தாகிய உயிர்கள் ஆதிபர மேஸ்வரனைத் தமக்கு முதலாகவுடைய என்றுமாம். அஃதேல், அவன் முதலாயினவழி யாங்ஙன முதலாயினனைக் கூறினரென்று பிறிதொன்று தோற்றுதற்கு அடியாய் நிற்பதூஉ முதலாம். பசு எவையிற்றினுஞ் சிறப்புடைத்தாய் முன்னெண்ணப் படுவதூஉம் முதல் ஆண்டு உவமை யாகக் கூறிய அகரம் இருபகுதியுமுடைத்தாயினும், ஏனை எழுத்துக் களுக்கு அடியாய் நிற்றல் எல்லாரானு மறியப்பட்டமையாற் றலைமைபற் றிக் கூறினரென்று கொள்ளப்படும்.*

**பழையவுரை:**—*அகரமுதலாகிய உயிரெழுத்துப் பன்னிரண்டும் உட லெழுத்துப் பதினெட்டினும் பொருந்த எச்சமயப்புராணத்தினும், எச் சாத்திரத்தினும் விளங்குவதுபோல சகல சீவாத்துமாக்களுக்கும் [1] சிவசிவ னுயிருக்கப்பட்டவன் ஆதிபரமேசுவரன் ஆதலால் அவனே தெய்வம்.*

**பருதியார்:**—[2]*என்பது உயிரெழுத்துப் பன்னிரண்டுக்கும் அகரம் முதலெழுத்தாதன் முறைமைபோல, ஆதியான பகவன் முதலாம் உல கத்துக்கு என்றவாறு.* (1)

**காளிங்கர்:**—[2]*என்பது அகரமும் அதுவே; முதலும் அதுவே. அகர மாகிய எழுத்தின்கண் விரிந்தன ஏனையெழுத்துக்களும்; அவற்றுன்*

---

1 சிவசிவன் உயிர்க்குயிரானவன்

2 'என்பது' என்று வருவன குறளை நினைவூட்டுவன.

ஆகிய சொற்களும், மற்றைச் சொற்றொடர்புடைய எனைத்துக் கலைகளும், மற்றும் யாவையுமாகியவது மற்றியாதொருபடி யப்படியே மூலகாரணனாகிய இறைவன்கண்ணே விரிந்தனவும். அவை, ஓசை ஊறு ஒளி சுவை கந்தம் என்கின்ற நுண்பூதமும், மற்று அவற்றின்வழி விரிந்த வான் வளி தீ நீர் நிலம் என்கின்ற ஐம்பெரும் பூதமும், அவற்றின்வழி விரிந்த நடப்பன நிற்பனவாகிய இருவகைப் பல்லுயிர்களும், மற்றும் இவ்வுயிர்கள் வாழ்கின்ற உலகங்களனைத்தும் என்றவாறு.

**உரைவிளக்கப் பகுதி :**

**நுண்பொருண்மாலை** : அவைபோல என்னுது ஒருமையாய் அதுபோல என்றது காண்க. வாளாது எடுத்துக்காட்டுவமை என்னுது தலைமைபற்றிவந்தது என்றதனானும், முதற்றேயுலகு என உலகின்மேல் வைத்துக் கூறினாரேனும், உலகிற்கு முதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக்கொள்க என்பதனானும் எழுத்திற்கெல்லாம் முதல் அகரம்; அதுபோல உலகிற்கு முதல் ஆதிபகவன் என்க. ஆதிபகவன் என்பது பகரவொற்று மிகாமையான் வடநூன்முடிபென்றார் என்க.

தமிழ் முடிபாயின் "அறைபறை கண்ணார்க்கு" (1180) உரைத்தாங்கு* உரைப்பர். எடுத்துக்காட்டுவமையாவது உவமவுருபுபெறாது அதுபோல ஏனைப் பெய்துரைப்பக்கிடப்பது, இதனை இசையெச்சம் என்றெழுதினார் சேனாவரையர். (தொல். சொல். சூ. 440.) அது "காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந்தாங்கிருவர்" (71) என்னுங் கோவையாருரையிற் காண்க. காணப்பட்டவுலகு உயிர்மேனின்றாற் காணப்படுதலெவ்வாறெனின்; முன்னர் 'உலகம் வழங்கி வருதலால்' (11.) என்பதற்கு 'உயிர் உடம்பொடு காணப்பட்டு வருதலால்' என்னும் உரையானும், 'உயிரும் வாள்' (334) என்பதனானுங் காணப்படும்.

**இராமாநுஜ கவிராயர்** :--"ஒலி விகாரமான செயற்கையினாலும், நாதமேயாகிய இயற்கையினாலும் பிறப்பது. ஆதலால், அகரத்திற்குத் தலைமையும்; அதுபோலச் செயற்கையறிவினாலும், இயற்கையறிவினாலும் முற்றும் அறிவதினாலே ஆதிபகவனுக்குத் தலைமையுங் காண்க- இந்த உவமை, தலைமைபற்றிவந்த எடுத்துக்காட்டு உவமை. உதாரணமாக எடுத்துக்காட்டி உவமிப்பது எடுத்துக்காட்டு உவமை எனக்காண்க. தமிழ் எழுத்துக்கே அல்லாமல், வடவெழுத்துக்கும் அகரம் முதலாகிறதைக் குறித்து. எழுத்தெல்லாம் அகர முதல என்றார். உலகு என்றது, இங்கே உயிர்களைக்காட்டி நின்றது. காணப்பட்ட உலகிலே காணப்படாத கடவுளின் உண்மை சொல்லவேண்டியதால் 'ஆதிபகவன் முதற்றேயுலகு' என்று உலகின்மேல்வைத்துச் சொன்னார். அப்படிச் சொன்னாராலும்,

*"இங்ஙனம் செய்யுள் விகாரமாக்காது 'அறைபறைக்கண்ணார்' என்று பாடம் ஓதுவாரும் உளர்"—பரிமே.

உலகுக்கு முதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக்கொள்க. ஏகாரம் தெளிவுப் பொருளிலே வந்தது. இந்தக் குறளாலே, முதற்கடவுளது உண்மை சொல்லப்பட்டது.''

## மேற்கோள்பகுதி :

**இளம்பூரணர்** :—'அகர முதல' என்பது ஒரு பொருட்கண் இரு பெயர்பட வந்தது. (தொல், சொல். 410.)

**சேனாவரையர்** :—அதுபோல என எஞ்சிய இசைப்பொருள் உணர்த்துதலான் இசையெச்சம் (தொல். சொல். 440)

**பேராசிரியர்** :—'அகர முதல எழுத்தெல்லாம்' என்றவழி இரண்டு பொருள் வேறுவேறு கூறியதன்றி, அகர முதல எழுத்தெல்லாம் அதுபோல என்றானும், ஆதிபகவன் முதற்று உலகம் அதுபோல என்றானும் ஒன்றாகத்துணியுமாற்றான் உவமையும் பொருளும் கூறாமையின் வேறுபட வந்த உவமமாயிற்று. (தொல். பொருள், 307)

**நச்சினார்க்கினியர்**:—'அகர முதல என்புழி அகரந் தனியுயிருமாய், ககரவொற்று முதலியவற்றிற்கு உயிருமாய் வேறு நிற்றலின். அவ்வகரம் தனியே நிற்றலானும், பல மெய்க்கண் நின்று அவ்வம்மெய்கட்கு இசைந்த ஓசைகளைப் பயந்தே நிற்றலானும் வேறுபட்டதாகலின், ஒன்றேயாயும், பலவேயாயும் நிற்பதோர் தன்மையையுடைத்தென்று கோடும். இறைவன் ஒன்றேயாய் நிற்குந்தன்மையும் பல்லுயிர்க்குந் தானேயாய் அவற்றின் அளவாய் நிற்குந் தன்மையும்போல' (தொல். எழுத். 8)

'இங்ஙனம் மெய்க்கண் அகரம் கலந்து நிற்குமாறு கூறினாற் போலப் பதினோருயிர்க்கண்ணும் அகரங் கலந்து நிற்குமென்பது ஆசிரியர் கூறாராயினார்; அந்நிலைமை தமக்கே புலப்படுதலானும், பிறர்க்கு இவ்வாறு உணர்த்துதல் அரிதாகலானும் என்று உணர்க. இறைவன் இயங்குதிணைக்கண்ணும், நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின்கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல, அகரமும் உயிர்க்கண்ணும், தனிமெய்க்கண்ணுங் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்கும் என்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்பமுடிந்தது. 'அகரமுதல்' என்னுங் குறளான் அகரமாகிய முதலையுடைய எழுத்துக்களெல்லாம், அதுபோல இறைவனாகிய முதலையுடைத்து உலகம் என வள்ளுவனார் உவமை கூறியவற்றானும்........உணர்க' (தொல். எழுத். 46)

'சேனாவரையர் இசையெச்சம் என்ற 'அகர முதல' என்பதன்கண் அதுபோல என விரிந்த உவமச்சொல் துணியுமாறு விரியாது, இரண்டற்கும் பொதுவாய் வேறுபடவந்த உவமத்தின்பாற் படுதலல்லது, இசையாற் பிறவாமையானும் பொருந்தாமையுணர்க' (தொ. சொல். 440)

புளிமா என்னும் நேரீற்றியற்சீர் நிரையசைச்சீரோடு தளைப்பட்டு வந்ததற்கு மேற்கோள். (தொல். பொருள், 386,)

**மயிலைநாதர்** :—அகரமுதல என்பது அகரமான முதல் என பண்புத் தொகை. (நன். சூ. 364)

**சங்கரநமச்சிவாயர்** :— அகரமுதல என்பதில் ஆகிய என்னும் பண் புருபு தொக்குவந்தது. (நன். சூ. 365.)

**பெருந்தேவனார்** :— இது முதலெழுத்துக் குறிலாய் இரண்டாம் எழுத்து ஒன்றிவந்த எதுகை. (வீரசோ. 111.) வெண்பாவை 'ஓசை யூட்டுதற்கு உதாரணம். (ஷை 114.)

**யாப்பருங்கலவிருத்தி உரை** .— அலகிட்டு ஓசையூட்டுதற்கு மேற் கோள். (சூ. 57. உரை.)

**குணசாகரர்** :— அலகிட்டு ஓசையூட்டுதற்கு எடுத்தாளப்பட்டுள் ளது. (யா. கா. 26.) இடையாகு எதுகை. (ஷை 43.)

**சுப்பிரமணிய தேசிகர்** :— கரந்துறைப்பாட்டு என்ற சித்திரக்கவி செய்யுளில் இக்குறள் மறைந்திருத்தலைக் காட்டுவர். (தண்டி. 98.)

**காரிரத்ன கவிராயர்** :— எடுத்துக்காட்டுவமை. (மாற. 95.)

**சுவாமிநாத தேசிகர்** — 'அகர முதல......உலகு' வடமொழி நியாயம் வந்தது. அரியவிதிக்கு மேற்கோள். (இ. கொ. சூ. 7.)

பண்புத்தொகை விதி கூறுமிடத்து இருபதம் வடமொழியாகி வந்த தற்கு 'ஆதிபகவன்' மேற்கோள். (இ. கொ. சூ. 98.)

**வெள்ளியம்பலவாணர்** :— பரிமேலழகர் உலகம் என்பது ஈண்டு உயிர்கள்மேல் நின்றது என்றுரைத்து, பின்னர்க் காணப்படாத கடவுளது உண்மையைக் காணப்பட்ட வுலகின்மேல் வைத்துக் கூறினார் எனமாறுபட வுரைகொண்டார் என்று மறுத்துரைப்பர். (முத்தி; பேருரை. பக் 29)

## ஒப்புமைப்பகுதி :

"அகரமுதலானை அணி ஆப்பனூரானை" —சம்பந். ஆப்ப. 5.

"ஆனந்து முன் எழுத்தாய் நின்றார் போலும்" —அப்பர். ஆரூர். 7.

"அகரம் முதலின் எழுத்தாகி நின்றாய்" —சுந்தரர். நெல். அரத். 7.

"ஆரும் அறியார் அகரம் அவனென்று" —திருமந். 1721.

"அக்கரங்கள் இன்றும் அகர உயிர் இன்றேல்" —சிவஞானபோ. சூ. 2. பா. 2.

"அன்றவை பதிதான் ஒன்றென் றுறையும் அக்கரங்கள் தோறும்
சென்றிடும் அகரம் போல நின்றனன் சிவனும் சேர்ந்தே"
—சிவஞானசித். சுபக் 92.

''அங்கரங்கட் கெல்லாம் அகரவுயிர் நின்றாற்போல்
மிக்க உயிர்க்குயிராய் மேவினேம்'' —உண்மை வி. 29

''அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில்இறை நிற்கும் நிறைந்து'' —திருவருட். 1.

''உய்த்திடும் அகாரத்திற்கு முதன்மையாய் ஒழுகுநாதர்'' —திருவிளை சங்கப். 9.

**குறிப்பு:**—'எழுத்துஎல்லாம்' என்பதற்குப் பரிமேலழகர் பலவேறு மொழிகளுக்கெல்லாம் என்றும், பருதியார் உயிர் எழுத்துக்களுக்கெல்லாம் என்றும், பழைய உரைகாரர் பதினெட்டு மெய்யெழுத்திற்கு எல்லாம் என்றும், காலிங்கர் எழுத்து, சொல், சொல்லாலியன்ற கலைகள் எல்லாம் என்றும் உரைகாண்பர். வாயைத்திறத்தலாகிய முயற்சியாற் பிறக்கும் அகரம் கலந்தன்றி எந்த எழுத்துக்களும் பிறவாமை வெளிப்படையாதலின், சொற்கும், கலைக்கும் முதலாகிய எழுத்துக்கே அகரம் முதல் என்ற பொருள் இயைபுடைமை தெளிவு. இதனையே சிவஞானபோத வெண்பாவும் தெளிவித்தல் காண்க.

## 2. கற்றதனு லாய பயன்என்கொல் வாலறிவன்
## நற்றாள் தொழாஅர் எனின். (உ)

**உரைப்பகுதி:**

**பரிமே:**—கற்றதனால் ஆயபயன்என் - எல்லா நூல்களையுங் கற்றவர்க்கு அக்கல்வியறிவானாய பயன் யாது?; வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின் - மெய்யுணர்வினையுடையானது நல்ல தாள்களைத் தொழாராயின்.

என் என்னும் வினைப்பெயர் என்னென்றாய் ஈண்டு இன்மை குறித்து நின்றது. கொல் என்பது அசைநிலை. பிறவிப்பிணிக்கு மருந்தாகலின் நற்றாள் என்றார். ஆகம அறிவிற்குப் பயன் அவன் தாளைத்* தொழுது பிறவியறுத்தல் என்பது இதனாற் கூறப்பட்டது.

**பரிப்பெருமாள்: மணக்:**— *மேற்கூறிய எழுத்தினானாகிய சொற்களெல்லாம் கற்றதனானாகிய பயன் வேறு யாது? விளங்கின அறிவினையுடையவன் திருவடியைத் தொழாராயின் என்றவாறு.* *(1)*

*'சொல்லினானே பொருள் அறியப்படுமாதலான் அதனைக் கற்கவே மெய்யுணர்ந்து வீடுபெறலாகும்' மீண்டும் வணக்கங் கூறியது எற்றுக்கு? இஃது அதனாற் பயன் இதுவென்பதூஉம், வேறு வேறு பயனில்லை யென்பதூஉம் கூறிற்று. என்றார்க்கு ''கற்பக் கழிமடம் அஃகும்'' (நான்மணிக். 28) என்றாரும் உளர்.* *(1)*

---

*''வேதாகமங்கள் முதன் முதல் ஆதிபகவனால் அருளிச்செய்யப்பட்டமையின் அவருடைய பாதங்களை வணங்குதல் கடனாகும். 'ஆதிவேதம் பயந்தோய் நீ (சீவக 1242) என்பதையும் கவனிக்க. ஆதிவேதம் என்பதற்குக் 'கொலை முதலிய கவிலாத வேதம்' என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறுவது காண்க,''

—கவிராஜபண்டிதர்.

**பழைய :—** பலகல்வியைக் கற்றதனாலே பிரயோசனம் என்ன? அந்த ஞானம்பெற்று, பரமேசுவரனுடைய பாதந்தொழாதவர்க்கு.

**பரிதி :—** எ-து சாத்திரங் கற்றும் அதனாலாகிய பயன் என்ன? அறிவாளனான சிவன் ஸ்ரீபாதத்தை வணங்காராகில் என்றவாறு. (2)

**காளிங் :—** எ-து பலவகைப்பட்ட கலைகளையுங் கற்றதனாலுள்ள பயன் யாது சொல்லோ? மாசற்ற அறிவுருவாகிய இறைவனது தூய அடியினை வணங்காராயின் என்றவாறு. (1)

வாலறிவு என்பது வெண்மை; பெருமை என்றுமாம்.

## உரைவிளக்கப்பகுதி :

**நுண் :—** [1]கற்றது 'உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்' (166) என்பது போலச் செயப்படுபொருளாய்க் கல்வியாயிற்று' 'காலைக் குச்செய்த நன்றென்கொல் எவன்கொல்யான், மாலைக்குச் செய்த பகை' (1225) என்புழி எவன்கொல் என்பதனானும், எவன் என்னுகத் திரிந்தது அறிக. மூன்றுருவதும், எனின்என்னெச்சமும் ஆய என்பதனோடு முடிந்தன. 'என் கடைக்கண்ணினும்' (298) என்னுங் கோவையாரும் அது.[2] ஆற்றுள், 'பிரிநிலை' (தொல். சொல். 431) என்னும் சூத்திரத்து நச்சினார்க்கினியர் சோற்றைப் பசித்துண்டான் எனக் காட்டியதும் அது.

**இராமா :—** எவன் என்னும் வினா வினை, என் என்று விகாரப்பட்டு, இல்லை என்கிற இன்மைப் பொருள்பட நின்றது.

## மேற்கோள் பகுதி :

**பேருந்தே :—** இரண்டடியாய் ஈறு குறைந்துவந்த குறட்போலி. (வீரசோ. 127. உரை)

**காரிரத்ன :** பாவிகாலங்காரம் (மா.ற - 251. உரை)

## ஒப்புமைப்பகுதி :

"பிறைநுதலீர் உமைபேணுதல் கற்றறிவோர்கள் தம் கடனே"—சம்பங். திருவெண். 6

"கற்றுங்கு அவன் கழல் பேணினர்" —திருவா. 508.

1 கற்றது-கற்கப்படுவது. 2 கடைக்கண்ணினும் என்னும் வேற்றுமைச் சொல்லும், எத்தாவகை என்னும் வினை எச்சமும் கடைக்கண் வைத்த என்னும் வினை கொண்டன'—திருக்கோவையார் உரை,

''செய்யுள் நிகழ் சொற்றெளிவும் செவ்விய நூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயன் இதுவே எனத்துணிந்து விளங்கி ஒளிர்
மையணியும் கண்டத்தான் மலரடிக்கே ஆளானர்'' —பெரிய பொய்யடி. 1

''உள்ள நிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றால்
தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலிற் செறிவென்றே
கொள்ளும் உணர் வினின்முன்னே கூற்றுதைத்த கழற்கன்பு
பள்ளமடை யாய்என்றும் பயின்றுவரும் பண்புடையார்'' —பெரிய. சிறுத். 4

**குறிப்பு :** எழுத்துக்களுக்கெல்லாம் அகரம்போல, கல்விக்கெல்லாம் இறைவன் காரணனாயிருத்தலையறிந்திருந்தும், அக்கல்வியைக்கற்று இறைவனை வணங்காதார்க்கு ஏதும் பயன், இல்லை என்பது உணர்த்தியவாறு.

## 3. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
## நிலமிசை நீ(டு)வாழ் வார். (௩)

**உரைப்பகுதி :**

**பரிமேலழகர்:—** மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்- மலரின் கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தார்; நிலமிசை நீடுவாழ்வார் - எல்லாவுலகிற்கும் மேலாய வீட்டுலகின் கண் அழிவின்றி வாழ்வார்,

அன்பால் நினைவாரது உள்ளக்கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின் 'ஏகினான்' என இறந்தகாலத்தாற் கூறினார். என்னை? 'வாராக்காலத்தும் நிகழுங்காலத்தும், ஓராங்கு வரூஉம் வினைச்சொற்கிளவி, இறந்தக்காலத்துக் குறிப்பொடு கிளத்தல், விரைந்த பொருள என்மனார் புலவர்' [2] என்பது ஒத்தாகலின். இதனைப் பூமேல் நடந்தான் என்பதோர் பெயர் பற்றி பிறிதோர் கடவுட்கு ஏற்று வாரும் உளர். சேர்தல்-இடைவிடாது நினைத்தல்.

**மணக் :—** *மலரின் மேல் நடந்தானது மாட்சிமைப்பட்ட திருவடியைச் சேர்ந்தவரன்றே நிலத்தின்மேல் நெடுங்காலம் வாழ்வார் (எ-று).*[1]

*நிலம் என்று பொதுப்படக் கூறியவதனான் இவ்வுலகின் கண்ணும் மேலுலகின்கண்ணும் என்று கொள்ளப்படும். தொழுதாற் பயன் என்னையென்றார்க்குப் போகம் நுகர்தலும் வீடுபெறலும் என்று கூறுவார் முற்படப் போகநுகர்வார் என்று கூறினர்.*

---

1 மலர் - தேவமணி; தேவர்களால் இடப்படும் தாமரை மலர். பகவான் 'தாமரை மலர் மீது நடந்ததை 'மலர்மிசை நடந்தோன்' (சிலப். நாடு. 204)—என்பதனாலும் அறியலாம்' —கவிராஜபண்டிதர்.

2 தொல். சொல். 241

**பழைய :—** அடியாரிடும் திருப்பள்ளித் தாமத்தின்மேல் வரும் சிர் பாதந் துணையாகப் பூமியிற் பெருவாழ்வு வாழ்வார்.

**பருதி :—** எ-து பக்த சனங்களிட்ட புஷ்பத்தின் மேல் எழுந்தருளி யிருக்கும் சிவன் ஸ்ரீ பாதத்தை மனசிலே பற்றவைத்தார் பூமியின்கண் சகல பாக்கியமும் அனுபவிப்பார். 1

**காளிங் :—** மலர்மிசையேகினன் என்பது எல்லாருடைய நெஞ்சத்தாமரையினுஞ் சென்று பரந்துள்ளான். மாணடியென்பது மாட்சி யுள்ள அடி. நிலமிசை நீடுவாழ்வார் என்பது நித்தராயுள்ளார் இந் நிலத் தின் கண் இவ்வாறு, வணங்கி வழிபட்டு எவ்வுயிர்க்கும் உயிராய் நின்ற இறைவனது குற்றந்தீர்ந்த அடியினைச் சேர்ந்தார் யாவர் மற்று அவரே முத்தராவர் (எ-று). (1)

## உரைவிளக்கப் பகுதி :

**நுண் :—** 'ஏற்றுவாருமுளர்' என இவ்வாறு பிறர் கருத்து உரைப் பன எல்லாம் வடநூலார் பட்சாந்தரம் என்பர். அவனடி உடம்பாற் சேரப்படாமையின் சேர்தல் நினைத்தலாயிற்று. இதனை வட நூலார் உசிதம் என்பர். 'பொன்போற் பொதிந்து'* (155,) என்பதும் இவ்வாறு போந்த பொருள்படும் என்க. 'வாராக்காலத்தும்' என்னுஞ் சூத்திரம் 'ஏகினன்' என்பதற்கு உரைத்தார். 'இறுமாப்பொழிந்த இணைமுலையே' என்னுங் (373) கோவையாரும் அது. மாணடி-வினைத்தொகை.

**இராமா :-** ஏகினன் என்னும் தெரிநிலை வினைச்சொல் விரைவு பற்றி நிகழ்காலம் இறந்தகாலமாக மயங்கி நின்றது.

## மேற்கோள்பகுதி :

**நச் :—** 'வாழ்வார்' என்னும் ஓசையை வகுத்து 'வார்' என நேர சைச் சீராக்க அசையான் இன்னோசைத்தாயிற்று. (தொல்.பொருள்.324)

**சங்கர :-** 'எல்லாச் சமயத்தோரானும் வணங்கப்பெறும் படைப்பு முதலிய ஐந்தொழிற்கும் உரிய எல்லாக் கடவுளாகியும் நின்றான் ஒருவனே என்பார் அருகனை நான்முகன் என்றும் கூறினர். இவ்வாறு வள்ளுவ நாயனாரும் மலர்மிசை.......வாழ்வார் என வரையாது கூறுதல் காண்க' (நன். சூ. 56)

**குண :—** வகையுளிக்கு மேற்கோள் (யா.கா. 45).

**சுவாமி :-** மாணடி சேர்ந்தார் என்னும் வினையைப், பெயராகவே துணிதல் (இ.கொ. 122)

* பொதிந்து வைத்தல்—சால்புபடைமைற்றி இடைவிடாது—நினைத்தல் பரிமே.

**ஒப்புமைப்பகுதி :**

"ஞானப்புகலுடையோர் உள்ளப் புண்டரிகத்துள்ளிருக்கும் புராணர்" —சம்பந். திருவிழி-6.

**4. வேண்டுதல் வேண்டாமை[1] யிலானடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல. (௪)**

**உரைப்பகுதி :**

**பரிமே** :-வேண்டுதல் வேண்டாமை இலான் அடிசேர்ந்தார்க்கு—ஒரு பொருளையும் விழைதலும் வெறுத்தலும் இல்லாதவன் அடியைச் சேர்ந்தார்க்கு; யாண்டும் இடும்பை இல - எக்காலத்தும் பிறவித் துன்பங்கள் உளவாகா.

பிறவித் துன்பங்களாவன தன்னைப்பற்றி வருவனவும், பிற வுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவும் என மூவகையான் வருந்துன்பங்கள். அடிசேர்ந்தார்க்கும் அவ்விரண்டும் இன்மையின் அவை காரணமாகவரும் மூவகைத் துன்பங்களும் இலவாயின.

**[2]மணக் :**—*இன்பமும் வெகுளியும் இல்லாதானது திருவடியைச் சேர்ந்தவர் எவ்விடத்தும் இடும்பையில்லாதவர் என்றவாறு.*

*பொருளுங் காமமும் ஆகா என்றற்கு 'வேண்டுதல் வேண்டாமையிலான்' என்று பெயரிட்டார்.* 6

**பரிப்பெருமாள் :**—*இது கையாறு கெடும் என்றது. அறம் வேண்டும் எனறற்கு அறவாழி யந்தணன் என்று பெயரிட்டார்.*

**பழைய :**–*வேணும் என்ற விருப்பமும், வேண்டாம் என்ற வெறுப்பும் இவையிரண்டுமில்லாத ஸ்ரீபரமேசுவரன் சீர்பாதஞ் சேர்ந்தார்க்கு இகபரத்திலும் துன்பமில்லை.*

**பருதி:**—*எ - து விருப்பு வெறுப்பு இல்லாதான் பாதம் சேர்ந்தார்க்குத் துன்பம் இல்லை என்றவாறு.* 5

**காளிங்:**...*எ - து உலகத்து யாதானும் ஒரு பொருளை விரும்புதலும் விரும்பாமையும் இல்லாத இறைவன் அடியை அன்போடு சேர்ந்தார்க்கு எவ்விடத்தானுந் துயரம் இல்லை என்றவாறு.* 7

---

1 "வேண்டுதல் வேண்டாமை - ராகத்துவேஷங்கள். இடும்பை பிறவித் - துன்பங்கள். அவை மனோதுக்கமும், ஆகந்துகதுக்கமும், சரீரதுக்கமும், சுபாவ துக்கமும் என நான்காம் **கவிராஜபண்டிதர்,** 2 'சேர்ந்தார்', 'இலர்' எனப் பாடம்.

## உரைவிளக்கப்பகுதி:

**நுண்:-** யாண்டும் என்பது காலப்பொருட்டாயிற்று. ஒற்றினுள் 'யாண்டு முகாஅமை' (585.) என்பது சதுருபாயப்பொருட்டு. இனி இடப் பொருட்டுப் பெரும்பான்மையும்வரும். இல என்பது உண்டு என்பதற்கு மறையாய்ப் பொருண்மை சுட்டி, இல்லென்னும் பொருட்டாய்ப் 'பிறன் கடை நின்றுருட் பேதையாரில்' (142.) என்றதுபோல நின்றது. 'கோளில் பொறியிற் குணமில' (9.) என்பது உடைய என்பதற்கு மறையாய்த் தலை கள் குணத்தையில என வினைக்குறிப்பாய் நின்றது. "இன்றில" (தொல். சொல். 222) என்னுஞ் சூத்திரத்துள் இளம்பூரணர் கல்லாடர் சேனுவரை யர் நச்சினுர்க்கினியர் முதலாயினோர் உரைத்த, உரையினுங்காண்க. முன்னர் உள, உளது, உண்டு, இலது, உடைத்து, அன்று இன்று என வருவன எல்லாம் இவ்வாறு வரும்; ஆண்டாண்டுக் காண்க. இடும்பை மூவகைத்து; இவற்றை வடநூலார் தாபத்திரயம் என்பர்.

## ஒப்புமைப்பகுதி:

"கொடுமையும் செம்மையும் வெம்மையும் தண்மையும்
உள்வழி யுடையை இல்வழி இலையே
போற்றுநர் உயிரினும் போற்றுநர் உயிரினும்
மாற்றே மாற்றல் இல்லையே நினக்கு
மாற்றோரும் இலர் கேளிரும் இலர் எனும்
வேற்றுமை யின்றது போற்றுநர்ப் பெறினே."

—பரிபாட. 4: 5 -5

"வேண்டாமை வேண்டுவதும் இல்லான் தன்னை"

—அப்பர். திருவாவடு. 9.

"தம்பரமல்லவர் சிந்திப்பவர் நடுமாற்றறுப்பார்."

—சுந்த. நூப்பதும். 8.

5. **இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**

## உரைப்பகுதி:

**பரிமே** :—இருள்சேர் இருவினையுஞ் சேரா - மயக்கத்தைப் பற்றி வரும் நல்வினை தீவினை என்னும் இரண்டுவினையும் உளவாகா: இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு - இறைவனது மெய்ம்மை சேர்ந்த புகழை விரும்பினுரிடத்து.

இன்னதன்மைத்தென ஒருவராலுங் கூறப்படாமையின் அவிச்சையை இருளென்றும், நல்வினையும் பிறத்தற்கேதுவாகலான்

இருவினையுஞ்சேரா என்றும் கூறினர். இறைமைக்குணங்கள் இல்லாயினரை உடையர் எனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேரா ஆகலின் அவை முற்றவும் உடைய இறைவன் புகழே பொருள் சேர்புகழ் எனப்பட்டது. புரிதல்-எப்பொழுதும் சொல்லுதல்

**மணக்:**— மயக்கத்தைச் சேர்ந்த நல்வினை தீவினையென்னும் இரண்டு வினையும் சேரா; தலைவனதாகிய மெய்ப்பொருள் சேர்ந்த புகழ்ச்சிச் சொற்களைப் பொருந்தினர்மாட்டு என்றவாறு. 7

**பரிப்பெருமாள்:** — தலைவனதாகிய மந்திரங்கள் எனினும் அமையும். பொருந்துதல்-இடைவிடாமல் ஓதுதல். இது வினை கெடும் என்றது

**பழைய:**— இருவினைபற்றிய பாவமானது சிவகீர்த்தி பாராட்டுவாரிடத்துச் சேராது,

**பருதி:**– எ - து மும்மல வித்தாகிய பாவமானது சிவகீர்த்தி பாராட்டுவானிடத்து இல்லை என்றவாறு. 4

**$காளிங்:** எ - து தம் அறியாமையாகின்ற இருள் காரணமாக வந்து இயைகின்ற நல்வினை தீவினை என்னும் இரண்டு வினையுஞ்சேரா; அவ்விறைவனற்பெற்ற உபதேசப்பொருளோடு பொருந்திப் புகழ்தங்கி நின்றவரிடத்து என்றவாறு. 6

**தாமத்தர்:** — *அஞ்ஞானத்தாலுண்டாகும் நல்வினை தீவினை என்னும் இரண்டுவினைகளும் சேரமாட்டா: மெய்த்தன்மை பொருந்திய கடவுளுடைய புகழை விரும்பித் தோத்திரம் பண்ணினரிடத்து.

**நச்சர்:**– *அஞ்ஞானம்பற்றி எழாநின்ற இருவினைகளும், மெய்த்தன்மை வாய்ந்த சிவபிரானது திருப்புகழைப் பாராட்டுவாரிடத்துச்சேரா.

**$தருமர்:**– *தம் அறியாமையாகின்ற இருள் காரணமாக வந்து இயைகின்ற நல்வினை தீவினைகள் என்னும் இரண்டு வினையுஞ் சேரா; அவ்விறைவனற்பெற்ற உபதேசப்பொருளோடு பொருந்திய புகழ் தங்கினரிடத்து.

**வீரமாமுனிவர்:**–*கடவுளாகிய மெய்ப்பொருளை அடைந்தான் என்கிற புகழை விரும்பினவரிடத்திலே, இச்சைகள் பண்ணுவிக்கிற மயக்கத்தினால் வருகிற நல்வினை தீவினைக்கலப்புகள் உண்டாகா; நல்வினையே உண்டாகும்.

---

$இவ்விருவுரைகளும் மாற்றமின்றி அப்படியேயிருத்தல் காண்க.
*தமிழ்ப்பொழில் துணர் 6. பக் 459-ல் இவ்வுரைகளைக்காணலாம்.

**உரைவிளக்கப்பகுதி:**

**நுண்:**– நல்வினையும் பிறத்தற்கேதுவாகலின் கூட்டினர். 'சார் புணர்ந்து......நோய்' (359) என்பதும் [1] அது.

**இராமா:**– புரிதல் எப்பொழுதும் விரும்பி வாழ்த்துதல், இறைவனை வாழ்த்தினவர் வீடுபெறுவர் என்பது இதன் கருத்து.

**மேற்கோள்பகுதி:**

**நச்:**– வெண்பா உரிச்சீர் நேர்பசைச் சீரோடு தளைப்பட்டமைக்கு மேற்கோள், (தொல், பொருள். 387 )

**வெள்ளி:**– புத்தர் முதலான புறச்சமயவாதிகள் சொல்லும் பொருளை மறுத்து வேதாகமவழிச்செல்லும் வள்ளுவர் இருள்சேர் என்னும் இக் குறளை வைத்தார். (முதுமொழிமேல். 2.)

**ஒப்புமைப்பகுதி:**

" இருமை வினையும் இல ஏத்துமவை." —பரிபா. 13 : 48

" இருள்புரி வினைகள் சேரா(து) இறைவனது அறந்தை எய்தின். "
—யசோதர. 309.

" இருள்புரி உலகம்சேரா இயல்நெறி பயந்தபெம்மான்
" பொருள்புரி விழவுகாண்பார் புண்ணிய உலகம் காண்பார் !"
—சூளா. துறவு, 27

" . . . . . . . தீவினை யிரண்டும் தீர்ந்தோம்
" கற்றைவார் சடையான் கோலம் காட்டியாட் கொண்ட அன்றே. "
—திருவிளை. வாதவூ. உபதே. 83.

## 6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
## நெறிநின்றார் நீடுவாழ் வார். (சு)

**உரைப்பகுதி:**

**பரிமே:**—பொறிவாயில் ஐந்து அவித்தான் - மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் பொறிகளை வழியாகவுடைய ஐந்தவாவினையும் அறுத்தானது, பொய்தீர் ஒழுக்கநெறி நின்றார் - மெய்யான ஒழுக்கநெறி யின்கண் வழுவாது நின்றார், நீடு வாழ்வார் - பிறப்பின்றி எக்காலத்தும் ஒருதன்மையராய் வாழ்வார்.

---

[1] 'பிறப்பிற்குக் காரணமாகலான் நல்வினைப்பயனும் நோயெனப்பட்டது'
—பரிமே.

புலன்கள் ஐந்தாகலான் அவற்றின்கட் செல்கின்ற அவாவும் ஐந்தாயிற்று. ஒழுக்கநெறி ஐந்தவித்தானுற் சொல்லப்பட்டமையின் ஆன்டை ஆறனுருபு செய்யுட்கிழமைக்கண் வந்தது; 'கபிலரது பாட்டு' என்பதுபோல. இவை நான்குபாட்டானும் இறைவனை நினைத்தலும், வாழ்த்தலும், அவன் நெறி நிற்றலும் செய்தார் வீடுபெறுவர் என்பது கூறப்பட்டது.

**மணக்:**.... *மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளின் வழியாகவரும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் ஐந்தின் கண்ணும் செல்லும் மன நெகிழ்ச்சியையடக்கினனது பொய்யற்ற ஒழுக்க நெறியிலே நின்றாரன்றே நெடிதுவாழ்வார் என்றவாறு.*

*இது சாவில்லை யென்றது.*

**பழைய:** ... *பொறியின்வழியே புலன்போகாமல் சிவனுடைய பாதத்திலே தன்னறிவைச் செலுத்தப்பட்டபேர் இகபரம் இரண்டிலும் நீடு வாழ்வார்.*

**பருதி:**—*எ - து $சத்த பரிச ரூப ரச கந்தம் என்கிற பொறியை வழியாகவுடையவற்றிற்கு மனசைப் போக்காமல் காக்கவல்லார் இகபரம் இரண்டிலும் நெறிநின்று அநேககாலம் வாழ்வர் என்றவாறு.* 7

**காளிங்:**- *சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்கின்ற ஐம்பொறிகளை நுகர்தற்கு வழிக்கருவியாகிய மெய் வாய் கண் மூக்குச் செவி என்கிற ஐம்பொறிகளையும் அகத்தடக்கி இறைவனது உபதேசமுறைமையாகின்ற நல்லொழுக்கத்தின்கண் வழிப்பட்டு நின்றவர் முத்தராவர் என்றவாறு.* 8

**தாமத்தர்:** – *உடம்பு, வாய், கண், காது, மூக்கு என்று சொல்லப்பட்ட ஐந்து பொறிகளை வழியாகஉடைய ஐந்து ஆசைகளையும் அறுத்தவன் சொன்ன குற்றமில்லாத நேர்நெறியிலே, வழுவாமல் நடந்தவர்கள், ஒருகாலமும் அழிவில்லாமல்இருக்கின்ற மோட்சத்திலே எக்காலமும் வாழ்வார்கள். 1

**நச்சர்:**- **ஐம்பொறிகளின் வழியாக நுகரப்படும் ஐம்புலன்களையும் வென்றனது, பொய் நீங்கிய ஒழுக்கநெறியில் நின்றார், இகத்திலும் பரத்திலும் நெடுங்காலம் வாழ்வர்.*

---

$ சத்த முதலியஐந்தும், பொறிகளை வழியாகக்கொண்ட புலன்கள் என்பது கருத்து.

* தமிழ்ப்பொழில் துணர் 6. பக் 460.

1 இவ்வுரையும் கவிராஜ பண்டிதர் உரையும் சிறிதுமாற்றமுமின்றி ஒத்துள்ளன.

[1] தருமர்....*சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்கின்ற ஐம் புலன்கொள்ளுதற்கு வழிக்கருவியாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி என்கின்ற ஐம்பொறிகளையும் அகத்தடக்கிய இறைவனது உபதேச முறைமையாகின்ற நல்லொழுக்கத்தின்கண் வழிப்பட்டு நின்றவர் மூத்த ராய் நெடுங்காலம் வாழ்வர்.

## உரை விளக்கப்பகுதி:

**நுண்:**....ஒழுக்கநெறி பாரிபாட்டுஎன்றாற்போலாது, கபிலரது பாட்டு என்றாற்போலும் செய்யுட்கிழமை. 'பற்றுக பற்றற்றான் பற்றினை' (350.) என்பதும் அது[2]. 'தெரிந்து மொழிச் செய்தியின்' (தொல். சொல். 81) என்னும் ஆறுவதன் சூத்திரவிதிபெற்று, இடத்து நிகழ்பொருள் என்னும் பிறிதின் கிழமையாயிற்று.

**இராமா:**—ஐந்தவித்தானது என்கிற ஆறும்வேற்றுமையுருபு செய்யுட் பிறிதின்கிழமைப் பொருள்பட நின்றது.

## மேற்கோள்பகுதி:

**சுவாமி:**-நெறிநின்றார் நீடுவாழ்வார் என்பதனை முறையே பெயராக்க வேண்டில் எடுக்க; முற்றாக்கவேண்டிற்படுக்க. (இ. கொ. சூ. 120.)

## ஒப்புமைப்பகுதி :

" பொறிவாயில் ஐந்தனையும் அவியப் பொருது." —சுந்த. திருநெல். அரத். 2.

" புலன்கள் ஐந்தும் செற்றவர். !" —பெரிய. திருஞா. 343.

" இகல்செய்பொறி கரணதி வகைகளையும் நெறியால். . . . . ,அரணகி. "
—திருவிளை. வரகுண. 3.

**குறிப்பு:**—பொய்நெறி மெய்ந்நெறி இரண்டிலும் ஒழுகுவதாயிருக்க, பொய் திர்ந்தநெறியிற் சென்றமையாலே ஒழுக்கமாயிற்று என்பார் பொய்தீர் ஒழுக்க நெறி என்றார் எனலுமாம்.

**7. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது. (எ)**

## உரைப்பகுதி:

**பரிமே:**— தனக்கு உவமையில்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் - ஒருவாற்றானும் தனக்கு நிகரில்லாதவனது தாளைச்

---

1 இவ்வுரை காளிங்கர் உரையுடன் ஒத்துள்ளது. தமிழ்ப் பொழில் துணர் 6 பக் 450

2 'பற்றற்றான் பற்று; என்புழி ஆறுவது செய்யுட்கிழமைக்கண் வந்தது.
பரிமே.

சேர்ந்தார்க்கு அல்லது, மனக்கவலை மாற்றல் அரிது - மனத்தின்கண் நிகழும் துன்பங்களை நீக்குதல் உண்டாகாது.

'உறற்பால தீண்டாவிடுதலரிது' [1] என்றாற்போல ஈண்டு அருமை இன்மைமேனின்றது. தாள் சேராதார் பிறவிக்கேதுவாகிய காமவெகுளி மயக்கங்களை மாற்றமாட்டாமையின் பிறந்து அவற்றான் வருந் துன்பங்களுள் அழுந்துவர் என்பதாம்.

**மணக்:**– *தனக்கு நிகரில்லாதானது திருவடியைச் சேர்ந்தவர்க்கு அல்லது மனத்துண்டாம் கவலையை மாற்றுதல் அரிது என்றவாறு.*

*வீடு பெறலாவது [2]'அவலக் கவலைக் கையாற்றின்' நீங்கிப் புண்ணிய பாவம் என்னும் இரண்டினையும் சாராமல், சாதலும் பிறத்தலும் இல்லாத தொரு தன்மையை யெய்துதல், அது பெறும் என்பார் முற்படக் கவலை கெடும் என்றார்; அதனால் எல்லாத் துன்பமும் வருமாதலின்* 4

**பழைய:**-தனக்கு ஒருத்தரும் உவமையில்லாத பரமேசுரன் பாதத்தைச் சேர்ந்தபேரேயல்லாமல் மற்றபேரெல்லாம் மனக்கிலேசம் மாற்றமாட்டார்.

**பருதி:**– *தனக்கொருவரும் நிகரில்லாதவன் ஸ்ரீ பாதத்தைச்சேராதவர் மனத்துயரம் மாற்றுவாரல்லர். அவர் மனத்துயரமாற்ற மாட்டார் என்றவாறு.* 6

**காளிங்:**– *எ - து எவ்வுயிர்க்கும் உயிர்ப்பொருளாகின்றவனாகிய முதற் பொருளாந்தன்மைக்கு இணையில்லாதான்றனது அடியிணை யுண்மையாகச் சேர்ந்தவர்க்கல்லது மற்றியாவர்க்குந் தமது நெஞ்சத்துக் கவலை நீக்குதற் கரிது என்றவாறு* 4

**உரைவிளக்கப்பகுதி:**

**நுண்:**-- *அரிது இன்மைமேல் நின்றது. 'அருங்கேடன்' என்பதும் அது * (210.). அல்லால் என்பது வினையெச்சக் குறிப்பு.*

**இராமா:**-- *முயற்கொம்பு அரிது என்றாற்போல இங்கே அருமை யானது இல்லை என்ற அருத்தத்திலேவந்தது.*

**மேற்கோள்பகுதி:**

**நச்:**-- *தேமா என்னும் நேரீற்று இயற்சீர் நிரைபசைச்சீரோடு தட்டு வந்ததற்கு மேற்கோள்.* (தொல். பொருள். 74)

---

[1] நாலடி 109.

[2] 'அவலம் - வருத்தம் தோன்றிநிற்றல், கவலை - யாதுசெய்வல் என்றல். கையாறு - மூர்ச்சித்தல்' —உ. வே. சா. மணிமேகலை உரை 4 ; 119.

* 'அருமை - இன்மை' —பரிமே.

**ஒப்புமைப்பகுதி:**

"ஒருவமன் இல்லி" —அப்பர். வினு விடை. 10
"உவமனில் இறந்தன ஒண் மலர்த்தாள்." —திருவா. 43
"தணையொப்பாரை இல்லாத் தனியை." ஷெ 442
"ஒப்புனக் கில்லா ஒருவன்." ஷெ 538
"தன்னை யொப்பார் ஒன்றுமில்லாத் தலைமகன்." —திருமந். 6

"எந்தையும் யாயும்எம் பிரானும் எம்முனும்
அந்தமில் பெருங்குணத் திராமன் ஆதலால்
வந்தனை யவன்கழல் வைத்த போதலால்
சிந்தைவெங் கொடுந்துயர் தீர்கலா தென்றான்."—கம்ப. அயோத். பள்ளி. 58.

**குறிப்பு**:-*உவமை ஓர் அளவை. ஒன்றாலும் அளக்கப்பெறாத இறைவற்கு உவமை ஒன்றுண்டாயின் அவனது வரம்பில் பெருமைக்கு இழுக்காம்; ஆதலின் தனக்குவமையில்லாதான் என்றார்.*

**8. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**பிறவாழி நீந்தல் அரிது.**

மகாமகோபாத்தியாய (அ)
டாக்டர் ... நிலையம்
2, ... சாலை,
... 600 090.
1693

**உரைப்பகுதி:**

**பரிமே:**—அறவாழியந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் - அறக்கடலாகிய அந்தணனது தாளாகிய புணையைச் சேர்ந்தார்க்கல்லது, பிற ஆழி நீந்தலரிது - அதனிற் பிறவாகிய கடல்களை நீந்தல் அரிது.

அறம் பொருள் இன்பமென உடனெண்ணப்பட்ட மூன்றனுள் அறத்தை முன்னர்ப் பிரித்தமையான் ஏனைப் பொருளுமின்பமும் பிற வெனப்பட்டன. பல வேறு வகைப்பட்ட அறங்களெல்லாவற்றையும் தனக்கு வடிவாகவுடையனாகலின் அறவாழியந்தணனென்றார். அற வாழி யென்பதனைத் தருமசக்கரமாக்கி, அதனையுடைய அந்தணனென் றுரைப்பாரும் உளர்[1]. அப்புணையைச் சேராதார் கரைகாணாது அவற் றுள்ளே யழுந்துவராகலின் நீந்தலரிது என்றார். இஃது ஏகதேச வுருவகம்.

**மணக்:**— *அறமாகிய கடலையுடைய அந்தணனது திருவடியைச் சேர்ந் தவர்க்கல்லது, ஒழிந்த பேர்களுக்குப் பிறவாழியை நீந்தல் ஆகாது; அது பெறுதலரிது என்றவாறு.*

*இது காமமும் பொருளும் பற்றிவரும் அவலம் கெடும் என்றது.* 5

---

[1] இதுவும் **கவிராஜ பண்டிதர்** உரைக்கருத்தும் ஒத்திருத்தல் காண்க.

**பரிப்:**— அறத்தைச் சொல்லிப் பிற எனவே அற முதலான மூன்றினும் ஒழிந்த இரண்டினும் என்பது பெறுதும். 5

**பழைய:**—தன்மமென்னுஞ் சமுத்திரமாயுள்ள பரமேசுரன் சீபாதம் துணையில்லாதார்க்கு 1பிறவிச் சமுத்திரம் நீந்தமுடியாது.

**பருதி:**—எ - து தன்மமென்னுஞ் சமுத்திரமாகவுள்ள பரமேசுரன் பாதத்துணையில்லாதார் பாவக்கடலை நீந்தமாட்டார் எ - று. 10

**காளிங்:**—அறமாகிய பெருவெள்ளமாய் அனைத்துயிர்கட்கும் அழகிய தண்ணளியையுடையனாகிய இறைவனது தாளிணையை வணங்கி வழிபட்டார்க்கல்லது, மற்றியாவர்க்கும் பிறவிப்பெளவத்தைக் கடத்தல் அரிது எ - று. 9

## உரைவிளக்கப்பகுதி :

**நுண்:** - ஏகதேசவுருவகமாவது 'காமக் கணிச்சி யுடைக்கும் நிறையென்னும் நாணுத்தாழ் வீழ்த்த கதவு' (1251.) என்பது போல முற்று உருவகமாய் வாராது, ஒருவழி உவமை குறைந்து பொருள்நிற்பதும், ஒருவழிப் பொருள்குறைந்து உவமை நிற்பதும், ஒருமருங்கு உவமையும் பொருளுங் குறைந்து நிற்பதும், ஒருவழிக் குறைந்ததற்கேற்ற வினைபெற்று நிற்பதும் என்க. 'அறவாழி யந்தணன் தாள் சேர்ந்தார்' (8.) 'பொருளென்னும் பொய்யாவிளக்கம் இருளறுக்கும்' (753.) 'சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும் ஏமப்புணையைச் சுடும்' (306.) 'காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலைமலரும் இந்நோய்' (1227.) எனவரும் ஏகதேச வுருவகங்களெல்லாம் முறையே காண்க.

**இராமா:**—அந்தணன் தாளாகிய தோணி என்றது ஏகதேச உருவக அலங்காரம் எனவும், ஏகாங்க உருவக அலங்காரம் எனவும் சொல்லப்படும். என்னவெனில் ஒருபொருளின் பல அங்கங்களையெல்லாம் உருவகம் செய்வது அநேகாங்க உருவகம் என்றும், ஒரே அங்கத்தை உருவகம்செய்வது ஏகாங்க உருவகம் என்றும் காண்க. இனிப் பிறவாழி என்பதற்குப் பாவக்கடல் எனினும் அமையும்.

## மேற்கோள் பகுதி :

**காரிரத்ன :**—மாட்டேறில்லா உருவகத்திற்கு மேற்கோள் (மாற 120. உரை.)

---

1 ''பிறவு ஆழி - பிறப்பாகிய கடல். 'வேழப் பிறவும்' (பெருங்கதை. 53-86.) என்பதற்கு யானைப்பிறவியும் என்றும், 'பிறவாழி கரைகண்டாரே' (வில்லி. கிருட். 1௦) என்பதற்குப் பிறவியாகிய கடலைக் கடந்தவரே என்றும் பெரியோர் பொருள்கூறியிருத்தல் காண்க.''

—கவிராஜபண்டிதர்.

**ஒப்புமைப்பகுதி:**

"உலகம் இருள் கெடவிழிக்கும் ஒன்மணியறவாழி." —சீவக. 3023.

**குறிப்பு:**-பிறஆழி என்பதற்கு பரிமேலழகர் முதலிய பலர் பிறகடல் என்றுபொருள் கண்டனர். பழைய உரைகாரர் காளிங்கர் இவர்கள் பிறவியாகிய கடல் என்றனர். பிறவு - பிறவி "பிறவியை யார்க்கும் அறிவரியோன்" திருக்கோவையார் காண்க. பின்னர் பிறவிப் பெருங்கடல் என வருதலின் ஈண்டும் இப்பொருள் கொள்ளும் காளிங்கர் கூற்று ஏலாமை காண்க.

**9. கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை. (கூ)**

**உரைப்பகுதி:—**

**பரிமே:—**கோளில் பொறியில் குணம் இல - தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்கையில்லாத பொறிகள்போலப் பயன்படுதல் உடையவல்ல; எண்குணத்தான் தாளை வணங்காத்தலை - எண்வகைப் பட்ட குணங்களையுடையானது தாள்களை வணங்காத தலைகள்.

எண்குணங்களாவன தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல். முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்ப முடைமை எனவிவை. இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது. அணி மாவை முதலாக வுடையன எனவும், கடையிலா வறிவை முதலாகவு டையன எனவும் உரைப்பாருமுளர். காணாதகண் முதலியனபோல வணங்காத தலைகள் பயனிலவெனத் தலைமேல் வைத்துக் கூறினார். கூறினாரேனும் இனம்பற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயனில வென்பதூஉங் கொள்க. இவை மூன்றுபாட்டானும் அவனை நினைத்தலும், வாழ்த்தலும், வணங்கலும் செய்யாவழிப்படுங் குற்றங் கூறப்பட்டது.

***மணக்:***—*அறிவில்லாத பொறிகளையுடைய பாவைகள் போல ஒரு குணமும் உடையனவல்ல; எட்டுக்குணத்தினையுடையவன் திருவடியினை வணங்காத தலையினையுடைய உடம்புகள் என்றவாறு.*

*உயிர் உண்டாகில் வணங்கும் என்று இழித்து, உடம்புகள் என்றார்.* 10

***பரிப்:***- *குணமில்லை என்றது பயனில்லை என்றவாறு. இது வணங்கா தார்க்கு உளதாகும் குற்றம் கூறிற்று. இவை எல்லாம் தலைமைபற்றிக் கூறியவாறு கண்டுகொள்க.*

*இவ்வதிகாரத்திற் கூறிய கடவுட் பெயர் எல்லாம் ஒரு சமயத்தார் கூறும் பெயரன்றி, வேறு வேறாகப் பல சமயத்தார் கூறும் பெயராகத் தோன்றா நின்றது. அதற்குக் காரணம் என்னையெனின் இஃதெமக்குப்*

புலனுயிற்றன்று. அச்சமயத்தா ரெல்லாரும் நன்னெறிக்கட் செல்லும் உள்ளத்தாராதலின் யாதானும் ஓர் சமயத்தார் கூறிய கடவுளை வணங்கி நன்றி பயக்குமென்பது போதுங் கருத்து.

**பழைய:**—அஷ்டாங்கயோகியான பரமேசுரனிடபாதத்தை வணங்காத்தலை, மெய் வாய் கண் மூக்குச் செவியுண்டாயினும் புலனில்லாத சித்திரம்போலும்.

குணமிலரே என்று பாடமாயின் நற்கோளிலராயும் தரித்திரராயும் குணமில்லாதவராயும் ஆவார்கள் என்றுரைகொள்ளலாம்.

**பருதி:**—எ - து கோளாகிய நவக்கிரகங்களும், புலனாகிய கண் வாய் மூக்குச் செவி மெய்யென்னும் ஐம்புலன்களும் உண்டாகிலும் பயனில்லை. எட்டுக்குணங்களுடைய சிவன் சிவந்ததாளை வணங்காத தலை சித்திரத்தில் எழுதிய மரப்பாவைக்கு நிகராம் என்றவாறு.

எட்டுக்குணத்தான்: எட்டுக்குணமாவன:—அனந்தஞானம், அனந்தவீரியம், அனந்தகுணம், அனந்ததெரிசனம். நாமமின்மை, கோத்திரமின்மை, அவாவின்மை, அழியாவியல்பு என்பன. 8

**காளிங்:**—எ - து கோட்பரமில்லாத பொறியினைப்போலக் குணமில்லனவாம்; எண்ணப்பட்ட குணங்களையுடைய இறைவனது தாளினை வணங்கப்பெறாத தலைகள் என்றவாறு.

## உரைவிளக்கப்பகுதி :

**நுண்:**—வணங்காத் தலை, காணாக் கண் கேளாச் செவிபோலும்என்க.

## மேற்கோள்பகுதி :

**சேனா:**—தாளை வணங்காத்தலை எனவும், அவனை நினைத்தலும், வாழ்த்தலும், வணங்கலும் செய்யாதவழி எனவும் கிளந்தோதுலாலும், வணங்குதல் சிறப்புவினையாவதல்லது பொதுவினையாகாமையின் வணங்கிஎஎ்பதும் அவ்வப்பயன் குறித்து வாராமையறிக. (தொல். சொல்)

**சுவாமி:**—இவை போல்வன எல்லாம் உபலக்கணமென்க. (இ. கொ. சூ. 8. உரை,)

## ஒப்புமைப்பகுதி :

''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
**தாழ்த்தச் சென்னியும்** தந்த தலைவனை.'' —அப்பர். தனி. 7.
''**வணங்கத் தலைவைத்து.**'' —திருவாச. 381.
''**வந்தனை செய்யத் தலை**யமைத்தேன்.'' —பொன்வண். 92.

**குறிப்பு:**—பட்டால் அறியும் பரிச உணர்ச்சியோடு, இருந்தும் சென்றும் அறியும் உணர்ச்சிகளையுடைய ஐந்து புலன்களையும் ஒருங்கே படைத்தது தலை. ஆதலின் இறைவனை வணங்காத தலை தத்தம் செயலாற்றமாட்டாத பொறிகளைப் போலப் பயனற்றன என்றநயம் ஓர்ந்துணரற்குரியது.

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். (௧0)

**உரைப்பகுதி:**

**பரிமே :**—இறைவனடி (சேர்ந்தார்) பிறவிப் பெருங்கடல் நீந்துவர் - இறைவன் அடி யென்னும் புணையைச் சேர்ந்தார் பிறவியாகிய பெரிய கடலை நீந்துவர், சேராதார் நீந்தார் - அதனைச் சேராதார் நீந்த மாட்டாராய் அதனுள் அழுந்துவர்.

காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின் பிறவிப் [1]பெருங்கடல் என்றார்: சேர்ந்தார் என்பது சொல்லெச்சம். உலகியல்பை நினையாது இறைவனடியையே நினைப்பார்க்குப் பிறவியறுதலும், அவ்வாறன்றி மாறி நினைப்பார்க்கு அஃதருமையுமாகிய இரண்டும் இதனால் நியமிக்கப்பட்டன.

*[2]மணக்.—பிறவியாகிய பெரியகடலை நீந்தியேறுவர் இறைவனது அடியைச் சேர்ந்தவர்: சேராதவர்[2] அதனுள் அழுந்துவர் என்றவாறு.* 9

*பழைய:—பரமேசுரனுடைய சீபாதகமலமாகிற தெப்பத்தைப் பிடித்த பேர் செனனசாகரம் நீந்திக் கரையேறுவார்; அவரிட பாத தெப்பை[3]யைப் பிடியாத பேரெல்லாம் கரையேறமாட்டார்கள்.*

*பருதி: எ - து பிறவியாகிய சமுத்திரத்தை நீந்துவர் சிவனடி சேர்ந்தார்; சேராதார் பிறவியாகிய சமுத்திரத்தை நீந்தமாட்டார் எ - று.* 9

*காளிங்:—எ - து பிறவியாகிய பெரிய பௌவத்தினைக்கடந்து முத்தராவர் இறைவனடியைச் சேர்ந்தார்; மற்றிங்ஙனஞ் சேராதார் எஞ்ஞான்றும் பிறவிப்பௌவத்தைக் கடத்தல் இலர் என்றவாறு.*

*இனி யிப்படி அருட்பெருங்கடவுளரை வழிபட்டொழுகும் நன்னெறியாளர் உறையுந்தேயத்து மழைவளங்குன்றாது வாய்ப்புடைத்தாம் என்பதினாலும், மற்றிவர் முதலாயினார் யாவர்க்கும் மழை யின்றியமையாமையாலும், மற்றிதன்பின்னரே மழைபெய்தற் சிறப்பினை அறிவிக்கிறது மேலையதிகாரம்.* 10

**உரைவிளக்கப்பகுதி:**

**நுண் :**—*சேர்ந்தார் என்பது சொல்லெச்சம் என்றார். அச்சொல் எஞ்சி நிற்றலின் 'செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்' (26) 'தீவினையாரஞ்சார் விழுமியார் அஞ்சுவர்' (201) என வினைமுதற்கண்ணும், 'ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்' (155) எனச் செயப்படுபொருட்*

---

[1] 'கரைகாணக் கடல் என்பார் பெருங்கடல் என்றார்' —சிலப். 15 ; 28, உரை.
[2] 'சோரதவர்' என்பது பாடம்' [3] தெப்பை - தெப்பம்.

ணும் வருவனபோலப் பொருள்பெற்றுச் சொற்பெருமையினென்க. 'உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங்கற்றார், கடையரே கல்லாதவர்' (395) என்பதும் அது*. அடிப்புணை யென்றமையால் ஏகதேசவுருவகம்.

இராமா:—"சொல்லென் எச்சம் முன்னும் பின்னும் சொல்லள வல்லது எஞ்சுதலின்றே" (தொல். சொல். 441) ஆதலின், இக்குறளில் சேர்ந்தார் என்ற ஒருசொல் குறைந்துநின்றது காண்க.

## மேற்கோள்பகுதி :

மயிலை:—"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்" இதில் சேர்ந்தார் நீந்துவர் என எதிர்மறைகொண்டு முடிதலின் எதிர்மறை எச்சமாயிற்று என்று எடுத்துக்காட்டுவர். (நன். 359.)

நச்:—வெண்பா உரிச்சீர் நேரசைச்சீரோடு தளைப்பட்டமைக்கு மேற்கோள். (தொல். பொருள். 387.)

பெருந்தே:—பிறவிக்கும் கடலுக்கும் நீந்துதற்கு அருமை என்னும் பண்பு பொதுவாகிப் பின்னை உவமிக்கப்பட்ட பொருளையே உவமையாகச் சொன்னமையால் இது உருவகமாயிற்று. (வீரசோ. 152. உரை.)

இது பிறவி என்னுகின்ற பெருங்கடல் என்னும் சொல் தொக்கு நின்றமையால் தொகையுருவகமாயிற்று. (வீரசோ. 160. உரை.)

தக்கயாகப்பரணி உரை:—"இறைவாழி-ஈசுரன் வாழ்க......இதில் இறை என்பதை இராசா என்பாரும் உளர்; 'இறைவன் அடி சேராதார்' எனவும் 'இறைவனுர் பொருள்' எனவும் வருவனவற்றால் அது பொருளன்மை அறிக". (பா. 9)

## ஒப்புமைப்பகுதி :

"......நவைசெய் பிறவிக் கடலகத்துள்
பாதகமலந் தொழுவேங்கள் பசையாப்பவிழப் பணியாயே" —சீவக. 1242.

"ஆழ்கடற் புணையினன்ன அறிவரன் சரணடைந்தான்." —சீவக. 380.

"அறவியங் கிழவோன் அடியிணை யாகிய
பிறவி யென்னும் பெருங்கடல் விடூஉம்
அறவி நாவாய் ஆங்குள தாதலின்." —மணிமே. 11: 23-25.

"பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க லாகுமோ."
—கம்ப. அயோத். மந்திர. 23.

"அணைவுற வந்தெழும் அறிவு தொடங்கின அடியார்பால்
இணையில் பவங்கிளர் கடல்கள் இகந்திட இருதாளின்
புணையருள் அங்கணர்." பெரிய. திருஞா. 83

"பாதமலர் எழுபிறவிக் கடல்நீந்தும் புணையென்பர் பற்றிலாதோர்."
—திருவிளை. திருவாலவா. 2.

---

* இதில் தலையாயினர் என்பது சொல்லெச்சம் என்றதாம்,

## 2. வான்சிறப்பு

**பரிமே :—** அஃதாவது அக்கடவுளதாணையான் உலகமும் அதற்கு உறுதியாகிய அறம் பொருள் இன்பங்களும், நடத்தற்கு ஏது வாகிய மழையினது சிறப்புக் கூறுதல். அதிகார முறைமையும் இத னானே விளங்கும்.

**மணக்:—** *வான்சிறப்பாவது மழையினது தலைமை கூறுதல். இது கடவுட் செய்கைத்தாதலால் அதன்பிற் கூறப்பட்டது. இஃது ஈண்டுக் கூறியது என்னையெனின், பின் உரைக்கப்படுகின்ற இல்லறமும் துறவற மும் இனிது நடப்பது மழையுண்டாயின் என்றற்குப் போலும். அன்றியும் காலத்தின் பொருட்டுக் கூறினர் எனினும் அமையும்.*

**பழைய:—** *அஃதாவது பூலோகத்திலுண்டான தர்மார்த்த காம மோக்ஷபரிபாலனம் மழையின்றி நடவாதாதலால் வான்சிறப்பு வைக்க வேண்டிற்று என்றவாறு.*

**பருதி :—** *பூலோகத்திலுள்ள தன்மதானஞ் செய்யும்போது மழை யின்றி நடவாது; அங்ஙன் நடக்கில் வான்சிறப்பு வேண்டும் என்றவாறு.*

**11. வானின் றுலகம் வழங்கி வருதலால்**
**தானமிழ்தம் என்றுணரற் பாற்று.** (க)

**உரைப்பகுதி:**

**பரிமே:—** வான் நின்று உலகம் வழங்கி வருதலால் - மழை இடையுறாது நிற்ப உலகம் நிலைபெற்று வருதலான், தான் அமிழ்தம் என்று உணரற்பாற்று - அம்மழைதான் உலகத்திற்கு அமிழ்தமென்று உணரும் பான்மையையுடைத்து.

நிற்ப என்பது நின்றெனத் திரிந்து நின்றது. உலகம் என்றது ஈண்டுயிர்களை. அவை நிலைபெற்றுவருதலாவது பிறப்பு இடையறாமை யின் எஞ்ஞான்றும் உடம்போடு காணப்பட்டு வருதல். அமிழ்தமுண் டார் சாவாது நிலைபெறுதலின் உலகத்தை நிலைபெறுத்துகின்ற வானை அமிழ்தமென்று உணர்க என்றார்.

**மணக் :—** *மழைவளம் நிலைநிற்றலானே உலகநடை தப்பாது வருதலான் அம் மழைதான் உலகத்தார் அமுதம் என்று உணரும் பகுதியது என்றவாறு.*

இஃது அறம் பொருள் இன்பங்களை உண்டாக்குதலானும், பலவகைப் பட்ட உணவுகளை நில்ல நிறுத்தலானும் இம்மழையினை மற்றுள்ள பூத மாத்திரமாக நினைக்கப்படாதென்ற நிலைமை கூறிற்று.

பழைய:— மழையினாலே உலகம் தழைத்து வருகையினால் மழையும் அமுதமும் நிகராம்

பருதி :— எ - து மழையினாலே உலகந்தழைத்து வருகையால் மழையும் அமிர்தமும் நிலையாம் என்றவாறு.

காளிங் :— எ - து மழையானது வந்து நிலைபெற்று, மற்றதனால் இவ்வுலகத்துயிர்களானவை நடைபெற்றுச் சேறலான், மற்றிம்மழையானது தான் இவுலகத்துக்கோரமுதம் என்று உணரும் பகுதியை யுடைத்து என்றவாறு.

இனி, மற்று இக்கடவுள் வணக்கமும் வான்சிறப்பும் துறவறம் இல்லற முதலாகிய எனைத்தொழுக்கத்துக்கும் இன்றியமையாப் பண்பின வாகலின் இவற்றின் பின்னர் அவ்விருவகை ஒழுக்கத்திற்கும் தொகை நிலைப்பாயிரமுணர்த்துகின்றாராகலான்அவற்றுள்முன்னர்அவ்வீட்டு நெறிக்கியல்பாகிய துறவுநெறிப்பாயிரம் அறிவிக்கின்றது. மேலை அதிகாரம் முற்றும்.*

## உரைவிளக்கப்பகுதி:

நுண் :— நிற்ப என்பது பிறவினையாதலின் நின்று எனத் திரிந்து நின்றது.

## மேற்கோள் பகுதி :

பெருந்தே :— 'வானின்று' என ஐந்தாம் வேற்றுமை யுருபாகிய நின்று என்பதனால் முடிந்தது. (வீரசோ. பா. 35.)

## ஒப்புமைப்பகுதி :

"அமிழ்துதிகழ் கருவிய கணமழை." —பதிற்றுப்பத்து. 17 : 11.

**12. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை.** (உ)

* இக்குறளைப் பத்தாவதாகக் கொண்டமையின் இங்ஙனம் வருகின்ற அதிகாரத்துக்குத் தோற்றுவாய் தந்தார்.

**உரைப்பகுதி:**

**பரிமே :—** துப்பார்க்குத் துப்பு ஆய துப்பு ஆக்கி-உண்பார்க்கு நல்ல உணவுகளை உணவாக்கி, துப்பார்க்குத் துப்பாயதூஉம் மழை - அவற்றை உண்கின்றார்க்குத் தானும் உணவாய் நிற்பதூஉம் மழை.

தானும் உணவாதலாவது தண்ணீராய் உண்ணப்படுதல். சிறப்புடைய உயர்திணைமேல் வைத்துக் கூறினமையின் அஃறிணைக்கும் இஃதொக்கும். இவ்வாறு உயிர்களது பசியையும் நீர்வேட்கையையும் நீக்குதலின், அவை வழங்கி வருதலுடையவாயின என்பதாம்.

**மணக் :—** *பிறிதொன்று உண்பார்க்கு அவர் உண்டற்கான உணவுகளையும் உண்டாக்கித் தன்னையுண்பார்க்குத் தானே உணவாவதும் மழையே எ-று.*

*இது பசியைக் கெடுக்கும் என்றது.*

**பரிப்:—** *உணவாக்கி என்றது உணவாய உணவாக்கி என்றது உயிர்ப் பன்மையை நோக்கி, அவரவர் உண்ணத்தகுவன எ-று.* 9

**பழைய:—** *உண்பார்க்கு வேண்டின உணவை யுண்டாக்குவதும், வலிதாவார்க்கும் வலிதான சத்துவம் உண்டாக்குவதும் மழை.*

**பருதி :—** *எ-து உண்பாற்கு வேண்டின உணவை உண்டாக்குவதும், வலியாற்கு வலியுண்டாக்குவதும் மழை எ-று.* 5

**காளிங்:—** *எ-து உண்பவர் யாவர்க்கும் உணவுப் பொருளாய் இன்னும் அவற்றை உளவாக உறுதி பண்ணிக் கொடுப்பதூஉஞ் செய்து, மற்று உண்பவர் யாவர்க்குந் தானே உணவுமாய் நிற்பதூஉம் மழை எ-று.* 8.

**உரைவிளக்கப் பகுதி :**

**நுண்:—** *முடிபு உயர்திணையாயினும் அஃறிணைக்கும் ஒக்கும். 'வலியார் முன் தன்னை நினைக்க' (250.) 'சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லியும்' (306.) அது இஃது ஒருபாற் கிளவி எனைப்பாற் கண்ணும் வரும் என்னும் விதிபெற்ற பொருளாற்றல்.* [1]

**மேற்கோள்பகுதி:**

**சுவாமி:—** *துப்பாயது என்பது குற்றெழுத்து அளபெடைக்கு உதாரணம். (இ. கொ. சூ 90.)*

---

[1] மெலியார் எனச்சிறப்புடைய உயர்திணைமேற் கூறினாராயினும் ஏனை அஃறிணையும் கொள்ளப்படுமʼʼ எனவும், 'சேர்ந்தாரை என உயர்திணைப்பன்மைமேல் வைத்து ஏனை நான்குபாலும் தம் கருத்தொடு கூடிய பொருளாற்றலால் கொண்டார்ʼʼ எனவும் உரைத்தார் பரிமேலழகர்.

**குறிப்பு:-** துப்பாய துப்பு - உண்ணுதற்கு ஏற்ற உணவு 'துப்பார்க்கு' என்பது பருதியார் பாடம். உண்ணத்தக்க உணவை உண்டாக்கி எனவே உணவாதலும், நீராயுண்ணப்படுதலும் அடங்குதலின் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை என்பதற்கு வலியார்க்கு வலியாவது மழை எனப் பொருள் கண்டார் பருதியார்.

**13. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்**
**துண்ணின் றுடற்றும் பசி.** (௩)

**உரைப் பகுதி:—**

**பரிமே;**—விண் இன்று பொய்ப்பின் - மழைவேண்டுங் காலத்துப் பெய்யாது பொய்க்குமாயின், விரி நீர் வியன் உலகத்துள் - கடலாற் சூழப்பட்ட அகன்ற உலகத்தின்கண், நின்று உடற்றும் பசி-நிலைபெற்று உயிர்களை வருத்தும் பசி.

கடலுடைத்தாயினும் அதனாற் பயனில்லை என்பார் விரிநீர் வியனுலகத்தென்றார். உணவின்மையின் பசியான் உயிர்கள் இறக்கும் என்பதாம்.

**மணக்.** வானமானது நிலைநிற்கப் பொய்க்குமாயின் விரிந்த நீரினையுடைய அகன்ற உலகத்திடத்தே பசியானது நின்று வருத்தா நிற்கும் எல்லாவுயிர்களையும் எ - று. 1

பொய்த்தல்-தன்தொழில் மறுத்தல், இது பசியென்று பொதுப்படக் கூறியவதனான் மக்களும், விலங்கும் பொருளுங் காமமுந் துய்க்கலாற்றாது துன்பமுறும் என்று கூறிற்று. 4

**பழைய:—**மழை வேண்டுங்காலத்துப் பெய்யாது பொய்க்குமானால் கடலாற் சூழப்பட்ட அகன்ற உலகத்தின்கண் நிலைபெற்று உயிர்களை வருத்தும் பசி.

**பருதி:—**எ - து கார்காலத்தில் மழைபெய்யாவிடில் கடல்சூழ்ந்த பூலோகத்தில் பசிப்பிணி வருத்தும் எ - று. 3

**காளிங்:—**எ - து மழையானது நெடிதாக வறங்கூர்ந்து தப்புமாயின் பரவைசூழ்ந்த ஞாலத்தின்கண்வாழும் உயிர்களிடத்து நிலைநின்றுசுடுதலைச் செய்யும் பசியாகிய தி எ - று.

1 விண் நின்று எனப் பிரித்துப் பொருள் கொண்டார் மணக்குடவர்.

**உரைவிளக்கப் பகுதி :**

**இரர்மா:–** 'உடலல் - போர்செய்தல். விண்–ஆகாயம்; அது இடத்தாகுபெயராய் மழைக்குச் சொல்லப்பட்டது. மழை இல்லாமற்போனால் கடலிருந்தும் அதனாற் பிரயோசனமில்லை என்று சொல்லவந்தவர் விரிநீர் வியனுலகத்து என்றார். உணவு இல்லாததினாலே பசி முதிர்ந்து நோயாய் அதினாலே உயிர்கள் இறந்துபோம் என்பது இதன் கருத்து.'!

**மேற்கோள்பகுதி:**

**சங்கர:-** 'விண்ணின்று பொய்ப்பின்' வினை எச்சக்குறிப்பு வேறு வினையை ஏற்றுவந்தது. (நன். 344)

**ஒப்புமைப்பகுதி:**

''வறந்தெற மாற்றிய வானமும் போலும்.'' —கலி. 146:14.

''வானந்துளிமாறு பொழுதினிவ் உலகம் போலும். —கலி. 25 : 28.

''மாரி வளம்பொய்ப்பின் ஊர்க்கின்னா.'' —இன்னா. 21

**குறிப்பு:-** வேண்டுங் காலத்துப் பெய்யாமையைக் கருதுவார் பரிமேலழகர் முதலிய பலர். சிறிது நூறி நெடுங்காலம் பெய்யாது வறப்பதைக் கருதுவார் மணக்குடவர் காளிங்கர்,

**14 ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்**
**வாரி வளங்குன்றிக் கால். (௪)**

**உரைப்பகுதி :**

**பரிமே:—**உழவர் ஏரின் உழாஅர் - உழவர் ஏரான் உழுதலைச் செய்யார்; புயல் என்னும் வாரிவளம் குன்றிக்கால் - மழையென்னும் வருவாய் தன்பயன் குன்றின்.

குன்றியக்கால் என்பது குறைந்து நின்றது. உணவின்மைக்குக் காரணங் கூறியவாறு.

**மணக்:-** ஏரின் உழுதலைத் தவிர்வார் உழவர்; புயலாகிய வாரியினுடைய வளம் குறைந்தகாலத்து எ - று.

இஃது உழுவாரில்லை யென்றது. 7

**பழைய:-**- உழவரும் ஏருழார்; மழைபெய்யாவிடின்.

**பருதி:-** எ - து உழவரும் ஏருழார்; மேகம் மழை பெய்யாவிடில் எ - று. 10

**காளிங்:-** எ - து உழவரானவர்கள் ஏரினால் உழுதல் செய்யார்; மழையென்னும் புனல்வளங் குறைப்பட்டக்கால் எ - று. 9

## உரைவிளக்கப்பகுதி :

**நுண்:-** வாரி - வருவாய், வாரிபெருக்கி (512) என்பதும் அது. குன்றிக்கால் என்பது இன்னொலியாதல் செய்யுட்டொடையாதல் காரணமாக யகரம் குறைந்து நின்றது.

**இராமா :-** 'புயல் - மேகம்: அது கருத்தாவாகுபெயராய் மழைக்குச் சொல்லப்பட்டது. அந்த மழை உண்டானால் ஆதாயப் பிரயோசனங்கள் உண்டாயிருப்பதும், இல்லையானால் இல்லாதிருப்பதும் ஆகிய ஒற்றுமைபற்றி மழையென்னும் வாரிவளம் என்று காரியத்தைக் காரணமாக உபசரித்தார். வாரி-வரப்பட்ட ஆதாயத்தின்வழி. வளம்–ஆதாயப்பயன்.

## மேற்கோள்பகுதி:

**இளம்:-** குன்றியக்கால் என்னும் வினையெச்சம் 'குன்றிக்கால்' என நின்றது. (தொல். சொல். 450.)

## ஒப்புமைப்பகுதி:

" இருங்கண் ஞாலத்து ஈண்டுதொழில் உதவிப்
பெரும்பெயல் பொழிந்த வழிநாளமையம், " —நற்றிணை. 157.

**15. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை.**

## உரைப்பகுதி :

**பரிமே :—** கெடுப்பதூஉம் - பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதூஉம், கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூஉம் - அவ்வாறு கெட்டார்க்குத் துணையாய்ப் பெய்து முன் கெடுத்தாற்போல எடுப்பதூஉம், எல்லாம் மழை - இவையெல்லாம் வல்லது மழை.

மற்று வினைமாற்றின்கண் வந்தது. ஆங்கு என்பது மறுதலைத் தொழிலுவமத்தின்கண்வந்த உவமச் சொல். கேடும் ஆக்கமும்

எய்துதற்குரியார் மக்களாதலின் கெட்டார்க்கென்றார். எல்லாம் என்றது அம் மக்கள் முயற்சி வேறுபாடுகளாற் கெடுத்தல் எடுத்தல்கள் தாம் பலவாதனோக்கி. வல்லது என்பது அவாய்நிலையான் வந்தது. மழையினது ஆற்றல் கூறியவாறு.*

**மணக் :—** பெய்யாது நின்று எல்லாப்பொருளையும் கெடுப்பதும், அங்ஙனம் கெட்டார்க்குத் துணையாய்த் தான்பெய்து பொருள்கள் எல்லாவற்றையும் அவ்விடத்தே உண்டாக்குவதும் மழை எ - று

இஃது இரண்டினையும் செய்யவற்று என்றவாறு. 8

**பழைய :-** வாழ்வாரைப் பெய்யாது கெடுப்பதும், கெட்டாரைப் பெய்து வாழவைப்பதும் மழை.

**பருதி :-** எ - து வாழ்வாரைக்கெடுப்பதுவும், கெட்டாரை வாழ்விப்பதுவும் மழை எ - று 8

**காளிங் :—** எ — து தான் பருவத்து வழங்காது யாவரையும் கெடுப்பதுவும், அங்ஙனங் கெட்டார்க்குப் பின்னுஞ் செல்சார்வாகிய உறுதுணையாய்வந்து அப்பொழுதே உற்றார்க்கு நட்டார்போல எடுத்துக்கொண்டு பாதுகாப்பதுவும் எல்லாம் மழை எ - று. 6.

## உரைவிளக்கப்பகுதி :

**நுண் :—** மற்று வினைமாற்று. 'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது' (362) 'மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை' (968) என்னும் இரண்டு பாட்டினும், மற்று என்பதனை வினைமாற்றாகக்கோடல் அரிதாகலின் ஆண்டுவிரித்தார். ஆங்கு மறுதலைத்தொழில் உவமச்சொல். எல்லாம் என்றார் கெடுத்தல் எடுத்தல் பலவாதல் நோக்கி. 'இயற்றலும் ஈட்டலும் காத்தலும்' (385) என்பதுபோலப் பொருள்பெற்று, 'வல்லது' என்னுஞ் சொற்பெருமையின் 'வல்லது' என்பது அவாய்நிலையான் வந்தது என்றார். வருவித்தது என்னும் ஏவுதற்கருத்தாவின் தொழிலை இயற்றுதற் கருத்தாவின் றொழிலாகச் சுருக்கி யெழுதினார். முன்னர் அவாய்நிலையான்

---

*அதிகமாகப் பெய்து கெடுத்தற்கும், அளவாகப் பெய்து ரக்ஷித்தற்கும் வல்லது மழை என்பது பொருள் என்றும், மக்களைத் தான் பெய்யாமல் கெடுத்தற்கும் பெய்து உயரச் செய்வதற்கும் வல்லது மழை என்பது கர்ணபரம்பரையான பழைய உரை என்றும், மழையே பெய்யாத பொழுது கெடுத்தற்றொழிலை மழைமேல் ஏற்றிக் கூறுவது பொருந்தாதாதலானும், விண்ணின்று பொய்ப்பின் என்ற பாட்டால் மழை பெய்யாமையால் உண்டாகும் கெடுதியைக் கூறினாராதலானும் இப்பாட்டில் மிகுத்துப் பெய்தலின் கெடுதியைக் கூறுகின்றார் என்றும் **கவிராஜ பண்டிதர்** கூறுவர்.

வருவித்தது என எழுதுவதுங் காண்க. அவாவிநிற்பது செய்யுட்கணின்ற 'எல்லாம்' என்னுஞ்சொல். அவாவப்படுவது இவ்வுரையாசிரியர் 'இல்லது' என வருவித்து எழுதியது. அஃது 'உடைத்தம் வலியறியார்' (473) 'நகை வகையராகிய காரணம்' (817) என்பவற்றிள் விரிக்கப்படுதல் காண்க. அவாய்நிலை தகுதி அண்மைநிலை என்னும் மூன்றினாலும் ஒருசொல் லோடு ஒரு சொல் புணர்ந்துநிற்கும். இனி, தொகைநிலை, வினைநிலை என்னு நிலையானும் புணரும் என்பர். யானைக்கோடு என்பது இவை மூன்றுந் தோன்றப் புணர்ந்தது. முயற்கோடு, ஆமைமயிர்க்கம்பலம், துன் னூசிக்குடர் என்பன அவாய்நிலை தகுதிகளை யொழித்துப் புணர்ந்தன. வல்லமெறிந்த நல்லிளங்கோசர் தந்தை மல்லல் யானைப்பெருவழுதி இஃது அண்மைநிலை யொழித்துச் சேய்மைநிலையாய்ப் புணர்ந்தது. பொருள்கோள் வகையும் மாட்டுறுப்பும் அது. இனி வனைந்தான் என்பது கருவியையும், செயப்படுபொருளையும், கருத்தாவையும், இன்னதற்கு இதுபயனாக என்ப தனையும் அவாய் நின்றது என்றார் (தொல். சொல். 213.) அதுச் சொல் வேற்றுமை" யென்னும் சூத்திரத்துள் நச்சினார்க்கினியர் முதலாயினார் என்க. ஆதலான் இவ்வுரையாசிரியர் தோன்றா எழுவாயும், வினைமுற்றும், வினையெச்சமும், கருவியும், செயப்படுபொருளும் முதலாகிய பல சொற் களையும் வருவிக்குமிடத்தும் அவாய்நிலையான் வந்ததென்பர். 'இது சொல் லெச்சம், இது தோன்றா எழுவாய்' என்பனவும் அவாய்நிலைக்குப் பரியாய மென்க. இனி, கெட்டார்க்குச் சார்வாய் என நான்கனுருபினும் (சார்ச்சி) வந்தது, புறனடையானாக இலேசானாக அமைக்க. 'இறைவனைச் சாரார் செவியோரார்' (ஆசார. 70) என ஆசாரக்கோவையில் சார்பு மெய்யுருக் கண்ணும் வந்தது. 'கருமமில்லாச் சார்பென்கிளவிக்கு' (தொல். சொல். 84) எல்லாவுரைகாரரும் அல்லாச் சார்பு எனப்பாடமோதி அதற்கு உரை கருமமில் சார்பும் கருமச் சார்பும் எனச் சார்பு இரண்டு என்றும், கரும மில் சார்பாவது மெய்யுறுச்சார்பு என்றும், அதற்குதாரணம் அரசர் கட் சார்ந்தான் என்றும், மெய்யுறு சார்பைக் கருமச்சார்பு என்றும், அதற்கு உதாரணம் தூணைச்சார்ந்தான் என்றும் நியமித்தார். சார்பு இரண் டன் முடிபாயினும் ஏழொடும் மயங்கும் என்பார் 'உரிமையும் உடைத்தே கண்ணென் வேற்றுமை' என்றார். கருமம் என்பது வடமொழியில் இரண் டாம் வேற்றுமைக்கு ஒருபெயர்.

**இராமா:**--கெடுப்பது என்ற வினையைக் கெடுக்காமல் என்று மாற்றி நின்றதினாலே மற்று என்ற இடைச்சொல் வினைமாற்றுப் பொருளில் வந்தது. அவாய்நிலை என்பதற்குப்பொருள் வேண்டிநிற்பது.

**மேற்கோள் பகுதி:**

**நச்:**—தேமா என்னும் நேரீற்று இயற்சீர் நிரையசைச்சீரோடு தளைப் பட்டுவந்தது. (தொல். பொருள். 386.)

*சங்கர: -கெடுப்பதூஉம் எனக்குறில் நெடிலாய் அளபெழுந்துஅலகு பெற்றுஞ் செருதும் இன்னிசை நிரப்பவந்தன.*

**ஒப்புமைப்பகுதி:**

"பெயல் நந்தி வறப்பிற்சாம் புலத்திற்குப் பெயல்போல். —கலித். 78 : 19.

**16. விசும்பிற் றுளிவீழின் அல்லால் மற்றுங்கே**
**பசும்புற் றலைகாண் பரிது. (சு)**

**உரைப்பகுதி:**

**பரிமே:**—விசும்பின் துளி வீழின் அல்லால் - மேகத்தின் துளி வீழிற் காண்பதல்லது, மற்றுங்கே பசும்புல் தலை காண்பு அரிது - வீழா தாயின் அப்பொழுதே பசும்புல்லினது தலையையும் காண்டல் அரிது.

விசும்பு ஆகுபெயர். மற்று வினைமாற்றின்கண் வந்தது, இழிவு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. ஓரறிவுயிரும் இல்லை என்பதாம்.

**மணக்:**—*வானின்று துளிவீழினல்லது அவ்விடத்துப் பசுத்த புல்லினது தோற்றமும் காண்டல் அரிது எ - று.*

*ஆங்கு என்பதனை அசையாக்கினும் அமையும், இஃது ஓரறிவுயிருங் கெடும் என்றது.* 5

**பழைய:**—*ஆகாசத்தினின்று மழைத்துளி வீழின் அல்லது பூலோக மவற்றிற்கும் பச்சைப்புல்லின் தலையும் காண்பரிது.*

**பருதி:**—*எ - து மழைத்துளி வருஷியாதபோது பசும்புல்லின் தலையும் காண்பது அரிதாகலாம். எ - று.* 6

**காளிங்:-** *எ - து விசும்பினின்று மழை வந்துவீழினல்லது வேறு இவ்விடத்துப் பச்சென்றிருப்பதொரு புல்நுனியுங்கூடக் காண்பது அரிது எ - று.* 3

**உரைவிளக்கப்பகுதி:**

**நுண்:-** *புற்றலையும் என்றெழுதிச் சிறப்பும்மை விகாரத்தாற் றொக்க தென்றார். விகாரத்தாற் றொக்கதென்பது 'இரு பெயர் பல்பெயர் அளவின் பெயரே, எண்ணியற்பெயரே நிறைப்பெயர்க் கிளவி, எண்ணின்பெயரோ டவ்வறுகிளவியும், கண்ணிய நிலைத்தே யும்மைத்தொகையே' (தொல். சொல். 417) இவ்ஆறும் அன்றி வரும் உம்மைகள் தொக்கு நிற்பதனை யென்க. காண்பரிது என்பது 'சால்புபடும்' என்பதுபோலச் செய்பு வினை*

யெச்சந் திரிந்தது. அன்றியும் 'நுண்பொருள் காண்பதறிவு' (424) என்பதுபோல நில்லாமையின் காண்பரிது என்பது விகாரம்; 'அள்ளிற்கொள் வற்றும்' (1187) அது. ஆங்கு - அப்பொழுது.

இராமா:- விசும்பு - ஆகுபெயர். அது இடத்து ஆகுபெயராய் அந்த இடத்திலே சஞ்சரிக்கின்ற மேகத்திற்குச் சொல்லப்பட்டது. தலை என்ற இடத்தில் தலையும் என்ற இழிவு சிறப்பும்மை குறைந்துநின்றது. அது செய்யுள் விகாரம்.

**மேற்கோள்ப :**

நச்:-மழையை வாழ்த்தியது (தொல். செய். 109)

சுவாமி:- புற்றலை காண்பரிது' என்பதில் முதனிலை வினையாகாது பெயராயின. (இ கொ. சூ. 86)

**ஒப்புமைப்பகுதி :**

" பைங்கூழ்க்கு வானேஎன்ன நிரைகாக்க வந்தார் மறைச்சிறுவர் "
—பெரிய, சண்டே. 24

**17. நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின். (எ)**

**உரைப்பகுதி:**

**பரிமே** :—நெடுங் கடலும் தன்னீர்மை குன்றும் - அளவில்லாத கடலும் தன்னியல்பு குறையும்; எழிலி தான் தடிந்து நல்காதாகிவிடின் - மேகந்தான் அதனைக்குறைத்து அதன்கட் பெய்யாது விடுமாயின்.

உம்மை சிறப்பும்மை. தன்னியல்பு குறைதலாவது நீர்வாழுயிர்கள் பிறவாமையும், மணி முதலாயின படாமையுமாம். ஈண்டுக் குறைத்தல் என்பது முகத்தலை. அது 'கடல்குறை படுத்தநீர் கல் குறைபட வெறிந்து,* என்பதனுலும் அறிக. மழைக்கு முதலாய கடற்கும் மழைவேண்டும் என்பதாம். இவை ஏழுபாட்டானும் உலகம் நடத்தற்கேதுவாதல் கூறப்பட்டது.

**மணக் :** - நிலமே யன்றி நெடிய கடலும் தனது தன்மை குறையும்; மின்னி மழையானது பெய்யாவிடின் எ-று.

*பரிபா. 20 : 1.

தடிந்து என்பதற்குக் கூறுபடுத்து என்று பொருள் உரைப்பாரும் உளர். இது நீருள் வாழ்வனவும் படுவனவும் கெடும் என்றது. இவை நான்கினும் பொருட்கேடு கூறினர். பொருள் கெட இன்பங்கெடும் என்பதனால் இன்பக்கேடு கூறிற்றிலர். 6

பழைய :—ஆழமும் அகலமும் அளவிடற்கரிய சமுத்திரமும் பெருமை குறையும்; அதெப்படி என்னில்? சமுத்திரத்திற்குப் பெருமை முத்தும் பவழமும் படுவது. வையாசியில் நாயத்துச் சோதியில் மழையிலே முத்துக் கரு; ஐப்பசிமாசத்து பூர்வபக்கத்து மழையிலே பவழத்துக்குக்கரு; ஆத லால் பூமியிலே மழையில்லாவிடத்துச் சமுத்திரமும் பெருமைகுறையும்.

பருதி :—எ - து பெருமையான கடலில் சங்கு முத்து பவளம் பிற வாது; மழை பெய்யாவிடில் எ-று. 4

காளிங் :—எ - து பெரிதாகிய கடலும் தன்றன்மை குறைபடும்; பருவங்களில் வந்து பூரித்து மழை வழங்காதாயின் எ-று. 7

## உரைவிளக்கப்பகுதி :

நுண் :—தடிந்து என்பது குறைத்தலின் பரியாய்மாய் முகத்தற் பொருட்டாயிற்று. அதற்குச் சொற்சோதனை காட்டிய 'கடல் குறை படுத்த நீர் கல் குறைபட வெறிந்து' என்னும் பரிபாட்டும் அது. கல் – இமையம். தடிந்து......விடின் என்றது காரணமாகிய கடற்கும் காரிய மாகிய மேகம் இன்றியமையாச் சிறப்பென்பார் இவ்வாறு உரையிட்டார்.

இராமா :—குன்றும் - குறையப்படும். கடலும் என்ற உம்மை உயர்வு சிறப்பும்மை.

## மேற்கோள்பகுதி :

அடியார்க்குநல்லார் :—'முதியநீர்' எனின் 'நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும்' என்பதனால் அதுவும் மேனீரின்றி அமையாமையான் ஆகாது. (சிலப். ஆய்ச்சி. 31 உரை.)

## ஒப்புமைப்பகுதி :

"வேட்டம் பொய்யாது வலைவளஞ் சிறப்பப், பாட்டம் பொய்யாது."—நற்றிணை. 38.

"நீண்டொலி அழுவங் குறைபட முகந்து கொண்டு
ஈண்டுசெலற் கொண்மூ;" —புறநா. 161-1.

18. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு. (அ)

**உரைப்பகுதி :**

**பரிமே:—** வானோர்க்கும் ஈண்டுச் சிறப்பொடு பூசனை செல்லாது - தேவர்கட்கும் இவ்வுலகின் மக்களாற் செய்யப்படும் விழவும் பூசனையும் நடவாது, வானம் வறக்குமேல் - மழை பெய்யாதாயின்.

நைமித்திகத்தோடு கூடிய நித்தியம் என்றாராகலின், செல்லாது என்றார். உம்மை சிறப்பும்மை. நித்தியத்தில் தாழ்வுதீரச் செய்வது நைமித்திகமாதலின் அதனை முற்கூறினார்.

**மணக்:—**சிறப்புச் செய்யப்படுகின்ற விழவு பூசனை நடவாது: வானம் புலருமாகில் தேவர்களுக்கும் இவ்வுலகின்கண் எ-று.

மழைபெய்யாக்கால் வருங் குற்றங் கூறுவார் முற்பட நான்கு வகைப் பட்ட அறங்களில் பூசைகெடும் என்றார். 1

**பரிப் :—**உம்மையான் முனிவர்க்கும் என்பதும் கொள்ளப்படும்.

**பழைய :—**வருஷத் திருநாளும், தினப் பூசையும் நடவாது; தேவர்க் கும் மழைபெய்யாவிடில்.

**பருதி:—**எ - து திருநாளும் தினப் பூசையும் உண்டாகா; பூலோகத் தில் மழை வராவிடில் எ-று.

**காளிங் :—**எ - து தேவர்மாட்டும் பிதிர்கள்மாட்டும் விசேஷித்துச் செய்யுங் கருமங்களும், இங்ஙனம் ஒன்றை நிமித்திகரித்துச் செய்தலன்றி உயர்ந்தோர் நாடோறுஞ் செய்துவருகின்ற நற்கருமங்களும், மற்று இவை யிரண்டுஞ் சென்று தலைப்படாது; மழையானது வறந்துபோமாயின் தேவர்கட்கும் இவ்விடத்தில் எ-று. 1

**உரைவிளக்கப்பகுதி :**

**நுண் :—**சிறப்பொடு கூடிய பூசனை யென ஒருமையாக்கிச் செல்லாது என்றார். ஆசிரியனோடு மாணாக்கன் வந்தான் என்பதும் அது. வானோர்க் கும் என்பது சிறப்பும்மை.

**மேற்கோள்பகுதி:**

**சூரிரத்ன** :—பாவிக அலங்காரம் (மாற. 251)

**ஒப்புமைப்பகுதி :**

''மண்ணின்மிசை வான்பொய்த்து நதிகள் தப்பி
மன்னுயிர்கள் கண்சாம்பி உணவு மாறி
விண்ணவர்க்கும் சிறப்பில்வரும் பூசை யாற்ரு
மிக்கபெரும் பசியுலகில் விரவக் கண்டு.'' —பெரிய. 562.

வானும் சுருங்கின் தானம் சுருங்கும் —பழமொழி,

## 19. தானம் தவம் இரண்டும் தங்கா வியனுலகம் வானம் வழங்கா தெனின். (கூ)

**உரைப்பகுதி:**

பரிமே;—வியன் உலகம் தானம் தவம் இரண்டும் * தங்கா - அகன்ற வுலகின்கண் தானமும் தவமுமாகிய இரண்டறமும் உளவாகா, வானம் வழங்காது எனின் - மழை பெய்யாதாயின்.

தானமாவது அறநெறியான் வந்தபொருள்களைத் தக்கார்க்கு உவகையோடும் கொடுத்தல். தவமாவது மனம் பொறிவழிபோகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கல் முதலாயின. பெரும் பான்மைபற்றித் தானம் இல்லறத்தின் மேலும், தவம் துறவறத்தின் மேலும் நின்றன.

**மணக்** :—*தானமும் தவமுமாகிய இரண்டறமும் உளவாகா; அகன்ற வுலகத்துக்கண் மழைபெய்யாதாயின் எ-று.* 2

*இது தானமும் தவமும் கெடும் என்றது.*

**பழைய**:—*தானமுந் தவமும் பூமியில் தங்கா; தேவலோகத்து மழை பூமியில் பெய்யாவிடின்.*

**பருதி**:—*எ - து தானம் தன்மம் தவசு உண்டாகா; பூலோகத்தில் மழை வழங்காவிடில் எ - று.*

**காளிங்**:-*எ-து தானமும் தவமுமாகிய இவை இரண்டும் இவ்வுலகத்து நிலைபெரு; மற்றும் விண்ணுலகமானது மழையை வழங்காதாயின் எ-று.*

---

*''படநாகம் தோலுரித்தால்போல் துறந்து கண்டவர் மெய் பனிப்ப நோற்றிட்டு, உடனுக ஐம்பொறியும் வென்ருர்க்கு உவந்து ஈதல் தானமாகும்'' (சீவக. 1546) என்பதால் தானம் இன்னதென்பதையும், ''ஓதாது இரண்டு உவாவும் அட்டமியும் பட்டினிவிட்டு ஒழுக்கம் காத்தல் தாவாத் தவம்'' (சீவக. 1547) என்பதால் தவம் இன்னதென்பதையும் அறியலாம் என்பர்,

—**கவிராஜபண்டிதர்.**

**உரைவிளக்கப்பகுதி :**

**நுண் :—** *தானம் - அறநெறியான் வந்தபொருளைத் தக்கார்க்கு உவந்து கொடுத்தல். தவம் - மனம் பொறிவழிபோகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கல். தானம் தவம் இரண்டும் எனச் செவ்வெண் தொகை பெற்றது. இவ்வாறு இல்லாமையான் 'அறம் பொருள் கண்டார்கணில்' என்பதனுட் (141) செவ்வெண்ணின் தொகை தொக்கு நின்றது என்றூர். 'திருவளர் தாமரையுட் பேராசிரியர்' இவ்வாறு உரைத்தார் என்க. 'அவற்றின் வருஉம் எண்ணினிறுதியும், பெயர்க்குரிமரபிற் செவ்வெணிறுதியும், ஏயினுகிய எண்ணினிறுதியும், யாவயின்வரினும் தொகையின்றியலா' (தொ. சொல். 290) என்பது சூத்திரம்.*

**குறிப்பு :—** *ஒரிருவர், வறட்காலத்தும், அல்லல் நல்குரவானபோதும் குடிப் பிறப்பின் சிறப்பால் தானந்தவம் செய்வாராயினும், அவற்றிற்கும் நிலைபேறில்லை என்பார் 'தங்கா' என்றூர். மழைவளம் சிறந்த இடத்திற்ருன் தானம் நிலைபெறும் என்பதாம்.*

**20. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்**
**வானின் றமையா தொழுக்கு.** (உ0)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** யார் யார்க்கும் நீர் இன்று உலகு அமையாது எனின் எவ்வகை மேம்பாட்டார்க்கும் நீரையின்றி உலகியல் அமையாதாயின், ஒழுக்கு வான் இன்று அமையாது - அந்நீர் இடையரு தொழுகுகின்ற ஒழுக்கம் வானையின்றி அமையாது.

பொருளின்பங்களை உலகியல் என்றூர்; அவை இம்மைக்கண்ண வாகலின். இடையருதொழுகுதல் எக்காலத்தும் எவ்விடத்தும் உள தாகல். நீரின்றமையாது என்பது எல்லாரானும் தெளியப் படுதலின் அது போல ஒழுக்கும் வானையின்றி யமையாமை தெளியப்படும் என் பார் நீரின்றமையாதுலகெனின் என்றூர். இதனை நீரையின்றியமையாது உலகாயின் எத்திறத்தார்க்கும் மழையையின்றி ஒழுக்கம் நிரம்பாதென உரைப்பாரும் உளர். இவை மூன்றுபாட்டானும் அறம் பொருள் இன் பங்கள் நடத்தற்கு ஏதுவாதல் கூறப்பட்டது.

**மணக்:—** *நீரையின்றி உலகம் அமையாதாயின் யாவர்க்கும் மழையை யின்றி ஒழுக்கம் உண்டாகாது எ-று.*

ஒழுக்கம் - விரதம். இஃது ஆசாரம் கெடும் என்றது. இவை மூன்றினும் நான்கு அறமும் கெடும் என்று கூறினர். 3

**பரிமே:**—சர்வான்மாக்களுக்கும் மழை நீரின்றியே நடவாது; ஆகையால் மழையின்றியிலே பூலோகம் நடவாது.

பருதி:— எ - து சர்வான்மாக்களுக்கும் செல்வமின்றியே உலகியல் நடவாதாதலால், மழையின்றி வருகாரணமில்லை எ - று. 7

**காளிங்:**—எ - து இவ்வுலகமானது நீரையின்றி அமையாதாயின் இங்குள்ள உயர்ந்தோர் யாவர்க்கும் இழிந்தோர் யாவர்க்கும் மழையையின்றி அமையாது அவரவரொழுகும் ஒழுக்கு எ—று. 5

## உரைவிளக்கப்பகுதி :—

**நுண்:**—இன்றி யென்னும் வினைஎச்சக் குறிப்பு இன்று எனத் திரிந்தது. 'உப்பின்று புற்கை' 'அதாஅன்று' என்பதுமது. 'இன்றி யென்னும் வினையெஞ்சிறுதி, நின்ற இகரம் உகரமாதல்' (தொல். எழுத் 237) என்னும் சூத்திரவிதி பெற்றன. யார்க்கும் என்பது யார் யார்க்கும் என இரட்டித்தது.

## ஒப்புமைப் பகுதி:

'நீரின் றமையா உலகம்போல' —நற்றிணை 1.
'நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்' —புறநா. 18 : 18.
'மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை' —நான்மணி.
'மாரியல்லது காரியமில்லை.' —பழ.

# 3. நீத்தார் பெருமை

**பரிமே :—** அஃதாவது முற்றத்துறந்த முனிவரது பெருமை கூறுதல். அவ் அறமுதற்பொருள்களை உலகிற்கு உள்ளவாறு உணர்த்துவார் அவராகலின், இது வான் சிறப்பின் பின் வைக்கப்பட்டது.

**மணக் :-** *நீத்தார் பெருமையாவது துறந்த முனிவரது பெருமையைக் கூறல். இது கடவுளரை வணங்கினாற்போல் முனிவரையும் வணங்க வேண்டுமென்பதனானும், அவர் அதை யடக்கத்தக்கவர் என்ற கருத்தினானும் அவையிற்றின்பிற் கூறப்பட்டது.*

**பழைய :—***அகப்பற்று புறப்பற்றுக்களை நீத்தாரது பெருமை.*

**பருதி :—***நீத்தார் பெருமையாவது விரும்பாதார் [1] செயம் என்றறிக*

**இராமா :—***காரியப்பட்டு நின்ற அந்த உலக முழுமையும் உள்ளபடி உணருவதற்கும், அந்த அறம் முதலாகிய பொருள்களை உலகிற்கு உள்ளபடி உணர்த்துதற்கும் உரியவர் அவராகி, "சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்றைந்தின் வகைதெரிவான் கட்டே உலகு' என் உலகம் அவருள் அடங்குதலானும், 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என இவரையும் உலகம் என்று சொல்லப்படுவதினாலும் வான்சிறப்பின் பின் இது வைக்கப்பட்டது.*

**21. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து [2]**
**வேண்டும் பனுவல் துணிவு. (க)**

**உரைப்பகுதி :**

**பரிமே :—** ஒழுக்கத்து நீத்தார் பெருமை - தமக்குரிய ஒழுக்கத்தின் கண்ணே நின்று துறந்தாரது பெருமையை, விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு - விழுமிய பொருள்கள் பலவற்றுள்ளும் இதுவே விழுமிது என விரும்பும் நூல்களது துணிவு.

---

1 செயம் - வெற்றி.

2 'பனுவல் துணிவு விழு பத்துவேண்டும்-பரமாகமத்தின் துணிவு மேலான பத்துத் தருமங்களை வேண்டும் என்பது கர்ணபரம்பரையான ஜைனவுரை. விழுப்பத்தாவன உத்தமக்ஷமை, உத்தம மார்த்தவம், உத்தம ஆர்ஜவம், உத்தம சத்தியம், உத்தம சவுசம், உத்தம சம்யமம், உத்தம தபசு, உத்தம ஆகிஞ்சன்யம், உத்தமத் தியாகம், உத்தம பிரமசரியம் என்பன.'

**– கவிராஜ பண்டிதர்**

தமக்கு உரிய ஒழுக்கத்தின்கண்ணே நின்று துறத்தலாவது- தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் உரிய ஒழுக்கங்களை வழுவாது ஒழுக அறம் வளரும்; அறம்வளர, பாவந்தேயும்; பாவந்தேய, அறியாமை நீங்கும்; அறியாமை நீங்க, நித்த அநித்தங்களது வேறுபாட்டுணர்வும், அழிதன் மாலையவாய இம்மை மறுமை இன்பங்களின் உவர்ப்பும், பிறவித் துன்பங்களுந் தோன்றும்; அவை தோன்ற வீட்டின்கண் ஆசை உண்டாம்; அஃது உண்டாக, பிறவிக்குக்காரணமாகிய பயனில் முயற்சிகளெல்லாம் நீங்கி, வீட்டிற்குக்காரணமாகிய யோகமுயற்சி உண்டாம்; அஃது உண்டாக மெய்யுணர்வு பிறந்து, புறப்பற்றாகிய எனதென்பதும் அகப்பற்றாகிய யானென்பதும் விடும்; ஆகலான் இவ்விரண்டு பற்றையும் இம்முறையே உவர்த்துவிடுதல் எனக்கொள்க. 'பனுவல்' எனப் பொதுப்படக் கூறிய அதனான், ஒன்றையொன்று ஒவ்வாத சமய நூல்கள் எல்லாவற்றிற்கும் இஃது ஒத்த துணிவு என்பது பெற்றாம். செய்தாரது துணிவு, பனுவல் மேல் ஏற்றப்பட்டது.

**மணக் :-** *ஒழுக்கத்தின் பொருட்டு எல்லாப் பொருளையுந் துறந்தாரது பெருமையை நூல்களின் துணிவு விழுப்பத்தின் பொருட்டு வேண்டும் என்றவாறு.*

*யாதானுமொரு பொய்யைச் சொல்லும் நூலும் தன்னை எல்லாருங் கொண்டாடுதற்காகத் துறந்தார் பெருமையை நன்கு மதித்துக் கூறும்; அதனானே யானும் சொல்கின்றேன் என்பது.* 1

**பரிப் :** *'யாதானும் ஒரு பொருளைச் சொல்லும் நூலும்' பாடபேதம். அன்றியும் ஒழுக்கத்தின் கண்ணே நின்று எல்லாப் பொருளையும் துறந்தாரது பெருமையாவது உயர்ச்சியிலே விரும்பி நடக்கின்ற நூல்களில் துணிந்த பொருள் என்றுமாம். என்றது எல்லாந் துறந்தார்க்குப் பெருமையாவது அவரது தன்மை. அதனைத் தத்துவ ஆராய்ச்சியின் நூல்களிற் றுணிந்த பொருள் எனினல்லது வேறொன்றனோடு உவமிக்கப்படாது என்று கூறியவாறு.*

**பழைய :** *நாள்வழியே அஞ்சு புலங்களையும் ஒடுக்கிய ஒழுக்கத்தினையுடைய நீத்தார் பெருமையை, அவர்களைக் கூறும் நூலினது பெருமையால் துணிதல் வேண்டும்.*

**பருதி :-** *எது ஐம்புலன்களையடக்கின ஒழுக்கத்தினோர்க்குப் பெருமையெங்கே யென்னில், தாங்கள் கற்ற சாத்திரத்தின் பெருமையினால் ஏ - று.* 1

**காளிங் :-** எ-து தாம் முன்னம் ஒழுகிய ஒழுக்கத்தினைப் பின்பு துறவுநெறி சொல்லுகின்ற ஒழுக்கத்தின் கண்ணே தாற்பரித்து விட்டு நீங்கினர் யாவர் சிலர்; அவரது பெருந்தன்மைச் சிறப்பின் மாட்டே விரும்பி நின்றது மறை முதலாகிய எல்லா நூல்களினும் ஆராய்ந்து துணிந்து நின்ற துணிவுநிலை எ-று.

**குறிப்பு:**- பரிமேலழகருக்கும், காளிங்கருக்கும் ஒத்த கருத்து. மணக்குடவர் பொய் நூல்களும் நீத்தாரைக்கூறுவதால் பெருமையடைகின்றன என்பர், பழைய உரைகாரர் நீத்தார் பெருமையை, அதனைக் கூறும் நூற்பெருமையைக் கொண்டுணரலாம் என்பர். பருதி நீத்தார்க்கு உளவாகும் பெருமையெல்லாம் அவர்கள் படித்திருக்கின்ற நூல்களாலே என்பர்.

**உரைவிளக்கப்பகுதி:**

**நுண்:**—செய்தார் துணிவு பனுவன்மேல் ஏற்றப்பட்டது யான் எனது என்பது இருவகைப்பற்று.

**மேற்கோள் பகுதி:**

**காரிரத்ன:**—பாவிக அலங்காரம் (மாற, 251.)

**22.** **துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்(து)**
**இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.** (உ)

**உரைப்பகுதி :**

**பரிமே:**—துறந்தார் பெருமை துணைக்கூறின் - இருவகைப்பற்றினையும் விட்டாரது பெருமையை இவ்வளவென்று எண்ணாற் கூறி அறியலுறின் அளவுபடாமையான், வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டு அற்று - இவ்வுலகத்துப் பிறந்து இறந்தாரை எண்ணி இத்துணையார் என அறியலுற்றாற்போலும்.

முடியாது என்பதாம். கொண்டால் என்னும் வினையெச்சம், 'கொண்டு' எனத் திரிந்து நின்றது.

**மணக்:**—காமமுதலாகத் துறந்தார்பெருமைக்கு அளவுகூறின், உலகத்துப் பிறந்திறந்தாரை இத்துணையரென்று எண்ணி யறியலுற்றாற் போலும். எ - று.

இது, பெருமைக்கெல்லை கூறுதல் அரிதாயினும் சில சொல்லப் புகாநின்றனேன் என்றது கருதிற்று.

பழைய:—பூமியிலே பிறந்தார் மெய் வாய் கண் மூக்குச் செவியுண்டாரிலுந் தன்செயல்மாண்ட தன்மைபோல, சரீரமும் பிராணனும் இருக்கையிலேமே துறந்தாரது பெருமையினளவைக் கூறின் உலகத் திறந்தாரை எண்ணி அறிந்தாற்போலும்.

பருதி:—எ - து காமக் குரோத லோப மோக மத மாச்சரியங்களையுந் துறந்த பேருக்கு உவமைகூறில் பூமியில் இறந்த[1] செனம் எத்தனையுண்டு; அத்தனையும் அறிந்தால், அவர்கள் பெருமையறியலாம் எ - று. 4

காளிங்:—எ - து இங்ஙனம் நீத்தாரது பெருமைக்கு உவமைகூறின், மற்று இவ்வுலகத்தின்கண் துறவாதாராகப் பிறந்து இறந்தாரை எண்ணிக்கொண்ட அவ்வளவிற்று எ - று.

## உரைவிளக்கப்பகுதி:

நுண்:—கொண்டால் என்பது கொண்டு எனத் திரிந்தது. அற்றென்னும் உவமச்சொல் உயர்திணைக்கண்வாராது; அஃறிணைக்கண் செய்யுமென்னும் முற்றாய்ப் போலும் என்றே நிற்கும்.

இராமா:—கொண்டது என்னும் வினையாலணையும்பெயர் கொண்டு என விகாரப்பட்டு நின்றது. எண்ணி என்னும் வினை எச்சத்தை முடித்த அறிவது என்னும் தொழிற்பெயர், சொல்லெச்சமாய்க் குறைந்துநின்றது. அளவிடக்கூடாதுஆதலால் 'அது எதுபோலும் என்றால்' என்பவை இசையெச்சம்; வருவித்துச் சொல்லப்பட்டன.

## மேற்கோள் பகுதி:

பேரா:—உவம உருபுகளால் 'துணைப்ப' என்பதும், 'அற்று' என்பதும் வந்தன. (தொல் பொரு. 286.)

## ஒப்புமைப்பகுதி:

"இறந்தனர் இறந்தகாலத் தெண்ணிறந்தனர்கள் எல்லாம்" —யசோதர. 36.

குறிப்பு:—துறந்தவர்கள் இறந்தவர் அல்லர்; என்றும் இருந்தவர் எனவே மதிக்கப்பெறுதலின் துறவாதவராகப் பிறந்து இறந்தவரை எண்ணியறிந்ததுபோலும் இவர் பெருமையறிதல் என்ற காளிங்கர் உரையே சிறத்தல் காண்க.

23. *இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. (௩)

## உரைப்பகுதி:

பரிமே:—இருமை வகைதெரிந்து - பிறப்பு வீடு என்னும் இரண்டனது துன்ப இன்பக் கூறுபாடுகளை ஆராய்ந்து அறிந்து, ஈண்டு அறம்

1 செனம் - ஜனம்; மக்கள்.

*. இருமை - சம்சாரம், மோக்ஷம் என்பன, —கவிராஜபண்டிதர்.

பூண்டார் பெருமை - அப்பிறப்பு அறுத்தற்கு, இப்பிறப்பின்கண் துறவறத்தைப் பூண்டாரது பெருமையே, உலகு பிறங்கிற்று-உலகின்கண் உயர்ந்தது.

"தெரிமாண் தமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்" என்புழிப் போல, 'இருமை' என்றது ஈண்டு எண்ணின்கண் நின்றது பிரிநிலை ஏகாரம், விகாரத்தால் தொக்கது. இதனால், திகிரியுருட்டி உலகமுழு தாண்ட அரசர் முதலாயினர் பெருமை பிரிக்கப்பட்டது.

இவை மூன்றுபாட்டாலும், நீத்தாரது பெருமையே எல்லாப் பெருமையினும் மிக்கதென்பது கூறப்பட்டது,

**மணக்:**--*பிறப்பும் வீடும் என்னும் இரண்டினது கூறுபாட்டை ஆராய்ந்து, இவ்விடத்தே துறவறத்தைமேற்கொண்டவரது பெருமை உலகத்தில் மிக்கது எ - று.*

*இஃது எல்லாரானும் போற்றப்படும் என்றது.* 6

**பழைய:**- *புண்ணியபாவத்தான் உளவாகும் பிறப்பு இறப்பு என்னும் வழியறிந்து அதன்வழியேநின்றார் பெருமையினலேயே உலகம் விளங்கும்.*

**பருதி:**- *எ - து புண்ணியபாவத்தின் வழியறிந்து தன்மத்தின் வழி நின்றார் பெருமையினால் உலகம் விளங்கும்.* 3

**காளிங்:**- *எ - து கீழ்ச்சொன்னபரிசே இம்மை மறுமை இரண்டினது குற்றத்தன்மையைத் தெரிந்து, மிக்கிருந்துள்ள அறப்பயனாகிய வீட்டின்பத்தை மேவியுள்ளாரது பெருந்தன்மையையே மிகுத்துக் கூறியது இவ்வுலகம் எ - று.* 7

**உரைவிளக்கப்பகுதி:**

**நுண்:**- *இருமை 'ஒருமை' 'எழுமை' (126) போல் எண்ணப்படு பொருள் ஆகாது, இரண்டின்வகை யென எண்மாத்திரையாய் நின்று, 'சுவையொளி யூறோசை நாற்றமென்றைந்தின் வகைதெரிவான்' என்னும் பொருள் பெற்றது. இதற்குச் சொற்சோதனைகாட்டிய "தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்" "பரிமா நிரையிற் பரந்தன்றுவையை" என்ற பரிபாட்டுப்போல் ஈண்டு எண்ணின்மேனின்றது. மையிறுபெற்ற எழுமை ஒருமைபோல் ஈண்டெண்ணப்பொருண்மேல் நில்லாமை காண்க. 'மூவர் நின்றேத்த' (337.) என்னுங் கோவையாருள் 'முப்பத்துமும்மைத் தேவரும்' அது. பெருமையே என்பதனால் பிரிநிலை யேகாரம் செய்யுட்*

டொலடவிகாரம். அறுவகைத்தொகையுள் ஏகாரத்தொகை யின்மையால் விகாரமென்றார். விகாரம் எனினும் செய்யுள் விகாரம் எனினும் ஒக்கும்.

ஐந்து புலன்களினும். புக்கழிக்காத வண்ணம், பொறிகளாகிய யானையை அறிவாகிய தோட்டியால் அடக்கவல்ல ஆன்மா என்னும்பாகன் நிரதிசயானந்த இன்ப வீட்டிற்கு வித்தாவன் என்பதாம்.

குறிப்பு:-இந்த ஐவர் உரையிலும் நீத்தார்பெருமையே உலகில் உயர்ந்தது (பரி மணக்) பெருமையினாலேயே உலகம் விளங்கிக் கொண்டிருக்கிறது. (பழைய, பரிதி) நீத்தார் பெருமையையே உலகம் மிகப் பாராட்டுகிறது. (காளிங்) என்ற கருத்துக்கள் விளங்குதல் காண்க.

**24. உரனென்னுந் தோ டியான் ஓரைந்துங் காப்பான்**
**வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. (ச)**

**உரைப் பகுதி:—**

**பரிமே:**—உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் - திண்மையென்னுந் தோட்டியால் பொறிகளாகிய யானை யைந்தனையும், தத்தம் புலன்கள்மேற் செல்லாமற் காப்பான், வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து - எல்லாநிலத்தினும் மிக்கதென்று சொல்லப்படும் வீட்டு நிலத்திற்கு ஓர் வித்தாம்.

இஃது, ஏகதேசஉருவகம். திண்மை - ஈண்டு அறிவின்மேற்று. அந்நிலத்திற்சென்று முளைத்தலின் 'வித்து' என்றார். ஈண்டுப் பிறந்து இறந்துவரும் மகனல்லன் என்பதாம்.

**மணக்:-** அறிவாகிய தோட்டியானே பொறியாகிய யானை ஐந்தினையும் புலன்களிற் செல்லாமல் மீட்பவன், மேலாகிய இடத்தே ஆதற்கு இவ்விடத்தே இருப்பதொருவித்து எ - று.

பெருமை சொல்லுவார், முற்பட மக்கள் தன்மையனாய் இவ்வுலகின் கண் வாழ்பவன் அல்லன்; தேவருள் ஒருவன் என்று கூறினார். 3

**பழைய:-** அறிவென்னும் அங்குசத்தினாலே ஐந்து புலனாகிய ஆனையைக் காப்பான் மோட்சமென்னும் பூமிக்கு ஒருவித்தாம்.

**பருதி:**—எ - து அறிவென்னுந் தோட்டியால் ஐம்புலன் என்னும் யானையைக் காப்பான் மோட்சம் என்னும் பூமிக்கோர் வித்தாம் எ - று. 6

காளிங்:- எ - து ஒருவழிப்பட்ட சித்தத்தின் அறிவென்னும் அங்குசத்தினுல் தமது நெறிக்கு மிகைபடுபொறிகளிற் பரவாமை, ஐவகைப்பட்ட மெய் வாய் கண் மூக்குச் செவியென்கிற ஐம்புலனேயும் பாதுகாத்து அடக்கி ஒழுகுவான் யாவனொருவன்? அவனே மூத்தியென்கிற முடிந்த நிலத்திற்கு முதற்காரணமாவான் எ - று. 2

உரைவிளக்கப்பகுதி:

நுண்:- வித்தென முனைத்தலொப்புமைபற்றி உருவகமாயிற்று. 'வரைவிலா மாணிழையார்' (919.) என்னுங் குறளில் 'பூரியர்கள் ஆழும் அளறு' என்பதும் அது. மேல் இவ்வாறுவரும் உருவகமெல்லாம் விரித்தெழுதுவர் என்க.

இராமா:- பின்பு அந்தநிலத்திலே போய் முளைப்பதினுலே காப்பானை வித்து என்றது ஏதுருவக அலங்காரம் என்றும், ஓரைந்தும் என்றது ஏகதேச உருவக அலங்காரம் என்றும் காண்க.

## மேற்கோள் பகுதி:

நச்:- முனிவர் வாழ்த்து (தொல். செய். 109.)

## ஒப்புமைப்பகுதி:

முனியான் அறமறங்கள் முக்குற்றம் பேணன்
கனிகாக்கும் ஒண்மை உறைப்படுத்தும் பண்போன்
பனிநிலத்தின் வித்தாய்ப் பெயரான் நடுக்கற் (று)
இனியனு வான் மற்றினி. —இன்னிலை 39.
"முழக்கி யெழுவன மும்மதவேழம்
அடக்க அறிவெனும் தோட்டியை வைத்தேன்." —திருமந். 1996

குறிப்பு:- ஐந்து புலங்களிலும் புக்கு அழிக்காதவண்ணம் பொறிகளாகிய யானையை அறிவாகிய தோட்டியால் அடக்கவல்ல ஆன்மா என்னும் பாகன் நிரதிசாயனந்த இன்ப வீட்டிற்கு வித்தாவன் என்பதாம்.

பரிமேலழகர் முதலானோர் உரை சாபக்கோடுகள் விளைத்தலால், ஐந்தவித்தார்க்குச் சினம் உண்மையை உணர்த்தி நீத்தார் பெருமை என்ற அதிகாரத்திற்கேலாது நிற்றலின் காளிங்கர் உரை ஏனையோர் கருத்தினும் ஏற்றமுடைத்தாதல் காண்க.

* 'பஞ்சேந்திரியங்களையும் செயித்தவனைத் தேவேந்திரன் முதலிய தேவர்கள் பூமிக்கு வந்து சமவசரணமண்டலம் அமைத்து வணங்கி அவனுக்குச் சிறப்புச் செய்கின்றார்கள்.'

= கவிராஜ பண்டிதர்.

25. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங்கரி'.* (ரு)

உரைப்பகுதி :

பரிமே:— ஐந்து அவித்தான் ஆற்றல் - புலன்களிற்செல்கின்ற அவா ஐந்தனையும் அடக்கினனது வலிக்கு, அகல் விசும்பு உளார் கோமான் இந்திரனே சாலும் கரி - அகன்ற வானத்துள்ளார் இறைவனாகிய இந்திரனே அமையுஞ்சான்று.

ஐந்தும் என்னும் முற்றும்மையும், ஆற்றற்கு என்னும் நான்கனுருபுஞ் செய்யுள் விகாரத்தால் தொக்கன. தான் ஐந்தவியாது சாபமெய்தி நின்று அவித்தானது ஆற்றலுணர்த்தினனாகலின், 'இந்திரனே சாலுங்கரி' என்றார்.

மணக்:- நுகர்ச்சியாகிய ஐந்தினையும் துறந்தானது வலிக்கு அகன்ற விசும்பிலுள்ளார்க்கு நாயகனாகிய இந்திரனே யமையுஞ் சான்று எ-று.

இந்திரன் சான்று என்றது இவ்வுலகின்கண் மிகத்தவஞ்செய்வார் உளரானல், அவன் தன்பதம் இழக்கின்றானாக நடுங்குமாதலான், இது தேவரினும் வலியன் எ-று. 5

பழைய :- பொறிவழியிற் புலன் செல்லாமல் மனத்தின் வழியே செல்பவன் பெறும்பேற்றுக்கு இந்திரன் சாட்சி.

பருதி :- எ-து பொறிவழியிலே புலன் செல்லாமல் தன்வழி மனசிருப்பானுக்கு இந்திரனே சாட்சி எ-று. 7

காளிங்:- எ-து மேல்சொன்ன பரிசே ஐம்புலனையும் வென்றவன் சித்த வலிமைக்குப் பரந்த வானில் வாழும் தேவர்கட்கெல்லாம் அரசனாகிய இந்திரனே அமையுஞ் சான்று எ-று.

மற்று இது என்சொல்லியவாறோ எனின்? ஈண்டுத் தன் பதங்கருதித் தவஞ்செய்யும் நீத்தார் மாட்டுத் திலோத்தமை முதலிய தெய்வ மகளிரை விடுத்து, மற்று அத்தவமழித்துத் தவம் அழியாமை நிலைநிற்கையாலும், தனது பதம் விரும்பாமையாலும் தானே சான்றாய் அமையும் எ-று. 5

உரைவிளக்கப்பகுதி :

நுண் :- சாலுங்கரி என்பதற்கு 'மல்லன் மாஞாலங்கரி' (245.) என்பதற்கு உரைத்தாங்கு உரைக்க. நிரப்பிடும்பை தானேயுஞ் சாலுங்கரியும்' (1060.) அது. முற்றும்மையும், நான்கனுருபும் செய்யுட்டொடையும் இன்னொலியுங் காரணமாக வந்த செய்யுள்விகாரத்தாற் றொக்கன. செய்யுள் விகாரமாவது இன்னொலியும், பதத்துளடிப்பர்டும், செய்யுட்டொடையும் நோக்கி வரும். 'அந்நாற்சொல்லுந் தொகுக்குங்காலை' யென்னுஞ் சூத்திரத்து அறுவகை விகாரமும் தலையிடைகடை குறைத்தல்

என்னும் மூவகை விகாரமுமென்க. அது தொல்காப்பியத்துள் நச்சினார்க்கினியர் உரையுட் காண்க. இனிப் புணர்ச்சி விகாரமாவது தோன்றல் திரிதல் கெடுதல் என்க. 'வேற்றுமைத்தொகையே வேற்றுமையியல' (தொல். சொல். 413.) என்பது உருபு இருந்தாங்கே தொகுவது. நிலங் கடந்தான், தாய்மூவர், கருப்புவேலி, வரைவீழருவி, நாகர்பலி குன்றக் கூகை யென்பன இவ் ஆறும் நேரே தோன்றத் தொகாது. சாத்தனுடு வந்தான், சாத்தற்குக் கொடுத்தான் என்பன தொக்காற்றொகைப் பொருளுணர்த்தாது எழுவாயும் பயனிலையுமாயும் நிற்கும். இவ்வாறுரைத்தார் நச்சினார்க்கினியரும் என்க. ஈண்டும் இன்னொலிகாரணமாக ஆற்றற்கென்று தொக்குநின்று எழுவாய் போல நிற்றனோக்கி வேற்றுமைத் தொகையுளடக்காது விகாரமென்றார். 'அறைபறைகண்ணார்' (1180.) என்பதும், 'பொருள் கருவி காலம் வினையிட னைந்தும்' (675.) என்பதனுள் ஒடுவும் அது. செய்யுட்டொடை காரணமாக 'உண்டார்கணல்ல தடுநறா' (1090.) என்பதனுள் கண்டார் மகிழ் செய்தலும். தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறையும்' (508.) எழுவாயும் பயனிலையுமாய் நிற்றனோக்கி. விகாரமென்றது ஆண்டுக் காண்க. 'கம்பஞ் சிவந்த' என்னுங் கோவையாருள், அரிசிந்துங் கண்ணுள் செம்பஞ்சியின் மிதிக்கின் பதைக்கும் மலர்ச்சீறடி' (209.) எனபதற்கு தொகச்சொல்லாத விடத்துத் தொக்கு நின்றதென்றார் பேராசிரியருமென்க. செய்யுட்டொடை தளைவிரவாமை, முற்றும்மையும் உம்மைத் தொகையுள் அடங்காதென்பது 'இருபெயர் பலபெயர்' என்னுஞ் சூத்திரத்தான் அறிக இனி, இச்செய்யுட்கண் வேற்றுமையும் உம்மையும் உருபிருந்தாங்கே தொக்கன தூதுரைப்பான்' (681.) 'வினையுரைப்பான்' (683.) 'வழியுரைப்பான்' (638.) பண்பெனவிவற்றின்கண்ணும் 'குடியாண்மையுள் வந்த குற்றம்' (609.) 'பொருளாயம்' (933.) என இவற்றின் கண்ணும் விகாரமென்னுமை முறையே காண்க.

**மேற்கோள் பகுதி:**

**சிவஞான :—** 'ஐந்தவித்தான் ஆற்றல் என்புழிப்போல 'போமாற்றிற்கு' என்னும் நான்கனுருபு செய்யுளாதலின் விகாரத்தால் தொக்கது. (சிவஞானபோ. சூ 2. அதி 3: ஷி சூ. 7. அதி. 3.)

**குறிப்பு:-** பரிமேலழகர் முதலானோர் உரை 'சாபக் கேடுகள் விளைத்தலான் ஐந்தவித்தார்க்குச் சினம் உண்மையை உணர்த்தியது நீத்தார் பெருமை என்னும் அதிகாரத்திற்கு ஏலாது நிற்றலின் காளிங்கர் உரை ஏனையோர் கருத்தினும் ஏற்றமுடைத்தாதல் காண்க.

**26. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**
**செயற்கரிய செய்கலாதார். (சு)**

**உரைப்பகுதி:**

**பரிமே:—** செயற்கரிய செய்வார் பெரியர்-ஒத்த பிறப்பினராய மக்களுள் செய்தற்கெளியவற்றைச் செய்யாது அரியவற்றைச் செய்வார்

பெரியர்; செயற்கரிய செய்கலாதார் சிறியர் - அவ்வெளியவற்றைச் செய்து அரியவற்றைச் செய்யமாட்டாதார் சிறியர்.

செயற்கெளியவாவன மனம் வேண்டியவாறே அதனைப் பொறி வழிகளால் புலன்களிற் செலுத்தலும், வெஃகலும், வெகுடலும் முதலாயின. செயற்கரியவாவன இயமம் நியமம் முதலாய எண்வகை யோக வுறுப்புக்கள். நீரிற்பலகான் மூழ்கல் முதலாய 'நாலிருவழக்கிற் றாபத பக்கம்'* என்பாருமுளர். அவை நியமத்துள்ளே அடங்கலின், நீத்தாரது பெருமைக் கேலாமை யறிக.

**மணக்:-** *செயற்கு அரியன செய்வாரைப் பெரியோர் என்று சொல்வர்; அவற்றைச் செய்யமாட்டாதாரைத் துறந்தாராயினும் சிறியோரென்று சொல்லுவார் எ-று.*

*செயற்கரியன - இயமம் நியமம் முதலாயின. இவ்வதிகாரம் நீத்தார் பெருமையென்று கூறப்பட்டதாயினும், துறந்தமாத்திரத்தானே பெரியரென்று கொள்ளப்படார்; செயற்கரியன செய்வாரே பெரியரென்று கொள்ளப்படுவரென்று கூறிற்று.* 9

**பழைய:–** *ஒருவரானும் செய்தற்கரியனவே செய்வார் பெரியர்; சிறியவர் அவ்வாறு செய்யமாட்டார்.*

**பருதி:-** *எ-து ஒருவரானுஞ் செயற்கரிய துறவறத்தைச் செய்வார் பெரியர்; சிறியவர் செய்யுந்தொழிலாகிய இல்லறமுஞ் செய்ய அறியார் எ-று.* 9

**காளிங்:-** *எ-து யாவரானுஞ் செய்தற்கரியவாகிய தவநெறித் திறத்தைச் செய்து முடிப்பார் உலகத்துப் பெரியோரென்று சொல்லப்படுவார்; மற்றிவற்றை முயன்று முடிக்கலாகாரே சிறியரென்று சொல்லப்படுவார் எ-று*

**உரைவிளக்கப் பகுதி:**

**நுண் :—** *'நீர்பலகான் மூழ்கல் முதலாய நாலிரு வழக்கிற் றாபத பக்கம் என்பாரும் உளர். அவை நியமத்துள்ளே யடங்குதலின் நீத்தார் பெருமைக் கேலாமையறிக' என்றார். இவ்வாறு உரைப்பதனை வடநூலார் தூடணம் என்பர்.*

* தொல். பொருள். புறத். 20.

4

**ஒப்புமைப்பகுதி :**

'தங்தொழிலாற்றும் தகைமையார் செய்வன
வெங்தொழில ராய வெகுளிகட்குக் கூடுமோ
மைந்திறை கொண்ட மலைமார்ப ஆகுமோ
நந்துழுத வெல்லாம் கணக்கு : —:பழமொ

''செயற்கரும் செய்கைசெய்த தீரனே ஓலம்''
—பெரிய. இயற். 29.

**27. சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்**
**வகைதெரிவான் கட்டே யுலகு. (எ)**

**உரைப்பகுதி:**

**பரிமே:—** சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின்வகை- சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் நாற்றமுமென்று சொல்லப்பட்ட தன் மாத்திரைகள் ஐந்தனது கூறுபாட்டையும், தெரிவான்கட்டே உலகு - ஆராய்வான் அறிவின்கண்ணதே உலகம் என்றவாறு.

அவற்றின் கூறுபாடாவன - பூதங்கட்கு முதலாகிய அவைதாம் ஐந்தும், அவற்றின்கண் தோன்றிய அப்பூதங்கள் ஐந்தும், அவற்றின் கூறாகிய ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும் ஆக இருபதுமாம். 'வகை தெரிவான் கட்டு' என உடம்பொடு புணர்த்த தனால் தெரிகின்ற புருடனும், அவன் தெரிதற் கருவியாகிய மான் அகங்கார மனங்களும், அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும் பெற் ரும். தத்துவம் இருபத்தைந்தனையும் தெரிதலாவது - மூலப்பகுதி ஒன்றில் தோன்றியது அன்மையின் பகுதியேயாவதல்லது விகுதியாகா தெனவும், அதன்கண் தோன்றிய மானும், அதன்கண் தோன்றிய அகங்காரமும், அதன்கண் தோன்றிய தன்மாத்திரைகளும் ஆகிய ஏழும் தத்தமக்கு முதலாயதனை நோக்க விகுதியாதலும், தங்கண் தோன்றுவனவற்றை நோக்கப் பகுதியாதலும் உடைய எனவும், அவற் றின்கண் தோன்றிய மனமும், ஞானேந்திரியங்களும், கன்மேந்திரியங் களும், பூதங்களும் ஆகிய பதினாறும் தங்கண் தோன்றுவன இன்மை யின் விகுதியேயாவதல்லது பகுதியாகா எனவும், புருடன் தான் ஒன்றில் தோன்றாமையானும் தன்கண் தோன்றுவன இன்மையானும் இரண்டும் அல்லன் எனவும் சாங்கியநூலுள் ஓதியவாற்றான் ஆராய்தல்

இவ்விருபத்தைந்துமல்லது உலகு எனப் பிறிதொன்றில்லை என் உலகினது உண்மை அறிதலின், அவன் அறிவின்கண்ணதாயிற்று.*

இவை நான்கு பாட்டானும், பெருமைக்குஏது ஐந்தவித்தலும் யோகப்பயிற்சியுந் தத்துவவுணர்வும் என்பது கூறப்பட்டது.

**மணக் :**—*சுவை முதலாகக் கூறிய ஐந்து புலன்களின் வகையை ஆராய்வான் கண்ணதே யுலகம் எ - று.*

*எனவே இவற்றின் காரியம் வேறொன்றாகத் தோன்றுமன்றே; அதனை யவ்வாறு கூறுபடுத்துக் காணக் காரணம் தோன்றுமாதலால் காரியமானவுலகம் அறிவான்கண்ணதாம் என்றவாறாயிற்று.* 4

**பரிப் :** *இஃது உலகினும் பெரியர் என்றது.* 4

**பருதி :** *எ - து ஐம்புலன்வழியே மனசுபோகாமற் காக்கும் அவர்களிடத்திலேயே பெரியோரிருப்பர் எ - று.* 5

**காளிங் :** *எ - து இவை ஐந்தினது கூறுபாட்டையும் உள்ளபடி ஆராய்ந்து அறிவான்கண்ணதே உலகம் எ - று.* 4

## உரைவிளக்கப்பகுதி:

**நுண் :**—*தெரிவான் என்பது உடம்பொடு புணர்த்தல் என்னும் தந்திரவுத்தி. கட்டு என்பது கண்ணது என ஆறாவதனுருபு முற்றாயும், காமத்துட் 'பேரமர்க்கட்டு' (1083) என்பது கண்ணையுடைத்து என இரண்டாவது விரிக்கும் குறிப்புமுற்றாயும் நின்றது. இதனுள் தத்துவ வகைகாண்க.*

**இராமா :**—*"பூதங்களுக்கு முதலாகியவை தன் மாத்திரைகள் என்றுகாண்க. என்னவெனின் விரித்தமகதத்துவமும் தன் மாத்திரையும் விளங்கும் சத்தப் பிரகிருதியால் பஞ்சபூதம் உரைத்து அவற்றால் பிரமாண்ட பிண்டமுதலாய உலகுதயந்தான் பிரமசிருட்டி என்றாராதலால் உணர்க."*

---

* "ஐந்தின்வகை தெரிதலாவது - ஐம்பொறிகளினால் அறியப்படும் பொருள்களுள் எவ்வெவற்றை விடவேண்டும் எவ்வெவற்றைக் கொள்ளவேண்டும் என்று அறிதலாம். இதைப் பரமாகமம் அறிந்தார் ஹேயோபாதேய விஷயம் என்பர். ஹேயோபாதேயங்களை ஒழுக்கத்தின் மூலம் விளக்கிக்காட்டியுள்ளார். இவ்வாறு ஐம்புலன்களின் வசனந்தெரிந்து ஒழுகுதல் நீத்தாரின் பெருமை என்பது புலப்படும். இக்குறளிற்குப் பரிமேலழகர் சாங்கிய தத்துவத்தை விரித்துக் கூறியுள்ளார். அவர் கூறுவது குறளாசிரியன் கருத்தாதல் அரிது."-

—**கவிராஜபண்டிதர்.**

**மேற்கோள்பகுதி :**

**நச் :**—தெரிநிலையுடன் கூடிய டகரஉகரம் இடத்து என்னும் பொருண்மைக்கண் வகைதெரிவான் கட்டேயுலகு என வரும். (தொல். சொல். 223)

**பெருந் :**—தொகைமிக்கு வந்தமையால் ஒகம் என்னும் உயிராயின மைக்கு மேற்கோள் (வீரசோ 151 உரை.)

**ஒப்புமைப்பகுதி**

"மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை யவாவினைக் - கைவாய்க்
கலங்காமல் காத்துய்க்கும் ஆற்றல் உடையான்
விலங்காது வீடு பெறும்." —நாலடி. 59.

**குறிப்பு:—** 'உலகு என்ற சொற்குக் காரியப் பிரபஞ்சம் என உரை கண்டனர் பலரும். பருதியார் மட்டும் பெரியோர் எனக் கண்டனர்.

## 28. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும். (அ)

**உரைப்பகுதி :**

**பரிமே :**—நிறைமொழி மாந்தர் பெருமை - நிறைந்த மொழியினை யுடைய துறந்தாரது பெருமையை, நிலத்து மறைமொழி காட்டி விடும்- நிலவுலகத்தின்கண் அவராணையாகச் சொல்லிய மந்திரங்களே கண் கூடாகக் காட்டும்.

நிறைமொழியென்பது அருளிக்கூறினும் வெகுண்டுகூறினும் அவ்வப்பயன்களைப் பயந்தேவிடும் மொழி. காட்டுதல் பயனுணர்த்துதல்.

**மணக் :**—நிரம்பிய கல்வியையுடைய மாந்தரது பெருமையை, அவராற்சொல்லப்பட்டு நிலத்தின்கண் வழங்காநின்ற மந்திரங்களே காட்டும் எ - று.

இஃது அவராணை நடக்கும் என்று கூறிற்று.

பழைய :—நிறைந்த மொழியினையுடைய துறந்தார் பெருமையை நிலவுலகத்தின்கண் அவராணையாற் சொல்லிய மந்திரங்களே கண்கூடாகக் காட்டும்.

பருதி :—எ - து ஐம்புலன்வழியே மனசை விடாமற் காக்கும் உபதேசத்தார் பெருமையை வேதவொழுக்கம் சொல்லும் எ - று. 2

காளிங் :—எ – து ஐம்புலன்களையும் அடக்கி, இனியொரு கல்வி கேள்வியும் விரும்புதலின்றி, முத்தியின்பத்தை முழுதுணர்ந்தமைந்த நீத்தோரது பெருமையை இவ்வுலகத்து வேதங்களும் மற்றுள்ள நூல்களுமாகிய இவை எல்லாம் எடுத்துக்காட்டிய மொழிகளே கூறும் எ - று. 6

## உரை விளக்கப்பகுதி:

நுண் :—அருளினும் வெகுளினும் அவ்வப்பயன்களைப் பயந்தே விடுமொழி நிறைமொழி. கண்கூடு - பிரத்யக்ஷம். சமயக்கணக்கர் தந்திறம் உரைத்தகாதையுள் (மணிமேகலை) சாத்தனாரும், 'உண்மைப் பொருளின் உலகாயதனுணர்வு, கண்கூடல்லது கருத்தளவழியும் (73 : 74) என்றமையானும் அறிக.

இராமா :— 'நிறைமொழி மறைமொழி என்பவை இரண்டும் வினைத்தொகைச் சொற்கள் பின்னதை மறையினது மொழி எனக் கொண்டு வேதவசனம் எனினும் பொருந்தும். காட்டுதல் பிரயோசனத்தினாலே அறிவிப்பது. விரைவாகக்காட்டும் என்கிற விரைவுப்பொருள் தோன்றக் காட்டும் என்னாது காட்டிவிடும் என்றார்.'

## மேற்கோள் பகுதி :

பேரா:-"நிறைமொழி மாந்தர்" என்ற சூத்திரவுரையில் பேராசிரியர் சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டுங் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றலுடையராவார் ஆணையாற் கிளக்கப்பெற்றுப்புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லுஞ் சொற்றொடரெல்லாம் மந்திரமெனப்படும். அகலத்தில் இக்குறளைக் காப்புத்தமிழ் மந்திரம் எனக் காண்க' என்பர், (தொல். பொருள். 490.)

## ஒப்புமைப்பகுதி :

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப" —தொல், பொருள், 490

29. குண மென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
*கணமேயுங் காத்தல் அஃது.

**உரைப்பகுதி :**

**பரிமே** :—குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி-துறவு மெய்யுணர்வு அவாவின்மை முதலிய நற்குணங்களாகிய குன்றின் முடிவின்கணின்ற முனிவரது வெகுளி, கணமேயும் காத்தல் அரிது - தான் உள்ள அளவு கணமேயாயினும் வெகுளப்பட்டாரால் தடுத்தல் அரிது.

சலியாமையும் பெருமையும்பற்றிக் குணங்களைக் குன்றாக உருவகஞ் செய்தார், குணம் சாதியொருமை. அநாதியாய் வருகின்றவாறு பற்றி ஒரோவழி வெகுளி தோன்றியபொழுதே அதனை மெய்யுணர்வு அழிக்கும் ஆகலின் கணமேயுமென்றும், நிறைமொழி மாந்தராகலின் காத்தலரிது என்றுங் கூறினார், இவை யிரண்டுபாட்டானும் அவர் ஆணை கூறப்பட்டது.

**மணக்:**—குணமாகிய மலையை மேற்கொண்டு நின்றார்மாட்டு உளதாகிய வெகுளியால் வருந் தீமையைச் சிறிதுபொழுதாயினும் வாராமற் காத்தலரிது எ - று.

நகுஷன் பெரும்பாம்பாயினான். இது வெகுளி பொறுத்தல் அரிது என்றது. 8

**பழைய:-** குணமென்னும் மலையுச்சியிலே நின்றார், எந்த நாளிலும் கோபம் கணப்பொழுதும் கொண்டிரார் என்பதாம்.

**பருதி:-** எ - து சற்குணம் என்னுமலையின் உச்சியிலே நின்றார், கோபம் கணமேனுங் காக்கமாட்டார் எ - று. 8

**காளிங்:-** எ - து ராசத தாமத சாத்துவிகம் என்கின்ற குணங்களும், காமவெகுளி மயக்கம் என்கின்ற குணவிகாரங்களும், அழல் சீதம் இடர் இன்பம் மானம் அவமானம் என்று எண்ணப்படுகின்ற குணமனைத்தின் தொகையுமாகிய குன்றைக்கடந்து வீட்டின் பத்து நிலைநின்றோராகிய நீத்தோரை மற்று அவ்வெகுளியானது தன்மாட்டுச் சிறிதுபொழுது நிறுத்திக்கொண்டு நிற்கமாட்டாது எ - று

---

* 'கணமேனும்' என்ற பாடமே சிறந்ததென்பர் பருதி; நுண்பொருள்,

**உரைவிளக்கப்பகுதி:**

**நுண்:**-கணமேயும் என்று பாடமோதாது கணமேனும் என்க. 'புறம் குன்றி கண்டனையரேனும்' (277.) 'அறம்போலுங் கூர்மையரேனும்' (997.) 'என்னுடைய ரேனுமிலர்' (430.) 'யாதானும் நாடாமல்' (397.) 'வானம் வறக்குமேல்' (18.) 'செல்லாமை யுண்டேல்' (1151,) எனப் பெரும்பான்மையும் வருதலான் ஏனும், ஆனும், ஏலும் என்பன ஆயின் என்னும் எச்சமாதலான் அவ்வாறே பாடம் ஓதுக. 'இரப்பிடும்பை தானே யுஞ் சாலுங்கரி' (1060.) என்பதுபோலக் கணமேயுங் காத்தலென்ருல் ஏகாரத்தோடு கூடிநின்ற உம்மையாய் அக்கணமும் எனப் பொருள்படுத லரல் அது பாடமன்றென்க. குணம் சாதியொருமை. 'தென்புலத்தார் தெய்வமும்' (43-) அது.

**இராமர்:**- இது ஏது உருவக அலங்காரம்.

**மேற்கோள்பகுதி:**

**நச்:**- குணங்கட்கு இடனுய் பகை நண்பு இல்லான் எனின் பிறர்க் குள்ளது இவர்க்கு இன்று என்று ஆகும். "குணமென்னும் குன்றேறி நின்ருர் வெகுளி" என்றலின். (சீவக. 3:)

**சுவாமி:**—வெகுளி கணமேயும் காத்தல் அரிது என்பதற்குக் கணமாயினும் எனப் பொருள் எழுதி வாளர்போயினர் என மறுப்பர். (இ. கொ. சூ. 86.)

**ஒப்புமைப்பகுதி:**

"கலைவலார் நெஞ்சிற் காமமே போன்றும்
கடவுளர் வெகுளியே போன்றும்
உலைவிலார் நில்லா தொருபக லுள்ளே
உருப்பவிர் வெஞ்சுரங் கடந்தார்." —சீவக. 2107.

"மாயமில் குணக்குன்றன்ன மாதவர்க் கிறைவன்வந்தான்." —யசோதர. 23.

"அடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போல் தானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்," —நாலடி 68.

"பொறுப்பர் என்றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்—வெறுத்தபின்
ஆர்க்கும் அருவி அணிமலை நன்னாட
பேர்க்குதல் யார்க்கும் அரிது." —நாலடி. 161.

''அருந்தவ முனிவரோ டிருந்த குன்று போற் குணத்தான்.''
—கம்ப. பால. வேள்வி. 58.

''அந்த ணாளர் முனியவும் ஆங்கவர்
சிந்தை யாலருள் செய்யவும் தேவருள்
நொந்து ளாரையும் நோவகன் றுரையும்
மைந்த எண்ண வரம்புமுண் டாகுமோ.''
—கம்ப. அயோத். மந்த. 8.

''கோதிலாத குணப்பெருங் குன்றனர்.''
—பெரிய. திருக்கூட் 7.

''வெஞ்சுரம் துறந்த,
மையில் சிந்தையோர் வெருளியின் தணிந்தது.''
—திருவிளை. பாண்டி-சுரக். 64.

*குறிப்பு:-இக்குறட்குப் பரிமேலழகர் நீத்தார்க்குச் சினம் வரின் காத்தல் முடியாது என்பர். மணக்குடவர் சினத்தால் வருந் தீமையைச் சிறிதும் தடுக்கமுடியாது என்பர். பழைய உரையாசிரியர் முதலிய மூவரும் நீத்தார் சினத்தைக் கணப்பொழுதும் தன்கட் காத்தல் அரிது என்பர். இவற்றுள் பின்னவர் உரைகளே நீத்தார் பெருமைக்கு ஏற்புடைத்தாதல் அறிக.*

**30. அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான். [க0)**

**உரைப்பகுதி:**

**பரிமே :**—எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான் - எல்லாவுயிர்கண்மேலும் செவ்விய தண்ணளியைப் பூண்டொழுக லான், அந்தணர் என்போர் அறவோர் - அந்தணரென்று சொல்லப்படு வார் துறவறத்தில் நின்றவர்.

பூணுதல் விரதமாகக் கோடல். அந்தணரென்பது அழகிய தட்பத் தினை யுடையாரென ஏதுப்பெயராகலின், அஃது அவ்வருளுடையார்மே லன்றிச் செல்லாதென்பது கருத்து. அவ்வாறு ஆணையுடையராயினும் உயிர்கண்மாட்டு அருளுடையர் என்பது இதனாற் கூறப்பட்டது.

*__மணக்:__—எல்லா உயிர்க்குஞ் செவ்வியதட்பஞ் செய்தலைமேற்கொண் டொழுகலானே அந்தணர் என்போரும் துறந்தாராகக் கொள்ளப்படுவர் எ — று.*

*மேல் துறந்தவர்களிலும் சிறியார் உளர் என்று கூறினர்: இதனானே துறவாதாரினும் பெரியார் உளரென்று கூறினர்.*இவை எட்டானும் துற வறத்தின் பெருமை கூறப்பட்டது.* 10

---

* இவைமிற்றினும் ' பரிப் ' பாடம்.

**பழைய;-** எல்லாவுயிர்க்கும் அன்புடையராதலால் அந்தணர் என்பது பெயராயிற்று. ஆதலால் அன்புடையார் ஆவதே ஒழுக்கம்.

எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகுதலால் அந்தணர்; ஆதலால் அவரே அறவோர் எனக் கூட்டுக.

**பருதி:-** எ - து எல்லாவுயிர்க்கும் அன்புடையராதலால் அந்தணர் என்னும் பெயராயிற்று. ஆதலால் அந்தணர் என்போர் அறவோர் எ-று.

**காளிங்:--**எ - து உலகத்து அந்தணரென்று சொல்லப்படுவார் யாரெனில் இங்குச் சொன்ன துறவறத்தினையுடையவர்கள் எவ்வகைப் பட்ட உயிர்க்கும் ஒத்திருக்குந் தண்ணளியை மேவிக்கொண்டொழுகுத லான் எ - று.

இனி, மற்றித் துறவறத்திற்குத் துணைக்காரணமாகிய பொது அறத்தினைத் தொகுத்துணர்த்துகின்றது மேலையதிகாரமாகிய அறன்வலி யுறுத்தல்.

## உரைவிளக்கப்பகுதி:

**நுண்:—**செந்தண்மை - செவ்வியதண்ணளி. அந்தணர் - அழகிய தட் பத்தினையுடையார். திருமுருகாற்றுப்படையுள் 'அந்தணர் வேதாந்தத் தையணவினர்' என்றார் நச்சினார்க்கினியர் என்க. அவ்வாறு ஆணையுடை யார் ஆயினும் என்பது 'நிறைமொழிக்குறட்' பொருளைச் சுட்டியது.

**இராமா:-** 'அந்தணர் என்பதில் அம் அழகு; தண் குளிர்ச்சி; அர் பலர்பால்விகுதி. ஆதலால் நீர் முதலியவற்றின் வெறுக்கத்தக்க குளிர்ச் சியை ஒழித்து அழகிய குளிர்ச்சியர் என நின்று கருணைப் பண்புடைய வரை விளக்கும் காரணப்பெயராய் வருதலால் அது எல்லா உயிர்களிடத் திலும் கருணைவைத்தவர் மேலல்லது செல்லாதென்று காண்க;

## ஒப்புமைப்பகுதி:

''அந்தண்மை பூண்ட அறவோர் ஆகமத்துச்
சிந்தைசெய் அந்தணர் —திருமந். 84.
அந்தண்மை பூண்ட அருமறையந்தத்துச்
சிந்தைசெய் யந்தணர் திருமந்—அந்தணரிலக்.
அந்தத்தை யணவுவார் அந்தணர் —கலி. 1 ; உரை.
" —மதுரைக். 474
அந்தணர் காக்கும் அறன் —பரி 1 ; 37.

## 4. அறன் வலியுறுத்தல்

**பரிமே:—** அஃதாவது அம்முனிவரான் உணர்த்தப்பட்ட அம் மூன்றனுள் ஏனைப்பொருளும் இன்பமும் போலாது அறன், இம்மை மறுமை வீடென்னும் மூன்றனையும் பயத்தலான், அவற்றின் வலியுடைத் தென்பது கூறுதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும். "சிறப்புடை மரபிற் பொருளும் மின்பமும், அறத்துவழிப்படூஉந் தோற் றம்போல"* என்றார் பிறரும்.

**மணக் :—** *அறன் வலியுறுத்தலாவது அறம் வலிமையுடைத்து என் பதனை யறிவித்தல். இதனானே அறத்துப்பால் முற்கூறுதற்குக் காரணம் சொன்னாருமாம். இது மேற்கூறிய முனிவராற் கொண்டுய்க்கப் படுதலின் பிற்கூறப்பட்டது.*

**பழைய :—** *தருமத்தின் உறுதியை யுணர்த்தல்.*

**பருதி : –** *அஃதாவது தன்மத்தினுறுதியை யுரைத்தல்.*

**நுண்:—** *அதிகாரமுறைமை வாசகம் பயத்தலால் அவற்றின் வலி யுடைத்தென்பது. அறம் எழுவாய். சுட்டுப்பன்மை - பொருள் இன்பம்.*

**31. சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்
காக்கம் எவனோ உயிர்க்கு. (க)**

**உரைப்பகுதி :**

**பரிமே:—** இ - ள், சிறப்பு ஈனும் - வீடுபேற்றையுந்தரும். செல்வமும் ஈனும் - துறக்கம் முதலிய செல்வத்தையுந்தரும்; உயிர்க்கு அறத்தின் ஊங்கு ஆக்கம் எவன் - ஆதலான் உயிர்கட்கு அறத்தின் மிக்க ஆக்கம் யாது?

எல்லாப்பேற்றினுஞ் சிறந்தமையின், வீடு சிறப்பெனப்பட்டது; ஆக்கந்தருவதனை ஆக்கமென்றார். ஆக்கம் மேன்மேலுயர்தல். ஈண்டு உயிர் என்றது மக்களுயிரை. சிறப்பும் செல்வமும் எய்துதற்குரியது அதுவேயாகலின். $இதனால் அறத்தின் மிக்கவுறுதி இல்லையென்பது கூறப்பட்டது.

---

* புறநா. 31.

$ 'விதியினால் கதிகள் நான்கின் மேவினின் றார்கள் தம்முள்
மதியினாற் பெரிய நீரார் மக்களாய் வந்து தோன்றி
விதியினால் தானம் பூசை மெய்த்தவம் செய்து வீட்டைக்
கதிகளைக் கடந்து செல்வார்'

—மேருமந். 737.

**மணக்:—** முத்தியுந்தரும்; செல்வமுந்தரும்; ஆதலால் அறத்தின் மேல் உயிர்கட்கு ஆக்கமாவது பிறிதில்லை என்றவாறு.

இது பொருளான் ஆக்கமுண்டு என்பாரை மறுத்து அறன் வலியுடையது என்று கூறிற்று.

**பழைய:—** மறுமைக்குச் சிறப்பாகிய முத்தியும், இம்மைக்குச் சிறப்பாகிய செல்வமும் தரும். தருமத்தினும் செல்வத்தினும் தருமமே தெய்வம். 1

**பருதி:—** எ - து மறுமைக்குச் சிறப்பாகிய முத்தியும் இம்மைக்குச் சிறப்பாகிய செல்வமும் தரும் தன்மத்திலுஞ் சிறந்த தெய்வமேதோ? என்றவாறு. 1

**காளிங்:—** எ - து அறமானது இவ்வுலகத்து நுகர்ச்சி யின்பக் காரணமாகிய செல்வத்தையுந் தரும். மற்ற உலகத்து நுகர்ச்சி யின்பக் காரணமாகிய தேவர்பதத்தையுந் தரும். அதனுல் மற்றிவ்வறத்தின் மேலாய் அழியாது நிற்கும் பொருள் யாதோ? இவ் எழுவகைப் பிறவியினுஞ் சிறந்த மானிடராயினுர்க்கு என்றவாறு. 1

## உரைவிளக்கப்பகுதி :

**நுண்:—** ஊங்கு - மிகை.

## மேற்கோள்பகுதி :

**காரிரத்ன:—** பாவிக ஆலங்காரம் (மாற - 251 உரை)

**யா வி. உரை:—** எழுசீரான் நடந்த செப்பல் வெண்பா (சூ. 57)

## ஒப்புமைப்பகுதி :

"அருள் தரும் திறத்து அறனன்றி வலியதுண்டாமோ"
—கம்ப. ஆரணிய. கரன்வதை. 88.

"மூன்றுலகிற்குமாக்கி முடிவிலாத் தன்மை நல்கும்
ஆன்றநல் அறத்தைப் போலும் அரியதொன் றில்லை என்றான்."
—மேருமந். 117.

**32. அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை**
**மறத்தலின் ஊங்கில்லை கேடு*. (உ)**

**உரைப்பகுதி:**

**பரிமே:—** அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை - ஒருவனுக்கு அறஞ்செய்தலின் மேற்பட்ட ஆக்கமுமில்லை; அதனை மறத்தலின் ஊங்கு கேடு இல்லை - அதனை மயக்கத்தான் மறத்தலின் மேற்பட்ட கேடுமில்லை.

அறத்தினூஉங் காக்கமும் இல்லையென மேற்சொல்லியதனையே அனுவதித்தார், அதனாற் கேடுவருதல் கூறுதற் பயனோக்கி. இதனால் அது செய்யாவழிக் கேடுவருதல் கூறப்பட்டது.

**மணக்:—** ஒருவனுக்கு அறஞ்செய்தலின் மேற்பட்ட ஆக்கமும் இல்லை; அதனைச் செய்யாமையின் மேற்பட்டகேடும் இல்லை என்றவாறு.

இஃது அறஞ்செய்யாக்கால் கேடுவரும் என்று கூறிற்று. 8

**பழைய:—** தன்மத்தினும் ஆக்கமும் இல்லை; தன்மத்தை மறப்பது போலேயும் கேடுமில்லை. 3

**பருதி:—** தருமத்தினும் ஆக்கமும் இல்லை; தருமத்தை மறப்பது போலக் கேடும் இல்லை என்றவாறு. 3

**காளிங்:—** எ - து அறமானது இன்பம் பயக்குமாதலால் ஒருவர்க்கு இவ்வறத்தின் மேலாயிருப்பதொருபேறும் இல்லை; மற்றிதனை மறத்தலினை மேலாயிருப்பதொருகேடும் இல்லை என்றவாறு. 9

**உரைவிளக்கப் பகுதி :**

**நுண்:—** அநுவாதம் காண்க. ''நாடென்ப நாடாவளத்தன'' வும் (739) அது. 'இருதிணை மருங்கின் ஐம்பாலறிய' (தொல். சொல். 10) என்னும் சூத்திரத்துள் நச்சினார்க்கினியரும் இவ்வாறு உரைத்தார். அநுவாதமாவது புரோவாதமாக முன்சொன்னவதனையே பின்னுஞ் சொல்லி ஆண்டு எஞ்சி நின்றன சில கூட்டியுரைத்தல். இது கூறியது கூறற்குப் பரிகாரம். இன்னும் வேறு வேறு பெயரிட்டுப் பின்வரு நிலையென்னும் அலங்காரமெனவும், வலியுறுத்தல் எனவும் கூறுப.

---

* 'இல்லையாம் கேடு' கவிராஜ பண்டிதர் பாடம்.

**மேற்கோள்பகுதி :**

*இள:— 'ஊதியங்கருதிய ஒருதிறத்தானும்' - மேற்சொல்லப்பட்ட பொருள்வயிற் பிரிதலின்றி அறத்திறம் காரணமாகப் பிரியும் பிரிவு. இது மறுமைக்கண் பயன்தருதலின் ஊதியமாயிற்று. 'அறத்தின்.......கேடு' என்பதனானும் அறிக (தொல். பொருள். சூ. 44.)*

**ஒப்புமைப்பகுதி :**

''அறத்தினூங் காக்கமில்லை என்பதும் இதனை ஆய்ந்து
மறத்தினூங் கில்லை கேடும் என்பதும் மதித் திவர்தம்
திறத்தினை அறிந்து கொண்மின் தீக்கதிப் பிறவி யஞ்சில்
மறத்தைநீத் தறத்தோ டொன்றி வாழும் நீர் வையத்தீரே''

—மேருமந். 747.

''இளமையும் வனப்பும் நில்லா இன்பமும் நின்ற அல்ல
வளமையும் வலிவு நில்லா வாழ்வுநாள் நின்ற அல்ல
களமகள் நேசம் நில்லா கைப்பொருள் கள்வர் கொள்வார்
அளவிலா அறத்தின் மிக்க தியாதுமற் றில்லை யன்றே''

—நரிவிருத். 14.

## 33. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
## செல்லும்வாய் எல்லாஞ் செயல். (ரு)

**உரைப்பகுதி:—**

**பரிமே:—** ஒல்லும் வகையான் - தத்தமக்கு இயலுந்திறத்தான், அறவினை ஓவாதே செல்லும் வாய் எல்லாம் செயல் - அறமாகிய நல் வினையை ஒழியாதே அஃதெய்துமிடத்தானெல்லாஞ் செய்க.

இயலுந்திறமாவது இல்லறம் பொருளளவிற்கேற்பவும், துறவறம் யாக்கைநிலைக்கேற்பவுஞ் செய்தல். ஓவாமை இடைவிடாமை. எய்து மிடமாவன மனம் வாக்குக் காயமென்பன. அவற்றாற் செய்யும் அறங்க ளாவன முறையே நற்சிந்தையும் நற்சொல்லும் நற்செயலுமென இவை. இதனான் அறஞ்செய்யுமாறு கூறப்பட்டது.

*மணக் :— தம்க்கியலுந்திறத்தானே அறவினையை யொழியாதே, செய்யலாம் இடமெல்லாம் செய்க என்றவாறு.*

*இயலுந்திறமென்பது மன மொழி மெய்களும் பொருளும். செல்லும் வாய் என்பது அறஞ்செய்தற்கிடமாகிய பலவிடங்களும். ஒழியாது*

என்றது நாடோறும் என்றது. இஃது, அறம்வலிது என்றறிந்தவர்கள் இவ்வாறு செய்க என்றது. 2

**பழைய:-** தன்னாலியன்றவளவு மனமாதிகளால் இடைவிடாது தன்மஞ்செய்க. 6

**பருதி:—** எ - து தன்னாலியன்ற மனமாதிகளால் தருமத்தைச் செய்க என்றவாறு. 6

**காளிங்:—** எ - து தனக்கியலுங் கூறுபாட்டால் அறமாகிய வினையினை ஒழியாதே சென்றுதலைப்படுதற்குரிய இடம் எங்குஞ் செய்க என்றவாறு. 2

## மேற்கோள் பகுதி :

**தெய்வச்:—** ஒல் என்பது செயற்படும் என்பது குறித்து நின்றது. (தொல். சொல். 391)

## ஒப்புமைப்பகுதி :

" இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது
பின்றையே நின்றது கூற்றம் என்றெண்ணி
ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையான்
மருவுமின் மாண்டார் அறம் "

—நாலடி. 36.

" ஆற்றுந்துணையால் அறஞ்செய்கை முன்னினிதே " —இனியவை, 7

" ஒன்றும் வகையா லறஞ்செய்க ஊர்ந்துருளின்
குன்று வழியடைப்ப தில் "

—பழமொழி. 303

" யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒருகைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே "

—திருமந். 254

அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்
பெரும்பயனு மாற்றவே கொள்க—கரும்பூர்ந்த
சாறுபோல் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோல் போகுமுடம்பு.

—நாலடி. 34

மூப்பொடு தீப்பிணி முன்னுறீஇப் பின்வந்து
கூற்ற அரசன் குறும்பெறியும்—ஆற்ற
அறவரண மாராய்ந் தடையினஃ தல்லால்
பிறவரண மில்லை யுயிர்க்கு

அறநெறிச். 22

**34. மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்**
**ஆகுல நீர *பிற. (சு)**

**உரைப்பகுதி:**

**பரிமே:**—மனத்துக்கண் மாசு இலன் ஆதல் - அவ்வாற்றான் அறஞ்செய்வான் தன்மனத்தின்கண் குற்றமுடையனல்லனாக, அனைத்து அறன் - அவ்வளவே அறமாவது; பிற ஆகுல நீர - அஃதொழிந்தசொல்லும் வேடமும் அறமெனப்படா ஆரவார நீர்மைய.

குற்றம் தீயன சிந்தித்தல். பிறரறிதல்வேண்டிச் செய்கின்றன வாகலின், ஆகுல நீர என்றார். மனத்து மாசுடையனாயவழி அதன் வழியவாகிய மொழி மெய்களாற் செய்வன பயனிலவென்பதூஉம் பெறப்பட்டது.

**மணக்:**—*ஒருவன் தன் மனத்தின்கண் ஓரழுக்குமிலனாதலே எல்லா அறமுமாம். அதில் அழுக்குண்டாயின் மேற்செய்வனவெல்லாம் ஆரவார நீர்மைய என்றவாறு.*

*பிறர் அறியவேண்டிச் செய்தானும் என்றவாறுமாயிற்று. மேல் நான்கு பொருளைக் கடியவேண்டும் என்றார்; அவை நான்கும், மனம் ஒன்றும் தூயதாகப் போம் என்று அதன்பின் இது கூறினார்.* 10

**பழைய:**— *மனத்திலும் பாவத்தை நினையாதொழிக. அதைப் பற்ற, தருமம் செய்யவேண்டா.*

**பருதி:**—*மனத்திலும் பாவத்தை நினையாதொழிக, அது போதும்; தன்மஞ் செய்யவேண்டாம் என்றவாறு.* 8

**காளிங்:**—*ஒருவன் தனது நெஞ்சத்துக்கண் பாவக்கருத்து இலனா தலே அனைத்தறங்களும். ஒழிந்தன எல்லாந் துக்கத்தன்மை யுடைய என்றவாறு.*

**உரைவிளக்கப்பகுதி:**

**இராமா:**— *மாசிலன் ஆதல் - குற்றம் இல்லாதவனாகிறதாகிய, அனைத்தறன் - அவ்வளவையுடையதே தருமமாவது. இதற்கு ஆதல் என்பதை வியங்கோள் முற்றாக்காது தொழிற்பெயராக்குக. இனி, அதனை வியங்கோள்முற்றாக்கி ஒருவன் மனத்துக்கண் மாசிலனாகுக; அறன்,*

---

* 'நீர்மை பிற' கவிராஜபண்டிதர் பாடம்

அனைத்து; பிற ஆகுல நீர என மூன்று முடிபாக்கினும் அமையும். அதனாற் பெரும்பயன் இல்லாமை உணர்க.

**35. அழுக்கா றவாவெளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்ற தறம் (ரு)**

**உரைப்பகுதி :**

**பரிமே:**—அழுக்காறு - பிறராக்கம் பொறாமையும், அவா - புலன் கண்மேற்செல்கின்ற அவாவும், வெகுளி - அவையேதுவாகப் பிறர்பால் வரும் வெகுளியும், இன்னாச்சொல் - அதுபற்றிவருங் கடுஞ் சொல்லு மாகிய நான்கும், இழுக்கா இயன்றது அறம்-இந்நான்கினையுங் கடிந்து இடையறாது நடந்தது அறமாவது.

இதனான் இவற்றோடு விரவி இயன்றது அறம் எனப்படாது என்பதூஉங்கொள்க. இவை யிரண்டுபாட்டானும் அறத்தினது இயல்பு கூறப்பட்டது.

**மணக் :**— மனக்கோட்டமும், ஆசையும், வெகுளியும், கடுஞ் சொல்லும் என்னும் நான்கினையும் ஒழித்து நடக்குமது யாதொன்று அஃது அறமென்று சொல்லப்படும் என்றவாறு.

பின்னர்ச் செய்யலாகாது என்று கூறுவன எல்லாம் இந் நான்கினுள் அடங்கும் என்று கூறிய அறம் எத்தன்மைத்து என்றற்கு இது கூறப்பட்டது.

**பழைய :** பிறர் செல்வங்கண்டு நோகாமையும், வெகுவாசையும், கோபமும், புறங்கூறுமையும் விட்டதே தருமம்.

**பருதி :** எ - து. பிறர் செல்வங்கண்டு நோகாமையும், வெஃகாமையும், கோபமில்லாமையும், புறங்கூறுமையும் போலத் தன்மமில்லை என்றவாறு.

**காளிங் :**—எ – து. செல்வமும் கல்வியும் முதலான பிறர் ஆக்கம் பொறாமையும், மற்ற நீதியல்லாதவற்றில் ஆசையும், சினமும், பிறரை இகழ்ந்துரைக்கும் உரையும் இவை நான்கையுங் குற்றமாகக் கொள்வானிடத்து அறமானது நடைபெற்றது என்றவாறு.

அல்லதூஉம் இவை நான்கையுங் குற்றமாகக் கொள்ளாது, மேற்கொண்டொழுகுமாயின் மற்றிவனால் செய்யப்பட்டதோர் அறமும் ஐயப்படத்தகும் என்றவாறு.

பாயிரம் நான்கும் முடிந்தது. இனி நீத்தார் பெருமை துறவறப் பகுதிக்குத் தொகுத்துச் சொல்லியதும், இவ்வறன் வலியுறுத்தல் இல்லறப் பகுதிக்குத் தொகுத்துச் சொல்லியதும் ஆனதால் இவை முதலாக எடுத் துரைத்தல் என்கின்ற மரபினால், இதன் பின்னரே வீட்டின்பக் காரண மாகிய துறவறத்திற்குத் துணைக்காரணமாகிய இல்லறமானது மற்றெவ் வகைப்பட்ட அறங்கட்குங் காரணமாதலான், துறவில்லாததனை அறிவிப் பான், மேலையதிகாரம் இல்வாழ்க்கை கூறுகின்றார்.[1]

## ஒப்புமைப்பகுதி:

"அவலம் நீத்தறிந்து அடங்கிய கொள்கை
மெய்வகை யுணர்ந்த விழுமி யோர்" —சிலப்-நாடுகாண் 16.
"பொய் குறளை வெளவல் அழுக்காறு இவைநான்கும்
ஐயந்தீர் காட்சியார் சிந்தியார்," —ஆசாரக். 38.

**36. அன்றறிவாம்[2] என்னது அறஞ்செய்க மற்றது**
**பொன்றுங்கால் பொன்றாத் துணை. (சு)**

## உரைப்பகுதி:

**பரிமே :—** அன்று அறிவாம் என்னது அறம் செய்க - யாம் இது பொழுது இளையமாகலின் இறக்குஞான்று செய்தும் எனக்கருதாது அறத்தினை நாடோறுஞ் செய்க. அது பொன்றுங்கால் பொன்றாத் துணை- அவ்வாறு செய்த அறம் இவ்வுடம்பினின்றும் உயிர்போங்காலத்து அதற்கு அழிவில்லாத துணையாம்.

மற்று என்பது அசைநிலை. பொன்றாத் துணை என்றார், செய்த உடம்பு அழியவும் உயிரோடு ஒன்றி ஏனைய உடம்பினும் சேறலின். இதனான் இவ்வியல் பிற்றாய அறத்தினை நிலையாத யாக்கை நிலையின பொழுதே செய்க என்பது கூறப்பட்டது.

**மணக் :—** பின்பே அறிந்து செய்வோம் என்னாது முன்பே அறத் தைச் செய்க. அது சாங்காலத்திலும் சாகாதே நின்று பிறக்குமிடத்திற்குத் துணையாம் என்றவாறு

1 இக்குறளைப் பத்தாவதாகக் கொண்டமையின் இங்ஙனம், வருகின்ற அதிகாரத்துக்குத் தோற்றுவாய் செய்தார்.

2 'அன்றறிவோம்' எனப்பாடங்கொண்டனர் கவிராஜபண்டிதரும், எல்லிஸ் (Ellis) துரையும்.

இஃது அறஞ்செய்யுங்கால் விரைந்து செய்யவேண்டும் என்பதும், அது மறுமைக்குத் துணையாம் என்பதும் கூறிற்று. 3

பழைய :....நாம் வறியாரென்றும், தனமில்லையென்றும் விசாரித்துச் செல்வமுண்டானபோது அறஞ்செய்வோம் என்னாமல், நினைத்தபோதே தருமஞ்செய்க. அது மரணந்தகாலத்துப் பெருந்துணையாம். 2

பருதி :...எ - து நாம் வறியார் என்றும் தன்மம் இல்லை என்றும் விசாரித்துச் செல்வமுண்டானபோது அறஞ்செய்வோமென்னாமல் நினைத்த போதே தருமஞ்செய்க; அது மரணந்தகாலத்துக்குப் பெருந்துணையாம் என்றவாறு. 2

காளிங் :... எ - து அறஞ்செய்கைக்கு அறிவல்லது என்றும் அறிவாவதென்றுங் காலத்தைக்கழியாதே கடிதாக அறத்தினைச் செய்துகொள்க அதுவே அழியாததுணை என்றவாறு, 7

## ஒப்புமைப்பகுதி :

" நாளைச்செய்குவம் அறம் எனில் இன்றே
கேள்வி நல்உயிர் நீங்கினும் நீங்கும்
இதுவென வரைந்து வாழ்நாள் உணர்ந்தோர்
முதுநீர் உலகின் முழுவதும் இல்லை."
—சிலப்

" மற்றறிவாம் நல்வினை யாம் இளையம் என்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவாது அறஞ்செய்மின்
முற்றி இருந்த கனியொழியத் தீவளியால்
நற்காய் உதிர்தலும் உண்டு."
—நாலடி. 19.

"வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர்."
—நாலடி. 35.

"தாம்செய் வினையல்லால் தம்மொடு செல்வதுமற்
றியாங்கணும் தேறில் பிறிதில்லை ஆங்குத்தாம்
போற்றிப் புனைந்த உடம்பும் பயமின்றே
கூற்றம் கொண்டோடும் போது."
—நாலடி. 120.

"வேற்றுவ ரில்லா நுமருக்கே செல்லினும் வெகுண்டீர் போல
ஆற்றுணக் கொள்ளா தடிபுறத்து வைப்பீரே யல்லீர் போலும்
கூற்றங்கொண்டோடத்தனியே கொடுநெறிக்கண்செல்லும் போழ்தைக்(கு)
ஆற்றுணக் கொள்ளீ ரழகலால் அறிவொன்று மிலிரே போலும். —சீவக. 1550

"பேரஞர் இடும்பை யெல்லாம் பிளந்திடும் பிறப்பு நீக்கும்
ஆரமிர் தரிதிற்பெற்ரும் அதன்பயன் கோடல் தேற்ரும்
ஒருமைம் பொறியு மோம்பி உளபகல் கழிந்த பின்றைக்
கூடரெரி கவரும் போழ்தில் கூடுமோ குறித்த எல்லாம்." ...சிவக. 377.

"உம்பர்த முலகி னுய்க்கும் உலகினுக் கிறைமை யாக்கும்
வெம்பிய பிறப்பின் வாங்கி விட்டின்கண் வைக்கும் மெய்யே
நம்பிநல் லறத்தைப் போலும் துணையில்லை நமக்கு நாடின்" —மேருமந். 968

## 37. அறத்தா றிதுஎன வேண்டா சிவிகை
## பொறுத்தானோ டூர்ந்தான் இடை. (எ)

**உரைப்பகுதி:**

**பரிமே:**—அறத்து ஆறு இது என வேண்டா - அறத்தின் பயன் இது என்று யாம் ஆகம அளவையான் உணர்த்தல் வேண்டா, சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை - சிவிகையைக்காவுவானோடு செலுத்துவானிடைக் காட்சியளவைதன்னனே உணரப்படும்.

பயனை ஆறென்ருர், பின்னதாகலின், 'என' என்னுமெச்சத்தாற் சொல்லாகிய ஆகமவளவையும், பொறுத்தானோடு ஊர்ந்தானிடை யென்றதனுற் காட்சியளவையும் பெற்ரும். உணரப்படுமென்பது சொல்லெச்சம். இதனுற் பொன்ருத்துணையாதல் தெளிவிக்கப்பட்டது.

**மணக்:**—*நீங்கள் அறநெறி இத்தன்மைத்து என்று அறியவேண்டா, சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடைக் காணலாம் எ - று.*

*இதுபொன்றினுலும் துணையாகுமோ என்ருர்க்குத் துணையாயினவாறு காட்டிற்று.* 4

**பழைய:**—*தருமஞ்செய்த பேரையும் பாவஞ்செய்த பேரையும் விசாரிக்கில், தண்டிகைப் *பிறங்குவோனுமாய், [1]பாரகனுமாய்க் கண்டு கொள்க.* 10

**பருதி:**- *எ - து தருமஞ்செய்வாரையும் பாவஞ்செய்வாரையும் விசாரிக்கவேண்டில் அத்தண்டிகைப் [2]பத்தனையும் சுமப்பார்களையும் கண்டு கொள்க என்றவாறு.* 10

1 பிறங்குவோன் - விளங்குவோன், பாரகன் - தாங்குபவன்.

2 பத்தன் - தலைவன்.

**காளிங்:-** எ - து உலகத்து அறத்தின்நெறி இத்தன்மைத்து என்று உமக்கு யாம் எடுத்துரைக்க வேண்டுவதில்லை; சிவிகையைச்சுமந்தவனோடு மற்று அதன்மேல் ஏறியிருக்கின்றவனுமே சான்று என்றவாறு. 5

## உரைவிளக்கப் பகுதி :

**நுண்:-** எனவெனெச்சம் வினைஎச்ச வாய்பாடாய் முடிவது இனி எனவென்னும் எண்ணிடைச்சொல் பெயரெச்சவாய்பாடாய் முடியும்; அஃது 'அழுக்காறெனவொருபாவி' (168) 'நாளென வொன்றுபோற் காட்டி' (334) என்பன முதலாயின. உணரப்படும் என்பது சொல்லெச்சம். அது 'பிறவிப் பெருங்கடலுள்' (10.) மறுதலைப் பொருளின்கண் நின்றதுபோல ஈண்டுநில்லாமை காண்க.

**இராமா:-** ஆற்றின் பயனை ஆறு என்றது ஆகுபெயர்.

## மேற்கோள்பகுதி:

**சுவாமி:-** 'சிவிகை பொறுத்தான்' வருமொழி நோக்காமலே தனக்குரிய ஒருமைப்பாலை விட்டுப் பன்மைப்பாலையே விளக்குதலால் உயர்திணைச் சாதி ஒருமையாயிற்று. இவ்விதியை மறந்து 'சிவிகைபொறுத்தார்' எனத் திருத்தினரும் உளர். (இ. கொ. சூ. 130.)

**யா. வி. உரை:-** எழுசீரான் வந்த செப்பல் வெண்பா. (சூ. 92.)

**குணசா:-** வெண்பா இரண்டடிச் சிறுமையாக வந்தது. (யா.கா.57,)

'பொறுத்தான்' என்பது இல்வாழ்வா னென்பான் என்புழிப்போல'' ''மெய்நிலை மயக்கின் ஆகுநவும்'' (தொல். சொல். எச்ச. 53) என்பதால் முடிவுபெறுவதைப் பொறுத்தார் எனத் திருத்துவர் மறைஞான சம்பந்தர். வெள்ளி. முத்தி. பேருரை பக் 47.

## ஒப்புமைப்பகுதி:

''முற்பெரிய நல்வினை முட்டின்றிச் செய்யாதார்
பிற்பெரிய செல்வம் பெறுபவோ—வைப்போடு
இகலிப் பொருள்செய்ய எண்ணியக்கால் என்னும்
முதலிலார்க் கூதிய மில்.''

—பழமொழி. 312.

**38. வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்**
**வாழ்நாள் வழியடைக்குங் கல்.** (அ)

**உரைப்பகுதி :**

**பரிமே:**—வீழ்நாள் படாமை நன்று ஆற்றின் - செய்யாது கழியும் நாளுளவாகாமல் ஒருவன் அறத்தைச் செய்யுமாயின், அஃது ஒருவன் வாழ்நாள் வழி அடைக்கும் கல் - அச்செயல் அவன் யாக்கையோடு கூடுநாள் வரும் வழியை வாராமலடைக்குங் கல்லாம்.

ஐவகைக் குற்றத்தான்வரும் இருவகை வினையும் உள்ள துணையும் உயிர் யாக்கையோடுங் கூடிநின்று அவ்வினைகளது இருவகைப் பயனையும் நுகருமாகலான், அந்நாள்முழுவதும் வாழ்நாளெனப்பட்டது. குற்றங்கள் ஐந்தாவன: அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பென்பன. இவற்றை வடநூலார் பஞ்சக்கிலேசமென்பர். வினை இரண்டாவன: நல்வினை தீவினை என்பன. பயனிரண்டாவன: இன்பம் துன்பம் என்பன, இதனான் அறம் வீடுபயக்கும் என்பது கூறப்பட்டது.

**மணக்.:** *ஒருவன் ஒருநாள் இடைவிடாமல் நன்மையைச் செய்வானாயின் அச்செயல் அவனது பிறப்பும் இறப்புமாகிய நாள் வருகின்ற வழியை அடைப்பதொரு கல்லாம் என்றவாறு.*

*இது வீடுதரும் என்றது.* 6

**பழைய:**—* .... ... .... 5

**பருதி:**—*எ - து அவமே நாட்போகாமல் தன்மமேசெய்க அது இனிமேற் செனனமில்லாமல் செனனவழியை அடைக்குங்கல் என்றவாறு.* 5

**காளிங்:**—*எ - து ஒருவன் நாள் இடைப்படாமே நல்வினையாகிய அறத்தினைச் செய்யின் பிறகு அங்ஙனஞ்செய்கின்ற வினையீர்ந்த பெரியோனுடைய வாழ்நாளது வழியினை அடைக்குங்கல் என்றவாறு.*

*அதன்கருத்து என்றும் தான் செய்துவருகின்ற இல்லறமானது ஒருநாளாயினும் விழுநாள்படாமே செய்து வருமாயின் அம்மிகுதியான் பெரியோனுடைய வாழ்நாளினது போவதுவருவதாகிய வழியினையடைக்குங் கல்லாம் என்றவாறு* 8

---

* இப்பகுதி சிதைந்துள்ளது.

**உரைவிளக்கப்பகுதி :**

**நுண்:**—ஐவகைக் குற்றத்திற்கு விவரம்; அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு. இவற்றை வடநூலார் கிலேசம் என்ப. இவற்றின்விரிவு 'காமம் வெகுளி' (360.) என்பதன் உரையிற் காண்க.

**மேற்கோள் பகுதி :**

பெருந்:—*உய்த்துணர வைத்தல் (வீரசோ. 180. உரை.)*

**அரும்பத:**—*"உளநாள் வரையாது ஒல்லுவது ஒழியாது" உள்ள நாள் - 'வீழ்நாள் படாமை' இயலுமதனைக் கைவிடாது."*

*(சிலப். வரந்தரு. 200.)*

**39. அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்**
**புறத்த புகழும் இல.** (௯)

**உரைப்பகுதி:**

**பரிமே :**—அறத்தான் வருவதே இன்பம் - இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பமாவது; மற்ற எல்லாம் புறத்த-அதனோடு பொருந்தாது வருவன வெல்லாம் இன்பமாயினுந் துன்பத்தினிடத்த, புகழும் இல - அதுவேயுமன்றிப் புகழும் உடையவல்ல.

ஆனுருபு ஈண்டுடனிகழ்ச்சிக்கண் வந்தது, "தூங்கு கையானோங்கு நடைய"* என்புழிப்போல. இன்பம் காமநுகர்ச்சி; அஃதாமாறு காமத்துப் பாலின் முதற்கட் சொல்லுதும். - இன்பத்திற் புறம் எனவே துன்பமாயிற்று. பாவத்தான்வரும் பிறனில்விழைவு முதலாயின அக்கணத்துள் இன்பமாய்த் தோன்றுமாயினும் பின் துன்பமாய் விளைதலின், புறத்த என்றார். அறத்தோடு வாராதன புகழும் இலவெனவே, வருவது புகழுமுடைத்தென்பது பெற்றாம். இதனான் அறஞ்செய்வாரே இம்மையின்பமும் புகழும் எய்துவர் என்பது கூறப்பட்டது.

**மணக் :**— *அறத்தால் வருவது யாதொன்று, அதுவே இன்பமும் புகழுமாம்; அதனலன்றி வருவனவெல்லாம் துன்பமாம்; புகழுமிலவாம் என்றவாறு.*

*இஃது, எல்லாப் போகநுகர்ச்சியும் இதனானே வரும் என்றது.* (5)

**பழைய:**— *தருமத்தினாலே வந்த இன்பமே இன்பம். அல்லன சாரமில; கீர்த்தியும் இல்லாதன.* (7)

---

* புறநா. 22.

பருதி:— எ - து தன்மத்திறுலே வந்த இன்பமே இன்பம். அஃது அன்றியிலே தன்னிடத்திலுண்டான எல்லாம் பொறையுங்*கீர்த்தியும் இல்லை என்றவாறு. (7)

காளிங்:— எ - து இம்மைக்காயினும் மறுமைக்காயினும் இல்லறத்தினுல் விளைவதே சிறந்த இன்பமாவது. ஒழிந்தன எல்லாம் அவ் இன்பத்தின் புறத்தன; புகழும் இல்லாதன என்றவாறு. (6)

## உரைவிளக்கப்பகுதி:

நுண்: - மற்று, அதனெடு பொருந்தாது வருவன என்று, அறத்தான் வருமின்பத்திற்கு மறுதலைப் பொருளுரைத்தார். 'ஆனுருபு' 'நெய்யா லெரிநுதுப்பேம்' (1148.) என்பது போலக் கருவிக்கண்வாராது அறத்தோடு பொருந்த வருவதே இன்பமென ஒடுவென்னும் வாய்பாட்டான் உடனிகழ்ச்சிக்கண் வந்தது. இன்பம் - இம்மையின்பம் 'பெண்டகையாற் பேரமர்க்கட்டு' (1083.) 'தாங்குகையா னேங்கு நடைய' என்பனவும் அவ்வாறும். 'சிறப்பொடு பூசனை செல்லாது' (18.) என்பதனுள்ளும் செல்லாதென்னும் ஒருமைவினைக்கேற்பச் சிறப்பொடு கூடிய பூசனையெனக்கூடியவென்னும் ஒரு சொல்லைப் பெய்து, சிறப்பையடையாக்கிப் பூசனையை எழுவாயாக்கினர். ஆசிரியனெடு மாணக்கன் வந்தான், நாயொடு நம்பி வந்தான் என்பனவற்றிற்கும் இவ்வாறே பொருள் கொள்க. சிறப்பொடு வந்த பூசனை, ஆசிரியனெடு வந்த மாணக்கன் என வந்தால் உடனிகழ்ச்சி என்னும் ஒருவினை யொடுச்சொல்லேயாம். 'பாலொடு தேன் கலந்தற்றே' (1121 ) என்பது எண்ணெடுவிராய அரிசிபோலச் செயப்பாட்டு வினையைச் செய்தது போலக் கூறியது. 1 அதனெடு மயங்கல் அதனை அதனுட் காண்க. 2 'மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு தானஞ்செய்வாரிற்றலை' என்பன தவத்தின் மேலும், தானத்தின் மேலும், மனத்தின்மேலும், வாய்மையின்மேலும் வினையில்லாது, செய்வான் வினையாய் நின்றது. 'சூலொடு கழுதை பாரஞ்சுமந்தது' அது. இனிப் 'பகுதியாற் பாற்பட்டு' என்பது (111.) 'ஊராஞேர் தேவகுலம் என்பது போலத் தொறுப்பொருட்டாயும், 'இன்சொலால் ஈரம் அளைஇ' (91.) என்பது போல அசைப் பொருட்டாயும் வரும் இனி 'வேலொடு நின்ருன்' (552.) என்பது, கொண்டு என்னும் பொருட்டாய் வந்தது. 'ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்' ஒடு ஆலானது. இனி 'விழித்தகண் வேல் கொண்டெறிய' (775.) என்பது வேலாலெறிய எனப் பொருள்படும். 'தொடியொடு தோணெகிழ' என்பது 'மலையொடு பொருதமால் யானை' என்பது போல வேறு வினைக்கண் வந்தது. 'தூய்மை' (688) என்பதனுள், இம் மூன்றின் வாய்மை - இம்மூன்ருேடு கூடிய வாய்மை என இன் ஒடுவின் பொருட்கண் வந்தது. 'அழிவந்த செய்யினும்' (807.) என்

1 தொல் - சொல்- 75, 2 குறள், 295,

* புறத்த என்பதற்குப் பொறையென்கின்ருர், பொறுத்த எனப் பாடங் கொண்டனரோ? பொருந்துவன கொள்க'

பதனுள் 'அன்பின் வழி வந்த கேண்மையும்' அது. அறம் பொருள் இன்பம் என இன்பம் தனியே ஒன்றுதலால் இதற்கு அது கருவியன்று.

இராமா:— மற்று என்னும் இடைச்சொல் அசைநிலையாக நின்றது.

## ஒப்புமைப் பகுதி:

''உருவமும் அழகுநல் ஒளியுங் கீர்த்தியும்
செருஇடை வெல்வலத் திறலும் சிந்தைசெய்
பொருளவை வருதலும் போகமும் நல்ல
திருவுடை யறத்தது செய்கை என்றனன்.'' —மேருமந்- 447.

குறிப்பு: அறன் வலியுறுத்தல் பொது வகையான் அறத்தின் இன்றியமையாமையை வற்புறுத்துவதாகலின் அடுத்து வரும் இயைபு பற்றி இல்லறம் எனமட்டும் பொருள் கொள்ளுதல் இருவகை யறத்திற்கும் பொது வாகிய பாயிரத்திற்கு ஏலாமையறிக.

**40. செயற்பால தோரும் அறனே ஒருவற்கு**
**உயற்பால தோரும் பழி.**

## உரைப்பகுதி:

**பரிமே:—** ஒருவற்குச் செயற்பாலது அறனே - ஒருவனுக்குச் செய்தற்பான்மையது நல்வினையே, உயற்பாலது பழியே - ஒழிதற் பான்மையது தீவினையே.

ஒரும் என்பன இரண்டும் அசைநிலை. தேற்றேகாரம் பின்னுங் கூட்டப்பட்டது. பழிக்கப்படுவதனைப் பழியென்றார். இதனாற் செய்வதும் ஒழிவதும் நியமிக்கப்பட்டன.

**மணக்:—** ஒருவனுக்குச் செய்யும் பகுதியது அறமே; தப்புட் பகுதியது பழியே என்றவாறு.

மேல் அறஞ்செய்யப் பிறப்பறுமென்றார். அதனோடு பாவமுஞ் செய்யின் அறாது என்றற்கு இது கூறினார். (7)

**பழைய:—** மனம் வாக்குக் காயங்களாற் செய்வதெல்லாம் அறமே செய்யாது விடுவதாகில் பாவத்தை விடுவது. (4)

**பருதி:—** எ - து மனம் வாக்குக் காயங்களாலே செய்வதெல்லாந் தருமமே செய்க. விடுவதாகில் பாவத்தை விடுவது என்றவாறு. (4)

**காளிங்:—** எ - து ஈண்டுக் குறிக்கொண்டு செய்யத்தகுவதாகப் பெரியோர் கருதுகின்றது அறமானதொன்றுமே. தமக்கு நன்மையறிவை ஒருவர்க்குப் பிறவித்துயரினின்றும் உய்யலாம். அதனால் மிகவும் ஆராய்ந்து காண்மின் பாவமாகிய பழியினை என்றவாறு. (3)

# இல்லறவியல்

**மணக் :—** இல்லறமாவது இல்லின்கண் இருந்து தானம் முதலாயின செய்தல். அதுகூறிய அதிகாரம் இருபதினும், இல்வாழ்வான் வாழுந் திறம் ஓரதிகாரத்தானும், அதற்குத் துணையான மனைவியிலக்கணம் ஓரதிகாரத்தானுங் கூறி, அதன்பின் இல்லறப்பகுதியான பிரமசரியம் காருகத்தம் என்னும் இரண்டினுள்ளும், பிரமசரியத்திற்கு ஆதாரமாகிய புதல்வரைப் பெறுதல் ஓரதிகாரத்தாற் கூறிக் காருகத்த இலக்கணங் கூறுவார் நல்கூர்ந்தார், நல்குரவினீங்கினர், செல்வர், வள்ளியோர் என்னும் நால்வரினும் அன்புடைமை முதலாக ஒழுக்கமுடைமை யீறாக நல்கூர்ந்தாராற் செய்யப்படுவன ஏழும், பிறனில்விழையாமை முதலாகத் தீவினையச்சமீறாக இவராற் றவிரப்படுவன ஏழும், பதினன்கு அதிகாரத்தாற்கூறி, இவற்றோடுங்கூட ஒப்புரவறிதல் நல்குரவினீங்கினராற் செய்யப்படும் என்றுகூறி, இவற்றோடுங்கூட ஈதல் செல்வராற் செய்யப்படுமாறு கூறி இவற்றோடுங் கூடப் புகழ் வள்ளியோராற் செய்யப்படுமென்று கூறினராகக்கொள்ளப்படும். இவ்வறம் முற்படக் கூறியது ; துறவறத்தினின்றாரையும் ஓம்புதல் இல்வாழ்வான் கண்ணது ஆதலான்.

## 5. இல்வாழ்க்கை

**பரிமே :—** அஃதாவது இல்லாளோடு கூடிவாழ்தலினது சிறப்பு. இல்நிலை அறஞ்செய்தற்குரிய இருவகைநிலையுள் முதலாதலின், இஃது அறன் வலியுறுத்தலின்பின் வைக்கப்பட்டது,

**மணக் :—** இல்வாழ்க்கையாவது இல்லின்கண்ணிருந்து வாழ்வார் வாழுந்திறன் கூறுதல். மேல் அறஞ்செய்க என்றார் ; இதுமுதலாக அறஞ் செய்யுமாறு கூறுகின்றாராதலின் இது பிற்கூறப்பட்டது.

**பழைய :—** இல்வாழ்க்கையாவது கிருகத்தனுக்கு முதல் இல் வாழ்க்கை வேண்டுமாதலால் அவ்வாழ்க்கையைச் சொல்லியது.

**பருதி :—** இல்வாழ்க்கையாவது இல்வாழ்க்கையைச் சொல்லுவது.

**41. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை. (க)**

**உரைப்பகுதி:**

**பரிமே :—** இல்வாழ்வான் என்பான் - இல்லறத்தோடு கூடி வாழ்வானென்று சொல்லப்படுவான், இயல்பு உடைய மூவர்க்கும்

நல்லாற்றின் நின்ற துணை - அறவியல்பினையுடைய ஏனை மூவர்க்கும் அவர் செல்லும் நல்லொழுக்க நெறிக்கண் நிலைபெற்ற துணையும்,

இல் என்பது ஆகுபெயர் என்பானெனச் செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது. ஏனை மூவராவார் ஆசாரியனிடத்தி னின்று ஓதுதலும் விரதங்காத்தலுமாகிய பிரமசரிய ஒழுக்கத்தானும், இல்லைவிட்டு வனத்தின்கண் தீயொடுசென்று மனையாள்வழிபடத் தவஞ் செய்யுமொழுக்கத்தானும், முற்றத்துறந்த யோகவொழுக்கத்தானும் என இவர்; இவருள் முன்னை இருவரையும் பிறர்மதமேற்கொண்டு கூறினர். இவர் இவ்வொழுக்கநெறிகளை முடியச்செல்லுமளவும் அச் செலவிற்குப் பசி நோய் குளிர் முதலியவற்றான் இடையூறு வாராமல் உண்டியும் மருந்தும் உறையுளும் முதலிய உதவி அவ்வவ் நெறிகளின் வழுவாமற்செலுத்துதலான், நல்லாற்றின் நின்றதுணை என்றார்.

**மணக் :—** *இல்வாழ்வான் என்று சொல்லப்படுபவன் இயல்புடைய மூவர்க்கும் நல்லவழியின் கண்ணே நின்றதொரு துணை எ - று.*

*என்றது தானமாகிய இல்லறஞ்செய்யுமவன், தவத்தின் பாற்பட்ட விரதங்கொண்டொழுகாநின்ற பிரமசாரிக்கும், தவமேற்கொண்டொழுகா நின்றவானப்பிரத்தன் சந்நியாசிகளுக்கும். தத்தம் நிலைகுலையாமல் உணவு முதலாயின கொடுத்துப் பாதுகாத்தலின் அவர்க்கு நல்லுலகின்கண் செல்லுநெறியிலே நின்றதொரு துணை என்று கூறியவாறாயிற்று. துணை என்றது இடையூறுவாராமல் உய்த்துவிடுவாரை.*

**பழைய :—** *இல்வாழ்வான், பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி இம்மூவர்க்கும் கிருகஸ்தன் துணையாம்.*

**பருதி :—** *எ - து இயல்புடைய மூவராய பிரமசாரி, வானப் பிரஸ்தன், சந்நியாசி என்கிற மூவர்க்குந் துணையாம் எ - று.*

**காளிங் :—** *எ - து மறைகளாலும், மற்றுள்ள நூல்களாலும் இல் வாழ்வான் என்று சொல்லப்படும் மரபினையுடையான் அவனே பிரமசரியம் வானப்பிரஸ்தம் சந்யாசம் என்கின்ற மரபினையுடைய மூவர்க்கு வழிப் பாட்டின் தன்னிலைநின்ற துணை எ - று.*

**உரைவிளக்கப்பகுதி:**

**நுண் :—** *என்பான் - எனப்படுவான். கறிபொரித்தது, சோறட் டதுபோல 'செயப்படுபொருளைச் செய்ததுபோல' (தொல். சொல். 248.) என்னும் சூத்திரவிதிபெற்றது. முன்னர் 'பேணியார்ப் பெட்பச் செயின்*

(1257.) என்பதும் 'மாற்றேனெனவந்த காலனை' (150.) என்னுங் கோவை யாரும் அது. . இல் - ஆகுபெயர்.

**இராமா :—** இல்லினிடத்திலே செய்யப்பட்ட தருமத்தை இல் என்றது ஆகுபெயர். வாழ்வானெனப்படுவான் என்பதில் வாழ்வான் என்பதற்கு வாழ்வானென்பான் எனக் கருத்தாவைப்போல் சொல்லப் பட்டது. "செயப்படுபொருளைச் செய்ததுபோலத் தொழிற்படக்கிளத் தலும்" (தொல் - சொல். 248.) என்னும் சூத்திரம் நோக்கிக்காண்க. -

**மேற்கோள்பகுதி:**

**நச் :—** 'இல்வாழ்வான் என்பான்' ஒருமைப்பொருள் கூறிற்றே னும், பன்மைப் பொருளை உணர்த்தலின் மெய்ந்நிலைமயக்கமாயிற்று. மெய் - பொருள். (தொல் - சொல் 449.)

**சிவஞான :—** எனப்படுவான் எனற்பாலது இல்வாழ்வான் என் பான் என்புழிப் படுவிகுதி தொக்குநின்றது. இங்ஙனம் வருவனவற்றை வடநூலார் 'அந்தர்பாவிதணிச்' என்பார். (பாயிரவிருத்தி. பக். 10)

**அடியார்க்கு :—** அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும் - அற மாவது இருவகைத்து; இல்லறமும் துறவறமும் என. அவற்றுள் இல்லறம் என்பது கற்புடை மனைவியோடு இல்லின் கண் இருந்து செய்யும் அறம்.

அதன் துறையாவன தன்னை ஒழிந்த மூவர்க்கும் துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் தேவர்க்கும் முனிவர்க்கும் விருந்தினர்க் கும் சுற்றத்தார்க்கும் பிறர்க்கும் துணையாதலும், வேள்விசெய்தலும், சீலங் காத்தல் முதலியனவும், அருளும் அன்பும் உடையனாதலும், பிறவும். (சிலப். ஊர்காண். 11.)

**சுவாமி :—** 'இல்வாழ்வான் என்பான்' படுசொல்அற்றுப் படு பொருள் ஆயிற்று (இ. கொ. சூ. 78.)

வினைமுற்றுப்பெயர் விரிக்குங்கால் செயப்படுபொருளில் வந்த தற்கும், உருபும் படுசொல்லும் தொக்கு வினைமுற்றுப்பெயர் செயப்படு பொருளில் வந்ததற்கும் 'இல்வாழ்வான்' என்பது மேற்கோள் (ஷை சூ.83.)

வருமொழி' நோக்காமலே தனக்குரிய ஒருமைப்பாலைவிட்டுப் பன்மைப்பாலையே விளக்குதலால் என்பான் என்பது 'உயர்திணைச் சாதி ஒருமை' (ஷை சூ. 130.)

காரிரத்ன :— பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள் (மாற, 251, உரை)

வெள்ளி :— "மெய்ந்நிலை மயக்கின் ஆகுநவும்" என்பதனுல் பலர் பாலைக்காட்டும் (முத்தி - பக் 47)

**ஒப்புமைப்பகுதி :**

" துறவினர் ஈசனேசத் தொண்டினர் பசிக்கு நல்ஷனை
திறவினைப் பிணிக்குத் தீர்க்கு மருந்து உடல் பனிப்புக்கு ஆடை
உறைவிடம் பிறிது நல்கி அவரவ ரொழுகிச் செய்யும்
அறவினை இடுக்கண் நீக்கி அருங்கதி உய்க்க வல்லார்."

—திருவிளை. திருநாட்டு. 30

**42. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.*** (உ)

**உரைப்பகுதி :**

பரிமே : — துறந்தார்க்கும் - களைகணுனவரால் துறக்கப்பட்டார்க்கும், துவ்வாதவர்க்கும் - நல்கூர்ந்தார்க்கும், இறந்தார்க்கும் - ஒருவரும் இன்றித் தன்பால்வந்திறந்தார்க்கும், இல்வாழ்வான் என்பான் துணை - இல்வாழ்வான் என்று சொல்லப்படுவான் துணை.

துறந்தார்க்குப் பாவமொழிய அவர் களைகணய் நின்று வேண்டுவன செய்தலானும், துவ்வாதவர்க்கு உணவு முதலிய கொடுத்தலானும், இறந்தார்க்கு நீர்க்கடன் முதலிய செய்து நல்லுலகின்கட் செலுத்தலானும் துணை என்ருர். இவை இரண்டுபாட்டானும் இல் நிலை எல்லா உபகாரத்திற்கும் உரித்தாதல் கூறப்பட்டது.

மணக் :— வருணத்திணையும் நாமத்திணையும் துறந்தார்க்கும், துறவாது நல்குரவாளராய் உண்ணப்பெறுதார்க்கும், பிறராய்வந்து செத்தார்க்கும், இல்வாழ்வான் என்று சொல்லப்படுபவன் துணையாவான் எ - று.

மேற்கூறிய மூவரும் வருணச்சிரமங்களைத் துறவாமையால் ஈண்டுத் துறந்தாரென்று வேறு கூறினர். செத்தார்க்கு இவன்செய்ய வேண்டியன புறங்காட்டுய்த்தல் முதலாயின. இது மேற்கூறியவர்க்கேயன்றி இவர்க்குந் துணையென்று கூறிற்று.

**பரிப் :—** முற்குறளில் இயல்புடைய மூவரில், ஒருவரான துறந்தார் வைதிக முனிவர். ஈண்டுக் கூறியது ஏனைய இருடிகளை

**பழைய :—** மண் பெண் பொன் இந்த மூவகையாசையைத் துறந் தார்க்கும், போன சென்மத்திலே தருமஞ்செய்யாமல் தேகி என்பார்க்கும், இறந்தார்க்கும் இந்த மூவர்க்கும் இல்வாழ்வான் துணையாம். 2

**பருதி :—** எ - து மண், பொன், பெண் இந்த மூன்றுவகை ஆசை யைத் துறந்தார்க்கும், போனசென்மத்தில் தன்மஞ்செய்யாமல் தேகி என்பார்க்கும், இறந்தார்க்கும் இந்த மூவர்க்கும் கிருகஸ்தன் துணையாம் எ - று.

**காளிங் :—** எ - து முன்சொன்னவர்களை யன்றி ஒருதியம் அற்ற தால் உடன் துறந்தார்க்கும், கடவுளைப்பற்றி நாணினைத் துறந்தார்க்கும்' குடிப்பிறந்தாரால் ஓரோர் காரணத்தினால்வெகுண்டு துறக்கப்பட்டார்க் கும், முற்பிறப்பின்கண் ஏற்றவற்கு ஈயாது இறந்த வறியோர்க்கும், கல்வி யினால் மிக்கோர்க்கும், அநாதராயிறந்தார்க்கும் மற்று இல்வாழ்வான் என்று சொல்லப்படுவானே துணையாவான் எ - று.

மற்றும் இறந்தாராவார் இவ்வுலகத்தின்கண் வறுமையைக்கடந்து மிக்க செல்வத்தையுடையார். இவர்க்குந் துணையென்றுமாம். 4

## உரைவிளக்கப்பகுதி :

**நுண் :—** துவ்வாதவர் - வறியார். 'துன்புறூஉந் துவ்வாமையும் (94.) அது. துணை யென்னும் அஃறிணைச்சொல் 'என்பான் துணை' (41.) அவன் கண்ணதே. நின்றுணை ' எனவும், 'மறத்திற்கு ம..தேதுணை' (76.) எனவும் இருதிணைக் கண்ணுநின்று மேல் ஆக்கம்கொடுத்து ஆவன், ஆவள், ஆவர், ஆம் என உரைபெற்றதுகாண்க. இனித் தலையென்பதும் கடை யென்பதும் 'ஓம்பல்தலை' (43.) 'தானஞ் செய்வாரில்தலை' (295.) 'ஆதல் கடை' (999.) என இருதிணைக்கண்ணும் நிற்கும்.

**இராமா :—** இந்த மூவகையார்க்கும் இல்வாழ்வான் அன்றி வேறு துணையில்லாததினாலே தெளிவுப் பொருள்பட நின்ற ஏகாரங் குறைந்து நின்றது. அது வருவித்துச் சொல்லப்பட்டது.

## மேற்கோள் பகுதி :

**பெருந் :—** இதனுள் 'துணை' என்னும் இறுதிச்சொல் மூன்றிடத் தும் பொருள்கொள்ள நின்றமையால் இறுதிவிளக்காயிற்று. (வீரசோ, 152. உரை.)

**ஒப்புமைப்பகுதி:**

" துறந்தவர்கள் வேண்டியதொர் துப்புரவு நல்கி
இறந்தவர்கள் காமுறும் இறுங்கடன்கள் இயற்றி
அறம்பலவும் ஆற்றிவிருந் தோம்புமுறை யல்லால்
பிறந்தநெறி யாலுளதொர் பேருதவி யாலோ." —கந்த, மார்க் 49

ஐம்புலத்தோர் நல்குரவோர் ஓம்பித் தலைப்பட்ட
செம்பாக நன்மனையைப் பேணிக்—கடாவுய்த்த
பைம்புனிலைபேணி யூழ்ப்பவடுவடார்
ஐம்புல மிர்த்தாரில் தலை— இன்னிலை 35.

குறிப்பு:—கீழ்ப்போன இரு குறள்களாலும் 'இயல்புடைய மூவர்', துறந்தார் துவ்வாதார் இறந்தார் எனமூவர் ' என இருவகை மூவர் குறிக்கப்பெறுகின்றுர், பல உரையாசிரியர்களும் மூவரைப்பற்றிக்கொண்ட கருத்துகள் பல. பின்குறளில் தென் புலத்தார் முதலிய ஐவர் குறிக்கப் பெறுகின்றனர். அக்குறட்கு விளக்கவுரை தந்த பரிமேலழகர் ' அரசனுக்கு இறைப் பொருள் ஆறிலொன்ருயிற்று. இவ்வைம்புலத்திற்கும் ஐந்து கூறு வேண்டுதலின் என்பதறிக ' என்ருர், இரு குறளையும் ஒத்திட்டு நோக்கும்போது வருவாயை ஆறுகூருக்கியவிடத்து முற்குறட்பாக்களிற் கூறப்பெற்ற அறுவர் இவரின் வேருயின் அவர்களைப்போற்றுவது எவ்வருவாயைக்கொண்டு என்பது ஆயத்தக்கது. ஆதலால், அவ்அறுவர் இவ் அறுவருள் அடங்குபவரே யாதல்வேண்டும்.

இயல்புடைய மூவர் பிறர்வழக்குப்பற்றிய நால்வகை நிலையினருள் இல்லறத்தார் ஒழிந்த மூவராயின் உரைப்பாயிரத்துப் பரிமேலழகர் 'பொதுவியல்புபற்றி இல்லறம் துறவறம் என இருவகையுமே அறமென எடுத்துக்கொள்ளப்பெற்றது ' என்றதனேடு முரணுமாதலின், பரிமேலழகியர்க்கும் ' மூவர் ' பிரமசாரி முதலிய மூவரினும் வேருதல் கருத்தாகவேண்டும். மக்களோடு மகிழ்ந்து மனையறங் காத்தலாகிய இல்லறமும், மிக்ககாமவேட்கை தீர்ந்துழித் தம்பதி நீங்குவலாகிய துறவறமும் ஆகிய இரண்டுமே அறமென்றல் தமிழ்ப்பண்பாடாதலானும், மூவர் என்றது நிலையினை (ஆச்சிரமத்தை) யுணர்த்த முடியாமை காண்க. ஆதலின் மூவர் எனத் தொகுத்து முற்காட்டிய ஆசிரியர், மூவர் ஆவார் யார்? என அடுத்த குறளில் துறந்தார் முதலிய மூவர் என விளக்கிக்காட்டினுர் ஆதல் வேண்டும் எனவும், இம்மூவரில் துறந்தார், துவ்வாதார் இருவரும் அடுத்த குறளிற்காணப்பெறும் விருந்திலும், இறந்தார் தென்புலத்தாரிலும் அடங்க வருவாயைப் பகுத்துண்பார் அறுவரின் மிகார் எனவும் ஆய்ந்து கொள்ளவைத்தார் என்றலே பொருந்துவதாம்.

**43. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என்ருங்-**
**கைம்புலத்தா ரோம்பல் தலை. (ங)**

**உரைப்பகுதி:**

**பரிமே:** தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்ற - பிதிரர் தேவர் விருந்தினர் சுற்றத்தார் தானென்று சொல்லப்

பட்ட, ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை - ஐந்திடத்துஞ் செய்யும் அற நெறியை வழுவாமற் செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாம்.

பிதிரராவார் படைப்புக்காலத்து அயனாற்படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி; அவர்க்கிடம் தென்றிசையாதலின், தென்புலத்தாரென்றார் தெய்வம் என்றது சாதி ஒருமை. விருந்தென்பது புதுமை; அஃது ஈண்டு ஆகுபெயராய்ப் புதியராய் வந்தார்மேல் நின்றது; அவர் இருவகையர்: பண்டறிவு உண்மையிற் குறித்து வந்தாரும், அஃதின்மையிற் குறியாது வந்தாரும் என. ஒக்கல் சுற்றத்தார். எல்லாவறங்களும் தானுளனாய் நின்று செய்ய வேண்டுதலின், தன்னை ஓம்பலும் அறனாயிற்று. என்ற என்பது விகாரமாயிற்று. ஆங்கு ஆசை, ஐவகையும் அறஞ்செய்தற்கு இடனாகலின் ஐம்புலம் என்றார். அரசனுக்கு இறைப்பொருள் ஆறி லொன்றாயிற்று; இவ்வைம்புலத்திற்கும் ஐந்துகூறு வேண்டுதலான் என்பதறிக.

**மணக்**:—பிதிரர், தேவர், புதியராய் வந்தார், சுற்றத்தார், தான் என்று ஐந்திடமாகிய நெறியைக் கெடாமல் ஓம்புதல் தலையான இல்வாழ்க்கை.

தனக்கு உண்டான பொருளை ஆறுகூறாக்கி ஒரு கூறு அரசர்க்குக் கொடுத்து ஒழிந்த ஐந்து கூறினும் தான் கொள்வது ஒரு கூறு என்றற்குத் தன்னையும் எண்ணினார். இது தலையான இல்வாழ்க்கை வாழும் வாழ்வு கூறிற்று. என்னை? இவையெல்லாம் ஒருங்கு செய்யப்படுதலின். மேற் கூறிய அறுவரும் விருந்தினது வகையினர் என்று கொள்ளப்படுவர். 3

**பழைய**.— ... ... ... 3

**பருதி**:—எ - து பிதிர்லோகத்தார்க்கும் வழிபடுதெய்வத்துக்கும் உற வின் முறையார்க்குந் தந்து தன் மரபையுங் கிருகஸ்தன் ரட்சிப்பது தன்மம் என்றவாறு. 3

**காளிங்**:—எ - து தன் குடியில் இறக்கப்பட்ட பிதிர்களுக்கும் கடவுளர்க்கும் விருந்தினர்க்கும் சுற்றத்தார்க்கும் தனக்கும் என்று சொல லப்பட்ட ஐந்து கூற்று நெறியையும் வழுவாமல் பாதுகாத்தலே இல் வாழ்க்கைக்குத் தலைமை என்றவாறு. 3

**உரைவிளக்கப்பகுதி**:

**நுண்**:—தெய்வம் சாதி ஒருமை. ஆங்கு அசை. ஐவகையும் அறம் செய்தற்கு இடமாதலின் ஐம்புலம் என்றார். அரசனுக்கு ஆறில் ஒரு

பேறு இதனால் அறிக. இவ்வாறு 'அற்றார் அழிபசி தீர்க்கும்' (226) அறம் இடமாதலின் அதனை வைப்புழி எனப் பொருள் கருதி நலிந்து எழுதுவதும் காண்க.

**இராமா:** — விருந்து - புதுமை அது பண்பாகு பெயராய், புதியராய் வந்தவரைக் காட்டி நின்றது. என்று என்பது எண்ணிடைச் சொல் ஆங்கு - அவ்விடம். சொல்லப்பட்ட என்பது சொல்லெச்சம். அது வருவிக்கப்பட்டது. ஐம்புலத்து என்ற இடத்து முற்றும்மை குறைந்து நின்றது. ஆறு என்றதற்குச் செய்யப்படும் அறத்தாறு எனக் கூட்டிச்சொன்னது குறிப்பெச்சம். தலைமையாகிய அறத்தை தலை என்றது பண்பாகு பெயர். அது கடைக்குறைந்து நின்றது.

## ஒப்புமைப் பகுதி :

"அரசுகொள் கடன்களாற்றி மிகுதிகொண் டறங்கள் பேணிப்
பரவரும் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பன்பின்
விரவிய கிளையுந் தாங்கி விளங்கிய குடிகள் ஓங்கி
வரைபுரை மாடநீடி மலர்ந்துள பதிகள் எங்கும்"

—பெரிய. திருநாட். 26.

'தென்மலைக் கிழவன் தெய்வம் தென்புல வானவர் ஒக்கல்
தன்மனை விருந்து காத்துத் தருக்கினல் இருக்கும் நாளில்"

—திருவிளை-மேருவைச். 39

"மின்னார் சடையான் தமராய்ந்தவர் வேதச் செல்வர்
தென்னாடர் தெய்வம் விருந்து ஒக்கல் செறிந்து நட்டோர்
முன்னும் எவர்க்கும் முகில்போல் வரையாமல் நல்கி
எந்நாளும் நோயின்று அளகாதிபன் என்ன வாழ்ந்தான்"

—ஷெ உலவாக்கோ. 17.

## 44. பழிஅஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல். (சு)

## உரைப்பகுதி :

**பரிமே:** பழி அஞ்சிப் பாத்து ஊண் வாழ்க்கை உடைத்தாயின்-பொருள் செய்யுங்கால் பாவத்தை அஞ்சி ஈட்டி. அப்பொருளை இயல்புடைய மூவர் முதலாயினார்க்கும் தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பகுத்துத் தான் உண்டலை ஒருவன் இல்வாழ்க்கை உடைத்தாயின், வழி எஞ்ஞான்றும் எஞ்சல் இல் - அவன் வழி உலகத்து எஞ்ஞான்றும் நிற்றலல்லது இறத்தல் இல்லை.

பாவத்தான் வந்த பிறன்பொருளைப் பகுத்து உண்ணின், அறம் பொருளுடையார் மேலும், பாவம் தன்மேலுமாய் நின்று வழியெஞ்சும் ஆகலின் பழியஞ்சி என்றார். வாழ்வானது உடைமை வாழ்க்கைமேல் ஏற்றப்பட்டது.

**மணக்:—** *இல்வாழ்க்கையாகியவில்லை பழியையும் அஞ்சிப் பகுத்துண் டலையும் உடைத்தாயின், தனது ஒழுங்கு இடையறுதல் எக் காலத்திலும் இல்லை எ - று.*

*மேல் பகுக்குமாறு கூறினார்; பகுக்குங்கால் பழியொடு வாராத பொருளைப் பகுக்கவேண்டும் என்று கூறுகிறார்.*

**பருதி: பழைய:—** *அபகீர்த்தி வராமல் நடத்தி, விருந்தோம்பலும் உண் டாகிய இல்வாழ்க்கை எக்காலமும் நடக்கும்.* 8

**காளிங்:—** *எ - து தென்புலத்தாராதியாகச் சொன்ன ஐவகை வேள்வி செலுத்துங்காலத்து அதற்கு யாதானுமொரு குற்றமுண்டாயின் பழிவரு மென்று அஞ்சிப் பாதுகாத்துப் பகுத்தூணுடைத்தாயின் இவ் இல்லறத் தினது ஒழுகலாறு குறைபட்டு ஒழிதல் எஞ்ஞான்றும் இல்லை எ - று.* 5

## உரைவிளக்கப் பகுதி:

**நுண்:—** *பாத்து - பகுத்து. ஊண் - உண்டல். உண்டு வருதல் போலப் பெயரெச்சம் புடைபெயர்ச்சித் தொழிற்பெயரோடு முடிந்தது. 'கல்லாத மேற்கொண்டொழுகல்' (845) 'புறனழீஇப் பொய்த்து நகை' (182) 'ஒட்டார்பின் சென்று' நிலைசொல்லி (967) என்பனவும் அவ்வாறும். வாழ்வான் உடைமை வாழ்க்கைமேலேற்றப்பட்டது; என்பது வாழ்க்கை யான் உடையனாயின் என்னுமையால் என்க. பாவத்தான் வந்த பிறன் பொருளைப் பகுத்து உண்ணின் அறம் பொருளுடையான் மேலும் பாவம் தன்மேலும் நிற்கும் என்பது காண்க.*

**இராமா:—** *வழி என்றது இங்கே சந்ததி; அது தனக்குப்பின் நிற்பது ஆதலாலே. 'வழி பிறங்கடை, மகன் பேர், என்ற நிகண்டு நோக்கிக்காண்க.*

*இனி வேறுஉரை:—வாழ்க்கை - இல்லறத்தான் ஒருவனுடைய செல்வ மானது, பழியஞ்சி 'இட்டுண்ணான் வாழ்க்கை யிடுகாட்டுள் ஏற்றைப் பனை' எனச் சான்றோர் நிந்தித்தலுக்குப் பயந்து. பாத்தூண் உடைத்தா யின் - பிறர்க்கும் பகுத்து இட்டு உண்பதை உடையதானால் அது, வழி எஞ்சல் எஞ்ஞான்றும் இல் - அவன் சந்ததிக்கும் குறைபடுவது எக்காலத் தும் இல்லை என்றவாறு.*

'இல்லறத்தான் ஒருவனுடைய' என்பது அதிகாரத்தாற் பெற்றேம். வழியெஞ்சல் என்ற இடத்து வழிக்கும் எஞ்சல் என்ற நான்காம் வேற்றுமை யுருபும் இறந்தது தழுவிய எச்சவும்மையும் செய்யுள் விகாரப்பட்டுதலாற் குறைந்துநின்றன. அதினலே அந்த வாழ்க்கை அவனுள்ளளவும் குறைபடாதிருப்பதுமன்றி அவன் சந்ததிக்கும் குறைபடாதெனக் கொள்க. பகுத்துண்ணுன் சந்ததியும் உலகத்து நிற்குமாதலான் அதினலே பெரும்பயன் இன்மையிற் சந்ததிக்கும் செல்வம் குறைபடாதிருக்கும் என்பதே தெளிவு.

## மேற்கோள் பகுதி:

**சங்கர:—** 'பழியஞ்சிப் பாத்தூணுடைத்தாயின் வாழ்க்கை...இல்' என்பது செய்யுளாதலின் இல்லை யென்பது இல் எனக் கடைக்குறைந்து நின்றது. (நன். சூ. 339.)

**சுவாமி:—** செய்யுள் விகாரத்தால் சிதைந்ததனல் மொழி வருவித்தற்கு, பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை' என்பதில், இல்-வாழ்க்கை என்பது வருவித்தது (இ. கொ. சூ. 89)

**45. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது. (ரு)**

## உரைப்பகுதி:

**பரிமே:—** இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடைத்தாயின் - ஒருவன் இல்வாழ்க்கை தன் துணைவிமேற் செய்யத்தகும் அன்பினையும் பிறர்க்குப் பகுத்துண்டலாகிய அறத்தினையும் உடைத்தாயின், அது பண்பும் பயனும் - அவ்வுடைமை அதற்குப் பண்பும் பயனுமாம்.

நிரல்நிறை. இல்லாட்கும் கணவற்கும் நெஞ்சு ஒன்ருகாவழி இல்லறம் கடைபோகாமையின், அன்புடைமை பண்பாயிற்று; அறனுடைமை பயனுயிற்று. இவை மூன்று பாட்டானும் இல் நிலையில் நின்ருன் அறஞ்செய்யுமாறு கூறப்பட்டது.

**மணக் :** இல்வாழ்க்கையாகிய நிலை யாவர் மாட்டும் அன்பு செய்தலையும், அறஞ்செய்தலையும் உடைத்தாயின், அதற்குக் குணமாவதும் பயனுவதும் அவ் விரண்டினையும் உடைமைதானே என்றவாறு.

*பயன் வேறு வேண்டா; தனக்கும் பிறர்க்கும் உண்டான முகமலர்ச்சி தானே அமையும் என்பது. இது பழியொடு வாராத உணவை நுகர ஏற்பார்க்கூட்டு அன்பு செய்யவேண்டும் என்பதூஉம், சிலனைக் கொடுக்க வேண்டும் என்பதூஉம் கூறிற்று.* 5

**பருதி:-** பழைய:...நேசமும் தன்மமும் உண்டாகிய இல்லறம் இம்மைக்குச் செல்வமும், மறுமைக்கு மோட்சமுந் தரும்.

**காளிங்:**...எ - து மற்றிங்ஙனஞ் செலுத்துகின்ற இல்வாழ்க்கையானது செலுத்துமிடத்து மேன்மேலுந் தன்னெஞ்சத்து அன்புமற்று அவனிடத்து இல்லையாயின் இல்வாழ்வு எவ்வகைப்பட்ட மாட்சிமையுடைத்தேயாயினும் யாதுமில்லை எ - று. 6

**உரைவிளக்கப்பகுதி :—**

**நுண்:**—அது - அவ்வுடைமை. 'பண்பும் பயனும் அது' என் முன்னிற்றற்பால சுட்டு பின்னே நின்றது.

**இராமா:**—இது முறை நிரல் நிறைப் பொருள்கோள். நிரல்நிறையலங்காரமும் ஆம்.

**ஒப்புமைப்பகுதி**

"அன்பிலன் அறனிலன் எனப்படான்" —கலி. 74. 6.
"அருளும் அன்பும் நீக்கி" —குறுந், 20
ஒழியாது காத்து" —மதுரைக் 49.

**46. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவதெவன். (சூ)**

**உரைப்பகுதி :**

**பரிமே:—** இல்வாழ்க்கை அறத்தாற்றின் ஆற்றின் - ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தின் வழியே செலுத்துவனாயின், புறத்தாற்றில் போய்ப் பெறுவது எவன் - அவன் அதற்குப் புறமாகிய நெறியிற் போய்ப் பெறும் பயன் யாது ?

அறத்தாறு என்பது பழியஞ்சிப் பகுத்துண்டலும், அன்புடைமையுமென மேற்சொல்லிய ஆறு. புறத்தாறு இல்லை விட்டு வனத்துச்

செல்லும் நிலை. அந்நிலையின் இது பயனுடைத்து என்பார், போய்ப் பெறுவது எவன் என்றார்.

மணக்:— இல்வாழ்க்கையாகிய நிலையை அறநெறியிலே செலுத்த வல்லவனுயின் புறநெறியாகிய தவத்திற்போய்ப் பெறுவது யாதோ என்ற வாறு.

மேல் சிலனைக் கொடுக்கவேண்டும் என்றார்; அவ்வாறு செய்யின் தவப்பயனும் இது தானே தரும் என்கிறார்.

பழைய:— தருமத்தின் மேலாகிய இல்லறத்தின் வழி நிற்பது அன்றி யே, பாவத்தின் வழியிலே நின்று என்ன பேறு பெறப்போகிறார். 6

பருதி:— எ - து. தருமத்தின் மேலாகிய இல்லறத்தின் வழி நிற்பது அன்றியிலே பாவத்தின் வழியிலே நின்று என்ன பேறு பெற்றான் என்ற வாறு. 6

குறிப்பு — மணக்குடவர் பரிமேலழகர் தவிர, ஏனையோர் புறத்தாறு என்பதற்கு அறத்திற்குப் புறமாகிய மறவழி யெனப் பொருள் கண்டனர். பரிமேலழகர் இல்லத்திற்குப் புறத்தாறாகிய வானப் பிரத்தம் என்றனர். மணக்குடவர் தவம் என்றனர். அறத்தாறு புறத்தாறு என்பனவே ஒன்றற் கொன்று எதிர்மறையாய் நிற்பன. ஆதலின் அறத்திற்கு மறம் என்றலே சாலும். அன்றி இல்வாழ்க்கைக்குப் புறம் என்றல் சாலுமோ என்பது ஊன்றி ஆய்தற்குரியது.

**47. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**
**முயல்வாருள் எல்லாந் தலை. (எ)**

**உரைப்பகுதி :**

பரிமே:—இல்வாழ்க்கை இயல்பினான் வாழ்பவன் என்பான் - இல்வாழ்க்கைக்கணின்று அதற்குரிய இயல்போடு கூடி வாழ்பவன் என்று சொல்லப்படுவான், முயல்வாருள் எல்லாம் தலை - புலன் களை விட முயல்வார் எல்லாருள்ளும் மிக்கவன்.

முற்றத்துறந்தவர் விட்டமையின், முயல்வார் என்றது மூன்றும் நிலையின் நின்றாரை. அந்நிலைதான் பலவகைப்படுதலின் எல்லாருள்ளும் எனவும், முயலாது வைத்துப் பயனெய்துதலின் தலை எனவும் கூறினார்.

மணக்:— நெறியினானே இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் முயல் வார் எல்லாரினும் தலையாவான் என்றவாறு.

**பரிப்:**—முயறல் - பொருட்கூமுயறல். "வித்துமிடல் வேண்டுங்கொல்லோ, விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்" என்றுராகலின். இதனனே பொருளும் உண்டாம் என்று கூறினர். 8

**பழைய:**—இல்லறத்தின் முறைமையிலே நடப்பானுகில் அவன் தவம் முயல்வாரினும் பெரியன். 9

**பருதி:**—எ - து இல்லறத்தில் முறையால் நடப்பானுகில் அவன் அறியமுயல்வாரினும் பெரியன்.

தவஞ்செய்வார் ஆகாரம் நித்திரை முதலானவற்றை விட்டுச் சரீரத்தை ஒறுத்துத் தவம் செய்வார்; இவன் சரீரத்தை வருத்தாமல் இல்லறம் நடத்தி முத்தி பெறுவான் என்பதாம். 9

**காளிங்:**—முதற்சொன்ன மூவர்க்கும் நற்சார்பு இவன் தானேயாதலான் இச்சொன்ன மரபினுலே இல்லறத்தை நடத்துகின்றவன் என்று சொல்லப்படுகின்ற இவன் மூன்றெருழுக்கத்தினும் முயல்கின்றவருள் எல்லாந் தலையாவான் என்றவாறு.

### உரைவிளக்கப்பகுதி

**இராமா:**—தலைமை என்பது கடைக்குறைந்து தலை என நின்றது. இதற்குப் பொருள் உயர்வு. இங்கே இது பண்பாகுபெயராய் நின்றது.

குறிப்பு:-இல்வாழ்க்கையே இயல்பான வாழ்க்கை. அதனைப் பறவை முதலியவற்றினும் காண்க என்பதாம்.

**48. ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து. (அ)**

### உரைப்பகுதி :

**பரிமே:**—ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை - தவஞ்செய்வாரையுந் தத்தநெறியின்கண் ஒழுகப்பண்ணித் தானுந் தன் அறத்தில் தவருத இல்வாழ்க்கை, நோற்பாரின் நோன்மை உடைத்து - அத்தவஞ்செய்வார் நிலையினும் பொறையுடைத்து.

பசி முதலிய இடையூறு நீக்கலின், ஆற்றினெழுக்கி என்றுர். நோற்பார் என்பது ஆகு பெயர். நோற்பார் நிலைக்கு அவர் தம்மையுற்ற நோயல்லது இல்வாழ்வார் நிலைபோல் பிறரையுற்ற நோயும் பொறுத்தல் இன்மையின், நோற்பாரின் நோன்மையுடைத்து என்றுர்,

மணக்:—பிறரையும் நன்னெறியிலே ஒழுகப்பண்ணித்தானும் அறத்தின்பாலொழுகும் இல்வாழ்க்கை, தவஞ்செய்வாரினும் வலியுடைத்து என்றவாறு.

ஒழுகப் பண்ணலாவது அவர்க்கு வேண்டுவன அமைத்தல். இது தவத்தினும் வலியுடைத்தென்றது. 7

பழைய:—அறங்களில் மேலாய இல்லறத்தின் நெறிநின்று இந்தத் தருமத்தைக்கைவிடாதே யிருந்தார்க்கு, பிரமசாரி வானப்பிரஸ்தன் சந்நியாசி இவர் மூவரும் நிகரல்லர். 4

பருதி:—எ-து அறத்தின்மேலாகிய இல்லறத்தின் மேல் நின்று தருமத்தைக் கைவிடாதார்க்குப் பிரமசாரி, வானப்பிரஸ்தன், சன்னியாசி இம்மூவரும் நிகரல்லர் எ-று.

## உரைவிளக்கப்பகுதி :

இராமா :—நோற்பார் நிலையின் என்று சொல்லாமல் நோற்பாரின் என்றது பொருளாகுபெயர். நோற்பாரின் என்ற இன் உருபு உறழ்பொருவு என்னும் பொருள்பட நின்றது. உறழ்பொருவு என்பது உவமைப் பொருளிலே நின்றும் உயர்வுதாழ்வுபடவருவது. காக்கையிற்கரிது - காக்கையைக்காட்டிலும் கரிது என்றது உயர்வு. அதனிற்சிறிது - அதைக் காட்டிலும் சிறிது என்றது தாழ்வு. இவை இரண்டும் இன்றிக்காக்கையிற் கரிது என்பதற்குக் காக்கைபோல்கரிது எனவந்தால் உவமப்பொருவு எனக்காண்க. நோற்பாரின் என்ற இடத்திலே முற்றும்மை குறைந்து நின்றது.

**49.** அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று. (கூ)

## உரைப்பகுதி :

பரிமே:—அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே - இருவகை யறத்தினும் நூல்களான் அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே, அஃதும் பிறன் பழிப்பது இல்லாயின் நன்று - ஏனைத் துறவறமோ எனின் அதுவும் பிறனாற் பழிக்கப்படுவது இல்லை யாயின் இவ்வில்வாழ்க்கையோடு ஒரு தன்மைத்தாக நன்று.

ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. இதனாற் பிரிக்கப்பட்டது துறவற மாகலின், அஃது என்னுஞ் சுட்டுப்பெயர் * அதன்மேனின்றது. பிறன்

* அதன்மேல் = துறவறத்தின் மேல்.

பழிப்பது என்றது கூடாவொழுக்கத்தை. துறவறம், மனத்தையும் பொறிகளையும் ஒறுத்து அடக்கவல்ல அருமையுடைத்தாயவழியே, அவற்றை யொறுக்கவேண்டாது ஐம்புலவின்பங்கள் ஆரத்துய்க்கும் எண்மையுடைய இல்வாழ்க்கையோடு அறம் என ஒருங்கு எண்ணப் படுவது என்றவாறு ஆயிற்று, இவை நான்குபாட்டானும் இல் நிலையே பயனுடைத்தென இதன் சிறப்புக் கூறப்பட்டது.

**மணக்:**—*அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே; அதுவும் நன்றுவது பிறனொருவனால் பழிக்கப்படுவது ஒன்றை உடைத்தல்லவாயின் எ-று.*

*பழிக்கப்படுவது என்றது இழிகுணத்தாளாகிய மனையாளை. இனி வாழ்க்கைத் துணைநலங் கூறுகின்றாராகலின் இது கூறப்பட்டது.* 10

**பழைய:**—*தருமம் என்பது இல்லறமே. அது உலகம் பழியாமல் நீதியிலே நடக்குமாகில் நன்று.* 5

**பருதி:**—*எ-து தருமம் என்பது இல்லறம்; அது லோகம் பழியாமல் நீதியிலே நடக்குமாகில் நன்று என்றவாறு.*

**உரைவிளக்கப் பகுதி :**

**நுண்:**—*ஏகாரம் பிரிநிலை. பிரிக்கப்பட்டது துறவறமாகலின் அதுவென்னுஞ் சுட்டுப்பெயர் அதன்மேல் நின்றது.*

**இராமா:**—*மற்றத் துறவறமோ எனின் என்னும் வினாவுரை வருவித்துச் சொல்லப்பட்டது. அஃதும் பிறன் பழிப்பதில்லாயின் நன்று என்பதை அதற்கு விடையாகக்கொள்க.*

**மேற்கோள் பகுதி :**

**நச் :**— *அறந்தலை - இல்லறமே அறங்களில் தலையான அறம். (கலி. 8 : 24.)*

**ஒப்புமைப்பகுதி :**

''மனைவாழ்க்கை முன்னினிது மாணுதா மாயின்
நிலையாமை நோக்கி நெடியார் துறத்தல்
தலையாகத் தானினிது நன்கு,''
—இனியவை, 2.

குறிப்பு :—'அஃதும்' என்ற சுட்டு விதந்து கூறப்பெற்ற இல்வாழ்க்கையை உணர்த்துமேயன்றி அதற்கு இனமாகிய துறவறத்தை உணர்த்துமோ என்பது ஆராயத்தக்கது. அதனாலேயே 'புகழ்புரிந்த இல் இலோர்க்கு என்று அருளுகின்ற ஆசிரியர் கருத்தை யுட்கொண்டு மணக்குடவர் முதலியோர் இல்லறம் என்பதைக் காட்டிற்றாகவே கொண்டனர் போலும்.

**50. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்.** (ரு)

**உரைப்பகுதி:—**

**பரிமே :--** வாழ்வாங்கு வையத்துள் வாழ்பவன் - இல்லறத்தோடு கூடி வாழும் இயல்பினால் வையத்தின் கண் வாழ்பவன், வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் - வையத்தானே யெனினும் வானின்கண் உறையுந் தேவருள் ஒருவனாக வைத்து நன்குமதிக்கப் படும்.

பின்தேவனாய் அவ்வறப்பயனுகர்தல் ஒருதலையாகலின். தெய்வத்துள் வைக்கப்படும் என்றார். இதனான் இல்நிலையது மறுமைப்பயன் கூறப்பட்டது. இம்மைப்பயன் புகழ்; அதனை இறுதிக்கட் கூறுப.

**மணக்:—**இல்வாழ்க்கை வாழும்படியிலே வாழுமவன் உலகத்திலே தேவருள் ஒருவனாக மதிக்கப்படுவன் என்றவாறு,

இவன் எல்லாராலும் நன்கு மதிக்கப்படுவன் என்றவாறு. 9

**பரிப், மணக்:—**வையத்து என்பது பாடம்

**பழைய :—** ... ... ... ... 10

**பருதி :—** எ . து பூமியிலே இல்லறம் நடத்தும் முறையாலே நடப்பவன் தேவர்க்கு நிகராவன் என்றவாறு. 10

**உரைவிளக்கப்பகுதி :**

**நுண் :—** 'நின்றாங் கிசைத்தல்' (தொல். சொல். 59.) என்பதுபோல அங்கு இயல்பின்பொருட்டாயிற்று.

**மேற்கோள்பகுதி :**

**சிவ்ஞான :—** 'தெய்வத்துள் வைக்கப்படும்' என்பது இடமல்லா இடம் மூவகையுள் பிரித்துக் கூட்டலுக்கு மேற்கோள். (நன், சூ. 301 )

**சுவாமி :—** இவரும் பிரித்துக்கூட்டலுக்கு மேற்கொள் காட்டுவர். (இ. கொ. சூ. 42.)

குறிப்பு:—வாழும் வகையறிந்து வாழ்பவன் இவ்வுலகத்தும் தேவனாக மதிக்கப்பெறுவன்; மறுமையில் தேவனேயாவன் என்பது கருத்து.

# 6. வாழ்க்கைத் துணைநலம்

பரிமே — அஃதாவது, அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய இல்லாளது நன்மை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

மணக் :— வாழ்க்கைத் துணைநலமாவது, வாழ்க்கைக்குத் துணையாகிய மனையாளது பெண்மை இலக்கணம் கூறுதல்.

பரிப் :— இஃது ஈண்டுக் கூறியதென்னை? மனையாளிலக்கணமாயின் காமத்துப்பாலுட் கூறற்பாற்று எனின், இது மனையாளாற்செய்யப்படும் தருமமாதலால் ஈண்டுக் கூறப்பட்டது என்க. இல்வாழ்க்கைக்கு மாட்சிமைப்பட்ட மனையாளோடும் வாழவேண்டுதலின் அதன்பிற்கூறப்பட்டது.

பருதி :—வாழ்க்கைத் துணைநலமாவது, இல்லறம் நடத்தும்போது பதிவிரதை வேணுமென்னும் முறையாலே உணர்த்துதல்,

**51. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. (க)**

**உரைப்பகுதி :--**

பரிமே:— மனைத் தக்க மாண்பு உடையளாகித் தற்கொண்டான் வளத்தக்காள் - மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளை யுடையவளாய்த் தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத் தக்க வாழ்க்கையை உடையாள், வாழ்க்கைத் துணை - அதற்குத் துணை.

நற்குணங்களாவன துறந்தார்ப் பேணலும், விருந்தயர்தலும் வறியார்மாட்டருளுடைமையும் முதலாயின. நற்செய்கைகளாவன வாழ்க்கைக்குவேண்டும் பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும், அட்டிற்றொழில்வன்மையும், ஒப்புரவுசெய்தலும் முதலாயின. வருவாய்க்குத் தக்க வாழ்க்கையாவது முதலையறிந்து அதற்கியைய அழித்தல். இதனான் இவ்விரண்டு நன்மையுஞ் சிறந்தன என்பது கூறப்பட்டது.

மணக்:— தான் பிறந்த குடிக்குத் தக்க ஒழுக்கத்தை யுடையாளாய்த் தன்னைக்கொண்டவனது வருவாய்க்குத் தக்க செலவினை யுடையவள் இல்வாழ்க்கைக்குத் துணையாவள் என்றவாறு.

பரிப் :— இது ஒழுக்கமும், புகுதிக்குத் தக்க செலவும் உடையளாக வேண்டும் என்றது.

பழைய:-தன்னுடைய குடிக்குத் தக்கவாறு ஒழுகி, பத்தாவின் வரவுக்குத் தக்கதாக இல்லறம் நடத்துபவள் வாழ்க்கைத் துணைவியாம்.

பருதி:-இல்லறத்தின் [1]வரவாற்றிற்குத் தக இல்லறம் நடத்துவாள் தன் பத்தாவின் பெருமையை நடத்துவாள் என்றவாறு.

காளிங்:- ௨..., ... ... ... ...

## உரைவிளக்கப்பகுதி:--

நுண்:— மாண்பு - நற்குண நற்செய்கைகள், மனைத்தக்க மாண்பு வளத்தக்காள் என்பன பெயரடுத்துவருதலின், தகுதிச்சொற்கு 'அதற்குத் தக' (391.) என இச்செய்யுள் ஆசிரியர் நான்கனுருபினை விரித்தவாறே இவ்வுரை ஆசிரியரும் விரிப்பர். இனி 'செய்தக்க' (466.) 'கோட்டக்கது' (220.) 'பெட்டக்க' (732.) 'நயத்தக்க' (580.) 'இனித்தக்க' (1288.) 'வெறுத்தக்க' (693,) என முதனிலையடுத்துவந்த வினைச்சொற்கும் இச்செய்யுள் ஆசிரியர் 'பிறர்நாணத்தக்கது, அறநாணத்தக்கது' (1018.) என விரித்தாற்போல செயத்தக்க கொளத்தக்க நயக்கத்தக்கது என விரிப்பர். இனி 'இரத்தக்கார்' 1051)., என்பதற்கு இரத்தற்குத் தக்கார் என எழுதி 'தற்கு' என்னுஞ் சொல் விகாரமாயிற்று என்பது; 'உரைத்தக்கவற்கு உரைத்தது என்பதனுரைகண்டு பிறர்[2]எழுதிய கள்ளவுரை.

## மேற்கோள்பகுதி:

நச் :— அறியாத தலைவியிடத்துச் சென்று அறிந்தார் முன்னுள்ளோர் அறம் பொருள் இன்பங்களாற் கூறிய புறப்புறச் செய்யுட்களைக் கூறிக்காட்டுவர். 'மனைத்தக்க மாண்பு உடையளாகி' இது நல்லவையுணர்தல் என்பது, (தொல். பொருள். 154.)

இளம் .— 'கழிவினும் வரவினும்' என்ற சூத்திர உரையில் முக்காலத்திலும் தன் குலத்திலுள்ளார் வழிகொள்ளுமாறு நல்லவை கூறுதலும், அல்லவைகடிதலும் செவிலிக்கு உரித்து என்றவாறு. அவை அறனும் பொருளும் இன்பமும் பற்றி நிகழும். அவையாவன; தலைமகன் மாட்டும் உலகத்தார்மாட்டும் ஒழுகும் திறன் கூறுதல். அவை மனையாளைப் பற்றி வருதலின் காமதந்திரத்துள் பாரியாதிகாரம் எனக் கூறப்பட்டன. அறம் பற்றிவருதல் திருவள்ளுவப்பயன் முதலிய சான்றோர் செய்யுட்களுள் அறப்பகுதியிற் கூறப்பட்டன என்றுகூறி இதனை மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள். 151,)

---

1 வரவாறு - வருவாய். 2 இதற்கும் அடுத்த குறளுக்கும் உரையில்லை,

சங்கர :— 'தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை' என உறழப்படுவது திரிந்தே வந்தது. (நன். 255.)

## ஒப்புமைப்பகுதி:

"வருவாய்க் கியைய வாழ்தலுறும் மறுவில் கற்பின் மனையாள்போல்
பொருள்யா வுளவாம் அதுவன்றிப் புகழும் பயனும் மிகஉண்டாம்
கருதார் எதிரே இமிலேற்றுக் காமர் நடையும் உறும் அதனால்
ஒருவா தவளோடு ஒப்புரவே உற்று வாழ்தல் அறனாகும்."

—விநா. அரசிய. 20

குறிப்பு :— மணக்குடவரும் பழைய உரைகாரரும் 'மனைத்தக்க மாண்பு' என்பதற்குப் பிறந்த குடிக்கு ஏற்ற குணம் என்றனர். இவ்வுரை அதிகார இயைபின்மையும். பரிமேலழகர், பருதிஉரைகளே சிறந்தமையும் தெளிக.

**52. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல். (உ)**

## உரைப்பகுதி:

பரிமே :— மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் - மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகள் ஒருவன் இல்லாளிடத்து இல்லையாயின், வாழ்க்கை எனைமாட்சித்தாயினும் இல் - அவ்வில் வாழ்க்கை செல்வத்தான் எத்துணை மாட்சிமையுடைத்தாயினும் அஃதுடைத்தன்று.

இல்லையென்றார், பயன்படாமையின்.

மணக்:— குடிக்குத் தக்க ஒழுக்கம் மனையாள்மாட்டு இல்லையாகில் அவ்இல்வாழ்க்கை எத்துணை நன்மைகளை உடைத்தாயினும் ஒரு நன்மையும் இன்றாம் என்றவாறு. 7

பரிப்:- வருவாய்க்குத் தக்க செலவினளாகவே இவ்வாழ்க்கை இனிது நடக்கும்; ஒழுக்கக் குறைபாடு உண்டானால் வருங்குற்றம் என்னை? என்றார்க்கு இது கூறப்பட்டது.

பழைய:- இல்லறம் நடத்தும் திறமில்லாதாள் இல்லறத்தில் எல்லாம் உண்டாயிருந்தும் ஒன்றும் இல்லையாம்.

பருதி:-எ -து இல்லறம் நடத்தும் திறமில்லாதாள் இல்லறத்தில் நானு பதார்த்தம் உண்டாயிருந்தும் ஒன்றுமில்லை என்றவாறு.

**உரைவிளக்கப்பகுதி:**

**இராசமா:-** *இல்லை என்பது இல் எனக் குறைந்துநின்றது.*

**மேற்கோள்பகுதி;**

**நச்:-** *'மனைமாட்சி......இல்லாயின்' என்பது தலைவியைக் கழறியது. (தொல். பொருள். 155.)*

**ஒப்புமைப்பகுதி:**

—" விழைதக்க
மாண்ட மனையாளை இல்லாதான் இல்அதர் *
காண்டற் கரியதோர் காடு." —நாலடி. 361
" தாரம் மாணாதது வாழ்க்கை யன்று." —முதுமொழிக். 42.
கொண்டவள் கெட்டால் ஒன்றுமேயில்லை. —பழமொழி

**குறிப் :-** *இல்லறம் சிறத்தல் இல்லாளாலேயாம். செல்வத்தால் அன்று என்பதாம்,*

**53. இலல்தென் இல்லவள் மாண்பானல் உள்ளதென்
இல்லவள் மாணக் கடை.** (ந)

**உரைப்பகுதி:**

**பரிமே;—** இல்லவள் மாண்பு ஆனல் இல்லது என் - ஒருவனுக்கு இல்லாள் நற்குண நற்செய்கையள் ஆயினக்கால் இல்லாதது யாது; இல்லவள் மாணுக்கடை உள்ளது என் - அவள் அன்னள் அல்லாக்கால் உள்ளது யாது?

மாண்பு எனக் குணத்தின்பெயர் குணிமேல் நின்றது: இவை இரண்டுபாட்டானும் இல்வாழ்க்கைக்கு வேண்டுவது இல்லாளது மாட்சியே பிறவல்ல என்பது கூறப்பட்டது.

**மணக்;-** *ஒருவனுக்கு மனையாள் மாட்சிமை யுடையளானல் எல்லாம் இலனேயாயினும் இல்லாதது யாது? மனையாள் மாட்சிமை இல்லாளானல் எல்லாம் உடையனாயினும் உண்டானதுயாது? என்றவாறு.* 6

---

* "இல்லகம்" என்பது அச்சு நூற்பாடம், இது அதனினும் பொருட் சிறப்புடைமை காண்க. அதர் - வழி.

பழைய:- இல்லறத்தின் வரவாறு அறிந்த பதிவிரதை இல்லில் இருந்தால் எதுவும் உண்டு. இல்லறம் நடத்தும் முறையறியாதாள் இருந்த இல்லத்தில் யாது உண்டாயிருந்தும் பயனில்லையாம்.

பருதி:- எ - து இல்லறத்தின் வரவாறு அறிந்து இல்லறம் நடத்தும் பதிவிரதையில்லத்தில் ஏதும் உண்டு; இல்லறம் நடத்தும் முறைமை அறியாதாள் இருக்கும் இல்லத்தில், ஏதுண்டாயிருந்தும் ஒன்றுமில்லை என்றவாறு. 6

* காளிங் :—எ - து இல்வாழ்வானுடைய மனையாளானவள் கற்பு என்னும் மாட்சிமை உடையளானல் அவ் இல்லறத்திற்குஇல்லாதது என்? எல்லா நன்மையும் உளவாம்; மற்று அம்மனையாள், கற்பு மாட்சிமை இல்லாத இடத்து அவ் இல்லறத்திற்கு உள்ளது என் ? மற்றெல்லா நன்மையும் உளவாயினும் இல்லையாம் என்றவாறு. 7

## உரைவிளக்கப் பகுதி :

நுண் :—மனைத்தக்க மாண்பு உடையளாகி என்பதுபோல நில்லாமல், மாண்பானல் என நின்றமையால் குணத்தின் பெயர் குணிமேல் நின்றது. இஃது ஆகு பெயர். பின்னர் அவள் எனச் சுட்டற்பாலது இல்லவள் என முன்போல் இயற்கைப்பெயராய் நிற்பினும், அவள் எனச் சுட்டுப் பெயர்ப் பொருளேபடும்; இது சுட்டொடு புணராத பொருள்படுபெயர். இப் பெயர் சுட்டுப்பெயர், சுட்டொடு புணர் பெயர், சுட்டொடு புணராத பொருள்படுபெயர் என மூவகையாம்; அவை 'மக்கண்மெய்தீண்டல்' (65) செல்வத்துட் செல்வம்' (411) இல்லதென் இல்லவள் (53) என முறையே காண்க. இன்னும் இயற்பெயரல்லாது ஒரு பொருட்கிளவியும், விசேடித்த பெயர்களும், சுட்டொடு புணராத பொருள்படு பெயராம். அது பவ்வத் தோடகம்புக்கு முந்நீரழுந்தினும்' 'நற்பூங்கழலான் கற்பாடழித்த கனமாமணிப் பூண்செய் தோளான்' (சிந்தா - பதி. 19) எனவும் வரும். 'பொருளொடு புணராச் சுட்டுப்பெயராயினும்' (தொல். சொல். 37) என்னுஞ் சூத்திரத்து நச்சினார்க்கினியரும் இவ்வாறமைத்தாரென்க.

இராமா;— மிகுதிகாட்டுகிற நிமித்தம் மாண்பு என்னும் குணப்பெயரை இல்லவள் மாண்பானல் எனக் குணியின் மேல் ஏற்றினர்.

ஏர் பிடித்தவன் எழுச்சியெல்லாம் பானை பிடித்தவள் பாக்கியம் —பழமொழி.

**54. பெண்ணிற் பெருந்தக்க யா உள கற்பென்னும்
திண்மைஉண் டாகப்பெறின். (சு)**

## உரைப்பகுதி :

பரிமே :— பெண்ணின் பெருந்தக்க யா உள - ஒருவனெய்தும் பொருள்களுள் இல்லாளின் மேம்பட்ட பொருள்கள் யாவையுள, கற்பு

* 'மாண்பாயின்' என்று பாடங்கண்டார்.

என்னும் திண்மை உண்டாகப் பெறின் - அவள்மாட்டுக் கற்பு என்னுங் கலங்காநிலைமை உண்டாகப்பெறின்?

கற்புடையாள்போல அறமுதலிய மூன்றற்கும் ஏதுவாவன பிற இன்மையின், யாவுள என்றார். இதனால் கற்புநலத்தது சிறப்புக் கூறப்பட்டது.

**மணக் :—** *பெண்பிறப்புப்போல மேம்பட்டன யாவையுள? கற்பாகிய திண்மை உண்டாகப்பெறின் என்றவாறு.* 4

**பரிப் :—** *மேல் வேண்டும் என்ற நிறையுடைமை குலமகளிர்க்கு இயல்பன்றோ என்றார்க்கு, அஃது எல்லார் மாட்டும் உளதாகாது என்று கூறப்பட்டது.*

**பழைய:—** *பெண் பிறப்பு தெய்வப் பிறப்பாம். அது எப்படி எனில் பெண்ணிடத்தில் பதிவிரதா பாவனையுண்டாகில்.*

**பருதி :—** *ஸ்திரீசாதி, என்றும் பெரும்பாவக் கன்னியராயினும் பெண்பிறப்பு தெய்வப் பிறப்பு. அது ஏது எனில், பெண்ணிடத்தில் பதிவிரதா பாவகம் உண்டாகில் என்றவாறு.* 3

**காளிங் :—** *இல்வாழ்வானுக்குத் தன்மனையாளிற் பெருந்தன்மை யுடையன மற்றுயாவை? அவள்பால் கற்பென்னும் திறமை ஒருவழிப்பட உளதாய் நிற்கப் பெறின் என்றவாறு.* 1

## 55. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை. ((ரு))

**உரைப்பகுதி:**

**பரிமே :—**தெய்வம் தொழாள் கொழுநன் தொழுது எழுவாள் பெய் என - பிறதெய்வந் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழாநின்று துயிலெழுவாள் பெய்யென்று சொல்ல, மழை பெய்யும் - மழை பெய்யும்.

தெய்வந் தொழுதற்கு மனந்தெளிவது துயிலெழுங்காலத்தாகலின் தொழுதெழுவாள் என்றார். தொழாநின்று* என்பது தொழுது எனத் திரிந்து நின்றது. தெய்வம் தான் ஏவல் செய்யும் என்பதாம். இதனாற் கற்புடையவளது ஆற்றல் கூறப்பட்டது,

* இதனைக் கள்ளவுரை என்பர் நுண்பொருள் மாலையுடையார்.

மணக்:— தெய்வத்தைத் தெய்வமென்று தொழாளாய், எல்லாத் தெய்வமும் தன் கணவனென்றே கருதி, அவனை நாடோறுந் தொழுதெழு மவள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும் என்றவாறு. 8

பரிப் :- எழுதல் - உறங்கி எழுதல். தெய்வமும் ஏவல் செய்யும் என இம்மைப்பயன் கூறிற்று.

* பழைய:- தேவதையைக் கும்பிட்டிருத்தல் போலத் தனக்கு இஷ்டதேவதையாகிற பத்தாவையும் வழிபடுவாள் பெய்யென்று சொல்ல மழைபெய்யும்.

பருதி: எ - து குலதேவதையை மட்டும் கும்பிடாள் தன் பத்தாவையும் தெய்வமென்று தொழுதபடியால் அவள் சொல்ல மழை பெய்யும் என்றவாறு. 5

காளிங் :—வேறொருகடவுளையும் வணங்காளாய், தன் கணவனையே நாடோறும் வணங்கி எழுகின்றாள் யாவள்? மற்றிவள் இவ்வுலகத்து மழை வறங்கூர்ந்தகாலத்து வானைக்குறித்து 'வந்து பெய்வாயாக' என்று சொன்ன அளவிலே வந்துபொழியும் மழை என்றவாறு. 5

## உரைவிளக்கப்பகுதி:

நுண் :—தொழுதெழுவாள் என்பது 'செய்தெனெச்சத்து இறந்தகாலம், எய்திடனுடைத்தே வாராக்காலம்' (தொல். சொ. 241) என்னுஞ் சூத்திரவிதி பெற்றுத் திரியாது தொழுது என்பது தொழாநின்று எனப் பொருள்பட்டது. கொடியாடித் தோன்றும் என்பதும் அது. இதனைத் தொழா நின்றென்பது தொழுதெனத் திரிந்ததென எழுதியது பிறர் கள்ளவுரை 'திணைவளங்காத்து' என்பதில் (118) 'தொழுதெழுவார் வினை வளம்நீறெழ' என்னுங் கோவையாரும் அது. தெய்வந்தான் ஏவல் செய்யும் என்பதாம். மழையே கொள்ளெனக்கொண்டான் என்பது போலப் பெய்யெனப் பெய்தல்என்க.

இராமா :—செயவென் எச்சம் தொழுது எனத் திரிந்து நின்றது.

## மேற்கோள்பகுதி :

சங்:— 'தெய்வந் .... .... .... .... மழை யென்பதனுள் எனவென்பது பெய்யெனச்சொல்ல என வினைப்பொருள் தருதலின் இடைச்சொல்லடியாகப் பிறந்த செயவெனெச்சமாய் முன்னர்ப்போந்த வினை எச்சத்துள் அடங்கும் என்க. (நன். நல். 360)

* 'தெய்வந் தொழுவாள் எனப்பாடம்கொண்டார் போலும்.

**பேரா:**—"தொழுதெழுவார் என்பதற்குப் பேராசிரியர் 'தொழாநின்று துயிலெழுவாருடைய' என்பர். தொழுதெழுவார் என்றது துயிலெழுங் காலத்து அல்லது முன்னுணர்வின்மையான் உணர்வுள்ள காலத்து மறவாது நினைவார்" என்றவாறு. (திருக்கோ. 118)

**நச்:**—'சொல்லிய கிளவி அறிவர்க்கும் உரிய'என்றது அறியாத தலைவியிடத்துச் சென்று அறிந்தார் முன்னுள்ளோர் அறம் பொருள் இன்பங்களாற் கூறிய புறப்புறச் செய்யுட்களைக் கூறிக்காட்டுவர் என்பதாம். 'தெய்வந்தொழாஅளை' இவை நல்லவையுணர்தல். (தொல். பொருள். 154)

## ஒப்புமைப்பகுதி:

"வான்தரும் கற்பினள்" —கலி. 16 : 20.

தொழுது ஏத்த - எல்லாரும் தொழுது வாழ்த்த —கலி 2 : 19 நச் உரை.

"குறவர் மடமகளிர் தாம்பிழையார் கேள்வர்த்தொழுதெழலால்" —கலி. 39 : 16.

உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும் சிலப் பதிகம் 56,

"காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு
தாம் இன்புறுவர் உலகத்துத் தையலார்
போகம்செய் பூமியினிற் போய்ப்பிறப்பர் யாம்ஒருநாள்
ஆடுதும் என்ற அவ் அணியிழைக்கு ஆயிழையாள்
பீடு அன்று என இருந்த பின்னர்" —சிலப். கனாத், 60 : 64.

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வம் தொழுந்தகைமை திண்ணிதால்—தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணகமா தர்க்கு விருந்து." —சிலப், கட்டுரைக், வெண்பா,

காமனை யென்றும் சொல்லார் கணவர் கைதொழுது வாழ்வார். —சீவக, 1598,

"வான்தரு கற்பின் மனையுறை மகளிர்." —மணி- ஆதிரை 77.

"தெய்வந் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்." —ஷை சிறை. 59-61

"நாடும் ஊரும் நனிபுகழ்ந் தேத்தலும்
பீடுறும்மழை பெய்கெனப் பெய்தலும்
கூடவாற்றவர் நல்லது கூறுங்கால்
பாடல் சான்மிகு பத்தினிக் காவதே." —வளையாபதி.

"வேற்றூர்புகுதல் விழாக்காண்டல் நோன்பெடுத்தல்
கோற்றொடியார் கோளழியு மாறு." —தொல். பொருள் 154. நச், உரை, மேற்

"கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி - - - -
இவர்மூவர் பெய்யெனப் பெய்யும் மழை." —திரிகடுகம். 96,

''மாதரார், அற்பின் நின்றன அறங்கள் அன்னவர்
கற்பின் நின்றன கால மாரியே'' —கம்ப. பால. நாட்டு 59

''தங்கள் நாயகரிற் றெய்வம் தவம்பிறி திலவென்றென்னும்
மங்கைமார்'' —ஷ வேள்வி, 16.

''காண்டகைய தங்கணவ ரைக்கடவு ளார்போல்
வேண்டலுறு கற்பினர்தம் மெய்யுரையில் நிற்கும்
ஈண்டையுள தெய்வதமும் மாமுகிலும் என்றால்
ஆண்தகைமை யோர்களும் அவர்க்கு நிகரன்றே.' —கந்த. மார்க் 47

''மழைக்குதவும் பெருங்கற்பின் மனைவியார்,'' —பெரிய.

குறிப்பு:—*கணவனையும், கடவுளையும் வழிபட்ட காரைக்காலம்மையாரைப்போல கடவுளை மட்டும் வணங்காமல் கணவனையும் கடவுளாக வழிபட்டவள் என்ற பகுதி, பழைய உரைகளின் போக்கு நுனித்து அறிதற்கு உரியன.*

## 56. தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
## சொற்காத்துச் சோர்விலாள் பெண். (சா)

**உரைப்பகுதி :**

**பரிமே:**—தற்காத்துத் தற்கொண்டான் பேணி - கற்பினின்றும் வழுவாமல் தன்னைக்காத்துத் தன்னைக்கொண்டவனையும் உண்டி முதலியவற்றாற் பேணி, தகை சான்ற சொல் காத்து - இருவர்மாட்டும் நன்மையமைந்த புகழ் நீங்காமற் காத்து, சோர்வு இலாள் பெண் - மேற்சொல்லிய நற்குண நற்செய்கைகளினுங் கடைப்பிடி யுடையாளே பெண்ணாவாள்.

தன்மாட்டுப் புகழாவது * வாழும்ஊர் கற்பால் தன்னைப் புகழ்வது. சோர்வு - மறவி. இதனால் தற்புகழ்தற் சிறப்புக் கூறப்பட்டது.

**மணக்:**—*தன்னையுங் காத்து தன்னைக்கொண்ட கணவனையும் பேணி, நன்மையமைந்த புகழ்களையும் படைத்துச் சோர்வின்மையுடையவளே பெண் என்று சொல்லப்படுவள் என்றவாறு.* 7

**பரிப்:**—*புகழ்படைத்தலாவது அறம் பொருளின்பங்களில் உலகத்தார் பழியாமல் ஒழுக அவரால் நன்மை சொல்லப் பெறுதல். சோர்வின்மையாவது அப்பொருளைக் கடைப்பிடித்தல். இஃது ஒழுகுந்திறன் கூறிற்று. இதனானே பெண்மையிலக்கணம் எல்லாம் கூறப்பட்டது.* 7

---

* 'நாடும் ஊரும் நனிபுகழ்ந்தேத்தலும்' —வளையாபதி. 'வல்லாளாய் வாழுமூர் தற்புகழு மாண்கற்பின் இல்லா ளமர்ந்ததே யில்.' —நாலடி, 383,

ஆம்படையானே தெய்வம் அடுப்பங்கரையே கைலாசம் —பழமொழி,

இது பெண்களிற் சிறந்தாளது இலக்கணங் கூறிற்று.

**பழைய :**— தனி கற்பையுங் காத்துத் தன் பதிவிரதாபாவத்தால் பத்தாவின் குணத்தையுங்கூறி உலக பதிவிரதை என்று சொல்லும் சொல்லையும் காத்து அசைவில்லாத கற்பினள் வாழ்க்கைத்துணை.

**பருதி :**— எ - து தன் கற்பையுங் காத்து, தன் பத்தாவின் குணத்தையும் பேணி, இன்னுள் பதவிரதை என்னும் சொல்லையும் காத்து, அசைவில்லாத கற்பினுள் வாழ்க்கைத்துணையாம் என்றவாறு. 2

**காளிங் :**— எ - து. தன்னையுங் கற்பினல் பாதுகாத்து மற்றுத் தன் கணவனையும் விரும்பி, வழிபட்டுத் தன்குலத்தகுதியோடு அமைந்த அடக்கச் சொல்லினையும் நாவிற் பேணி மற்றிம்மூன்றின்கண்ணும் ஒருஞான்றும் ஒரு சோர்வுபாடும் இல்லாதாளே இற்கிழத்தியாவாள் எ-று. 4

**உரைவிளக்கப்பகுதி :**

**இராமா :**— இனித் தகைசான்ற சொற்காத்து என்பதற்கு, தன்னைக் கொண்டவனது நன்மை நிறைந்த சொல்லைக் கடவாமல் காத்து என்பதே தெளிவு. அவன் சொல் எப்படிப் பட்டதாயிருந்தாலும் அதைக் கடவாது நிற்பாளானல் அதனலே தனக்கு நன்மை நிறைவது நிச்சயமாதலால் அதுபற்றித் தகைசான்ற என இறந்தகாலமாகச் சொன்னர்.

**57. சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை. (எ)**

**உரைப்பகுதி :**—

**பரிமே:**— மகளிர் சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்-மகளிரைத் தலைவர் சிறையாற் காக்குங்காவல் என்னபயனைச் செய்யும்? நிறைகாக்கும் காப்பே தலை - அவர் தமது நிறையாற் காக்குங் காவலே தலையாய காவல்.

சிறை மதிலும் வாயில்காவலும் முதலாயின. நிறை நெஞ்சைக் கற்புநெறியின் நிறுத்தல். காவலிரண்டினும் நிறைக்காவலில்வழி ஏனைச் சிறைக்காவலால் பயனில்லையென்பார், நிறைகாக்குங் காப்பே தலை என்றார். ஏகாரம் பிரிநிலைக்கண்வந்தது. இதனல் தற்காத்தற்சிறப்புக் கூறப்பட்டது.

மணக் :— மகளிரைச் சிறைசெய்து காக்கும் காவல் யாதினைச் செய்யும். அவரது கற்புக் காக்கும் காவலே தலையானகாவல் என்றவாறு.3

பரிப் :— மேற் கூறிய ஒழுக்கம் சிறைசெய்துகாக்க உண்டாகாதோ என்றார்க்கு, அதுசெய்தாலும் நிறையிலராகில் அழியும். இரண்டும் வேண்டும் என்பது கூறிற்று. 3

பருதி ;— எ - து உட்காவல், புறக்காவல் மனைக்குத்தான், அவற்றுள் காவற்படுவது கற்பன்று; மடவார் பதிவிரதா பாவகத்தில் உண்டாவதே கற்பு என்றவாறு. 8

காளிங் :— எ - து மதில் சிறையும் காவற்சிறையும் என்கின்ற காப்பெல்லாம் என்செய்யும்; அதனால், யாதொரு பயனுமில்லை. மற்றுத் தம் இல்வாழ்க்கைக்குரிய மகளிரது கற்புக்காக்கும் காப்பே அவ்வில்லறத்திற்குத் தலைமையுடைய காவல் என்றவாறு. 2

## உரைவிளக்கப்பகுதி:

நுண் :— பெயரெச்சம் வினைப்பெயர்கொண்டது. 'ஒருமைக்கட் டான்கற்ற கல்வி' (398.) 'களவினாலாகிய ஆக்கம்' (283.) என்பதும் அது, காப்பே தலை பிரிநிலை ஏகாரம்.

## மேற்கோள்பகுதி:

நக்கீரர் :— காப்பு என்பது இருவகைத்து; நிறைகாவல் சிறைகாவல் என. அவற்றுள் நிறைகாவல் என்பது காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம் என்றவாறு. 'சிறைகாக்கும். . . . . தலை' என்பதாகலான். (இறை. சூ. 29.)

காரிரத்ன :— பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற. 251. உரை.)

## ஒப்புமைப்பகுதி:

"கன்னிக் காவலும் கடியிற் காவலும்
தன்னுறு கணவன் சாவுறிற் காவலும்
நிறையிற் காத்துப் பிறர்பிறர்க் காணாது
கொண்டோ னல்லது தெய்வமும் பேணாப்பெண்டிர்."
—மணி, உதயகுமா. 98-102.

"உண்டியுட் காப்புண்டு உறுபொருள் காப்புண்டு
கண்ட விழுப்பொருள் கல்விக்குக் காப்புண்டு
பெண்டிரைக் காப்பது இலமென்று ஞாலத்துக்
கண்டு மொழிந்தனர் கற்றறிந் தோரே"
—வளையாபதி.

"நிறையான் மிகுகில்லா நேரிழை யாரைச்
சிறையான் அகப்படுத்த லாகா—அறைபோ
வூருந்த வலிதினின் யாப்பினும் நாய்வால்
திருந்துதல் என்றுமே இல்."

—பழமொழி

"மாண்ட
"தன்னிலைக் காப்புச் செய்தாள் தனிமனக் காவல் பூண்டாள்."

—திருவிளை, அங்கம் 8

## 58. பெற்றுன் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ் சிறப்புப் புத்தேளிர் வாழும் உலகு. (அ)

**உரைப்பகுதி :**

**பரிமே:—** பெண்டிர் பெற்றுன் பெறின் - பெண்டிர் தம்மை யெய்திய கணவனை வழிபடுதல் பெறுவாராயின், புத்தேளிர் வாழும் உலகு பெருஞ்சிறப்புப் பெறுவர் - புத்தேளிர் வாழும் உலகின்கண் அவரால் பெருஞ்சிறப்பினைப் பெறுவர்.

வழிபடுதல் என்பது சொல்லெச்சம் இதனுல் தற்கொண்டாற் பேணிய மகளிர் புத்தேளிரால் பேணப்படுவரென்பது கூறப்பட்டது.

[1]மணக் :— *பெண்டிரானவர் தம்மை மனைவியராகப் பெற்றவரையே தமக்குத் தலைவராகப்பெறின், தேவர் வாழும் பெரிய சிறப்பினையுடைய உலகத்தைப்பெறுவர் என்றவாறு.* 9

**பரிப் :—** *இதனுனே அதனின் மாறுபட ஒழுகினுர் நரகம் புகுவர் என்றவாறு. இது மறுமைப்பயன் கூறிற்று; இவை மூன்றினுனும் பெண்டிரிலக்கணமும் அவர் பெறும் பயனும் கூறப்பெற்றது.*

[2]**பழைய :—** *தன் பத்தாவும் பூலோகமும் 'இவள் பதிவிரதை' என்னும் மனமகிழ்ந்த கற்பினுள் பெறுவாள்; ஏதென்னில் அவள் வாழ்கின்ற உலகிலேயே தேவர்கள் செய்யுஞ் சிறப்பென்றறிக.*

*இதற்குக் கண்ணகியாரைக் கண்டுகொள்க.*

**பருதி :** *— எ - து தன் பத்தாவும்பூலோகமும் இவள் பதிவிரதை என்னும் மனமகிழ்ந்த கற்பினுள் பெறுவள், தேவர்கள் செய்யும் சிறப்பை என்றவாறு.* 4

---

1 "பெற்றுர்ப் பெறின்" எனப்பாடங்கொண்டார்,

2 "இது எல்லார் கருத்தினும் வேறாய் இருத்தல்காண்க.

இதற்கு ஒப்பனைகள் கண்ணகியாரைக்கண்டு கொள்க என்றவாறு.

**காளிங்:-** எ – து தம்மை மணமகளிராகப் பெற்ற கணவரையே தாமுங் கணவனாகப் பெறுவாராயின், மற்று அவர் பெறுவர் இம்மை யாக்கமும், மிகவும் சிறப்புடைத்தாகிய தேவர்கள் வாழும் உலகினையும் என்றவாறு. 5

**உரைவிளக்கப்பகுதி:**

**நுண்:—** பெண்டிர், புத்தேளிர், மகளிர், கேளிர் என இர் ஈறும் வருமாதலின், பொதுப்பட 'ரகாரஒற்றும் மகரவிறுதியும்' (தொல் - சொல். 7) என்றார். பின்னர் ஆரீறு பெரும்பான்மை வருதல்பற்றி 'அர் ஆர்' (தொல் சொல். 208) என்றார் தொல்காப்பியனார் என்க.

**இராமா:-** இனி வேறொரு முடிபு: பெண்டிர் பெற்றான் பெறின் - மனைவியர் தங்களை அடைந்த கணவனுக்கு வழிபாடு செய்யப்பெறுவாரானால், வாழும் உலகு - நெடுங்காலம் அழியாதுவாழும் உலகத்திலே, புத்தேளிர் பெருஞ்சிறப்புப் பெறுவர் - தேவர்களால் செய்யப்படும் பெரிதாகிய திருவிழாவைப் பெறுவர்.

பெற்றான்பெறின் நான்காம் வேற்றுமை யுருபும்பொருளும் உடன்தொக்க தொகை. கொண்டவனுக்கு வழிபாடு செய்த கற்புடை மனைவியர், தேவர்களால் வழிபாடு செய்யப்பெறுவர் என்பதாம்.

**ஒப்புமைப்பகுதி:**

"பெற்றான் பிழையாத பெண்டிரும்' —பரிபா, திரட்டு 2: 25.

**குறிப்பு:-** பெற்றான் புத்தேளிர் வாழும் உலகு பெறின், பெண்டிரும் (ஆங்குப்) பெருஞ் சிறப்புப் பெறுவர் என இயைத்துப் பொருள்காணலும் ஒன்று.

**59. புகழ்புரிந் தில்இலோர்க் கில்லை இகழ்வார்முன்**
**ஏறுபோல் பீடு நடை.** (கூ)

**உரைப்பகுதி:**

**பரிமே:—** புகழ் புரிந்த இல் இலோர்க்கு - புகழை விரும்பிய இல்லாளையில்லாதார்க்கு, இகழ்வார் முன் ஏறுபோல் பீடு நடை இல்லை. தம்மையிகழ்ந்துரைக்கும் பகைவர்முன் சிங்க ஏறுபோல் நடக்கும்பெருமிதநடை இல்லை.

புரிந்த என்னும் பெயரெச்சத்து அகரம் விகாரத்தாற்றொக்கது. பெருமிதமுடையானுக்குச் சிங்க ஏறு *நடையான் உவமமாகலின், ஏறு போல் என்றார். இதனால் தகைசான்ற சொல் காவாவழிப்படுங் குற்றங் கூறப்பட்டது.

**மணக்:**— புகழ்பொருந்தின மனையாளை இல்லாதார்க்கு இல்லையாம்: தம்மை இகழ்ந்துரைப்பார்முன் ஏறுபோல நடக்கும் மேம்பட்ட நடை என்றவாறு. 5

ஏறுநடை - அசைவும் தலையெடுப்பும் பொருந்திய நடை.

**பரிப்:**- மனையாள் ஒழுக்கக் குறைபாட்டால் அறத்திற்கு வருங் குற்றம் என்னை? என்றார்க்கு. அதனானே தலையிறக்கம் வரும். வந்தாற்பின் வாழ்க்கைத்தருமம் செல்லாது என்பது. 5

**பழைய:**— 'இன்னாள் பதிவிரதை' யென்று சொல்லுஞ் சொற் பெறாத மடவாரை மனையாளாகவுடையான் தன்னைவேண்டாதார் முன்னர் ஆனைபோல் நடக்கும் நடையில்லை.

**பருதி:**— எ - து 'இன்னாள் பதிவிரதை' என்று சொல்லுஞ்சொல் பெறாத மடவாரை மனையாளாகவும் உடையான், தன்னை வேண்டார் முன்னே 'இன்னான் ரிஷபம்போலே திரிகின்றான்' என்று ஏசுதற்கு இடமாவான் என்றவாறு. 9

**காளிங்:**— எ - து கற்பினால் பெரிதும் புகழ் தங்கப்பட்ட இல்லாளை இல்லாதவற்குத், தம்மை இகழ்ந்துரை கருதுவார்முன், ஏறு போன்றுள்ளதோர் பெருமை ஒழுக்கம் இல்லை என்றவாறு. 3

### உரைவிளக்கப்பகுதி:

**நுண்:**- புரிந்த என்னும் பெயரெச்சத்து ஈறு குறைந்தது. "தொண்டினமேவும்" (302) என்னும் கோவையாருள் கண்டினமேவுமில் என்பதும் அது. செய்யுமெனெச்சத்தீற்றுமிசை யுகரமெய் கெடுதற்கு விதியன்றி, செய்தவென்னெச்சம் உயிராதல் ஒற்றாதல் கெடுதற்கு விதியின்மையாற் குறைந்து நின்றது என விகாரமாக்கினார் என்க. சிங்க ஏறு புருடநடைக்கு உவமையாயிற்று.

### மேற்கோள்பகுதி:

**காரிரத்ன:**- 'ஏறுபோல் பீடுநடை' உவமையினது உயர்ச்சியால் பொருட்கு உயர்ச்சியாயின" (மாற, 92 உரை)

---

* நடையான் - நடையினால்.

சிவஞான:- என்ற அளவை என்னும் பெயரெச்சத்து ஈறு திரிந்து நின்றது. 'புகழ்புரிந்த இல் இலோர்' என்புழிப்போல (சிவஞான சூ. 2. அதி. 4)

**60. மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு.** (ம)

உரைப்பகுதி:

பரிமே:— மங்கலம் என்ப மனைமாட்சி-ஒருவற்கு நன்மையென்று சொல்லுவர் அறிந்தோர் மனையாளது நற்குண நற்செய்கைகளை, அதன் நன்கலம் (என்ப) நன்மக்கட்பேறு-அவைதமக்கு நல்ல அணிகலம் என்று சொல்லுவர் நல்ல புதல்வரைப் பெறுதலை,

அறிந்தோரென்பது எஞ்சி நின்றது. மற்று அசைநிலை. இதனால் வாழ்க்கைத் துணைக்கு ஆவதோரணிநலங்கூறி, வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

மணக்:- ஒருவனுக்கு அழகு என்று சொல்லுப மனையாள் ஒழுக்கமுடையளாதலை; அவ்வழகின்மேலே நல்ல அணிகலன் என்று சொல்லுப நல்ல புதல்வரைப் பெறுதலை என்றவாறு. 10

பழைய:- ஒருவர்க்கு நன்மையென்று சொல்வது அறிந்தோர் மனையாளது நற்குண நற்செய்கைகளை. அவைதமக்கு நல்ல அணிகலம் என்று சொல்லுவர் நல்ல மக்களைப்பெறுதலை.

பருதி:- எ - து பதிவிரதைக்கு அழகாவது இல்லறம் நடத்தல். அது வன்றியே அவளுக்காபரணம் நல்ல புதல்வரைப் பெறுதல்என்றவாறு. 10

காளிங்:— எ - து வாழ்க்கைத் துணைக்கு நன்மையாவது, கற்பினால் மாட்சிமை பெறுதல்; அவர்க்கு அணிகலமாவது, சான்றோரால் மதிக்கப்பட்ட அறிவினையுடைய புதல்வரைப் பெறுதல் என்றவாறு.

மற்றிப்படியாதலால் புதல்வரைப் பெற்றாள் சிறப்பு அறிவிக்கின்றது.

இனிமற்றங்கனம் அன்புடையாளர்க்கே விருந்ினரைப் பேணி வழிபடலாவது என்பதனால் இதன் பின் வந்தது விருந்தோம்பல் என்னும் அதிகாரம்.

உரை விளக்கப்பகுதி:

**நுண்.-** முதல், நன்மையொடுகூடிய அறிந்தோர் என்பதனைத் தோன்றா எழுவாய் என்றார். இனி, முன்னர் "மிகச்செய்து தம் எள்ளுவாரை" "பகையென்னும் பண்பிலதனை" யென்பவற்றுள், பாற்று என வரும் வினைக்குறிப்பு முற்றுக்கேற்க, நூல் முதலியவற்றை வருவித்தெழுதி, அவாய்நிலையான் வந்தது என்றார். ஆதலால் தோன்றா எழுவாய் சொல்லெச்சம் எனப்பெயரிட்டு இலக்கண நூற்கு உரையாசிரியர் முதலாயினார் எழுதிய வாய்பாட்டான் எழுதினாரேனும், இவ்வுரையாசிரியர்க்கு அவாய்நிலையான் வந்ததென்பதே கருத்தென்க. "மீக்கூறு மன்னனிலம்" (386) உருவுகண்டு எள்ளாமை வேண்டும்' (667) என்பனவும் அன்ன. அதன் எனச்சுட்டியதை அவையென்றுரைத்தார்; மாட்சி - நற்குண நற்செய்கையெனப் பன்மையாக்கியதால் என்க.

**இராமா.-** மற்று என்பதை மற்று நன்கலம் என்ப எனக்கூட்டி 'மற்றறிவாம் நல்வினை' என்ற இடத்துப்போல, பிற்பட நன்கலம் என்று சொல்வர் காலங்குறித்து நின்றது எனக் கொள்க.

மேற்கோள்பகுதி:

**குணசா.-** அலகிட்டு ஓசையூட்டுதற்கு எடுத்தாளப்பெற்றுள்ளது (யா. கா. 26.)

**சிவஞான:—** வருகின்ற பாதத்துக்கும் தோற்றுவாய் செய்த தூஉம் ஆயிற்று 'மங்கலம்........பேறு' என்புழிப்போல் (சிவஞானபோ, சூ. 8, அதி. 4)

ஒப்புமைப்பகுதி:

" கடவுட் கற்பொடு குடிக்கு விளக் காகிய
புதல்வர்ப் பயந்த புகழ்மிகு சிறப்பின்
நன்னராட்டி " —அகம். 184: 1—2

" மனைக்கு விளக்கம் மடவார் மடவார்
தமக்குத் தகைசால் புதல்வர்" — நான்மணி. 103.

**குறிப்பு:-மங்கலம்.** தாலி "மற்றை நல்லணிகள் காண் நின் மங்கலம் காத்த மன்னே" (கம்பர்), மங்கலவணியிற் பிறிதணி மகிழாள்'என்பன கொண்டு கழற்றமுடியாத அணிபோல்வன நற்குண நற்செய்கைகள். மற்றைய அணிகளைப்போல்பவர் மக்கள் என்ற உரை சிறத்தல் ஓர்க.

# 7. புதல்வரைப்பெறுதல்

**பரிமே** :—அஃதாவது இருபிறப்பாளர் மூவரானும் இயல்பாக இறுக்கப்படூஉங் கடன் மூன்றனுள் முனிவர்கடன் கேள்வியானும், தேவர் கடன் வேள்வியானும், தென்புலத்தார்கடன் புதல்வரைப் பெறுதலானும் அல்லது இறுக்கப்படாமையின், அக்கடன் இறுத்தற்பொருட்டு நன்மக்களைப் பெறுதல். அதிகாரமுறைமை மேலே பெறப்பட்டது.

**மணக்** :—*புதல்வரைப் பெறுதலாவது புதல்வரைப் பெற்றதனாலாய பயன் கூறுதல்.*

**பழைய** :—*புதல்வரைப் பெறுதலாவது இல்வாழ்க்கைக்குப் புதல்வர் வேண்டுதலால் அவர் குணத்தை யுரைத்தது.*

**பருதி** :—*இல்வாழ்க்கைக்குப் புதல்வர் வேண்டுதலால் அவர் குணத்தை யுரைந்தது.*

**61.** **பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த**
**மக்கட்பே றல்ல பிற.** **(க)**

**உரைப்பகுதி:**

**பரிமே** :— பெறும் அவற்றுள் - ஒருவன் பெறும் பேறுகளுள், அறிவு அறிந்த மக்கட்பேறு அல்ல பிற - அறிய வேண்டுவன அறிதற்குரிய மக்களைப் பெறுதலல்லது பிறபேறுகளை, யாம் அறிவது இல்லை - யாம் மதிப்பதில்லை.

அறிவதென்பது அறிதலைச் செய்வதென அத்தொழின்மேல் நின்றது. காரணமாகிய உரிமை காரியமாகிய அறிதலைப் பயந்தேவிடும் ஆதலான், அத்துணிவுபற்றி 'அறிந்த' என இறந்தகாலத்தாற் கூறினர். அறிவறிந்த என்றதனன், மக்களென்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது. இதனற் புதல்வர்ப்பேற்றினது சிறப்புக் கூறப்பட்டது.

**மணக்** :— *ஒருவன் பெறும் பொருள்களுள் * அறிவுடைய மக்களைப் பெறுதல் பயன்படுவது. ஒழிந்த பொருள்களெல்லாம் அவற்றினும் சிறந்தனவாக யாம் கண்டறிவதில்லை எ - று.* *1*

---

* 'அறிவுடைய மக்கட்பேறு' என பாடங்கொண்டனர்போலும்.

**பரிப்:**—பிற பொருளாயின் ஒரு பிறப்பளவு முடிய நில்லாது. இது இருமைக்குந் துணையாதலால் புதல்வரைப் பெறவேண்டும் என்றது.

**பழைய:**—உலகத்தில் பிறந்தார் பெறும்பேற்றுக்குள் புதல்வரைப் பெறுதலைப்போலப் பேறில்லை.

**பருதி:**—எ - து உலகத்திற் பெறும் பேறுகளுக்குள் புதல்வரைப் பெறுதல்போல் பேறில்லை; அதிலும் பொன்னுமாய் மணமுமானாற்போலே அறிவறிந்த கல்விச் செல்வமான பிள்ளையைப் பெறுதல் என்றவாறு. 1

**காளிங்:**—எ - து அறிவினை முழுதும் அறிந்து நெறிக்குரியராகிய மக்கட் பேறல்லது வேறு பெறும்பேறு சிறந்ததாக யான் கருதி யிருப்ப தொன்றும் இல்லை இல்வாழ்பவர்க்கு என்றவாறு. 1

## உரைவிளக்கப்பகுதி :

**நுண்;**— அறிவது என்பது அறிதல் எனத் தொழிற்பெயராய் நின்றது; 'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணிற் பிறர்மேல்' (1079) என்பதும் அது. ஈண்டு இவ்வாறு உரைத்தது பிற என்னும் பன்மையைப் பரிகரித்தது என்க. "வழுவாவியல்" (142) என்னுங் கோவையாருள் 'குழாங்கள் எல்லாம் ... ... ... நிற்பதாவது' என்பதுமது. இனிப் பெரும்பாலும் துவ்வீறு வினைமுதற்பொருட்டாய் வருவது வந்தவழிக்காண்க. "நுண்ணறிவுடையோர் நூலொடுபழகினும் பெண்ணறிவென்பது பெரும்பேதைமைத்தே" "சான்றோனெனக் கேட்டதாய்" (69) என்பவற்றால் 'அறிவறிந்த' என்பது பெண்ணொழி மிகுசொல். "ஊரவர் கௌவை எருவாக" (1147) என்பது ஆணொழி மிகுசொல். அறிவறியு மக்களென்றது அறிதலுரிமை ஆண்மைக்கே சிறந்ததாகலின் காரணமாகிய உரிமை காரியமாகிய அறிதலைப்பயந்தே விடுமாகலின் அத்துணிவுபற்றி "அறிந்த" என இறந்த காலத்தாற் கூறினார். "போதுகுலாய .... ... ... ... மாதுகுலாய மென்னோக்கி சென்றார்" என்னுங் கோவையாருள் (316) செல்வாரென்பதனைச் 'சென்றார்' என்றதும், 'தலைப்பட்டார் தீரத் துறந்தார், (318) என்பதும், 'விழுமணிப்பூணினானை வீற்றிரீஇ விதியிற் சொன்னான்' என்னுஞ் சிந்தாமணியும் (முத்தி. 307) அது.

**இராமா:**— இனி வேறோர் முடிபு; பெறுமவற்றுள் - ஒருவன்பெறும் பேறுகளுள், அறிவு - அறிவினாலே அறிந்த - அறியவேண்டியவைகளை அறியத்தக்க. மக்கட்பேறல்ல. பிற - மக்கட்பேறல்லாதவையாகிய பிற பேறுகளை, யாம் அறிவதில்லை - பேறாக நாம் மதிப்பதில்லை.

## மேற்கோள் பகுதி :

**காரிரத்ன :**— பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள் (மாற. 251 உரை)

**சுவாமி:** — *வினைமுற்றுப்பெயர் தொழிற் பெயரில் வந்ததற்கு 'அறிவது' என்பது மேற்கோள். (இ. கொ. சூ. 83)*

**ஒப்புமைப்பகுதி :**

"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
மக்கட் பேற்றிற் பெறும் பேறில்லை, —முதுமொழிக். 51.

அறிவறிந்த மக்கள் - உறுப்பான்மட்டும் மக்களாகாமல் அறியவேண்டுவ அனைத்தையும் அறிந்த மக்கள் என ஆண் பெண் இருபாலாரையும் உணர்த்தியதாகக் கொள்வர் சிலர்.

## 62, எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
## பண்புடை மக்கட் பெறின். (உ)

**உரைப்பகுதி:**

**பரிமே:**— எழுபிறப்பும் தீயவை தீண்டா - வினைவயத்தாற் பிறக்கும் பிறப்பேழின்கண்ணும் ஒருவனைத் துன்பங்கள் சென்றடையா, பழி பிறங்காப் பண்பு உடை மக்கட்பெறின் - பிறராற் பழிக்கப்படாத நற்குணங்களையுடைய புதல்வரைப் பெறுவானாயின்.

அவன் தீவினை வளராது தேய்தற்குக் காரணமாகிய நல்வினைகளைச் செய்யும் புதல்வரைப் பெறுவனாயின் என்றவாறாயிற்று.

பிறப்புஏழாவன:

"ஊர்வ பதினொன்றும் ஒன்பது மானுடம்
நீர்பறவை நாற்காலோர் பப்பத்துச்—சீரிய
பந்தமாந் தேவர் பதினா லயன்படைத்த
அந்தமில்சீர்த் தாவரநா லைந்து"

தந்தை தாயர் தீவினை தேய்தற்பொருட்டு அவரை நோக்கிப் புதல்வர் செய்யுந் தானதருமங்கட்கு அவர் நற்குணங் காரணமாகலின், பண்பென்னுங் காரணப்பெயர் காரியத்தின்மேல் நின்றது.

**மணக் :**— *எழுபிறப்பினுந் துன்பங்கள் சாரா; ஒரு பிறப்பிலே பழியின்கண் மிகாத குணத்தினையுடைய புதல்வரைப் பெறுவாராயின், என்றவாறு*

**பரிப்:**—*அறம் பொருளின்பம் என்னும் மூன்றும் பயக்கும் என்பார் முற்பட தியவை திண்டா என்று கூறினார். அன்றியும் தன்னளவும் பிறந்த முன்புள்ள எழுவர்க்கும் எனினும் அமையும்.*

பழைய:— தேவர். அசுரர், நரர், மிருகம், பட்சி, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்னும் எழுபிறப்பிற் சென்றாலும் வினைபற்றி எழும் துன்பங்கள் உளவாகா; பழியில்லாத பிள்ளைகளைப் பெற்றவர்க்கு.

அதெப் படியென்னில், புத்திரனாலே பரகதியுண்டாம் என்பது.

பருதி:—தேவர், மனிதர், மிருகம், ஊர்வன, நீர்வாழ்வன, பட்சி, தாவரம் என்னும் எழுபிறப்பிற் சென்றாலும், ஏழு நரகத்திற் சென்றாலும், துன்பம் வராது; நல்ல புத்திரனைப் பெற்றவர்க்கு என்றவாறு. 8

## உரைவிளக்கப்பகுதி:

நுண்:— தானந்தவங்களைச் செய்யுமக்களென்றது தவத்தின் காரணமான பண்புடைமக்கள் என்றதனால் காரணப்பெயர் காரியத்தின்கண் நின்றது.

## ஒப்புமைப்பகுதி:

'உரிமை மைந்தரைப் பெறுகின்றது று துயர்நீங்கி
இருமையும் பெறற்கென்பது பெரியவரியற்கை.
—கம்ப. அயோத். மந். 63.

"சொல் மருமகப் பெற்றவர் அருந்துயர் துறந்தார்"
—கம்ப. அயோத். மந்திரப். 70

"எழுமைப் பிறப்பும் தீவினைவந் தெய்தாச் சிறப்பும்"
—விநாயக.அரசி. 21

"நீ என் அருமை நன் மகனாலன்றோ இருமையும் அடைவாய்"
—திருவிளை. மாமனாக. 5.

'கணவர் உவப்ப புதல்வர்ப் பயந்து -தம்கணவர் இம்மை மறுமையிற்பெறும் பயனைப் பெற்றேம் என்று மகிழும்படி பிள்ளைகளைப் பெற்று'
—மதுரை 600 நச். உரை.

குறிப்பு:—தாம் மக்களாய்ப் பிறந்து, பண்புடை மக்களைப் பெற்றார், பின்னும் தீவினைவயத்தான் வரும் மக்கட் பிறப்பினிழிந்த பிறப்பாகிய விலங்குப் பிறப்பு முதலியவற்றை எய்தார் ஆகலின் எழுபிறப்பு என்பதற்கு வினை வயத்தான் எழுகின்ற மக்கட் பிறப்பு என்று உரைகாண்டலும் ஒன்று. இப்பொருளில் இப்பிறப்பேயன்றி எழுகின்ற பிறப்பிலும் என உம்மை இறந்தது தழீஇநின்றது

63. தம்பொரு ளென்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையான் வரும். (௩)

உரைப்பகுதி :

**பரிமே :—** தம் மக்கள் தம்பொருள் என்ப - தம்புதல்வரைத் தம்பொருளென்று சொல்லுவர் அறிந்தோர், அவர் பொருள் தந்தம் வினையான் வரும் - அப்புதல்வர் செய்த பொருள் தம்மைநோக்கி அவர்செய்யும் நல்வினையானே தம்பால் வரும் ஆதலான்.

தந்தம் வினையென்புழித் தொக்கு நின்ற ஆறும்வேற்றுமை முருகனது குறிஞ்சி நிலம் என்புழிப்போல உரிமைப் பொருட்கண் வந்தது. பொருள் செய்த மக்களைப் பொருளென உபசரித்தார். இவையிரண்டு பாட்டானும் நன்மக்கட்பெற்றார் பெறும் மறுமைப் பயன் கூறப்பட்டது.

**மணக்:—** *தம்முடைய பொருளென்று சொல்லுவர் உலகத்தார் தம் மக்களை; * அம்மக்களுடைய பொருள் தத்தம்முடைய வினையோடே கூட வருதலான்.* 3

**பரிப்:—** *மக்களுக்குண்டான பொருளும் தமக்குண்டான பொருளோடு ஒத்த இயல்பிற்றாய் இம்மை மறுமைக்கண் இன்பம் பயத்தலின், பொருளாவாரும் மக்கள் என்று கூறிற்று.*

**பழைய :—** *தமக்கு அழியாத உடைமையாவது புதல்வர். அவரவர் பேறு தாம் தாம் செய்த வினையால் வரும் என்றவாறு.*

**பருதி :—** *எ - து தமக்கு அழியாத உடைமையாவர் புதல்வர். அந்தப்புதல்வரென்னும் பேறு தாந்தாம் செய்த விதி வசத்தால் வரும் என்றவாறு.* 7

**காளிங் :—** *எ - து குணச்செல்வம் குலச்செல்வம் பொருட்செல்வம் செவிச் செல்வம் என்றிவை முதலாக உலகத்து எண்ணி வருகின்ற செல்வங்கள் அனைத்தினும் இனிய செல்வமாவது அறிவுடைய புதல்வரைப் பெறுதல்; புதல்வர்க்குச் செல்வமாவது பெரிய தகைமையாகிய தவத்தினால் வருவது என்றவாறு.* 6

உரைவிளக்கப் பகுதி :

**நுண் :—** *தந்தம் வினை யென்புழித் தொக்குநின்ற ஆறும் வேற்றுமை உரிமைப்பொருட்கண் வந்தது. ஆறுவதன் சூத்திரத்துள் ' இயற்கையின்*

---

* "மக்களாகிய"—பா - ம்,

உடைமையின் முறைமையிற் கிழமையின்' (தொல். சொல். 80) என்னுங் கிழமைக்கிழமை என்க. இதற்கு நச்சினார்க்கினியர் நிலம் பொருள் காலம் மூன்றனையும் பற்றிவரும் என்று முருகனது குறிஞ்சி. வெள்ளியதாட்சி, காட்டது யானை எனக்காட்டினார். அஃதன்றியும் ஈண்டு வினையும் கிழமைக்கிழமையாயிற்று. அடிப்பாடு காரணமாகத் தந்தம் என விகார மாயிற்று. அடிப்பாட்டினைத் தொடைநோக்கி யென்பர் இவ்வுரை ஆசிரியர். பதிற்றுப் பத்தினுள் 'குவியற்கண்ணி' (3-ம் பத்-1) என்னுந் தொடைநோக்கி 'மிதியற் செருப்பிற் பூழியர் கோவே' என வலிந்து நின்றது என்ற உரையானும் அறிக.

## மேற்கோள்பகுதி:

**மயிலை:—** 'தம்பொருளென்ப' என்பது சிறப்பினால் உயர்திணை அஃறிணையானதற்கு மேற்கோள் (நன் சூ. 378.)

**சங்:—** இவரும் உயர்திணை அஃறிணையானதற்கே மேற்கோள் காட்டுவர். (நன், சூ. 379.)

**நச்:—** 'தம்பொருளென்ப' சிறப்பினால் உயர்திணை அஃறிணை யான தற்கு மேற்கோள் (தொல். சொல். 410.)

**யா. வி. உரை:-** மகரக் குறுக்கம் வந்த செய்யுளுக்கு மேற்கோள் (சூ. 2)

## ஒப்புமைப்பகுதி:

"பொன்போற் புதல்வர் பெருதீரும்" —புறம். 9: 4.
"பொன் போற் புதல்வர்" —ஐங்குறு. 265.
"மக்களின் ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை." —நான்மணி. 55.

## 64. [1] அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
## சிறுகை யளாவிய கூழ். (சு)

## உரைப்பகுதி:

**பரிமே;—** அமிழ்தினும் ஆற்ற இனிதே-சுவையான் அமிழ்தத் தினும் மிக இனிமை யுடைத்து; தம்மக்கள் சிறுகை அளாவிய கூழ் - தம்மக்களது சிறுகையான் அளாவப்பட்ட சோறு.

---

1 "அமுதினும்" காளிங்—பா - ம்.

சிறுகையான் அளாவலாவது [2] "இட்டுந் தொட்டுங் கௌவியுந் துழந்தும் நெய்யுடையடிசின் மெய்பட விதிர்த்தல்."

மணக் .— இனிமையுடைத்தாகிய அமிழ்தினும் மிக இனிது தம்முடைய மக்கள் சிறுகையாலே அளையப்பட்ட கூழ் என்றவாறு. 4

பரிப்;— இன்பம் தரும் என்பார் பின்; (குறள் 65) முற்படச் சுவைக்கு இனிதென்று கூறுகின்றார்.

பழைய :— தேவர்களமுதம் அமுதமாகாது, அதனினும் அமிர்தம் பிள்ளைகள் சிறுகையான் அளைந்த அசனம் என்பதாம்.

பருதி :— எ - து அமிர்தத்திலும் தன் பிள்ளையின் சிறுகையினால் அளாவி யளைந்த அசனம் இரசம் என்றவாறு. 5

காளிங்:— எ - து அமரர் கடைந்தெடுத்த அமிர்தத்தினும் மற்றிது மிகவும் தமக்கினிமை உடைத்து; அது யாதெனில் நம் புதல்வரது விரகறியாப் பருவத்து அச்சிறு கையால் தாம் உண்ணும் காலத்து அங்கோடு இங்கோடு அளாவிய உணவானது என்றவாறு. 3

**உரைவிளக்கப்பகுதி :**

நுண் :— இனிது - இனிமையையுடைத்து என வினைக்குறிப்புச் சொல்லாயிற்று. 'இட்டுந் தொட்டும் கவ்வியுந்துழந்தும் நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தல்' என்பது பாட்டுக்குறை. இவ்வுரையாசிரியர் பழைய பாட்டினையே வாசகமாக்குவர்.

**மேற்கோள் பகுதி :**

குணவீர :— 'அமிழ்தினும் ஆற்ற இனிதே' உயர்வுசிறப்பும்மை (நேமி. சூ. 52 உரை.)

யா. வி. உரை :— மருட்செந்தொடைக்கு மேற்கோள் (சூ 59) விகற்பக்குறள் வெண்பாவிற்கு மேற்கோள் (சூ. 50)

குண :— மருட்செந்தொடைக்கு மேற்கோள் (யா. கா. 43)

**65. மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்**
**சொற்கேட்டல் இன்பஞ் செவிக்கு. (ரு)**

---

2 புறநா. 188.

## உரைப்பகுதி:

**பரிமே:—** உடற்கு இன்பம் மக்கள் மெய் தீண்டல் - ஒருவன் மெய்க்கின்பமாவது மக்களது மெய்யைத் தீண்டுதல், செவிக்கு இன் பம் அவர் சொற்கேட்டல் - செவிக்கின்பமாவது அவரது சொல்லைக் கேட்டல்.

மற்று வினைமாற்று. மக்களது மழலைச்சொல்லேயன்றி அவர் கற்றறிவுடையராய்ச் சொல்லுஞ் சொல்லும் இன்பமாகலின், பொதுப் படச் சொல்லென்றார். தீண்டல் கேட்டல் என்னுங் காரணப்பெயர்கள் ஈண்டுக் காரியங்களின்மேல் நின்றன.

**மணக்:—** தம்மக்கள் தமதுடம்பினைச் சார்தல் தம்முடம்பிற்கு இன்பமாம். அவர் சொற்களைக் கேட்டல் செவிக்கின்பமாம் என்றவாறு. 5

**பரிப்:-** இதுவரை இருகுறள்களால் ஊறும் ஓசையும் இனிதாம் என்றார். ஒளியும் நாற்றமும் கூறாராயினர் செயற்கையானும் விளைதலின்

**பழைய:—** மக்கள் தாய்தந்தையராகிய தம்முடைய மெய்யைத் தீண்டில் உடற்கு இன்பம். அவர்கள் வார்த்தையைக்கேட்டல் செவிக் கின்பம்.

*** பருதி:—** எ - து தன் புதல்வர் மெய்தீண்டல் உடற்கு இன்பம் அவர் வார்த்தை கேட்டல் ஐம்புலத்துள் ஒன்றான செவிக்கு இன்பம் என்றவாறு.

**காளிங்:—** எ - து இனிய புதல்வர் வளர்ந்தும் தளர்நடையிட்டும் வந்து ஏறி, மற்றவர் மெய்யினைத் தீண்ட, அதுவே இல்வாழ்வோர்க்கு உடற்கின்பமாவது. பின்பு அறிவுடையராயினவிடத்து எழுத்தோடு புணர்ந்த சொல் பிறந்ததாயின் மற்றவர் எழுத்தோடு புணர்ந்த சொற் கேட்டல் முன்பினும் தமது செவிக்கு இனிய இன்பமாம் என்றவாறு. 4

## உரைவிளக்கப்பகுதி:

**நுண்:—** மற்று - வினைமாற்று. தீண்டல் கேட்டல் காரணமாகப் பிறக்கும் இன்பம் என்னாது அவற்றையே இன்பமென்றதனால் காரணப் பெயர் காரியத்தின்மேல் நின்றது. இவ்வாறு வருவனவற்றிற்கெல்லாம் இதனைக்கொண்டே பொருளாக்குக.

---

* 'தீண்டில்' 'கேட்கில்' எனவும் பாடம்.

**மேற்கோள்பகுதி :**

**யா. வி. உரை:—** குற்றியலிகரம் வந்த செய்யுளுக்கு மேற்கோள் (சூ. 2.) குற்றியலிகரம் அலகுபெறுமைக்கு மேற்கோள் (சூ. 4.)

**66. குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.** (சூ)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** குழல் இனிது யாழ் இனிது என்ப - குழலிசை யினிது யாழிசை யினிதென்று சொல்லுவர், தம்மக்கள் மழலைச்சொல் கேளாதவர் - தம்புதல்வருடைய குதலைச் சொற்களைக் கேளாதவர்.

குழல் யாழ் என்பன ஆகுபெயர். கேட்டவர் அவற்றினும் மழலைச்சொல் இனிதென்பர் என்பது குறிப்பெச்சம். இனிமைமிகுதி பற்றி மழலைச்சொல்லைச் சிறப்புவகையானுங் கூறியவாறு. இவை மூன்று பாட்டானும் இம்மைப்பயன் கூறப்பட்டது.

**மணக் :—** *குழலோசை யினிது. யாழோசை யினிது என்று சொல்வர், தம்மக்களது மழலைச்சொற்களைக் கேளாதவர். கேட்டவர் சொல்லார்.*

**பரிப்:—** *பிறவாற்றானும் வரும் இன்பமும் இதனோடு ஒவ்வா தென்றது. இதனானே மற்றுள்ள பொறிகளான் வரும் இன்பமும் சொன்னாராகக் கொள்ளப்படும். ஒன்றெனமுடித்தலான் இத்துணையும் மக்களான் ஆகிய பயன் கூறப்பட்டது.*

**பழைய:—** *குழலினோசையினிது அதிலும் யாழினோசை இனிது என்பர்; தம்மக்கள் மழலைச்சொல்லைக் கேளாதவர்.*

**பருதி :—** *எ - து குழலோசை நல்லது யாழோசை நல்லது என்பர் தம் மக்களிடம் மழலைச்சொல் கேளாதபேர் என்றவாறு.* (4)

**காளிங் :—** *எ - து பரதம் பற்றிய குழலின் ஓசையும் பண்ணினைப் பற்றிய யாழினோசையும் மிக இனிது என்பர்; குழவிப் பருவத்து இயல்பாகிய மழலைச்சொல்லைப் பெரிதும் செவிக்குச் சுவையாகக் கேட்டறியாத புல்லறிவாளர் என்றவாறு.* (2)

**உரைவிளக்கப்பகுதி :**

**நுண் :—** *கேளாதவர் எனவே கேட்டவர் மழலையே இனிதென்பர் என்பது தோன்றுதலான் அது குறிப்பெச்சம்.*

**மேற்கோள்பகுதி:**

*குண் :— குற்றியலிகரம் ஒற்றியல்பினவாய் நின்று அலகு பெருமைக்கு மேற்கோள். (யா. கா. 38.)*

**நச் :—** *இவரும் இதற்கே மேற்கோள் காட்டுவர். (தொல். செய்யு. 8.)*

**ஒப்புமைப்பகுதி :**

"ஐய, காமரு நோக்கினை அத்தத்தா என்னுநின்
தேமொழி கேட்டல் இனிது." —கலி. 80 : 14

'யாழொடும் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினும் தந்தையர்க்கு
அருள் வந்தனவால் புதல்வர்தம் மழலை." —புறம். 92 : 1 — 3.

"அவர்மழலை கேட்டல் அமிழ்தினும் இனிதே." —இனியவை 15.

"எழுத்தி னுறழாது வழுத்து பொருளின்றிக்
குறிப்பொடு படாது வெறித்தபுன் சொல்லே
ஆயினும் பயந்ததன் சேயவர் சொலுமொழி
குழலினும் யாழினும் அழகிதாம்." —திருக்கழு. 28 : 2 — 5.

**67. தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல். (எ)**

**உரைப்பகுதி:**

**பரிமே :—** தந்தை மகற்கு ஆற்றும்நன்றி-தந்தை புதல்வனுக்குச் செய்யும் நன்மையாவது, அவையத்து முந்தி இருப்பச்செயல்-கற்றோரவையின்கண் அவரினும் மிக்கிருக்குமாறு கல்வி யுடையனுக்குதல்.

பொருளுடையனுக்குதல் முதலாயின துன்பம்பயத்தலின் நன்மையாகா என்பது கருத்து. இதனால் தந்தைகடன் கூறப்பட்டது.

**மணக் :—** *தந்தை மகனுக்குச் செய்யும் உபகாரம் அவையின் கண்ணே முந்தியிருக்குமாறு கல்வியுண்டாக்குதல் என்றவாறு. (9)*

**பரிப் :—** *இது புதல்வர்க்குக் கல்வியுண்டாக்குக என்றது.*

**பழைய :—** *புதல்வற்குத் தந்தைசெய்யும் உதவியாவது ஸ்தானத்தில் நடுவே முந்தி அழைப்பித்து இருக்கும்படியாக அறிவுண்டாக்குதல்*

**பருதி :—** எ - து புதல்வற்குத் தந்தை செய்யும் [1]உதவி ஐந்து வயதில் வாசிப்பிவித்து சமர்த்தனுன பின்பு ஆஸ்தானத்தில் அழைத்து இருத்திக்கொள்ளும்படியாக அறிவுண்டாக்குதல் என்றவாறு. (10)

**காளிங் :—** எ - து மற்று ஆங்கனம் இனிமை நுகர்ந்து இன்புறாஉந் தந்தையானவன் புதல்வருக்குச் செய்யும்நன்மை யாதோவெனின் பெரிய நன்ஞானக்கேள்வி உடையனுகச் செய்து சான்றோர் அவையின் கண் சென்று மற்றவரால் முதன்மை பெற்றிருப்பதாகச் செய்கை என்றவாறு. (6)

**ஒப்புமைப்பகுதி :**

> "எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன
> விச்சைமற் றல்ல பிற." —நாலடி. 1 4,
>
> "குழுமும் அவையின் முந்தியிருப்ப அறிவுகொளுத்தல் வேண்டுமால்" —வீரா, அரசி. 21

**68. தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது. (அ)**

**உரைப்பகுதி:**

**பரிமே :—** தம்மக்கள் அறிவுடைமை-தம்மக்களதறிவுடைமை, மா நிலத்து மன் உயிர்க்கெல்லாம் தம்மின் இனிது - பெரியநிலத்து மன்ஞ நின்ற உயிர்கட்கெல்லாந் தம்மினும் *இனிதாம்,

ஈண்டு அறிவென்றது இயல்பாகிய அறிவோடு கூடிய கல்வி யறிவினை. மன்னுயிர் என்றது ஈண்டறிவுடையார் மேனின்றது. அறிவுடைமை கண்டு இன்புறுதற்கு உரியார் அவராகலின். இதனுல் தந்தையினும் அவையத்தார் உவப்பர் என்பது கூறப்பட்டது.

**மணக் :—** தம்மக்கள் அறிவுடையரானுல் அது, தம்மினும் உலகத்து உயிர்கட்கெல்லாம் இனிதாம் என்றவாறு. 7

**பரிப் :—** மேற் புதல்வரைக் கற்பிக்கவேண்டும் என்றுர். அதனுற் பயன் என்னை யென்றுர்க்கு அவர் நன்னெறி ஒழுகுதலானே தமக்கும் பிறர்க்கும் இனிமையுண்டாம் என்று கூறப்பட்டது

---

[1] 'உதவி அவை ஐந்துள் முந்தியிருப்ப' எனப்பாடங்கொண்டார்,

* 'இனிது - நன்மையாம் நன்மையாகிறது கலவியை அறிந்து ஒருவருக்கும் தீங்கு செய்யாமல் இருக்கிறது'. — **கவிரா ஜபண்டிதர்.**

**பழைய :—** தம்மிலும் தம்புதல்வர் அறிவினற் பெரியாராயின் உலகத்துள்ளோர்க்கெல்லாம் மகிழ்ச்சியாம்.

**பருதி :—** எ - து தம்மிலும் புதல்வர் அறிவினராகில் உலகத்தார்கெல்லாம் இனிமையாம் என்றவாறு. 2

**காளிங் :—** எ - து தம் புதல்வர் அறிவுடைமையின் மிகுதியைக் கண்டு தாம் இன்புறுவது அன்றி. மாநிலத்து மன்னுயிர்கட்கு எல்லாம் இன்புறத்தக்க இனிமையைக் கொடுக்கும் என்றவாறு. 5

**உரைவிளக்கப்பகுதி:**

**இராமா :—** தம்மின் என்னும் உறழ்பொருளிலேவந்த இன் உருபு இனிது என்னும் குறிப்புவினைகொண்டு முடிந்தது.

இனி வேறோர் உரை :— தங்களைக்காட்டிலும் தங்கள் புத்திரர் அறிவுடையார் என இருக்கும் தன்மையானது தங்களுக்கு இனிதாதலே அன்றி உலகத்தில் நிலைபெற்ற எல்லா உயிர்கட்கும் இனிதாம் என்றவாறு.

எல்லாமன்னுயிர்க்கும் எனக்கூட்டி முற்றும்மை விகாரப்பட்டு நின்றது எனக்கொண்டு அதனை இறந்தது தழீஇய எச்ச உம்மையுமாக்குக. அறிவுடையராயின காலத்துப் பிறிதோருயிர்க்கும் தீங்கு செய்யாராதலால் மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது என்றார். தாதையர் தம் புதல்வரைத் தம்மினும் கல்வியறிவுடையராய்ச் செய்யவேண்டும் என்பது இதன் கருத்து.

**69. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய். (கூ)**

**உரைப்பகுதி:**

**பரிமே :—** ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் – தான் பெற்ற பொழுதை மமிழ்ச்சியினும் மிகமகிழும், தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் - தன்மகனைக் கல்வி கேள்விகளான் நிறைந்தான் என்று அறிவுடையோர் சொல்லக் கேட்ட தாய்.

[1] கவானின்கட்கண்ட பொதுவுவகையினுஞ் சால்புடையனெனக் கேட்ட சிறப்புவகை பெரிதாகலின் பெரிதுவக்கும் எனவும், பெண் இயல்பால் தானாக அறியாமையின் கேட்டதாய் எனவுங்கூறினர். அறிவுடையார் என்பது வருவிக்கப்பட்டது, [2] சான்றோன் என்றற்குரியர்

---

[1] 'கவானின் மகற்கண்ட.' பி. ம்.

[2] 'சான்றோன் - நல்லவன்'. — **கவிராஜபண்டிதர்.**

அவராகலின். தாயுவகைக்கு அளவின்மையின், அஃது இதனாற் பிரித்துக்கூறப்பட்டது.

**மணக் :—** தான் பெற்ற காலத்தினும் மிக மகிழும்; தன்மகனைச் சான்றோனென்று பிறர் சொல்லக் கேட்டகாலத்துத் தாய் என்றவாறு. 8

**பரிப் :—** யாதும் அறியாத பெண்டிரும் மகிழ்வர் என்பது கருத்து

**பழைய :—** சனனகாலத்தில் ஆண்பிள்ளையென்று சொல்லக் கேட்ட மகிழ்ச்சியினும் தன்பிள்ளை அறிவினாற் பெரியன் என்று கேட்ட தாய் மகிழ்ச்சியுடையளாம்.

**பருதி :—** எ - து ஈன்றகாலத்தில் ஆண்பிள்ளை என்று சொல்லக் கேட்ட மகிழ்ச்சியிலும் தன் பிள்ளை அறிவினால் பெரியவன் என்று கேட்ட தாய்க்கு அதிலும் மகிழ்ச்சி என்றவாறு. 3

**காளிங் :—** எ - து மற்றிவனைத் தான் முன்னம் ஈன்றெடுத்த அப்பொழுதினும், பெரிதும் மனமகிழும்; பின் புதல்வனை உலகத்துச் சிறந்தோர் பலரும் 'இவன் பெரிதுஞ் சால்புடையான்' என்று எடுத்து உரைப்பக் கேட்ட தாயானவள் என்றவாறு. 8

## உரைவிளக்கப்பகுதி :

**நுண் :—** சான்றோன் - கல்வி கேள்விகளால் நிறைந்தோன். பெரிது என்பது வினைக்குறிப்புப் பெயராகாது உரிச்சொல்லாய் மிக எனக் குணத்தின்மேல் நின்றது.

**இராமா :—** தாயின் மகிழ்ச்சிக்கு அளவில்லாததினாலே மேலே தம்மின் என்று கூட்டிச் சொன்னதல்லாமல் இதனாலே பிரித்துச் சொல்லப் பட்டது.

## ஒப்புமைப்பகுதி:

"மீனுண் கொக்கின் றூவியன்ன
வானரைக் கூந்தன் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டன னென்னு முவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே,"

—புறநா. 277.

" நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டஎன்
முலையறுத் திடுவென் யானெனச் சினை இக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே."

—புறநா. 278

" வையகமாம் குலமடந்தை மன்னபயன்
தன்னுடைய மரபு கேட்டே
ஐயனையான் பெற்றெடுத்த அப்பொழுதும்
இப்பொழுதொத்திருந்த தில்லை "

—கலிங். 210

" மற்றவன் சொன்ன வாசகம் கேட்டலும் மகனைப்
பெற்ற அன்றினும் பிஞ்ஞகன் பிடித்த அப்பெருவில்
இற்ற அன்றினும் எறிமழுவாளவன் இழுக்கம்
உற்ற அன்றினும் பெரியதோ ருவகையன் ஆனான் "

—கம்ப, அயோத்' மந்திர. 42

குறிப்பு :— *தானாகவே அறிவாளராயினும், பிறர் சொல்லக் கேட்ப திலேயே இன்பமும் உண்மையும் இருந்தலின் கேட்டதாய் என்றாள் என்ற கருத்து பெண்ணுயர்வு தருதல் காண்க.*

## 70. மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை * என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

**உரைப்பகுதி :**

**பரிமே :—** தந்தைக்கு மகன் ஆற்றும் உதவி - கல்வியுடைய னாக்கிய தந்தைக்கு மகன் செய்யுங் கைம்மாறாவது, இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல் - தன்னறிவும் ஒழுக்கமுங் கண்டார் இவன் தந்தை இவனைப்பெறுதற்கு என்ன தவஞ் செய்தான் கொல்லோ என்று சொல்லுஞ் சொல்லை நிகழ்த்துதல்,

சொல் என்பது நிகழ்த்துநலாகிய தன்காரணந் தோன்ற நின்றது. நிகழ்த்துதல் அங்ஙனஞ் சொல்ல ஒழுகல். இதனாற் புதல்வன் கடன் கூறப்பட்டது.

**மணக் :—** மகன் தந்தைக்குச் செய்யும் உபகாரம் இவன் தந்தை என்னதவம் செய்தான் என்று உலகத்தார் சொல்லுஞ் சொல்லைப் படைத்தல் என்றவாறு. 10

இது நெறியின் ஒழுகுவாரை உலகத்தார் புகழ்வார் ஆதலான் மகனும் ஒழுக்கமுடையனாக வேண்டும் என்றது.

**பரிப் : –** இவ்வதிகாரத்துப் புதல்வரைக் கற்பிக்க என்றதனானும், புதல்வனும் உலகத்தார் புகழுமாறு ஒழுகுக என்றதனானும் நால்வகை யாச்சிரமத்தில் இல்வாழ்வானிலக்கணம் அன்புடைமை முதலாகக் கூறு கின்றாராதலானும் இவ்வதிகாரத்தான் முற்படப் பிரமசரிய இலக்கணம் கூறியவாறாயிற்று$.

**பழைய :—** புதல்வர் தந்தைக்குச் செய்யும் உபகாரம் இவனைப் பிள்ளையாய்ப் பெறும்படியாக இவர் தந்தை என்னதவம் பண்ணினரோ என்று சொல்லும்படியாக அறிவுடையனாதல்.

**பருதி :—** எ - து புதல்வர் தந்தைக்குச் செய்யும் உதவி இவரை பிள்ளையாகப் பெறும்படி இவர்தந்தை என்னதவஞ் செய்தாரோ என்று சொல்லும்படியாக அறிவுடையனாதல் என்றவாறு. 7

**காளிங் :—** எ - து மற்று இங்ஙனம் தன்னைக் கல்வியாலும் மற்றறிவுடைமையாலும் உணர்வுடையனாகச்செய்த தந்தைக்குப்புதல்வன் செய்யுங் கைம்மாறு யாதோவெனின், மற்று, இவன் தந்தையானவன் இவனைத் தனக்குப் புதல்வனாகப் பெறுதற்கு, 'முன்பு என்னதவம் செய் தானோ' என்று உலகத்தார் ஏத்தி யெடுத்து உரைக்கும் சொல்* என்ற வாறு. 9

## உரைவிளக்கப்பகுதி :

**இராமா :—** மற்ற இசையெச்சங்கள் குறிப்பெச்சங்கள் வருவித்துச் சொல்லப்பட்டன.

---

* 'இவன் தந்தை என்னோற்றான் கொல் என்னும்சொல் - தான் நல்ல ஆசாரத்துடனே யும், வணக்கத்துடனேயும், நல்லவிரதத்துடனேயும், நடந்தால் அதைக் கண்டபேர் இப்படிப்பட்ட பிள்ளையைப் பெற்ற தகப்பன் என்ன தபசு பண்ணினோ என்று சொல்லிக்கொள்வார்கள்''

**—கவிராஜபண்டிதர்.**

$ இக்கருத்து ஏலாமை இல்வாழ்க்கை வாழ்க்கைத் துணை நலம் இவற்றின் அமை வால் அறிக.

## 8. அன்புடைமை

பரிமே :—அஃதாவது அவ்வாழ்க்கைத்துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார்கண் காதலுடையனாதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும். இல்லறம் இனிது நடத்தலும் பிறவுயிர்கண்மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயனாகலின், இது வேண்டப்பட்டது. வாழ்க்கைத்துணைமேல் அன்பில்வழி இல்லறம் இனிது நடவாமை "[1]அறவோர்க்களித்தலும் அந்தண ரோம்பலுந், துறவோர்க்கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின், விருந்தெதிர் கோடலும் இழந்த வென்னை" என்பதனானும், அதனாலருள் பிறத்தல் "[2]அருளென்னும் அன்பீன் குழவி" என்பதனானும் அறிக.

மணக் :— அன்புடைமையாவது தன்னைச் சார்ந்தார்மாட்டுக் காதலுடையவனாதல்.

பரிப் :- எல்லாக்குணங்களினும் சிறந்ததாகலின் முற்படக் கூறினார். அன்பு சிறந்தவாறு என்னையெனின், ஈண்டுக் கூறுகின்ற அறம் தானமாகலின், அஃது அன்பிலாதவர்மாட்டுச் சென்று ஏற்பாரிலர் ஆதலால் சிறந்ததாயிற்று என்க.

பழைய:- தன் புதல்வரிடத்து அன்புடைமை உயிர்களிடந் தோறும் உண்டாக வேண்டுமாதலின் அன்புடைமையாயிற்று.

பருதி:- அன்புடைமையாவது புதல்வரிடத்திலே அன்புடைமை, ஆத்மாக்களிடந்தோறும் உண்டாகவேணும் ஆதலால் அன்புடைமையாயிற்று.

**71. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்.** (க)

**உரைப்பகுதி:**

பரிமே :—அன்பிற்கும் அடைக்கும் தாழ் உண்டோ - அன்பிற்கும் பிறரறியாமல் அடைத்துவைக்குந் தாழுளதோ? ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்—தம்மால் அன்புசெய்யப்பட்டாரது துன்பங்கண்டுழி

[1] சிலப்- கொலைக். 71 - 73. [2] குறள். 757.

அன்புடையார் கண்பொழிகின்ற புல்லிய கண்ணீரே உண்ணின்ற அன்பினை எல்லாரும் அறியத் தூற்றும் ஆதலான்.

உம்மை சிறப்பின்கண் வந்தது. ஆர்வலரது புன்மை கண்ணீர்மேல் ஏற்றப்பட்டது. காட்சியளவைக்கெய்தாதாயினும் அநுமான அளவையான் வெளிப்படுமென்பதாம். இதனால் அன்பினதுண்மை கூறப்பட்டது.

**மணக்:**—*அன்பினையடைக்குந் தாழும் உளதோ? அன்புடையார் மாட்டு உளதாகிய புல்லியகண்ணின் நீர்தானே ஆரவாரத்தைத் தரும் என்றவாறு.* 10

**பரிப்:**— *அன்பென்பது யாதோ என்றார்க்கு அன்புடையார் மாட்டுக் கண்ணீர் தோன்றும் அதனானே அறிந்துகொள்க என்றவாறு. இதனானே இன்பத்திற்கும் இயைந்தவாறு கூறினார் என்று கொள்ளப்படும்.* 10

**பழைய:**—*அன்பு மனத்திலே இருந்தால் அதனைப் புறத்திலே புறப்படாமல் அடைத்து வைக்குந் தாழ் இல்லை. அன்பு இருந்த இடம் கண்ணீர் காட்டிக்கொடுக்கும்.*

**பருதி:**- *எ - து அன்புமனத்திலே இருந்தால் அதனைப் புறத்திலே புறப்படாமல் அடைக்குந்தாழும் இல்லை; அன்பிருந்த இடங் கண்ணீர் காட்டிக் கொடுக்கும் என்றவாறு.* 8

**காளிங்:**—*எ - து நெஞ்சினால் ஓரவர் மாட்டு ஒருவர் அன்புடையராயின் மற்றதற்கு முண்டோ பயன்படாமல் அடைப்பதோர் கருவி. அதனால் ஒருவர்மாட்டு உள்ளத்து விருப்பமுடையவரது மென்கண்மை தானே பலரறியும் பூசலைத்தரும் என்றவாறு.*

பூசலென்பது விசேஷம். புன்கண் என்பது கிருபை. கண்ணீர் என்பது பெருமை.

**உரைவிளக்கப் பகுதி:**

**இராமா :**—*அன்பிற்கும் என்ற உம்மை சிறப்புப்பொருள் படவும், உண்டோ என்ற ஓகாரம் எதிர்மறைப்பொருள்படவும் நின்றன. தெளிவுப்பொருள் படநின்ற ஏகாரம் குறைந்தும் நின்றது. புன்மை இங்கே துன்பத்தைக்குறித்து நின்றது. தாள் என்பது சினையாகுபெயராய்த் தாளிடப்பட்ட கதவின்மேனின்றது. இப்படிச்சொன்னதினாலே அன்பு பிரத்யட்சப்பிரமாணத்தால் காணக்கூடாதாகவும் அநுமானப்பிரமாணத்தால் வெளிப்படும் என்பதாயிற்று.*

**மேற்கோள்பகுதி :**

**சிவஞ்ஞான** :-முலைப்பாலும் கண்ணீரும் அன்பை விளக்கும் என்பது 'அன்பிற்கும்..........தரும்' என்பதனுல் அறிக. (சிவஞானபோ. சூ. 8, அதி. 2)

**யா. வி. உரை**:-இரண்டாம் எழுத்தொன்றிவந்த அடியெதுகைக்கு மேற்கோள். (சூ. 36.)

குறிப்பு :—"கண்ணீரரும்பல் இறைவன் அருட்செயல்களை உளங்கொண்ட காலத்தும், இன்பக்காலத்தும், துன்பக்காலத்தும் நிகழும் யாண்டும் அன்புபற்றி நிகழ்வதொன்ருகலானும், கண்ணீரரும்பல் மென்மையின் இளக்கத்தின் தன்மையாதலானும் புன்கணீர் என்றது புற்கென்ற மென்மையின் விளைவாகிய கண்ணீரை.

## 72. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
## என்பும் உரியர் பிறர்க்கு. (உ)

**உரைப்பகுதி :**

**பரிமே**:—அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர் - அன்பிலாதார் பிறர்க்குப் பயன்படாமையின் எல்லாப்பொருளானுந் தமக்கே யுரியர்; அன்புடையார் என்பும் பிறர்க்கு உரியர்-அன்புடையார் அவற்ருனே யன்றித் தம்முடம்பானும் பிறர்க்குரியர்.

ஆனுருபுகளும் பிரிநிலையேகாரமும் விகாரத்தால் தொக்கன; என்பு ஆகுபெயர். என்புமுரியராதல் "[2]தன்னகம் புக்க குறு நடைப் புறவின் தபுதி யஞ்சிச் சீரை புக்கோன்" முதலாயினர்கட் காண்க.

**மணக்**:—அன்பிலாதார் எல்லாப் பொருளையுந் தமக்கு உரியராக வுடையர். அன்புடையார் பொருளேயன்றித் தம்முடம்புக்கு அங்கமாகிய எலும்பினையும் பிறர்க்கு உரிமையாக வுடையர் என்றவாறு.

அன்புடையார்க்கல்லது அறஞ்செய்தல் அரிது என்ருயிற்று.

**பழைய**:—அன்பிலார் தமக்கும் அன்பில்லை- அன்புடையார் என்பும் பலர்க்குப் பிரயோசனப்படும்.

---

1 'சரீரம் பிறருக்கு உரியராய் இருக்கிறது பொருளையும் கொடுத்து, தங்கள் கையினுலே டுக்கிறதும் பிடிக்கிறதும் செய்வது' —கவிராஜபண்டிதர்.

2 புறநா, 43.

பருதி:—எ - து மனத்தில் அன்பில்லாதார் எல்லாவற்றாலும் தமக்குரியர். அன்புடையார் என்பும் பலர்க்குப் பிரயோசனப்படும் என்றவாறு.9

காளிங்:—எ - து ஒருவர்மாட்டும் தன்னெஞ்சில் அன்பில்லாதவர் யாவரேஅவரே தம்முடம்பைப் பேணி, பிறர்க்கும் ஈயாது, பின்பும் நகைப்புக்கு உரியவராவார்; மற்றிவ்வாறன்றிப் பிறர்மாட்டு அன்புடையார் தமது பொருளெல்லாங் கொடுப்பதுமின்றித், தமது உடம்பு தானும் பிறவுயிர்க்கு ஓர் இடுக்கண்வரின் ஈந்துப் புகழினைப் பெறுவர் என்றவாறு 7

## உரைவிளக்கப்பகுதி

**நுண்:**—எல்லாம் உரியர், என்பும் உரியர் என்பவற்றைப் பொருளானும் உடம்பானும் உரியர் என்றதனால் ஆனுருபுகள் செய்யுட்டொடைகாரணமாக விகாரத்தாற்றொக்கன. ஆனுருபு ஈண்டு உருபிருந்தாங்கே தொகாமைபற்றி விகாரம் என்றார். சில உருபு இருந்தாங்கே தொகுவது வாயுணர்வின் மாக்கள்' (420) என்க. அதனை வாயால் நுகருஞ் சுவைகளை யுணரும் உணர்வு எனவிரியும் மூன்றும் வேற்றுமைத்தொகையென்றார் அல்லது விகாரம் என்னுமையும் அறிக. கனலொடு புகையும், குடையொடு நிழலும் போலச் சிலசொல் உடன்தொக்கது.

## ஒப்புமைப்பகுதி

"ஈரம்வெய் யோர்க்கு நசைகொடை இனிது" —முதுமொழிக். 73.

குறிப்பு: என்பு ஆகுபெயராக்காது எலும்பையே கொடுத்த ததீசியைக் காட்டுவர் பிற்காலத்துச் சிலர் - ததீசிமுனிவராதலின் இல்ல இறயலுக்கு ஏலாமையறிக.

**73. அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்**
**கென்போ டியைந்த தொடர்பு. (௩)**

## உரைப்பகுதி :

**பரிமே:**—ஆர் உயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு - பெறுதற்கரிய மக்களுயிர்க்கு உடம்போடுண்டாகிய தொடர்ச்சியினை, அன்போடு இயைந்த வழக்கு என்ப - அன்போடு பொருந்துதற்குவந்த நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர்.

பிறப்பினதருமை பிறந்தவுயிர்மேல் ஏற்றப்பட்டது. இயைந்த என்பது உபசார வழக்கு. வழக்கு ஆகுபெயர். உடம்போடியைந்து

அல்லது அன்புசெய்யலாகாமையின், அது செய்தற்பொருட்டு இத் தொடர்ச்சி யுளதாயிற்று என்பதாம். ஆகவே, இத்தொடர்ச்சிக்குப் பயன் அன்பு உடைமை யென்றுயிற்று.

**மணக்:**—முற்பிறப்பின்கண் அன்போடு பொருந்தச் சென்ற செல வென்று சொல்லுவர்; பெறுதற்கரிய உயிர்க்கு இப்பிறப்பின்கண் உடம் போடு இடைவிடாத நட்பினை என்றவாறு. 6

**பரிப்:**—என்பு ஆகுபெயர். இது நெடிது வாழ்வர் என்றது.

**பழைய:**—எண்பத்துநான்கு நூறுயிரயோனிபேதத்துள் ஏனையவற் றுட் பிறவாமல் மானிடயாக்கையிலே பிறந்த தன்மை முன் சென்மங் களிலே ஒரு தினையளவு அன்புடைமையாற் செய்த பலன்.

**பருதி:**—எ-து உடலாவது நவதாதுவினுல் ஆதாரம் பெற்ற தன்மை போல உயிர்க்கும் அன்பினுலே ஆதாரம் பெறில் நிலைபெறும் என்றவாறு.

**காளிங்:**—எ-து உலகத்தின்கண் பலவுயிர் நட்குத் தான் வைத்த அன்பொடு பொருந்திய வுயிரின் முறைமையென்று சொல்லுவர் சான்றோர்; அது எங்ஙனமெனின் அன்புடையாளனுக்குத் தன்னுடம்பொடு பொருந் திய உயிரினது தொடர்ச்சியினைப் போல என்றவாறு. 8

அல்லதூஉம் அன்புடைமை நிறைய வருமளவும், உடம்புக்கும் உயிருக் கும் உறவாய் நின்று பின்பு வீட்டின்பத்தைப்பெறும் என்றவாறு.

**உரைவிளக்கப்பகுதி:**

**நுண்:**—என்போடு உண்டாகிய என்னும் ஒற்றுமைவினையை வேற் றுமை வினையாக்கி யுரைத்ததனுல் இயைந்த என்பது உபசார வழக்கு. இதனை வடநூலார், சையோகசம்பந்தவாசகத்தை சமவாயசம்பத்தத்திற்கு உரைத்ததனுல் உபசாரமென்பர். ஒன்றற்குரியன வேறென்றற்குவருதல் உபசாரம். மேல்வரும் உபசாரவழக்கிற்கெல்லாம் இவ்வாறே கொள்க. இது வடநூற்கருத்து. என்போடியைந்த என்றது தகுதியான் வந்தது. சிந்தாமணி நாமகளிலம்பகத்தில் 'கல்லார்மணிப்பூண்' (பதி. 9) என்னும் கவியானும் உணர்க. சொல்லதிகாரம் கிளவியாக்கத்தில் 'தகுதியும் வழக்கும்' (சூ 17) என்னும் சூத்திரவிதியாற் பெறப்பட்டது.

**இராமா:**—இனி ஒருரை;—ஆருயிர்க்கு - அருமையாகிய உயிர்களுக்கு; என்போடியைந்த தொடர்பு - மக்கள் உடம்பொடு பொருந்திய சம்பந் தத்தை, அன்போடியைந்த - அதற்கு முன்னும் அந்த உயிர்கள் அன்பொடு பொருந்திவந்த, வழக்கு என்ப - நியாயப் பிரயோசனம் என்று சொல்லு வார் அறிந்தோர்.

அதற்முன் அந்த உயிர்கள் அன்பொடு பொருந்தாவிட்டால் பெறுதற் கருமையாகிய மானிட தேகத்தோடு சம்பந்தப்படாமல் இழிவாகிய மிருக முதலியவற்றின் தேகங்களோடு சம்பந்தப்படும்* என்பதாம்: மக்கள் உடம்பொடு உயிர்க்குண்டாகிய சம்பந்தப் பிரயோசனம் அன்புடைமை என்றாயிற்று.

## ஒப்புமைப்பகுதி:

''அன்புடை ஆருயிர் அரசர்க் கருளிய
என்புடை யாக்கை யிருந்தது காணாய்'' —மணி-ஆபுத்திர. 170-171.

''என்பெனப் படியாக்கை என்ப துயிரென்பது இவைகளெல்லாம்
பின்பென்ப அல்ல வேனும் தம்முடை நிலையிற் பேரா
முன்பென்ப உளதென் றாலும் முழுவதும் தெரிந்த வாற்றால்
அன்பென்பது ஒன்றின் தன்மை அமரரும் அறிந்ததுஅன்றால்''
—கம்ப. யுத்த. மருத். 4.

**74. *அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. (சு)**

## உரைப்பகுதி:

**பரிமே:**—அன்பு ஆர்வமுடைமை ஈனும் - ஒருவனுக்குத் தொடர் புடையார்மாட்டுச் செய்தஅன்பு அத்தன்மையாற் பிறர்மாட்டும் விருப்ப முடைமையைத்தரும், அது நண்பு என்னும் நாடாச்சிறப்பு ஈனும் - அவ்விருப்பமுடைமைதான் இவற்குப் பகைமையும் நொதுமலும் இல்லையாய் யாவரும் நண்பென்று சொல்லப்படும் அளவிறந்த சிறப் பினைத் தரும்.

உடைமை உடையனுந்தன்மை. யாவரும் நண்பாதல் எல்லாப் பொருளும் எய்துதற்கு ஏதுவாகலின், அதனை நாடாச்சிறப்பு என்றார்.

**மணக்:**—அன்பு தரும் ஆர்வமுடைமையை; அவ்வார்வமுடைமை தரும் நட்பென்று சொல்லப்பட்ட ஆராய்தலில்லாத சிறப்பினை என்றவாறு.

**பரிப்:**—என்றது அன்பினானே பத்தியுண்டாம். அதனானே நாயக னோடு வேறுபாடில்லாத முத்தியுண்டாம் என்றவாறாயிற்று. நாயகனோடு

---

*'உயிர் உடம்பொடு கூடினல்லது அன்பு பிறவாது. எலும்பு சதை உடைய பஞ்சேந் திரிய ஜீவன்களுக்கே அன்பு பிறக்கும். மற்றை இந்திரிய ஜீவனுக்கு அன்பு பிறவாது'
—கவிராஜபண்டிதர்.

நட்டலின் நட்பெனப்பட்டது. ஆராயவேண்டாமையின் உலக நட்பல்ல வாயிற்று. இத்துணையும் அன்பினாலுளதாகும் அறப்பயன் கூறப் பட்டது.*

பழைய :—அன்பு ஆர்வமென்று சொல்லப்பட்ட ஞானநேயத்தைக் கொடுக்கும். அந்த ஞானநேயம் பிறவாநெறியாகிய முத்தியைக் கொடுக் கும்.

பருதி :—எ - து அன்பு ஆர்வமென்று சொல்லப்பட்ட ஞானநேயத் தைக்கொடுக்கும் ; அந்த ஞானம் பிறவாநெறியாகிய முத்தியைக் கொடுக் கும் என்றவாறு. 6

காளிங் :—எ - து ஒருவன் தான் பலவுயிரிடத்தும் வைத்த உள்ளன் பானது பகைவர் முதலாயவர்களாலும் விரும்பப்பட்ட உள்ளன்பினைத் தரும் ; மற்ற அவ் அன்பானது நண்பென்று சொல்லப்படுகின்ற தேடுதற் கரிய சிறப்பினைத் தரும் என்றவாறு. 8

## உரைவிளக்கப்பகுதி:

இராமா :—உடைமை-உடையவனாகிற குணம். நாடுதல்-இவ்வளவு என்று ஆராய்தல்.

## மேற்கோள்பகுதி:

குண :—மெல்லின எதுகைக்கு மேற்கோள் (யா. கா. 43)

யா. வி. உரை :—அதற்கே மேற்கோள் காட்டுவர். (சூ. 37.)

## ஒப்புமைப்பகுதி:

"நொதுமலரும்
படர்செய் பகையும் உறவாக்கும் பற்றும் அளிக்கும் மனைமைந்தர்
தொடர்பின் வளர்க்கும் அன்பதனால் சோர்ந்தும்அன்பின் வழுவற்க"
—விநாயக. அரசி. 22

குறிப்பு:-ஒருவரோடு ஒருவரிடை விளையும் நெகிழ்ச்சி அன்பு. அவரை இன்றியமையாமையாகிய விருப்பின் மிகுதி ஆர்வம். அதன் மிக்க விளைவு நட்பு. ஆதலால் அன்பு முற்றி ஆர்வமாய், ஆர்வமுற்றி நண்பாகின்றது என்று அறிவித்தார்.

---

* அன்பு - தயை. ஆர்வம் - சந்தோஷம்.
—கவிராஜபாண்டிதர்.

75. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றார் எய்துஞ் சிறப்பு. (ரு)

உரைப்பகுதி:

பரிமே:—அன்பு உற்று அமர்ந்த வழக்கு என்ப - அன்புடையராய் இல்லறத்தோடு பொருந்திய நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர், வையகத்து இன்பு உற்றார் எய்தும் சிறப்பு - இவ்வுலகத்து இல்வாழ்க்கைக்கண் நின்று இன்ப நுகர்ந்து அதன்மேல் துறக்கத்துச் சென்றெய்தும் பேரின்பத்தினை.

வழக்கு ஆகுபெயர். இல்வாழ்க்கைக்கண் நின்று மனைவியோடும் மக்களோடும் ஒக்கலோடுங் கூட இன்புற்றார் தாம் செய்த வேள்வித் தொழிலால் தேவராய் ஆண்டும் இன்புறுவராகலின், இன்புற்றாரெய்துஞ் சிறப்பு என்றார். தவத்தால் துன்புற்றெய்துந் துறக்க இன்பத்தினை ஈண்டும் இன்புற்றெய்துதல் அன்பானன்றி இல்லை என்பதாம் என்றவாறு.

*மணக்:—முற்பிறப்பின்கண் பிறர்மே லன்புவைத்துச் சென்ற செல வென்று சொல்லுவர்; இப்பிறப்பின்கண் உலகத்து இன்பமுற்றார் அதன் மேலுஞ் சிறப்பெய்துதலை என்றவாறு.* 7

*இது போகம் துய்ப்பர் என்றது.*

*பருதி:- எ. - து எண்பத்துநான்கு நூறாயிரம் பேதத்திற் பிறவாமல் மானிடயாக்கையிலே பிறந்ததன்மை சென்மசென்மங்களிலே தினையத் தினை அன்புண்டான பலன் என்றவாறு.* 7

*காளிங்:-எ - து வையத்து அனைத்துயிர்க்கும் பொருந்திய முறையினால் மிக அன்பு செய்த அதுவே, இன்புற்றனராய் வாழ்கின்றவரெய்தும் செல்வச் சிறப்பு என்றவாறு.* 5

உரைவிளக்கப்பகுதி:—

*இராமா:-தவஞ்செய்து துன்பப்பட்டவர் பின்பு அடையும் பரலோக இன்பத்தை இகலோகத்திலும் இன்பத்தை அனுபவித்து அடைகிறது அன்பினாலே அல்லாமல் இல்லை என்பதாயிற்று.*

ஒப்புமைப்பகுதி:

"இன்பமே என்னுடை அன்பே"
அன்பால் விளைவது இன்பம் —பழமொழி

**76. அறத்திற்கே அன்பு சார்பென்ப* அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை.** (சூ)

**உரைப்பகுதி:**

**பரி.மே:**— அன்பு சார்பு அறத்திற்கே என்ப அறியார் – அன்பு துணையாவது அறத்திற்கேயென்று சொல்லுவர் சிலரறியார்; மறத்திற்கும் அஃதே துணை - ஏனை மறத்திற்கும் அவ்வன்பே துணையாவது.

ஒருவன்செய்த பகைமைபற்றி உள்ளத்து மறநிகழ்ந்துழி அவனை நட்பாகக்கருதி அவன்மேல் அன்புசெய்ய அது நீங்குமாகலின், மறத்தை நீக்குதற்குந் துணையாம் என்பார், மறத்திற்குமஃதேதுணை என்றார், "துன்பத்திற் கியாரே துணையாவார்*." என்புழிப்போல. இவை ஐந்து பாட்டானும் அன்பினது சிறப்புக் கூறப்பட்டது.

**மணக்:**-அறமானது அறஞ் செய்வார்க்கே சார்பா மென்பர் அறியார்; அவ்அன்பு மறஞ்செய்வார்க்குந் துணையாம் என்றவாறு. 9

**பரிப்:**—மறஞ்செய்யுங்கால், சுற்றத்தார் மாட்டு அன்புடையார்க்கு அல்லது வெற்றி கோடல் இன்றாகலின் மறஞ்செய்வார்க்கும் அன்பு வேண்டும் என்றது. மறஞ்செய்தல் பொருள் காரணமாதலின் பொருட்கும் அன்புவேண்டும் என்றவாறாயிற்று. என்னை? "அன்பிலன் ஆன்றதுணையிலன் தான்துவ்வான், என்பரியும் ஏதிலான்துப்பு" என்றாராகலின்.

**பழைய:**—தருமத்திற்கே அன்பு துணையாயிருந்து ஆத்மாவை ரக்ஷிக்கும் என்பர். அதுவன்றியிலே அறிவில்லார் செய்யும் மறத்தையும் அன்பு வெல்லும்.

**பருதி:**- எ - து தன்மத்தினுற் பெரியது அன்புடைமை; அது, ஆத்துமாவை ரட்சிக்கும்; பரகெதி கொடுக்கும்; அறிவில்லார் செய்யும் மறத்தையும் அன்பு வெல்லும் என்றவாறு. 10

**காளிங்:**—எ - து ஒருவன் அனைத்துயிர்மாட்டும் வைக்கின்ற உள்ளன்பானது தான்நடத்துகின்ற இல்லறத்தினுக்கே சால்பு அமைந்தது என்பர் அறியாதார். ஈண்டுப் பாவமாகிய மறத்திற்கும் அவ் அன்பே துணை என்றவாறு. 6

**மேற்கோள்பகுதி:**

**இளம்:**—ஐந்திணைப் புறத்தவாகிய வெட்சி வஞ்சி உழிஞை தும்பை வாகை என்பனவும் அன்பொடு புணர்ந்தனவாம் எனின் அவை

* குறள் 1299. 'என்பர்' பரிபெருமாள் பாடம்.

அன்புடையார் பலர்கூடி நிகழ்த்துபவை ஆதலின் அன்பொடு புணர்ந் தனவாம். அறத்திற்கே......துணை' என்பதனாலும் கொள்க. (தொல். பொருள் 89)

யா. வி. உரை:-எதுகை முரணுக்கு மேற்கோள் (சூ. 53)

குறிப்பு:-பரிமேலழகர் தன்கண் பாவம் நீக்குதற்கும் அன்புதுணையாம் என்றார். ஏனையோர் தன்மேற் சினந்துவரும் பகைவர் மறத்தை நீக்குதற் கும் அன்புதுணையாம் என்றகருத்துப்பட எழுதுவார்கள். ஏற்பனகொள்க.

77. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம். (எ)

**உரைப்பகுதி:**

பரிமே:— என்பு இலதனை வெயில்போலக் காயும் - என்பில்லாத உடம்பை வெயில் காய்ந்தாற்போலக் காயும், அன்பு இலதனை அறம்- அன்பில்லாத உயிரை அறக்கடவுள்.

என்பிலதென்றதனான் உடம்பு என்பதூஉம், அன்பிலது என்றத னான் உயிரென்பதூஉம் பெற்றாம். வெறுப்பின்றி எங்கும் ஒருதன்மைத் தாகிய வெயிலின்முன் என்பில்லது தன்னியல்பாற் சென்று கெடுமாறு போல, அத்தன்மைத்தாகிய அறத்தின்முன் அன்பில்லது தன் இயல் பாற் கெடும் என்பதாம். அதனைக்காயுமென வெயிலறங்களின் மேலே ஏற்றினார், அவற்றிற்கும் அவ்வியல்புண்மையின். இவ்வாறு "அல்லவை செய்தார்க்கு அறங்கூற்றம்[1]" எனப் பிறருங் கூறினார்.

மணக்:-என்பில்லாத சிவனை வெயில் சுடுமாறுபோலச் சுடும்; அன் பில்லாத உயிரினை அறம் என்றவாறு. 1

பரிப்:-என்றது என்சொல்லியவாறோ எனின் என்புள்ளதனுக்கு வெயில் குளிர்தீர்த்தல் முதலான இன்பத்தைப் பயக்கும். அவ்வாறன்றி என்பிலாதவற்றிற்கு வெயில் இறந்துபாட்டெல்லையான துன்பத்தைப் பயக்கு மாதலால் ஒருதன்மையாக எரித்த வெயில் உடம்பு வேறுபாட் டான் இன்பமும் துன்பமும் பயந்தது போல அறமாகிய கடவுளும் பிறர் மாட்டன்பு செய்தார்க்கு இன்பமும் அஃதிலாதார்க்குத் துன்பமும் பயக் கும் என்றவாறாயிற்று. இதனானே அன்பு வேண்டும் என்றாராம்.

பருதி: என்பிலதான ஆத்துமாவை ஆதித்தகிரணம் காயும். அத் தன்மைபோல அன்பிலாதாரை அறங்காயும் என்றவாறு. 1

[1] நான்மணிக். 83.

காளிங்:-எ - து தனக்குள் உறுதியில்லாது முழுதும் குழைந்து இருக்கும் உருவுடைத்தாகிய சிறு புழுவினை வெயிலானது உருவழியக் காயுமாப்போல் யாவர்மாட்டும் வைக்கப்பட்ட அன்பிலாததனை அறமானது காயும் என்றவாறு • 1

## மேற்கோள் பகுதி:

அடி :—'அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற்றுவ தூஉம்'-அறம் கொல்லும் என்பது 'என்பிலதனை வெயில்போலக் காயுமே அன்பிலதனை அறம்' என்பதனுன் உணர்க. (சிலப். பதிகம். 55)

காரிரத்ன: பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள் (மாற. 251 உரை )

78. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை [1]வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. (அ)

## உரைப்பகுதி:

பரிமே:— அகத்து அன்பு இல்லா உயிர் வாழ்க்கை - மனத்தின்கண் அன்பில்லாத உயிர் இல்லறத்தோடு கூடிவாழ்தல், வன்பாற்கண் வற்றல்மரம் தளிர்த்தற்று - வன்பாலின்கண் வற்றலாகிய மரம் தளிர்த்தாற்போலும்.

கூடாதென்பதூம் வன்பால் வன்னிலம். வற்றல் என்பது பால் விளங்கா அஃறிணைப் படர்க்கைப்பெயர்.

மணக் :—தன்னிடத்து அன்பில்லாத உயிரினது வாழ்க்கை வலிய பாரிடத்து உண்டாகிய உலர்ந்த மரம் தளிர்த்தாற்போலும் என்றவாறு.

தளிர்த்தற்குக் காரணம் இன்மையால் தளிராது என்பதாம்.

பரிப்:—இஃது அன்பிலாதார்க்கு ஆக்கமில்லை என்றவாறு.

பழைய: - அன்பு மனத்தின்கண் இல்லாதார் உயிர் நிலை பெறும் என்பது எத்தன்மையென்னில் வன்பாராகிய பாறையிலே பட்டமரம் தழையுந் தன்மையாம்.

பருதி :—எ - து அன்பு மனத்திடத்தில்லாதார் உயிர் வாழ்க்கை நிலை எத்தன்மை யென்னில் பாறையின்மேற் பட்டமரம் தளிர்த்தது ஒக்கும் என்றவாறு. 1

1 'வன்பார்க்கண்' என்பது மணக் பழைய காளிங், இரமா பா - ம்.

காளிங்:—எ - து யாவர்மட்டும் அன்பானது தன்னெஞ்சத்தில்லாது உயிருடலொடு வாழ்கின்ற வாழ்க்கை, கற்செறிந்து வற்கென்ற தரையின் கண் நிற்கின்ற வறலாகிய மரம் பின்பு தளிர்த்த அத்தன்மை போல இவனுக்கும் வெறும் தோற்றமே அன்றிப் பின் ஆக்கமில்லை யென்பது கருத்து என்றவாறு. 2

## உரைவிளக்கப்பகுதி.

நுண் :—வற்றல் - பால்விளங்கா அஃறிணைப் படர்க்கைப் பெயர் என்றார் ; சாதியொருமை. சாதிப்பெயர் காட்டியதற்கும், 'அஞ்சுவதஞ் சாமை' (428) என்பதன்கண் அஞ்சுவதென்பதனைச் சாதியொருமை என்பதற்கும் வேற்றுமை வினவி அறிக.

## மேற்கோள்பகுதி:

மயிலை :—உடம்போடு கூடிய உயிர்க்குணம் அன்பு என்பதற்கு மேற் கோள் (நன். சூ. 451)

**79. புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை**
**அகத்துறுப் பன்பி லவர்க்கு. (௯)**

## உரைப்பகுதி.—

பரிமே:—யாக்கை அகத்து உறுப்பு அன்பு இலவர்க்கு - யாக்கை அகத்தின்கண் நின்று இல்லறத்திற்கு உறுப்பாகிய அன்புடையர் அல்லாதார்க்கு, புறத்து உறுப்பெல்லாம் எவன்செய்யும்- ஏனைப் புறத் தின் கண் நின்று உறுப்பாவன எல்லாம் அவ்வறஞ் செய்தற்கண் என்ன உதவியைச் செய்யும்.

புறத்து உறுப்பாவன இடனும், பொருளும், ஏவல்செய்வாரும் முதலாயின. துணையோடு கூடாதவழி அவற்றால் பயனின்மையின் எவன் செய்யுமென்றார். உறுப்புப்போறலின், உறுப்பெனப்பட்டன. யாக்கையில் கண் முதலிய உறுப்புக்களெல்லாம் என்ன பயனைச் செய்யும், மனத்தின்கண் உறுப்பாகிய அன்பிலாதார்க்கு என்று உரைப் பாரும் உளர். அதற்கு இல்லறத்தோடு யாதும் இயைபில்லாமையறிக.

மணக்:—உடம்பிற்கு அகத்துறுப்பாகிய அன்பிலார்க்குப் புறத்துறுப் புக்களெல்லாம் யாதினைச் செய்யும் என்றவாறு. 3

பரிப் :—அன்பின்றாயினும் பத்துவகைப்பட்ட இந்திரியங்களும் உளவாயின் அதனானே அறமும் பொருளும் இன்பமும் எய்தலாகும்

மார்க்கமில்லையோ என்றார்க்கு அவையுளவாயினும் பயன்படா என்று கூறியவாறு.

பழைய:—புறத்துறுப்பாகிய மெய் வாய் கண் மூக்குச் செவி முதலானவை அலங்காரமாயிருந்து என்ன பிரயோசனம்? அகத்துறுப்பாகிய அன்பிலாதவர்க்கு.

பருதி:—எ - து புறத்துறுப்பாகிய மெய், வாய், கண், மூக்குச் செவி அலங்காரமாயிருந்தும் என்ன பிரயோசனம்? அகத்துறுப்பாகிய அன்பிலாதவற்கு. ஞானமில்லாதவனும் மரப்பாவையும் ஒக்கும் என்றவாறு. 3

காளிங்:—எ - து ஒருவர், தமது யாக்கையினது புறத்துறுப்பாகிய மார்பும் தோளும் முகமும் மயிர்முடியும் பிறவுஞ் சால நல்லது எனினும், அவை யங்ஙனம் தோன்றிக்கெடுத்தலல்லது அகத்துறுப்பாகிய அன்புபோல இவர்க்கு ஒரு நன்மைசெய்வதில்லை என்றவாறு. 4

## உரைவிளக்கப்பகுதி:—

இராமா:—இனிவேறோருரை—யாக்கை அகத்துறுப்பு - உடம்பினுள்ளிருக்கின்ற அவயவத்தை ஒத்த, அன்பில்லவர்க்கு - அன்பில்லாத மனிதர்க்கு, புறத்துறப்பு - அந்த உடம்பின் புறத்திலே இருக்கின்ற அவயவத்தை ஒத்த, எல்லாம் - மற்றுள்ளவை எல்லாம், எவன் செய்யும் - என்ன உதவியைச் செய்யும்?

யாக்கை அகத்துறுப்பு என்பவை ஈரல் குடல் முதலாயினவை. அதன் புறத்துறுப்பு என்பவை கை கால் முதலாயினவை. இந்த இருவகை உறுப்புக்களும் உவமையாதலால் இல்லறத்துக்கு அகத்துறுப்பாவது அன்பு, புறத்துறுப்பாவது இடமும் பொருளும் ஏவல் செய்வோருமாம். உயிர்வாழ இருந்தவர்களுக்கு உடலின் அகத்துறுப்பு இல்லாவிடின் அதன் புறத்துறுப்புக்கள் இருந்தும் பயன் இல்லாததுபோல, இல்லறஞ்செய்தற்கு அகத்துறுப்பாகிய அன்பில்லாவிடின் புறத்துறுப்பாகிய இடம் பொருள் ஏவல் செய்வோர் இருந்தும் பிரயோசனப்படாததினாலே எவன் செய்யும் என்றார். அகத்துறுப்பு - அகத்தின் கண்ணுள்ள உறுப்பு. புறத்துறுப்பு புறத்தின் கண்ணுள்ள உறுப்பு.

## ஒப்புமைப்பகுதி:

"இடனும் பொருளும் ஏவலரும் இருந்தும்பயன் என்னே வந்த
உடலின் பயனாகிய அன்பை உருதவிடத்து." —விநா. அரசி. 22

குறிப்பு :—அன்பு உயிர்க்குண மாதலின் யாக்கையகம் என்பது இடவாகு பெயராய் அகத்ததாகிய உயிரைக் காட்டியதாகக் கொண்டு உயிர் உறுப்பாகிய அன்பு என்பாரும் உளர். இதனைப்பின் வருங்குறளிலும் உயிர் நிலை யென்றது காண்க.

80. அன்பின் வழிய துயிர் நிலை அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு. (ம)

உரைப்பகுதி :

பரிமே :—அன்பின் வழியது உயிர்நிலை - அன்புமுதலாக அதன் வழிநின்ற உடம்பே உயிர்நின்ற உடம்பாவது, அஃது இலார்க்கு உடம்பு என்பு தோல் போர்த்த-அவ் அன்பில்லாதார்க்கு உளவான உடம்புகள் என்பினைத் தோலால் போர்த்தனவாம்; உயிர்நின்றனவாகா.

இல்லறம் பயவாமையின், அன்னவாயின. இவை நான்கு பாட்டானும் அன்பில்வழிப்படுங் குற்றங் கூறப்பட்டது.

மணக் :—உயிர்க்கு நிலைபேறு அன்பின் வழியதாகிய அறத்தினுன் வரும்; ஆதலால் அவ் அன்பில்லாதார்க்கு உளதாவது என்பின் மேல் தோலினல் போர்க்கப் பெற்ற உடம்பு என்றவாறு. 4

பரிப் :— இது வீடுபெறுர் என்றவாறு. இத்துணையும் அன்பின்மையால் வருங் குற்றம் கூறியவாறு.

பழைய :— அன்பு நெறியிலே நடப்பான் உயிர் நிலைநிற்கும். அன்பிலாதார் உடல் எலும்பும், தோலும் போர்த்த குடம்பை மாத்திரம்.

பருதி :—எ - து அன்பின் வழியிலே நடப்பான் உயிர் நிலைநிற்கும் ; அன்பில்லார் உயிர் என்புந்தோலும் போர்த்த உடம்பு என்றவாறு. 4

காளிங் :—எ-து யாவர்மாட்டும் அன்புடையராகிய இல்வாழ்வார்க்கு அன்பின் கண்ணதே உயிர்க்கு நிலைபேருனது. இனி அவ் அன்பில்லாதார்க் கெல்லாம் என்பினைத் தோலால் பொதிந்துவைத்த உடம்பு; அதனல் அவர்க்கு ஒருபயனும் இல்லை என்றவாறு. 10

இனி மற்றிங்ஙனம் அன்புடையாளர்க்கே விருந்தினரைப்பேணி வழிபடலாவது என்பதனல், இதன்பின் வந்தது விருந்தோம்பல் என்னும் அதிகாரம்.

# 9. விருந்தோம்பல்

**உரைப்பகுதி :—**

**பரிமே :—** அஃதாவது இருவகை விருந்தினரையும் புறந்தருதல். தென்புலத்தார் முதலிய ஐம்புலத்துள் முன்னைய இரண்டும் கட்புலன் ஆகாதாரை நினைந்து செய்வன வாகலானும், பின்னைய இரண்டும் பிறர்க்கு ஈதலன்மையானும் இடை நின்ற விருந்தோம்பல் சிறப்புடைத்தாய் இல்லறங்கட்கு முதலாயிற்று. வேறுகாத அன்புடையிருவர் கூடி யல்லது செய்யப்படாமையின், இஃது அன்புடைமையின் பின் வைக்கப்பட்டது.

**மணக் :—** விருந்தோம்பலாவது உண்ணுங்காலத்துப் புதியார் வந்தால் பகுத்துண்ணவேண்டும் என்பது கூறல்.

**பரிப் :—** மேல் இல்வாழ்வான் பகுத்துக்கொடுக்கத்தக்கவர் எல்லாரையுங் கூறுது விருந்து ஒன்றையுங் கூறியது எற்றுக்கெனின், ஆண்டுக் கூறியதெல்லாம் நிரப்பிடும்பையாளர்க்குச் செய்தல் அரிதாயினும், உண்ணுங்காலத்து வந்த விருந்தினர்க்குப் பகுத்துண்டல் அவர்க்கும் வேண்டுதலின் இது சிறப்பு விதியாகக் கூறப்பட்டது. அன்புடையார் மாட்டு அல்லது விருந்தினர் செல்லாமையின் அதன் பிற் கூறப்பட்டது.

**பழைய :—** அஃதாவது தம் புதல்வர் முதலாயினரிடத்தில் வைத்த அன்புபோலவே பலருக்கு விருந்து உபசரிக்க வேணும் என்பது.

**பருதி :—** விருந்தோம்பலாவது தன்புதல்வரிடத்தில் வைத்த அன்பு போலவே பலரிடத்தும் அன்பு வைத்து விருந்து உபசரித்தல்.

**81. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு. (க)**

**உரைப்பகுதி :—**

**பரிமே :—** இல் இருந்து ஓம்பி வாழ்வது எல்லாம்—மனைவியோடும் வனத்திற் செல்லாது இல்லின்கண் இருந்து பொருள்களைப் போற்றி வாழும் செய்கையெல்லாம், விருந்து ஓம்பி வேளாண்மை செய்தல் பொருட்டு—விருந்தினரைப்பேணி அவர்க்கு உபகாரஞ் செய்தற் பொருட்டு.

எனவே செய்யாவழி இல்லின் கண் இருத்தலும், பொருள் செய்தலுங்காரணமாக வருந்துன்பச் செய்கைகட்கு எவ்லாம் பயனில்லை என்பதாம்.

**மணக் :**—இல்லின்கண் இருந்து பொருளைப் போற்றி வாழும் வாழ்க்கையெல்லாம் வந்த விருந்தினரைப் போற்றி அவர்க்கு உபகரித்தற்காக எ-று.

**பரிப் :**—எல்லாம் என்றது வாழ்க்கைப் பன்மை. இஃது இல்வாழ்க்கையின் பயன் விருந்தோம்பல் என்றது.

**பழைய:**—வானப்பிரஸ்தம் போகாமல் கிருகத்திலே நின்றதுஎதெனின் மற்ற மூன்று பேர்க்கும் விருந்துபசரிக்க வேண்டியதற்காக.

**பருதி**—எ-து இராதசரீரத்தை இருப்பதென்றும், நில்லாத செல்வம் நிற்பதென்றும் வாழ்வர்; இதனை அறியாமல் விருந்து செய்தல் வேளாண்மை செய்வதற்கு ஒக்கும் என்றவாறு. 2

**காளிங் :**—எ-து ஒருவன் இல்லறத்திலிருந்து இல்வாழ்க்கையைப் பாதுகாக்குங் காரணம் யாதோவெனின், * * * * 6

**உரைவிளக்கப்பகுதி :—**

**நுண் :**—ஓம்பல் - போற்றல். வேளாண்மை - உபகாரம். வாழ்வதெல்லாம் என்றது முழுவதும் என்னும் பொருள்பட நிற்கும் ஒருசொல். ‘மயில் மன்னுஞ் சாயல்’ என்னுங் கோவையாருள் (351) சென்றதெல்லாம் என்றதும் அது. ‘அழக்கொண்டதெல்லாம் அழப்போம்’ (659) ‘வினை நலம் வேண்டிய எல்லாந் தரும்’’(651) என்பனவும் அது ஒருமை பன்மை மயக்கமும் ஆம்.

**ஒப்புமைப்பகுதி ,—**

“மனைன்மலி முற்றம் புக்க சான்றோர்
உண்ணு ராயினும் தன்னொடு சூளுற்று
உண்மென இரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன்.” — புறநா. 178 : 5-7.

“வருவிருந் தெதிர்கொண் டேற்று நயனுரை வழங்கும் ஓசை
அருகிருந்து அடிசிலூட்டி முகமன் நன்கு அறையும் ஓசை.”

**82. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. (உ)**

**பரிமே .**– சாவா மருந்து எனினும் – உண்ணப்படும் பொருள் அமிர்தமே எனினும், விருந்து புறத்ததாத் தான் உண்டல் - தன்னை

நோக்கி வந்த விருந்து தன் இல்லின் புறத்ததாகத் தானே உண்டல், வேண்டற் பாற்று அன்று - விரும்புதன் முறைமையுடைத்து அன்று.

சாவாமருந்து - சாவாமைக்குக் காரணமாகிய மருந்து, விருந்து இன்றியே ஒருகால் தான் உண்டலும் சாவாமருந்தென்பார்உளராயினும் அதனை யொழிக என்றுரைப்பினுமமையும். இவை இரண்டு பாட்டானும் விருந்தோம்பலின் சிறப்புக் கூறப்பட்டது.

**மணக்.**—*விருந்தினர் இற்புறத்தாராகத் தானே உண்டல் சாவாமைக்கு உண்ணும் மருந்தாயினும் வேண்டும் பகுதி யுடைத்தன்று என்றவாறு.*

**பரிப்** :—*சாவா மருந்தாவது தன்னளவிற்குங் குறைந்து இதனுனே இவ்வுயிர்கிடக்கும்; இதனிற் குறையிற்சாம்; என்னும், அளவிற்குரிய சில்லுணவு. இதனை உலகத்தார் உயிர்போகாக் கஞ்சி என்பர் - அமிழ்து என்பாரும் உளர். இது வாழ்வோர்க்கே யன்றி வாழாதாரும் விருந்து ஓம்பிடவேண்டும் என்றது.*

**பழைய** :—*விருந்து புறத்திலே இருக்கத் தான் பொசிப்பது தவிர்க்க. சரீரத்திலே பதினெட்டுக் குட்டமும் தீரப் பொசிக்கிற அமிர்தமாயினும் விருந்துடன் கூடியிருந்து பொசிப்பர்.*

**பருதி** :—*எ - து விருந்து புறத்திலே இருக்கத் தான் உண்பது நன்றல்லது. நஞ்சாகிலுங் கூடவிருந்து புசிப்பது நன்று என்றவாறு.*

**காளிங்** :—*எ-து விருந்து தன் கடைப்புறத்ததாகப் பெற்றுவைத்துத் தான் அகத்திலிருந்து, உண்டலாகின்ற இது, சாவாப்பதந் தருவதாகிய அமரர் உலகத்து அமுதமே யாயினும், தான் விரும்பும் பான்மை நன்றன்று; தானுண்டு சாகின்ற சோற்றினை மற்றில்லறத்திற்கு நல்வழிப் பாடாகிய விருந்து தன் கடைப்புறத்ததாகப் பெற்றுவைத்து, மற்றிதனைத் தானுண்டல் எக்கூற்றினிடத்ததோ அறிகிலேன்; என்றவாறு.*

**உரைவிளக்கப்பகுதி** ;

**நுண்** :—*சாவாமருந்து - சாவாமைக்குக் காரணமாகிய மருந்து. நிலம் பூத்த மரமும் அது. இது காரிய முற்பட்டுக் காரணப் பெயர் கொண்டது. இனிக்காரண முற்பட்டுக் காரியப்பெயர் கொண்டுவரும் பெயரெச்சங்களும் உள. அவை 'அழுதகண்ணீர்' (555) 'உருதோ ஊரறிந்த கௌவை' (1148) 'நயனொடு நன்றிபுரிந்த பயனுடையார்' (994) 'பொருநர்த்தேய்த்த போரறுவாயில்' (திருமுரு. 509) என்பன முதலாயின*

வினைத்தொகை யுள்ளும் 'ஆகூழ் போகூழ்' (371) 'நடுங்கலூர்' 'தெறுபொருளும் வேந்தன் பொருள்' (756) எனவரும். இதனுள் அர்த் தாங்கீகாரம் காண்க. 'மலர் மிசையேகினன்' (3) 'விருந்து புறத்ததா' (82) 'மதிநுட்ப நூலோடு' (636) என்ற மூன்றினும் முறையே பக்ஷாந் தரம், அர்த்தாங்கீகாரம், தூஷணம் காண்க. அர்த்தாங்கீகாரத்தைக் கௌணம் என்பாரும் உளர்.

இராமா :—'என்று உரைப்பினும் அமையும்' என்ற உரைக்குப் 'பாற்றன்று ஆதலால்' எனக் காரணம் வருவித்து வேண்டல் என்பதை எதிர்மறை வியங்கோள் முற்றுவினை ஆக்குக.

**மேற்கோள் பகுதி :**

காரிரத்ன :— பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற. 251.)

**ஒப்புமைப் பகுதி :**

"இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும்
இனிதெனத் தமியர் உண்டலும் இலரே"

குறிப்பு :—இச்சிறியஉணவையாவது உட்கொள்ளாவிடின் உயிர்போம் என்ற நிலையிருப்பினும், அச்சிறு உணவையும் விருந்ினர்க்குக் கொடுத் துண்ண வேண்டும் என்ற பரிப்பெருமாள் உரைச்சிறப்பு ஓர்க.

**83. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று. (ரு)**

**உரைப்பகுதி :**

பரிமே:— வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை—தன்னை நோக்கி வந்தவிருந்தை நாடோறும் புறந்தருவானது இல்வாழ்க்கை, பருவந்து பாழ்படுதல் இன்று - நல்குரவான் வருந்திக்கெடுதல் இல்லை.

நாடோறும் விருந்தோம்புவானுக்கு அதனாற்பொருள் தொலையாது மேன்மேற் கிளைக்கும் என்பதாம்.

மணக் :— நாடோறும் வந்த விருந்தினரைப் போற்றுவானது ஆக்கம் வருத்தமுற்றுக் கேடுபடுதலில்லை என்றவாறு,

பரிப் :— விருந்தோம்பலாற் பயனென்னை? என்றார்க்குப் பயன் கூறுவார் முற்படச் செல்வங் கெடாதெனக் கூறினார்.

**பழைய** :—வருகிற விருந்தைப் பாதுகாப்பான் இல்வாழ்க்கை மேன் மேல் விருத்திக்கும். விருந்தை உதாசீனம் பண்ணினவன் இல்வாழ்க்கை மேன்மேல் நசிக்கும்.

**பருதி** :— எ - து வருகிற விருந்தைப்பார்த்து நாளும் உபசரிப்பது நன்று. அங்ஙனம் உபசரிக்கிறவன் வாழ்க்கை வருந்திப் பாழாதல் இல்லை என்றவாறு.

அது எது எனில், சரீரத்தில் ஒரு பரு வந்து விதனமான காலத்துச் சீப்பறிய விதனம்மாறுவது போல வருவிருந்து உபசரிக்கில் வினையறும் என்றவாறு.

**காளிங்** :— எ - து தன்னில்லத்து வருகின்ற விருந்தினை நாடொறும் குறிக்கொண்டு பூசிக்கும் அவன் இல்வாழ்க்கையானது துயருற்று நசிக்கு மாறு வருதல் இல்லை என்றவாறு. 2

## 84. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து நல்விருந் தோம்புவான் இல்.

உரைப்பகுதி :

**பரிமே** :— செய்யாள் அகன் அமர்ந்து உறையும் - திருமகள் மனமகிழ்ந்து வாழாநிற்கும்,* முகன் அமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல்—முகமினியனாய்த் தக்க விருந்தினரைப் பேணுவானது இல்லின்கண்.

மனம் மகிழ்தற்குக் காரணம், தன்செல்வம் நல்வழிப்படுதல். தகுதி ஞானவொழுக்கங்களான் உயர்தல். பொருள் கிளைத்ததற்குக் காரணங் கூறியவாறு.

**மணக்** :— திருவினுள் மனம் பொருந்தி யுறையும்; நல்ல விருந்தினரை முகம்பொருந்திப் போற்றுவானது மனையின்கண் என்றவாறு.

இது கேடின்மையேயன்றிச் செல்வமும் உண்டாம் என்றது.

**பழைய** :— மனமகிழ்ந்து லட்சுமியுறைவள் நல்விருந்தை உபசரிப் பானில்லத்தில்.

**பருதி** ;— எ - து மனமகிழ்ந்து விருந்து செய்வானிடத்தில் லட்சுமி உறையும் என்றீவாறு.

* 'தானம் கொடுத்த புண்ணியத்தால் ஐசுவரியம் வளரும் என்பதாம்'
— கவிராஜபண்டிதர்.

காளிங் :— எ - து அகமகிழ்ந்து திருமகள் இனிது வாழும்; எவ்விடத்தெனின், முகமலர்ந்து இவ்வாறு நல் விருந்ினராகிய மறையோர்க்கும் வறியோர்க்கும் விருந்தைப் பேணி வழிபடுவான் இல்லிடத்து என்றவாறு. 4

## மேற்கோள்பகுதி :

சேனு : அகனமர்ந்து செய்யாளுறையும் என்ற இக்குறளை 'அமர்தல் மேவல்' என்ற சூத்திரத்திற்கு மேற்கோள் காட்டுவர். (தொல். சொல். 380.)

தெய்வச்சிலையார் தொல்-சொல். 380; ஷை 395.

நச் :— 'அகனமர்ந்து...................ஓம்புவானில்' இதில் வினை எச்சம் காரணகாரியமின்றி வந்தது. (தொல். சொல். 242.)

சங் :—அகனமர்ந்து..........முகனமர்ந்து என்பன மொழியிறுதிப் போலி. (நன். சூ. 122) அகனமர்ந்து என இடப்பெயர் சித்தத்திற்கு ஆயிற்று. (நன். சூ. 290)

## ஒப்புமைப் பகுதி :

"முகனமர்ந்து" — நெடுநல் 183,

**83. வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி**
**மிச்சில் மிசைவான் புலம். (ரு)**

## உரைப்பகுதி :

பரிமே :— விருந்து ஓம்பி மிச்சில் மிசைவான் புலம் — முன்னே விருந்தினரை மிசைவித்துப் பின் மிக்கதனைத் தான் மிசைவானது விளைபுலத்திற்கு, வித்தும் இடல் வேண்டுமோ— வித்திடுதலும் வேண்டுமோ? வேண்டா.

கொல் என்பது அசைநிலை. தானே விளையும் என்பது குறிப்பெச்சம். இவை மூன்று பாட்டானும் விருந்தோம்புவார் இம்மைக்கண் எய்தும் பயன் கூறப்பட்டது.

மணக் :— விருந்தினரை ஊட்டி மிக்க உணவை உண்ணுமவன் புலத்தின்கண் விளைதற்பொருட்டு விதைக்கவும் வேண்டுமோ? தானே விளையாதோ எ - று.

பொருள் வருவாயாக இயற்றுமிடம் நன்ருகப் பயன்படும் என்றவாறு.

**பரிப்:** - இவ் மூன்றும் இம்மைப்பயன் கூறிற்று.

**பழைய** :— விருந்தை உபசரித்து மிஞ்சினதைத் தான் போசிக்குந் தன்மையான் கழனிக்கு நாற்றுவிட வேணுமோ? ஒன்று நூருயிரமாகப் பொலியும்.

**பருதி** :— எ - து விருந்து உபசரித்து மிஞ்சினதைப் புசிப்பது கழனிக்கு எருப்போட்டு நீர்த்தேக்கினது போல; ஒன்று நூருயிரம் விளையும் என்றவாறு.

**காளிங்** :— * * * * * * * *

## உரைவிளக்கப் பகுதி :—

**நுண்** :— ஓம்பி - ஓம்புவித்து எனச் செய்விப்பார் மேல் நின்றது. உழவினுள் '*உழுவார்*' (*1022*) என்பது, முருகாற்றுப் படையுள் வசிந்து வாங்கு நிமிர் தோள் (*106*) என்பதும், சிந்தாமணியுள் காய்மாண்டதெங்கின் (நாம *2.*) என்னும் பாட்டும், பட்டினப் பாலையுள் காடுகொன்று. நாடாக்கிக் குளந்தொட்டு' என்பதும் செய்வதன் மேலும் செய்விப்பதன் மேலும் உரைபெற்றன.

**இராமா**:— வேறுருமுடிபு : முன்னே விருந்தினரை அசனமுதலாயினவைகளாலே உபசரித்து, அவருண்டு குறைந்திருந்ததைப் பின் உண்பவனுடைய கழனியானது, விதைவிதைத்தலையும் விரும்புமோ; விரும்பாது; தானே விளையும் என்றவாறு.

வித்தும் என்ற உம்மையைப் பிரித்துக் கூட்டி வித்திடலும் எனவே களைபறித்தலும் என எதிர் தழுவுதலால் எதிரது தழுவிய எச்ச உம்மை எனக்கொண்டு கொல்லென்பதை அசைநிலையாக்கி ஓகாரம் எதிர்மறைப் பொருள்பட நின்றது எனக்கொள்க. மிச்சில் என்பது உண்டகுறையாகிய எச்சிலுக்கும் மிகுந்திருந்ததாகிய பாண்டக்குறைக்கும் சொல்லப்படும். இவற்றை வடநூலார் பரிகலசேடம் என்றும். பாண்டசேடம் என்றும் சொல்லுவர். இப்படிச் சொன்னதினுலே விருந்து என்ற ஞான ஒழுக்கத்தை உடைய நல்விருந்து எனக்காண்க.

## ஒப்புமைப் பகுதி :

''பைந்நிணம் ஒழுகிய நெய்மலி அடிசில்
வசையில் லான்துணை புரையோர் கடும்பொடு
விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னே டுண்டலும் புரைவ தன்ருங்கு
அறப்புணை யாகத் தேற்றி.'' —குறிஞ்சிப். 204-209

''விருந்து கொண்டுண்ணும் பெருந்தவம் போல
நீங்காத் திரு'' —கல்லாடம் 15.

86. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப் பான்
நல்விருந்து வானத் தவர்க்கு (சு)

**உரைப்பகுதி :**

பரிமே :—*செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்து இருப்பான்-தன்கட்சென்ற விருந்தைப் பேணிப் பின் செல்லக்கடவ விருந்தைப் பார்த்துத் தான் அதனோடு உண்ண இருப்பான், வானத்தவர்க்கு நல் விருந்து - மறுபிறப்பில் தேவனாய் வானினுள்ளார்க்கு நல்விருந்தாம்.

வருவிருந்தென்பது இடவழுவமைதி. நல்விருந்து-எய்தாவிருந்து. இதனால் மறுமைக்கண் எய்தும் பயன் கூறப்பட்டது.

மணக்:—வந்த விருந்தினரைப் போற்றி, வாராத விருந்தினரது வரவுபார்த்திருக்குமவன், வானத்தவர்க்கு நல்விருந்தாவான் என்றவாறு.

வரவுபார்த்தல்-விருந்தின்றி உண்ணுமை.

பழைய :—விருந்தாய்வந்தவரை உபசரித்து, வருகிற விருந்தையும் பார்த்திருந்து அழைத்து உபசரிப்பவன் தேவர்கட்கு நல்விருந்தாவான்.

பருதி :—எ - து விருந்தாற்றிப் போகிறபேர்க்கு உபசரித்து, வருகிற விருந்தை உபசரிப்பவன் நல்லவிருந்தாவன் தேவர்க்கு என்றவாறு.

காளிங் :—எ - து தன் மாட்டுச் சென்ற விருந்தினரைப்பேணிப் பூசித்துப், பின்னும் வரும்விருந்தினரைக் குறிக்கொண்டு பார்த்திருப்பான் யாவன்? மற்றவன் வானின்கண்வாழுந் தேவர்க்கு நல்விருந்து என்றவாறு.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண் :—வருவிருந்து என்பது இடவழுவமைதி. 'செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினும் நிலைபெறத்தோன்றும்' (தொல். சொல். கிளவியாக். 28.) என்னுஞ் சூத்திரவிதி : இஃது இளம்பூரணர் கருத்து, 'மாவை வந்தாண்ட' என்னுந் திருக்கோவையாருள் (200.) வந்தாண்ட - சென்றுண்ட என்றார் பேராசிரியரும். இதற்கு நச்சினார்க்கினியர் இடவழுவமைதியென்னாது விதிச்சூத்திரமாக்கினார் எனக்கொள்க.

* "செல்விருந்து – தவம்செய்வதற்காகச் சாதகமாயிருக்கின்ற சரீரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகச் சிறிது உணவு தேவையானபடியால் அதைச் சிற்சில நாட்களுக்கு ஒருமுறை இல்லறத்தாரிடமிருந்து ஏற்று உண்பதற்காக அவர்கள் வசிக்கும் வீதியில் செல்லுகின்ற மகா முனிகள் அவர்."

—கவிராஜபண்டிதர்.

**ஒப்புமைப்பகுதி :**

" வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய." —புறம். 177 : 15.

" வருவிருந் தோம்பி மனையறம் முட்டாப்
பெருமனைக் கிழத்தியர்." —சிலப். அழற்படு. 133.

" அருவிலையிற் பெறுங்காசும் அவையே யாகி
அமுதுசெய்யத் தொண்டரள விறந்து பொங்கி
வருமவர்கள் எல்லார்க்கும் வந்தாருக்கும்
மகிழ்ந்துண்ண இன்னடிசில் மாளாதாக."
—பெரிய. திருஞான. 571.

" அருந்தினர் அருந்திச் செல்ல அருந்துகின் ருருமாங்கே
இருந்தினி தருந்தா நிற்க இன்னமு தட்டுப் பின்னும்
விருந்தினர் வரவு நோக்கி வித்தெலாம் வயலில் வீசி
வருந்திவிண் நோக்கும் ஒரேர் உழவர்போல் வாடி நிற்பார்."
—திருவிளை. திருநகரம். 56.

## 87. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின் துணைத்துணை வேள்விப் பயன். (எ)

**உரைப்பகுதி :**

**பரிமே ;**—வேள்விப் பயன் இனைத்துணைத்து என்பது ஒன்று இல்லை-விருந்தோம்பலாகிய வேள்வியின்பயன் இன்னஅளவிற்று என்ப தோரளவுடைத்தன்று, விருந்தின் துணைத்துணை-அதற்கு அவ்விருந்தின் தகுதியளவே யளவு.

'ஐம்பெருவேள்வியின் ஒன்ருகலின் வேள்வியென்றும், பொருள் அளவு' *தான் சிறிதாயினுந் தக்கார்கைப் பட்டக்கால், வான்சிறிதாப் போர்த்து விடும் ஆகலின், இனைத்துணைத்தென்பது ஒன்று இல்லை என்றும் கூறினர். இதனன் இருமையும் பயத்தற்குக் காரணம் கூறப் பட்டது.

**மணக் :**—*விருந்தினர்க்கு அளித்ததனல் வரும் பயன் இன்ன அளவினையுடைத்தென்று சொல்லலாவது ஒன்றில்லை. அவ்விருந்தினரின் தன்மை யாதோரளவிற்று அத் தன்மையளவிற்று விருந்தோம்பலின் பயன் என்றவாறு.*

---

* நாலடி. 38.

**பழைய** :—தானங்களின் மேலான விருந்தோம்பலால் வரும் பயன் இத்தன்மைத்தென்று சொல்லப்படாது. உதவிசெயப்பட்டார் சால்பின் வரைத்தாதல்போல விருந்தினரின் தன்மைத்து.

**பருதி** ;—எ-து அறங்களில் மேலானது விருந்துபசரிப்பது; முற்காலத்துக்குத் துணைவருந் தன்னுறவு துணைவருமென்றவாறு.

**காளிங்** :— ... ... ....

## உரைவிளக்கப்பகுதி :—

**இராமா** :—வேறோர் உரை: விருந்தோம்பலாகிய அறத்தின் பயனுக்கு அளவில்லை. ஆயினும் ஒருவன் செய்யப்படும் விருந்தும் அதனை உண்ணும் விருந்துமாகிய இரண்டின் தகுதி அளவே அதற்கு அளவு என்றவாறு.

இரட்டுறமொழிதல் என்னும் உத்தியைச் சார்ந்து விருந்து என்றது இங்கே போசனத்துக்கும் விருந்தினனுக்கும் கொள்ளக்கிடந்தது ஒருவன் எவ்வகைப்பட்ட விருந்தினைச் செய்து எவ்வகைப்பட்ட உபசாரத்தோடேகூட எவ்வகைப்பட்ட விருந்தினனை உண்பிப்பானோ அவ்வகை அளவிற் பயன்கொள்வானாதலால் விருந்தின் துணைத்துணை என்றார். புதிதாகவந்தவனுக்கு இடப்படும் போசனத்துக்கு விருந்து என்று வழங்குதற்கு உதாரணம் "வெண்ணெயோ விதுரனிட்ட விருந்தையோ வேலை சூழ்ந்த, மண்ணையோ உண்டு முன்னாள் வருபசி தீர்த்த மாயோன்" என வருதல் காண்க,

## ஒப்புமைப்பகுதி

"ஊனுணர்க்கும் மானமாதவர்க்கும் ஈதல் வரிசையாற்பெருகுமுன்றும்"

—மேருமந். 349.

"உறவியைப் பெரிது மோம்பி ஒழுக்கத்தை நிறுத்தி உள்ளம்
பொறிவழி படர்ச்சி நீக்கிப் பிறர்க்குநன் ருற்றிப் பொய்தீர்
நெறியினைத் தாங்கி நீங்கா விட்டின்பம் விழைதல் செய்யும்
உறுதவர்க் கீந்த வெல்லாம் உத்தம தான மாமே."

—ஷை 352.

"அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகரம் ஆயிரம் செய்து முடிக்கிலென்
பரம ஞானி பகல்ஊன் பலத்திற்கு
நிகரில்லை என்பது நிச்சயந் தானே."

—திருமந்.

"உறக்குந் துணையதோர் ஆலம்வித்து ஈண்டி
இறப்ப நிழற்பயந் தாங்கு—அறப்பயனும்
தான் சிறிதாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான் சிறிதாப் போர்த்துவிடும்."

—நாலடி. 38

"உயர்ந்தவர்க் குதவிய உதவி ஒப்பவே."

— கம்ப. பால. வேள்வி. 35

88. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். (அ)

உரைப்பகுதி:

பரிமே :— பரிந்து ஓம்பிப் பற்று அற்றேம் என்பர் - நிலையாப் பொருளை வருந்திக்காத்துப் பின் அதனை யிழந்து இதுபொழுது யாம் பற்றுக்கோடிலமாயினேம் என்றிரங்குவர், விருந்து ஓம்பி வேள்வி தலைப்படாதார்-விருந்தினரை ஓம்பி வேள்விப் பயனையெய்தும் பொறியிலாதார்.

*"ஈட்டிய ஒண்பொருளைக் காத்தலும் ஆங்கே கடுந்துன்பம்" ஆதலின் பரிந்தோம்பி என்றார். வேள்வி ஆகுபெயர்.

மணக்:—விருந்தினரைப் போற்றி யுபசரிக்கமாட்டாதார் வருந்தி உடம்பொன்றையும் ஓம்பிப் பொருளற்றேம் என்றிரப்பர் என்றவாறு.

பரிப் :—இது விருந்தோம்பாதார்க்குக் குற்றமென்னை என்றார்க்கும் கூறப்பெற்றது.

பழைய:—தனத்தைத் தேடி விருந்துசெய்யாதவர், இனிவருகிற சென்மத்துக்குத் தரித்திரராய், அப்போது நம்மை ஒருவர் தற்காக்கமாட்டாரோ என்று விசனப்படுவார் ஆதலால் உள்ளபோதே விருந்து உபசரிப்பாராக.

பருதி :—எ - து தனத்தைத் தேடிக்கொண்டு தன்மம்செய்யாதவர் இந்த செனனத்தில் தரித்திரராய் நமக்கு ஒருவர் துணையும் அற்றும் என்று வியாகூலப்படுவர்; அதனால் தானமும் விருந்தும் செய்து உபசரிப்பதே நன்று என்றவாறு.

காளிங் :— ... ... ....

உரைவிளக்கப் பகுதி :—

நுண் :—வேள்வி - வேளாண்மை. பரிந்து ஓம்பி - பொருளின் மெய்யாற் பிறர்பாலிரந்தும் பிறவாற்றானும் வருந்தித் தம் உடம்பைமட்டும் பேணி, பற்று அற்றேம் - பரம்பொருட்பற்று அற்றேமாயினேம், என்பர்-என்று பற்றற்ற துறவிகள்போற் பேசுவர்.

பரிந்தோம்புவார், அப்பொருளை யிழத்தல் அரிதாகலின், அங்ஙனம் பொருள்கோடல் வலிந்து கோடலாகின்றது என மறுப்பர்.

* நாலடி, 280

இராமா :—பற்று - ஊன்றுகோல். அது இங்கே உவமையாகி பெயராய் நின்றது. வேள்வி காரணவாகுபெயர்.

**மேற்கோள்பகுதி:—**

இருமூன்று மரபின்ஏனோர் பக்கம் என்பதில் வேளாளர் வேட்டலுக்கு மேற்கோள்; தொல் - பொருள் 74.

குறிப்பு :—விருந்தோம்பலிற் பயன்படுத்தாத செல்வம் பிறரால் கவரப்பட்டு அழிதலின், பற்றுக்கோடாக எண்ணிப் பாதுகாத்த அதனையும் தேனீப்போல இழந்தோமே என்று வருந்துவர் எஃகிறார்.

**89. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா**
**மடமை மடவார்கண் உண்டு. (௯)**

**உரைப்பகுதி:—**

**பரிமே :**—உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா மடமை-உடைமைக்காலத்து இன்மையாவது விருந்தோம்பலை யிகழும் பேதைமை; மடவார்கண் உண்டு - அஃது அறிந்தார்மாட்டு உளதாகாது பேதையார்மாட்டே உளதாம்.

உடைமை பொருளுடையனுந்தன்மை. பொருளால் கொள்ளும் பயனை யிழப்பித்து உடைமையை இன்மையாக்கலின், மடமையை இன்மையாக உபசரித்தார். பேதைமையான் விருந்தோம்பலையிகழிற் பொருள் நின்றவழியும் அதனாற்பயனில்லை யென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் விருந்தோம்பாவழிப்படுங் குற்றங் கூறப்பட்டது.

**மணக் :**—உடைமையின் கண்ணே இல்லாமைபோல விருந்தினர்க்கு அளித்தலைப் போற்றாத பேதைமை, பேதைமையார்மாட்டே உளதாம் என்றவாறு.

**பரிப் :**—இக்குறள் உரை ஏட்டிற்காணப் பெறவில்லை.

**பழைய :**—செல்வத்துளின்மையாவது விருந்தோம்பல். அது அன்புளாரியல்பு. அறிவிலாதவர் விருந்து உபசரியார்.

**பருதி :**—எஃது செல்வத்துள் இல்லின் தன்மையாவது விருந்து ஓம்பல். அங்ஙனம் ஓம்பாத மடமை சில பெண்களிடம் உண்டு. ஸ்திரீயும் புருஷனும் ஒருமனமாகச் செய்வது விருந்து; அல்லது பிரயோசனம் இல்லை என்றவாறு.

காளிங் :— * * * * * * * *

நுண். :—மடவார் - அறிவிலாதார் என ஆண்பாலானது. 'தூங்கு சிறைவாவல் உறை' என்னும் சிந்தாமணியுள் (காந்தருவ. 6.) மடவார் என்பதும் அது.

குறிப்பு :—இன்மை என்பதற்கு இல்லின் தன்மை எனப் பொருள் கண்டார் பருதி. கையில் வெண்ணெயைக் வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவார்போலப் பொருளிருந்தும் விருந்து பேணுதார் அறியார் என்கின்றது இக்குறள்.

**90. *மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து. (ம)**

**உரைப்பகுதி :**

**பரிமே :**—அனிச்சம் மோப்பக் குழையும் – அனிச்சப்பூமோந்துழியன்றிக் குழையாது; விருந்து முகம் திரிந்து நோக்கக் குழையும் - விருந்தினர் முகம் வேறுபட்டு நோக்கக் குழைவர்,

அனிச்சம் ஆகுபெயர். சேய்மைக்கட்கண்டுழி இன்முகமும், அதுபற்றி நண்ணியவழி இன்சொல்லும், அதுபற்றி உடன்பட்டவழி நன்குற்றலுமென விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள் முதலாய இன்முகம் இல்வழிச் சேய்மைக்கண்ணே வாடிநீங்குதலின், தீண்டியவழியல்லது வாடாத அனிச்சப்பூவினும் விருந்தினர் மெல்லியரென்பதாம். இதனுன் விருந்தோம்புவார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டுமென்பது கூறப்பட்டது.

**மணக் :**—எல்லா மலரினும் மெல்லிதாகிய அனிச்சப்பூ மோந்தால் அல்லது வாடாது; விருந்தினரை முகந்திரிந்து நோக்க அவர் வாடுவர் என்றவாறு.

இது முகநோக்கி இனிமை கூறவேண்டும் என்றது.

பழைய : அனிச்சமலர் நாசியில் முகந்தமாத்திரத்திலே குழையும். அதுபோல விருந்தினரைக் கிருபையினுலே பாராதபோது விருந்தினர் முகம் வாடும்.

பருதி :—எ - து அனிச்சமலர் நாசியிலே முகர வாடும்; அதனிலும் மிருது விருந்து; அது எங்ஙனம் எனில் பிரியமில்லாமல் பார்க்க முகம் வாடும் என்றவாறு.



* 'மோக்க' என்பது பரிப்பெருமாள் பாடம்.

**காளிங் :**—எ - து உலகத்து மலர்கள் பலவற்றினும் மென்மையாற் சிறந்த அனிச்சமலர் ஒருவர் பறித்து மோப்பவாடுமதுபோல், விருந்தை ஒருவர் முகம்மாறிப் பார்க்க மிகவும் வாடுமென்றவாறு. 5

## உரைவிளக்கப்பகுதி.

**இராமா :**—முதலாகிய இனியமுகம் இல்லாதபோது விருந்தினர் கண்டு மனம் குழைந்து தூரத்திலே தானே விலகிப்போவார், ஆதலாலே தொட்டால் வாடுகின்ற அனிச்சப்பூவினும் விருந்தினர் மெல்லியர் என்பதாம். இது குறிப்பினாலே அதனினும் இது உயர்ந்தது என்று உயர்வு தோன்ற நின்ற வேற்றுமை யலங்காரம்.

## மேற்கோள்பகுதி:

**மயிலை :**—'மோப்பக்குழையும்' செயவெனெச்சம் இருதொழிலும் நிகழ்காலமும் உற்றதற்கு மேற்கோள். (நன். சூ. 343)

**சங்கர :**—மோப்பக் குழையும் என்பது 'முதலில் நான்கும்' என்ற சூத்திரத்து: இடையில் ஐந்தும் வினைமுதலும் பிறவுங்கொண்டதற்கு மேற்கோள் (நன், சூ. 344)

## ஒப்புமைப் பகுதி :

அகன் நகவாரா முகன்அழி பரிசில் —புறம் 207 : 4

அனிச்சத்தம் போது போலத் தொடுப்பவே குழைந்து மாழ்கி —சீவக. 2939

வந்த விருந்து மலராத வதனம் நோக்க முன்குழையும்
அந்த அடைவால் அகத்தன்மை அலர்ந்த முகத்தால் வெளிப்படுத்திச்
சந்தமணிவாயினும் தோன்றச் சற்றும் வஞ்சம் கலவாமே
உந்தும் சுவையின் மொழி யென்றும் உரைத்தல் வேண்டும் பயன்வேண்டின்.

—விநா. அரசி. 23.

# 10. இனியவைகூறல்

பரிமே :—அஃதாவது மனத்தின்கண் உவகையை வெளிப்படுப்பனவாகிய இனியசொற்களைச் சொல்லுதல். இதுவும் விருந்தோம்புவார்க்கு இன்றியமையாததாகலின் விருந்தோம்பலின் பின் வைக்கப்பட்டது.

மணக் :—இனியவை கூறலாவது கேட்டார்க்கு மனமகிழும் சொற்களைக் கூறுதல்.

பரிப் :—இது புதியராக வந்தார்க்குத் தலையாக வேண்டுதலின், அதன் பிற் கூறப்பட்டது.

பழைய :—மனமகிழ்ச்சியை வெளிப்படுப்பனவாகிய சொற்களைச் சொல்லுதல். நோக்கக் குழையும் விருந்திற்குக், கூறமகிழ்தல் ஏற்றதாகலின் விருந்தோம்பலின் பின் வைத்தார் என்க.

பருதி :—இனியவை கூறலாவது யாவர்க்கும் இனியவை சொல்ல வேணும் என்பது.

91. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். (க)

உரைப்பகுதி :—

பரிமே :—இன்சொல் - இன்சொலாவன; ஈரம் அளைஇப் படிறு இலவாம் செம்பொருள் கண்டார் வாய்ச்சொல் - அன்போடு கலந்து வஞ்சனை இலவாயிருக்கின்ற அறத்தினை உணர்ந்தார் வாயிற் சொற்கள்.

ஆல் அசைநிலை, அன்போடுகலத்தல் - அன்புடைமையை வெளிப்படுத்தல். படிறின்மை - வாய்மை, மெய்யுணர்ந்தார் நெஞ்சிற் கெல்லாஞ் செம்மையுடைத்தாய்த் தோன்றலின்; செம்பொருள் எனப்பட்டது. இலவாஞ் சொல் என இயையும். வாய் என வேண்டாது கூறினர், தீயசொல் பயிலா என்பது அறிவித்தற்கு. இதனுன் இன் சொற்கு இலக்கணங்கூறப்பட்டது.

மணக் :—இருவர் மாறுபடச் சொன்ன மாற்றத்தினது உண்மைப் பொருளைக் கண்டார் கூறும் மெய்யாகிய சொற்களும் இன்சொல் ஆதலானே அருளோடு பொருந்திக் குற்றமிலவாம் என்றவாறு.

பரிப் :—எனவே அவ்வாறு கூறுராயிற் குற்றம்போலத் தோன்றும் என்பது கருத்து. என்னை? நடுவு சொல்வான் ஒருவன் ஒருவனைத் தோல்வி சொல்லுங் காலத்தும் இன்சொல்லானே கூருனயின், அது குற்றமாய்த்

தோற்றுமாதலால் இஃது ஒருவனைக் கடிந்து சொல்லவேண்டுமிடத்தும் இன்சொல்லாலே கடியவேண்டும் என்றது.

பழைய :—நல்ல உபதேசத்தோடு பொருந்திய நல்லோர் சொல்லுஞ் சொல் கிருபையோடே கூடியிருக்கும்

பருதி :—எ- து உபதேசத்தோடே கூடிய நல்லோர் சொல் ஆபத்துக் காலத்துக்கு வைத்த உடைமைபோல் உதவும் என்றவாறு. (10)

காளிங் :—எ - து இனிய சொல்லுமாய்க் கேட்போர் செவிக்கு நீர்மை விராவிப் பொய்யென்கிற பிறவிகாரமும் இலவாம்; யாவையெனின், வீட்டின்பமாகிய மெய்ப்பொருளினை நோக்குதற்கரியவர் வாய்ச்சொற்கள் என்றவாறு. (10)

இனி, மற்று இவ்வாறு பிறர்க்கினியவை சொல்லியுஞ் செய்தும் வருபவர், தமக்குப் பிறர்செய்யும் செய்ந்நன்றியும் அறிவிக்குந் தகுதியர் ஆதலான் அதனை அறிவிக்கின்றது மேலதிகாரம்.*

**உரைவிளக்கப்பகுதி:—**

நுண் :—ஈரம் - அன்பு. ஆல் - அசை. 'இரப்பாரை யில்லாயின்' (1058) என்பதில் ஐயும் அசை. 'இலவாஞ் சொல்' என இயையும். தீச்சொற் பயிலா என்பதறிவித்தற்கு வாயென வேண்டாதுகூறி வேண்டியது முடித்தல் என்னுந் தந்திரவுத்தி காட்டினர் என்க. இழுக்கலுடையுழி' (415) என்பதும் அது. இதனை வடநூலார் தாற்பரியம் என்ப.

**ஒப்புமைப்பகுதி:**

"அன்புடை நன்மொழி அளைஇ." —திருமுரு. 392.

"ஈரநன்மொழி இரவலர்க்கு ஈந்த." —சிறுபா. 93.

**92. அகனமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின் (உ)**

**உரைப்பகுதி :**

**பரிமே :—**அகன் அமர்ந்து ஈதலின் நன்று-நெஞ்சு உவந்து ஒருவற்கு வேண்டியபொருளைக்கொடுத்தலினும் நன்று; முகன் அமர்ந்து இன்சொலனாகப் பெறின்-கண்டபொழுதே முகம் இனியனாய், அதனோடு இனிய சொல்லையும் உடையனாகப் பெறின்.

* இக்குறளைப் பத்தாவதாகக் கொண்டமையின் இங்ஙனம் வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்தார்.

இன்முகத்தோடு கூடிய இன்சொல் ஈதல்போலப் பொருள்வயத்த தன்றித் தன்வயத்ததாயினும், அறநெஞ்சுடையார்க்கல்லது இயல்பாக இன்மையின், அதனினும் அரிது என்னுங்கருத்தான், இன்சொலனுகப் பெறின் என்றார்.

*மணக் :—மனம் பொருந்திக் கொடுத்தலினும் நன்று; முகம்பொருந்தி இனிமைச்சொல் சொல்ல வல்லவனுயின் என்றவாறு.* (1)

*பழைய :—அகமலர்ந்து சொர்ணதானங் கொடுப்பதினும், அன்ன தானங்கொடுப்பதினும் சிறந்தது; முகமலர்ந்து இன்சொற் கூறல்.*

*பருதி :—எ-து மனமகிழ்ந்து சொர்ணதானங் கொடுப்பதைக்காட்டிலும் இன்சொல் விசேஷம் என்றவாறு.* (4)

*காளிங் :—எ-து அகமலர்ந்து ஒருவர்க்கு உபகாரம் செய்தலினும், மிக நன்று; அது யாதோவெனின், யாவர்க்கும் முகமலர்ந்து இனியசொல் சொல்லுமவனுகப்பெறின் என்றவாறு.* (5)

**உரைவிளக்கப்பகுதி :—**

*இராமா :—ஏகாரம் அசைநிலை; இனி முகனமர்ந்து இன்சொலன் ஆகப் பெறின்; அது அகனமர்ந்தீதல்போல நன்று எனக் கொள்ளினும் அமையும்.*

**ஒப்புமைப் பகுதி :**

"முகனமர்ந் தேத்தி." —திருமுரு. 251.

**93. முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானும்**
**இன்சொ லினதே யறம்.** (ரு)

**உரைப்பகுதி:**

பரிமே :—முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி-கண்டபொழுதே முகத்தான் விரும்பி இனிதாக நோக்கி, அகத்தான் ஆம் இன்சொலினதே அறம்-பின் நண்ணியவழி மனத்துடனுகிய இனியசொற்களைச் சொல்லுதலின்கண்ணதே அறம்.

நோக்கியென்னும் வினையெச்சம் இன்சொலென அடையடுத்து நின்ற முதனிலைத்தொழிற்பெயர் கொண்டது. ஈதலின் கண்ணது அன்று என்றவாறு. இவை யிரண்டுபாட்டானும் இன்முகத்தோடு

கூடிய இன்சொல், முன்னரே பிணித்துக்கோடலின் விருந்தோம்பு தற்கட் சிறந்தது என்பது கூறப்பட்டது.

**மணக் :–** கண்ணாலேபொருந்தி இனிதாகநோக்கி மனத்தோடே பொருந்திய இன்சொல் சொல்ல வல்லவனாயின் அதுதானே அறமாம் என்றவாறு. (2)

**பரிப் :–** ஆம் என்பதனை இறுதியிற் கூட்டுக. இதனானே மனத்தோடு கூடாத இன்சொல் அறமாகாது என்றவாறாயிற்று. இனிமை சொல்லுங்கால் மனத்தொடு கூறுதலும், நல்லன ஆராய்ந்து கூறுதலும், தாழ்ந்து கூறுதலும், யார் மாட்டுங் கூறுதலும், குணத்தொடு கூறுதலும் வேண்டுமாகலின் மனத்தொடு கூறவேண்டும் என்பதூஉம், அதுதானே அறமாவது என்பதூஉம் கூறினார்.

**பழைய :–** யாவரையும் விரும்பிப் பார்த்துக் கிருபையினாலே மனமகிழ்ந்து இன்சொல் நவில்வதன்றோ அறம்.

**பருதி :–** எ - து யாரையுங் கிருபையினாலே பார்த்து மனமகிழ்ந்து சொல்லின் அதுவன்றோ தன்மம் என்றவாறு. (5)

**காளிங் :–** எ - து கேட்டவர்க்குச் சில சொல்லுமிடத்துத் தம் முகத்தினால் இனிதாகநோக்கி, பதறுது தணிந்திருந்து இருவர் நெஞ்சமும் அமையாத இனிமையைத் தருவதாகிய இன்சொற்களைச் சொல்லின் மற்று அதுவே அறமாவது என்றவாறு. (6)

## உரைவிளக்கப்பகுதி :

**நுண் :–** இன்சொல்லினதே - இன்சொலின் கண்ணதே என்று பொருள்படுதலால், நோக்கி என்னும் எச்சம் இன்சொல் என அடையடுத்து நின்ற முதனிலைத்தொழிற்பெயர் கொண்டது. 'பேரமர்க்கட்டு' (1083) பெயரடியாகப் பிறந்தவினை. நச்சினார்க்கினியர் 'ஆயிருமுதலின்' (தொல். பாயிரம்.) என்பதனை 'அவ்விரண்டையும் முதலுகையால்' என்றார் என்க.

**இராமா :–** இனி, இதற்கு 'நோக்கி' என்னும் வினை எச்சத்தை எச்சத்திரிபு எனக்கொண்டு, அது ஆம் என்னும் பெயரெச்சத்தைக்கொண்டு முடிய, அப்பெயரெச்சம் இன்சொலினது என்னும் குறிப்பு முற்றின் பகுதியாகி, அடையடுத்துநின்ற இன்சொல் என்னும் பெயரோடு முடிந்தது எனக்கொண்டு, முகத்தினாலே அமர்ந்து இனிது நோக்கினதினாலே மனத்தொடுபட்டுவந்ததாகிய இனியசொல்லை யுடையதே அறமாவது எனக்கொள்ளினும் அமையும்.

**ஒப்புமைப்பகுதி**

"நயனுடை நெஞ்சு." —குறுந். 143.

"மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து
ஆனுவிருப்பிற் ருனின்றூட்டி." பெரும்பா—478-9.

அகமலர்ந் தருந்தவன் அமரர்க்கு அன்புகூர்
முகமலர்ந்து இன்னுரை முகமன் கூறி." —திருவிளை. இந்திரன்பழி. 29.

**94. துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்**
**இன்புறூஉம் இன்சொ லவர்க்கு. (ச)**

**உரைப்பகுதி ;**

**பரிமே:—** யார்மாட்டும் இன்பு உறூஉம் இன்சொலவர்க்கு - எல்லார்மாட்டும் இன்பத்தை மிகுவிக்கும் இன்சொல்லை உடையார்க்கு, துன்பு உறூஉம் துவ்வாமை இல்லாகும் - துன்பத்தை மிகுவிக்கும் நல்குரவு இல்லையாம்.

நா முதலிய பொறிகள் சுவை முதலிய புலன்களை நுகராமையுடைமையின், துவ்வாமை எனப்பட்டது. யார்மாட்டும் இன்புறூஉம் இன்சொலவர்க்குப் பகையும் நொதுமலும் இன்றி உள்ளது நண்பேயாம்; ஆகவே, அவர் எல்லாச் செல்வமும் எய்துவரென்பது கருத்து.

**மணக்:—** *துன்பம் உறுவிக்கின்ற நுகராமையாகிய நல்குரவு இல்லையாகும்; யாவர்மாட்டும் கூறும் இன்பம் உறுவிக்கின்ற இனிய சொல்லை உடையார்க்கு என்றவாறு.* (6)

**பரிப்:—** *இஃது எல்லார் மாட்டும் இன்சொற் கூறவேண்டும் என்பதூஉம், அதனானே பொருளுண்டாம் என்பதூஉம் கூறப்பட்டது.*

**பழைய :—** *துன்பமாய், தரித்திரமேற்கொண்டு துயருறுவதும் இல்லையாகும்; யாவரிடத்தும் இன்சொல் கூறவல்லராயினுர்க்கு.*

**பருதி ;—** *எ - து தோத்திரமேற்கொண்டு துயர் உறுந் துன்பமில்லை; யாரிடத்திலும் இன்சொல் கூறுவானாகில் என்றவாறு.* (6)

**காளிங் :—** *எ - து தம்மைத் துன்பமுறுத்துவதாகிய வறுமை இலதாகும்; யார்க்கெனின், யாவர்மாட்டும் நேரொக்க மற்றவரவர் நெஞ்சத்து இன்பம் உறுத்தும் இனிய சொல்லினையுடையார்க்கு என்றவாறு.* (2)

95. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்
கணியல்ல மற்றுப் பிற, (ரு)

**உரைப்பகுதி :**

பரிமே :—ஒருவற்கு அணி பணிவு உடையன் இன்சொலனுதல்- ஒருவனுக்கு அணியாவது தன்னுல் தாழப்படுவார்கண் தாழ்ச்சியுடைய ஞய் எல்லார்கண்ணும் இனியசொல்லேயும் உடையனுதல்; பிற அல்ல- இவை இரண்டுமன்றி மெய்க்கு அணியும் பிற அணிகள் அணியாகா,

இன்சொலனுதற்கு இனமாகலின் பணிவுடைமையும் உடன் கூறிஞர். மற்று அசைநிலே.வேற்றுமையுடைமையால் பிற எனவும், இவை போலப் பேரழகு செய்யாமையின் அல்ல எனவுங் கூறிஞர். இவை இரண்டு பாட்டானும் இனியவை கூறுவார்க்கு இம்மைப்பயன் கூறப் புட்டது,

மணக் :—ஒருவனுக்கு அழகாவது தாழ்ச்சியுடையனுய் இனிய சொற் களேக் கூறவல்லவனுதல். பிறவாகிய அழகெல்லாம் அழகெனப்படா என்றவாறு. (4)

இது தாழ்ந்துக் கூறவேண்டும் என்பதும், அதனுலாம் பயனும் கூறிற்று.

பழைய :— ... .... .... .... ....

பருதி :— எ - து வணக்கமுடையவனுமாய் இனிய வசனம் சொல்ப வனுகில் அவனுக்கு நல்லவாழ்க்கையே ஆபரணம் என்றவாறு. (3)

காளிங் :— எ - து யாவர் மாட்டும் தாழ்ச்சியுடையனுமாய் இனிய சொல்லினேயு முடையனுதலென்கின்ற வினேயில்லாதார்க்கு ஓர் அணிகலம் பெறுவதன்றி வேறு பிறநன்மைகளும் பெறுவர் என்றவாறு. (7)

**உரைவிளக்கப்பகுதி :—**

நுண் :— அல்ல பிற என்பது 'மக்கட்பேறல்ல பிற' (61.) என்புழிப் போல எச்சமாகாது முற்ருயிற்று. 'உடையனுய்' என எச்சம் முற்ருயின வாறு காண்க.

இராமா :— உயிர்க்கு அழகுசெய்யாமையாலும், ஒருவன் கற்றவர் சபையிலே எல்லா ஆபரணங்களேயும் பூண்டு 'இறுமாந்து கடுஞ்சொல் சொல்லுவானுஞல் அவனேப் புறம்போக்கிக் கற்றவர் கண்ணுலே நோக் கவும் நோக்கார்; ஆதலால் அப்போது அந்த ஆபரணங்கள் இருந்தும் அவ

னுக்கும் ஒரு சிறப்பும் இல்லாததனாலும் அணியல்ல என்று சொன்னார். மற்று அசைநிலை. அணி என்பது செய்யுள் இருமருங்கும் சென்று பொருள் முற்றுவதினாலே தாப்பிசைப் பொருள்கோளாகக்கொள்க.

**மேற்கோள் பகுதி :—**

செவியுறை அடங்கி வாழ்வார்க்குப் புகழாதலான் வாழ்த்தின்பாற் படும் என்றதற்கு மேற்கோள். (தொல்—பொருள் 425 பேரா-உரை.)

**96. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின்** (௩)

**உரைப்பகுதி :—**

**பரிமே:—** நல்லவை நாடி இனிய சொலின்-பொருளால் பிறர்க்கு நன்மை பயக்குஞ்சொற்களை மனத்தான் ஆராய்ந்து இனியவாக ஒருவன் சொல்லுமாயின், அல்லவை தேய அறம்பெருகும் - அவனுக்குப் பாவங்கள் தேய அறம் வளரும்.

தேய்தல் தன் பகையாகிய அறம் வளர்தலில் தனக்கு நிலையின்றி மெலிதல். ''தவத்தின்முன் நில்லாதாம் பாவம்'' என்பதூஉம் இப் பொருட்டு. நல்லவை நாடிச் சொல்லுங்காலும் கடியவாகச்சொல்லின் அறன் ஆகாது என்பதாம். இதனான் மறுமைப்பயன் கூறப்பட்டது.

**மணக்:—** நல்லவான சொற்களை ஆராய்ந்து இனியவாகச் சொல்லு வானாயின் அதனானே அறமல்லாதன தேய அறம் வளரும் என்றவாறு. (3)

**பரிப் :—**இது நல்லவை ஆராய்ந்து கூறவேண்டும் என்பதும், அதனாற் பயனும் கூறிற்று.

**பழைய:—** பாவங் குறையும் புண்ணியம் மேற்பெருகும். தன்ம வசனஞ் சொல்வார்க்கு.

**பருதி:—** எ - து பாவங் குறையும்; புண்ணியம் பெருகும். இனிமை யாகிய இன்சொல் சொல்லின் என்றவாறு. (8)

**காளிங்:—** எ - து அல்லவையாகிய பாவமானது மிகவும் தேய்ந்து அறமானது மிகவும் பெருகும். அஃது யாதோ எனின் தனக்கும் பிறர்க் கும் இம்மை மறுமை பயக்கும் இனியசொற்களை ஆராய்ந்து சொல்ல வல்லனாயின் என்றவாறு. (8)

**ஒப்புமைப் பகுதி:**

> "விளக்குப் புகஇருள் மாய்ந்தாங்கு ஒருவன்
> தவத்தின்முன் நில்லாதாம் பாவம்." —நாலடி 51.

**97.** [1] நயன்ஈன்று [2]நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல். (எ)

**உரைப்பகுதி :—**

**பரிமே:**—நயன் ஈன்று நன்றி பயக்கும்-ஒருவனுக்கு இம்மைக்கு நீதியையும் உண்டாக்கி, மறுமைக்கு அறத்தையும் பயக்கும்; பயன் ஈன்று பண்பின் தலைப்பிரியாச் சொல் - பொருளால் பிறர்க்கு நன்மையைக் கொடுத்து இனிமைப் பண்பின் நீங்காத சொல்.

நீதி உலகத்தோடு பொருந்துதல். பண்பு என்பது ஈண்டு அதிகாரத்தான் இனிமைமேல் நின்றது. தலைப்பிரிதல் ஒரு சொன்னீர்மைத்து.

**மணக்:**– *பிறரால் விரும்பப்படுதலையும் பயந்து, பொருளையும் பயந்து, அறத்தினையும் பயக்கும்; குணத்தினின்று நீங்காத சொல் என்றவாறு.* (7)

**பரிப் :**—நயனீன்று, பயனீன்று நன்றி பயக்கும் எனக் கூட்டுக. இது குணத்தொடு கூறல்வேண்டும் என்பதூஉம், அதனானே அறம் பொருள் இன்பம் மூன்றும் எய்தலாம் என்பதூஉம் கூறிற்று.

**பழைய:**— .... .... ...

**பருதி:**— எ-து இனியவசனம் இம்மைக்கு நல்லோர் என்னும்; மறுமைக்கு முத்தியுங் கொடுக்கும்; விருந்துக்கு இனியவை சொல்வானாகில் என்றவாறு. (7)

**காளிங்:**— எ-து தாம் ஒழுகுகின்ற ஒழுக்கமும் நழுவாது நிலைபெற்று, மற்றுமுள்ள நன்மையும் பயக்கும்; அது யாதோவெனில், தன் நாவானது பயனில்லாதனவற்றைச் சொல்லாமை பிறர்க்கு நிலைபெறுமதன் பொருட்டுப் பயனை இனியமரபுடையார் சொல்லானது என்றவாறு.

**உரைவிளக்கப்பகுதி ;**

**நுண்:**—*தலைப்பிரிதல் - ஒருசொல். 'தலைச்சென்றார்க்கு' (54) என்ற ஆசாரக்கோவையும் அது.*

**இராமா:**— நயம் நயன்என மொழிஇறுதிப்போலியாய் நின்றது. தலைப்பிரிதல்: பிரிதல்; இது இரண்டு சொல்போலத் தோன்றினும் ஒரு

---

[1] "நயன்—நீதி" —கவிராஜ பண்டிதர். [2] "நன்மை" எனவும் பாடம்,

சொல்லின் தன்மையை யுடையது. அல்லது தலை என்பது இடம் எனக் கொண்டு, இடத்தில் நின்று நீங்குதல் எனினும் அமையும்.

**98.** [1] **சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்**
**இம்மையும் இன்பந் தரும்.** (அ)

**உரைப்பகுதி :**

**பரிமே** :—சிறுமையுள் நீங்கிய இன்சொல் - பொருளால் பிறர்க்கு நோய்செய்யாத இனியசொல், மறுமையும் இம்மையும் இன்பம் தரும் - ஒருவனுக்கு இருமையினும் இன்பத்தைப் பயக்கும்.

மறுமையின்பம் பெரிதாதலின், முன் கூறப்பட்டது. இம்மையின்பமாவது உலகம் தன்வயத்ததாகலான் நல்லன எய்தி இன்புறுதல். இவை இரண்டுபாட்டானும் இருமைப்பயனும் ஒருங்கெய்துதல் வலியுறுத்தப்பட்டது.

**மணக் :**—*புன்மையுள் நின்று நீங்கிய இனிய சொற்கள், இம்மையின் கண்ணும் மறுமையின்கண்ணும் இன்பத்தைத் தரும் என்றவாறு.* (5)

**பரிப் :**—*இன்பமாவது மக்களாயும், தேவராயும் நுகரப்படுவது.*

**பழைய:**—*குற்றத்தினீங்கிய இனியசொல் இம்மைக்கு நல்லோர் என்னும் இன்பமும், மறுமைக்கு முத்தியுங் கொடுக்கும்.*

**பருதி:**—*எ - து பாவம் நீங்கிய புண்ணியத்து இன்சொல் இம்மைக்குச் செல்வமும் மறுமைக்கு முத்தியுங் கொடுக்கும் என்றவாறு.* (9)

**காளிங்:**—*எ - து குற்றத்தினின்றும் நீங்கிய இனியசொற்களைச் சொல்லுவானொருவன் இம்மை மறுமை இரண்டின் கண்ணும் இன்பத்தைப்பெறுவான் என்றவாறு.* (9)

**உரைவிளக்கப்பகுதி :**

**இராமா** :—*சிறுமை - துன்பம், அது கடுஞ்சொல்லின் பயன் ஆதலின் சிறுமையுள் நீங்கிய இன்சொல் என்றூர்.*

**99. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**
**வன்சொல் வழங்கு வது.** (சு)

**உரைப்பகுதி :**

**பரிமே:**— இன்சொல் இனிது ஈன்றல் காண்பான் - பிறர் கூறிய இன்சொல் தனக்கு இன்பம் பயத்தலை அனுபவித்து அறிகின்றவன்,

---

[1] "சிறுமை...சொல் - திரவியவலுமையால் பிறருக்கும் வாதைபண்ணுத நல்லவார்த்தை"
—கவிராஜபண்டிதர்.

வன்சொல் வழங்குவது எவன்கொல் - அது நிற்கப் பிறர்மாட்டு வன் சொல்லைச் சொல்லுவது என்னபயன் கருதி ?

இனிதென்றது வினைக்குறிப்புப்பெயர். கடுஞ்சொல் பிறர்க்கும் இன்னாதாகலின், அது கூறலாகாது என்பது கருத்து.

**மணக்:**—*ஒருவன் இனியவாகச் சொல்லும் சொற்கள் இன்பத்தைப் பயத்தலைக் காண்பான், அதற்கு மறுதலையாகிய வன்சொல்லை வழங்குவது எப்பயனை நோக்கியோ என்றவாறு.* (9)

**பரிப் :**—*இது இனிமை கூறுதார்க்கு ஒரு பயனும் இல்லை என்றது.*

**பழைய :**— *நல்லவசனம் நன்மையேதரும்: அது அறிந்திருந்தும் பொல்லாவசனங் கூறுவான் ஏனெனில் பாவத்தின் வசமாம்.*

**பருதி :**—*எ - து நல்லவசனம் நன்மையே தரும்; அதுவறிந்து பொல் லாத வசனம் கூறுவான் அதேதெனில், பாவத்தின்வழி என்றவாறு.* (2)

**காளிங்:**— *எ - து இனிய சொல்லானது மற்று இவ்வாறு இனியது பயத்தலை நூல்களில் கேட்டிருக்கையன்றி, இம்மையே காண்கின்றவன் இனியதனைவிட்டு இனிதல்லாத வன்சொல்லை யாவர்மாட்டும் செலுத்து வது என்னகொலோ? எனவே, யாவதும் ஒரு பயனுமில்லை என்றவாறு.*

**ஒப்புமைப்பகுதி :**

புன்சொல்லும் நன்சொல்லும் பொய்யின்றுணர்கிற்பார்
வன்சொல் வழியராய் வாழ்தலும் உண்டாமோ
புன்சொல் இடர்ப்படுப்ப தல்லால் ஒருவனை
இன்சொல் இடர்ப்படுப்ப தில்.

—பழமொழி

**100. இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.** (0)

**உரைப்பகுதி :**

**பரிமே:**—இனிய உளவாக இன்னாத கூறல் - அறம் பயக்கும் இனியசொற்களும் தனக்கு உளவாயிருக்க அவற்றைக்கூறுது பாவம் பயக்கும் இன்னாத சொற்களை ஒருவன் கூறுதல், கனி இருப்பக் காய் கவர்ந்தற்று-இனிய கனிகளும் தன் கைக்கண் உளவாயிருக்க அவற்றை நுகராது இன்னாத காய்களை நுகர்ந்ததனோடு ஒக்கும்.

கூறல் என்பதனுல் சொற்கள் என்பது பெற்ரும். பொருளை விசேடித்து நின்ற பண்புகள் உவமைக்கண்ணுஞ் சென்றன. இனிய கனிகள் என்றது ஒளவையுண்ட நெல்லிக்கனிபோல அமிழ்தாவன வற்றை. இன்னுதகாய்கள் என்றது காஞ்சிரங்காய்போல நஞ்சாவன வற்றை. கடுஞ்சொற்சொல்லுதல் முடிவில் தனக்கே இன்னுதென்பதாம் [1]. இவை யிரண்டுபாட்டானும் இன்னுதகூறலின் குற்றம் கூறப்பட்டது.

**மணக் :**—*பிறர்க்கு இனியவாகச் சொல்லுஞ்சொற்கள் இன்பத்தைத் தருதலைக் கண்டவன் இனிய சொற்கள் இருக்கக் கடிய சொற்களைக் கூறுதல்; பழமுங் காயும் ஓரிடத்தே யிருக்கக் கண்டவன் பழத்தை கொள்ளாது காயைக்கொண்ட தன்மைத்து என்றவாறு.* (10)

**பரிப் :**—*இது பிறர்க்கேயன்றித் தனக்கும் நன்ருகாது என்றது.*

**பழைய :**— *நல்லவார்த்தை இருக்கத் தீயவைகூறல் எதுபோலும் எனில் நல்லபழம் இருக்கக் காயைத் தின்பதற்கு ஒக்கும்.*

**பருதி :**—*எ - து நல்லவார்த்தை இருக்கத் தீயவைகூறல் நல்ல பழம் இருக்க வேப்பங்காயைத் தின்பதற்கு ஒக்கும் என்றவாறு.* (1)

**காளிங் :**—*எ - து வேருெரு புறத்துப்போய் முயன்று தேட வேண்டாதபடி, இனியவாகிய சொற்கள் தனது நாவகத்து உளதாயிருப்ப, மற்றின்னுதனவற்றைப் பிறர்க்குச் சூழ்ந்து சொல்லுதல் எத்தன்மைத்தெனின்; நம் இல்லகத்து இனிய கனி உளவாயிருப்ப வன்காயைப் புறத்துச்சென்று நுகர்ந்து விரும்பினுற்போலும் என்றவாறு.* (1)

## உரைவிளக்கப்பகுதி :

**நுண் :**—*மொழியை விசேடித்த பண்பு உவமைக்கண்ணும் இனிய கனி, இன்னுதகாய் எனச்சென்றது. 'மால்வரைக், கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி, அமிழ்துவிளை தீங்கனி ஒளவைக்கு ஈந்த, உரவுச்சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல், அரவக் கடல் தானை அதிகனும்' எனச் சிறுபாணுற்றுப்படையுள் (வரி 100 - 4) காண்க.*

**இராமா :**--*உபமேயமாகிய சொற்களை விசேடித்து நின்ற இனிமை இன்னுமை என்னும் பண்புகள் உபமானமாகிய கனி காய் என்பன*

---

[1] ''எட்டிக்காயைத் தின்றவன் பிராணன் இழந்தாற்போலப் பொல்லாத வார்த்தைகளைச் சொல்லுகிறவன் தானே தனக்குக் கேடுதேடிக் கொள்வன் என்பதாம்.''

—கவிராஜபண்டிதர்.

வற்றையும் விசேடித்து நின்றன. இங்கே உபமான அடையாகிய இனிமை இன்னாமைகள் அமிர்தத்தையும் விடத்தையும் ஒத்த பண்புகள்.

## மேற்கோள்பகுதி ;

சுவாமி:— இனியகனி இன்னாதகாய் எனப் பின்னும் பிரித்துப் பொருத்துதலே பண்பு. (இ. கொ. சூ. 108.)

## ஒப்புமைப்பகுதி :

"கனி இருப்பக் காய்கவர்ந்த கள்வனேனே" —திருநாவு, ஆரூர் 1.

"கெட்ட கழுதைக் குரல தென்பர் குயில் கூவின்
நட்டவர்கள் போன்மகிழ்வர் நண்பதனெ டென்னே
பட்டபொருள் சொல்லலுறல் உண்டெனினும் யாரும்
வெட்டென உரைத்தலே விடுத்திடுமின் என்றான்."
—நீலகேசி.

# 11. செய்ந்நன்றியறிதல்.

பரிமே:— அஃதாவது தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை, இனியவை கூறி இல்லறம் வழுவாதார்க்கு உய்தியில் குற்றம் செய்ந்நன்றி கோறலேயாகலின், அதனைப் பாதுகாத்துக் கடிதற் பொருட்டு, இஃது இனியவைகூறலின் பின் வைக்கப்பட்டது.

மணக்:-*செய்ந்நன்றியறிதலாவது பிறர் செய்த தீமையை மறந்து நன்மையை மறவாமை.*

பரிப்:-*இதனுனே பிறர் செய்த தீமையை மறக்கவேண்டும் என்பதாயிற்று. மேலையதிகாரத்து நல்லன சொல்லவேண்டும் என்றார். இதனுன் நல்லன நினைக்கவேண்டும் என்கின்றார். ஆதலின் அதன் பிற்கூறப்பட்டது.*

பருதி:-*இனியவை கூறல்போல், ஒருவர் செய்த நன்றியையும் அறிய வேணும் என்பது.*

101. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. (க)

**உரைப்பகுதி :**

பரிமே:—செய்யாமல் செய்த உதவிக்கு - தனக்கு முன் ஓர் உதவி செய்யாது இருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த உதவிக்கு, வையகமும் வானகமும் ஆற்றல் அரிது - மண்ணுலகும் விண்ணுலகும் கைம்மாருகக் கொடுத்தாலும் ஒத்தலரிது.

கைம்மாறுகளெல்லாம் காரணமுடையவாகலின், காரணமில்லாத உதவிக்கு ஆற்ருவாயின. செய்யாமைச்செய்தவுதவி என்று பாடமோதி, மறித்து உதவ மாட்டாமை யுள்ள இடத்துச் செய்த உதவி என்று உரைப்பாரும் உளர்.

மணக்:-*முன் ஓர் உதவி செய்யாதார்க்கு ஒருவன் செய்த உதவிக்கு உலகமும் சுவர்க்கமும் நிறையாற்றுதல் அரிது என்றவாறு.*

---

1 "செய்யாமை" "செய்யாதார்" என்பன பாடம்.

"செய்யாமல் செய்த உதவியாவது: போகபூமியாயிருந்து கர்மபூமியாய் மாறினகாலத்து விவரம் அறியாத ஜனங்களுக்கு ஜீவனேபாயம், கல்வி, தானம் செய்கிறது முதலானவை கற்பித்தல் போல்வது என்பதாம்" —**கவிராஜபண்டிதர்.**

பரிப்:-பிறர் செய்த உதவிகளில் செய்யாமைச் செய்தலும், காலந் தப்பாமற்செய்தலும், பயன் தூக்காது செய்தலும் வலியுடையன; அவற்றுள் செய்யாமைச் செய்தலின்பெருமை வரையறுக்கப்பெற்றது. (3)

பழைய:— .... .... ... ....

பருதி:-எ-து தனக்கு முன்னே ஓர் உதவி செய்தமைக்கு அறிந்து உதவி செய்வது நிகரல்ல; கபடமற்று முன்செய்த நன்றிக்குப் பூமி ஆகாசம் இரண்டும் நிகரல்ல என்றவாறு. (1)

காளிங்:-எ - து முன்னம் தான் ஒருவர்க்கு ஒன்றுஞ் செய்யாமல் தமக்கு இடர் வந்துறுங்காலத்துச் செய்த உதவியின் பெருமைக்குக் கைம்மாறு சீர்தூக்கின் அவர்க்கு இம்மை மறுமை இரண்டுலகும் நிறை யாற்றல் அரிது என்றவாறு. (1)

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:-முதற் செய்யாதிருக்க என மல் ஈறுபெற்ற செயவெனெச் சத்து எதிர்மறைப்பொருள்பட்டது. செய்யாமை செய்யாதிருத்தல் என மையீறுபெற்ற தொழிற்பெயர். அது 'பொய்யாமை பொய்யாமை.... செய்யாமை செய்யாமை நன்று' (292) என்பதன்கண்ணும் இதன் பக்ஷாந்தரத்தும் காண்க.

## ஒப்புமைப்பகுதி :

"உதவாமல் ஒருவன்செய்த உதவிக்குக் கைம்மாருக
மதயானை யனைய மைந்த மற்றும் உண்டாகவற்றே."

—கமப - கும்ப

**குறிப்பு:—**

மண்ணுலகும், விண்ணுலகும் ஒருவர் செய்த இருவினைக் கீடாக இன்பத் துன்பங்களை நுகருமிடங்களாதலின் ஏதுவின்றியே நிகழ்த்திய உதவிக்கு ஈடாகா ஆயின.

**102 காலத்தினுல் செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது.** (உ)

## உரைப்பகுதி :

**பரிமே:—**காலத்தினுல் செய்த நன்றி - ஒருவனுக்கு இறுதிவந்த எல்லைக்கண் ஒருவன் செய்த உபகாரம், சிறிது எனினும் ஞாலத்தின் மாணப் பெரிது-தன்னைநோக்கச் சிறிதாய் இருந்ததாயினும் அக்காலத்தை நோக்க நிலவுலகத்தினும் மிகப் பெரிது.

அக்காலம் நோக்குவது அல்லது பொருள் நோக்கலாகாது என்பதாம். காலத்தினல் என்பது வேற்றுமைமயக்கம்.

மணக்:-உதவவேண்டுங்காலம் தப்பாமல் செய்தவுதவி தான் சிறிதாயிருந்ததாயினும் உலகத்தினும் மிகப்பெரிது என்றவாறு. (5)

பரிப்:-இது காலத்திற்செய்தது உலகினும்பெரிது என்றது. (5)

பழைய:-ஒருவனுக்கு இறுதிவந்த எல்லேக்கண் ஒருவன் செய்த உபகாரம் தன்னை நோக்க நிலவுலகத்தினும் மிகப்பெரிது.

பருதி:-எ - து ஒருவர்க்கு ஆபத்துக் காலத்திலே செய்த உதவிக்கு பூவுலகமும் நிகரல்ல என்றவாறு. 3

காளிங்:-எ - து தாம் இடறுங்காலத்தின்கண் தமக்கு ஒருவர் செய்த நன்மைப்பொருளானது, சிறிதேயாயினும், அஃது இறுதிக்கண் உதவியது ஆகலான் ஞாலத்தினும் மாட்சிமைப்படப் பெரிது செய்ந்நன்றி யறிவார்க்கு என்றவாறு.

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:-எல்லேக்கண் என்றதனல் உருபுமயக்கம். இனி, உருபுமயக்கம் பொருண்மயக்கம் என இரண்டு. தம்பொருளிற் றீர்ந்து செல்வது உருபு மயக்கம். தம்பொருளிற்றீராது பிறிதொன்றின் பொருட்கண் செல்வது பொருண் மயக்கம். 'அன்னபிறவுந் தொன்னெறி பிழையாது உருபினும் பொருளினும் மெய்தடுமாற, இருவயினிலேயும் வேற்றுமை யெல்லாம் திரிபிடனிலவே தெரியுமோர்க்கே' (தொல் - சொல் - வேற் - 18) என்பதனுனும் அறிக. வேற்றுமைமயக்கம் பெரும்பான்மை வருதலின் பொருண்மயக்கம் சிறுபான்மை எழுதியதென்க. காலத்தின்கண் என்பது மாரியுள்வந்தான், ஆகாயத்தின்கட் பருந்து, வடக்கின்கண் வேங்கடம் என்பனபோல ஆதாரமல்லாத அருவப்பொருளை ஆதாரமாக்கியவாறு. இதனை வடநூலார் அதீந்திரியப் பிரமாணம் என்பர்.

இராமா:-காலத்தில் என்பதற்குக் காலத்தினல் என ஆலுருபு மயங்கி நின்றது. உருபுமயக்கம் காலத்தைக் குறிப்பதே அல்லாமல் பொருளைக் குறிக்கலாகாது என்பது கருத்து.

சுவாமி:-உருபுகள் மாறுபடநிற்றலுக்கு மேற்கோள். (இ. கொ. 17, 59.)

**ஒப்புமைப்பகுதி:**

''நிலத்தினும் பெரிதே'' —குறுந்தொகை. 3.

''முன்னொருவன் செய்த உபகாரம் மூவுலகும்
தன்னைக் கொடுத்தாலும் சாலுமே—என்னே
உயிர்க்குறுதியாக ஒருவர் சோ றுண்டால்
பிறர்க்குரிய ராவரோ பேசு.'' —பாரதவெண்பா.

''பயன் காரணத்தைக் குறியாமல் பரிந்து காலத்தால் செய்த
நயஞ்சேர் நன்றி சிறிதேனும் நாடின் அதற்கோர் அளவில்லை
பயன் காரணத்தைக் குறித்தினையும் பதத்திற் புரிந்த நன்றியையும்
வியன் பூதலத்தில் பெரிதாக விரும்பி மதித்தல் வேண்டுமால்

—வினா, அரசி. 24.

குறிப்பு:-*காலத்தாற் செய்யப்படும் உழவு முதலிய முயற்சிக்கேற்ப விளைபொருளைக் கொடுக்கும் ஞாலமும், காலத்தாற் செய்த நன்றியும் தம்முள் ஒருவகையால் ஒக்குமாயினும், முயற்சியினளவாகப் பயன் கொடுக்கும் ஞாலம், பயனை மிகக்கொடுக்கும் காலத்தாற்செய்த நன்றியை விடச் சிறியது என்பது விளக்கியவாறு.*

**103. பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்**
**நன்மை கடலில் பெரிது.** (ரு)

**உரைப்பகுதி :**

**பரிமே:—** பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்-இவர்க்கு இதுசெய்தால் இன்னது பயக்கும் என்று ஆராய்தலிலராய்ச் செய்த உதவியாகிய ஈரமுடைமையை ஆராயின், நன்மை கடலில் பெரிது - அதன் நன்மை கடலினும் பெரிதாம்.

இவை மூன்று பாட்டானும் முறையே காரணம் இன்றிச் செய்ததூஉம், காலத்தினல் செய்ததூஉம், பயன் தூக்காராய்ச் செய்ததூஉம் அளவிலவாதல் கூறப்பட்டது.

**மணக்:-***தமக்கு ஒரு பயனை நோக்காதவராய்ச் செய்த உபகாரத்தால் உண்டாய நன்மையை ஆராயின் அதனாலுண்டாய நன்மை கடலினும் பெரிது என்றவாறு.*

**பரிப்:-***தனக்கு ஒருபயனை நோக்கானுய்ச்செய்த உபகாரத்தை நய னுடையவன் தூக்குவானாயின் அதனானுண்டான நன்மை கடலினும் பெரிது எ. று.*

பருதி:-எ - து ஒருவன் ஒருவர்க்கு நன்றி செய்யும்போது பயன் தூக்காமல் செய்த நன்றிக்கு எழுகடலும் நிகரல்ல என்றவாறு. 2

காளிங்:-எ - து தன் மனத்தினால் மேல்வரும்பயனைச் சீர் தூக்காராய், தமக்கு ஒருவர் செய்த உதவியினது தன்மையைச் சீர் தூக்கின் அவ்வுதவித் தன்மையினது நன்மை கடலினும் பெரிது என்றவாறு. 6

## உரைவிளக்கப்பகுதி:

நுண்:— கடலின் என்றது ஐந்தனுறழ்பொருவின் கண் வந்தது. உறழ்பொரு உவமப்பொரு என இரண்டாம். உறழ்தல்-ஒத்தலும் மிகுதலுமாய் நிற்பது. 'அறனழீஇ அல்லவை செய்தலில் தீதே' (182) 'கொலை மேற்கொண்டாரில் கொடிதே' (551) என்பவற்றுள் 'உறழ்ச்சி நிரனிறை, பான்மயக்குறழ்ச்சி' என்பனவும் அது. பான்மயக்கும் நிரனிறையும் பிறிதோரிலக்கணங்கூட்டி எழுதியது என்க.

இராமா:— பயன்தூக்கார் என்னும் முற்றுவினை இங்கே எச்சவினையாய் நின்றது.

## ஒப்புமைப் பகுதி :

"நீரினும் ஆர் அளவின்றே" —குறுந். 3

"நின் தோற்றமும் அகலமும் நீரின் உள" பரிபா 4 : 30.

குறிப்பு :—பயன் தூக்கார் செய்த உதவி, செய்யப்பட்டவர்க்கு நேரே பயன்படுவது. கடல், மணி முதலிய விளைபொருள்களாலும், மழையாலும் வேறு வழியிற் பயன்படுவது. ஆதலின், உதவி பெரிதாயிற்று. பெருமை பரப்பால் மட்டும் அன்று. தன்மையாலும் என்பதை விளக்கிற்று 'நன்மை பெரிது' என்ற தொடர்.

104. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். (௪)

## உரைப்பகுதி:

பரிமே :— தினைத்துணை நன்றி செயினும் - தமக்குத் தினையளவிற்றாய உபகாரத்தை ஒருவன் செய்தானாயினும், பனைத்துணையாக் கொள்வர் பயன் தெரிவார் - அதனை அவ்வளவிற்றாகக் கருதாது பனையளவிற்றாகக் கருதுவர் அக்கருத்தின் பயன்தெரிவார்.

தினை பனை என்பன சிறுமை பெருமைகட்குக் காட்டுவன சில அளவை. அக்கருத்தின் பயனுவது அங்ஙனங் கருதுவார்க்கு வரும் பயன்.

**மணக் :—** *தினையளவு நன்றி செய்தாராயினும் அதனை அவ்வள விற்று என்று நினையாது பனையளவாகக் கொள்வார் அதன் பயனையறி பவர் என்றவாறு.* 6

*பனையளவு-அதன் உயர்ச்சி.*

**பரிப் :—** *பனை எண்ணெனினும் அமையும். இது, மேற்காலத்தாற் செய்தன முதலிய போலன்றிப் பிறவாற்றாற் செய்தெனவும் பெரிதென்றது.* (6)

**பழைய:—** .... ... ....

**பருதி:—** *எ-து ஆபத்துக் காலத்திலே தினையத்தனை நன்றி செயினும் அதனைப் பனை யத்தனையாகக் கொள்வர் பயனறிவார் என்றவாறு.* 4

**காளிங்:—** *எ - து தமக்கு ஒருவர் தினையளவு நன்மை செயினும்* 2 *மற்று அதனைப் பனையளவாக்கொண்டிருப்பர் செய்ந்நன்றிப் பயனறிவார் என்றவாறு.*

## உரைவிளக்கப் பகுதி :—

**நுண் :—** *தினை பனை - சிறுமைபெருமைகட்குக் காட்டும் அளவை. தொல்காப்பியரும் "பனையென் அளவுங் காஎன் நிறையும்" (எழுத் 169) என்றார். காமத்துள் "காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்" (1163) என்பதும் அது.*

## ஒப்புமைப் பகுதி :

"தினையனைத்தே யாயினும் செய்தநன் றுண்டால்
பனையனைத்தா உள்ளுவர் சான்றோர்" —நாலடி 344.

"தான் சிறியதாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான் சிறிதாப் போர்த்துவிடும்" —ஷை 38.

"ஞான முன்னிய நான்மறை யாளர்கைத்
தானம் என்னத் தழைத்தது நித்தமே" —கம்ப-பால. ஆற்று 30.

**குறிப்பு:—** *நன்றியின் பெருமையை அதன் பயன்கொண்டு அறிய வேண்டும் என்பதாம். மணக்குடவர் பனையை அளவுப் பெயராகக் கருதாது மரமாகக் கருதுவர்.*

**105. உதவி வரைத்தன் றுதவி உதவி**
**செயப்பட்டார் சால்பின் வரைத்து. (ரு)**

## உரைப்பகுதி :

**பரிமே :—** உதவி உதவிவரைத்து அன்று - கைம்மாருன உதவி காரணத்தானும் பொருளானும் காலத்தானுமாகிய மூவகையானும் முன் செய்த உதவியளவிற்றன்று; உதவி செய்யப்பட்டார் சால்பின் வரைத்து- அதனைச் செய்வித்துக் கொண்டவர்தம் அமைதியளவிற்று.

சால்பு எவ்வளவு பெரியதாயிற்று உதவியும் அவ்வளவு பெரிதாம் என்பார், சால்பின் வரைத்து என்ருர். இவை யிரண்டு பாட்டானும் மூன்றும் அல்லாத உதவி மாத்திரமும் அறிவார்க்குச் செய்தவழிப் பெரிதாம் என்பது கூறப்பட்டது.

**மணக் :—** *முன்னே செய்த உதவியின் அளவன்று பின்பு செய்யும் மாற்றுதவி; அவ்வுதவி செய்யப்பட்டவர் எவ்வளவிற்று அமைதி அவ்வள விற்று அவர் செய்யும் மாற்றுதவி என்றவாறு.* 8

**பரிப் :—** *மாற்றுதவிக்கு அளவில்லை என்றது.*

**பழைய :—** ... ... ...

**பருதி :—** *எ - து முன்னே ஒரு உதவி செய்யாமல் செய்த நன்றிக்குத் தான் ஒரு நன்றி செய்வோம் என்ருல் அவனைக்கெடுக்க நினைவதற்கு ஒக்கும்; நினையாமற் செய்தநன்றியை நினைத்திருப்பதே நன்று என்றவாறு.* 5

**காளிங் :—** *எ - து உலகத்து உதவியாளரொருவர்க்கு உதவுகின்ற உதவி, பொருளினது வரம்பினை உடைத்தன்று; பின் பயக்கும் பெரும் பயன் மற்று என்னையெனின், அவ்வுதவியாளரால் ஒரு உதவிப் பொரு ளினைச் செய்யப்பட்டவர் தகுதி வரம்பினை உடைத்து என்றவாறு.* 10

*இனி ஒருவர்க்கொருவர் உபகரிக்குமிடத்துச் சான்ரோர்க்கே அன்றி அனைவர்க்கும் இடுக்கண் களையும் அறிவுடையார் நெஞ்சத்து நடுவுநிலையை அறிவிக்கிறது மேலதிகாரம்.*

## மேற்கோள்பகுதி :

**சுவாமி:—** *உதவி செயப்பட்டார்: இது ஒரு கால் தன் பொருட்கும் ஒருகால் உதவியை ஏற்றுக்கொண்டார் எனப்பொருள்பட்டு, பிறபொருட் கும் பொதுவாய்ப் படுசொல் பொருந்தியது, (இ. கொ. சூ. 78.)*

## ஒப்புமைப்பகுதி :

"கயந்தரு நறும்புனல் கையில் திண்டலும்
பயந்தவர் கனுமிகழ் குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பின் ஓங்கினன்
உயர்ந்தவர்க் குதவிய உதவி யொப்பவே"

—கம்ப. பால. வேள்வி 35-

குறிப்பு:— சென்ற குறளில் உதவியின் பெருமையைப் பயன் கொண்டு துணிந்தஆசிரியர், இந்தக்குறளில் உதவியைஏற்பவர் தகுதியைக் கொண்டு பெருமை வகுக்கின்றார். இதனால் உண்டகை புலர்வதன்முன் கண்டதையெல்லாம் சொல்பவனுக்கு உதவிசெய்வதைக் காட்டிலும் சிறிய உதவியையும் பெரிதெனப் பாராட்டுபவனுக்கே உதவ வேண்டும் என்பது குறிப்பிடப் பெற்றது.

**106. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க**
**துன்பத்துள் துப்பாயார் நட்பு. (சு)**

## உரைப்பகுதி :—

**பரிமே:**— துன்பத்துள் துப்பு ஆயார் நட்பு துறவற்க - துன்பக் காலத்துத் தனக்குப் பற்றுக்கோடாயினாரது நட்பை விடாதொழிக; மாசு அற்றார் கேண்மை மறவற்க - அறிவு ஒழுக்கங்களில் குற்றமற்றாரது கேண்மையை மறவாது ஒழிக.

கேண்மை கேளாந்தன்மை, இம்மைக்கு உறுதி கூறுவார் மறுமைக்கு உறுதியும் உடன் கூறினார்.

**மணக்:**— தனக்குத் துன்பம் வந்தகாலத்து வலியாயினார் நட்பை விடாதொழிக என்றவாறு.

**பரிப் :**— மாசற்றாரது நட்பைத் துறவாமை இருமைக்கும் நன்மை பயக்குமாறு போலத் துப்பாயார் நட்பைத் துறவாமையும் இருமையின் கண்ணும் இன்பம் பயத்தலின் அதனை மறவற்க என்றது.

**பழைய:**— ... ... ... ...

**பருதி:**— எ - து நன்றி என்றும் விடக்கடவ னல்லன்; நல்லோர் சினேகமும் என்றென்றும் விடக்கடவனல்லன்; துன்பம் வந்தபோது பல மாயினார் நட்பினை விடக்கடவனல்லன் என்றவாறு.

காளிங்:— எ - து தமது உள்ளத்து மாசற்ற பெரியோர் செய்த நட்பின் மிகுதியையும் எஞ்ஞான்றும் மறவாதொழிக. அதுவேயன்றியும் தாம் ஒரு துயருற்றவிடத்து அதற்கொரு வலியாய் நின்று உதவியாரது நட்பினையும் கைவிடாதொழிக; இங்கு சொன்ன இருவகைபட்ட நன்றியையும் மறவாதவர் இன்மையின்கண் இன்பமும் மறுமையின்கண் இன்பமும் பெறுவர் என்றவாறு. 8

## உரைவிளக்கப்பகுதி.

நுண்:- மறுமைக்கு உறுதியும் உடன்கூறியது மாசற்றார் கேண்மை

இராமா :— துப்பு - ஊன்றுகோல். அதுபோலத் தளர்ச்சிவந்தபோது தாங்கினர் என்று சொல்லவந்தவர் துன்பத்துள் துப்பாயார் என்றார்.

குறிப்பு:— அதிகாரம் நோக்கி 'மாசற்றார்' என்றது நன்றி செய்த மாசற்றாரையே யுணர்த்திற்று. அவரை மறவற்க எனவே அவர் செய்த நன்றியையும் மறவற்க என்றவாறாயிற்று. துறக்கத்தக்க தீமை செய்தாராயினும் முன் செய்த நன்றி காரணமாகப் போற்றுக என்பதாம். கேண்மை_ உறவு. நன்றி செய்த மாசற்றார் கேளாயினர். துன்பத்துள் துப்பாயார் நண்பராவர் என்ற நயம் காண்க.

**107. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்**
**விழுமம் துடைத்தவர் நட்பு. (எ)**

## உரைப்பகுதி:—

பரிமே:—தங்கண் விழுமம் துடைத்தவர் நட்பு- தங்கண் எய்திய துன்பத்தை நீக்கினவருடைய நட்பினை, எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் - எழுமையினையுடைய தம் எழுவகைப் பிறப்பினும் நினைப்பர் நல்லோர்.

எழுமை என்றது வினைப்பயன் தொடரும் ஏழு பிறப்பினை; அது வளையாபதியுள் கண்டது. எழுவகைப் பிறப்பு *மேலே உரைத்தாம். விரைவு தோன்றத் துடைத்தவர் என்றார். நினைத்தலாவது துன்பம் துடைத்தலான் அவர்மாட்டு உளதாகிய அன்பு பிறப்புத்தோறுந் தொடர்ந்து அன்புடையராதல். இவை இரண்டுபாட்டானும் நன்றி செய்தாரது நட்பு விடலாகாது என்பது கூறப்பட்டது.

மணக்:— தங்கண் உற்ற துன்பத்தை நீக்கினவரது நட்பை அப்பிறப்பிலே யன்றி, எழுமையிலுக் தோற்றும் பிறப்பெல்லாம் நினைப்பர் சான்றோர் என்றவாறு. 7

* மேல் என்றது 62-ம் குறள் உரையை.

பரிப் :— இது மாற்றுதவி செய்யுங்கால் நிலத்தினும் நீரினும் உள வான பொருளாற் செய்யுங்கால் அதற்கு நேர் ஒவ்வாமையின் எக்காலத் திலும் அவரை ஒழிவின்றி நினைத்தலேயாவது என்று கூறப்பட்டது.

பழைய :— செனனந்தோறும் நினைக்கப்படும்; தம்மிடத்தில் கிலேசந் துடைத்தவர் நட்பினை என்றவாறு.

பருதி :— எ - து செனனந்தொறும் நினைக்கப்படும்; தம்முடைய மனக்கிலேசத்தைத் துடைத்தவர் நட்பை என்றவாறு. 3

காளிங்:— எ - து எழுவகையாகத் தோன்றி வருகின்ற பிறப்பு தோறும் தம்மாட்டு வந்தெய்தும் இடுக்கண் துடைத்தவர் நட்பை, ஈண்டுச் செயலாகும் நன்றியைக்கொண்டே பிறவிதோறும் இடருறுங் காலத்துப் பெரியோர் செய்த நன்றிகளென்று, இங்ஙனம் எழுவகைப் பிறப்பினும் தமக்குச் செய்தார் செய்த நன்றிகளைச் சிந்திப்பர் செய்ந்நன்றி அறிவார் என்றவாறு. 7

**உரைவிளக்கப்பகுதி ;**

இராமா :— வேறு உரை : தமது கண்களிலே நின்றும் விழுகின்ற கண்ணீரைப் *போக்கினவருடைய சிநேகத்தை எழுவகைப் பிறவிக்குணங் களுடைய எழுவகைத் தோற்றங்களிலுங் நல்லோர் நினைப்பார்.

குறிப்பு:—வினையினால் எடுத்த உடம்புகளுக்கு அடுத்த குணங்கள் முழுவதும் அமைந்திருப்பது அரிது. ஆதலால் அவை முழுதும் அமைந்த எனச் சொல்லவந்தவர் எழுமை எழுபிறப்பும் என்றும், தமது உள்ளத்திலே நின்றும் அளவிடக் கூடாமல் எழுந்துன்பத்தை ஒழிந்தவர் என்று சொல்ல வந்தவர் அதன் சாரியமாகிய கண்ணீரைத் துடைத்தவர் என்றும் சொன்னார். இதனால் உழுவலன்பர்க்கு இலக்கணங்கூறியவாறாயிற்று.

108. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. (அ)

**உரைப்பகுதி :**

பரிமே:—நன்றி மறப்பது நன்று அன்று - ஒருவன் முன் செய்த நன்மையை மறப்பது ஒருவற்கு அறனன்று; நன்று அல்லது அன்றே மறப்பது நன்று - அவன் செய்த தீமையைச் செய்தபொழுதே மறப்பது அறன்.

*தம் கண் விழும் அம் எனப்பிரித்துப்பொருள் செய்கின்றார். அம்-நீர்.

இரண்டும் ஒருவனுற்செய்யப்பட்ட வழி மறப்பதும் மறவாததும் வகுத்துக் கூறியவாறு.

**மணக்:**—பிறர் செய்த நன்றியை மறப்பது என்றும் நன்றல்ல, பிறர் செய்த தீமையை அன்றே மறப்பதன்றே நன்றும் என்றவாறு.

இது தீமையை மறக்கவேண்டும் என்று கூறிற்று.

**பழைய :**— முன்செய்த நன்மையை மறப்பது ஒருவற்கு அறனன்று. அவன் செய்த தீமையைச் செய்தபொழுதே மறப்பது அறன் என்றவாறு.

**பருதி :**— எ - து ஒருவர் செய்த நன்றியை மறப்பது நன்றல்ல. ஒருவர் செய்த குற்றத்தை அன்றே மறப்பது நன்று என்றவாறு.

**காளிங் :**—எ - து உலகத்தொருவர் செய்த நன்றி பெரும் பயனைத் தருமாதலால் தமக்கொருவர் செய்த நன்மையைத் தாம் மறப்பது தமக்கு நன்மை அல்ல; அதனல், நன்மையல்லாதது ஒருவர் செய்யின் அதனை அப்பொழுதே மறந்துவிடுவதே நன்மை என்றவாறு.

## மேற்கோள்பகுதி ;

**பெருந் :** - பொருள்விளங்க இருத்தலால் புலன் ஆயினமைக்கு மேற்கோள் (வீரசோ. 151 உரை) விளங்கச் சொல்லுதலுக்கு மேற்கோள் (ஷை 180 உரை)

## ஒப்புமைப்பகுதி :

"ஒற்கத்துள் உதவியார்க்கு உதவாதான் மற்றவன்
எச்சத்துளாயினும் அஃது எறியாது விடாதேகாண்." —கலி 149.

"உதவி செய்தோர்க் குதவாராயினும்
மறவி இன்மை மாண்புடைத்து" —பெருங் 4: 3: 13 - 14.

"ஒன்றெரு பயன்தனை உதவினோர் மனம்
கன்றிட ஒருவினை கருதிச் செய்வரேல்
புன்தொழி லவர்க்குமுன் புரிந்த நன்றியே
கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ"

—கந்த. இரணியன் யுத்தம் 10

"நன்றி மறவேல்" —ஆத்திசூடி 21.

**குறிப்பு :**— 'மறவற்க' என்ற குறளிற்கூறிய துறவற்க என்பதற்கு ஏதுக்கூறியவாறு.

**109. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும். (கூ)**

**உரைப்பகுதி:**

**பரிமே:—** கொன்று அன்ன இன்னா செயினும் - தமக்கு முன் ஒரு நன்மைசெய்தவர் பின் கொன்றாலொத்த இன்னாதவற்றைச் செய்தாராயினும்; அவர் செய்த நன்று ஒன்று உள்ளக்கெடும் - அவையெல்லாம் அவர்செய்த நன்மையொன்றனையும் நினைக்க இல்லையாம்.

தினைத்துணை பனைத்துணையாகக் கொள்ளப்படுதலின், அவ்வொன்றுமே அவற்றையெல்லாங் கெடுக்கும் என்பதாம். இதனால் நன்றல்லது அன்றே மறக்குந் திறம் கூறப்பட்டது.

**மணக் :—** *தமக்கு முன்பு நன்மை செய்தார் தம்மைக் கொன்றாலொத்த இன்னாமையைப் பின்பு செய்யினும், அவர் முன்புசெய்த நன்றியொன்றை நினைக்க, அவ்வின்னாமை யெல்லாங் கெடும் என்றவாறு.*

**பரிப் :—***ஒருமுறை நன்மை செய்தார் பலகாற்றீமை செய்வாராயின் அதற்குச் செய்வது என்னையென்றார்க்கு இது கூறப்பெற்றது.*

**பழைய :—** .... .... , ...

**பருதி ;—** *எ - து தன்னைக் கொன்றாற்போலொத்த பொல்லாங்கு செய்தாலும், தினையத்தனை நன்றி செய்ததை நினைந்து, அதனை விடுக என்றவாறு.*

**காளிங் :—***எ - து ஒருவர் தம்மைக் கொல்லுங் கொலைக்கு மேற்பட்டதோர் இன்னாமை இல்லை; மற்று அதுபோலவே தத்தம் பொல்லாங்கு செயினும் அவர் முன்பு செய்தது ஒன்றேயாயினும் நன்றி யுளதாயின் அதனைச் சிந்திக்கவே எல்லாக்குற்றமுந் தீரும்; செய்ந்நன்றி யறிவார்க்கு என்றவாறு.*

**உரைவிளக்கப்பகுதி :**

**நுண் :—** *கெடும் என்பது இல்லையாம் என நின்றது. இவ்வாறு 'அது என் உருபுகெடக் குகரம் வருமே' (தொல். சொல். 94) என்பதற்கு அவ்வுருபு இல்லையாகக் குகரம் வருமெனச் சேனாவரையரும் உரைத்தார்.*

**மேற்கோள்பகுதி :**

**பேரா :—** (தொல்பொருள் 277)

**யா. வி. உரை:—***இனமுதலாயினவரத் தொடுத்திலாமையால் செவ்வெதுகைக்கு மேற்கோள் (சூ. 53.)*

ஒப்புமைப்பகுதி :

''ஒருநன்று உடையளாயினும் புரிமாண்டு
புலவி தீர அளிமதி'' —குறுந். 115.

''ஒருநன்றி செய்தவர்க்கு ஒன்றி எழுந்த
பிழைநூறும் சான்றோர் பொறுப்பர்'' —நாலடி. 357.

''ஒன்றுதவி செய்யினும் அவ்வுதவி மறவாமல்
பின்னையவர் செய்பிழை பொறுத்திடுவர் பெரியோர்''
—வில்லிபா. வெளிப்.6

''நன்றிபுரிந்தோர் மற்றொருகால் நவைகள் புரிந்தாராயிடினும்
என்றும் உதவியே மதித்திட்டு ஓம்பா நவையை மறந்து அவரை
என்றும் மறவா திருந்திடுக —விநா. அரசி. 25

110. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (ம)

உரைப்பகுதி :

பரிமே :—எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் - பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும் பாவத்தின் நீங்கும் வாயில் உண்டாம், செய்ந்நன்றி கொன்ற மகற்கு உய்வு இல்லை - ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்த மகனுக்கு அஃது இல்லை.

'பெரிய அறங்களைச் சிதைத்தலாவது ஆன் முலை அறுத்தலும், மகளிர்கருவினைச் சிதைத்தலும், குரவர்த் தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல்*. இதனால் செய்ந்நன்றிகோறலின் கொடுமை கூறப் பட்டது.

மணக்:— *எல்லா நன்மைகளையுஞ் சிதைத்தார்க்கும் பின்பு ஒரு காலத்தேயாயினும் உய்வுண்டாம்; ஒருவன் செய்த நன்றியைச் சாவாக்கின மகனுக்கு ஒருகாலத்தினும் உய்தலில்லை என்றவாறு.*

பரிப்:—*பெண்டிர்க்கும் இது வேண்டுமாயினும் தலைமை பற்றி மகன் என்றார்.*

பழைய:—*எந்நன்றி கொன்றார்க்கும் பிழைப்பு உண்டு. செய்ந்நன்றி கொன்ற மகற்கு எந்தக்காலத்திலும் பிழைப்பு இல்லை என்றவாறு.*

---

* 'ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும், மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும், பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும்' என்பது புறநானூறு 34-ம் பாடல், 'குரவர்த்தப்பிய கொடுமையோர்க்கும்' என்பது முன்னைய பாடம்போலும்.

**பருதி:**— எ - து எந்த நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டு; செய்ந்நன்றி கொன்றாற்கு எந்தக்காலத்திலும் பிழைப்பில்லை என்றவாறு.

**காளிங்:**— எ - து அருள் அறம் வாய்மை முதலாகிய எல்லா நன்மைகளையும் கொன்றபாவிக்குங் கொடுநரகத்தினின்றும் யாதானும் ஒரு காரணத்தினால் உய்வுண்டாம்; மற்றும் தனக்கு ஒருவர் செய்த செய்ந்நன்றியைக் கொன்றமகனாகிய கொடும்பாவிக்கு, கொடிய நரகத்தினின்றும் ஒருகாலத்தும் உய்வில்லை என்றவாறு.

## உரைவிளக்கப்பகுதி:

**நுண்:**— உய்வில்லை என்பதற்கு அஃது இல்லை என்றுரைத்து சுட்டொடுபுணராத பொருள்படுதல் ஆக்கினார்.

**இராமா:**—கோவில், அறச்சாலை, பசு, பார்ப்பார், கற்புடைய மகளிர் முதலிய பாதுகாவல் அறங்களைக் கெடுத்தவரும் அடங்குதற்கு எந்நன்றி கொன்றார்க்கும் என்றார்.

## மேற்கோள்பகுதி:—

**நச்:**—அட்டது என்றது, பாம்பு பல்லுயிரையும்வருத்துந் தன்மையை மயில்கொன்று அஞ்சுவித்ததனை; 'செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்றாற் போல. (சீவக. 1405 உரை)

**காரிரத்ன:**— பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள் (மாற. 251)

## ஒப்புமைப்பகுதி

"—நசை யழுங்க
நின்றோடிப் பொய்த்தல் நிரைதொடீஇ செய்ந்நன்றி
கொன்றாரிற் குற்ற முடைத்து"
—நாலடி. 111;

"நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன்
செய்தி கொன்றார்க்கு உய்தி இல்லென
அறம்பாடிற்றே"
புறம். 34. 5 to 7

"நீதிநூல், ஓதினார் தமை வேறுகொண் டோதினான்
* கோது செய்குணக் கோதினுட் கோதனான்"
—சீவக 240.

"சிதைவகல் காதற் றாயைத் தந்தையைக் குருவைத்தெய்வப்
பதவி அந்தணரை ஆவைப் பாலரைப் பாவைமாரை
வதைபுரி குநர்க்கும் உண்டா மாற்றலா மாற்றன் மாயா
உதவிகொன்றார்க்கென்றேனும் ஒழிக்கலாம் உபாய முண்டோ."
—கம்ப, கிட்கிந்தை. 62

* 'கோது செய்குணக் கோது - நூல்கள் பயனின்றாகக்கூறிய குணங்களிற்கோது. அஃதாவது செய்ந்நன்றிக்கேடு' (நச். உரை.)

''நன்றி, செய்குநர்ப்பிழைத்தோற் குய்விலவென்னும் குன்றாவாய்மை.''

—கல்லாடம். 4.

''பிறர் புரிந்த நன்றியது கொல்லினும்—நரகில் எய்துவார்.''

—வில்லி. கிருட். 109.

''நாளை முனிபோரில் எந்நன்றியினும் செய்ந்நன்றி
கொன்றார் தமக்குக் குருகுலத்தார் கோவே! யாமுங்கூட்டு என்றார்.''

—வில்லி. 12-ம் போர் - 43.

''நன்றியைக் கொன்று தின்றேன்.'' —திருவிளை. அங்கம்: 14.

# 12. நடுவுநிலைமை.

**பரிமே:—** அஃதாவது பகை நொதுமல் நண்பு என்னும் மூன்று பகுதியினும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமை. இது, நன்றி செய்தார் மாட்டு அந்நன்றியினை நினைத்த வழிச் சிதையுமன்றே; அவ் விடத்தும் சிதையலாகாது என்றற்கு, செய்ந்நன்றியறிதலின் பின் வைக்கப்பட்டது.

**மணக் :—** *நடுவு நிலைமையாவது நட்டார்மாட்டும் பகைவர் மாட்டும் ஒக்கநிற்கும் நிலைமை*

**பரிப் :—** ....... *மேல் தமக்கு நன்மை செய்தார்க்குத்தாம் நன்மை செய்யவேண்டும் என்றார். அவர்க்கு நன்மை பயக்குமாயின் நடுவல்லாதன செய்யலாகாது என்பதனானும், மனத்தானும், மொழியானும், செய்தலே யன்றி மெய்யோடுஞ் செய்யப்படுலானும் அதன்பிற் கூறப்பெற்றது.*

**பழைய:—** *செய்ந்நன்றி அறிந்தவிடத்தும் நடுவுநிலை தவறல் ஆகாது என்கின்றது.*

**பருதி:—** *நடுவு நிலைமையாவது செய்ந்நன்றி அறிந்தது போலவே நடு நிலைமையாகவும் நிற்கவேணும் என்றவாறு.*

**111. தகுதி எனஒன்று நன்றே பகுதியால்**
**பாற்பட் டொழுகப் பெறின். (க)**

**உரைப்பகுதி :**

**பரிமே :—** தகுதி என ஒன்றே நன்று - நடுவுநிலைமையென்று சொல்லப்படும் ஓரறமுமே நன்று, பகுதியான் பாற்பட்டு ஒழுகப் பெறின் - பகை நொதுமல் நண்பு என்னும் பகுதிதோறும் தன்முறை மையை விடாது ஒழுகப்பெறின்.

தகுதியுடையதனைத் தகுதி என்றார். "ஊரானோர் தேவகுலம்" என்பதுபோலப் பகுதியான் என்புழி ஆனுருபு தோறும் என்பதன் பொருட்டாய் நின்றது. பெறின் என்பது அவ்வொழுக்கத்து அருமை தோன்ற நின்றது. இதனான் நடுவுநிலைமையது சிறப்புக் கூறப் பட்டது.

**மணக்:**— நடுவு நிலைமையென்று சொல்லப்படுகின்றதொன்று நல்லதே; அவரவர் நிலைமைப்பகுதியோடே அறத்தின்பாற்பட்டு ஒழுகப் பெறுமாயின் என்றவாறு. 3

**பரிப்:**—தக்கவாறு கூறுதலின் தகுதி என்றார். இது நடுவு சொல்லத் திமை பயப்பனவும் உளவாம்; அது படாமல் தனக்கும் பிறர்க்கும் நன்மை பயக்குமாறு கூறவேண்டும் என்றது. அஃது அறியுமாறு தருமசாத்திரத்துள் அறியப்பெறும். 3

**பழைய:**— நடுவு நிலைமை என்று சொல்லப்படும் ஓர் அறமுமே நன்று பகை நொதுமல் நண்பு என்னும் பகுதிதோறும் தன் முறைமையை விடாது ஒழுகப்பெறின். 3

**பருதி:**— எ - து தகுதிப்பாடாகிய நடுவுநிலைமை யுண்டாகில் அந்த நிலைமைக்குச் சரியாக ஒன்றும் இல்லை என்றவாறு. (8)

**காளிங்:** எ - து நடுவுநிலைமைத்தகுதி எனப்படுகின்றது மனச் செற்றங்கொண்டு ஒருதலைச்சார்பாக நில்லாமை. மற்று அங்கனம் அறநூல் சொன்ன முறைமைப் பாட்டால் நடுவுநிலைமையின் ஒழுக்கத்தை வழுவாமல் நடத்தப்பெறின் என்றவாறு. (1)

**உரைவிளக்கப்பகுதி :—**

**நுண்:**— "ஊரானோர் தேவகுலம்" என்பது போலப் பகுதிதொறும் என ஆனுருபு தொறுமென் பொருட்டாயிற்று; "இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்னுஞ் சிறப்புடை" (தொல். சொல். 395) என்னுஞ் சூத்திரத்து நச்சினார்க்கினியரும் இவ்வாறுரைத்தார். பகுதி - நட்பு பகை நொதுமல். இதனை வடநூலார் மித்துரு சத்துரு உதாசீனம் என்பர்.

**குறிப்பு:**— பகுதி என்பதற்கு அறநூல் சொன்ன முறை என்பது காளிங்கர் உரை. பகை, நொதுமல் நண்பு என்னும் பகுதி யென்பது பரிமேலழகர், பழைய உரைகாரர் கருத்து. அவரவர் நிலைமையென்பது மணக்குடவர் உரை. ஏற்பன தெரிக.

**112. செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி**
**எச்சத்திற் கேமாப் புடைத்து.** (உ)

**உரைப்பகுதி:**

**பரிமே :—** செப்பம் உடையவன் ஆக்கம் - நடுவுநிலைமையை உடையவனது செல்வம், சிதைவு இன்றி எச்சத்திற்கு ஏமாப்பு

உடைத்து - பிறர்செல்வம்போல் அழிவின்றி அவன் வழியிலுள்ளார்க்கும் வலியாதலை யுடைத்து.

விகாரத்தால் தொக்க எச்சவும்மையான், இறக்குந் துணையும் அவன்றனக்கும் ஏமாப்புடைத்து என்பது பெற்றும். அறத்தோடுவருதலின், அன்னதாயிற்று. தான் இறந்துழி எஞ்சிநிற்பதாகலின், எச்சம் என்றார்.

**மணக்:**—*நடுவுநிலைமையுடையவனது செல்வம் தன்னளவினுங் கேடின்றியே நின்று, தன்வழியுள்ளார்க்குங் கேடுவராமல் காவலாதலை யுடைத்து. நடுவு நிலையுடையார் செல்வம் அழியாது என்றவாறு.* (10)

**பருதி:** *எ-து நடுவு நிலைமையாகிய செப்பத்திலே நிற்பான் வங்கிசம் தழைத்து ஆக்கம் பெருகும் என்றவாறு.* (1)

**காளிங்:** ... .... ... ...

**உரைவிளக்கப்பகுதி** :

**இராமா :**— *எச்சத்திற்கு என்னுமிடத்து உம்மை குறைந்து நின்றது. ஆதலால், அவன் இறக்குமளவும் அவனுக்கும்இன்பமாவதை உடைத்தாம்.*

**ஒப்புமைப்பகுதி** :

''செம்மையின் இகந்தொரீ இப் பொருள்செய்வார்க்கு அப்பொருள்
இம்மையும மறுமையும் பகையாவது அறியாயோ'' கலி. 14:14.

**113. நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை**
**அன்றே ஒழிய விடல்.** (ங)

**உரைப்பகுதி** :

**பரிமே:** நன்றே தரினும் - தீங்கன்றி நன்மையே பயந்ததாயினும், நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை அன்றே ஒழிய விடல் - நடுவு நிற்றலை ஒழிதலான் உண்டாகின்ற ஆக்கத்தை அப்பொழுதே ஒழிய விடுக.

நன்மை பயவாமையின், நன்றே தரினும் என்றார். இகத்தலான் என்பது இகந்து எனத் திரிந்து நின்றது. இவை இரண்டுபாட்டானும்

முறையே நடுவுநிலைமையான் வந்த செல்வம் நன்மை பயத்தலும், ஏனைச் செல்வம் தீமை பயத்தலும் கூறப்பட்டன.

**மணக் :** பெருமையே தரினும் நடுவுநிலைமையை நீங்கி வரும் ஆக்கத்தை அவ்வாக்கம் வருதற்குத் தொடக்கமான அன்றே யொழிய விடுக என்றவாறு.

பரிப்: —இது வாழ்ந்தானாயினும் ஆக்கமாகக் கொள்ளார் என்றது.

பருதி:—எ - து ஆக்கம் பெற்றாலும் வேண்டாம்; மனம் வாக்குக் காயங்களைப் பாவத்தின் வழிசெல்லாமல் நடுவுநிலைமை விட்டதாகில். அது எப்படி என்னில், நடுவு நிலைமைவிட்ட காரியம் இல்லாது என்றவாறு. (10)

காளிங்:—எ - து நெறிகோடி செய்யும் கருமம் தனக்கு நன்மையைத் தருவதே யாயினும், நடுவு நிலைமையைக் கடந்தாவதோர் ஆக்கத்தை அப்பொழுதே ஒழியவிடுக என்றவாறு.

இனி மற்று இவ்வாறு ஒருபக்கஞ் சாயாத நடுவு நிலைமையாளர்க்கே நெஞ்சத்து ஆற்றலுண்டாவது; ஆகலான் மற்று அதன் பின்னர் அடக்கமுடைமையைக் காட்டுகின்றது.

## உரைவிளக்கப்பகுதி :—

• **நுண்:** இகத்தலான் என்பது இகந்து எனத் திரிந்துநின்றது என்றார். அது "முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின" என்னுஞ் சூத்திரவிதி வழுவாமற் பாதுகாத்து, சொல்திரிதலன்றிப் பொருள்திரியா எனத் துணிந்து "வினையெஞ்சுகிளவியும் வேறு பல்குறிய" (தொல்,சொல். 423) என்பதனான், இகத்தலால் எனக் காரணப் பொருட்டாய் நின்ற இகப்ப என்னும் எச்சம் செய்யுள் நின்றபடியே திரிந்து நின்றது என உரைப்பது இவ்வுரையாசிரியர்க்கும் இளம்பூரணர்க்குங் கருத்து. இகத்தலான் என்னும் பொருட்டாய் இகப்ப என்பது இகந்து எனத்திரிந்து நின்றது என்பதனை, இகத்தலான் என்னும் எச்சம் இகந்து எனத்திரிந்து நின்றது என வாசகம் விரியாமல் தொகுத்து எழுதினரென்க. அது, செய்தலால் என்னும் வாய்பாடு பெறும் ஓர் எச்சமின்மையும், "கலந்துணர்த்துங் காதலர்க் கண்டால்" (1246) "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்" (996) என்பவற்றுள் இவ்வாறு விரித்தெழுதியதும் காண்க. இனி, "நாமங் கெடக் கெடும் நோய்" (360) என்பதனுள் "கெடலால் என்பது கெட எனத் திரிந்து நின்றது" என்பது பிழை; கெட என்பதுதானே அப்பொருட்டாதலின் என்க. இன்னும் செயவெனெச்சம் காரணப் பொருட்டாதல், "தாம் இன்புறுவது உலகின்புற" (399) "கண்ணுள்ளார் காதல

வராக'' (1127) ''நெஞ்சத்தார் காதலவராக'' (1128) ''மற்றியான்...... உள்ள உளேன்'' (1206) என்பன முதலியவற்றுள்ளும் பிறர்செய்யுட்கண்ணும் பெரும்பான்மையும் வருதல் காண்க. இனி, செய்தெனெச்சம் பிறவினை கொள்ளவும், செய்யுட்கண் நின்றபடியே திரிந்து நின்றது என்னுது பொருள்படுமாறு நின்ற எச்சமாக மாறித்திரிந்து நிற்பது எனவும் வரும். அவை ''குடிமடிந்து குற்றம் பெருகும்'' (604) ''அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்' (754) ''இன்மையென ஒருபாவி மறுமையும் இம்மையும் இன்றிவரும்'' (1042) என்பனவற்றுள் காண்க. திருக்கோவையாரில் ''தேன்றிக் கிலங்கு'' (325) என்பதும் அது. இன்றி யென்னும் விரவு வினையெச்சம் இலனுக எனத்திரிந்து நின்றது என்பதற்கு, விரவுவினை யுயர்திணையாண்பா லொருமையாகத் திரிதலால் இவ்வுரையாசிரியர் இவ்வாறுரைத்தாரென்பாரும் உளர். ''இலங்கிழாய்'' (1262)என்னும் பாட்டுள்,நீப்பவெனத் திரிந்தது என்பதனை, நீப்பஎன்பது திரிந்தது என எழுதுக. இனி. ''அம்முக்கிளவி'' என்னும் சூத்திரத்துள் (தொல், சொல், 228) நலிந்து பொருள் கொண்டு, செய்தெனெச்சம் பிறவினை கொள்ளும் என்றுரைப்பர் நச்சினார்க்கினியர். செய்யுட்கண் நின்ற எச்சங்களைப் பொருள்படுமாறு நின்ற எச்சமாக மாற்றித் திரிப்பது பேராசிரியர்க்கும் ஒக்கும். முற்றுக எச்சமாக செய்யுட்கண் நின்றவாறு திரிதற்கு ''இன்றி யென்னும் வினையெஞ்சிறுதி, நின்ற இகரம் உகரமாதல், தொன்றியன் மருங்கிற் செய்யுளுள்ளே'' (தொல், எழுத், 237) என்னுஞ் சூத்திர விதியாலும் கொள்க. இனி, நச்சினார்க்கினியர் எச்சம் முற்றுய்த் திரிதற்கு இச்சூத்திரத்தைக்காட்டினார் என்க.

**மேற்கோள்பகுதி:**

**காரிரத்ன**:— பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற 251)

## 114. *தக்கார் தகவிலர் என்ப தவரவர்
## எச்சத்தால் காணப் படும். (சு)

**உரைப்பகுதி:**

**பரிமே:** தக்கார் தகவிலர் என்பது - இவர் நடுவுநிலைமையுடையர் இவர் நடுவுநிலைமையிலர் என்னும் விசேடம், அவரவர் எச்சத்தால் காணப் படும்-அவரவருடைய நன்மக்களது உண்மையானும் இன்மையானும் அறியப்படும்.

---

*''தக்கார் - தருமம் உடையவர். தகவிலர் - தருமம் இல்லாதவர்.''

—கவிராஜபண்டிதர்

தக்கார்க்கு எச்சம் உண்டாதலும் தகவிலார்க்கு இல்லையாதலும் ஒருதலையாகலின், இருதிறத்தாரையும் அறிதற்கு அவை குறியாயின. இதனால் தக்காரையும் தகவிலாரையும் அறியுமாறு கூறப்பட்டது.

**மணக்:—** செவ்வை யுடையார் செவ்வையிலரென்பது அவரவர் ஒழி பினாலே காணப்படும் என்றவாறு. (9)

இது தம்மளவிலே நிற்பதல்லது தம் மக்களையும் விடாதென்பது கூறிற்று.

**பரிப் :—** ஒழிபு-மக்கள் முதலாய பொருள்கள். கேடுவரும் என்றது என்னை? நடுவு நிலைமையை நீக்கி ஆக்கமுற்றாரும் உளரால் என்றார்க்கு அவ் வாக்கம் அவர்தம் அளவிலே நின்று வற்றுவதல்லது மக்கட்குப் பயன் படாதென்பது கூறிற்று.

**பருதி:—** எ - து போன சென்மத்திலும் இந்த சென்மத்திலும் நடுவு நிலைமை பெற்றவராம் என்று அறிக; அவர் புதல்வர் சற்குணத்தால் என்றவாறு. (7)

**காளிங்:—** எ-து இவர் நடுவு நிலைமையாளர் என்பதும் மற்று அ:து இல்லாதவர் என்பதும் அதனை அவரவர் ஒழுக்கத்தால் காணப்படும் என்றவாறு.

## உரைவிளக்கப்பகுதி:—

**இராமா:—** வித்தினாலே மரத்தை அறிவதுபோல அவர்பெற்ற மக் களாலே தக்காரையும் தகவிலாரையும் தானே அறியலாம் என்பார் காணப்படும் என்றார். 'செங்நெலான் ஆய செழுமுளை மற்றும் அச், செங் நெலே வாகி விளைதலால், மகனறிவு தந்தை அறிவு' எனப் பிறரும் இப் படிச்சொல்லுதல் காண்க.

## மேற்கோள் பகுதி :—

**நச்:-** கட்டளை வல்லின எதுகைக்கு மேற்கோள். (தொல், செய். 94.)

**குணசா:-** வல்லின எதுகைக்கும் கடைபாகு எதுகைக்கும் மேற் கோள். (யா. கா. 43.)

**யா. வி. உரை:—** வல்லின எதுகைக்கு மேற்கோள். (சூ. 37)

**குறிப்பு :—** தந்தையின் நேர்மைக்குப் புதல்வர் அளவுகோல் என்ற வாறு. 'தாயைப்போலப் பிள்ளை நூலைப்போலச் சீலை', பழமொழி-எச்சம்

என்பதற்குப் புகழ் என்றும் பொருள் காண்பர் சிலர். அது பொருந் தாமை 'எச்சத்திற்கு ஏமாப்புடைத்து' என்பது கொண்டு தெளிக.

**115. கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. (ரு)**

**உரைப்பகுதி**

**பரிமே:—** கேடும் பெருக்கமும் இல் அல்ல - தீவினையால் கேடும் நல்வினையால் பெருக்கமும் யாவர்க்கும் முன்னே அமைந்து கிடந்தன; நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி - அவ்வாற்றை யறிந்து அவை காரணமாக மனத்தின்கட் கோடாமையே அறிவான் அமைந்தார்க்கு அழகாவது.

அவை காரணமாகக் கோடுதலாவது அவை இப்பொழுது வரு வனவாகக்கருதிக் கேடு வாராமையைக் குறித்தும், பெருக்கம் வரு தலைக் குறித்தும் ஒரு தலைக்கண் நிற்றல். அவற்றிற்குக் காரணம் பழவினையே, கோடுதலன்று என உண்மையுணர்ந்து நடுவுநிற்றல் சால்பினை அழகு செய்தலின், சான்றோர்க்கு அணி என்றார்.

**மணக்;-** கேடுவருதலும் ஆக்கம் வருதலும் உலகத்தில்லையல்ல; அவ் விரண்டினுள்ளும் யாதானுமொன்று வந்த காலத்துத் தன்னெஞ்சு கோடா மல்ஒழுகல் சான்றோர்க்கு அழகாம் என்றவாறு. (5)

**பரிப்;-** நடுவு செய்வோரிடத்தே எது காரணமாகக் கேடுவரினும் நடுவல்லாதன செய்வோரிடத்தே அதுகாரணமாக ஆக்கம் வரினும் அவற்றை முன்விணைப்பயன் என்று கருதி அதற்கு இடம்படாது நடுவு செய்யவேண்டும் என்றது.

**பருதி:** எ - து ஒருகாலத்திலே கேடும் நன்மையும் உண்டு; அப் போது விதனமும் பிரியமும் வரவொண்ணாது, எக்காலமும் ஒரு தன்மை யாக இருப்பது அழகு என்றவாறு, (4)

**காளிங்:**-எ-து முன்பு விதிமுறையான் வருகின்ற பொருளினதுகேடும் மற்றும் இதன் பின் வரும் ஆக்கமும் இவ்விரண்டும் உலகத்து இல்லாதன அல்ல; மற்று ஆதலால் தமது உள்ளத்தின்கண் கோட்டம் இல்லாமையே சால்புடையார்க்கு அணிகலமாவது என்றவாறு. (2)

**ஒப்புமைப் பகுதி :**

"ஆக்கமும் கேடும் தாம்செய் அறத்தொடு பாவமாய
போக்கிவேறுண்மை தேறுர்" —கம்ப, கிட்கிக், வாலி, 39.

குறிப்பு:—விதியான் அமைந்த ஆக்கக்கேடுகளுக்காக, இப்போது நீதி திரிந்து வருகின்ற பிறவிக்கும் கேடு தேடிக்கொள்ள வேண்டாமே! என் கின்றது இக் குறள்.

**116. கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்**
**நடுவொரீஇ அல்ல செயின்.** (சா)

**உரைப்பகுதி :—**

**பரிமே:—** தன் நெஞ்சம் நடுவு ஒரீஇ அல்ல செயின் - ஒருவன் தன்னெஞ்சம் நடுவுநிற்றலை யொழிந்து நடுவல்லவற்றைச் செய்ய நினைக்குமாயின், யான் கெடுவல் என்பது அறிக - அந்நினைவை யான் கெடக் கடவேன் என்றுணரும் உற்பாதமாக அறிக.

நினைத்தலும் செய்தலோடு ஒக்குமாகலின், செயின் என்றார்.

**மணக் :** *தனது நெஞ்சு நடுவுநிலைமையை நீங்கி நடுவல்லாதவற்றைச் செய்யுமாயின், அஃது ஏதுவாக எனக்குக் கேடு வரும் என்று தானே அறிக என்றவாறு.* (8)

**பரிப்:**—*இது நடுவு செய்யாக்கால் கேடு வரும் என்றது.*

**பருதி:**—*எ - து தன்னெஞ்சம் நடுவுநிலைமையை விட்டால் அப்போதே தனக்கு விதனம் வருமென்று அறிபவனாகவேணும். தனக்கு இறுதிவரும் என்ற காலம் நடுநிலைமையை விடும் என்றறிக என்றவாறு.* (6)

**காளிங்:**—*எ-து தான்செய்யப்பட்டார் கெடுவதன்றி யானே கெடுவன் என்பதனை முதலே உணர்ந்துகொள்க. தன்னெஞ்சமானது நடுவுநிலைமை நீங்கி மனக்கோட்டத்தினால் அல்லாதனவற்றைச் செயின் என்றவாறு.* (4)

**உரைவிளக்கப்பகுதி :**

**நுண்:**—*அல் ஈற்றுத் தனித்தன்மை வந்தது. ''குடி செய்வல்'' (1023) என்பதும் அது. இனி 'இலனென்று தீயவை செய்யற்க' (205) என்று அன் விகுதி தனித்தன்மையினும் ''இலனாகும் மற்றும் பெயர்த்து'' எனப் படர்க்கை ஒருமையினும் வந்தது.*

**இராமா:**—*நினைப்பினால் பின்பு கெடுவது நிச்சயமாதலால் காரணத்தைக் காரியமாக உபசரித்துக் கெடுவல் யான் என்பது என்ச் சொன்னார்.*

**குறிப்பு :**—*நினைத்தலை மட்டும் தொழிலாகக் கொண்ட நெஞ்சத்திற்கு 'செயின்' என்னும் வினை புணர்த்து ஓதினார் நினைப்பதே பாவமாயினும் செயலுக்கு வாராவிடத்து வெளிப்படையாகத் தீமை விளையாது,*

அங்ஙனமாகத் தீமை எண்ணிய நெஞ்சம் தொழிற்படுத்தவும் தூண்டுமாயின் விளையும் கேடு பெரிது என்பதை விளக்கியவாறு.

கெடுவல் எனப்பட்ட கண்ணுந் தனக்கோர்
வடுவல்ல செய்தலே வேண்டும்—நெடுவரை
முற்றுநீ ராழி வரையகத் தீண்டிய
கற்றேயும் தேயாது சொல். பழமொழி—39.

**117. கெடுவாக வையா துலகம் நடுவாக**
**நன்றிக்கண் தங்கியான் தாழ்வு. (எ)**

**உரைப்பகுதி:**

**பரிமே :**— நடுவாக நன்றிக்கண் தங்கியான் தாழ்வு - நடுவாக நின்று அறத்தின்கண்ணே தங்கினவனது வறுமையை, கெடு ஆக வையாது உலகம் - வறுமையென்று கருதார் உயர்ந்தோர்.

கெடு என்பது முதனிலைத் தொழிற்பெயர். செல்வம் என்று கொள்ளுவர் என்பது குறிப்பெச்சம். இவை மூன்றுபாட்டானும் முறையே கேடும் பெருக்கமும் கோடுதலான் வாரா என்பதூஉம், கோடுதல் கேட்டிற்கு ஏதுவாம் என்பதூஉம், கோடாதவன் தாழ்வு கேடன்று என்பதூஉம் கூறப்பட்டன.

**மணக் :**—நன்மையின்கண்ணே நடுவாக நின்றவனுக்கு அது காரணமாகப் பொருட்கேடு உண்டாயின். அதனை உலகத்தார் கேடாகச் சொல்லார், ஆக்கத்தோடே எண்ணுவர் என்றவாறு. (6)

**பரிப் :**— நடு எனவே யமையும்; மேலும் நன்றிக்கண் என்றது நடுவு செய்யுங்கால் அறம் பார்த்துச் செய்யவேண்டும் என்றற்கு, இது கெட்டானுயினும் இகழப்படான் என்றது.

**பருதி:**—எ - து ஒருவன் நடுவுநிலைமையிலே நின்று அதனாலே விதனம் வந்தாலும் அந்த விதனத்தை விதனம் என்று சொல்லக்கடவனல்ல என்றவாறு. (5)

**காளிங்:**—எ - து இதனை ஒரு கேடாகவைத்து எண்ணார் சான்றோர்; யாதனையோவெனில் ஒருபால் கோடுதலின்றி நடுவாகவே நன்னெறிக்கண் தங்கியானது காரியத்தாழ்வினை என்றவாறு. (5)

**உரைவிளக்கப்பகுதி :**

**நுண் :**— கெடு - முதனிலைத்தொழிற் பெயர். "அறிகொன்று" (638) "ஒளிமாழ்குஞ் செய்வினை" (653) "அணி எவனோ" (1089) எனப்பெரும் பான்மையும் வரும்,

இராமா :—தாழ்வு, கெடு என்பவை ஆகுபெயர். செல்வம் என்று கொள்வார் என்பது அருத்தாபத்தி.

**மேற்கோள்பகுதி:**

சிவஞான:—கெடுவாகவையாது உலகம் என்புழிக் கெடு என்பது புடைபெயர்ச்சியை உணர்த்தும் தல்விகுதி கெட்டு நின்றது. (பாயிர பக் 33)

**118. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்
ஒருபால் கோடாமை சான்றோர்க் கணி.**

**உரைப்பகுதி:**

**பரிமே:**—சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் - முன்னே தான் சமனாகநின்று பின் தன்கண் வைத்த பாரத்தை வரையறுக்குந் துலாம்போல, அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி- இலக்கணங்களானமைந்து ஒருபக்கத்துக்கோடாமை சான்றோர்க்கு அழகாம்;

உவமையடையாகிய சமன்செய்தலும் சீர்தூக்கலும் பொருட் கண்ணும், பொருளடையாகிய அமைதலும் ஒருபால் கோடாமையும் உவமைக்கண்ணும், கூட்டி, சான்றோர் சீர்தூக்கலாவது [1]தொடைவிடை; களால் கேட்டவற்றை ஊழான் உள்ளவாறுணர்தலாகவும், ஒருபாற் கோடாமையாவது அவ்வுள்ளவாற்றை மறையாது பகை நொதுமல் நட்பு என்னும் மூன்று திறத்தார்க்கும் ஒப்பக்கூறுதலாகவும் உரைக்க, இலக்கணங்களான் அமைதல் இருவழியும் ஏற்பன கொள்க.

**மணக்:**—சமன்வரைப்பண்ணி இரண்டுதலையும் சீரொத்தல் தூக்கிப் பார்க்கப்படுகின்ற கோலைப்போல, வீக்கம் தூக்கம் அற்று ஒருவன் பக்கமாக நெஞ்சைக் கோடவிடாமை சான்றோர்க்கு அழகாவது என்ற வாறு. (1)

இது நடுவுநிலைமை வேண்டும் என்றது.

**பருதி**;—எ - து [2]கழற்றுக்கோல் சமன்வாயிலே நின்று ஒருபலம் இருபலமாகில் தன்னளவிலே நிற்குந் தன்மைபோல, தானும் அளவுக்கள வாகச் சொல்லுதல் நடுவுநிலைமை என்றவாறு. (3)

**காளிங்** :—எ - து கல்லொடு பொன்னொடு வாசியறச் சமநிலைசெய்து வழுவாமல் குறிக்கொண்டு சீர்தூக்குங் கோல்போல, தன் நெஞ்சத்து

1 புறப்பொருள். வாகைப். 19

2 'கயிற்றுக்கோல். என்பது பழையவுரை,

அமைவுடையவனுய் ஒருபாகஞ் சேர்வதோர் கோட்டமில்லாமை சால்புடையார்க்கு அழகாவது என்றவாறு. (8)

## உரைவிளக்கப்பகுதி.

**நுண்:**—உவமையடை பொருளினும், பொருளடை உவமையினும் வந்தது. "இனிய உளவாக (100)" என்பது ஒரு வழி வந்தது.

## மேற்கோள்பகுதி.

**நச்:**—கட்டமை யொழுக்கத்துக் கண்ணுமை என்றதில் நடுநிற்றற்கு மேற்கோள். (தொல். பொருள். 76).

**இளம்.**—நடுவு நிலைமையாவது பகைவர்மாட்டும் நட்டார்மாட்டும் ஒக்கநிற்கும் நிலைமை என்பதற்கு மேற்கோள்; (தொல். பொருள். 75.)

## ஒப்புமைப்பகுதி:

"ஓர்வுற் ரெருதிறம் ஒல்காத நேர்கோல்
அறம்புரி நெஞ்சத்தவன்." —கலி. 42, 14-5.

ஞெமன்கோ லன்ன செம்மைத்தாகிச்
சிறந்த கொள்கை யறங்கூரவையமும் —மதுரைக். 491-2

"தெரிகோல் ஞமன் போல ஒருதிறம் பற்றல் இலியரோ."
—புறநா. 6; 9.

"ஆவலித் தழுநகள்வர் வஞ்சரை வெகுண்டு நோக்கிக்
காவலன் செங்கோல் நுண்ணூல் கட்டிய தருமத்தட்டில்
நாவெனும் துலைநா இட்டுளம் வழக்கையும் நமராய் வந்த
மேலவர் வழக்கும் தூக்கித் தெரிகென விதந்து சொன்னர்."
—திருவிளை. மாமனு. 29.

"செம்பொற்றுலைத் தாலம் அன்ன தனிநிலை தாங்கிய
ஞால மன்னர்க்கு" —கம்ப-அயோத். மந்தரை. 19.

### 119. சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
### உட்கோட்டம் இன்மை பெறின். (௯)

## உரைப்பகுதி :

**பரிமே:**—செப்பம் சொல் கோட்டம் இல்லது - நடுவுநிலைமையாவது சொல்லின்கண் கோடுதலில்லாததாம், உள்கோட்டம் இன்மை ஒருதலையாப் பெறின் - அஃது அன்னதாவது மனத்தின்கண்கோட்டம் இன்மையைத் திண்ணிதாகப் பெறின்,

சொல் - ஊழான் • அறுத்துச் சொல்லுஞ்சொல். காரணம்பற்றி ஒருபாற்கோடாத மனத்தோடு கூடுமாயின், அறங்கிடந்தவாறு சொல்லுதல் நடுவுநிலைமையாம்; எனவே, அதனோடு கூடாதாயின் அவ்வாறு சொல்லுதல் நடுவுநிலைமையன்று என்பது பெறப்பட்டது.

**மணக்:**-நடுவுநிலைமையாவது கோட்டமில்லாததாய் சொல்லலாம்; *உறுதியாக மனக்கோட்டம் இன்மையோடு கூடுமாயின் என்றவாறு.*

*இது நடுவுநிலைமையாவது செவ்வை சொல்லுதல் என்பதும், இரு பொருட் பொதுமொழி கூறுதலன்று என்பதும் கூறிற்று.* (2)

**பருதி:**- *எ - து வாக்கினில் குற்றம் நான்காவன: பொய், கோள் பயனிலசொல், குறளை, இந்நான்கும் இல்லாத நெறி பெற்றாலும் மனத்திலே நடுவுநிலைமை பெரியது என்றவாறு.* (9)

**காளிங்:**— *எ - து ஒருவர் தாம் சொல்லுஞ் சொல்லின்கண் எஞ்ஞான்றும் ஒருகோட்டமும் இவ்லாமையாகின்றது யாது அதுவே நடுவு நிலைமையாவது. மற்றைச் சொல்தான் எஞ்ஞான்றும் தன்மனமும் வாக்கும் ஒருவழிப்பட உட்கோட்ட மில்லாமை பெறுவதாயின் என்றவாது.* (6)

**உரைவிளக்கப்பகுதி :-**

**இராமா:**—*சொற்கோட்டம் இல்லது என்னும் இடத்திலே இறந்தது தழுவி நின்ற இழிவுசிறப்பும்மை கூட்டிச் சொற்கோட்டமும் இல்லதும் எனவும், உட்கோட்டம் இன்மை என்னும் இடத்திலே இறந்தது தழுவி நின்ற உயர்வு சிறப்பும்மை கூட்டி உட்கோட்டமும் இன்மையும் பெறின் எனவும், பொருளுரைத்து, அதனானே பொருட்கோட்டமும் மனக்கோட்டமும் இல்லாதபோது சொற்கோட்டம் உடையதும் நடுவுநிலைமையாம் எனவும், அந்த இரண்டும் உண்டானால் சொற்கோட்டம் இல்லது நடுவு நிலைமை யாகாது எனவும்: சொற்கோட்டம் பொருட்கோட்டம் மனக் கோட்டம்மூன்றும்இல்லாததேநடுவுநிலைமைக்கு சிறந்ததுஎனவும்கொள்க.*

**120. வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின். (க0)**

**உரைப்பகுதி :**

**பரிமே :—** பிறவும் தமபோல் பேணி செயின் - பிறர்பொருளை யும் தம் பொருள்போலப் பேணிச் செய்யின், வாணிகம் செய்வார்க்கு வாணிகம் - வாணிகஞ்செய்வார்க்கு நன்றாய வாணிகமாம்.

பிறவும் தமபோல்செய்தலாவது 1 கொள்வது மிகையும் கொடுப்பது குறையும் ஆகாமல் ஒப்பநாடிச் செய்தல். இப்பாட்டு மூன்றனுள் முன்னைய இரண்டும் அவையத்தாரை நோக்கின, ஏனையது வாணிகரை நோக்கிற்று; அவ்விருதிறத்தார்க்கும் இவ்வறம் வேறுகச் சிறந்தமையின்.

**மணக்:**-வாணிகஞ் செய்வார்க்கு வாணிகமாம்; பிறர் பொருளையும் தமது பொருள்போலப் பேணிச் சோர்வுபடாமல் செய்வாராயின் என்றவாறு. (4)

**பரிப் :** – வாணிகம் - இலாபம். இது வாணிகர் நடுவு செய்யுமாறு கூறிற்று. இவை நான்கு பாட்டானும் நடுவுசெய்யுமாறு கூறப்பட்டது.

**பருதி:**—எ - து ஊதியஞ் செய்வார்க்கு ஊதியமாவன தன் காரியம் போல, பிறர்காரியஞ் செய்வதாம் என்றவாறு. (2)

**காளிங் :**—எ - து உலகத்து வியாபாரஞ் செய்து ஒழுகுவார்க்கு இம்மையும் மறுமையும் பெறுவதாகிய ஊதியம் யாதோ எனின் பிறவாகிய பொருள்களையும் தம்முடையனவாகிய பொருள்களைப்போல தன்னெஞ்சு அறிய அழிவு சேராது பாதுகாத்துச் செய்யின் அதுவே தமக்கு அழியாத ஆக்கம் என்றவாறு. (7)

## உரைவிளக்கப் பகுதி :—

**இராமா:** –சொல்லெச்சமாக வாணிகம் என்பதற்குப் பயனிலை குறைந்து நின்றது. வாணிகம் செய்வார்க்கு நடுவுநிலைமை மிகவும் சிறந்தது என்பார் இப்பாட்டை அதிகார முடிவிலே வைத்தார்.

## மேற்கோள்பகுதி ;

**நச்:**— இது வாணிகச் சிறப்பு 2 இருவர்க்கும் கூறியதற்கு மேற்கோள் (தொல். பொருள். 75)

1 பட்டினப்பாலை 210

2 இருவர்-வணிகரும் வேளாளரும்-

# 13. அடக்கமுடைமை

**பரிமே** :— அஃதாவது மெய், மொழி, மனங்கள் தீநெறிக்கண் செல்லாது அடங்குதல் உடையனாதல். அஃது ஏதிலார் குற்றம்போல் தன் குற்றமுங்காணும் * நடுவுநிலைமையுடையாற்கு ஆதலின், இது நடுவுநிலைமையின் பின் வைக்கப்பட்டது.

**மணக் :**— *அடக்கமுடைமையாவது மனம் மொழி மெய்களால் அடங்கி ஒழுகுதல்.*

**பரிப் :**— *மேல் மனமொழி மெய்களான் நல்லது செய்யவேண்டும் என்றார். இது அவையிற்றை யடக்கி யொழுகவேண்டும் என்பதனால், அதன் பிற் கூறப்பட்டது.*

**பருதி :**— *அடக்கமுடைமையாவது, மனம் வாக்குக் காயங்கள் 1 பற்றினவழி செல்லாமல் அடங்குதல் என்றவாறு.*

**121. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆர்இருள் உய்த்து விடும்.**

**உரைப்பகுதி :**

**பரிமே :**— அடக்கம் அமரருள் உய்க்கும் - ஒருவனை அடக்கமாகிய அறம் பின் தேவருலகத்து உய்க்கும், அடங்காமை ஆர் இருள் உய்த்து விடும் - அடங்காமையாகிய பாவம் தங்குதற்கரிய இருளின் கட் செலுத்தும்.

இருள் என்பது ஓர் நரகவிசேடம். "எல்லாம் - பொருளில் பிறந்துவிடும்*" என்றாற்போல உய்த்துவிடும் என்பது ஒரு சொல்லாய் நின்றது.

**மணக்:**— *மன மொழி மெய்களை அடக்கி யொழுக அவ்வடக்கம் தேவரிடத்தே கொண்டு செலுத்தும்; அவற்றை யடக்காதொழிய அவ் வடங்காமைதானே நரகத்திடைக் கொண்டு செலுத்திவிடும் என்றவாறு.*

*மேல் பலவாகப் பயன்கூறினாராயினும், ஈண்டுஅடக்கத்திற்கும்அடங்காமைக்கும் இதுவே பயன் என்று தொகுத்துக் [2]கூறினார்.* 10

**பருதி :**— *எ - து திரிவிதகரணங்களையும் அடக்கில் இகபரத்துக்குப் பயன்படும்; அடக்கமின்றாதல் நரகத்தைக் கொடுக்கும் என்றவாறு.* 1

---

* குறள். 190. 1 'பாவத்தின் வழி', 'பற்றின் வழி' என்பனவும் பாடம்.
* நான்மணிக். 7. 2. கூறிற்று பி-ம்.

காளிங் :— எ - து நெஞ்சத்து அடக்கமுடைமையாகின்ற இது, பின்பு அவனைத் தேவருலகத்துக் கடவுளாய்ச் செலுத்தும்; மற்று அடங்காமையாகின்ற இது, நரகமாகிய இருள்வழிச் செலுத்தும்; அஃது அன்றியும் நாய் கோழி பன்றி புல் புழு முதலிய பிறவியுள் செலுத்திவிடும் என்றவாறு. (1)

**உரைவிளக்கப்பகுதி** ;

**நுண் :** — முன்னது உய்க்கும் என்றும், பின்னது உய்த்துவிடும் என்றும் நின்றமையால் ஒரு சொல். "வேண்டியிருப்பர்" (804) "நீக்கி நிறுத்து" (1032) என்பனவும் அப்பொருள. தவ்வையைக் காட்டி விடும்" (167) என்பது இரு சொல். "இன்னு செய்தாரை" (314) என்பதனுள் செய்து விடலும் அது.

**இராமா** :—பாவ புண்ணியங்கள் இரண்டும் ஒருவர்க்கு இம்மையிலே செயப்படுபொருளாகிய கருமங்களாக நிற்குமாயினும், மறுமையிலேஅவற்றைச் செய்தவரைச் செயப்படுபொருளாக்கித் தாம் வினைமுதலாகிய கருத்தாவாம் என்று சொல்லவந்தவர் உய்க்கும் என்றும், உய்த்துவிடும் என்றும் சொன்னர். உய்த்துவிடும் என்பது பிறந்துவிடும், நின்றுவிடும் என்பவை போல ஒரு சொல்.

**மேற்கோள்பகுதி :**

**சிவஞான :**— 'உய்த்துவிடும்' 'காட்டிவிடும்' என்றற் றொடக்கத்துச் சொற்களைப் பரிமேலழகியார் முதலாயினேர் ஒரு சொல் என்றதும் இக் கருத்தே பற்றி எனக்கொள்க. (பாயிர. பக். 42.)

**சுவாமி:**—'அறவினை யாதெனில் கொல்லாமை'; விதிச்சொல் மறைப் பொருளில் வந்தது. (இ. கொ. 77.)

**குறிப்பு:**—சுவர்க்கம் நரகம் என்பன, புண்ணியம், பாவம் செய்தார் இன்பத் துன்பம் நுகரும் இடங்கள். அடக்கம் என்ற புண்ணியம் சுவர்க்கத்துய்த்து இன்பம் நுகரச் செய்யும், அடங்காமையாகிய பாவம் நரகத் துய்த்துத்துன்பம் எய்துவிக்கும் என்பதாம்.

**122. காக்க பொருளா அடக்கத்தை; ஆக்கம்**
**அதனினூஉங் கில்லை உயிர்க்கு.** (உ)

**உரைப்பகுதி** :

**பரிமே:**—உயிர்க்கு அதனின் ஊங்கு ஆக்கம் இல்லை-உயிர்கட்கு அடக்கத்தின் மிக்க செல்வமில்லை, அடக்கத்தைப் பொருளாக் காக்க -

ஆகலான் அவ்வடக்கத்தை உறுதிப்பொருளாகக் கொண்டு அழி யாமல் காக்க.

உயிர் என்பது சாதியொருமை. அஃது ஈண்டு மக்கள் உயிர்மேல் நின்றது, அறிந்து அடங்கிப் பயன்கொள்வது அதுவேயாகலின்.

**மணக்:-** ஒருவன் தனக்குப் பொருளாக அடக்கத்தை. உண்டாக்குக. அவனுயிர்க்கு ஆக்கம் அதனின் மேற்பட்டது பிறிதில்லை என்றவாறு. (1)

**பரிப்:—** இஃது அடக்கம் வேண்டும் என்றது.

**பருதி :—** எ - து பொருள்பற்றிய அடக்கத்தின் வழியிலே நிற்க; ஆத்மாவுக்கு இது போலும் பயனில்லை என்றவாறு. (8)

**காளிங்.—** எ - து மற்றெல்லாவற்றினும் அடக்கப் பொருளாகக் கொண்ட அடக்கத்தை, சோர்வுபடாமல் பாதுகாக்க; மற்று அதுவே தமக்கு இம்மையாக்கமும் மறுமையாக்கமுமாகிய ஆக்கம்; அவ்வடக்கத்தின் வழியாயிருப்பது மற்றொன்று மக்கட்கு உயிர்நிலை இல்லை எ- று. (10)

இனி மற்றவ்வாறு அடக்கமுடைமையாய்க் கொண்டு உலகத்தில் யாவரும் தந்தங் குலமரபுக்குத் தக்க ஒழுக்கத்தினுல் ஒழுகுதலே சிறந்தது ஆதலால் அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

## ஒப்புமைப்பகுதி :

''அடக்கம் ஆயிரம் பொன் பெறும்''

### 123. செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்
### தாற்றின் அடங்கப் பெறின். (ங)

## உரைப்பகுதி :

**பரிமே:—** அறிவு அறிந்து ஆற்றின் அடங்கப் பெறின் - அடங்குதலே நமக்கு அறிவாவது என்றறிந்து நெறியானே ஒருவன் அடங்கப் பெறின், செறிவு அறிந்து சீர்மை பயக்கும் - அவ்வடக்கம் நல்லோரான் அறியப்பட்டு அவனுக்கு விழுப்பத்தைக் கொடுக்கும்.

இல்வாழ்வானுக்கு அடங்குநெறியாவது மெய்முதல் மூன்றும் தன் வயத்தவாதல்.

**மணக்:—** அறியப்படுவனவும் அறிந்து, அடக்கப்படுவனவும்அறிந்து, நெறியினானே யடங்கப்பெறின், அவ்வடக்கம் நன்மை பயக்கும் என்றவாறு.

அறியப்படுவன -சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்; அடக்கப்படுவன- மெய் வாய் கண் மூக்குச் செவி. (2)

பரிப் :—ஆற்றினடங்குதலாவது தத்தம் நிலைமைக்கும், இல்லறத்திற்கும் சொல்லுகின்ற நெறியினானே சுவைமுதலான ஐந்தின்கண்ணும் மெய் முதலான பொறிகள் வழியாகச் செல்லும் காதலை யடக்குதலும், அக் காதல் காரணமாகச் செல்லும் வெகுளியை யடக்குதலும் முதலாயின. நன்மை பயக்கும் என்று பொதுப்படக் கூறினர் எல்லா நன்மையும் பயக்கும் என்றற்கு. மேல் அடக்கம் வேண்டும் என்றார்; இஃது அடக்கும் திறன் கூறிற்று.

பருதி:—எ-து இன்னார் என்னுங் கீர்த்தியும் உண்டாய், செல்வமும் தரும்; அறிவறிந்த நெறியிலே அடங்குவனாகில் என்றவாறு. 5

காளிங்:—இவ்வடக்கம் உடையானை நன்மையுந் தலையளியாது; அது தங்குதற்கு ஓராங்கு நின்று கருதி இகன்மாட்டு அறியத்தகுவனவற்றை யெல்லாங் குறிக்கொண்டு அறிந்து மற்றங்ஙனமறிந்த நெறியின் வழுவாதே அடங்கி ஒழுகப்பெறின் மற்று அஃது எல்லாமேம்பாட்டையுந் தரும் என்றவாறு.

## உரைவிளக்கப்பகுதி :

இராமா:— வேறோர் முடிபு: அறிவு அறிந்து -அறிவினாலே தனக்கு அறியவேண்டியவற்றை அறிந்து, ஆற்றின்-அந்த அறிந்த நெறிக்குத்தக அடங்கப்பெறின்-மனமொழிமெய்கள் அடங்கப்பெறுவானானால்' செறிவு- அந்த அடக்கம், அறிந்து-உயர்ந்தோரால் அறியப்பட்டு, சீர்மை பயக்கும்- செல்வமுடைமையைத் தரும்.

**124. நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது** (சு)

## உரைப்பகுதி:—

**பரிமே:**—நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்-இல் வாழ்க்கையாகிய தன் நெறியின் வேறுபடாது நின்று அடங்கினவனது உயர்ச்சி, மலையினும் மாணப் பெரிது - மலையின் உயர்ச்சியினும் மிகப் பெரிது.

திரியாது அடங்குதல் - பொறிகளால் புலன்களை நுகராநின்றே அடங்குதல். மலை ஆகு பெயர்.

மணக் :—தனது நிலையில் கெடாதே அடங்கினவனது உயர்ச்சி மலையினும் மிகப் பெரிது என்றவாறு. (4)

**உரை விளக்கப்பகுதி** :

**நுண்:**—தோற்றம் - உயர்ச்சி. மலையின்கண் அதனைக் கூட்டிஎழுதி யதால் ஆகுபெயர் என்றார். '' நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில் நலம் '' (407) முதலிய ஆகுபெயர் பெரும்பாலும் வருதல் காண்க.

**இராமா**—மலை பொருளாகுபெயர்.

**125. எல்லார்க்கும் நன்றும் பணிதல் அவ ருள்ளும்**
**செல்வர்க்கே செல்வம் தகைத்து. (ரு)**

**உரைப்பகுதி:** —

**பரிமே:**— பணிதல் எல்லார்க்கும் நன்றும் - பெருமிதம் இன்றி அடங்குதல் எல்லார்க்கும் ஒப்ப நன்றே எனினும்; அவ ருள்ளும் செல்வர்க்கே செல்வம் தகைத்து - அவ் எல்லாருள்ளுஞ் செல்வம் உடையார்க்கே வேறொரு செல்வமாம் சிறப்பினை உடைத்து.

பெருமிதத்தினைச் செய்யுங் கல்வியும் குடிப்பிறப்பும் உடையார் அஃதின்றி அவைதம்மானே யடங்கியவழி அவ்வடக்கஞ் சிறந்து காட்டாதாகலின், செல்வர்க்கே செல்வந்தகைத்து என்றார். செல்வத்தகைத்து என்பது மெலிந்துநின்றது. பொது என்பாரையும் உடம்பட்டுச்சிறப்பாதல் கூறியவாறு. இவை ஐந்து பாட்டானும் பொதுவகையான் அடக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது.

**மணக்:**—அடங்கி ஒழுகல் எல்லார்க்கும் நன்மையாம்; அவர் எல்லா ரினும் செல்வமுடையார்க்கே மிகவும் நன்மை * உடைத்தாம் எ-று. (8)

செல்வம் - மிகுதி.

**பருதி:**—எ - து ஆரளவிலும் ஆங்காரம் அற்றுத் திரிவித கரணங் களையும் அடக்குவானாகில் நன்று; இந்தக்கிரமத்திற்கு நிகருண்டோ என் னில், குறைவறப்பெற்ற பாக்கியத்துக்கு நிகர்த்த பாக்கியம் அதுவே என்றவாறு. (10)

**காளிங்:**—எ - து யோகிகள், தவத்தோர், துறவா வறியோர் முத லாகிய யாவர்க்கும் சால நன்மையேயாம் பணிதலாகிய அடக்கமுடைமை, அவருள்ளும் சிறப்பினை உடைய இல்வாழ்வார்க்கு மிகவும் அழகுத் தன்மை உடைத்து என்றவாறு. (3)

* உடைத்தாவது பி - ம்.

**மேற்கோள்பகுதி:**

**மயிலை:**—நான்காம் வேற்றுமை உருபு தகுதிப்பொருளில் வந்ததற்கு மேற்கோள். (நன்.297.)

**யா. வி. உரை:**—காதை கரப்பு என்ற சித்திரகவியில் இக்குறள் மறைந்திருப்பதைக் காட்டுவர். ( சூ 96.)

**ஒப்புமைப் பகுதி:—**

*'அஞ்சலி வந்தனம் யாருக்கும் நன்மை.'* —பழமொழி :

**126.** **ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து** (சா)

**உரைப்பகுதி:**

**பரிமே :**—ஆமைபோல் ஒருமையுள் ஐந்து அடக்கல் ஆற்றின் - ஆமைபோல ஒருவன் ஒருபிறப்பின்கண் ஐம்பொறிகளையும் அடக்க வல்லனாயின், எழுமையும் ஏமாப்பு உடைத்து - அவ்வன்மை அவனுக்கு எழுபிறப்பின்கண்ணும் அரணாதலை உடைத்து.

ஆமை ஐந்து உறுப்பினையும் இடர்புகுதாமல் அடக்குமாறுபோல இவனும் ஐம்பொறிகளையும் பாவம் புகுதாமல் அடக்கவேண்டும் என்பார், ஆமைபோல் என்றார். ஒருமைக்கண் செய்த வினையின்பயன் எழுமையும் தொடரும் என்பது இதனான் அறிக. இதனான் மெய்படக்கம் கூறப்பட்டது.

**மணக்:**—ஒருபிறப்பிலே பொறிகள் ஐந்தனையும் ஆமைபோல அடக்க வல்லவனாயின், அவனுக்கு அதுதானே எழுபிறப்பினும் காவலாதலை உடைத்து என்றவாறு. (3)

**பரிப்:**—அன்றாயின் வாதனை தொடரும் எ-று. ஆமைபோல என்றது தனக்குள்ள உறுப்பைப் பிறர்க்குப் புலனாகாது அடக்குமதுபோலப் பொறிகள் நுகரவற்றாயிருக்க நுகராமல் அடக்க வேண்டும்என்றவாறு, பொறிகள் ஐந்தனையும் அடக்க வல்லார்க்கு ஏழுபிறப்பும் நன்மையுண்டாம் என்றது.

**பருதி:**—எ-து ஆமையானது நாலு காலும் தலை ஒன்றும் மனுஷனைக் கண்டமாத்திரத்திலே அடங்கினாப்போலே இவனும்ஐம்புலன்

களையும் அறிவினால் அடக்கின் அவனுக்கு ஏழு சென்மத்திலும் துன்பம் இல்லையாம் என்றவாறு. (9)

காளிங்:—எ-து ஆமையானது முகமுதலாகிய தன் உறுப்பு ஐந்தினையும் வேண்டுழி விரித்தும் வேண்டாக்கால் அடக்கியும் தன்னைப் பாதுகாத்துக் கொண்டொழுகுமாப்போல் தன் ஒருவழிப்பட்ட உள்ளத்தினாலே இங்குச் சொன்ன ஐம்புலன்களையும் நன்னெறிக்கண் நடாத்தியும் தீநெறிக்கண் குவித்தும் இங்ஙனம் இவற்றை அடக்குதல் வல்லனாயின், அது அவ்வடக்குகின்ற ஒப்பிறந்தானுக்கு இம்மைக்கண்ணும் மறுமைக் கண்ணும் சேமமாகிய உறுதியைப் பெறுவிக்கும் என்றவாறு. (2)

## உரைவிளக்கப்பகுதி :—

இராமா:—ஆமை ஐந்து உறுப்புக்களையும் விக்கினம்வாராமல் அடக்குதல்போலப் புலன்களைப் பாவம் வாராமல் அடக்கினால் இன்பமாம்.

"ஆமைதன் உறுப்புஓர் ஐந்தும் தன்னுளே அடக்குமாபோல்.
தீமைசெய் புலன்கள் ஐந்தும் தன்உள்ளே செறியச் சேர்த்தின்
வாய்மையுள் நிகழும் என்னை ! விழுத் தவம்பட நின்றானேல்
தூய்மை செய்தவர்கள் நாளும் சொல்லுவ தவன்றன் சொல்லே"

எனக் காண்க.

## மேற்கோள்பகுதி:

நச் :—"நாலிருவழக்கில் தாபத பக்கமும்" என்றதில் பக்கம் என்றதால், 'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கலாற்றின்' என்பதற்கு, முட்டின்றி முடிப்போர் எனப் பொருள் கண்டமைக்கு மேற்கோள். (தொல், பொருள். 75.)

"கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமையானும்" என்றதில் அடக்கமுடைமைக்கு மேற்கோள். (தொல். பொருள். 76.)

இளம் :—இல்லறத்திற்கு உரியவாகக் கூறப்பட்ட ஒழுக்கங்களுள் அடக்கமுடைமையாவது பொறிகள், ஐம்புலன்கள் மேல் செல்லாமை அடக்குதல் என்பதற்கு இக்குறள் மேற்கோள். (தொல். பொருள். 75.)

காரிரத்ன:—பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற.251.)

## ஒப்புமைப்பகுதி :

"ஐவகைப் பொறியும் வாட்டி ஆமையின் அடங்கி ஐந்தின்
மெய்வகை தெரியும் சிந்தை விளக்குமின் றெரியவிட்டு
பொய்கொலை களவு காமம் அவா இருள் புகாது போற்றி
செய்தவம் நுனித்த சீலக்கனைகதிர்த் திங்க ளொப்பார்."

—சிவக. 2824.

"அருந்தவர் போன்று காத்தும் அடங்கலால் ஆமைபோன்றும்"

—ஷ 1859

127. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு. (எ)

**உரைப்பகுதி:**

பரிமே—யா காவாராயினும் நா காக்க - தம்மால் காக்கப்படுவன எல்லாவற்றையும் காக்கமாட்டாராயினும் நா ஒன்றனையுங் காக்க, காவாக்கால் சொல்லிழுக்குப்பட்டுச் சோகாப்பர் - அதனைக் காவா ராயின் சொற்குற்றத்தின்கட் பட்டுத் தாமே துன்புறுவர்.

யா என்பது அ∴றிணைப்பன்மை வினுப்பெயர். அ∴து ஈண்டு எஞ்சாமை உணரநின்றது. முற்றும்மை விகாரத்தால் தொக்கது. சொற்குற்றம் - சொல்லின்கண் தோன்றுங் குற்றம். அல்லாப்பர் செம்மாப்பர் என்பனபோலச் சோகாப்பர் என்பது ஒருசொல்.

மணக் :—எல்லாவற்றையும் அடக்கிற்றிலராயினும் நா ஒன்றனையும் அடக்குக; அதனை அடக்காக்கால் சொற்சோர்வுபட்டுத் தாமே சோகிப் பாராதலான் என்றவாறு. (5)

பரிப் :—மேல் நிலைமையிற்றிரியாமல் அடக்கவேண்டும் என்றார் அவ்வாறு செய்வது அரிதாயின் நா ஒன்றையும் அடக்கவேண்டும். அது பிறபயன் தருவதேயன்றிக் காலத்தே சோகத்தையும் தவிர்க்கு மாதலான். இது சோகத்தின் மாட்டே பிணிக்கப்படுவர் என்றது.

பருதி :—எ - து வாக்கும் மனமும் காயமும் அடங்காதபோது வாக் கையாகிலும் பாதுகாக்க; அப்படிக் காவாதபோது துன்பம் வரும் என்றவாறு. (3)

**உரைவிளக்கப்பகுதி :**

நுண் :—யாவும் என்பதற்கு எல்லாவற்றையும் என்று உரைத்து, யா என்பது அஃறிணைப்பன்மை வினுப்பெயர் ஈண்டு எஞ்சாமையுணர்த்தி நின்றது என்றார். முற்றும்மை விகாரத்தொகை என்றார் செய்யுட்டொடை காரணமாக. இதுவும் அச்சூத்திரவிதி யன்மை குறித்து என்க, மேல் வரும் விகாரமெல்லாம் இன்னொலி, செய்யுட்டொடை, அடிப்பாடு இவை மூன்றினுள் அமையுமிடம் அறிந்து அமைத்துக் கொள்க. சோகாப்பர் என்பது ஒருசொல். அல்லாப்பர் செம்மாப்பர் என எடுத்துக் காட்டியது சொற்சோதனை.

இராமா :—செம்மை ஏமம் என்னும் பண்புப்பெயர் செம்மையாதல் ஏமமாதல் என்னும் பொருட்டாய்த் தொழிற்பெயராங்கால் செம்மாப்பு ஏமாப்பு, என நிற்பது போல, சோகம் என்னும் பண்புப்பெயர் தொழிற் பெயராங்கால் சோகாப்பு எனநிற்கும்.

**மேற்கோள்பகுதி :**

**அடியார்:**— இன்று இழிபிறப்புற்ரோர் என்றது நெடுங்காலம் தவஞ் செய்துபெற்ற மக்கட்பிறப்பை ஒருவார்த்தையின் இழந்து இழிபிறப்புற் றார் என்றவாறு, எனவே 'யா கா வாராயினும் நாகாத்தல் வேண்டும்' என்பதாயிற்று. (சிலப். நாடுகாண். 241)

**யா. வி.உரை:** – நெட்டெழுத்து மிக்குவந்த செய்யுளுக்கு மேற்கோள். (சூ. 2.)

**ஒப்புமைப் பகுதி :**

"பால குமரன் மக்கள் மற்றவர்
காவா நாவிற் கனகனும் விசயனும் —சிலப். கால்கோட். 158-159.

"காவாதவள் கண்ணறச் சொல்லிய வெஞ்சொல்
ஏவோ அமிர்தோ எனக்கின்றிது சொல்லாய்" —சீவக. 1069.

"காவாது ஒருவன் தன் வாய்திறந்து சொல்லுஞ்சொல்" —நாலடி. 63

ஆக்கப் படுக்கும் அருந்தளை வாய்ப் பெய்விக்கும்
போக்கப் படுக்கும் புலைநரகந் துய்ப்பிக்கும்
காக்கப் படுவன இந்தியம் ஐந்தினுள்
நாக்கல்ல தில்லை நனிவெல்லு மாறே" —வளையாபதி

"நாவது காவானுகில் அவனுக்கா நடந்து போரில்
சாவது பழுதென்றன்றே சகத்துளோர் சாற்றுகின்றார்"
—வில்லி. கிருட். 142

"நடக்குங் கால் தவறினலும்நா தவறக் கூடாது" பழமொழி.

## 128. ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின் நன்றாகா தாகி விடும். (அ)

**உரைப்பகுதி :**

**பரிமே:**—தீச்சொல் பொருட்பயன் ஒன்றானும் உண்டாயின் - தீய வாகிய சொற்களின் பொருள்களால் பிறர்க்குவருந் துன்பம் ஒன்றாயி னும் ஒருவன்பக்கல் உண்டாவதாயின், நன்று ஆகாதாகிவிடும் - அவ னுக்குப் பிற அறங்களானுண்டான நன்மை தீதாய்விடும்.

தீயசொல்லாவன தீங்கு பயக்கும் * பொய், குறளை, கடுஞ்சொல் என்பன. ஒருவன் நல்லவாகச் சொல்லுஞ் சொற்களின்கண்ணே ஒன்றாயினுந் தீச்சொற்படும் பொருளினது பயன் பிறர்க்கு உண்டாவதாயின் என்று உரைப்பாரும் உளர்.

**மணக்:**—ஒரு சொல்லேயாயினும் கேட்டோர்க்கு இனிதாயிருந்து தீய சொல்லின் பொருளைப் பயக்குமாயின், நன்மையாகாதாகியே விடும் என்றவாறு. (7)

இது $சலமொழி கூறினாலும் தீதாம் என்றது.

**பருதி:**—எ - து இல்லறத்தான் நடத்தும் ஒழுக்கந் தப்பி, ஒரு காரியமாகிலுங் குற்றம்வரில், நன்றாகாதாம்; ஆதலால் திரிவித கரணங்களும் பாபத்தில் செல்லாமல் காப்பது நன்று என்றவாறு. (2)

**உரைவிளக்கப்பகுதி :**

**இராமா:**—ஒருவன் நல்லவையாகச் சொல்லும் சொற்களிலே ஒன்றானாலும் தீயசொல்லின் பொருளால்வரும் பிரயோசனமானது உண்டானால், மேலே சொல்லிய சொற்களால் வந்த நன்மை முழுவதும் தீதாகிவிடும் என்றவாறு.

**மேற்கோள்பகுதி**

**நச்:-** ஒன்றானும் தீச்சொல் என்புழி, ஆயினும் என்பது, ஆனும் எனக் குறைந்து நின்றது. (தொல். சொல். 230.)

**129. தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு.** (கூ)

**உரைப்பகுதி :**

**பரிமே:**—தீயினால் சுட்ட புண் உள் ஆறும் - ஒருவனை ஒருவன் தீயினால்சுட்டபுண் மெய்க்கண் கிடப்பினும் மனத்தின்கண் அப்பொழுதே ஆறும், நாவினால்சுட்ட வடு ஆறாது - அவ்வாறன்றி வெவ்வுரையுடைய நாவினால் சுட்ட வடு அதன்கண்ணும் எஞ்ஞான்றும் ஆறாது.

ஆறிப்போதலால் தீயினால்சுட்டதனைப் புண் என்றும், ஆறாது கிடத்தலால் நாவினால் சுட்டதனை வடு என்றுங் கூறினார். தீயும் வெவ்வுரையும்

* 'பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில் சொல்லெனச் சொல்லில் தோன்றுவ நான்கும்''
—மணிமேகலை. 24: 127-128. 30: 68-69.

$ 'சாலமொழி' —பி-ம் சலமொழி—வஞ்சவார்த்தை

சுடுதற்றெழிலான் ஒக்குமாயினும், ஆறுமையால் தீயினும் வெவ்வுரை கொடிது என்பது போதரலின், இது குறிப்பான்வந்த வேற்றுமை யலங்காரம். இவ்வ மூன்றுபாட்டானும் மொழியடக்கம் கூறப்பட்டது.

**மணக் :-** *தீயினுல் சுட்டபுண் உள்ளாறித் தீரும்; நாவினுல் சுட்ட புண் ஒருகாலத்தினும் தீராது என்றவாறு.* (6)

**பரிப்:—** *சொற்சோர்வினுல் வருங்குற்றம் என்னை? என்றூர்க்கு அது கேட்டார்க்குச் சுடும் அதனுனே தனக்குக் குற்றம் வரும் என்றது.*

**பருதி:—** *எ - து தீயினுல் சுட்ட புண் உள்ளேஆறி மேலே வடுவாகி இருக்கும்; நாவில் சுட்டபுண் மேலேஆறி உள்ளே புண்ணுகி இருக்கும். அதனுல் ஒருவரையும் வாக்குத்தோஷம் சொல்ல வேண்டாம் என்றவாறு.* (4)

## உரைவிளக்கப்பகுதி:

**நுண்:-** குறிப்பு வேற்றுமையலங்காரம், உருவகம் (*29, 306, 1068,*) வேற்றுமை (*129*), ஒட்டு (*475*), பின்வருநிலை (*200, 320*) முதலிய அலங்காரங்களும், "ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழாஅ" என்னுஞ் சூத்திரமும் பின்முன்னுகத் தொக்க தொகையும் (*319*) எழுதியதால், இவ்வுரையாசிரியர்க்குத் தொல்காப்பியமல்லாத நூல்களும் அங்கீகாரம் என்க. 'ஒருபொருட் பன்மொழி' என்னுஞ் சூத்திரம் அவிநயமாதல், அகத்தியமாதல் வேண்டும் என்க.

## ஒப்புமைப்பகுதி :

"காவா தொருவன்தன் வாய்திறந்து சொல்லும்சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால் - ஓவாதே
ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றும்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து." —நாலடி, 63.

"பாயும் கனலேபோல்
எரிந்தாறுதே இன்னுயிர் உண்ணும எரியன்னுள்.
—கம்ப. அயோத். கைகேயி. 43.

தீயினற் சுட்ட செம்புண் ணுள்ளாறு மத்தீயிற் றீய
வாயினற் சுட்டமாற்ற மாறுமோ வடுவே யன்றே';
—வில்லி-சபா-சூதுபோர்.

"அக்னி தாஹாத் விசிஷ்யதே வாக்பாருஷ்யம்"—சாணக்கிய சூத்திரம். 74.

**130.** **கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி**
**அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.** **(ம)**

**உரைப்பகுதி :**

**பரிமே:—** கதம் காத்துக் கற்று அடங்கல் ஆற்றுவான் செவ்வி - மனத்தின்கண் வெகுளிதோன்ருமல்காத்துக் கல்வியுடையனுய் அடங்குதலை வல்லவனது செவ்வியை, அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து - அறக்கடவுள் பாராநிற்கும் அவனை அடையும் நெறியின்கண் சென்று.

அடங்குதல் - மனம் புறத்துப் பரவாது அறத்தின்கண்ணே நிற்றல். செவ்வி - தன்குறை கூறுதற்கு ஏற்ற மன மொழி முகங்கள் இனியனுங்காலம். இப்பெற்றியானை அறம் தானே சென்று அடையும் என்பதாம். இதனுன் மனவடக்கம் கூறப்பட்டது.

***மணக்;-*** *வெகுளியும் அடக்கிக் கல்வியும் உடையனுய் அதனுல் வரும் பெருமிதமும் அடக்கவல்லவன்மாட்டு, அறமானது நெறியானே வருந்தித் தானே வருதற்குக் காலம் பார்க்கும் என்றவாறு.* (9)

***இஃது அடக்கமுடையார்க்கு அறம் உண்டாம் என்றது.***

***பருதி:-*** *எ - து கோபத்தை விட்டுப் பல காவியம் கற்றும், கற்றதின் வழியே அடக்கமுடைமையும் உண்டாகுமாகில் அவன் பக்கல் *தன்ம தேவதை வரும் என்றவாறு.* (6)

**உரைவிளக்கப்பகுதி**

***இராமா:-*** *செவ்வி-தன்குறைபாடு சொல்லுதற்கேற்ற மனமும் சொல்லும் முகமும் இனிமையானவனுய் இருக்கின்ற காலம்.*

---

* 'வழிவினவி வரும்'என்பது பழைய உரை.

## 14. ஒழுக்கமுடைமை.

**பரிமே:** அஃதாவது தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப் பட்ட ஒழுக்கத்தினை உடையராதல். இது, மெய் முதலிய அடங்கினர்க்கு அல்லது முடியாதாகலின், அடக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.

**மணக்:**—ஒழுக்கமுடைமையாவது தத்தங் குலத்திற்கும் இல்லறத் திற்கும் ஏற்ற ஒழுக்கம் உடையராதல்.

**பருதி:**—ஒழுக்கமுடைமையாவது தான் பிடித்த நன்னெறியை மறவாமல் மரணந்தமட்டும் கொண்டொழுகுதல் என்றவாறு.

**பரிப்:**—இது வேண்டியவாறொழுகாது உலகத்தோடு பொருந்தி யொழுக வேண்டும் என்றார்; அவ்வாறு ஒழுகுங்கால், அதுவும் அடக்கமே யாதலான் அதன் பிற் கூறப்பட்டது.

**131.** ஒழுக்கம் விழுப்பம் [1] தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

**உரைப்பகுதி:**

**பரிமே:**—ஒழுக்கம் விழுப்பம் தரலான்-ஒழுக்கம் எல்லார்க்கும் சிறப்பினைத் தருதலான், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்-அவ் ஒழுக் கம் உயிரினும் பாதுகாக்கப்படும்,

உயர்ந்தார்க்கும் இழிந்தார்க்கும் ஒப்ப விழுப்பந்தருதலின் பொதுப் படக் கூறினர். சுட்டு வருவிக்கப்பட்டது. அதனால் அங்ஙனம் விழுப் பந்தருவதாயது ஒழுக்கம் என்பது பெற்றும். உயிர் எல்லாப் பொருளி னும் சிறந்ததாயினும் ஒழுக்கம்போல விழுப்பம் தாராமையின், உயிரி னும் ஓம்பப்படும் என்றார்.

**மணக்:**—ஒழுக்கமுடைமை சீர்மையைத் தருதலானே, அவ் வொழுக் கத்தைத் தனது உயிரைக்காட்டினும் மிகக் காக்கவேண்டும் என்றவாறு.

**பரிப்:**—இஃது ஒழுக்கம் மேற்கூறிய நன்மையெல்லாந் தருமாதலின் அதனைத் தப்பாமல் செய்யவேண்டும் என்று வலியுறுத்திற்று.



1 'தரலால்' மணக், பரிப்—பாடம்,

**பருதி:**—எ-து ஒழுக்கமுடைமை பெருமை தருதலால் அந்த ஒழுக்கத்தைப் பிராணனைப்போலவே கொண்டொழுகுக என்றவாறு. 1

**காளிங்:**—எ - து - வரவர்க்குத் தக்க ஒழுக்கமானது இருமைக்கும் நன்மையைத் தருதலால் ஒழுக்கத்தினைத் தமது உயிரோம்புதலிற் காட்டிலும் குறிக்கொண்டு பாதுகாக்கவே அடுக்கும் என்றவாறு. (1)

**மேற்கோள்பகுதி :**

**நச்:**—'கட்டமை யொழுக்கத்துக் கண்ணுமை' என்றதில், ஒழுக்கத்திற்கு மேற்கோள். (தொல். பொருள். 76.)

**இளம்:** ஒழுக்க முடையாமையாவது தம்குலத்திற்கும் இல்லறத்திற்கும் ஒத்த ஒழுக்கம் உடையராதல் என்பதற்கு இக்குறள் மேற்கோள் (தொல். பொருள். 75.)

**ஒப்புமைப்பகுதி :**

''ஒழுக்கினும் குலத்தினும் விழுப்ப மிக்கமை.'' —பெருங், 3:22:36.
''சூழ்ந்து துணையாம் சிறப்பின்பம் சுரக்கும் அதனல் உயிர்தனினும்
வாழ்ந்த ஒழுக்கம் ஓம்பிடுக வழுக்கின் இடும்பை யேதருமே.'' —விநா. அரசி. 28.

**குறிப்பு:**—ஒழுக்கம் தருவதாய விழுப்பத்தையேற்று உயர்வது உயிராதலின் உயிர்க்குப் பெருமைதரும் ஒழுக்கம் அதனின், தன்மையான் மிகுவதாயிற்று என்பது கருத்து. 'ஒழுக்கம் போல விழுப்பம் தாராமையின் உயிரினும் ஓம்பப்படுவதாயிற்று' என்ற உரை விழுப்பத்திற்கும் உயிர்க்குமுள்ள இயைபை உணரச்செய்யாமையின் ஊன்றியறிதற்குரியது.

**132. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**
**தேரினும் அஃதே துணை. (உ)**

**உரைப்பகுதி :**

**பரிமே :**—ஒழுக்கம் ஓம்பிப் பரிந்து **காக்க** - ஒழுக்கத்தின் ஒன்றுனும் அழிவுபடாமல் பேணி வருந்தியுங்காக்க; தெரிந்து ஓம்பித் தேரினும் துணை அஃதே - அறங்கள் பலவற்றையும் ஆராய்ந்து, அவற்றுள் இருமைக்கும் துணையாவது யாதென்று மனத்தை ஒருக்கித் தேர்ந்தாலும், துணையாய் முடிவது அவ்வொழுக்கமே யாகலான்.

பரிந்தும் என்னும் உம்மை விகாரத்தால் தொக்கது. இவை இரண்டு பாட்டானும் ஒழுக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது.

**மணக் :**— வருந்திப் போற்றி ஒழுக்கத்தினைக் காக்க; எல்லா அறங்களினும் நல்லதனைத் தெரிந்து அதனையுந் தப்பாமல் ஆராய்ந்து பார்ப்பினும் தமக்கு அவ் ஒழுக்கமே துணையாபாதலால் என்றவாறு. 1

**பரிப் :**— இஃது ஒழுக்கங் காக்கவேண்டும் என்றது. 1

**பருதி :**— எ - து ஒழுக்கமுடைமையைத் தன் பிராணனைப் போலே பாதுகாக்கக்கடவன்; அது இம்மைக்கும் மறுமைக்குந் துணையாம் என்றவாறு. 2

**காளிங் :**— எ - து தாம் பொருள் முதலியவற்றைக் கொடாமல் காப்பதனிலும் விரும்பிக்குறிக்கொண்டு பரிக்க ஒழுக்கத்தினை; எங்ஙனம் எனின், தமக்கு இதனை ஒப்பது யாது என மறைமுதலிய நூல்களால் மிகத் தெளிந்து குறிக்கொண்டாராயினும், பின்னும் அதுவே அவற்கு ஒப்பதாகிய துணை என்றவாறு.

**உரைவிளக்கப்பகுதி :**

**நுண் :**— அறம் - ஆகுபெயராய் அறநூல்களையுணர்த்திற்றுமாம்.

**இராமா :**— வருந்தி ஓம்புதல், வருந்தாது ஓம்புதல் என்னும் இரண்டினுள்ளே வருந்தியும் ஓம்புக என்றலின், உம்மை எதிரது தழுவி நின்ற எச்ச உம்மை.

**133. ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்.**

**உரைப்பகுதி :**

**பரிமே :**— ஒழுக்கமுடைமை குடிமை - எல்லார்க்குந் தத்தம் வருணத்திற்கேற்ற ஒழுக்கமுடைமை குலனுடைமையாம், இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்-அவ்வொழுக்கத்தில் தவறுதல் அவ்வருணத்தில் தாழ்ந்த வருணமாய்விடும்.

பிறந்த வருணத்துள் இழிந்தகுலத்தாராயினும் ஒழுக்கமுடையராக உயர்குலத்தராவராகலின் குடிமையாமென்றும், உயர்ந்த வருணத்துப் பிறந்தாராயினும் ஒழுக்கத்தில் தவறத் தாழ்ந்த வருணத்தராவராகலின் இழிந்த பிறப்பாய் விடும் என்றுங் கூறினர். உள்வழிப்படுங் குணத்தினும் இல்வழிப்படுங்குற்றம் பெரிதென்றவாறு. பயன் இடை

யீடின்றி யெய்துதலின், அவ்விரைவுபற்றி அவ்வேதுவாகிய வினைகளே பயனாக ஓதப்பட்டன.

**மணக்** :—ஒருவன் இழிந்த குலத்தானாயினும் ஒழுக்கமுடையவனாக உயர்குலத்தனாம்; அதனைத் தப்பி ஒழுகுவனாயின், உயர்குலத்தனாயினும் இழிகுலத்தானாயே விடும் என்றவாறு.

இது குலங் கெடும் என்றது.

**பருதி** :— எ - து குடிமைக்குத்தக உடைமையைப் பேணி வைத்தலாகிய ஒழுக்கத்தையும் பேணிக்கொண்டு வராத இழுக்கம், பலராலும் இகழப்பட்டபடியினாலே அவன் கடையான பிறப்பு ஆவன் என்றவாறு

**காளிங்** :—எ - து ஒருவர்க்கு ஒழுக்கமுடைமையாகிய செல்வமே குலப்பண்பாவது; மற்று அவர் தமது ஆசாரத்தின்கண் இழுக்கமானது எது? அதுவே இழிந்த பிறப்பாய் விடும் என்றவாறு.

அல்லது உம் செல்வமும், பிறர்க்கு ஒன்றினை ஈதலும்அற்றாராயினும் அவரைக் குடிப்பிறப்பின்கண் கூட்டிக்கொளல் ஆகும்; குடிப் பிறந்தார் தமது ஆசாரத்தின்கண் வழுவின் தன்குடியில் கூட்டிக்கொளல் அரிது என்றும் ஆம். 7

## உரைவிளக்கப்பகுதி :

**இராமா** : – இனிவேறு ஓர் முடிபு: இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும் ஆதலால் ஒழுக்கமுடைமையே குடிமை என முடித்து உயர்ந்த குலத்தில் பிறந்தாராயினும் அந்தக் குலத்திற்கு உரிய ஒழுக்கத்தைக் கைவிட்டால் அதனாலே தாழ்ந்த குலத்தாராவது நிச்சயம்; ஆதலால் அந்த நிச்சயம் தோன்ற ஒழுக்கமுடைமையே குடிமை என்றார் என தேற்றேகாரம் வருவித்துப் பொருள் உரைத்துக் கொள்க.

## மேற்கோள்பகுதி :

**நச்** :—குடிமையாவது குடிப்பிறப்பிற்கு ஏற்ற ஒழுக்கம். அஃது, 'ஒழுக்கமுடைமை குடிமை' என்றதனானும் உணர்க.(தொல். சொல். 57.)

## ஒப்புமைப்பகுதி :

"தாழ்ந்தவருணத் துதித்தோரும் தக்கோர் ஆவர் ஒழுக்கத்தால்
வீழ்ந்த ஒழுக்கத்தார் இழிவர் மேலாம் வருணத்து உதித்திடினும். —விநா. அரசிய. 28

குறிபபு:—இழிந்த பிறப்பு மக்கட்பிறப்பினும் இழிந்த விலங்குப் பிறப்பு. 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்ற வள்ளுவர்க்கு மக்களாய்ப் பிறந்தும் இழுக்கியமையின் இது செய்யின் இது வரும் என்ற பகுத்தறிவற்ற விலங்காய் பின்னர் எஞ்ஞான்றும் கடைத்தேருர் என்றலே கருத்தாதல் தெளிக.

இழுக்கம் இழிந்த பிறப்பாகி விடும் என்னுது ஆய்விடும் என்றது செய்யுணடை பற்றி வினைமுதலாகக் கூறப்பெற்றது. அன்றி இழுக்கத்திற்கும் இழிபிறப்பிற்கும் உள்ள ஒற்றுமை நயம்பற்றிக் கூறிய தூஉமாம்.

**134. மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.**

**உரைப்பகுதி** :

**பரிமே** :—ஓத்து மறப்பினும் கொளலாகும் - கற்ற வேதத்தினை மறந்தானுயினும் அவ்வருணங்கெடாமையில் பின்னும் அஃது ஓதிக்கொள லாம்; பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும் - அந்தணனது உயர்ந்தவருணம் தன் ஒழுக்கங்குன்றக் கெடும்.

மறந்தவழி இழிகுலத்தனும் ஆகலின், மறக்கலாகாது என்னும் கருத்தான், மறப்பினும் என்ருர். சிறப்புடை வருணத்திற்கு மொழிந்தமையின், இஃது ஏனைய வருணங்கட்கும் கொள்ளப்படும்.

**மணக்**:— பிராமணன் வேதத்தினை ஓதி மறந்தனுயினும், பின்னும் ஓதிக்கொள்ளலாம்; ஒழுக்கங் குறையுமாயின் குலங்கெடும் என்றவாறு. 3

இஃது ஒழுக்கம் கல்வியினும் வலிதானவாறு கூறிற்று.

**பருதி**:— எ - து வேதம் ஓதி மறந்தாலும் பின்பு சந்தத்தை விட்டு ஓதிக்கொள்ளலாம்; ஒழுக்கம் கெட்டால் பிராயச்சித்தம் பண்ணிஞலும் போகாது; செய்த தோஷம் அனுபவிக்க வேண்டும் என்றவாறு.

**காளிங்**:—எ - து தனது குலமரபுக்கு முதற்காரணமாகிய தானேதிய வேதத்தை மறந்தானுயினும், பின்னும் அஃது ஓதிக்கொளலாயிருக்கும்; மற்று அந்தணனது குலப்பண்பு தனதாசாரங் குறைபடவே கெடும் என்றவாறு. 2

**மேற்கோள்பகுதி**:

**காரிரத்ன**:— பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற. 251.)

**சிவஞான:—** "மறப்பினும் ஒத்துக் கொளலாகும்" என்புழி மறப்பினும் என்னும் உம்மை மறக்கலாகாது என்னும் எதிர்மறைப் பொருள் தந்து நிற்றலின் இன்னோரன்னவையே எதிர்மறை உம்மையாம் என்பது. (பாயிர. பக். 86.)

**ஒப்புமைப்பகுதி:**

"வரிநவில் கொள்கை மறைநூல் ஒழுக்கத்துப்
புரிநூல் மார்பர் உறைபதி." —சிலப். புறஞ்சேரி, 38-39
"அந்தணர் ஒத்துடைமை யாற்ற மிக இனிதே" —இனியவை. 8
"இன்னா ஒத்தில்லாப் பார்ப்பான் உரை." —இன்னா-

**135. அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு. (ரு)**

**உரைப்பகுதி:**

**பரிமே:—** அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று- அழுக்காறுடையான் மாட்டு ஆக்கமில்லாதாற்போல, ஒழுக்கம் இலான்கண் உயர்வு இல்லை - ஒழுக்கம் இல்லாதவன் மாட்டும் உயர்ச்சியில்லை.

உண்மையான் ஒழுக்கமில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சியில்லை என்பது பெற்றும்; என்னை ? "கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றமும்" * நல்கூர்தலின். உயர்வு உயர்குலமாதல்.

**மணக்:—** மனக்கோட்ட முடையவன் மாட்டு, ஆக்கம் இல்லையானாற் போல, ஒழுக்கம் இல்லாதான் மாட்டு மிகுதியில்லையாம் என்றவாறு. 6

இஃது உயர்ச்சி இல்லையாம் என்றது.

**பருதி:—** எ - து அழுக்கு மனமுடையார்க்குச் செல்வங்கூடாது அதுபோல நல்லநெறி நடவாதார்க்கும் பெருமை இல்லை என்றவாறு. 8

**காளிங்:—** எ - து பிறர் ஆக்கத்தின்கண் தன் நெஞ்சம் அழுக்காறு உடையவனிடத்து யாதொருபடி ஆக்கமில்லை. மற்று அது போல இல்லை ஒழுக்கமில்லாதானிடத்துப் பெரியமேம்பாடு என்றவாறு. 9

**136. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து. (சா)**

* குறள், 166.

**உரைப்பகுதி:**

**பரிமே:—** ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் - செய்தற்கருமை நோக்கி ஒழுக்கத்தில் சுருங்கார் மனவலியுடையார், இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து - இவ்விழுக்கத்தால் தமக்கு இழிகுலமாகிய குற்ற முண்டாமாற்றை அறிந்து.

ஒழுக்கத்தின் சுருக்கம் அதனை உடையார்மேல் ஏற்றப்பட்டது. கொண்ட விரதம் விடாமைபற்றி, உரவோர் என்றார்.

**மணக்:—** ஒழுக்கத்தினின்று நீங்கார் அறிவுடையார்; அதனைத் தப்பினால் குற்றம் வருதலையறிந்து என்றவாறு.

இஃது இதனை அறிவுடையார் தவிரார் என்றது. குற்றம் வருதல் பின்னே காணப்படும். 4

**பருதி:—** எ - து ஒழுக்கநெறி கைவிடார்; அது ஏன் எனில்,ஒழுக்கங் கெட்டது பிராணச்சேதம் வந்ததற்கு ஒக்கும் என்று அறிந்து, என்றவாறு. 7

**காளிங்:—** எ - து தமது ஆசாரத்தில் சிறிதும் தளர்ந்து நில்லார் அறிவுடையாளர்; அது எங்ஙனம் எனின், தம் ஒழுக்கத்தை வழுவுதலில் தமக்குக் குற்றந் தங்கும் மிகுதிப்பாட்டினை உணர்ந்து என்றவாறு. 5

**உரைவிளக்கப்பகுதி:**

**இராமா:—** அறிந்து என்னும் வினையெச்சம் இங்கே காரணப் பொருட்டாய் அறிந்ததனாலே எனநின்று ஒல்கார் என்னும் தெரிநிலை எதிர்மறை முற்றுவினை கொண்டு முடிந்தது.

**மேற்கோள்பகுதி:**

**சிவஞான:—** இஃது உணராத பரிமேலழகியார் "1 இருள் நீங்கி இன்பம் பயக்கும்" என்புழி நீங்கி என்பது தொடை நோக்கி மெலிந்து நின்றது எனவும், நீங்க என்பதன் திரிபு எனினும் அமையும் எனவும் உரைத்து இடர்ப்படுவர். உரையாசிரியரும் பரிமேலழகரும் "முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின 2" என்னும் சூத்திரத்தோடு முரணுதலை அஞ்சிச் செய்தென்னும் வாய்பாட்டினின்று பிற வினைமுதல் வினை கொண்டன எல்லாம் செயவெனெச்சத் திரிபு என்றே கொள்வர். அதனை

1 குறள் 352. 2 தொல. சொல். 232.

மறுத்து நிகழ்காலத்துக்குரிய செயவெனெச்சம் காரணப் பொருண்மை உணர்த்தும்வழி யல்லது இறந்த காலம் உணர்த்தாமையின் காரணகாரியப் பொருட்டாய், பிற வினைமுதல் கொண்டு முடிந்தவழியே செய்தெனெச்சம் செயவெனெச்சத் திரிபு எனப்படும் என்று கூறினர் சேனாவரையர். (பாயிர. பக். 10.)

**137. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. (எ)**

**உரைப்பகுதி :**

**பரிமே:—** ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர் - எல்லாரும் ஒழுக்கத்தானே மேம்பாட்டை எய்துவர், இழுக்கத்தின் எய்தாப் பழி எய்துவர் - அதனின்று இழுக்குதலானே தாம் எய்துதற்கு உரித்தல்லாத பழியை எய்துவர்.

பகைபற்றி அடாப்பழி கூறியவழி அதனையும் இழுக்கம் பற்றி உலகம் அடுக்குமென்று கொள்ளுமாகலின், எய்தாப் பழி எய்துவர் என்றார் - இவை ஐந்துபாட்டானும் ஒழுக்கம் உள்வழிப்படுங் குணமும் இல்வழிப்படுங் குற்றமும் கூறப்பட்டன.

**மணக்:—** ஒழுக்கத்தாலே தமக்கு எய்தாத மேம்பாட்டை எய்துவர்; அஃது இன்மையாலே தமக்கு அடாத பழியை எய்துவர் என்றவாறு. 7

இது அடாப்பழியுண்டாம் என்றது.

**பருதி:—** எ - து ஒழுக்கத்தின் மேன்மையினாலே பெருமை எய்துவர் ஒழுக்கங்கெட்டால் அபகீர்த்தியாம், ஆதலால் ஒழுக்கம் கைவிடுவானல்லன் என்றவாறு.

**காளிங்;—** எ - து தமக்கு அடுத்த ஆசாரத்தினாலே எய்துவர் பெருமையை; மற்று அதனின் இழுக்கத்தினால் எய்துவர் அளவிறந்த பழியினை என்றவாறு. 6

**மேற்கோள்பகுதி :**

"கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை ஒருவர்க்கு—நல்லாய்
இழுக்கத்தின் மிக்க இழிவில்லை இல்லை
ஒழுக்கத்தின் மிக்க உயர்வு,"

—பழமொழி- 64-

**138. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும். (அ)**

**உரைப்பகுதி:**

**பரிமே:—** நல்லொழுக்கம் நன்றிக்கு வித்தாகும் - ஒருவனுக்கு நல்ல ஒழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருமையினும் இன்பம் பயக்கும்; தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும் - தீய ஒழுக்கம் பாவத்திற்குக் காரணமாய் இருமையினுந் துன்பம் பயக்கும்.

நன்றிக்கு வித்தாகும் என்றதனுல் தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாதலும், இடும்பைதரும் என்றதனுல் நல்லொழுக்கம் இன்பந் தருதலும் பெற்ரும். ஒன்றுநின்றே ஏனையதை முடிக்குமாதலின், இதனுல் பின் விளைவு கூறப்பட்டது.

**மணக் :—** *முத்திக்கு விதையாகும் நல்லொழுக்கம்; தீய ஒழுக்கம் என்றும் இடும்பையைத் தரும் என்றவாறு.*

**பரிப்:—** *தீய ஒழுக்கம் நாடோறும் துன்பத்தையே தரும் என்றவாறு. என்றும் — இம்மையின் கண்ணும் என்றவாறு.* (8)

**பருதி :—** *எ - து நல்லொழுக்கம் இம்மை மறுமைப் பாக்கியத்துக்கு விதையாம்; பொல்லா ஒழுக்கம் இம்மை மறுமைக்குத் தரித்திரம் காட்டும் என்றவாறு.* (9)

**காளிங் :—** *எ - து தனக்கு எல்லா நன்மைக்கும் துணைக்காரணமாகும் அது யாதோ எனின், நன்னெறியுடைய சான்ருேரும் நூல்களும் நன்று என்று அவரவர்க்கு அடுப்பதாகச் சொன்னவற்றின் சாரமானது; மற்று அதனுன், அதனின் நீங்கிய ஒழுக்கம் எஞ்ஞான்றும் தான் அநுபவிக்கும் இடும்பையைக் கொடுக்கும் என்றவாறு.* (10)

**உரைவிளக்கப்பகுதி:**

**இராமா :—** *வித்து நிலத்திலே ஊன்றப்பட்டதுபோல, இந்த இரண்டு ஒழுக்கங்களுள் ஒன்று ஒரு சமயத்திலே நிலைத்து நிற்குமானுல், பின்பு தன்பயனுகிய இன்பத்தையானுலும் துன்பத்தையானுலும் தருவது நிச்சயம்; ஆதலால் அதை வித்து என்றது ஏது உருவக அலங்காரம்.*

**139. ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய**
**வழுக்கியும் வாயால் சொலல்.**

**உரைப்பகுதி:**

**பரிமே :—** வழுக்கியும் தீய வாயால் சொலல் - மறந்தும் தீய சொற்களைத் தம்வாயால் சொல்லுந் தொழில்கள், ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லா - ஒழுக்கம் உடையவர்க்கு முடியா.

தீயசொற்களாவன பிறர்க்குத் தீங்கு பயக்கும் பொய் முதலியன வும், வருணத்திற்கு உரியவல்லனவுமாம். அவற்றது பன்மையால் சொல்லுதற்றெழில் பலவாயின. சொலல் சாதியொருமை. சொலல் எனவே அமைந்திருக்க வாயால் என வேண்டாது கூறினர், நல்ல சொற்கள் பயின்றது எனத் தாம் வேண்டியதின் சிறப்பு முடித்தற்கு; இதனை வடநூலார் தாற்பரியம் என்ப.

**மணக் :**—*தீமைபயக்குஞ் சொற்களை மறந்தும் தம்வாயால் சொல் லுதல், ஒழுக்கமுடையார்க்கு இயலாது என்றவாறு.* 9

**பருதி ;**—*எ - து ஒழுக்கமுடையார்க்குக் கனவிலும் தீமையான வார்த்தை பிறவாது என்றவாறு.* 4

**காளிங் :**—*எ-து ஒழுக்கமாகிய சாரத்தினை உடையவர்க்கு இயலாவே, தீயனவாகிய புன்சொற்களை உணர்வு தவறியும் தமது வாயால் சொல்லுதல் என்றவாறு.* 4

**உரைவிளக்கப்பகுதி :—**

**நுண் :**—*வேண்டாகூறி வேண்டியது முடித்தலை வடநூலார் தாற் பரியம் என்பர். "தேறுக தேறும் பொருள்" (509) என்பதன்கண் தாற் பரியத்தால் என்று உரைத்ததும் இது நோக்கி.*

**இராமா :**—*நினைத்துச் சொல்லுதலும் கூடாது என்றதைத் தழுவி நின்றதனுல் வழுக்கியும் என்ற உம்மை இறந்ததுதழுவிய எச்ச உம்மை. ஒழுக்கம் உடையவர் மறந்து சொல்லினும் பிறர்க்கு நன்மை தருஞ் சொற் களையே சொல்லுவர் என்பது கருத்து.*

**ஒப்புமைப்பகுதி :**

"ஆக்கம் அழியினும் அல்லவை கூறுத
தேர்ச்சியில் தேர்வினியதில்" —இனியவை 92

**140. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார். (ம)**

**உரைப்பகுதி .**

**பரிமே :**—உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார் - உலகத்தோடு பொருந்த ஒழுகுதலைக் கல்லாதார், பல கற்றும் அறிவிலாதார் - பல நூல்களையுங் கற்றாராயினும் அறிவிலாதார்.

உலகத்தோடு பொருந்த ஒழுகுதலாவது உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றான் ஒழுகுதல். அறநூல் சொல்லியவற்றுள் இக்காலத்திற்கு ஏலாதனஒழிந்து,சொல்லாதனவற்றுள்ஏற்பனகொண்டுவருதலான் அவையுமடங்க உலகத்தோடொட்ட என்றும், கல்விக்குப் பயன் அறிவும் அறிவிற்குப்பயன் ஒழுக்கமும் ஆகலின், அவ் ஒழுகுதலைக் கல்லாதார் பலகற்றும் அறிவிலாதார் என்றுங் கூறினர். ஒழுகுதலைக் கற்றலாவது அடிப்படுதல். இவை இரண்டுபாட்டானும் சொல்லானும் செயலானும் வரும் ஒழுக்கங்களெல்லாம் ஒருவாற்றால் தொகுத்துக் கூறப்பட்டன.

**மணக்** —*அறிவிலாதார் பலநூல்களைக் கற்றாலும், உயர்ந்தாரோடு பொருந்த ஒழுகுதலை அறியார் என்றவாறு.*

*இஃது ஒழுக்கமாவது உயர்ந்தார் ஒழுகின நெறியில் ஒழுகுதல் என்பதூஉம், அவ்வொழுக்கம் கல்வியினும் வலியுடைத்து என்பதூஉம் கூறிற்று.* (2(

பருதி :—*எ - து பல கல்வியைக்கற்றும் உலகியலைக் கல்லார் அறிவிலார்க்கு நிகராம்; எப்படி என்றால், பலநூல் கற்றும் அதன் பயன் கொள்ளாத படியினாலே என்றவாறு.* 5

**காளிங்** :—*எ - து உயர்ந்தோராகிய அந்தணர் முதலாக எண்ணப் பட்ட பெருமரபினருள் ஒருவன் இவ்வில்லற மரபினனாகலான் மற்றிவன் தானொழிந்த உயர்ந்தோர் கருத்தோடு பொருந்த தன் மன ஒழுக்கத்தை ஒழுகுதல் சிறந்தது; மற்று அதனையும் அறிவிக்கின்ற மறை முதலாகிய நூல்கள் பலவற்றையும் கற்றறிந்தும், தம் ஒழுக்கத்தை அறியாதார் உலகத்தறிவு கேடு என்றவாறு.*

## மேற்கோள்பகுதி :

**நச் :**—*உலகத்தோடு என்பது மூன்றும் வேற்றுமையில் ஒடு என்ற உருபிற்கு மேற்கோள்.* (தொல். சொல். 74)

**மயிலை :**—*மூன்றும் வேற்றுமை ஒடு உருபு வந்ததற்கு மேற்கோள்.* (நன். 296)

## ஒப்புமைப்பகுதி:

"செல்லற்க சேர்ந்தார் புலம்புறச் செல்லாது
நில்லற்க நீத்தார் நெறியொரீஇ—பல்காலும்
நாடுத்தான் கண்ட நுட்பத்தைக் கேளாதே
ஓடுக ஊரோடு மாறு" —பழமொழி 392

# 15. பிறனில்விழையாமை

**பரிமே :—**அ∴தாவது காம மயக்கத்தால் பிறனுடைய இல்லாளை விரும்பாமை. இ∴து, ஒழுக்க முடையார்மாட்டே நிகழ்வது ஆகலின், ஒழுக்கமுடைமையின்பின் வைக்கப்பட்டது.

**மணக்:**—*பிறனில்விழையாமையாவது பிறனுடைய மனையாளது தோள்நலம் விரும்பாமை.*

**பரிப்:**—*அன்புடைமை முதலாக ஒழுக்கமுடைமையீருகச் செய்ய வேண்டுவன சொல்லி, இனித் தவிரவேண்டுவன கூறுகின்ருராதலின், அவற்றுட் காமநெறி படர்தல் எல்லாக் குற்றத்தினும் சிறந்ததாதலின் இது முற்கூறப்பட்டது.*

**பருதி:**—*பிறனில் விழையாமையாவது இல்லற ஒழுக்கத்தில் விசேஷம் பிறர்மனைநயவாமல் இருப்பது என்றவாறு.*

**141. பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து**
**அறம்பொருள் கண்டார்கண் இல். (க)**

**உரைப்பகுதி :**

**பரிமே:**—பிறன் பொருளாள் பெட்டு ஒழுகும் பேதைமை - பிறனுக்குப் பொருளாந் தன்மையையுடையாளைக் காதலித்தொழுகு கின்ற அறியாமை, ஞாலத்து அறம் பொருள் கண்டார்கண் இல் - ஞாலத்தின்கண் அறநூலையும் பொருள்நூலையும் ஆராய்ந்து அறிந்தார் மாட்டு இல்லை.

பிறன்பொருள் பிறனுடைமை. அறம் பொருள் என்பன ஆகு பெயர். செவ்வெண்ணின் தொகை தொக்குநின்றது. இன்பம் ஒன் றையே நோக்கும் இன்ப நூலுடையார் இத்தீயொழுக்கத்தையும் பரகீ யம் என்று கூறுவராகலின், அறம் பொருள் கண்டார்கண் இல் என்ருர்; எனவே, அப்பேதைமையுடையார்மாட்டு அறமும் பொருளும் இல்லை என்பது பெறப்பட்டது.

மணக்—பிறனுடைய பொருளாயிருப்பவளை விரும்பி ஒழுகுகின்ற அறியாமை, உலகத்து அறமும் பொருளும் அறிந்தார்மாட்டு இல்லையாம் என்றவாறு. 2

பரிப்—இஃது அறனுமன்று பொருளு மன்று என்றது. 2

பருதி—எ - து பிறர் மனையாள் அழகுகண்டு விரும்புதல் பூமியில் தன்மநெறியும் பொருள் நெறியும் கண்டாரிடத்து இல்லை; இன்பநெறி கண்டாரிடத்து உண்டாம் என்றவாறு. 2

காளிங்:—எ - து தனக்கு உரியாளன்றியே, தன் கணவனுக்கு உரியாளாகி ஒழுகுகின்ற கற்பினாளைத் தாம் விரும்பி ஒழுகும் அறியாமை யானது இவ்வுலகத்து அறமும் பொருளும் உணர்ந்தார்மாட்டு இல்லை என்றவாறு. 2

## உரைவிளக்கப்பகுதி :

இராமா:—அறமும் பொருளும் என்று உம்மைவைத்து எண்ணுது அறம் பொருள் என்று எண்ணினதற்குச் செவ்வெண் என்று பெயர். அது தொகை பெறுங்கால் அறம் பொருள் இரண்டும் எனப்பெறும். இங்கே பெருது நின்றது செய்யுள் விகாரம்.

## ஒப்புமைப்பகுதி :

"காமங் குறித்துப் பாவத்தில் கலந்த பேதை யாருள்ளும்
வாமங் கனிந்த பிறன்மனையை மதிக்கும் பேதை யோர்பயத்தால்
தாமங் கிழிக்கும் அறம்பொருள்போல் சற்றும் இன்பம் உளர் அதனல்
தோமங் குரிப்பப் பிறன்மனைவி தோள் காமுறுதல் சூழலே."

—விநா. அரசி. 29

குறிப்பு:— இன்பம் ஒன்றுமே விழைவார் அதனையும் எய்தார் என்பது குறிக்கப் பெற்றது. பரகியத்தால் வருவது பழியும் பகையும் பாவமு மாதலின். இது வருங்குறளுக்குத் தோற்றுவாய்.

142. அறன்கடை நின்ருருள் எல்லாம் பிறன்கடை
நின்ருரின் பேதையார் இல். (உ)

## உரைப்பகுதி :

பரிமே:—அறன்கடை நின்ருருள் எல்லாம் - காமம் காரணமாகப் பாவத்தின்கண் நின்ருர் எல்லாருள்ளும், பிறன்கடை நின்ருரின்

பேதையார் இல் - பிறன் இல்லாளைக் காதலித்து• அவன் வாயிற்கண் சென்று நின்றார்போலப் பேதையார் இல்லை.

அறத்தின் நீக்கப்பட்டமையின், அறன்கடை என்றார். அறன் கடை நின்ற பெண்வழிச் செல்வாரும் வரைவின்மகளிரோடும் இழிகுல மகளிரோடுங் கூடி இன்பநுகர்வாரும் போல அறமும் பொருளும் இழத் தலேயன்றிப், பிறன்கடை நின்றார் அச்சத்தால் தாம் கருதிய இன்பமும் இழக்கின்றாராகலின், பேதையாரில் என்றார்; எனவே, இன்பமும் இல்லை என்பது பெறப்பட்டது.

மணக்:—*காமத்தின் கண்ணே நின்றார் எல்லாரினும், பிறனொருவன் கடைத்தலைபற்றி நின்றவர்களைப் போல் அறியாதார் இல்லை என்றவாறு.* 3

பரிப்:—*அறனும் பொருளும் அறியாது இன்பமே கருதிப் பெண் வழிச் சென்றும், விலைமகளோடு கலந்தும், இழிகுலத்தாரைத் தழுவியும் ஒழுகும் எல்லாரினும் இவரைப்போல அறியாதாரில்லை. அவர்கள் இன் பந்தன்னைப் பெறுவர். இவர்கள் அதுதானும் பெறாராதலின் என்றவாறு. பெறாமை என்னை எனின் அச்சமுடையார்க்கு இன்பமின்றாம்; புக்கவிடத் தச்சம் எக்காலு மச்சமாதலின்.*

பருதி:—*எ - து கடையாகிய பாவத்தில் நிற்பவர்க்குள்ளே பிறன் மனையாளை விரும்புபவரைப்போலே பேதையார் இல்லை; தன்மத்தின் கண்ணே நின்றவர்க்குள்ளே பெரியவர் ஆர் எனில், பிறர்மனை நோக் காமல் இருப்பவரே என்றவாறு.* 4

**ஒப்புமைப்பகுதி :**

"அறன் கடைப் படா வாழ்க்கை." —அகம். 155: 1.

"அறங்கடை நின்றருள்ளும் ஆற்றவும் கடையணுகிப் புறன்கடை நின்றான்." —திருவிளை. அங்கம். 9

குறிப்பு:—*அறன் கடை - பாவம் என்பது, பரிமேலழகர், பருதியுரை. காமம் என்பது மணக்குடவர், பரிப்பெருமாள் உரை. அறன்கடை நிற்பதே யறியாமை. அதிற்சிறந்தது இது என்பதாம்.*

**143. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தார்இல்**
**தீமை புரிந்தொழுகு வார்.** (ங)

**உரைப்பகுதி :**

**பரிமே:**—தெளிந்தார் இல் தீமை புரிந்து ஒழுகுவார் - தம்மை ஐயுறாதார் இல்லாள்கண்ணே பாவஞ்செய்தலை விரும்பி ஒழுகுவார்

விளிந்தாரின் வேறு அல்லர் மன்ற - உயிருடையரேனும், இறந்தாரே யாவர்.

அறம் பொருள் இன்பங்களாகிய பயன் உயிர் எய்தாமையின் விளிந்தாரின் வேறல்லர் என்றும், அவர் தீமை புரிந்து ஒழுகுவது இல்லுடையவரது தெளிவுபற்றியாகலின் தெளிந்தாரில் என்றும் கூறினர்.

**மணக்**—*தம்மைத் தெளிந்தார் இல்லின் கண்ணே தீமையைப் பொருந்தி ஒழுகுவார் மெய்யாக, செத்தாரின் வேறல்லர் என்றவாறு.*

**பரிப்:**—*இஃது அறம் பொருள் இன்பம் எய்தாமையின், பிணத்தோடு ஒப்பர் என்றது.* **5**

**பருதி**—*எ - து தம்மை நம்பினர் மனைவியை விரும்புவான் செத்தாரோடு ஒப்பான் என்றவாறு.*

**மேற்கோள்பகுதி :**

**சங்கர:**—*'விளிந்தாரின் வேறல்லர்' என்பதில் வேறு என்பது ஐம்பால் மூவிடத்திற்கு மேற்கோள்.* (நன். **339**.)

### 144. எனைத்துணையர் ஆயினும் என்னும் தினைத்துணையும் தேரான் பிறன்இல் புகல். (ச)

**உரைப்பகுதி :**

**பரிமே:**—எனைத்துணையராயினும் என்னும் - எத்துணைப்பெருமையுடையராயினும் ஒருவர்க்கு யாதாய்முடியும், தினைத்துணையும் தேரான் பிறன் இல் புகல் - காமமயக்கத்தால் தினையளவும் தம்பிழையை ஓராது பிறனுடைய இல்லின்கண் புகுதல்.

இந்திரன்போல எல்லாப்பெருமையும் இழந்து சிறுமையெய்தல் நோக்கி, என்னும் என்றார். "*என் நீர் அறியாதீர்போல இவை கூறின், நின் நீர அல்ல நெடுந்தகாய்" என்புழிப்போல உயர்த்தற்கண் பன்மையொருமை மயங்கிற்று: தேரான் பிறன் என்பதனைத் தம்மை ஐயுறாத பிறன் என்று உரைப்பாரும் உளர்.

---

* கலித். 6: 7.

**மணக்:**—எல்லாவமைதியினையும் உடையராயினும், தினையளவும் தேராது பிறனுடைய இல்லிலே புகுதல் யாதாய்ப் பயக்குமோ? என்றவாறு.

பிறனில் விழைவால்வருங் குற்றங் கூறுவார் முற்பட எல்லாக் குணமும் இழியும் என்று கூறினர். 4

**பரிப்:**—அறம் பொருளின்பம் எய்தாமையின் பிணத்தோடு ஒப்பர் என்றது.

**பருதி:**—எ - து குலத்தாலும் செல்வத்தாலும் பெரியவனுகிலும் ஏதாம்? தன்ம நெறியைத் தினையத்தனையும் விசாரியாமல், பிறர்மனை விரும்புவானுகில்; நரகம்புகுவான் என்றவாறு.

**காளிங்:**—எ - து ஒருவர் வாழ்வு இறந்த நன்மையை யுடையவர் அன்பினராயினும், தினையளவிலும்அற்பமாத்திரமேயாயினும் இது தகாது என்று சிறிதும் ஆராயானுய்க்கொண்டு, பிறனெருவன் இல்லின் கண் சேறல் யாதாம் என்றவாறு. 4

## உரைவிளக்கப்பகுதி :

**நுண்:**—"என் நீர் அறியாதிர்'' போலத் தேரான் என்பது முற்று எச்சமாய் ஒருமை பன்மை மயங்கியது. ஐயுருதபிறன் பக்ஷாந்தரத்து ஒருமைபன்மை மயங்காமை காண்க. தேரானுகிய என இருபெயரொட்டு ஆக்காது, தேராத என நேரே பெயரெச்சமாக்கியது காண்க; ''அகத்து இன்னு வஞ்சரை அஞ்சப்படும்'' (824) என்பதும் அது.

**இராமா:**—நீர் அறியாதிர் எனஉயர்த்திச் சொல்லுதற்பொருட்டுவந்த பன்மைப்பால் நின் என்னும் ஒருமைப்பாலோடு இணங்கிநின்றது. போல எனைத்துணையர் என உயர்த்திச்சொன்ன பன்மைப்பால் தேரான் என்னும் ஒருமைப்பாலோடு பால்வழுவமைதியாக இணங்கி நின்றது.

வேறோர் முடிபு:—ஒருவனுடைய மனைவியைவிரும்பி அவன் மனையினிடத்தில் போய்ச் செய்யும் இழிதொழிலால் தமக்கு வருங்குற்றத்தை காமமயக்கத்தாலே தினையளவானுலும் உணராதவர் எவ்வளவு பெருமை உடையவராயிருந்தாலும் அவர்க்கு அதனுலே என்ன பிரயோசனமாம் ஒன்றுமில்லை என்றவாறு.

எவன் என்னும் வினுவினைச்சொல் என் என விகாரப்பட்டு நின்று, ஆம் என்னும் பயனிலைகொண்டு 'கற்றதனுலாய பயன் என' என்றது போல இன்மை குறித்துநின்றது. கால் கழுவுதல் என்ருற்போல பிறனில் புகல் என்றது இடக்கரடக்கல். உம்மை இரண்டினுள் முன்னையது உயர்வு சிறப்பு; பின்னையது இழிவு சிறப்பு.

---

* இக்கருத்து இக்குறளோடு இயைபின்மையின் இது 'விளிந்தாரின்' என்ற நூறளுக்குரியதாக இருத்தல்வேண்டும்;

**மேற்கோள்பகுதி :**

**நச்:**—'தேரான் பிறனில் புகல்' தேரான் என்பது ஒருமைப் பொருள் கூறிற்றேனும் பன்மைப் பொருள் உணர்த்தலின் மெய்ந்நிலை மயக்க மாயிற்று (தொல். சொல். 449)

**இளம்:**—"அறக்கழிவுடையன பொருட்பயன் படவரின் வழக்கென வழங்கலும் பழித்தன்றென்ப'' என்பதன் உரையில் அறக்கழிவுடையன பழிக்கப்பட்டதற்கு மேற்கோள். (தொல். பொருள். 214.)

**மயிலை:**—செறலில் பால் மயங்கியதற்கு மேற்கோள் காட்டுவர். (நன். 378.)

**சங்கர:**— இவரும் அதற்கே இதனை மேற்கோள் காட்டுவர். (நன். 379.)

**ஒப்புமைப்பகுதி :**

புக்கஇடத் தச்சம் போதரும் போ தச்சம்
துய்க்கும் இடத்தச்சம் தோன்றாமல் காப்பச்சம்
எக்காலும் அச்சம் தருமால் எவன்கொலோ
உட்கான் பிறன்இல் புகல். '' —நாலடி.83

**145. எளிதென இல்இறப்பான் எய்தும்எஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி. (ரு)**

**உரைப்பகுதி :**

**பரிமே :**—எளிது என இல் இறப்பான் - எய்துதலெளிது என்று கருதிப் பின்விளைவு கருதாது பிறனில்லின்கண் இறப்பான், விளியாது எஞ்ஞான்றும் நிற்கும் பழி எய்தும் - மாய்தலின்றி எஞ்ஞான்றும் நிலை நிற்கும் குடிப்பழியினை எய்தும்.

இல்லின்கணிறத்தல் இல்லாள்கண் நெறிகடந்து சேறல்.

**மணக்:**—தனக்கு எளிதென்று நினைத்துப் பிறனுடைய இல்லின் கண்ணே *மிகுமவன் எல்லா நாளும் அழியாது நிற்கும் பழியைப் பெறு வான் என்றவாறு.

**பரிப்:**—இது பழியுண்டாம் என்றது.

* மிகுமவன் - தவறிழைப்பவன்;

பருதி:—பிறர்மனையாள் இன்பம் எளிது என விரும்புவான் மரணந்த மட்டும் பழியும் பாவமும் எய்துவான் என்றவாறு.

## ஒப்புமைப்பகுதி :

''காதலாள் கரிந்து நையக் கடியவே கனைந்துகன்றி
ஏதிலான் தாரம் நம்பி எளிதென இறந்த பாவத்து
ஊதுலை உருக வெந்த ஒள்ளழற் செப்புப் பாவை
ஆ தகா தென்னப் புல்லி அலறுமால் யானை வேந்தே —சீவக, 2769.

''தங்கிருட் போதில் தலைச்சென் றயல்மனை
அங்கு மகிழ்ந்தாள் அவள் இவள் காணெனச்
செங்கன லேயென வெம்பிய செம்பினில்
பொங்கனற் பாவைகள் புல்லப் புணர்ப்பார்.'' —சூளா. துறவு. 93.

''வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து
பிறர் பொருள் தாரம் என்றிவற்றை
நம்பினர் இறந்தால் நமன்தமர் பற்றி
எற்றிவைத்து எரி எழுகின்ற
செம்பின லியன்ற பாவையைப் பாவி
தழுவென மொழிவதற்கு அஞ்சி
நம்பனே வந்து உன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய் '' —பெரியதிரு. 1-6-4.

**146. பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்**
**இகவாவாம் இல்இறப்பான் கண்.** (சா)

## உரைப்பகுதி :

**பரிமே:**—இல் இறப்பான் கண் -பிறனில்லாள் கண் நெறிகடந்து செல்வானிடத்து, பகை பாவம் அச்சம் பழி என நான்கும் இகவாம்- பகையும் பாவமும் அச்சமுங் குடிப்பழியும் என்னும் இந்நான்கு குற்றமும் ஒருகாலும் நீங்காவாம்.

எனவே, இருமையும் இழத்தல் பெற்றும். இவை ஆறுபாட்டானும் பிறனில்விழைவான்கட் குற்றம் கூறப்பட்டது.

**மணக்:**—பகையும் பாவமும் அச்சமும் பழியும் என்னும் நான்கு பொருளும் நீங்காவாம்; பிறனில்லின் கண்ணே மிகுவான் மாட்டு என்றவாறு.



இது பிறனில்விழையாமை வேண்டும் என்றது.

பருதி:—எ - து பகையும் பாவமும் பயமும் அபகீர்த்தியும் மிக உண்டாம்; ஆதலால், இன்பம் என்ன ! என்ன இன்பம் கொண்டான் ! என்று பலராலும் இகழப்படுவன் என்றவாறு.

## மேற்கோள்பகுதி :

**மயிலை**—என என்பது ஏனைய மூன்றிடத்தும் சென்றமைக்கு மேற்கோள். (நன். 428.)

**சங்கர:**—என என்னும் இடைச்சொல் வின்றும் பிரிந்தும் எண் பொருள்தொறும் நேர்ந்தமைக்கு மேற்கோள். (நன். 429.)

**பெருந்:**—நான்கும் இகவாவாம் எனக் கருமமும் கருத்தாவும் தானேயாய் நிற்றலால் கருமக் கருத்தாவாயிற்று. (வீரசோ. 40)

## ஒப்புமைப்பகுதி :

"பின்னி நின்ற பெருவினை மேல்வரும்
என்ன தாயினும் ஏதில்பெண் நீக்குமின்." —வளையாபதி.

—"பிறன் தாரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவம்என்று
அச்சத்தோ (டு) இந்நாற் பொருள்" —நாலடி 82

"காணில் குடிப்பழியாம் கையுறின் கால்குறையும்
மாணின்மை செய்யுங்கால் அச்சமாம்—நீணிரயத்
துன்பம் பயக்குமால் துச்சாரி நீ கண்ட
இன்பம் எனைக்கெனைத்தால் கூறு." —நாலடி. 84.

"செய்தாயேனும் தீவினையோடும் பழியல்லால்
எய்தாது எய்தாது......" —கம்ப. ஆரணிய - மாரீசன். 182.

"பகையே பழியே பாவமே பயமே நான்கும் தினம்கொடுக்கும்
தகையார் பெருமை முழுதழிக்கும்......" —விநா. அர. 30.

## 147. அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள் பெண்மை நயவா தவன். (எ)

## உரைப்பகுதி:

**பரிமே:**—அறன் இயலான் இல்வாழ்வான் என்பான் - அறனுகிய இயல்போடுகூடி இல்வாழ்வான் என்று சொல்லப்படுவான், பிறன் இயலாள் பெண்மை நயவாதவன்-பிறனுக்கு உரிமை பூண்டு அவனுடைய இயல்பின் கண்ணே நிற்பாளது பெண்தன்மையை விரும்பாதவன்.

ஆன் உருபு ஈண்டு உடனிகழ்ச்சிக்கண் வந்தது. இல்லறஞ் செய்வான் எனப்படுவான் அவனே என்பதாம்.

**மணக் :**— *அறநெறியானே இல்வாழ்வான் என்று சொல்லப்படுவான், பிறன்வழியானவளது பெண்மையை விரும்பாதவன் என்றவாறு.*

*இது பிறனில்விழையாமை வேண்டும் என்றது.*

**பருதி :**— *எ - து அறத்தின்வழியிலே இல்வாழ்பவர் ஆர்? எனில் பிறர்மனை விரும்பாதவர் என்றவாறு.*

**காளிங்:**— *எ - து மறைநூல் சொல்லுகின்ற இல்லற மரபினுனே இல்வாழ்வான் என்று ஏத்தப்படுவான் யாவனே எனின் பிறர் மனையின் மரபின்கண் தாழ்ந்து பெண்மைப் பருவத்தைச் சிறிதும் விரும்பாதவன் என்றவாறு.*

## மேற்கோள்பகுதி :

**நச் :**— *பெண்மையாவது, கட்புலனாயதோர் அமைதித் தன்மை. அது 'பிறனியலாள் பெண்மை நயவாதவன்' என்பதனானும் உணர்க. இப் பெண்மை, அமைதித் தன்மையையேயன்றிப் பெண்பாலாகிய தன்மையும் உணர்த்தும் என்பது கருதி ஆசிரியர் 'பெண்மைசுட்டிய எல்லாப்பெயரும்' (தொல். சொல். 182) என, விரவுப் பெயர்க்கண் உடம்பொடு புணர்த்து ஓதினர். (தொல். சொல். 57)*

**பெருங் :**— *காஞ்சியின் வகையில் முதுமைக்கு மேற்கோள். முதுமை யாவது தவத்தின்கண் நின்றார்க்கு எடுத்துக்காட்டிய உவமை. (வீரசோ. 102)*

**சுவாமி :**— *நயவாதான் என்பது நயவாதவன் என ஈற்றயல் திரிதல் காண்க. (இ. கொ. 83)*

**148. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு** (அ)

## உரைப்பகுதி:

**பரிமே;**— பிறன் மனை நோக்காத பேர் ஆண்மை - பிறன்மனை யாளை உட்கொள்ளாத பெரிய ஆண்தகைமை, சான்றோர்க்கு அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு - சால்புடையார்க்கு அறனும் நிரம்பிய ஒழுக்க மும் ஆம்.

புறப்பகைகளை அடக்கும் ஆண்மையுடையார்க்கும் உட்பகையாகிய காமம் அடக்குதற்கு அருமையின், அதனையடக்கிய ஆண்மையைப் பேராண்மை என்றார். ஒன்றோ என்பது எண்ணிடைச் சொல். செய்தற்கு அரிய அறனும் ஒழுக்கமும் இதனைச்செய்யாமையே பயக்கும் என்பதாம்.

*மணக்:*—*பிறனது மனையாளைப் பாராத பெரிய ஆண்மைதானே சான்றோர்க்கு அறனும் அமைந்த ஒழுக்கமும் ஆம் என்றவாறு.*

*இஃது இதனை விரும்பாமைதானே அறனும் ஒழுக்கமும் என்றது.*

*பருதி:*—*எ - து *சமர்க்களத்திலே வெட்டி மீண்டுவருகிறது ஆண்மையல்ல; பிறர்மனையை நோக்காமலிருப்பதே ஆண்மை. ஆதலால் அறிவுடையோர்க்கு அறம் மட்டுமா? நிறைந்த ஒழுக்கமும் அதுவே என்றவாறு.*

*காளிங்:*—*எ - து பிறனொருவன் மனையாளைத் தமதுள்ளத்தால் கருதாமையாகின்ற பெரிய ஆண்மைத் திண்மையானது சால்புடையாளர்க்கு அறனுதல் சாலும்; மற்று அஃது ஒன்றுமேயன்றி அமைவுடைய ஆசாரமும் ஆம் என்றவாறு.*

## மேற்கோள்பகுதி:

*நச:*—*கட்டமை யொழுக்கத்துக் கண்ணுமையானும் என்றதில். பிறனில் விழையாமைக்கு மேற்கோள். (தொல். பொருள். 76.)*

*இளம்:*—*கடிமனைநீத்த பாலினும் என்பதற்கு மேற்கோள். (தொல் பொருள். 75.)*

## ஒப்புமைப்பகுதி:

"பெரியவாள் தடங்கண் செவ்வாய்ப் பிறர்மனை பிழைக்கும் மாந்தர்
மரிஇயவாய்ப் புறஞ்சொல் வார்முள் மத்திகைப் புடையும் அன்றி
ஒருவர்வாய் உமிழப்பட்ட தம்பலம் ஒருவர் வாய்க்கொண்(டு)
அரியவை செய்ப வையத்(து) ஆண்பிறந் தார்கள் அன்றே." —சீவக. 2821.

"இச்சைத் தன்மையி னில்பிறர் இல்லினை
நச்சி நாளும் நகையுற நாணிலன்
பச்சை மேனி புலர்ந்து பழிபடூஉம்
கொச்சை யாண்மையுஞ் சீர்மையிற் கூடுமோ. —கம்ப.

---

*"பிறர் மனையை விசாரியாதவனே உத்தம புருஷன் என்றும், தைரியவான் என்றும் பிறர்க்குச் சொல்லும்; பார்த்தால் தனக்கும் ஒழுக்கம் அதுவே" என்பது பழைய உரை.

149. நலக்குரியார் யார்எனின் நாமநீர் வைப்பில்
பிறற்குரியாள் தோள்தோயா தார். (கூ)

## உரைப்பகுதி :

**பரிமே :—** நாம நீர் வைப்பில் - அச்சந் தருங் கடலால் சூழப்பட்ட உலகத்து, நலக்கு உரியார் யார் எனின் - எல்லா நன்மைகளும் எய்துதற்கு உரியார் யாவர் எனின், பிறற்கு உரியாள் தோள் தோயாதார் - பிறனொருவனுக்கு உரிமையாகியாளுடைய தோளைச் சேராதார்.

அகலம், ஆழம், பொருளுடைமை முதலியவற்றான் அளவிடப் படாமையின், நாமநீர் என்றார். உரிச்சொல் ஈறு திரிந்து நின்றது. நலத்திற்கு என்பது நலக்கு எனக் குறைந்து நின்றது. இருமையினும் நன்மை எய்துவர் என்பதாம்.

**மணக் :—***நலத்துக்கு உரியார் யாரெனின், நினைத்ததைத் தருகின்ற நீர்சூழ்ந்த உலகத்தில் பிறனுக்கு உரியவளது தோளைத் தீண்டாதார் என்றவாறு.* 9

**பரிப்:—***நலக்குரியார் - விரும்புதற்குரியார். இஃது எல்லாரானும் விரும்பப் படுவர் என்றவாறு.*

**பருதி :—***எ - து உலகத்தில் நல்லவர் என்னும் பேர்பெறுவார் ஆர் எனில், பிறற்குரியாள்தோள் விரும்பாதவர் என்றவாறு.*

## உரைவிளக்கப்பகுதி

**நுண் :—***நாம நீர் - அச்சந்தருங்கடல். தொல்காப்பியனார் 'பேம் நாம் உரும்' (தொல். சொல். 312.) என்று ஒற்றீறாய் ஓதினமையால் நாம எனத் திரிந்தது என்றார் என்க. நாமவேல் என்பதும் அது. நலத்திற்கு என்பது நலக்கு என அத்தும் இன்னும் சாரியை குறைந்தது. 'நிலக்குப் பொறை' (570) ''வையக்கணி'' (701) ''மனக்கினிய'' (நான்மணிக்) என்பனவும் அன்ன.*

**இராமா :—***நாம் என்பது அச்சமாகிய பொருளைத் தருவதோர் உரிச் சொல். நாம என அகரச்சாரியை பெற்று நின்றது. நலத்துக்கு என்பது நலக்கு என அத்துச்சாரியை குறைந்து நின்றது.*

**150. அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்**
**பெண்மை நயவாமை * நன்று. (ம)**

**உரைப்பகுதி :**

**பரிமே :**—அறன் வரையான் அல்ல செயினும் - ஒருவன் அறத்தைத் தனக்குரித்தாகச் செய்யாது பாவங்களைச் செய்யுமாயினும், பிறன் வரையாள் பெண்மை நயவாமை நன்று - அவனுக்குப் பிறனெல்லைக் கண் நிற்பாளது பெண்மையை விரும்பாமை உண்டாயின் அது நன்று.

இக்குணமே மேற்பட்டுத் தோன்றும் என்பதாம். இவை நான்கு பாட்டானும் பிறனில் விழையாதான்கண் குணங் கூறப்பட்டது.

**மணக் :**— *அறத்தை வரையாதே அறமல்லாதன செய்யினும், பிறனிடத்து ஆளானவளதுபெண்மையை விரும்பாமை நன்று என்றவாறு.* 10

**பரிப்:**—*இ∴து ஓரறமுஞ்செய்திலனாயினும் நன்மை பயக்கும் என்றது.*

**பரிதி :**— *எ - து தன்மத்தை நினையான் அதன்மமே செய்வானாகிலும் தோஷபரிகாரத்தால் பிழைப்பன் ; பிறர்மனை விரும்பாமல் இருப்பானாகில் என்றவாறு.* 1

**காளிங் :**— *எ - து ஒருவன் தனக்கு அறத்தைத் துணையாக அணைத்துக்கொள்ள அறியானுமாய் அறம் அல்லனவற்றைச் செய்து ஒழுகினும், பிறன் வரம்பினளது பெண்மையைத் தான் விரும்பாமை என்னும் பெருங் குணமுடையனாயின் அதுவே சால நன்று என்றவாறு,* 5

**உரைவிளக்கப்பகுதி :**

**இராமா :**— *நன்று என்பது விகுதிப்பொருள் விகுதிபெற்று நின்ற பகுபதம் எனக்கொள்க. பிறன்வரையாள் பெண்மை நயவாதவன் அல்ல செய்யான், செயினும் அது பொறுத்தல்வேண்டும் என்பார் இதனைப் பொறையுடைமையைச் சாரவைத்தார்*

**மேற்கோள்பகுதி :**

**காரிரத்ன :**— *பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மா ற. 251.)*

---

* "நன்கு" என்பது கவிராஜபண்டிதர் பாடம்.

# 16. பொறையுடைமை.

**பரிமே :—** அஃதாவது காரணம் பற்றியாதல் மடமையானுதல் ஒருவன் தமக்கு மிகை செய்தவழித் தாமும் அதனை அவன்கட்செய் யாது பொறுத்தலையுடையராதல். நெறியின் நீங்கிய செய்தாரையும் பொறுக்கவேண்டும் என்றற்கு, இது பிறனில் விழையாமையின் பின் வைக்கப் பட்டது.

**மணக் :**—*பொறையுடைமையாவது தமக்குத் துன்பம் செய்தாரைத் தாமும் துன்பஞ் செய்யாது, அவர் மாட்டுச் சென்ற வெகுளியை மீட்டல்.*

**பரிப் :**—*மேற்காமத்தான் வருந்தீங்கு கூறினர். ஈண்டுவெகுளியான் வருங் குற்றங் கூறுகின்றார்.*

**பருதி:**—*பொறையுடைமையாவது பிறர் செய்த குற்றம் பொறுத்தல்; மனத்தொழிலால் மெய்யின்பத்திலும் பெரியதாகையால் இது சொல்லப் பட்டது என்றவாறு.*

**151. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.** (க)

**உரைப்பகுதி :—**

**பரிமே :—** அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல - தன்னையகழ் வாரை வீழாமல்தாங்கும் நிலம்போல, தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை - தம்மை அவமதிப்பாரைப் பொறுத்தல் தலையாய அறம்.

*இகழ்தல் மிகையாயின செய்தலும், சொல்லுதலும்.*

**மணக் :—** *தன்னை அகழ்வாரைத் தரிக்கின்ற நிலம்போலத் தம்மை இகழுமவர்களைப் பொறுத்தல் தலைமையாம் என்றவாறு.* 4

*இது, பொறுத்தானென்று இகழ்வாரில்லை, அதனைத் *தலையாகக் கொள்வார் உலகத்தார் என்றது.* 4

**பருதி —** *எ - து பூமி வெட்டுகிற பேரையுஞ் சுமக்கும், அதுபோலத் தம்மை இகழ்வாரைத் தாங்குதல் தலைமையானகாரியம் என்றவாறு* 1

* தலைமையாக - பிம்.

காளிங் :— எ - து தமது உருவினைப் $ புண்பட அகழ்வாரைத் தாங்கிப் பாதுகாக்கின்ற நிலத்தைப் போல, தமது உள்ளம் புண்படத் தம்மை வெஞ்சொற் கூறி அவமதிப்பாரையும் தாம் அதை நெஞ்சில் கருதாது பொறுத்து ஒழுகுதல், தமக்குத் தலைமைப் பாடாவது என்றவாறு. 1

## உரைவிளக்கப்பகுதி :

இராமா :— அகழ்வாரைத்தாங்கும் நிலம்போல என எடுத்துக் காட்டிய உவமையினாலே தம்மைக் கொலைசெய்வதை ஒத்த குற்றம் செய்வாரையும் பொறுப்பதும், பொறுத்திருந்தே அவரைப் பாதுகாப்பதும் சிறந்த தருமம் என்பது பெறப்பட்டது.

## மேற்கோள்பகுதி :

நச் :— பிழைத்தோர்த் தாங்குங் காவலானும் - தம்மைப் பிழைத்தோரைப் பொறுக்கும் பாதுகாப்பானும். காவலாவது. இம்மையும் மறுமையும் அவர்க்கு ஏதம் வராமல் காத்தலாதலால் இஃது ஏனையோரின் வெற்றியாயிற்று என்பதற்கு உதாரணம் (தொல். பொருள். 76)

இளம் :— பிழைத்தோர்த் தாங்கும் காவற்கு மேற்கோள். (தொல். பொருள் 75)

காரிரத்ன :— பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற 251.)

## ஒப்புமைப்பகுதி :

" சிறந்த நோன்மை நாடின் இருநிலம் " பரிபா. 2 ; 55

" பொறை எனப்படுவது போற்றுரைப் பொறுத்தல் " —கலி. 133 : 14

" நிலத்தோ ரன்ன நலத்தகு பெரும்பொறை " —பெருங். 42: 179

" கறுத்தாற்றித் தம்மைக் கடிய செய்தாரைப்
பொறுத்தாற்றிச் சேறல் புகழால் " —பழ. 19

குறிப்பு :— தாங்குதல் - சுமத்தல் மட்டுமன்று. பசியும் நோயும் எய்தாவாறு, உணவும், மருந்தும் கொடுத்துக் காத்தல். ஆதலான் இன்னா செய்தாரைப் பொறுத்தல் மட்டுமன்றி அவருக்கு இனியவும் செய்ய வேண்டும் என்பதாம்.

$ பண்பட - பி. ம்.

152. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று. (உ)

உரைப்பகுதி :

பரிமே— என்றும் இறப்பினைப் பொறுத்தல் - பொறை நன்றுகலால், தாம் ஒறுத்தற்குஇயன்றகாலத்தும் பிறர்செய்த மிகையைப் பொறுக்க; அதனை மறத்தல் அதனினும் நன்று-அதனை உட்கொள்ளாது அப்பொழுதே மறத்தல்பெறின் அப்பொறையினும் நன்று.

மிகை என்றது மேற்சொல்லிய இரண்டனையும். பொறுக்குங் காலம் உட்கொள்ளப்படுதலின், மறத்தலை அதனினும் நன்று என்றார்.

மணக் :— பிறர் செய்த மிகையினை என்றும் பொறுத்தல் நன்று ; அதனை மறத்தல் அப்பொறையினும் நன்று என்றவாறு. 1

பரிப் : மறத்தல் - வெகுளாமை. அது மிகுதி யுடைத்தாதலில் அதனைத்துறவறத்துக் கூறுவர்.

பருதி :— எ - து பிறர் செய்த குற்றம் பொறுத்தலிற் புகழில்லை ; அதனினும், பிறர் செய்த குற்றம் மறத்தலைப்போலே அறம் இல்லை என்றவாறு. 3

காளிங் :— எ - து தம்மாட்டுக் சிலர் மரபினைக் கடந்த நெறிய தாகிய கேட்டைச்செய்யினும், வெஞ்சொற்களைச் சொல்லினும் தாம் அதனை எஞ்ஞான்றும் பொறுத்தல் சால நன்று : மற்று இதனை யாம் பொறுத்தேம் என்று கருதாது அப்பொறுத்தமைதன்னையும் மறத்தல் சால நன்மையுடைத்து என்றவாறு.

இறத்தல் என்றது கடத்தல். 9

குறிப்பு :—அதனை யென்பதற்கு 'அக்குற்றத்தை' எனப்பொருள் காண்பர் பரிமேலழகர், மணக்குடவர் பருதி முதலியோர். அங்ஙனம் பொறுத்தோம் என்பதனையும் என்பர் காளிங்கர், இவ்வுரைகளுள், 'பொறுத்தோம் என்ற எண்ணமும், முன்னர் அவன் செய்த பிழையை நினைவூட்டிப் பின் தன் தகுதியை நினைவூட்டிப்பின் பொறுத்தோம் என்ற நினைவை யுண்டாக்குதலானும் பெருமிதம் பயக்குமாதலானும். அந்தப் பொறையையும் மறக்க, என்ற காளிங்கர் கருத்தே சிறந்தது.

153. இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. (ந)

உரைப்பகுதி:

பரிமே— இன்மையுள் இன்மை விருந்து ஒரால் - ஒருவனுக்கு வறுமையுள்வைத்து வறுமையாவது விருந்தினரை ஏற்றுக்கொள்ளாது நீக்குதல்; வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை - அதுபோல வன்மையுள்வைத்து வன்மையாவது அறிவின்மையான் மிகைசெய்தா ரைப்பொறுத்தல்.

இஃது எடுத்துக்காட்டுவமை, அறனல்லாத விருந்தொரால் பொருளுடைமை ஆகாதவாறுபோல, மடவார்ப்பொறையும் மென்மை யாகாதே வன்மையாம் என்பது கருத்து.

மணக் :— வலியின்மையுள் வைத்து வலியின்மையாவது புதுமையை நீக்காமை; வலியுடைமையுள் வைத்து வலியுடைமையாவது அறியாதா ரைப் பொறுத்தல் என்றவாறு. 6

புதுமை யென்றது கேட்டறியாதது. நீக்காமை - பொறுமை.

பரிப் :—பொறுத்தானென்று எளியனுகான். அதனுனே வலியனுவன் என்றது.

பருதி :— எ - து தரித்திரத்திலே தரித்திரம் வந்த விருந்தை உபசரிக்க வகையில்லாமை; அதுபோல், அன்புக்குள் அன்பு அறிவில்லா தார் செய்த குற்றம் பொறுத்தல் என்றவாறு.

வன்மையாவது மலையின் உச்சியின்மேலே ஒரு கல்லை ஏற்றல்; கடுகிலே கடலை அடக்குதல் ஆகியன. 4

காளிங் :— எ - து உலகத்தில் வாழ்வார்க்கு இனிமைகளில் வைத்து மிகவும் இனிமையாவது விருந்தினரை விடாது பேணி வழிபடுதல்; மற்று இதுபோல் ஒருவர் தாம்செய்யவல்ல செய்திவலிமை களில் வைத்துக்கொண்டு மிகவும் வலியாவது யாதோ எனில், அறிவுக் கேடாகிய அவமதிப்பைப்பொறுக்கும் பொறையுடைமையே என்றவாறு.

அல்லதூஉம் இல்வாழ்வார்க்கு வறுமையுள் வைத்துக்கொண்டு மிகவும் வறுமையாவது விருந்து வந்தெய்தாமையும், எய்திய விருந்தினர் நுகரப்பெறாமையும், இவை யிரண்டும் நீங்குதலும் இதுவே மிக வறுமை என்றுமாம். ஒரால் என்பது நீங்குதலல்லாமை என்றுமாம். 4

**ஒப்புமைப்பகுதி :**

" அறிவெனப்படுவது பேதையார் சொல் நோன்றல் " —கலி. 133: 10

" தெரியா தவர்தம் திறனில்சொல் கேட்டால்
பரியாதார் போல இருக்க " —பழ. 135

" ஆய்ந்த அறிவினர் அல்லாதார் புல்லுரைக்குக்
காய்ந்தெதிர் சொல்லுபவோ கற்றறிந்தார் " —பழ. 268

" எள்ளிப் பிறருரைக்கும் இன்னுச்சொல் தன்னெஞ்சில்
கொள்ளி வைத்தாற்போல் கொடிதெனினும்—மெள்ள
அறிவென்னும் நீரால் அவித்தொழுக லாற்றின்
பிறிதொன்றும் வேண்டா தவம் " —அறிநெறி. 101

குறிப்பு :—*காளிங்கர் உரைக்குறிப்புள் 'நீங்குதல்லாமை' என்பதற்குப் பொருளியைபின்மை ஆயத்தக்கது.*

**154. நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை போற்றி ஒழுகப் படும். (௪)**

**உரைப்பகுதி :**

**பரிமே—** நிறை உடைமை நீங்காமை வேண்டின் - ஒருவன் சால்புடைமை தன்கண் நின்று நீங்காமை வேண்டுவனாயின், பொறை யுடைமை போற்றி ஒழுகப்படும்-அவனால் பொறையுடைமை தன்கண் அழியாமல்காத்து ஒழுகப்படும்.

பொறையுடையாற்கு அல்லது சால்பில்லை என்பதாயிற்று. இவை நான்குபாட்டானும் பொறையுடைமையது சிறப்புக் கூறப்பட்டது.

**மணக் :—** *தனக்கு நிறையுடைமை நீங்காது ஒழியவேண்டுவனாயின் பொறையுடைமையைப் பாதுகாத்தொழுகவேண்டும் என்றவாறு.* 3

**பரிப் :—***நிறையென்பது காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கம். இதுவேண்டுவார் பொறுக்க என்கின்றது.* 3

பருதி :— *எ - து எல்லார் குணத்திற்கும் அது அதுவாய் நிற்கும் நிறையுடைமை * தன்னை விட்டுப்போகாமல் வேண்டுமாகில் பொறை உடைமை வேண்டும் என்றவாறு.* 5

காளிங் :— *எ - து அடக்கமுடைமையாகிய மிகையுடைமை தமது உள்ளத்து நீங்காது நிலைநிற்றலை விரும்பினர் உளராயின் பொறை யுடைமையை எஞ்ஞான்றும் குறிக்கொண்டு ஒழுக அடுக்கும் எ-று.* 6

* 'தன்மனைவிட்டுப் போகாமல்' என்பது பழையவுரை.

**மேற்கோள்பகுதி :**

**மயிலை** :— உடம்போடு கூடிய உயிர்க்குணம் நிறை என்பதற்கு மேற்கோள் (நன். 451.)

## 155. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
## பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து. (ரு)

**உரைப்பகுதி :**

**பரிமே**:— ஒறுத்தாரை ஒன்றாக வையார்-பிறன் தமக்குத் தீங்கு செய்தவழிப் பொறாது அவனை ஒறுத்தாரை அறிவுடையார் ஒருபொருளாக மனத்துக் கொள்ளார், பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து வைப்பர்-அதனைப்பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்துகொள்வர்.

ஒறுத்தவர் தாமும் அத்தீங்கு செய்தவனோடு ஒத்தலின், ஒன்றாக வையார் என்றார், பொதிந்துவைத்தல்-சால்புடைமைபற்றி இடைவிடாது நினைத்தல்.

**மணக்** :—தமக்குத் துன்பஞ் செய்தாரை மாறாக ஒறுத்தாரை ஒரு பொருளாக மதித்து வையார் ; பொறுத்தாரைப் பொன்னைப் பொதிந்து வைத்தாற்போலப் போற்றுவார் உலகத்தார் என்றவாறு. 7

**பரிப்** :—ஒறுப்பதினும் பொறுப்பதனை நன்கு மதிப்பர் என்றது.

**பருதி** :— எ - து பொறுமையில்லாதார் ஒன்றுக்கும் அல்லார் ! பொறுமையுடையாரைப் பொன்போலே யாருந் தலைமேற்கொண்டிருப்பார் என்றவாறு. 8

**காளிங்** :— எ - து இதனால் தமக்குவருந் தீமையைக் கருதாது, இவர் தமக்கு எளியவரென்று கருதிக்கொண்டு ஒறுத்தாரை இம்மை மறுமை இரண்டுக்கும் உரியதோர் ஆக்கமுடையராக வைத்து எண்ணார் சான்றோர். அதனால், சிலர் தம்மை ஒறுக்கஒன்றாக உட்கொள்ளாது உலகத்தார் பொன்னைக் குறிக்கொண்டு பேணிக்கொள்ளுமாப்போல் மற்று இவரைக் குறிக்கொண்டு பேணிக்கொள்வர் சான்றோர் என்றவாறு. 5

**உரைவிளக்கப்பகுதி :—**

**இராமா** :— ஏகாரம் தெளிவுப்பொருள்பட நின்றது. பொன்னை முடிந்துவைத்துப் பாதுகாப்பதுபோல அந்தப் பொறையுடைமையைப் பற்றி அறிவுடையோர் அவரை இடைவிடாமல் நினைப்பர் என்பதாம்.

**மேற்கோள்பகுதி :—**

**சுவாமி** :— வினைமுற்றுப்பெயர் இரண்டாம் வேற்றுமையில் வந்ததற்கு ' ஒறுத்தாரை ' என்பது மேற்கோள். (இ. கொ. 83.)

156. ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். (௬)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் - தமக்குத் தீங்கு செய்தவனை ஒறுத்தார்க்கு உண்டாவது அவ்வொருநாளை இன்பமே ; பொறுத்தார்க்குப் பொன்றுந்துணையும் புகழ் - அதனைப் பொறுத்தார்க்கு உலகம் அழியுமளவும் புகழுண்டாம்

ஒருநாளையின்பம் - அந்நாளொன்றினும் 'கருதியது முடித்தேம்' எனத் தருக்கியிருக்கும் பொய்யின்பம். ஆதாரமாகிய உலகம் பொன்றப் புகழும் பொன்றுமாகலின், ஏற்புடைய உலகு என்னுஞ்சொல் வருவித்து உரைக்கப்பட்டது.

**மணக் :—** ஒறுத்தவர்க்கு அற்றைநாளை இன்பமே உண்டாகும்; பொறுத்தவர்க்குத் தாம் சாமளவும் புகழுண்டாம் என்றவாறு. 8

இது புகழுண்டாம் என்றது.

**பருதி :—** எ - து கோபிக்குந் தன்னை வைதாரை வைதோம் என்று ஒருநாளையில் இன்பம் உண்டு ; பொறுத்தார்க்குப் பூமி பொன்றுமளவும் புகழாம் என்றவாறு. 9

**காளிங் :—** எ - து இவர் நமக்கு எளியர் என்று கருதிக்கொண்டு ஒறுத்தவர்க்கு மற்று அப்பொழுதை இன்பமே உளது ; மற்றுஅங்ஙனம் ஒறுத்தவர் ஒறுப்பினைப் பொறுத்தவர்க்கு இவ்உலகமுள்ள அளவும் புகழாம் என்றவாறு.

துணை என்பது இவ்வுலகத்துள் சூழ்ந்திருக்கும் கடல் வெள்ளம் வந்து கூடிப்பெருகுமளவும் புகழானது நசியாமல் நிற்கும் என்னுமாம்.

இவை, இங்ஙனம் தம்மைநோக்கிச் சினமும் செற்றமும் தீங்குரை முதலிய அனைத்தும் பொறுக்கின்ற தூயநெஞ்சினர்பால் பிறராக்கம் பொறுத்து மற்று அதன் கண்ணே தமது நெஞ்சத்து அழுக்கு நெறியுடையராதல் எவ்வாற்றானும் கூடாது ஆகலானும், பிறரொருவர்க்கு இயைந்து இன்புறுத்தும் இயல்பில்லாமையாலும் மற்று இதன்பின்னர் அதனை* அறிவிக்கின்றது. 10

* அதனை என்றது அழுக்காறுமையை (அதி. 17)). பத்தாவது குறளாகக் கொண்டமையின் இவ்வாறு தோற்றுவாய்கூறப்பட்டது.

**ஒப்புமைப்பகுதி :—**

'' வெறுப்ப ஒருவன் காரணத்தால் மிக்கமடத்தால் புரிபிழையைப்
பொறுப்பின் அதுவே பேரறமாம் புகழும் நிறையும் மிகவளரும்
கறுப்பொன் றறியா அறிவினர்கள் கருத்தின் மகிழ்ச்சி உளவாகும்
ஒறுப்பின் வருவது ஒன்றில்லை அதனால் பொறுமை உயிர்த்துணையாம்''
—விநா. அரசி. 31.

'' கறுத்தாற்றித் தம்மைக் கடிய செய்தாரைப்
பொறுத்தாற்றிச் சேறல் புகழால் – ஒறுத்தாற்றின்
வானேங் குயர்வரை வெற்ப பயமின்றே
தானேன் றிடவருஞ் சால்பு, —பழ: 19.

**157. திறன்அல்ல தன்பிறர் செய்யினும், நோநொந்$**
**தறன்அல்ல செய்யாமை நன்று. (எ)**

**உரைப்பகுதி:**

**பரிமே:—** திறன் அல்ல தன் பிறர் செய்யினும் - செய்யத்தகாத கொடியவற்றைத் தன்கண் பிறர் செய்தாராயினும், நோ நொந்து அறன் அல்ல செய்யாமை நன்று - அவர்க்கு அதனால் வருந் துன்பத் திற்கு நொந்து தான் அறனல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல் ஒருவனுக்கு நன்று.

உம்மை சிறப்பும்மை. துன்பத்திற்கு நோதலாவது "*உம்மை எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல்'' என்று பரிதல்.

*மணக்:— தகுதியல்லாதவற்றைத் தனக்குப் பிறர் செய்தாராயினும் அவற்கீறத் தானுஞ் செய்தால் அவர்க்கு உளதாம் நோவுக்கு நொந்து அறமல்லாதவற்றைச் செய்யாமை நன்று என்றவாறு.* 2

*பருதி:— எ - து தமக்குப் புகழல்லாத காரியத்தைத் தனக்கு உண் டானவன் செய்தாலும் செய்தவனைக் கோபித்துத் தன்மம் அல்லாத காரி யம் செய்யான் நல்லன் என்றவாறு.* 2

*காளிங்:— எ - து பொறையின் திறம் இதுவாகலால், செயப்படுந் திறப்பாடல்லனவற்றைத் தன்னைக் குறித்துப் பிறர் செய்தாராகிலும் தான் அதற்கு எதிராக நெஞ்சம்நொந்து அறமல்லனவற்றைச் செய்யாமை சால நன்று என்றவாறு.* 2

* நாலடி. 58.

$ நோய் நொந்து 'பரிப்' பாடம்

**158. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.** (அ)

**உரைப்பகுதி:**

**பரிமே:—** மிகுதியான் மிக்கவை செய்தாரை - மனச்செருக்கால் தங்கண் தீயவற்றைச் செய்தாரை, தாம் தம் தகுதியான் வென்றுவிடல்- தாம் தம்முடைய பொறையான் வென்று விடுக.

தாமும் அவர்கண் தீயவற்றைச் செய்து தோலாது பொறையான் அவரின் மேம்பட்டு வெல்க என்பதாம். இவை நான்குபாட்டானும் பிறர் செய்தன பொறுத்தல் சொல்லப்பட்டது.

**மணக்:—** *தமது செல்வ மிகுதியாலே மிகையானவற்றைச் செய்தவர்களைத் தாங்கள் தமது பொறையினுலே வென்று விடுக என்றவாறு.* 5

*இது, பொறுத்தானென்பது தோல்வியாகாது; அதுதானே வெற்றியாம் என்றது.*

**பருதி:—** *எ - து ஆங்காரத்தினுலே மிகைசெய்வார் பிழையைத் தமது பொறுமையினுலே வெல்கை அறிவுடைமை என்றவாறு.* 10

**காளிங்:—** *எ - து செய்யும் திறம் ஒழிய, நெறிக்கேட்டாலே மிகையான தீங்குகளைச் செய்தாரை, வாது செய்வார்போல, தாமும் எதிர் மலைந்து செய்யாது தமக்குத் தகுதியாகிய பொறையினுல் வென்று விடுக என்றவாறு.* 3

**உரைவிளக்கப்பகுதி :—**

**இராமா :—** *தகுதி–நடுவு நிலைமை, பொறுமை, அறிவு, நற்குணம். மிகுதி -அநியாயம், அதிகம், உயர்வு, கூட்டம், பூரிப்பு, துர்க்குணம்.*

**மேற்கோள்பகுதி:**

**நச் :—** *'சுட்டமை யொழுக்கத்துக் கண்ணுமையானும்' என்றதில் பொறைக்கு மேற்கொள். (தொல். பொருள். 76)*

**இளம் :—** *பொறையுடைமையாவது பிறர் தமக்கு மிகுதியாகச் செய்த வழி வெகுளாமை என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 75)*

**ஒப்புமைப்பகுதி :**

"பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலமென்கண் மறைப்பித்தாய்"

—சுந்தரர். வெண்பாக்கம். 1.

"பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர்கடமை போற்றி"

—திருவா. 70.

"பொறுப்பரன்றே பெரியோர் சிறுநாய்கள் தம் பொய்யினையே."

—ஷை 110,

"சிறியவர் ஒருபிழை செய்யின் மேலவர்
பொறையொடும் பின்னரும் போற்றல் அல்லதை
இறையதும் வெகுள்வரோ யானும் செய்பிழை
அறவன் நீ அன்றியே யாரது ஆற்றுவார்.

—கந்த. சூரனமைச் 170.

அறிவினிற் பெரியரோர் அறிந்தரும் பிழைகள் செய்யார்
அறிவினிற் சிறியரோர் அறிந்தறி யாமையானும்
செறிபிழை இழைப்பஅவ்வறத்தின துண்மை நாடிச்
சிறுமையி னீங்கினோர்கள் செயிர்த்துள வயிரங்கொள்ளார்.

தணிகை : வீரட்ட 104

## 159, துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய் இன்னாச்சொல் நோற்கிற் பவர். (௯)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** துறந்தாரின் தூய்மை உடையார் - இல்வாழ்க்கைக் கண் நின்றேயும் துறந்தார்போலத் தூய்மையுடையார், இறந்தார்வாய் இன்னாச்சொல் நோற்கிற்பவர் - நெறியைக் கடந்தார்வாய் இன்னாத சொல்லைப் பொறுப்பவர்.

தூய்மை மனமாசின்மை. வாய் என வேண்டாது கூறினார், தீய சொற்கள் பயின்றது எனத் தாம் வேண்டியதன் இழிபு முடித்தற்கு.

**மணக் :—** *மிகையாய்ச் சொல்லுவாரது தீச்சொல்லைப் பொறுக்கு மவர், துறந்தவர்களைப் போலத் தூய்மையுடையார் என்றவாறு.* 10

*இது பற்றறத் துறந்தவரோடு ஒப்பர் என்றது.*

**பருதி :—** *எ - து துறந்தார் பெரியோரானாலும் தவத்தின் பெருமையினாலே ஒருவரைச் சாபமிடுவர்; இவன் இல்லறத்திலே இருந்தும் தனக்கு ஒருவர் செய்த குற்றம் பொறுப்பவன் ஆதலின் பெரியவன் என்றவாறு.* 6

காளிங் :— எ - து உலகத்து வாழ்வார் யாவரினும் மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலும் தூய்மை யுடையராய் மனைவாழ்க்கைப் பெருந்துயரைத் துறந்தவரன்றே; மற்ற அவரினும் தூய்மையுடையர் யாவரோ எனில், பிறர் வாயில்வெஞ்சொற்களைப் பொறுக்கிற்பவர் என்றவாறு. 7

**உரைவிளக்கப்பகுதி**:

**இராமா:—** நோற்கிற்பவர் என்பதில் நோன் பகுதி, கில் சாரியை இடைச்சொல். பகர ஒற்று எதிர்கால இடைநிலை. அர் விகுதி, அகரம் சாரியை, வகரஒற்று உடம்படு மெய். இது எதிர்கால வினையாலணையும் பெயர்; இப் பகுதியினாலே முக்கால முற்றுவினைகளும் வருமாறு: நோற்றான், நோற்கின்றான், நோற்பான்

## 160. உண்ணாது நோற்பார் பெரியர்; பிறர்சொல்லும் இன்னாச்சொல் நோற்பாரின் பின். (ம)

**உரைப்பகுதி :—**

**பரிமே:—**உண்ணாது நோற்பார் பெரியர்- விரதங்களான் ஊணைத் தவிர்ந்து உற்ற நோயைப் பொறுப்பார் எல்லாரினும் பெரியார்; பிறர் சொல்லும் இன்னாச்சொல் நோற்பாரின் பின் - அவர் பெரியராவது தம்மைப் பிறர் சொல்லும் இன்னாதசொல்லைப் பொறுப்பாரின் பின்.

பிறர் அறிவிலாதார். நோலாமைக்கு ஏதுவாகிய இருவகைப் பற்றொடு நின்றே நோற்றலின், இன்னாச்சொல் நோற்பாரின் பின் என்றார். இவை இரண்டுபாட்டானும் பிறர் மிகைக்கச் சொல்லியன பொறுத்தல் கூறப்பட்டது.

**மணக் :—** உண்ணாது பொறுப்பார், எல்லாரினும் பெரியார்; அவர் பெரியாராவது பிறர் சொல்லுங் கடுஞ்சொல்லைப் பொறுப்பாரின் பின் என்றவாறு. 9

இது தவம் பண்ணுவாரினும் பெரியர் என்றது.

**பருதி:** எ - து தம்மிடமுள்ள சீவனை ஒறுத்துச் சருகு போசித்துத் தபசு பண்ணுவார் பெரியரானாலும், அவர் கோபம் பிறந்து சாபம் இடுவார்; இல்லறத்தான், பிறர் செய்த குற்றம் பொறுக்கின்றபடியினாலே இவன் பெரியவன் என்றவாறு. 7

காளிங்:— எ - து. உலகத்து உண்டு தவம் பண்ணுவோர் யாவரினும், உண்ணாமைத் தவம் பண்ணுபவரே சாலப்பெரியர். மற்ற அவரும் பிறரால் சொல்லப்பட்ட இன்னாச் சொற்களைப் பொறுக்கும் பொறையுடையாளரின் பின் என்றவாறு. 8

**உரைவிளக்கப்பகுதி :**

**இராமா:—** வேறோர் முடிபு: அறிவிலார் இகழ்ந்து சொல்லும் தீய சொற்களைக் காரணமில்லாமலே பொறுப்பவராகிய இல்லறத்தார்க்குப் பின்பு உண்ணாமைக் காரணத்தினாலே தங்களை அடைந்த நோயைப் பொறுப்பவராகிய துறவறத்தார் பெருமையுடையவர் ஆவர் என்றவாறு.

பிறர் சொல்லும்இன்னாச்சொல் என்றதனால் அறிவிலாதார் என்பதும், இகழ்ந்து என்பதும் பெறப்பட்டன. உண்ணாது என்னும் எதிர்மறை வினையெச்சம் காரணப்பொருட்டாய் நின்றது. ஆதலாலே துறந்தார்க்கு அஞ்ஞாநாதி அந்தக்கரணப்பலம் முதலாயின குறைந்து தேய்தலால் நோற்றல் எளிதாயும், இல்லறத்தார்க்கு அந்த உண்ணுதற்றொழிலை விடாமையினாலே அவை உறைத்திருக்கவும், காரணம்இல்லாமலே நோற்றலால் அரிதாயும் இருந்தது. ஆதலால் பிறர் சொல்லும் இன்னாச்சொல் நோற்பாரின் பின் உண்ணாது நோற்பார் பெரியர் என்றார். பெரியர் என்றது ஆக்கவினைக் குறிப்புச்சொல். இங்கே அது ஆக்கச் சொல் குறைந்து நின்றது, பெரியாராவர் என வருவிக்கப்பட்டது.

# 17. அழுக்காறாமை

**பரிமே**:—இதனுள் அழுக்காறு என்பது ஒரு சொல். அதற்குப் பொருள் [1] மேலே யுரைத்தாம். அச்சொல் பின் அழுக்காற்றைச் செய்யாமை என்னும் பொருள்பட எதிர்மறை ஆகாரமும் மகரஐகார விகுதியும் பெற்று அழுக்காறாமை என நின்றது. இப்பொறாமையும் பொறைக்கு மறுதலையாகலின், இதனை விலக்குதற்கு இது பொறை யுடைமையின் பின் வைக்கப்பட்டது.

**மணக்**:— *அழுக்காறாமையாவது பிறராக்கம் முதலாயின கண்டு பொறாமையால் வருகின்ற மனக்கோட்டத்தைச் செய்யாமை.*

**பருதி**:— *அழுக்காறாமையாவது, பிறர் செல்வங்கண்டு, 'இவனுக்கு இந்தப் பாக்கியம் வந்ததே' என்று சொல்லும் மன அழுக்கை விடுக என்ற வாறு.*

**161. ஒழுக்காறுக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்**
**தழுக்கா றிலாத இயல்பு.** (க)

**உரைப்பகுதி**:

**பரிமே**:—ஒருவன் தன் நெஞ்சத்து அழுக்காறு இலாத இயல்பு - ஒருவன் தன் நெஞ்சத்தின்கண் அழுக்காறு என்னுங் குற்றமில்லாத இயல்பினை, ஒழுக்காறுக் கொள்க - தனக்கு ஓதிய ஒழுக்கநெறியாகக் கொள்க.

இயல்பு - அறிவோடுகூடிய தன்மை. அத்தன்மையும் நன்மை பயத்தலின், ஒழுக்கநெறிபோல உயிரினும் ஓம்புக [2] என்பதாம்.

**மணக்**:—*ஒருவன் தன் நெஞ்சத்து அழுக்காறு இல்லாத இயல்பைத் தனக்கு ஒழுக்கநெறியாகக்கொள்க என்றவாறு.* 1

*இஃது அழுக்காறு தவிரவேண்டும் என்றது.*

**பருதி**:—*எ - து [3] தன்மட்டில் அழுக்காறு இன்மையை ஒரு நியம மாக நடத்துக என்றவாறு.* 1

---

1 35 வது குறளுரையில் காண்க.

2 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்றார் முன்னும் (குறள் 131)

3 இவ்வுரை காளிங்கர் உரையுடன் ஒன்றுபட்டிருத்தல் கவனிக்கத்தக்கன,

காளிங்:—எ - து தன் மனத்தில் அழுக்காறின்மையை ஒருவர் நியமமாக நடத்துவார் என்றவாறு. 1

## மேற்கோள்பகுதி :

நச் :—கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமையானும் என்றதில் அழுக்காருமைக்கு மேற்கோள். (தொல். பொருள். 76.)

இளம் :—அழுக்காருமையாவது பிறர் ஆக்கம் முதலியன கண்டு பொருமையால் வரும் மனக்கோட்டத்தைச் செய்யாமை என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள், 75.)

162. விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின். (உ)

## உரைப்பகுதி:

பரிமே:—யார்மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின் - யாவர்மாட்டும் அழுக்காற்றினின்று நீங்குதலை ஒருவன் பெறுமாயின், விழுப்பேற்றின் அஃது ஒப்பது இல்லை - மற்று அவன் பெறும் சீரிய பேறுகளுள் அப்பேற்றினை ஒப்பது இல்லை.

அழுக்காறு பகைவர்மாட்டும் ஒழிதற்பாற்று என்பார், யார் மாட்டும் என்றார். அன்மை – வேருதல். இவை இரண்டுபாட்டானும் அழுக்காறு இன்மையது குணம் கூறப்பட்டது.

மணக்:—விழுமிய பேறுகளுள், யார்மாட்டும் அழுக்காறு செய்யாமையைப் பெறுவனயின், அப்பெற்றியினை யொப்பது பிறிதில்லை என்றவாறு.

இஃது அழுக்காறு செய்யாமை எல்லா நன்மையினும் மிக்கது என்றது.

பருதி:—எ - து பெருமை கல்வி அறிவுடைமைக்கு, மனத்தில் அழுக்காகிய ஒருவர்க்குப் பொல்லாங்கு செய்வோம் என்பதை விடுதல் நன்று என்றவாறு. 2

காளிங்:—எ - து யாவர் மாட்டாயினும் தமது உள்ளத்து அழுக்காறில்லாமையாகிய பெரும்பேறு உளதாகப் பெறுவார் ,அல்லது தாம் விழுமியவாகப் பெரும்பேற்றின் மற்றதனை ஒப்பது என்றும் இல்லை என்றவாறு. 2

பெரிய கல்வியறிவுடைமைக்கு மனத்தில் அழுக்காகி ஒருவர்க்குப் பொல்லாங்கு செய்வோம் என்பதை விடுதல் நன்று என்பது கருத்து.

**163. அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்கம்
பேணு தழுக்கறுப் பான். (ந)**

**உரைப்பகுதி:—**

**பரிமே:**—அறன் ஆக்கம் வேண்டாதான் என்பான் - மறுமைக்கும் இம்மைக்கும் அறமும் செல்வமும் ஆகிய உறுப்புக்களைத் தனக்கு வேண்டாதான் என்று சொல்லப்படுவான், பிறன் ஆக்கம் பேணுது அழுக்கறுப்பான் - பிறன் செல்வம் கண்டவழி அதற்கு உவவாது அழுக்காற்றைச் செய்வான்.

அழுக்கறுத்தல் எனினும் அழுக்காறு எனினும் ஒக்கும். அழுக்காறுசெய்யின் தனக்கே ஏதமாம் என்பதாம்.

**மணக்;**—தனக்கு அறனுகிய வாழ்வு வேண்டாதவனென்று சொல்லப்படுவான்; பிறனுடைய ஆக்கத்தை விரும்பாதே அழுக்காறு செய்வான் என்றவாறு. 6

இஃது அழுக்காறுடையார்க்குப் புண்ணியம் இல்லையாம் என்று கூறிற்று.

**பருதி:**—எ-து தனக்குத் தன்மத்தின் ஆக்கமாகிய செல்வம் வேண்டார் என்பார். பிறர்செல்வங்கண்டு அழுக்கு மனத்தராவார் என்றவாறு. 4

**காளிங்:**—எ - து தனக்கு மறுமை இன்பக்காரணமாகிய அறனும் மற்று இம்மை இன்பக்காரணமாகிய செல்வமும் என்னும் இவையிரண்டினையும் விரும்பாதான் என்று சான்ருேரால் சொல்லப்படுமவன் யாவனே எனின், பிறனொருவன் ஆக்கத்தை விரும்பாது மற்றதன் கண்ணே தமது உள்ளத்து உள்ள அழுக்கினை விடுகின்றவன் என்றவாறு.

**உரைவிளக்கப்பகுதி :**

**நுண்:**—அழுக்கறுப்பான் - அழுக்காற்றைச்செய்வான். அழுக்கறுப்பான் பண்படியாகப் பிறந்தவினை.

**இராமா:**—அழுக்காறு என்னும் பண்புப் பெயர்ச்சொல் தொழிற் பெயராங்கால், அகங்காரம் அகங்கரித்தல் எனவும் அதிகாரம் அதிகரித்தல் எனவும் வருவனபோல அழுக்கறுத்தல் எனவும் வரும். அது ஏவலிடத்தும் முற்றுவினைகட்குப் பகுதியாமிடத்தும் அழுக்கறு எனநிற்கும்.

**ஒப்புமைப் பகுதி :**

அசல் விடு வாழ்ந்தால் ஐம்பது நாள் பட்டினி கிடப்பதா ?
அசல் விடு வாழ்ந்தால் பரதேசம் போகிறதா. — பழமொழி

164. அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து. (சு)

**உரைப்பகுதி :**

**பரிமே:** — அழுக்காற்றின் அல்லவை செய்யார் - அழுக்காறு ஏது வாக அறனல்லவற்றைச் செய்யார் அறிவுடையார், இழுக்கு ஆற்றின் ஏதம் படுபாக்கு அறிந்து - அத்தீநெறியால் தமக்கு இருமையினும் துன்பம் வருதலை அறிந்து.

அறனல்லவையாவன-செல்வம் கல்வி முதலியன உடையார் கண் தீங்கு நினைத்தலும், சொல்லுதலும், செய்தலுமாம்.

**மணக் :** *அழுக்காற்றினானே அறமல்லாதவற்றைச் செய்யார் நல்லோர், அவ்வறத்தைத் தப்பின நெறியினுற் குற்றம் வருவதையறிந்து என்றவாறு.*

பரிப் :—*மேல் அழுக்காறு செய்யாமை விழுமிய பொருளென்ருர் அஃதாயினவாறு என்னை என்ருர்க்கு அஃதில்லாதார் அறமல்லாதன செய்யாராதலான். பாவம் வாராது என்றுமாம்.*

**பருதி:**—*எ - து அழுக்குமனத்தை யகற்றி, நல்ல மனத்துடன் இருப்பான்; இருப்பானுகில் கீர்த்தியும், புகழும் உண்டு; மனத்தில் அழுக்குடையான் யாரொருவர்க்கும் பொல்லாங்குசெய்ய விசாரிப்பான் தினமும் என்றவாறு.*

165. அழுக்கா றுடையார்க் கதுசாலும் ; ஒன்ஞர்
வழுக்கியும் கேடீன் பது. (ரு)

**உரைப்பகுதி :**

**பரிமே :**—ஒன்ஞர் வழுக்கியும் கேடு ஈன்பது - அழுக்காறு பகைவரை ஒழிந்தும் கேடு பயப்பது ஒன்ருகலின், அழுக்காறு உடையார்க்கு அது சாலும் - அவ்வழுக்காறு உடையார்க்குப் பகைவர் வேண்டா கேடுபயத்தற்கு அதுதானே அமையும்.

அதுவே என்னும் பிரிநிலை ஏகாரம் விகாரத்தால் தொக்கது.

**மணக்:**—*அழுக்காறுடையார்க்கு அவ்வழுக்காறு தானே அமையும், பகைவர் கேடுபயத்தல் தப்பியும் கெடுப்பதற்கு என்றவாறு.*

*இஃது உயிர்க்குக் கேடுவரும் என்று கூறிற்று.*



**பருதி:**—*எ - து மனஅழுக்கு உள்ளபேர்க்குச் செல்வம் இல்லை; அதுபோல், ஒழுக்கம் இல்லாதார்க்குப் பெருமை இல்லை என்றவாறு.*

காளிங்:—எ - து அவ்வழுக்காறுகின்றது எல்லா நன்மைகளையும் கொடுத்துக் கொடுநரகத்துய்க்கும் ஆகலான் மற்றிதனை தன் நெஞ்சத்துடையாரொருவனுக்கு அதுவே அமையும், பகைவர் வழுவினாலும் கேட்டைத் தருவதற்கு என்றவாறு.

வழுக்கியும் என்ற உம்மையான் மறந்து என்றாயிற்று. சாலும் என்பது அமையும் என்றது.

இனி அழுக்காறுமை என்ற மனத்தூய்மையால், பிறர் ஆக்கங்கண்டு இன்புறும் பெரியோர்க்கன்றே தமக்கு ஞாயத்தினால் வரும் பொருளன்றிப் பிறர் பொருளை விரும்பாமை; இவையாவது மற்றதனால் இதன் பின்னர் *அதனை அறிவிக்கின்றது.

**உரைவிளக்கப்பகுதி :**

**இராமா:**—ஆதலால் என்னும் ஏதுப்பொருளைத்தரும் இடைச்சொல்லும் அதிலே என்னும் பிரிநிலை ஏகாரமும் குறைந்து நின்றன.

**மேற்கோள்பகுதி :**

**தெய்வச்;**—கேடுபயத்தற்கு அழுக்காறு தானே அமையும்; பகைவர் கெடுக்குதல் தப்பியும்..........வேண்டுதலின் வரும் என்பது எஞ்சி நின்றது. (தொல். சொல். 424.)

**166. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.** (சா)

**உரைப்பகுதி :**

**பரிமே:—** கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் - ஒருவன் பிறர்க்குக் கொடுப்பதன்கண் அழுக்காற்றைச் செய்வானது சுற்றம், உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும் - உடுக்கப்படுவதும் உண்ணப் படுவதும் இன்றிக் கெடும்.

கொடுப்பதன்கண் அழுக்கறுத்தலாவது கொடுக்கப்படும் பொருள்களைப் பற்றிப் பொறாமைசெய்தல். சுற்றங்கெடும் எனவே, அவன்கேடு சொல்லாமையே பெறப்பட்டது. பிறர்பேறு பொறாமை தன்பேற்றையே யன்றித் தன் சுற்றத்தின் பேற்றையும் இழப்பிக்கும் என்பதாம்.

* அதனை என்றது வெஃகாமை என்ற அடுத்த அதிகாரத்தை.

**மணக்:**—பிறனொருவன் மற்றொருவனுக்குக் கொடுப்பதனை அழுக்காற்றினாலே விலக்குமவனது சுற்றம் உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும் என்றவாறு.

இது நல்குரவு தரும் என்றது.

**பருதி:**— [1] எ – து ஒருவர்க்கொருவர் செய்யும் உபகாரம் கண்டு பொருத மனத்தனுக்கும் அவன் சுற்றத்தார்க்கும் உடுப்பதுவும் உண்பதுவும் இன்றிக் கெடும் என்றவாறு.

**காளிங்:**— [1] எ - து ஒருவருக்கொருவர் செய்யும் உபகாரங்கண்டு பொருத மனத்தனுக்கும் அவன் சுற்றத்தார்க்கும் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக்கெடும் என்றவாறு.

## உரைவிளக்கப்பகுதி :

**நுண் :**—சுற்றம்கெடும் எனவே அவன் கேடு சொல்லாமலே முடிந்தது. ''மீக்கூறு மன்னன் நிலம்'' (386) என்பதும் [2] அது. ''எடுத்த மொழி யினஞ்செப்பலும் உரித்தே'' (தொல். சொல். 61) என்னுஞ் சூத்திரத்துள், இளம்பூரணர் 'குடங்கொண்டான் வீழ்ந்தான் என்றவழி குடம் வீழ்ந்தது என்பது சொல்லாமலே முடிந்தது' என்றூர் என்க.

**இராமா:**—கொடுப்பது அழுக்கறுப்பானும் சுற்றமும், உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும் என நிரல்நிரைப் பொருள் கோளாக்கினும் அமையும்.

## ஒப்புமைப்பகுதி :

''எடுத்தொரு வருக்கொருவர் ஈவதனின் முன்னம்
தடுப்பது நினக்கழகி தோதகவில் வெள்ளி
கொடுப்பது விலக்கு கொடியோய்! உனது சுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும் இன்றிக் கெடுகின்ருய்''

—கம்ப. பால. வேள்வி. 33.

**167. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்.** (எ)

## உரைப்பகுதி :

**பரிமே :**— அழுக்காறு உடையானை - பிறராக்கம் கண்டவழிப் பொறாமை யுடையானை, செய்யவள் அவ்வித்துத் தவ்வையைக் காட்டி விடும் - திருமகள் தானும்பொறாது தன்தவ்வைக்குக் காட்டி நீங்கும்.

1 இவ்வுரைகள் இரண்டும் ஒன்றுபட்டிருத்தல் கவனிக்கத்தக்கன.

2 'நிலத்தை மீக்கூறும் எனவே மன்னனை மீக்கூறுதல் சொல்ல வேண்டா வாயிற்று' பரிமேலழகர் உரை.

16

தவ்வை - மூத்தவள். தவ்வையைக் காட்டி என்பது "[1] அறிவுடை அந்தணன் அவளைக் காட்டென்றானே" என்பதுபோல உருபு மயக்கம். மனத்தைக்கோடுவித்து அழுக்காறுடையனாயினானை என்று உரைப்பாரும் உளர்.

மணக்:— அழுக்காறுடையானைத் திருமகள் தானும் அழுக்காறு செய்து, தன் தவ்வையாகிய மூதேவிக்குக்காட்டி 'இவன்பால் செல்' என்று விட்டுப் போம் என்றவாறு.

இது நல்குரவிற்குக் காரணம் கூறிற்று.

பரிப் :—அவ்வித்து என்பதனைச் செய்யவளோடுங் கூட்டுக. (8)

பருதி:—எ - து பிறர் வாழ்வுகண்டு பொறாத மனத்தானை லக்ஷ்மி தனக்கு மூத்த சேஷ்டாதேவிக்கு இடமாக்குவாள் என்றவாறு. (8)

காளிங்:—எ - து [2] பிறர் வாழ்வுகண்டு பொறாத மனத்தானை லக்ஷ்மி, தனக்கு மூத்தாள் சேட்டாதேவிக்கு இடமாக்குவாள் என்றவாறு. (5)

## உரைவிளக்கப்பகுதி :

இராமா;—தௌவையைக்காட்டி என்பது தௌவைக்குக் காட்டி என்னும் நான்காம் வேற்றுமைப் பொருளிலே இரண்டாம் வேற்றுமை உருபு தடுமாறிவந்த உருபுமயக்கம்.

## மேற்கோள்பகுதி :

சிவஞான:—இதனுள் ஐயும்குவ்வும் தடுமாறி வந்தவாறு காண்க. (நன். சூ; 317.)

சுவாமி;—'எல்லாவுருபொடுங் கொள்வோன் எழுமே' என்பதற்கு மேற்கோள், (இ. கொ. 47.)

'தடுமாறுருபுகள் தாம் சிலவுளவே' என்பதற்கு மேற்கோள். (இ. கொ. 61.)

யா. வி. உரை:—ஔகாரக்குறுக்கம் வந்த செய்யுளுக்கு மேற்கோள் (சூ. 2.)

## ஒப்புமைப்பகுதி :

"அவ்வித்தழுக்காறு உரையாமை முன்னினிதே." —இனியவை, 37.

1 கலி, 72 : 18. 2 இவ்வுரையும் பருதியார் உரையும் ஒத்துள்ளன.

168. அழுக்கா் றெனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். (அ)

**உரைப்பகுதி :**

பரிமே: — அழுக்காறு என ஒரு பாவி - அழுக்காறு என்று சொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவி, திருச் செற்றுத் தீயுழி உய்த்துவிடும் - தன்னையுடையானை இம்மைக்கண் செல்வத்தைக் கெடுத்து மறுமைக்கண் நரகத்தில் செலுத்திவிடும்.

பண்பிற்கு பண்பி இல்லையேனும், தன்னையாக்கினானை இருமையும் கெடுத்தற்கொடுமை பற்றி, அழுக்காற்றினைப் பாவி என்றார்; கொடியானைப் பாவி என்னும் வழக்கு உண்மையின். இவை ஆறுபாட்டானும் அழுக்காறுடைமையது குற்றம் கூறப்பட்டது.

மணக்: — அழுக்காறு என்று சொல்லப்படுகின்ற ஒரு பாவி செல்வத்தையுங் கெடுத்துத் தீக்கதியுள்ளுங் கொண்டு செலுத்திவிடும் என்றவாறு.

ஒரு பாவி - நிகரில்லாத பாவி. இது செல்வங்கெடுத்தலே யன்றி நரகமும் புகுவிக்கும் என்றது. (9)

பருதி: — எ - து மனவழுக்கு என்றொரு பாவம், தன்னிடத்தில் லட்சுமியையும் அகற்றி, மறுமைக்கு நரகத்தையும் கொடுக்கும் என்றவாறு. (4)

காளிங்: — * ... .... ....

**உரைவிளக்கப்பகுதி:**

நுண்: — பண்புக்குப் பண்பியில்லையேனும்தன்னையாக்கினானைக்கெடுத்தல் பற்றிப் பாவம் என்னாது, பாவி என்றார்; இதனாலும் அழுக்கற்று என்பது பண்படியாகப் பிறந்தவினை என்பதறிக.

இராமா: — பண்புக்குப் பண்பியாம் தன்மை இல்லையானாலும், தன்னை உண்டாக்கினவனை இருமையினும் கெடுக்கும் கொடுமையினாலே, அழுக்காறுகிய குணத்தைக் குணியாகப் பாவி என்றது ஏது உருவக அலங்காரம் எனக் காண்க.

**மேற்கோள்பகுதி :**

சேனா: — இதில் என என்னும் சொல் பெயர்ப்பொருண்மை குறித்து வந்தவாறு கண்டுகொள்க. (தொல். சொல். 258.)

* இவர் உரையும் பருதியார் உரையும் ஒத்துள்ளன.

நச் :—அழுக்காறெனஒருபாவி, என்பதில் என என்பது பெயர்ப் பொருண்மைக்கண் வந்தது. (தொல். சொல். 260.)

மயிலை:—உடம்போடு கூடிய உயிர்க்குணம் அழுக்காறு என்பதற்கு மேற்கோள். (நன். 451.)

சங்கர:—'அழுக்காறென' என, எனவென்னும் இடைச்சொல் பெயரின் கண் வந்தது. (நன். சூ. 424.)

காரிரத்ன:—பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற 251 உரை)

சுவாமி:—அழுக்காறென ஒரு பாவி. பெயரெச்சம், (இ. கொ. 68.)

## ஒப்புமைப்பகுதி :

"கற்றதங் கல்வியும் கடவுட் பூசையும்
நற்றவம் இயற்றலும் நவையில் தானமும்
மற்றுள அறங்களும் மனத்தின்பால் அழுக்கு
அற்றவர்க்கே பயன் அளிக்கும் என்பரால்" —காசிகாண்டம்

## 169. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் *நினைக்கப்படும். (௯)

## உரைப்பகுதி:

பரிமே;—அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் – கோட்டத்தினைப் பொருந்திய மனத்தையுடையவனது ஆக்கமும், செவ்வியான் கேடும் நினைக்கப்படும் - ஏனைச் செம்மையுடையவனது கேடும் உளவாயின் அவை ஆராயப்படும்.

கோட்டம் ஈண்டு அழுக்காறு. உளவாயின் என்பது எஞ்சி நின்றது. ஆக்கக்கேடுகள் கோட்டமும் செம்மையும் ஏதுவாக வருதல் கூடாமையின், அறிவுடையரால் இதற்கேதுவாகிய பழவினை யாதென்று ஆராயப்படுதலின், நினைக்கப்படும் என்றார்; "$இம்மைச் செய்தன யான் அறி நல்வினை, உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்தித், திருத்தகு மாமணிக்கொழுந்துடன் போந்தது" என நினைக்கப்பட்ட வாறறிக.

மணக் :—அழுக்காற்றுநெஞ்சத்தானுடைய ஆக்கமும், செவ்விய நெஞ்சத்தானுடைய கேடும் விசாரிக்கப்படும் என்றவாறு. (4)

* சிலப்; அடைக்கலக். 91-93

$ இமைப்பிற்கெடும் என்பது பருதியார் பாடம்

பரிப்:—இவை இரண்டுமில்லை யென்றவாறு: காரணம் வேறேயுண்டென்று ஆராயப்படும் என்பாரும் உளர். "அழுக்காறுடையான் கண் ஆக்கம் போன்றில்லை" என்று வேரோரதிகாரத்தும் கூறினர்.

பருதி:—எ - து அழுக்குமனத்தன் பெற்ற ஆக்கமும், நல்ல மனத்தன் பெற்ற கேடும் இமைப்பிற்கெடும் என்றவாறு. (6)

காளிங்:—எ - து அழுக்காருகிய உட்கோட்டங் கிடந்த நெஞ்சத்தானது ஆக்கமும், மற்ற கோட்டமில்லாத செவ்வியானது கேடும் என்னும் இவை இரண்டும் விசாரிக்க, அவனுக்கு ஆக்கம் இல்லை; இவனுக்கு ஒரு கேடும் இல்லை என்பதூஉம் பொருளாயிற்று என்றவாறு. (7)

**மேற்கோள்பகுதி:**

**அடியார்க்கு:**—செம்மை - நடுவுநிலைமை; "செவ்வியான் கேடும்" எனக்கூறினமையின். (சிலப், வேனிற். 59.)

**சங்கர:**—தொடை நோக்கி ஔகாரம் நின்ற நிலைக்களத்துப் போலி வந்ததற்கு மேற்கோள். (நன். 125.)

**சிவஞான:**—ஔகாரம் மொழிமுதற்கண் ஒன்றரை மாத்திரையாய் வந்ததற்கு மேற்கோள். (நன். 95.)

**சுவாமி:**—'போலி எழுத்தைப் போற்றுதல் கடனே' என்பதற்கு மேற்கோள். அங்ஙனம் போற்ருவிடில் மோனைத்தொடையோடும் எதுகைத்தொடையோடும் மாறுபட்டு இலக்கண வழுவாதல் காண்க என்பர். (இ. கொ. 91.)

**170. அழுக்கற் றகன்றாரும் இல்லை அஃதில்லார்**
**பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல். (0)**

**உரைப்பகுதி :**

**பரிமே:**— அழுக்கற்று அகன்ருரும் இல்லை - அழுக்காற்றைச் செய்து பெரியர் ஆயினுரும் இல்லை, அஃது இல்லார் பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல் - அச்செயலிலாதார் பெருக்கத்தின்நீங்கினுரும் இல்லை.

இவை இரண்டுபாட்டானும் கேடும் ஆக்கமும் வருவதற்கு ஏது ஒருங்கு கூறப்பட்டது.

**மணக்:**—* ... ... ....

* இவர் உரை கிடைக்கவில்லை, அச்சுப்புத்தகங்களில் பரிமேலழகர் உரையே காணப்படுகின்றது.

பரிப்:—மேல் செவ்வியார்க்கு கேடில்லை என்றார். இதில் கேடில்லாமையை இவ்வுலகிற் காணலாம் என்கின்றார்.

பருதி:—எ - து மனத்தில் அழுக்குடையார்க்கு செல்வம்பெற்றதும் இல்லை; மனத்தில் அழுக்கில்லாதார் செல்வமாகிய லட்சுமியை நீங்கியதும் இல்லை என்றவாறு. (9)

## உரைவிளக்கப்பகுதி:

இராமா:—அழுக்காறு என்னும் பண்புப்பெயர் தொழிற்பெயராங்கால் அழுக்கறல் என நிற்கும். அதிலே நின்று முக்கால வினைமுற்றுக்கள் அழுக்கற்றான், அழுக்கறா நின்றான், அழுக்கறுப்பான் என வரும்; ஆதலால், அழுக்கற்று என இறந்த கால வினை எச்சம் வந்தது. இதனுள்ளே முதனிலைவினை அழுக்கறு என நிற்றல் காண்க.

## மேற்கோள்பகுதி:

சுவாமி:—அழுக்கற்று அகன்றாரும் இல்லை; இவைபோல்வன வினையெச்சம். (இ. கொ. 68.)

## ஒப்புமைப்பகுதி:

"ஆற்றாரகில் தம்மைக்கொண் டடங்காரோ என் ஆருயிர்க்குக்
கூற்றாய் நின்ற குலச்சனகி குவளை மலர்ந்த தாமரைக்குத்
தோற்றாய் அதனால் அகங்கரிந்தாய் மெலிந்தாய் வெதும்பத்தொடங்கினாய்
மாற்றார் செல்வம் கண்டழிந்தாய் வெற்றியாக வற்றாமோ"

—கம்ப, ஆரணி-மாரீச 115

# 18. வெஃகாமை.

**பரிமே:**—அஃதாவது பிறர்க்குரிய பொருளை வௌவக் கருதாமை. பிறருடைமை கண்டவழிப் பொறுமையேயன்றி அதனைத் தான் வௌவக் கருதுதலுங் குற்றம் என்றற்கு இஃது அழுக்காறாமையின் பின் வைக்கப் பட்டது.

**மணக்:**—வெஃகாமையாவது பிறர்பொருளை விரும்பாமை.

**பரிப்:**—மேற் பிறராக்கத்தைப் பொறாமையாகாதென்றார். இஃது அதனை வவ்வ நினைத்தலாகாமையான் அதன்பிற் கூறப்பட்டது.

**பருதி:**—வெஃகாமையாவது, பிறர் வாழ்வுகண்டு "இந்தப் பாக்கியம் நமக்கு ஆகப்பெற்றதில்லை" என்று மனத்தில் எண்ணாமல் இருப்பதே நன்று என்றவாறு,

**171. நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்**
**குற்றமும் ஆங்கே தரும்.** (க)

**உரைப்பகுதி:**

**பரிமே:**—நடுவு இன்றி நன்பொருள் வெஃகின் - பிறர்க்குரியன கோடல் நமக்கு அறன் அன்று என்னும் நடுவு நிலைமையின்றி அவர் நன்பொருளை ஒருவன் வெஃகுமாயின், குடி பொன்றிக் குற்றமும் ஆங்கே தரும் - அவ்வெஃகுதல் அவன் குடியைக் கெடச்செய்து பல குற்றங்களையும் அப்பொழுதே அவனுக்குக் கொடுக்கும்.

குடியை வளரச்செய்து பல நன்மையும் பயக்கும் இயல்பு பற்றி, வெஃகின் என்பார், நன்பொருள் வெஃகின் என்றார். பொன்ற என்பது பொன்றி எனத் திரிந்து நின்றது; செய்து என்பது சொல்லெச்சம்.

**மணக்:**—நடுவுநிலைமையின்றி மிக்கபொருளை விரும்புவானாயின், அதனானே குலமுங்கெட்டு அவ்விடத்தே குற்றமும் உண்டாம் என்றவாறு.
(7)

இது சந்தான நாசம் உண்டாம் என்றவாறு.

**பருதி:**—எ - து நடுவுநிலைமையை விட்டுப் பிறர் வாழ்வை விரும்புவானாகில், குடிகெட்டு மிடியனாகிக் குற்றமும்வரும் என்றவாறு. (1)

**காளிங்:**—எ - து நடுவு நிலைமைக்கு ஒத்த வழிபாடுடைய பொருளே பயனன்றித் தமக்கு மிகுதியாகப் பொருளை ஈட்டுதலை விரும்புவாராயின், மற்றிதனால் குற்றமாகிய ஏதம்வந்து குடிமரபும் பொன்றிப் பின்னும் அவ்வண்ணமே நரகத்தினையும் தரும் என்றவாறு. (6)

மேற்கோள் பகுதி:

காரிரத்ன:—பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற. 251.)

சிவஞான:—குடிபொன்றிக் குற்றமும் ஆங்கேதரும் என்பதும் அப் பொருளவாய் நின்றது. (பாயிர. பக். 71.)

சுவாமி:—குடிபொன்றிக் குற்றமும் ஆங்கேதரும்: பொன்றுவித்து முதனிலை திரியாதன. (இ. கொ. 10.)

172. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். (உ)

உரைப்பகுதி:

பரிமே:—படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார் - பிறர் பொருளை வௌவினால் தமக்கு வரும் பயனை விரும்பி அது வௌவுதற்குப் பழியின் கண்ணே படுஞ்செயல்களைச் செய்யார், நடுவுஅன்மை நாணுபவர்-நடுவு நிலைமையன்மையை அஞ்சுபவர்.

நடுவு-ஒருவன் பொருட்குப் பிறன் உரியன் அல்லன் என்னும் நடுவு.

மணக்:—தமக்குப் பயனுண்டாக வேண்டிப் பழியொடுபடுவன செய்யார் நடுவன்மைக்கு நாணுபவர் என்றவாறு.

இது நடுவுநிலைமை வேண்டுபவர் செய்யார் என்றது. (5)

பருதி:—எ - து செல்வத்தால் வரும்பயனை நாடித் தன்மம் அல்லாத காரியத்தைச் செய்யார்; நடுவு நிலைமையை உறுதியாகப் பிடித்தவர் என்றவாறு. (3)

காளிங்:—எ - து பெரும் பொருட் பயனை விரும்பி மற்ற இது காரணமாகப் பழியுண்டாவன செய்யார் யாரோ எனில், தமது நெறியின் கண் ஏற்றத்தாழ்வின்றி ஒத்துவரும் பொருளல்லாமையை நாணும் இயல் புடையார் என்றவாறு.

அன்மை என்பது அல்லாமை என்றுயிற்று. (4)

மேற்கோள்பகுதி:

இளம்:—வெஃகாமையாவது பிறர் பொருளை விரும்பாமை என் பதற்கு மேற்கோள். (தொல், பொருள். 75.)

நச்:—" கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமையானும் " என்றதில் வெஃகாமைக்கு மேற்கோள். (தொல். பொருள். 76.)

அரும்பத:—இடுபொருளாயினும் படுபொருளாயினும்: படுபொருள் புதையல். அன்றித் தன்தேட்டத்தால் மிக்கபொருள் எனினும் ஆம்; 'படுபயன் வெஃகி' என்றாற்போல. (சிலப். கட்டுரை. 128.)

**173. சிற்றின்பம் வெ.:.கி அறனல்ல செய்யாரே**
**மற்றின்பம் வேண்டு பவர்.** (ரு)

**உரைப்பகுதி :**

**பரிமே:**—சிற்றின்பம் வெ.:.கி அறனல்ல செய்யார் - பிறர்பால் வௌவிய பொருளால் தாமெய்தும் நிலையில்லாத இன்பத்தை விரும்பி அவர்மாட்டு அறனல்லாத செயல்களைச் செய்யார், மற்றின்பம் வேண்டுபவர் - அறத்தான் வரும் நிலையுடைய இன்பத்தைக் காதலிப் பவர்.

பாவத்தான் வருதலின் அப்பொழுதே அழியும் என்பார், சிற் றின்பம் என்றார். மற்றை இன்பம் என்பது மற்றின்பம் என நின்றது.

*மணக்:—சிற்றின்பமாகிய பொருளை விரும்பி அறனல்லாதவற்றைச் செய்யார் பேரின்பமாகிய வீடுபேற்றைக் காமிப்பவர் என்றவாறு.*

*இது வீடுபெற வேண்டுவார் என்றது.* (4)

**பருதி:**—*எ-து அழிகின்ற சிற்றின்பத்தை ஆசைப்பட்டு மறுமைக்கு முத்திதருகின்ற தன்மத்தை விடார்; பரலோகத்தை இச்சிப்பவர் என்றவாறு.* (4)

**174. இலம்என்று வெ.:.குதல் செய்யார் புலம்வென்ற**
**புன்மையில் காட்சி யவர்.** (சு)

**உரைப்பகுதி :**

**பரிமே:**—இலம் என்று வெ.:.குதல் செய்யார்-யாம் வறியம் என்று கருதி அது தீர்தற்பொருட்டுப் பிறர் பொருளை விரும்புதல் செய்யார், புலம் வென்ற புன்மையில் காட்சியவர் - ஐம்புலன்களையும் வென்ற குற்றமில்லாத காட்சியினையுடையார்.

வெல்லுதல் - பாவநெறிக்கண் செல்ல விடாமை. புலம்வென்ற புன்மையில் காட்சியவர்க்கு வறுமையின்மையின் வெ.:.குதலும் இல்லையாயிற்று. புன்மையில் காட்சி – பொருள்களைத் திரிபின்றி உணர்தல்.

**மணக்** :— வறியம் என்று பிறர்பொருளை விரும்புதல் செய்யார் ஐம்புலனையும் வென்ற புன்மையிலாத தெளிவுடையார் என்றவாறு.

இது தெளிவுடையார் செய்யார் என்றது. (3)

**பருதி**:— எ - து வறியம் என்று பாவத்தைச்செய்யார், மறுமைக்கு வறுமையாம் என்று வெஃகாமையுடையவர் என்றவாறு. (5)

**காளிங்**:— எ - து யாம் கைப்பொருள் இலம் என்று கருதி இழிவாகப் பிறர்மாட்டுச்சென்று விரும்புதலை எஞ்ஞான்றும் செய்யார்; யாரோ எனில் தமது ஒழுக்கநெறிக்கு மிகைப்படும் பொறிகண்மேல் செல்லாதவாறு ஐம்புலன்களை வென்ற புல்லிமையற்ற நல்லறிவினை உடையோர் என்றவாறு.

**175. அஃகி அகன்ற அறிவென்னும் யார்மாட்டும்**
**வெஃகி வெறிய செயின். (ரு)**

**உரைப்பகுதி :**

**பரிமே**:— அஃகி அகன்ற அறிவு என்னும் - நுண்ணிதாய் எல்லா நூல்களினுஞ் சென்ற தம் அறிவு என்ன பயத்ததாம், வெஃகி யார் மாட்டும் வெறிய செயின்-பொருளை விரும்பி யாவர்மாட்டும் அறிவோடு படாத செயல்களை அறிவுடையார் செய்வராயின்.

யார்மாட்டும் வெறிய செய்தலாவது தக்கார்மாட்டும் இழிந்தனவும் கடியனவும் முதலியன செய்தல். அறிவிற்குப் பயன் அவை செய்யாமையாகலின், அறிவென்னும் என்றார்.

**மணக்**;— நுண்ணிதாகப் பரந்த அறிவுடையானாயினும் அதனால் பயன் யாதாம்? எல்லார் மாட்டும் பொருளை விரும்பி ஈரமில்லாதன செய்வனாயின் என்றவாறு.

இது அறிவுடையார் செய்யார் என்றது. (5)

**பருதி**:—எ - து குறையாமல் நிறைந்த அறிவுடைமை ஏதாம்? பிறர் செல்வத்தை விரும்பிப் பாவத்தையே தேடுவானாகில் என்றவாறு. (10)

**காளிங்** :— எ - து சான்றோர்க்குக் கல்வி மிகுதியாகி அச்சிறந்த அறிவினால் நுண்ணிதாய்ப் பரந்த உணர்வு கொண்டு என்னபயன் உளதாம். தமக்கு மரபினால் வரும் ஆக்கமன்றி மற்றும் யாவர்மாட்டும் அவரவரது பொருளில் விரும்பி அதற்காகப் பிறர் வெருவத்தக்கன செய்வாராயின் என்றவாறு. (2)

மேற்கோள்பகுதி :

யா. வி. உரை:— ஆய்தம் வந்த செய்யுளுக்கு மேற்கோள். (சூ 2) இரண்டாமெழுத்து ஒன்றிவந்த அடியெதுகைக்கு மேற்கோள். (சூ. 6)

**176. அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.** (சா)

உரைப்பகுதி :

**பரிமே:**—அருள் வெஃகி ஆற்றின்கண் நின்றான் - அருளாகிய அறத்தை விரும்பி அதற்கு வழியாகிய இல்லறத்தின்கண் நின்றவன், பொருள் வெஃகிப் பொல்லாத சூழக் கெடும் - பிறர்பொருளை அவாவி அதனை வருவிக்குங் குற்றநெறிகளை எண்ணக் கெடும்.

இல்லறநெறியால் அறிவு முதிர்ந்துழியல்லது துறக்கப்படாமையின், அதனைத் துறவறத்திற்கு ஆறு என்றார். கெடுதல் இரண்டறமுஞ் சேர இழத்தல். சூழ்ந்த துணையானே கெடும் எனவே, செய்தாற் கெடுதல் சொல்லாமையே பெறப்பட்டது.

**மணக் :**— *அருளைவிரும்பி அறநெறியிலே நின்றவனும், பொருளை விரும்பி அறனல்லாதவற்றைச் சூழக், கெடுவன் என்றவாறு.*

*இஃது அருளுடையானுங் கெடுவன் என்றது.* (6)

**பருதி :**— *எ - து முத்தியைவிரும்பித் தன்மநெறியிலே நின்றார் பொன்னாசையை விரும்பி, மனத்தில் அழுக்குடையராகில் கெடுவார் என்றவாறு.* (6)

**காளிங் :**— *எ - து தமது அறிவினால் 'நமக்கு வரும் இன்பம் துன்பம் அனைவர்க்கும் ஒக்கும்' என்று அருளுவதோர் அருளினையே விரும்பி நூல் சொல்லுகின்ற வழி நின்றவர், முறைமையன்றிப் பிறனது பொருளை விரும்பி, மற்று அது காரணமாகப் பொல்லாதனவற்றை நினைப்பக் கெடுவர் என்றவாறு.* (3)

உரைவிளக்கப்பகுதி :

**இராமா:**—*இல்லற நெறியிலே நின்று அறிவு முதிர்ந்தாலல்லது துறவறத்தைக் கைக்கொள்ளப்படாது; ஆகையினாலே, அதனைத் துறவறத்துக்கு ஆறு என்றார்.*

177. **வேண்டற்க வெ.·.கியாம் ஆக்கம் விளைவயின்**
**மாண்டற் கரிதாம் பயன்.** (எ)

**உரைப்பகுதி:—**

**பரிமே:**—வெ.·.கி ஆம் ஆக்கம் வேண்டற்க - பிறர்பொருளை அவாவிக் கொண்டு அதனாலாகின்ற ஆக்கத்தை விரும்பாதொழிக, விளைவயின் பயன் மாண்டற்கு அரிதாம் - பின் அனுபவிக்குங்கால் அவ் ஆக்கத்தின் பயன் நன்றாதலில்லை ஆகலான்.

விளை என்பது முதனிலைத்தொழிற்பெயர். இவை ஏழுபாட்டானும் வெ.·.குதலின் குற்றம் கூறப்பட்டது.

**மணக்:**—*பிறர் பொருளை விரும்பிப் பெறுகின்ற ஆக்கத்தை வேண்டாது ஒழிக; அது பயன்படுங் காலத்தில் ஆகும் பயன் நன்றாதல் இல்லையாதலான் என்றவாறு.* (1)

**பருதி:**— *எ - து தனக்கு வேண்டின *மரபுவழிச் செல்வத்தை விரும்புவானாகில், அது அறமும் தரும்; முத்தியுந் தரும்; என்றவாறு.* (9)

**காளிங்:**— *எ - து எஞ்ஞான்றும் விரும்பாதொழிக; யாதினை எனின், நெறியன்றிப் பிறர் பொருளை விரும்பி மற்றதனால் ஆகும் ஆக்கத்தினைப் பயக்குமிடத்து மாட்சிமைப்படுதற்கு; அரிதாம்பயன் என்றவாறு.* (8)

178. **அ.·.காமை செல்வத்திற் கியாதெனின் வெ.·.காமை**
**வேண்டும் பிறன்கைப் பொருள்.** (அ)

**உரைப்பகுதி:**

**பரிமே:**— செல்வத்திற்கு அ.·.காமை யாதெனின் - சுருங்கன் மாலைத்தாகிய செல்வத்திற்குச் சுருங்காமைக்காரணம் யாதென்று ஒருவன் ஆராயின், பிறன் வேண்டும் கைப்பொருள் வெ.·.காமை- அது பிறன் வேண்டுங் கைப்பொருளைத் தான் வேண்டாமையாம்.

அ.·.காமை ஆகுபெயர், வெ.·.காதான் செல்வம் அ.·.காது என்பதாயிற்று.

**மணக்:**—*செல்வம் சுருங்காமைக்குக் காரணம் யாதோ எனின் பிறன் வேண்டுங் கைப்பொருளைத் தான் வேண்டாமை என்றவாறு.* (9)

* மனுவாதி. மருவாதியிலே என்ற பாடங்கள் காணப்படுகின்றன.

இது செல்வம் அழியாது என்றது.

பருதி:— எ - து. தன்னுடைய செல்வங் குறையாமை வேண்டுமாகில் பிறர் பாக்கியத்தினை விரும்பாது ஒழிக என்றவாறு. (7)

காளிங்:— எ - து ஒருவன் தனது செல்வமானது மெலிந்து நசியாமைக்குக் காரணம் யாதோ எனின், பிறனொருவனிடத்து உண்டான கைப்பொருளைத்தான் விரும்பாமையே என்றவாறு. (1)

**179. அறன் அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்**
**திறன்அறிந் தாங்கே திரு.** (கூ)

**உரைப்பகுதி:**

**பரிமே:**— அறன் அறிந்து வெஃகா அறிவுடையார் - இஃது அறன் என்றறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவுடையாரை, திரு, திறன் அறிந்து ஆங்கே சேரும் - திருமகள் தான் அடைதற்காங் கூற்றினை அறிந்து அக்கூற்றானே சென்றடையும்.

அடைதற்காங்கூறு காலமும், இடனும், செவ்வியும் முதலாயின. இவை இரண்டு பாட்டானும் வெஃகாமையின் குணம் கூறப்பட்டது.

மணக்:— அறத்தை அறிந்து பிறர்பொருளை விரும்பாத அறிவு உடையாரைத் திருமகள், தானே தகுதி அறிந்து, அப்போதே சேரும் என்றவாறு.

அறன் அறிதல் - விரும்பாமை என்றறிதல். இது செல்வம் உண்டாம் என்றது. (10)

பருதி:— எ - து தன்மத்தின் நெறியையறிந்து பிறர்செல்வத்தை விரும்பானாகில் திருமாது வீற்றிருக்கும் என்றவாறு. (8)

காளிங்:— எ - து நன்னெறியின் வந்த பொருளைக்கொண்டு வாழ்வதே நமக்கு அறமாவது என்றறிந்து, நெறியல்லனவற்றை விரும்பா அறிவுடையாளரைச் சென்று சேரும்; செல்வமானது என்றவாறு. (9)

**180. இறல்ஈனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும்**
**வேண்டாமை என்னும் செருக்கு.**

**உரைப்பகுதி:**

**பரிமே:**— எண்ணாது வெஃகின் இறல் ஈனும் - பின் விளைவது அறியாதுஒருவன் பிறன்பொருளை வௌவக்கருதின், அக்கருத்து அவ

னுக்கு இறுதியைப் பயக்கும்; வேண்டாமை என்னும் செருக்கு விறல் ஈனும் - அப்பொருளை வேண்டாமையென்னுஞ் செல்வம் வெற்றியைப் பயக்கும்.

பகையும் பாவமும் பெருக்கலின் இறலீனும் என்றும், அப்பொருளைவேண்டி உழல்வோர் யாவரையுங் கீழ்ப்படுதலின் விறலீனும் என்றும் கூறினர். செருக்கு ஆகுபெயர். இதனல் அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டன.

**மணக்.**— *விசாரியாதே பிறர்பொருளை விரும்புவானாயின், அது கேட்டைத்தரும்; அதனை வேண்டாமையாகிய பெருமிதம் ஆக்கத்தைத் தரும் என்றவாறு.*

*இஃது உயிர்க்குக் கேடுதரும் என்றது.* (8)

**பருதி:**— *எ - து கேடாகிய விதனத்தைக் கொடுக்கும், பிறர் *வாழ்வை ஆசைப்படுவானாகில், அஃதன்றியிலே, போன சென்மாந்திரத்திலே விட்டதற்குத் தக்கதாகக் கூடுமென்று எண்ணுவானாகில், திருமாது வெற்றியைத்தரும் என்றவாறு.* (2)

**காளிங்:**— *எ - து எஞ்ஞான்றுங் கேட்டினைத்தரும் இன்னுதனவற்றை விரும்புவானாயின்; இனி அஃதன்றி தனக்கு எல்லா வென்றியையும் தரும் பிறர்பொருளை விரும்பாமையாகிய மனமகிழ்ச்சி என்றவாறு.* (7)

## 19. புறங்கூறாமை.

**பரிமே:—** அஃதாவது காணாதவழிப் பிறரையிகழ்ந்துரையாமை. மொழிக்குற்றம் மனக்குற்றமடியாக வருதலான், இஃது அழுக்காறாமை வெஃகாமைகளின் பின் வைக்கப்பட்டது.

**மணக்:—** *புறங் கூறாமையாவது யாவரையும் இகழ்ச்சியானவற்றைப் புறத்து உரையாமை.*

**பரிப்:—** *மேல், மனத்தினாற்றவிரவேண்டுவன உரைத்தார்; இனி மொழியினாற் செய்யலாகாதன கூறுகின்றார் ஆதலின் இஃது அதன்பிற் கூறப்பெற்றது.*

**பருதி:—** *புறங்கூறாமையாவது, ஒருவர் குற்றத்தையும் புறஞ் சொல்லாமை என்றவாறு.*

181. அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறம்கூறான் என்றல் இனிது (க)

**உரைப்பகுதி:**

**•பரிமே:—** ஒருவன் அறம் கூறான் அல்ல செயினும் - ஒருவன் அறனென்று சொல்லுவதும் செய்யாது, பாவங்களைச் செய்யுமாயினும், புறம்கூறான் என்றல் இனிது - பிறனைப் புறங்கூறானென்று உலகத்தாரால் சொல்லப்படுதல் நன்று.

புறங்கூறாமை அக்குற்றங்களான் இழிக்கப்படாது மேற்பட்டுத் தோன்றும் என்பதாம். இதனால் அவ்வறத்தினது நன்மை கூறப்பட்டது.•

**மணக்:—** *ஒருவன் அறத்தை வாயால் சொல்லுதலுஞ் செய்யானாய்ப் பாவஞ் செய்யினும், பிறரைப் புறஞ்சொல்லான் என்று உலகத்தாரால் கூறப்படுதல் நன்றாம் என்றவாறு.*

*இது பாவஞ் செய்யினும் நன்மை பயக்கும் என்றது.*

**பருதி:—** *எ - து புண்ணியத்தின் வழியைப் பேசான். பாவமே செய்வானாகிலும் ஈடேறுவன்; ஒருவன் குற்றத்தைப் புறஞ்சொல்லாதிருப்பவன் என்றவாறு.*

**காளிங்:—** *எ - து தன் நாவினால் ஒருவன் அறத்தினைச் சொல்லானுமாய், பாவமாகிய அல்லாதனவற்றைச் செய்யுமவனாகிலும் ஒருவன் புறங்கூறான் என்று பிறர் சொல்லுமாறு இருத்தல் பெரிதும் இனிது என்றவாறு.*

**உரைவிளக்கப்பகுதி:**

**இராமா:—** அறம் கூறுன் என்பது அறம்கூறுனாகி என முற்று வினை எச்சவினையாய் நின்றது. கொடும்பாவியாயினும் என்று சொல்ல வந்தவர் அறம்கூறுன் அல்ல செயினும் என்றும், இப்புறம் கூறுமை என்னும் தருமத்தைக் கொள்வது மற்றத் தருமங்களைக் கொள்வதிலும் மிகவும் அருமை என்று சொல்லவந்தவர் புறம்கூறுன் என்றல் இனிது என்றும் சொன்னார்.

**மேற்கோள்பகுதி:**

**நச்:—** கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமையானும் என்றதில் புறங் கூறுமைக்கு மேற்கோள். (தொல். பொருள். 76.)

**இளம்:—** புறங்கூறுமையாவது ஒருவரை அவர் புறத்து உரையாமை என்பதற்கு மேற்கோள் (தொல். பொருள். 75.)

**ஒப்புமைப்பகுதி:—**

''இழிப்புறு நெஞ்சின னாயினும் யார்கணும்
பழிப்புறம் செல்லாப் பண்பினன். —பெருங். 1: 36; 9-10.

**182 அறன்அழீஇ அல்லவை செய்தலின்தீதே**
**புறன்அழீஇப் பொய்த்து நகை, (உ)**

**உரைப்பகுதி:**

**பரிமே:—** அறன் அழீஇ அல்லவை செய்தலின் தீது - அறன் என்பதொன்று இல்லை என அழித்துச்சொல்லி அதன் மேல் பாவங்களைச் செய்தலினுந் தீமையுடைத்து, புறன் அழீஇப் பொய்த்துநகை - ஒருவனைக் காணுதவழி இகழ்ந்துரையால் அழித்துச்சொல்லிக் கண்ட வழி அவனோடு பொய்த்துநகுதல்.

உறழ்ச்சி நிரல்நிறை வகையால் கொள்க. அழித்தல் - ஒளியைக் கோறல்.

**மணக்:—** அறத்தை அழித்து அறமல்லாதவற்றைச் செய்வதனினும் தீது; ஒருவனைக் காணுதவிடத்து இழித்துரைத்துக் கண்ட விடத்துப் பொய் செய்து நகுதல் என்றவாறு.

இது பாவத்தினும் மிகப் பாவம் என்றது.

பருதி:—தன்மத்தை அழித்துப் பாவத்தைச் செய்கிறதற்கு ஒக்கும்; ஒருவன் குற்றத்தைப் புறங்கூறுதல் என்றவாறு.

காளிங்:—எ – து ஒருவன் அறத்தினின்று நீங்கி, பாவங்களைச் செய்தலினும் சாலத் தீதே; யாதோ எனில் முன்னம் ஒருவன்முன்பு தானுளனாகியபின் புறத்துப் போந்து தான் அவனை முன்னஞ்சொல்லு முறைகையன்றி, சாலத் தப்பானவை சொல்லிப் பிறருடன் நகுகின்ற நகை என்றவாறு.

தப்பு என்றது பொய் என அறிக.

**183 புறம்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்**
**அறம்கூறும் ஆக்கம் தரும்.** (௩)

**உரைப்பகுதி;**

**பரிமே:**—புறம்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலின் - பிறனைக் காணாதவழி இகழ்ந்துரைத்துக் கண்டவழி அவற்கினியனாகப் பொய்த்து ஒருவன் உயிர்வாழ்தலின், சாதல் அறம் கூறும் ஆக்கம் தரும் - அது செய்யாது சாதல் அவனுக்கு அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைக் கொடுக்கும்.

பின் புறங்கூறிப் பொய்த்தல் ஒழிதலின், சாதல் ஆக்கந்தரும் என்றார். ஆக்கம் அஃது ஒழிந்தார் மறுமைக்கண் எய்தும் பயன். அறம் ஆகுபெயர். தரும் என்பது இடவழுவமைதி.

மணக்:—காணாவிடத்துப் புறஞ்சொல்லிக் கண்டஇடத்துப் பொய் செய்து உயிரோடுவாழ்தலின், புறங்கூறாதிருந்து நல்குரவினால் சாதல் அறநூல் சொல்லுகின்ற ஆக்கமெல்லாம்தரும் என்றவாறு. (2)

பரிப்:—அறங்கூறுகின்ற ஆக்கமாவது யோகநுகர்ச்சியும் வீடு பெறுதலும்:' புறங்கூறுவான் சாவாதொழியப் பாவமும் பகையும் தேடும். சாவ அவை எல்லாம் இல்லையாம் என்றதாம்.

பருதி:—எ - து ஒருவன் குற்றத்தை அவர்க்கு வேண்டாதார் முன்கூடப் புறஞ்சொல்லி, அதனாலே, பிரயோசனப்பட்டு வயிறுவளர்ப்பதில், சாதல் நன்று என்றவாறு. (9)

காளிங்:—எ - து ஒருவன் ஒருவனைப் பொய்த்துப் புறங்கூறி இங்ஙனம் உயிர் வாழ்தலில், இறத்தலாகின்ற சாதலைத் துணிவானாயின் இவ்வுலகத்து அறநூல் சொல்லுகின்ற இம்மை மறுமையாகிய ஆக்கத்தைத் தரும் என்றவாறு.

இனி மற்றிங்ஙனம் பிறரைப் புறங்கூறுதல் இயல்பினராகிய பெருந்தன்மையாளர்க்கே பயனல்லனவற்றைச் சொல்லாமையாகின்ற நெறியுமுளது. ஆகலால் மற்றிதன்பின்னர் *இதனை அறிவிக்கின்றது. (10)

* இதனை என்றது பயனிலசொல்லாமை என்ற அடுத்த அதிகாரத்தை,

**உரை விளக்கப்பகுதி :**

**இராமா:**—அறம் என்றது அறநூலையாதலால் ஆகுபெயர். அவனுக்குக் கொடுக்கும் என்னுமல் தரும் என்றது இடவழுவமைதி. வழுவமைதி என்பது, குற்றமாயினும் அது இருக்கலாம் என்று அமைத்துக் கொள்ளப் படுவது.

**184. கண்நின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க**
**முன்இன்று பின்நோக்காச் சொல். (ச)**

**உரைப்பகுதி:**

**பரிமே:**—கண் நின்று கண் அறச்சொல்லினும் - ஒருவனெதிரே நின்று கண்ணோட்டமறச் சொன்னுனுயினும், முன் இன்று பின் நோக்காச் சொல் சொல்லற்க - அவனெதிரின்றிப் பின்வருங்குற்றத்தை நோக்காத சொல்லைச் சொல்லாதொழிக.

பின் ஆகுபெயர். சொல்வான் தொழில் சொன்மேல் ஏற்றப் பட்டது. இவை மூன்று பாட்டானும் புறங்கூற்றினது கொடுமை கூறப் பட்டது.

**மணக்:**-ஒருவன் கண்ணெதிரேநின்று* கண்பார்த்தல் ஒழியச்சொல்லினும் அமையும்; பிற்காலத்து அவன்முன்னே நின்று எதிர்முகம் நோக்க ஒண்ணுத சொல்லைச் சொல்லாது ஒழிக என்றவாறு. (10)

**பரிப்:**—இது புறங்கூறுதல் தவிர்க என்றது. இதனுல் கடியசொல் கூறலும் ஆகாது. (1)

**பருதி:**—எ - து ஒருவர் முகம்பார்த்துத் தோஷம் சொல்வது நன்று; அவனைக்காணுதவிடத்தில் புறஞ்சொல்லவொண்ணுது என்றவாறு. (10)

**காளிங்:**—எ - து ஒருவனிடத்து நின்று வைத்து கண்ணோட்டங் கெடச் சில சொல்லுவானுயினும் சொல்லாது ஒழிக; யாதினை எனில் ஒருவன் தன் முன்பிலனுகக்கண்டு மற்றவனைப் பின்பு முகநோக்கத் தகாத சொல்லினை என்றவாறு. (2)

**உரை விளக்கப்பகுதி :**

**நுண்:**—கண் - கண்ணோட்டம். பின்வருங்குற்றம் என்றதால் பின் ஆகு பெயர். நோக்காதசொல் - அக்குற்றம் பரிகரிக்கக்கருதாத சொல். சொல்வான் தொழில் சொன்மேல் ஏற்றப்பட்டது.

---

*'கண்நின்று' எனப் பிரிப்பர் இவர்.

இராமா:—பின்வருங் குற்றத்தைப் பின் என்றது ஆகுபெயர். நோக்காதவன் சொல்லும் தொழிலை நோக்காச்சொல் எனச் சொல்லின் மேல் ஏற்றப்பட்டது.

## மேற்கோள்பகுதி:

காரிரத்ன:—பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற, 251)

## ஒப்புமைப்பகுதி:

"காவாதவள் கண்ணறச் சொல்லிய வெஞ்சொல்
ஏவோ? அமிர்தோ?" —சீவக. 1069.

"கணமலை நன்னுட கண்ணின் றொருவர்
குணனேயும் கூறற் கரிதால்—குணனழுங்கக்
குற்றமுழை நின்று கூறும் சிறியவர்கட்
கெற்ருல் இயன்றதோ நா." —நாலடி. 353;

"கேளிர் பிரிவர் நட்பினராய்க் கெழுமுவாரும் இலராவர்
மூளும் வடுச்சொல் நேராக மொழிவர் எவரும் ஆதலினல்
நாளும் அறத்தைக்கொன்று அனந்த நவைகள் செயினும் எதிர்நின்று
மாள உரைசெய்யினும செய்யேல் மைந்தா மறந்தும் புறங்கூறல்,"
—விநா. அரசி-34.

## 185. அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறம் [சொல்லும்
## புன்மையாற் காணப் படும்.

பரிமே:—அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை - புறஞ் சொல்லுவான் ஒருவன் அறனை நன்று என்றுசொல்லினும் அது தன் மனத்தானைச் சொல்லுகின்றானல்லன் என்பது, புறஞ்சொல்லும் புன்மையால் காணப்படும் - அவன் புறஞ்சொல்லுதற்குக் காரணமான மனப்புன்மையானே அறியப்படும்.

மனம் தீதாகலின், அச்சொல் கொள்ளப்படாது என்பதாம்.

மணக்:—ஒருவன் அறத்தை நினைக்கின்ற மனமுடையன் அல்லாமை, அவன் பிறரைப் புறஞ்சொல்லும் புல்லியகுணம் ஏதுவாக அறியப்படும் என்றவாறு.

இஃது இதனைச்சொல்லுவார் அறம் அறியார் என்றது. (4)

பருதி:—எ-து தன்மநெறி சொல்லுகின்ற மனத்தான் நன்மை ஒருவன் குற்றத்தைப் புறஞ்சொல்லாமல் இருப்பானகில் நன்று என்றவாறு. (3)

காளிங்:—எ - து ஒருவர் அறநூல் சொல்லுகின்ற தூய நெஞ்சத்தாரல்லர் என்பதனை மற்றும் தாமொருவரைப் புறங்கூறுகின்ற புல்லிமையால் அறியலாம்; என்பது இவனது பேதைமையை அறிவிக்கின்றான் என்றவாறு. (7)

## ஒப்புமைப்பகுதி:

"அறவின்றி அயல் தூற்றும் அம்பல். —கலி: 3 : 1

**186. பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்**
**திறன்தெரிந்து கூறப் படும்,** (சா)

## உரைப்பகுதி:

**பரிமே:**—பிறன் பழி கூறுவான் - பிறனொருவன் பழியை அவன் புறத்துக் கூறுமவன், தன்பழியுள்ளும் திறன் தெரிந்து கூறப்படும் - தன்பழி பலவற்றுள்ளும் உளையுந்திறம் உடையவற்றைத் தெரிந்து அவனால் கூறப்படும்,

புறத்து என்பது அதிகாரத்தால் பெற்றாம். இது வருகின்றவற்றிற்கும் ஒக்கும். திறன் ஆகுபெயர். தன்னைப் புறங்கூறியவாறு கேட்டான் அக்கூறியாற்கு அவ்வளவன்றி அவனிறந்துபட்டு உளையுந் திறத்தனவாகிய பழிகளை நாடி எதிரே கூறுமாகலின், திறன்தெரிந்து கூறப்படும் என்றார்.

**மணக்:**—பிறனுடைய பழியைச் சொல்லுமவன், தனக்கு உண்டான பழிகளிலும் சிலவற்றை வேறுபடத்தெரிந்து பிறரால் சொல்லப்படுவன் என்றவாறு. (9)

**பரிப்:**—இது, தான் பிறராற் புறஞ்சொல்லப் பெறுவன் என்கின்றது.

**பருதி:**—எ - து ஒருவன் குற்றத்தைப் புறஞ்சொல்லுவான், தன் குற்றத்தையும் விசாரித்துச் சொல்லவேணும் என்றவாறு. (8)

**காளிங்:**—எ - து பிறன் ஒருவனைப் பழிசொல்லக்கருதுமவன் தனது பழியைப் பிறர் கருதும் திறப்பாட்டினையும் தெளிய ஆராய்ந்து கண்டு கூறப்படும் என்றவாறு, (3)

## உரைவிளக்கப்பகுதி:

**இராமா:**—வேறு உரை: வேறொருவனுடைய பழியை அவன் புறத்திலே சொல்பவன் இப்புறங்கூறுதலாகிய தன்னுடைய நிந்தையை மேன் மக்கள் நினைக்கும் தன்மையைச் சான்றோராலே தெரிந்துகொண்ட பின் சொல்லக்கடவது என்றவாறு.

கூறப்படும் என்றது செயப்பாட்டுவினை அன்று; கூறவேண்டும் என்றது போல உம்மீற்று வியங்கோள் முற்றுவினை. கூறுக எனின் அமையும்; கூறவேண்டும் கூறப்படும் எனச்சொல்வது சொற்பொருள் விரித்தல் என்னும் உத்தி. உண்டு வருவான் என்றால் உண்டபின் வருவான் எனப் பெயரெச்சப் பொருள்படுதல்போல, தெரிந்து என்னும் வினையெச்சம், தெரிந்தபின் என நின்று, கூறப்படும் என்பதனோடு முடிந்தது. தெரிந்த பின் தன்பழியே உயர்ந்து காணப்படும்; ஆதலாலே பிறன்பழி கூறவே கூறான் என்பது நிச்சயமாதலால் அதுபற்றித் தெரிந்து கூறப்படும் என்றார் எனக்கொள்க. இன்னும், கூறப்படும் என்பதற்கு இவ்வாறன்றிக் கூறுதல் கூறப்படுதல் என்னும் செய்வினை செயப்பாட்டுவினை இரண்டினுள்ளும், தெரிந்தபின் இவனுக்குப் புறங் கூறுதலாகிய செய்வினை ஒழிதலால் கூறப்படும் என்றார். இது 'நீயிர் பெரிதும் அறிதிர்' என்பதுபோலக் குறிப்புப்பொருள்பட நின்றது. என்னை? புறங்கூறாதவன் அறங்கூறானல்ல செயினும் அவைபற்றி இகழப்படான் ஆதலால் அச்செயப்பாட்டுவினையும் இல்லை என்பது தோன்ற நின்றமையின் எனவும்கொள்க.

**187. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி**
**நட்பாடல் தேற்றா தவர். (எ)**

### உரைப்பகுதி:

**பரிமே:**—பகச்சொல்லிக் கேளிர் பிரிப்பர் - தம்மை விட்டு நீங்குமாற்றால் புறங்கூறித் தம் கேளிரையும் பிரியப்பண்ணுவர், நகச் சொல்லி நட்பாடல் தேற்றாதவர் - கூடி மகிழுமாறு இனியசொற்களைச் சொல்லி அயலாரோடும் நட்பாடலை அறியாதார்.

சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. கேளிரையும் பிரிப்பர் என்ற கருத்தான், அயலாரோடு என்பது வருவித்து உரைக்கப்பட்டது. அறிதல் தமக்கு உறுதியென்றறிதல். "கடியுமிடம் தேற்றாள் சோர்ந்தனள் கை"* என்புழிப்போலத் தேற்றாமை தன்வினையாய் நின்றது. புறங்கூறுவார்க்கு யாவரும் பகையாவர் என்பது கருத்து.

**மணக்:**—நீங்கும்படி சொல்லித் தம் கேளிரானவரைப் பிரிப்பர், மகிழச் சொல்லி நட்பாடலை உயர்வுபண்ண மாட்டாதார் என்றவாறு.

**பரிப்:**—இது மகிழச் சொல்லி உறவுபண்ணமாட்டாதார் நட்டாரை இழப்பர் என்றது. (6)

**பருதி:**—எ - து இரண்டுபேர் ஒருமனமாகக் கூடியிருக்கின்ற சிநேகத்தைப் புறஞ்சொல்லிப் பிரித்துவிடுவார் ஆர் என்னில், இரண்டு பேருக்கும் மனம் பிரியப்படச் சொல்லி உறவுபண்ண அறியாதவர் என்றவாறு. (5)

* கலி, 92: 50.

காளிங்:—எ - து நட்டோரையுங்கூட நட்புப் பிரிக்குமாறு சொல்லிப் பகுத்து விடுவர்; பிறராகிய பகைவரையும் அவர் முகமலருமாறு பொருந்தச்சொல்லி நட்பினைச் செய்தல் அறியாதவர் என்றவாறு. (6)

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:—பிரிப்பர் - பிரியப்பண்ணுவர்; "அறிவகற்றும்" (372) என்பதும் அது. தேற்றாதவர் - அறியாதவர் எனத் தன்வினையானது. "தேற்றுதலார்க்கும்" (693) என்றது போல நில்லாமையானும் அறிக.

இராமா:- தேற்றாதவர் என்பது அறியாதவர் அறிவியாதவர் எனத் தன்வினை பிறவினை இரண்டினும் வரும். இங்கே தன்வினை.

**188. துன்னியார் குற்றமும் *தூற்றும் மரபினர்**
**என்னைகொல் ஏதிலார் மாட்டு. (அ)**

## உரைப்பகுதி:

**பரிமே:**—துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினர் - தம்மொடு செறிந்தாரது குற்றத்தையும் அவர்புறத்துத் தூற்றுமியல்பினையுடையார், ஏதிலார்மாட்டு என்னைகொல் - அயலார்மாட்டுச் செய்வது யாது கொல்லோ!

தூற்றுதல் - பலரும் அறியப் பரப்புதல். அதனிற்கொடியது பிறிதொன்று காணாமையின், என்னைகொல் என்றார். செய்வது என்பது சொல்லெச்சம். என்னர்கொல் என்று பாடமோதி, எவ்வியல்பினராவர் என்று உரைப்பாரும் உளர்.

**மணக்:**—தம்மோடு செறிந்தார் குற்றத்தையும் பிறர்க்கு உரைக்கின்ற சேதியை உடையார் செறிவில்லாதார்மாட்டு யாங்ஙனஞ் செய்வாரோ என்றவாறு.

இது யாவரோடும் பற்றிலர் என்றது. (7)

**பருதி:**—எ - து ஒருவர் குற்றத்தைப் புறஞ்சொல்லித் திரிவார் தங்களை வேண்டாதார் முன் எப்படி ஆவரோ என்னில், பலர்க்கும் வேண்டாதார் ஆவர் என்றவாறு. (6)

**காளிங்:**—எ - து எஞ்ஞான்றும், நட்டாராகிய அற்றத்தார் அற்றம் அடக்குதல் அறமாகக்கொள்ளாது, அதனைக் கைவிட்டு, அவரது குற்றமும் புறம்போந்து யாவருமறியவெளியிடுகின்ற இயல்பினையுடையார், இனிப் பகைவர்மாட்டு எங்ஙனேயோ? புறங்கூறும் என்பார்க்கு உதவியாக எனைத்து இடரும் செய்வாராவர் என்றவாறு. (8)

*'தூக்கும்' என்பது பரிப்பெருமாள் பாடம்,

189. அறனோக்கி ஆற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை. (கூ)

## உரைப்பகுதி :

பரிமே:—புறன் நோக்கிப் புன்சொல் உரைப்பான் பொறை - பிறர் நீங்கின அளவு பார்த்து அவர் பழித்துரையை உரைப்பானது உடற் பாரத்தை, வையம் அறன் நோக்கி ஆற்றுங்கொல் - நிலம் இக் கொடியது பொறுத்தலே எனக்கு அறமாவது எனக் கருதிப் பொறுக்கின்றது போலும்.

எல்லாவற்றையும் பொறுத்தல் இயல்பாயினும், இது பொறுத்தற் கரிது என்னுங் கருத்தால், அறநோக்கியாற்றுங்கொல் என்றார். இவ் ஐந்து பாட்டானும் புறங்கூறுவார்க்கு எய்துங் குற்றங் கூறப்பட்டது.

மணக்:—பிறன் இல்லாதவிடம் பார்த்துப் புறஞ்சொல் கூறுவானது உடற்பாரத்தை நிலம் தானே அறத்தை நோக்கிப் பொறுத்ததாம்; அல்லது போக்கும் என்றவாறு.

இது புறங்கூறுவார்க்குத் துணையாவாரில்லை என்றது. (8)

பருதி:—இ - து ஒருவன் குற்றத்தைப் புறம்சொல்பவனை, பூமி தன் மத்தைப் பார்த்துப் பாதுகாக்கும் அல்லது பூமி அவனைத் தாங்காது என்ற வாறு. (4)

காளிங்:—இ - து அகழ்வாரைத் தாங்கும் பூமியானது தன் தருமத்தை நேர் நோக்கி ஆற்றுகின்றது கொல்லோ; ஒருவனது குற்றஞ் சொல்லுகைக்கு இடம் என்று குறிக்கொண்டு புல்லிய சொல்லினைக் கூறுவானாயின் அவனது பாரத்தை என்றவாறு. (9)

## உரைவிளக்கப்பகுதி:

இராமா:—பூமி எல்லாவற்றையும் சுமப்பது சுபாவமானாலும் இது சுமப்பதற்கு அரிது என்னும் கருத்தினாலே அறன் நோக்கி ஆற்றுங்கொல் என்றார்.

## மேற்கோள்பகுதி:

தெய்வச்:—அறத்தை நோக்கி யெனவிரிதலேயன்றி, அறத்தான் நோக்கி, அறத்தின் நோக்கி எனவிரிப்பினும் ஆம். தொல் - சொல் 89.

190. ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. (ய)

**உரைப்பகுதி:**

**பரிமே:**— ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின் - ஏதிலாரைப் புறங்கூறுவார் அதற்கு அவர் குற்றங்காணுமாறுபோலப் புறங்கூறலாகிய தங்குற்றத்தையுங் காணவல்லராயின், மன்னும் உயிர்க்குத் தீது உண்டோ - அவர்நிலைபேறுடைய உயிர்க்கு வருவதொரு துன்டம் உண்டோ?

நடுவுநின்று ஒப்பக்காண்டலருமை நோக்கிக் காண்கிற்பின் என்றும்; கண்டவழி ஒழிதலில் பாவமின்றும் ஆகவே வரும் பிறவிகளினும் துன்பமில்லை என்பது நோக்கி உயிர்க்குத் தீதுண்டோ என்றும் கூறினர். இதனல் புறங்கூற்றெழிதற்கு உபாயங் கூறப்பட்டது.

*மணக்:—அயலார் குற்றம்போலத் தனது குற்றத்தையும் காணவல்லாராயின். நிலைபெற்ற உயிர்க்குவருந் தீமை உண்டோ என்றவாறு.*

*இது காண்பாராயின், சொல்லார் என்று புறஞ்சொல்லாமைக்குக் காரணம் கூறிற்று.* (10)

பருதி:—*எ - து தான் ஒருவர் குற்றத்தை யாவர்க்கும் வேண்டாதார் முன்னே சொல்லுவதுபோலத் தனக்கு வேண்டாதாரும் தன் குற்றத்தைச் சொல்வார் என்று அறிவானகில், அவனுக்கு ஒரு குற்றமும் இல்லை என்றவாறு.* (7)

*காளிங்:—எ-து பிறரது குற்றத்தைத் தான் காணுமாறு போல, தமது குற்றத்தையும் காணவல்லதன்பின்பு ஒரு குற்றம் உண்டோ மற்ற இவ்வுலகத்து உயிர்வாழும் மக்கட்கு என்றவாறு.* (5)

**மேற்கோள்பகுதி:**

*மயிலை:—ஏதில் என்பது அயலில் என்னும் பொருள் குறித்து வந்தமைக்கு மேற்கோள்.* (நன். 420.)

# 20, பயனில்சொல்லாமை

**பரிமே:—** அ∴தாவது தமக்கும் பிறர்க்கும் அறம்பொருள் இன்ப மாகிய பயன்களுள் ஒன்றும் பயவாத சொற்களைச் சொல்லாமை. *பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என வாக்கின்கண் நிகழும் பாவம் நான்கனுள், பொய் துறந்தார்க்கல்லது ஒருதலையாகக் கடிய லாகாமையின், அ∴தொழித்து, இல்வாழ்வாரால் கடியப்படும் ஏனை மூன்றனுள், கடுஞ்சொல் இனியவை கூறலானும், குறளை புறங்கூறு மையானும் விலக்கி, நின்ற பயனில்சொல் இதனான் விலக்குகின்றாராக லின், இது புறங்கூறாமையின் பின் வைக்கப்பட்டது.

**மணக்:**—*பயனில சொல்லாமையாவது கேட்டார்க்கும் தனக்கும் நற்பயன்படாத சொற்களைக் கூறாமை.*

**பரிப்:**—*அஃதாவது அறம்பொருளின்பங்களைப் பயவாது, அவற்றுக்கு மாறாயின வற்றைப் பயக்கும் சொற்கள். அதுவும் கடியப்பட்ட சொல் லாதலின் புறங்கூறாமையின்பாற் கூறப்பெற்றது.*

**பருதி:**—*பயனில சொல்லாமையாவது, வீண்வார்த்தை சொல்லாமல், பயனுள்ள வார்த்தை சொல்லுக என்றவாறு.*

**191.** **பல்லார் முனியப் பயனில சொல்லுவான்**
**எல்லாரும் எள்ளப் படும்.** **(க)**

**உரைப்பகுதி:**

**பரிமே:—**பல்லார் முனியப் பயனில சொல்லுவான் - அறிவு உடையார் பலருங்கேட்டு வெறுப்பப் பயனிலவாகிய சொற்களைச் சொல்லுவான், எல்லாரும் எள்ளப்படும் - எல்லாரானும் இகழப்படும்.

அறிவுடையார் பலரும் வெறுப்பவே ஒழிந்தாரானும் இகழப்படுத லின், எல்லாரும் எள்ளப்படும் என்றார். மூன்றனுருபு விகாரத்தால் தொக்கது.

**மணக்:**—*பயனில்லாதவற்றைப் பலர் வெறுக்கச் சொல்லுமவன் எல் லாரானும் இகழப்படுவன் என்றவாறு.* (6)

**பரிப்:**—*இது பிறரால் இகழப்பெறுவன் என்கின்றது.*

**பருதி:**—*எ - து தனக்கு வேண்டாதார் இகழும்படியாகப் பயனில சொல்வானைத் தனக்கு வேண்டின பேரும், வேண்டாதபேரும் இகழ்வர் என்றவாறு.* (1)

---

*இந்நூல் 202-ம் பக்கம் பார்க்க, மணிமேகலை 24 : 127-128, 30 : 68-69.

காளிங்:—எ - து தனக்கு வேண்டாதார் இகழும்படியாகப் பயனில சொல்லுவானை வேண்டின பேரும் வேண்டாதபேரும் இகழ்வார் என்றவாறு$. (1)

## உரைவிளக்கப்பகுதி:

நுண்:—எல்லாரும் என்றது மூன்றன்விகாரம்; இஃது "என்பும் உரியர்" (72) என்பதனோடு ஒக்கும்.

இராமா:—எல்லாம் என்ற இடத்தில் எல்லாராலும் என்ற மூன்றும் வேற்றுமை உருபு குறைந்து நின்றது. அது செய்யுள் விகாரம். எல்லாராலும் என விரிந்துநின்றால் நாலசைச்சீராய்ச் செப்பலோசை கெட்டு நிற்குமாதலால் எல்லாரும் எனக் குறைந்து நின்று தொகுத்தல் விகாரத்தைப்பெற்றுச் சீரும் செப்பலோசையும் கெடாமல் நின்றது காண்க.

## மேற்கோள்பகுதி:

காரிரத்ன:—பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற். 251.)

**192. பயனில பல்லார்முன் சொல்லல் நயனில**
**நட்டார்கண் செய்தலின் தீது.** (௨)

## உரைப்பகுதி:

பரிமே:—பயன் இல பல்லார்முன் சொல்லல் - பயனிலவாகிய சொற்களை அறிவுடையார்பலர்முன்பே ஒருவன் சொல்லுதல்; நயன் இல நட்டார்கண் செய்தலின் தீது - விருப்பமிலவாகிய செயல்களைத் தன் நட்டார்மாட்டுச் செய்தலினும் தீது.

விருப்பமில வெறுப்பன. இச்சொல் அச்செயலினும் மிக இகழற்பாடு பயக்கும் என்பதாம்.

மணக்:—பயனில்லாதவற்றைப் பலர் முன்பு கூறுதல், விருப்பமில்லாதவற்றை நட்டார்மாட்டுச் செய்தலினுந் தீதே என்றவாறு.

இது பயனில சொல்லல் இம்மை மறுமை இரண்டின்கண்ணும் தீமை பயக்கும் என்றது. (2)

பருதி:—எ - து பயனில்லாத வார்த்தையை நல்லோர்முன் சொல்லுதல், நயனில்லாத வார்த்தையைச் செற்றாரிடத்தில் செய்தலின் தீதாம் என்றவாறு. (7)

$ இவருரையும் பருதியார் உரையும் ஒத்துள்ளன.

193. நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை. (௩)

உரைப்பகுதி:

பரிமே:—பயன் இல பாரித்து உரைக்கும் உரை - பயனிலவாகிய பொருள்களை ஒருவன் விரித்துரைக்கும் உரைதானே; நயன் இலன் என்பது சொல்லும் - இவன் நீதியிலன் என்பதனை உரைக்கும்.

உரையால் இவன் நயனிலன் என்பது அறியலாம் என்பார், அதனை உரைமேலேற்றி உரைசொல்லும் என்றார்.

மணக்:—நயனுடையன் அல்லன் என்பதனை அறிவிக்கும்; பயனில்லாதவற்றைப் பரக்கவிட்டுச் சொல்லுஞ் சொற்கள் என்றவாறு.

இது பயனில சொல்வார் இம்மையின்கண் பிறரால் இயம்பப்படார் என்றது.

பருதி:—எ - து நயமில்லாதவன் என்று சொல்லப்படும்; பயனில்லாத வார்த்தையை எல்லார்க்குஞ் சொல்வானை என்றவாறு.

[1]காளிங்:—எ - து நயமில்லாதவன் என்று சொல்லப்படும் பயனில்லாத வார்த்தையை எல்லார்க்குஞ் சொல்வானை என்றவாறு.

194. நயன்சாரா [2]நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து. (௪)

உரைப்பகுதி:

பரிமே:—பயன் சாராப் பண்பு இல் சொல் பல்லாரகத்து - பயனொடு படாத பண்பில் சொற்களை ஒருவன் பலரிடைச் சொல்லுமாயின்; நயன் சாரா நன்மையின் நீக்கும் - அவை அவர்மாட்டு நீதியொடு படாவாய் அவனை நற்குணங்களின் நீக்கும்.

பண்பு - இனிமையும் மெய்ம்மையும் முதலாய சொற்குணங்கள். சொல்லுமாயின் என்பதும், அவர்மாட்டு என்பதும் எச்சமாக வருவிக்கப்பட்டன.

மணக்—ஒருவன் ஒரு பயனைச் சாராத பண்பில்லாச் சொல்லைப் பலரிடத்துக் கூறுவானாயின் அவன் நடு சாராது நன்மையின் நீங்கும்,



[1] இவர் உரையும் பருதியார் உரையும் ஒத்துள்ளன.

[2] 'நன்மையும் நீங்கும்' என்பது பருதி, காளிங்கர் பாடம்.

இது விரும்பப்படாமையுமன்றி நன்மையும் பயவாது என்றது.

பருதி:—எ - து நயஞ்சேராமல், திருமாதும் போம்; பயனில்லாத வார்த்தையைச் சொல்லுவானிடத் என்றவாறு. (3)

[1]காளிங்:—எ - து நயஞ்சேராமல் திருமாதும் பொய்க்கும்; பயனில்லாத வார்த்தையைச் சொல்லுவானிடத்து என்றவாறு. (3)

## உரைவிளக்கப்பகுதி:

நுண்:—நயன் சாரா, பயன்சாரா என மூன்றனை விரித்தார். [2]சார்ச்சியைத் தொல்காப்பியர் இரண்டனுக்கும் ஏழனுக்கும் விதித்தார். தொல்காப்பியத்துள் இளம்பூரணர் "புள்ளியில்லா எல்லா மெய்யும்" (எழுத். 17) "புள்ளியில்லாவாய்" எனச் செய்தெனெச்ச வாய்பாட்டான் உரைத்தது போல, இவ்வுரையாசிரியரும் "நயன்சாராவாய்" என உரைத்தார். "காலாழ் களரின் நரியடுங் கண்ணஞ்சா" (500) என்பதும் அது. ஆகாரவீற்றஃறிணைப்பன்மை யெதிர்மறைவினைமுற்று எச்சமாயிற்று என அமைப்பினும் அமையும்.

## மேற்கோள்பகுதி:

மயிலை:—ஏழாம்வேற்றுமையில் வரும் அகம் என்ற உருபிற்கு மேற்கோள். (நன். 301.)

சங்கர:—பல்லாரகத்து; இதில் வரும் உருபு சூத்திரத்தில் சொல்லப்படாததேனும் கண்ணுருபின் பரியாய உருபாக வருதல் காண்க. (நன். 302.)

**195. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில**
**நீர்மை உடையார் சொலின். (ரு)**

## உரைப்பகுதி:

பரிமே:—பயன் இல நீர்மை உடையார் சொலின் - பயனிலவாகிய சொற்களை இனிய நீர்மை உடையார் சொல்லுவாராயின், சீர்மை சிறப்பொடு நீங்கும் - அவரது விழுப்பமும் அதனால் வரும் நன்கு மதிக்கற்பாடும் உடனே நீங்கும்.

நீர்மை நீரின் தன்மை. சொலின் என்பது சொல்லாமையை விளக்கிற்று.

---

[1] இவர் உரையும் பரிதியார் உரையும் ஒத்துள்ளன.
[2] தொல். சொல். 84.

மணக்:—பயனில்லாதவற்றை நீர்மையுடையார் கூறுவாராயின் அவர்க்கு உண்டான சீர்மையும் சிறப்பும் போம் என்றவாறு.

இது நீர்மையுடையாராயினும் எல்லா நன்மையும் போம் என்றது.(5)

பருதி:—எ - து ஒழுக்கமும் செல்வமும் கெடும்; பயனில்லாத வார்த்தையை நல்லோர்முன் சொல்லுவது என்றவாறு. (4)

காளிங்:—எ - து நெஞ்சில் தண்ணளியுடையோர் மற்றுப் பயனில்லாதனவற்றைச் சில சொல்லுவராயின் அப்பொழுதே சிறந்த ஒழுக்கம் ஆக்கம் என்னும் இரண்டும் கெடும் என்றுவாறு.

சீர்மை என்பது ஒழுக்கம். சிறப்பு என்பது ஆக்கம். நீர்மை என்பது தண்ணளி. (7)

**196. பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்**
**மக்கட் பதடி எனல்,** (சா)

**உரைப்பகுதி:**

**பரிமே:**—பயன் இல் சொல் பாராட்டுவானை மகன் எனல் - பயனில்லாத சொற்களைப் பலகாலுஞ் சொல்லுவானை மகன் என்று சொல்லற்க; மக்கட்பதடி எனல் - மக்களுள் பதர் என்று சொல்லுக.

அல்விகுதி வியங்கோள், முன் எதிர்மறையினும், பின் உடம்பாட்டினும் வந்தது. அறிவென்னும் உள்ளீடின்மையின், மக்கட்பதடி என்றார், இவை ஆறுபாட்டானும் பயனில்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றங் கூறப்பட்டது.

மணக்:—பயனில்லாத சொல்லைக் கொண்டாடுவானை மகன் என்னொழிக; மக்களில் பதர் என்று சொல்லுக என்றவாறு.

இது மக்கட் பண்பிலன் என்றது. (7)

பருதி:—எ - து பயனில்லாத சொல்லை நல்லோர்முன் பாராட்டுபவனை மனிதன் என்பது, நெல்லுடன் பிறந்த பதரை நெல் என்பது போலும் என்றவாறு. (10)

காளிங்:— ... ... ... (10)

**உரைவிளக்கப்பகுதி:**

நுண்:—அல்விகுதி வியங்கோள், முன் எதிர்மறையினும் பின் உடம்பாட்டினும் வந்தது. இவ்வாறு உரையாது அல்விகுதி முன் எதிர்மறை

யினும் பின் வியங்கோளிலும் வந்தது என உரைத்தமை பிழை, "உள்ளத்தான் உள்ளலுந் தீதே" (282) என்பதனுள்ளும் 'அல் விகுதி வியங்கோள் எதிர்மறைக்கண் வந்தது' என்பதனாலும் அறிக எதிர்மறையிலும் விதியிலும் "சொல்லுக சொல்லின்.......சொல்லற்க" (200) எனக் கவ்வீற்று வியங்கோள் வந்தது. வினையியலில் "முன்னிலை தன்மை ஆயீரிடத்தோடு, மன்னுதாகும் வியங்கோட்கிளவி" (தொல். சொல். 221.) என்னுஞ் சூத்திரத்துள் நச்சினார்க்கினியரும் "பயனில் சொற் ......மகன் எனல் மக்கட்பதடி எனல்" என்பதனை உடன்பாட்டினும் எதிர்மறையினும் வியங்கோளாய் வந்தது என்றார்.

**மேற்கோள்பகுதி :**

அரும்பத:—"தீதறுநல்லுரை கேளா தொழிவனேல் நோதக்க செய்தாள் என்று எள்ளல்" எள்ளல் "பயனில்சொல் பாராட்டுவானை மகன் எனல் மக்கட்பதடி எனல்" என்பதுபோலக் கொள்க. (சிலப்.ஊர்சூழ்13)

தெய்வச்:—உடன்பாட்டினும் மறையினும் அல் ஈற்று வியங்கோள் வருதற்கு மேற்கோள். (தொல். சொல். 219.)

சங்கர,—பதடியெனல் என்பது வியங்கோள்; மகன் எனல் என்பது எதிர்மறை யொருமை ஏவல். (நன். 338.)

சிவஞான:—விதிவினைக்கும் மறைவினைக்கும் எனல் என்பது மேற்கோள். (நன். 822.)

சுவாமி:—எனல்: இச்சொல்லொன்றே விதிவினையும் மறைவினையுமாயின. (இ. கொ. 67.)

197. நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று, (எ)

**உரைப்பகுதி:**

பரிமே:—நயன் இல சான்றோர் சொல்லினும் சொல்லுக - நீதியோடு படாத சொற்களைச்சான்றோர் சொன்னாராயினும், அஃதமையும்; பயன்இல சொல்லாமை நன்று - அவர் பயனிலவற்றைச் சொல்லாமை பெறின் அது நன்று.

சொல்லினும் எனவே, சொல்லாமை பெறப்பட்டது. நயனிலவற்றினும் பயனில தீய என்பதாம்.

மணக்:—சான்றோர் நயனில்லாதவற்றைச் சொல்லினுஞ் சொல்லுக, அமையும்; பயனில்லாதவற்றைச் சொல்லாமை நன்று என்றவாறு. (10)

இது சான்றோர்க்கு ஆகாது என்றது.

பருதி:—நயமில்லாத வெட்டையான வார்த்தை சொன்னாலும், பய னில்லாத வார்த்தையைச் சொல்லுவான் அல்லன் என்றவாறு. (9)

*காளிங்:— .... .... .... (9)

## உரைவிளக்கப்பகுதி:

இராமா:—இல்லறம் நடத்துதற்பொருட்டு ஒரோவழிப் பிரயோசனத்தைத் தருகின்ற கடுஞ்சொல்லும் சொல்லவேண்டுதலால் சொல்லினும் சொல்லுக என்றும், அந்த இடத்தும் இன்சொல்லினாலேதானே பிரயோசனப்படுத்துவது மிகவும் நன்று என்பது தோன்றச் சொல்லினும் என இழிவுசிறப்பும்மை கொடுத்தும், ஒரு பொழுதும் வாழ்வது உணராமை நிச்சயமாதலாலே தமக்காயினும் பிரயோசனப்படாத சொற்களைச் சொல்லி வீணே காலம் போக்குதல் கூடாததாதலாலும் அறிவுடையோர் அவரை மக்கட்பதர் எனப் புறம்போக்குவராதலாலும், அவர் புறம்போக்கவே ஏனை அறிவில்லாதவரே சுற்றமாகச் சூழ்ந்து விரைந்து கெடுப்பவராதலாலும், அச்சொற்களைச் சொல்லாது நாவை அடக்கி மனத்தையும் ஒடுக்கினவர்க்கு அந்த அறந்தானே எல்லா நன்மைகளையும் தரும். ஆதலால் பயனில சொல்லாமை நன்று என்றும் சொன்னார்.

198. அரும்பயன் ஆயும் அறிவினர் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல். (அ)

## உரைப்பகுதி:

**பரிமே:-** அரும்பயன் ஆயும் அறிவினர் - அறிதற்கரிய பயன்களை ஆராயவல்ல அறிவினையுடையார், பெரும்பயன் இல்லாத சொல் சொல்லார் - மிக்க பயனுடையவல்லாத சொற்களைச் சொல்லார்.

அறிதற்கரிய பயன்களாவன வீடுபேறும், மேற்கதிச்செலவும் முதலாயின. பெரும்பயனில்லாத எனவே பயன் சிறிதுடையனவும் ஒழிக்கப்பட்டன.

மணக்:—அரிய பொருளை ஆராயும் அறிவினையுடையார் சொல்லார்; பெரிய பயனில்லாத சொற்களை என்றவாறு.

இது மேற்கூறிய குற்றமெல்லாம் பயத்தலின், இதனை அறிவுடையார் கூறார் என்றது. (8)

*இவர் உரை பருதியார் உரை போன்றதே.

பருதி:—எ - து அரியநூல் பல ஆராய்ந்த அறிவுடைமையுள்ளார். பயனில்லாத சொல் சொல்லார்கள் என்றவாறு. (5)

காளிங்:—எ - து பெறுதற்கருமையுடைய மறுமைப்பயனைத் தாம் பெறுதற்குத் தக்க நெறியினை ஆராயும் அறிவினையுடையோர் எஞ்ஞான்றும் சொல்லார், யாதினை எனில், தன்பால் கேட்போர்க்குப் பெரிதும் பயனிலாத சொல்லினை என்றவாறு. (10)

**199. பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்.**

**உரைப்பகுதி:**

**பரிமே:-** பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் – பயனின் நீங்கிய சொற்களை மறந்தும் சொல்லார், மருள் தீர்ந்த மாசு அறுகாட்சியவர் - மயக்கத்தின் நீங்கிய தூய அறிவினை உடையார்.

தூய அறிவு - மெய்யறிவு, மருள்தீர்ந்த என்னும் பெயரெச்சம் காட்சியவர் என்னுங் குறிப்புப்பெயர் கொண்டது. இவை மூன்று பாட்டானும் பயனிலசொல்லாமையின் குணங் கூறப்பட்டது.

மணக்:—பொருளில்லாத சொல்லை மறந்தும் சொல்லார்; மயக்கம் தீர்ந்த குற்றமற்ற தெளிவினை உடையார் என்றவாறு. (9)

இது தெளிவுடையார் கூறுர் என்றது.

பருதி:—எ - து. விளையாட்டிலும் பயனில்லாத வார்த்தை சொல்லார், தெளிந்த மனத்தினர் என்றவாறு. (6)

காளிங்:—எ - து தாமொரு பொருளை யறிந்தவர் மற்றதனை நிலைமையிற் காண்கின்ற குற்றமற்ற அறிவினையுடையார் இகழ்ச்சியுற்றவிடத்தும் பயனில சொற்களைச் சொல்லார் என்றவாறு.

பொருள் தீர்ந்த என்பது பயனில்லன என்றது. தீர்தல் என்பது இல்லையாதல். பொச்சாப்பு என்பது இகழ்ச்சி. மருள்தீர்ந்த என்பது மயக்கமற்றது. (4)

**200. சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க
சொல்லின் பயனிலாச் சொல். (௧0)**

**உரைப்பகுதி:**

**பரிமே:-** சொல்லின் பயனுடைய சொல்லுக - சொற்களில் பயனுடைய சொற்களைச் சொல்லுக; சொல்லின் பயனிலாச் சொல் சொல்லற்க் - சொற்களில் பயனில்லாத சொற்களைச் சொல்லாதொழிக.

சொல்லின் என்பது இருவழியும் மிகையாயினும், சொற்பொருட் பின்வருநிலை யென்னும் அணிநோக்கி வந்தது, *''வைகலும் வைகல் வரக்கண்டும்'' என்பதுபோல. இதனால் சொல்லப்படுவனவும் படாதனவும் நியமிக்கப்பட்டன.

**மணக்:**—*சொல்லுவனாயின் பயனுடைய சொற்களைச் சொல்லுக; சொற்களில் பயனில்லாத சொற்களைச் சொல்லாதொழிக என்றவாறு.*

*இது பயனில சொல்லாமை வேண்டும் என்றது.*

**பருதி:**—*எ - து சொல்லும்போது பயனுள்ளதே சொல்லுக அல்லாது பயனில்லாத சொல் சொல்லவேண்டாம் என்றவாறு.*

†காளிங்:— ... .... ...

**உரைவிளக்கப்பகுதி:**

**நுண்:**—*சொற்பொருள் பின் வருநிலை. ''வைகலும் வைகல்'' (நாலடி 39) என்பதும் அது. 'குன்றின் அனையாரும் குன்றுப' (965) என்பது சொற்பின்வருநிலை. பக்ஷாந்தரத்துள் ஒத்தசொல்லும் - மிக்க சொல்லும் என அமைந்து கிடந்தது காண்க.*

**இராமா:**—*வேறோர் முடிபு: சொல்லவேண்டுமாயின் பிரயோசனமுடைய சொற்களைச் சொல்லி அமைக; சொல்லுதலினாலே அடையப்படும் பிரயோசனமில்லாத சொற்களைச் சொல்லாதொழிக என்றவாறு.*

*சொல்லின் என்பன இரண்டினுள் முன்னையது செய்யின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம் எனவும், பின்னையது முதனிலைத் தொழிற் பெயர் இன்னுருபு ஏற்றது எனவும் கொள்க.*

**குறிப்பு :**—*இராமானுச கவிராயர் உரை 'சொல்லின்' என்பன இரண்டும் பொருள் குறித்தே வந்தன என விளக்கி நிற்கின்றது.*

---

*நாலடி, 39

† இவர் உரையும் பருதியார் உரையும் ஒத்துள்ளன.

# 21. தீவினையச்சம்

**பரிமே:**—அ்ஃதாவது பாவங்களாயின [1]செய்தற்கு அஞ்சுதல் இதனுன் மெய்யின்கண் நிகழும் பாவங்களெல்லாம் தொகுத்து விலக்குகின்ருர் ஆகலின், இது பயனிலசொல்லாமையின்பின் வைக்கப் பட்டது.

**மணக்:**—*தீவினை யச்சமாவது தீவினைகளைப் பிறர்க்குச் செய்யத்துணியாமை.*

**பரிப் :**—*இஃது உறுப்பினுற் செய்யலாகாதாதலின் அவையிற்றின்பிற் கூறப்பட்டது.*

**பருதி:**—*தீவினையச்சமாவது, வாக்கினுற்செய்யுங் குற்றமாகிய புறங்கூறல் பயனிலசொல்லுதல் போல, மனத்தாலும் பாவத்தைப் பண்ணப் பயப்பட வேணும் என்றவாறு:*

**காளிங்:**—*இனி, யாவனெருவன், யாதானும் ஒன்றினை முயலுமிடத்து, மனம் மொழி மெய் என்ற மூன்றும் முதற்காரணமாகக்கொண்டு, மனத்தினுல் ஒன்றைக் கருதுதலும், வாக்கினுல் ஒன்றை உரைத்தலும், காயத்தால் ஒன்றைச் செய்தலுமாய் அன்றே நிகழ்த்துவது; அவற்றுள் அடக்கமுடைமை வெஃகாமை எனப் பலவாருன மனக்கருத்தின் அறத்தியல்புணர்த்தி, பின்பு புறங்கூருமை இனியவைகூறல் எனப் பலவற்ருல் வாய்மொழியின் அறத்தியல்பு உணர்த்தி, மற்று, இனி, தீவினை அச்சம் ஒப்புரவறிதல் ஈகை புகழ் என்பனவற்ருல் காயச் செய்தியின் அறத்தியல்பு உணர்த்துவான் எடுத்துக் கொண்டார்; அவற்றுள் முன்னர் தீவினைக்குற்றம் அறிவிக்கின்றது.*

**201. தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்**
**தீவினை என்னும் செருக்கு.** (க)

**உரைப்பகுதி:**

**பரிமே:**—தீவினை என்னும் செருக்கு - தீவினை என்று சொல்லப் படும் மயக்கத்தை, தீவினையார் அஞ்சார் - முன்செய்த தீவினையுடையார் அஞ்சார், விழுமியார் அஞ்சுவர் - அஃதிலராகிய சீரியார் அஞ்சுவர்.

தீவினை என்னுஞ்செருக்கு எனக் காரியம் காரணமாக உபசரிக்கப் பட்டது. மேற்ருெட்டுச் செய்து கைவந்தமையான் அஞ்சார் என்றும், செய்தறியாமையான் அஞ்சுவர் என்றுங் கூறினுர்.

---

1 செய்யாமை - பிரதிபேதம்.

மணக்:—என்றும் தீத்தொழில் செய்வார் அஞ்சார்; சீரியார் அஞ்சுவர்; தீவினையாகிய களிப்பை என்றவாறு.

இஃது, இதற்கு நல்லோர் அஞ்சுவர் என்றது. (8)

பருதி:—எ - து சென்மாந்திரத்திலேபாவிகள் மேலும் பாவஞ் செய்தற்குப்பயப்படார்கள்; புண்ணியு சிந்தையரானபேர் பயப்படுவார் என்றவாறு. (1)

காளிங்:—எ - து உலகத்து முற்பிறப்பின்கண் கொண்டமைந்த முறையானே தீவினையாளராகிய மறப்பண்பினர் எஞ்ஞான்றும் அஞ்சுவதிலர்; மற்றும் நல்வினையாளராகிய விழுமிய பண்பினர் மிகவும் அஞ்சுவர் யாதினைஎனின், தீவினை என்று சொல்லப்பட்ட மறத்தினை என்றவாறு. (1)

## உரைவிளக்கப்பகுதி:

இராமா:—தீவினை என்னும் செருக்கு எனக் காரணத்தைக் காரியமாக உபசரித்தார்; அகங்காரமே தீவினைக்குக் காரணம் என்பதும், அது இல்லாவிட்டால் தீவினை இல்லை என்பதும் தோன்றுதற்கு.

## மேற்கோள்பகுதி:

நச்:—கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமையானும் என்றதில் தீவினையச்சத்திற்கு மேற்கோள். (தொல். பொருள். 76)

இளம்:—தீவினையச்சமாவது தீவினையைப் பிறர்க்குச் செய்ய அஞ்சுதல் என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 75)

**202. தீயவை தீய பயத்தலால் தீயவை**
**தீயினும் அஞ்சப் படும். (உ)**

## உரைப்பகுதி:

பரிமே:—தீயவை தீய பயத்தலால் - தனக்கு இன்பம் பயத்தலைக் கருதிச் செய்யுந் தீவினைகள் பின் அஃதொழித்துத் துன்பமே பயத்தலான், தீயவை தீயினும் அஞ்சப்படும் - அத்தன்மையவாகிய தீவினைகள் ஒருவனால் தீயினும் அஞ்சப்படும்.

பிறிதொருகாலத்தும் பிறிதொருதேயத்தும் பிறிதோருடம்பினுஞ் சென்று சுடுதல் தீக்கு இன்மையின் தீயினும் அஞ்சப் படுவதாயிற்று.

**மணக்:**—தீத்தொழிலானவை தமக்குத் தீமை பயத்தலானே அத் தொழில்கள், 'தொடின் சுடும்' என்று தீக்கு அஞ்சுதலினும் மிக அஞ்சப் படும் என்றவாறு. (7)

**பருதி:**—எ - து பாவம், பாவத்தையே விளைத்தலால், பாவத்தை நெருப்பினும் பெரிது என்றறிக; அது எப்படி என்றால், நெருப்பு வேரைச் சுடமாட்டாது; பாவம் வேரளவாகச் சுட்டுப்போடும் என்றவாறு. (4)

**காளிங்:**— ... ... ...

**203. அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய**
**செறுவார்க்குஞ் செய்யா விடல். (ரு)**

**உரைப்பகுதி:**

**பரிமே:**—அறிவினுள் எல்லாம் தலை என்ப - தமக்குறுதி நாடும் அறிவுகள் எல்லாவற்றுள்ளும் தலையாய அறிவு என்று சொல்லுவர் நல்லோர்; செறுவார்க்கும் தீய செய்யா விடல் - தம்மைச் செறுவார் மாட்டும் தீவினைகளைச் செய்யாது விடுதலை.

விடுதற்குக் காரணமாகிய அறிவை விடுதல் என்றும், செயத்தக் குழியுஞ் செய்யாதொழியவே தமக்குத் துன்பம் வாராதென உய்த்து உணர்தலின் அதனை அறிவினுள் எல்லாந் தலை என்றும் கூறினர். செய்யாது என்பது கடைக்குறைந்து நின்றது. இவை மூன்றுபாட்டா னும் தீவினைக்கு அஞ்சவேண்டும் என்பது கூறப்பட்டது.

**மணக்:**—எல்லா அறங்களையும் அறியும் அறிவு எல்லாவற்றுள்ளும் தலையான அறிவு என்று சொல்லுவர் நல்லோர்; தமக்குத்தீமை செய்வார்க் கும் தாம் தீமை செய்யாதொழிதலை என்றவாறு.

இஃது எல்லாவற்றுள்ளும் தலை என்றது. (10)

**பருதி:**—எ - து அறிவுள்ளதற்கெல்லாம் தலைமையான காரியம் என்க; தனக்கு வேண்டாதார்க்கும் தீவினையை எண்ணுமலிருப்பது என்ற வாறு. (2)

**உரைவிளக்கப்பகுதி:**

**நுண்:**—செய்யாவிடல் என்பது செய்யுட்டொடை காரணமாக வந்த கடைக்குறை. "செலவிடா தீதொரீஇ" (422) "முட்டாச்செயின்" (542) "தோன்ருக்கெடும்" (477) என்பனவுமாம்,

•2, 3, 4, 5, 7, 9, 10, இக்குறள்களுக்குக் காணப்படும் காளிங்கர் உரையும் பருதியார் உரையும் ஒத்துள்ளன.

204. மறத்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு. (௪)

**உரைப்பகுதி:**

**பரிமே:**—பிறன் கேடு மறந்தும் சூழற்க - ஒருவன் பிறனுக்குக் கேடு பயக்கும் வினையை மறந்தும் எண்ணுதொழிக; சூழின் சூழ்ந்தவன் கேடு அறம் சூழும் - எண்ணுவனாயின் தனக்குக் கேடுபயக்கும் வினையை அறக்கடவுள் எண்ணும்.

கேடு என்பன ஆகுபெயர். சூழ்கின்றபொழுதே தானும் உடன் சூழ்தலின், இவன் பிற்படினும் அறக்கடவுள் முற்படும் என்பது பெறப்பட்டது. அறக்கடவுள் எண்ணுதலாவது அவன்கெடத் தான் நீங்க நினைத்தல். தீவினை எண்ணலுமாகாது என்பதாம்.

**மணக்:**—பிறனுக்குக் கேட்டை மறந்தும் சூழாதொழிக; சூழ்வனாயின், அவனால் சூழப்பட்டவன் அதற்கு மாறாகக் கேடுசூழ்வதன் முன்னே சூழ்ந்தவனுக்குக் கேட்டைத் தீமை செய்தார்க்குத் தீமை பயக்கும் அறம் தானேசூழும் என்றவாறு.

இது தீமை நினையினும் கேடுதரும் என்றது. (4)

**பருதி:**—எ - து மறந்தும் ஒருவர்க்குப் பொல்லாங்கு செய்வான் அல்லன்; அப்படிச்செய்தால், தன்மம் தனக்குக் கேடு விளைக்கும் என்றவாறு. (10)

**காளிங்:**— ... ... .... .... (4)

**உரைவிளக்கப்பகுதி:**

**இராமா:**—கேடு என்பவை இரண்டும் காரிய ஆகுபெயர்.

**மேற்கோள்பகுதி:**

**நச்:**—இணை எதுகைக்கு மேற்கோள் (தொல் செய் 93.)

**காரிரத்ன:**—பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மா'ற. 251)

**யா. வி. உரை:**—இரு குறள், தனிச்சொல்பெற்று ஒருவிகற்பத்தான் வந்த நேரிசை வெண்பாவுக்குக் காட்டிய பாடலின் முன்னிரண்டடியாக அமைந்துள்ளது இக்குறள் (சூ. 61)

205. [1]இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து. (ரு)

**உரைப்பகுதி:**

**பரிமே:**—இலன் என்று தீயவை செய்யற்க - யான் வறியனென்று கருதி அது தீர்தற்பொருட்டுப் பிறர்க்குத் தீவினைகளை ஒருவன் செய்யா தொழிக; செய்யின் பெயர்த்தும் இலன் ஆகும் - செய்வனாயின் பெயர்த்தும் வறியனாம்.

அத்தீவினையால் பிறவிதோறும் இலனாம் என்பதாம். அன்விகுதி முன் தனித்தன்மையினும், பின் படர்க்கை ஒருமையினும் வந்தது. தனித்தன்மை [2]"உளனா என் உயிரைஉண்டு" என்பதனானுமறிக. மற்று அசைநிலை. இலம் என்று பாடம் ஓதுவாரும் உளர். பொருளான் வறியன் எனக்கருதித் தீயவை செய்யற்க, செய்யின் அப்பொருளானேயன்றி நற்குண நற்செய்கைகளானும் வறியனாம் என்று உரைப்பாரும் உளர்.

**மணக்:**—*நல்கூர்ந்தோம்[3] என்று நினைத்துச் செல்வத்தைக் கருதித் தீவினையைச் செய்யாதொழிக; செய்வனாயின், பின்பும் நல்குரவினன் ஆவன்; அது செல்வம் பயவாது என்றவாறு.*

*இது வறுமை தீரத் தீமைசெய்யினும் பின்பும் வறியனாகும் என்றது.* (5)

**பருதி:**—*எ - து வறுவியோமென்று பாவமான காரியத்தைச் செய்து பொருள் தேடவேண்டாம்; தேடின பொருளும் நில்லாது, மறுமைக்கும் வறியனாம் என்றவாறு.* (9)

**காளிங்:**— .... .... .... (10)

206. தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான். (சா)

**உரைப்பகுதி :**

**பரிமே:**—நோய்ப்பால தன்னை அடல் வேண்டாதான் - துன்பம் செய்யுங் கூற்றவாகிய பாவங்கள் தன்னைப் பின்வந்து வருத்துதலை

1 "இலம்" என்பது மணக்குடவர் பாடம்,
2 கலி, 58. 7:
3 'நல்கூர்ந்தேம்' என்பது பரிப்பெருமாள் உரையில் மாற்றம்.

வேண்டாதவன், தீப்பால தான் பிறர்கண் செய்யற்க - தீமைக் கூற்றவாகிய வினைகளைத் தான் பிறர்மாட்டுச் செய்யாதொழிக.

செய்யின், அப்பாவங்கள் அடுதல் ஒருதலை என்பதாம்,

மணக்:— *தன்னைத் துன்பப் பகுதியானவை நலிதல் வேண்டாதவன், தீமையாயினவற்றைத் தான் பிறர்க்குச் செய்யாதொழிக என்றவாறு.*

*இது நோயுண்டாம் என்றது.* (6)

பருதி:—*எ-து தன் ஆத்மா சுகசீவியாக இருக்கவேணுமாகில், வேறொரு ஆத்மாவை வருத்தஞ்செய்யாதொழிக என்றவாறு.* (8)

காளிங்:—*எ-து பெரிதும் இடருறுத்துவனவாகிய தீவினைக் கூற்று யாவை, அவற்றைத் தான் பிறர்மாட்டு என்றுஞ் செய்யாது ஒழிக; யாவன் எனின் மற்று இடருறுங் கூற்றனவாகிய கொடியவை தன்னை வந்து ஒறுத்தல் வேண்டாதவன் என்றவாறு.* (3)

அடாது செய்தவர் படாது படுவர். வில்லி. சூது.

ஷை பழமொழி.

## 207. எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை வீயாது பின்சென் றடும். (எ)

### உரைப்பகுதி:

பரிமே:—எனைப்பகை உற்றாரும் உய்வர் - எத்துணைப் பெரிய பகையுடையாரும் அதனை ஒருவாற்றால் தப்புவர்; வினைப்பகை வீயாது பின் சென்று அடும் - அவ்வாறன்றித் தீவினையாகிய பகை நீங்காது புக்குழிப்புக்குக் கொல்லும்.

"*வீயாது, உடம்பொடு நின்ற உயிரும் இல்லை" என்புழியும் வியாமை நீங்காமைக்கண் வந்தது.

மணக்:—*எல்லாப்பகையும் உற்றார்க்கும் உய்தியுண்டாம்; தீவினையாகிய பகை நீங்காது. என்றும் புக்குழிப்புகுந்து கொல்லும் என்றவாறு.*

*அஃதாமாறு பின் கூறப்படும்.* (2)

பருதி:—*யாருடன் பகைகொண்டாலும் நற்குணத்தினாலே உறவு பண்ணிக்கொள்ளலாம்; தீவினைப்பகை விடாமல்நின்று கெடுக்கும் என்றவாறு.* (6)

காளிங்:— .... ... .... (8)

* புறநானூறு, 363

**ஒப்புமைப்பகுதி :**

"செய்ததன் பயம் பற்று விடாது" —கலி. 59: 25.

"சூள்வாய்த்த மனத்தவன் வினைபோய்ப்பின் மற்றவன்
வாள்வாய் நன்ருயினும் அஃதெறியாது விடாதேகாண்" —ஷை 149: 10-11.

"ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம்" சிலப். பதிக. 57.

"உர்மை வினைவந்து உருந்தல் ஒழியாது" —மணி. வஞ்சி. 32.

வினைகளின் விளைவை யாவர் விலக்குநர் என்றுமின்ருன்" —யசோத. 144.

"வெல்வதற் கரிதால் வினையின் பயன்" —ஷை 170

"உயிர்புகும் சட்டகம் உழிதொறும்
பழவினை புகுந்த பாடகம் போல" —கல்லா - 11: 1 - 2.

"ஒளிப்பினும் ஊழ்வினை ஊட்டாது கழியாது" —இறை. சூ. 2. உரை.

"உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா" —நாலடி. 104.

"வேண்டினும் வேண்டாவிடினும் உறற்பால தீண்டாவிடுதலரிது"
— ஷை 109.

**208. தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை**
**வீயா தடியுறைந் தற்று.** (அ)

**உரைப்பகுதி:**

**பரிமே:**— தீயவை செய்தார் கெடுதல் - பிறர்க்குத் தீவினைகளைச் செய்தார் தாம்கெடுதல் எத்தன்மைத்தெனின், நிழல் தன்னை வீயாது அடி உறைந்தற்று - ஒருவன் நிழல் நெடிதாகப்போயும் அவன்றன்னை விடாது வந்து அடியின்கண் தங்கிய தன்மைத்து.

இவ்வுவமையைத் தன்காலம் வருந்துணையும் புலனுகாது உயிரைப் பற்றி நின்று, அது வந்துழி உருப்பதாய தீவினையைச் செய்தார், பின் அதனல் கெடுதற்கு உவமையாக்கி உரைப்பாரும் உளர். அஃது உரையன்று என்பதற்கு அடியுறைந்த நிழல்தன்னை வீய்ந்தற்று என்னுது வீயாது அடியுறைந்தற்று என்ற பாடமே கரியாயிற்று. *மேல் வீயாது பின்சென்று அடும் என்ருர், ஈண்டு அதனை உவமையான் விளக்கினுர்.

**மணக்:**— *தீயவானவற்றைப் பிறர்க்குச் செய்தார் கெடுதல், நிழல் தன்னை நீங்காதே உள்ளடியின் கீழ் ஒதுங்கினுற்போலும் என்றவாறு.*

*மேல் வினைப்பகை பின்சென்று அடும் என்ருர்; அஃது அடுமாறு காட்டினுர்.*



* குறள். 207.

பருதி:—எ - து பாவம் செய்தாரை, அந்தப்பாவம் சுற்றிநிற்கும்; நிழல் தன்னைவிட்டு நீங்காத முறைமைபோல என்றவாறு. (5)

காளிங்:—எ - து பாவமான தீவினைகளைச் செய்தவர் நசித்தல் எத் தன்மைத்தோ எனின், ஓர் உருவின்கண் தோன்றிய நிழலானது பின்னும் அவ் உருவினை விட்டு நீங்காது தான் தோன்றியவிடத்தே வந்து கூடிக் கொண்டு நின்றதன்மைத்து என்றவாறு.

ஒருவன் தான் செய்த தீவினைப்பயன் தன்னையே வந்துறும் இத்துணை யல்லது வேறுபகுத்து, கோடற்குரியாரில்லை என்பது போலேயே நிழலுந் தன்னை விட்டு நீங்காது என்பதாம். (2)

## உரைவிளக்கப்பகுதி :

இராமா:—வேரூர் முடிபு:- தீவினை அதனைச் செய்தவர்கெட, கெடுவது யாது போலும் எனில் ஒருவனுடைய நிழலானது அவனை விட்டு நீங்காமல் அவன் பாதத்திலே அடங்கி நின்று அவன்கெடக்கெடுதல் போலும் என்றவாறு.

நிழலுண்டாவதற்குக் காரணமாகிய ஒருவன் இறக்குமளவும் அவனை விட்டு நீங்காமல் அடியைப்பற்றியே நின்று, அவனிறந்தபொழுதே ஒழியும் நிழலைப்போலத் தீவினைகளைச் செய்தவர் கெடுமளவும்விட்டுநீங்காமல் அவரைப்பற்றியே நின்று, அவர் கெட்ட பொழுதே ஒழியும் ஆதலால் தீயவைசெய்தார் கெடக் கெடுதல் நிழல் தன்னை வீயாது அடியுறைந்து அவன்கெடக் கெடுதல்போலும் என விரித்துக்கொள்க.

என்ன எனின், இது தொழிலுவமை ஆதலால், பொருளிலேவந்த கெடுதலாகிய தொழிலை உவமையிலும் பிரித்துச் சொல்லவேண்டும். சொன்னால் அவன்கெடாமல் நிழல்கெடாது ஆதலால், அவன் கெட என்பது அவாய்நிலையாகவந்து இயையும். இயையவே பொருளிலும் செய்தார்கெட என்பது தானே வந்து இயைதல் காண்க. செய்தார்கெடத் தீயவை கெடுதலாவது செய்தார் தீவினைப் பயன்களை அனுபவிக்குமளவும் நின்று நீங்குவது.

## மேற்கோள்பகுதி:

பெருந்:—தர்க்கத்தில் எடுத்துக்காட்டுப்போலிக்கு மேற்கோள். (வீரசோ. 180 உரை.)

## ஒப்புமைப்பகுதி :

"நின்னின் விடா நிழல்போல்" —கலி. 61: 8.

209. தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால். (கூ)

**உரைப்பகுதி :**

பரிமே:—தன்னைத் தான் காதலன் ஆயின் - ஒருவன் தன்னைத் தான் காதல் செய்தல் உடையனாயின், தீவினைப்பால் எனைத்து ஒன்றும் துன்னற்க - தீவினையாகிய பகுதி எத்துணையுஞ் சிறியதொன்றாயினும் பிறர்மாட்டுச் செய்யாது ஒழிக.

நல்வினை தீவினை என வினைப்பகுதி இரண்டாகலின், தீவினைப் பால் என்றார். பிறர்மாட்டுச்செய்த தீவினை தன்மாட்டுத் துன்பம் பயத்தல் விளக்கினாராகலின், தன்னைத்தான் காதலனாயின் என்றார். இவை ஆறு பாட்டானும் பிறர்க்குத் தீவினை செய்யின் தாம் கெடுவர் என்பது கூறப்பட்டது.

மணக்:—*தனக்குத்தான் நல்லவனாயின் யாதொன்றாயினும் தீவினைப் பகுதியாயினவற்றைப் பிறர்க்குச் செய்யாதொழிக என்றவாறு.*

*இது தீவினைக்கு அஞ்சவேண்டும் என்றது.* (1)

பருதி :—*தன்னைத்தான் பிரியமுள்ளவன் ஆகில், பாவமான காரியத்தைச் செய்வான் அல்லன் ; அதெப்படி என்றால், தான் செய்த பாவம் தன் ஆத்மாவை வருத்தும் என்றவாறு,* (7)

காளிங்:— (9)

210. அருங்கேடன் என்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின். (0)

**உரைப்பகுதி:**

பரிமே:—மருங்கு ஓடித் தீவினை செய்யான் எனின் - ஒருவன் செந்நெறிக்கண் செல்லாது கொடுநெறிக்கண் சென்று பிறர்மாட்டுத் தீவினைகளைச் செய்யானாயின் அருங்கேடன் என்பது அறிக - அவனை அரிதாகிய கேட்டையுடையன் என்பது அறிக.

அருமை இன்மை. அருங்கேடன் என்பதனைச் *"சென்று சேர்கல்லாப் புள்ள, புள்ளில் என்றூழ் வியன்குளம்" என்பது போலக் கொள்க. ஓடி என்னும் வினையெச்சம் செய்யான் என்னும் எதிர்மறைவினையுள் செய்தலோடு முடிந்தது. இதனால் தீவினை செய்யாதவன் கேடிலன் என்பது கூறப்பட்டது.

மணக்:—ஒரு மருங்கு ஓடிப் பிறர்க்குத் தீவினைகளைச் செய்யானாயின் தனக்குக் கேடுவருவதில்லையென்று தானே அறிக என்றவாறு.

இது கேடில்லை என்றது. (9)

பருதி:—கேட்டுக்கும் பாவத்திற்கும் உள்ளல்ல இவன் என்று அறியப் படும் ; வாக்கினாலும், காயத்தினாலும், மனத்தினாலும் பாவத்தை அறியா தான் என்றவாறு. (3)

காளிங்:— (6)

## உரைவிளக்கப்பகுதி:

நுண்:—அருமை இன்மைமேல் நின்றது. அருங்கேடன் - கேடிலன். அரிதாகிய கேட்டையுடையயன் என ஈண்டு உண்மைப்பொருள் கொண்டும் இன்மைமேல் நின்றது. "சென்று சேர்கல்லா" என்ற [1]நற்றிணையை இதற்குச் சொற்சோதனை காட்டினர். [2]சூழ்ந்து முரன்றணவி ......வீழ்ந்தவிந்த பாசத்தார்" என்பதனுள் வீழ்ந்து அவிந்த பாசத்தாரும் அது. "சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்" (777) என்பதும், கோவையாரில் [3]"நீங்கின நாணொடு நேரிழை நின்றதும்," வடமொழியுள் [4]"வீத ராகி" என்பதும் அது. ஓடி என்பது செய்யான் என்னும் எதிர் மறையுள் செய்தலோடு முடிந்தது. "எண்பதத்தான் ஓரா" (548) அலர் நாண ஒல்வதோ" (1149) என்பனவும் கோவையாருள் "காவிநின்றேர் தரு", (41) "கற்றில கண்டன்னம்" (97) என்பனவும் இவ்வாறும், "ஆக்கங் கருதி" (463) என்பதனுள். ஊக்கார் என்பதனைக் கொள்ளும் என்பது குறித்து, 'கருதி என்னும் எச்சம் இழுக்கும் என்னும் பெயரெச்சவினை கொண்டது' என்றார். இவ்வாறு எழுதுதல் பேராசிரியருக்கும் ஒக்கும். உடன்பாட்டெச்சம் உடன்பாட்டுவினை கொள்ளுதலின்றி எதிர்மறைவினை கொள்ளாது என்பது அவர்கள் கருத்துப்போலும். வினை எச்சத்திற்கு விதி இவ்வாறு கூறுமையின் அவர்கள் கருத்தறிதல் அரிது என்க.

*அகநானூறு. 42.

இராமா:— அருங்கேடன் என்பதனைச் சென்று சேர்கல்லாப்புள்ள புள்ளில் என்றாழ் வியன் குளம்' என்பதில் சென்று சேராத புட்களை யும் அந்தப்புட்களைப் போலவே சென்று சேராத வெய்யிலையும் உடைய குளம் எனப் பொருள் கொள்வது போலக் கொள்க.

## மேற்கோள்பகுதி:

சிவஞான:—இன்றுங்கட்டு என்பது 'அருங்கேடன்' என்பதுபோல நின்றது. (சிவஞானபோ. சூ. 1. அதி. 2)

1 இது நற்றிணைப் பாடற்பகுதியன்று

2 தண்டியலங்காரம் 30 சூ. மேற்கோள்.

3 44-ம் பாடல் கொளு.

4 இல்லையாகிய ஆசையையுடையவன் என்பது பொருள்.

## 22. ஒப்புரவறிதல்.

**பரிமே:**—அஃதாவது உலகநடையினை அறிந்து செய்தல். உலக நடை, வேதநடைபோல அறநூல்களுள் கூறப்படுவதன்றித் தாமே அறிந்து செய்யுந்தன்மைத்தாகலின், ஒப்புரவறிதல் என்றார். மேல், மனமொழி மெய்களால் தவிரத்தகுவன கூறினர், இனிச் செய்யத்தகுவனவற்றுள் எஞ்சி நின்றன கூறுகின்றாராகலின், தீவினையச்சத்தின் பின் வைக்கப்பட்டது.

**மணக்:**—*ஒப்பரவறிதலாவது இல்லென இரந்துவந்தார் யாவர்க்கும் வரையாது கொடுக்கும் ஆற்றல் இலரெனினும் தம்மளவிற்கும் தம்வருவாயளவிற்கும் ஏற்க, தக்கார்க்குத் தக்கன அறிந்து கொடுத்தல்.*

**பருதி:**—*எ - து ஒப்புரவறிதலாவது ஒருவருக்குச் செய்யும் ஒப்புரவு அறியவேண்டும் என்றவாறு.*

**211, கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்**
**டென்னாற்றுங் கொல்லோ உலகு.**

**உரைப்பகுதி :**

**பரிமே:**—மாரிமாட்டு உலகு என் ஆற்றும் - தமக்கு நீருதவுகின்ற மேகங்களிடத்து உயிர்கள் என்ன கைம்மாறு செய்யாநின்றன? கடப்பாடு கைம்மாறு வேண்டா - ஆகலான், அம்மேகங்கள் போல்வார் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு நோக்குவனவல்ல.

என்னாற்றும் என்ற வினா யாதும்ஆற்றா என்பதுதோன்ற நிற்றலின், அது வருவித்துரைக்கப்படும். தவிருந்தன்மைய அல்ல என்பது கடப்பாடு என்னும் பெயரான் பெறப்பட்டது. செய்வாரது வேண்டாமையைச் செய்யப்படுவனமேல் ஏற்றினர்.

**மணக்:**—*ஒப்புரவு செய்யுங்கால் கைம்மாறு கருதிச் செய்ய வேண்டா; எல்லார்க்கும் நல்வழி சுரக்கின்ற மாரிக்கு உலகம் கைம்மாறு செய்தல் உண்டோ? என்றவாறு.*

*கடப்பாடு - ஒப்புரவு, இஃது, ஒப்புரவாவது கைம்மாறு,[1] வேண்டாத கொடை என்று கூறிற்று.* (2)

---

1 கருதாத பரிப்பிரதிபேதம்.

பருதி:—எ - து ஒருவன் முன்னே செய்த உதவிக்கு, இவன் தானும் ஒரு உதவி செய்வோம் என்றது எத்தன்மைக்கு ஒக்கும் என்றால் பூலோகத்தை இரட்சிக்கிற மழைக்கு உதவிசெய்வோம் என்பதற்கு நிகராம் என்றவாறு, (1)

காளிங்:—எ - து ஒருவன் முன்செய்த உதவிக்குப் பின்புசெய்த உதவி எதுபோல் எனில் மழைக்கு உதவி செய்ததற்கு நிகராம் என்றவாறு. (1)

## உரைவிளக்கப்பகுதி:

**நுண்**:—கடப்பாடு - முறையறிந்து செய்யும் உபகாரம்: அஃது எழுவாயாகலின் செய்வாரது வேண்டாமை செய்வதன்மேல் நின்றது.

**இராமா**:—கடம் என்பதும் கடமை என்பதும் மூன்றமை. அது தொழிற் பெயராங்கால் கடம்படல், கடப்படல், கடப்பாடு என நிற்கும்.

## ஒப்புமைப்பகுதி :

"பாரி ஒருவனுமல்லன் மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே."

—புறம். 107; 3-4

"கார் வேண்டாமைக் கொடுத்தலும் கற்பகம் வேண்டக்கொடுத்தலும் இயல்பு"

சீவக. 365. உரை

"பேரியுலாளர் செய்கை ஊதியம் பிடித்து மென்னூர்
மாரியை நோக்கிக் கைம்மாறு இயற்றுமோ வையம் என்றான்."

கம்ப. யுத்த. நாகபாச, 271

"வான்செய்யும் நன்றிக்கு வையகத்தோர் செய்யும்
கைம்மாறு உண்டேயோ."

திருவிளை. மாணிக்க. 86

**212. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.** (உ)

## உரைப்பகுதி:

**பரிமே**:—தக்கார்க்கு - தகுதியுடையார்க்காயின், தாள் ஆற்றித் தந்த பொருள் எல்லாம் - முயறலைச்செய்து ஈட்டிய பொருள் முழுதும், வேளாண்மை செய்தற் பொருட்டு - ஒப்புரவு செய்தற்பயத்தவாம்.

பிறர்க்கு உதவாதார் பொருள்போலத் தாமே உண்டற் பொருட்டும், வைத்து இழத்தற்பொருட்டும் அன்று என்பதாயிற்று.

மணக்:—ஒருவன் முயன்று ஈட்டிய பொருளெல்லாம் தகுதியுடையார்க்கு உபகரித்தற்காகவாம் என்றவாறு.

இது பொருளுண்டானல் ஒப்புரவு செய்க என்றது. (1)

பருதி:—எ - து தான் தேடின உடைமை ஏதுக்காம் என்னில், எல்லோர்க்கும் ஒப்பரவு செய்யத் தேடியது என்று, ஒப்புரவு செய்வான் என்றவாறு. (2)

* காளிங்:— — — — (2)

## உரைவிளக்கப்பகுதி:

இராமா:—வேறு உரை: தாளாற்றித் தந்த பொருளெல்லாம் - ஒருவன் முயற்சியைச் செய்து தொகுத்த பொருள் முழுதும் எதற்காக எனின் தக்கார்க்கு - சான்றோர்க்கு, வேளாண்மை செய்தற்பொருட்டு - உதவி செய்தற்காக என்றவாறு.

தக்கார் - முனிவர் அறிவுடையோர் முதலாயினவர். எல்லாப் பற்றுக்களையும் விட்டவராதலால் அவர்க்கு உதவி செய்தற்பொருட்டாகவே இல்லிடத்து இருந்து ஒருவன் முயன்று பொருளை ஈட்டுவது என்பதாம். வறியார்க்கு ஒன்று ஈவது, அற்றார் அழிபசி தீர்த்தல் முதலாக மற்றை--யார்க்குச் செய்வன எல்லாம் சொன்னார். ஒப்புரவறிதலாவது உலகத்தில் ஒத்தது அறிந்து உபகரித்தல் ஆதலால் இவ்வதிகாரத்துள்ளே முன் கைம்மாறு வேண்டாக் கடப்பாடு எனப் பொதுவகையால் தொகுத்துச் சொல்லி, பின் இதனுலே வகுத்துச் சொல்லத் தொடங்கி, அறிவுடையார் முனிவர் முதலியவரிடத்து ஒத்தது அறிந்து செய்க என்றார்.

## ஒப்புமைப்பகுதி:

''தாள்படு செல்வம்.'' புறம். 161: 15

''தெரியுங்கால்
செவ்வம் உடையாரும் செல்வரே தற்சேர்ந்தார்
அல்லல் களைப எனின்,'' நாலடி. 170

*2, 3, 6, 7, 10 இக்குறள்களின் உரைகள் பருதியார் உரையை ஒத்துள்ளன.

**213. புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே [1]**
**ஒப்புரவின் நல்ல பிற.** (ரு)

## உரைப்பகுதி:

**பரிமே:**—புத்தேளுலகத்தும் ஈண்டும் - தேவருலகத்தும் இவ் உலகத்தும், ஒப்புரவின் நல்ல பிற பெறல் அரிது - ஒப்புரவுபோல நல்லன பிற செயல்களைப் பெறுதல் அரிது.

[2] ஈவாரும் ஏற்பாருமின்றி எல்லாரும் ஒருதன்மையராதலின், புத்தேளுலகத்து அரிதாயிற்று; யாவர்க்கும் ஒப்பது இதுபோல் பிறி தொன்று இன்மையின், இவ்வுலகத்து அரிதாயிற்று. பெறற்கரிது என்று பாடம் ஓதிப் பெறுதற்குக் காரணம் அரிது என்று உரைப்பாரும் உளர். இவை மூன்று பாட்டானும் ஒப்புரவினது சிறப்புக் கூறப் பட்டது.

**மணக்:**—*ஒப்புரவு செய்தலின் நன்றாயிருப்பது தேவருலகத்திலும் இவ்வுலகத்திலும் பெறுதற்கு அரிதாம் என்றவாறு.* (10)

பரிப்:—*ஈண்டுச் செய்யும் அறத்தினும் இதனின் மிக்கதில்லை. தேவ ருலகிற் பெறும் பயனினும் இதனில் மிக்கதில்லை.*

**பருதி:**—*எ - து ஒப்புரவுபோலே ஒத்த இன்பம், தெய்வலோகத்தி லும் இல்லை; அது எப்படி என்றால், தெய்வலோகத்தில் தானதன்மம், பரோபகாரம் இல்லை. இந்த உலகத்தில் செய்த தானதன்ம பலத்தை அங்கே அனுபவிப்பது உள்ளது என்றவாறு.* (10)

**காளிங்:**— — — — (7)

## உரைவிளக்கப்பகுதி:

**நுண்:**—*இன் உவமவுருபு. நல்ல பிற - நல்லன பிறசெய்தல் களாயிற்று.*

## ஒப்புமைப்பகுதி:

"பொலம்பூங் காவி னன்னாட் டோரும்
செய்வினை மருங்கின் எய்தல் அல்லதை
உடையோர் ஈதலும் இல்லோர் இரத்தலும்
கடவ தன்மையின் கையறு உடைத்து." புறம், 38: 12 - 15

"ஒப்புரவறிதலில் தகுவர வில்லை." முதுமொழி. 52

---

[1] 'பெறற்கரிதே' என்பது மணக்குடவர் பாடம். [2] 'ஈவாரும் கொள்வாரும் இல்லாத வானத்து வாழ்வாரே வன்கணவர் என்றார் பிறரும்." 1058ம் குறள் பரிமேலழகர் உரை. 'அறஞ்செய்மாக்கள் புறங்காத் தோம்புநர், நற்றவஞ்செய்வோர் பற்றற முயல்வோர், யாவரும் இல்லாத் தேவர் நன்னாடு' மணி. 14; 40 - 42

**214. ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும். (௪)**

**உரைப்பகுதி:**

**பரிமே:**—உயிர் வாழ்வான் ஒத்தது அறிவான் - உயிரோடு கூடி வாழ்வானாவான் உலகநடையினை அறிந்து செய்வான்; மற்றையான் செத்தாருள் வைக்கப்படும் - அஃதறிந்து செய்யாதவன் உயிருடையனேயாயினும் செத்தாருள் ஒருவனாகக் கருதப்படும்.

உயிரின் அறிவும் செயலும் காணாமையின், செத்தாருள் வைக்கப்படும் என்றார். இதனால் உலக நடைவழு வேதநடைவழுப்போலத் தீர்திறன் உடைத்தன்று என்பது கூறப்பட்டது.

**மணக்:**—*ஒப்புரவறிவான் உயிர்வாழ்வான் என்று சொல்லப்படுவன் அஃது அறியான் செத்தவருள் ஒருவனாக எண்ணப்படுவன் என்றவாறு.*

*இஃது ஒப்புரவறியாதார் பிணத்தோடு ஒப்பர் என்றது.* (10)

**பருதி:**—*எ - து ஒப்புரவு செய்வான் உயிருடன் வாழ்வான்; ஒப்புரவு அறியான் செத்தாரோடு ஒப்பன் என்றவாறு.* (7)

**காளிங்:**—*எ - து நெஞ்சை எரிப்பதுஒத்ததாகிய ஒப்புரவு அறிகின்றவன் யாவன்? மற்றவனே உயிர்வாழ்கின்றவனாவன்; மற்றையான் செத்தாருள் ஒருவனாக வைத்து எண்ணப்படுவது. எங்ஙனமெனின் பிறர் முகமறிந்து உபகரிக்கும் என்றே அதனால் அஃது இல்லாதானும் உயிரும் உணர்வும் உடையானொருவனல்லன்; வெறும் நடைப்பிணமே என்று பொருளாயிற்று என்றவாறு.* (5)

**மேற்கோள்பகுதி:**

**பேராசிரியர்:**—*"உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்" ஈண்டு ஒத்தல் என்பதனை "ஒத்தது அறிவான்" என்பதுபோலக்கொள்க. (தொல். பொருள். 283.)*

**குறிப்பு:**—*ஒத்தது அறியாதவனுக்கு அனைவரும் பகையாதலின், இறந்தானாவன். இருந்தான் ஆகான் என்றுமாம்.—தொகுப்பாசிரியர்.*

**215. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்**
**பேரறி வாளன் திரு. (௫)**

**உரைப்பகுதி:**

**பரிமே:**—உலகு அவாம் பேரறிவாளன் திரு - உலகநடையை விரும்பிச் செய்யும் பெரிய அறிவினையுடையவனது செல்வம், ஊருணி நீர்

நிறைந்ததற்று - ஊரின் வாழ்வார் தண்ணீருண்ணுங்குளம் நீர் நிறைந் தாற்போலும்.

நிறைதல் என்னும் இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின் மேல் ஏற்றப்பட்டது. பாழ்போகாது நெடிது நின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாது உதவும் என்பதாம்.

**மணக்:**—ஊர் உண்கின்ற கேணி நீர் நிறையப் புகுந்தால் ஒக்கும் உலகத்தாரெல்லாராலும் நச்சப்படுகின்ற பெரிய ஒப்புரவு அறிவானது செல்வம் என்றவாறு.

**பரிப்:**—இஃது ஒப்புரவறிவார்க்கு உளதாகிய செல்வம், நச்சிச்சென் றூர் வேண்டியவாறு முகக்கலாம் என்றது. (6)

**பருதி:**—எ - து *வானேரி நிறைந்தால் ஒக்கும் அறிவுடையவனிடத் தில் செல்வம் என்றவாறு.

வானேரியும் சகலர்க்கும் பிரயோசனப்படும் என்பதாம். (7)

**காளிங்:**—எ - து ஊருணியாகிய பேரேரியும் பெருங்குளமும் முதலிய நீர் புகுந்து நிறைந்துநின்ற அவ்வத்தன்மைத்தே; உலகத்து யாவரும் 'இப் பொருள் நமது' என்று சூழ்ந்துகொள்ளுந் தன்மைத்தாகிய பேரறிவாள னது செல்வம் என்றவாறு.

அவாவுதல் - சூழ்தல். (10)

இனி மற்று இவன் பெருஞ்செல்வம் எய்தியவழி எத்தன்மையனும் எனின் அளவிறந்த பேருபகாரியாம் என்பதனை அறிவிக்கிறது ஈகை என்னும் மேலையதிகாரம்.

## உரைவிளக்கப்பகுதி:

**நுண்:**—இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின் மேல் நின்றது. "அளவளாவில்லாதான்" (523) "வசையிலா வண்பயன்" (239) 'அருமறை சோரும்' (847) 'புரந்தார்கண் ணீர்மல்க' (780) 'வாலெயிறூறிய நீர்' (1121) என்பனவும் 'நெடுங்கடலுந்தன்னீர்மை குன்றும்' (17) 'ஆபயன் குன்றும்' (560) என்பனவுமாம். நிகழ்பொருள் இயற்கையாயுண்டாகிய பொருள்; செயற்கையுமாம் என்னில் 'பணைநீங்கிப் பைந்தொடி சோரும்' (1234) என்பதனுள்[1] எழுதியதால் அறிக. இனி, "இலங்கிழாய் இன்று

* வான் ஏரி - பெரிய ஏரி. 'வானேறி' என்றும் பாடம்.

[1] 'சோரும் என்னும் வளைத்தொழில் தோள்மேல் நின்றது' என்றூர். [2] தொல். சொல், 233

மறப்பின்'' (1262) என்னும் பாட்டினுள் 'கலங்கழியும்' என்பதற்கும் 'இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது' என்றது பிழை. 'பணை நீங்கிப் பைந்தொடி சோரும்' என்பதற்கு உரைத்தாங்கு உரைக்க. 'அக்கும் அரவும் அணிமணி' என்னுங் கோவையாருள் (103) பேராசிரியரும் இவ்வாறே எழுதினர் என்க.

இனித் தொல்காப்பிய வினையியலுள், 'ஆகிடந்து செறுவினையும்' என்பதனை இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது என்றார். ஈண்டு நிகழ்பொருள் செய்யுட்கண் வெளிப்படையாக வாராமையின் ஆகுபெயர்க்குள் அடங்கும் என்க. இவ்வாறு எழுதுவது நச்சினார்க்கினியர் கருத்து. இவ்வுரையாசிரியர் 'தொட்டனைத்தூறு மணற்கேணி' (396) என்பதன்கண், இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது என எழுதாமை காண்க.

## மேற்கோள்பகுதி:

பெருந்:—பயனுவமைக்கு மேற்கோள் காட்டுவர். (வீரசோ. 158.)

சுவாமி:— ஊருணி; படுசொல் அற்றுப் படுபொருளானது (இ. கொ. 78.)

## ஒப்புமைப்பகுதி:

''ஆலஞ்சேரி மயிந்தனென்போன் ஊருண்கேணிப் பேரொப்போனே'' —தமிழ் நா 9.

'' ஊருணி நிறையவும் உதவு மாடுயர்
பார்கெழு பழுமரம் பழுத்தற் றாகவும்.'' —கம்ப. அயோத். மந்திர. 84.

**216. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்**
**நயனுடை யான்கண் படின்.** (சு)

## உரைப்பகுதி:

**பரிமே:—** செல்வம் நயனுடையான் கண் படின் - செல்வம் ஒப்புரவு செய்வான்கண்ணே படுமாயின், பயன் மரம் உள்ளூர்ப்பழுத்தற்று - அது பயன்படுமரம் ஊர் நடுவே பழுத்தாற்போலும்.

உலகநீதி பலவற்றுள்ளும் ஒப்புரவு சிறந்தமையின், அதனையே நயன் என்றார். எல்லார்க்கும் எளிதில் பயன் கொடுக்கும் என்பதாம்.

**மணக்:—**பயன் படுமரம் ஊர் நடுவே பழுத்தாற்போலும்; பிறரால் விரும்பப்படுவான் மாட்டுச் செல்வம் உண்டாயின் என்றவாறு.

இது வேண்டாதார்க்கும் பயன்படும் என்றது. (7)

பருதி:—பயன்படு மாமரம், பலாமரம், பனைமரம் ஒருவன் சுதந்தர மற்றதாகத் தன்னிலே பழுத்ததற்கு ஒக்கும், நல்லோர் செல்வம் என்றவாறு. (4)

காளிங்:— ... ... .... .... (3)

## உரைவிளக்கப்பகுதி:

நுண்:—உள்ளூர் - ஊர்நடு; முன்பின்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை. ''முற்பகல்: பிற்பகல்'' (319) 'நுனிக்கொம்பர் ஏறினார்' (476) 'கடைக்கண்' (476 உரை) 'கீழ்நீர்' (929) என்பனவும் அது. முருகாற்றுப்படையுள் கீழ்நீர் என்பதனை 'மீயென மரீஇய' என்னுஞ் [1]சூத்திரவிதியால் இலக்கண மரூஉவாக்கினார் நச்சினார்க்கினியர் என்க. இளம்பூரணரும், புள்ளி மயங்கியலுள், முன்றில் என்பதனையும் இலக்கணமரூஉஎன உரைத்து, கடைக்கண் என்பதனையும் அது என்றார்[2]. இவ்வுரை ஆசிரியர் வடநூன் மரபும், வட நூலை மொழி பெயர்த்துச் செய்த வீரசோழிய முதலிய பின்நூலுங் கண்டு, இவ்வாறு உரைத்தார் போலும் என்க. பரிபாட்டினுள் [3] 'மையிருஞ்சூல் வண்ணன்' என்பதனை முன்பின்னாகத் தொக்க இரண்டாம் வேற்றுமைத் தொகை என்றார் இவ்வுரையாசிரியர். ஆகையால் அவர் கருத்து எம்மனோர்க்கு அறிதல் அரிது என்க.

## ஒப்புமைப்பகுதி :

'' முன்னூர்ப் பழுனிய கோளி யாலத்துப்
புள்ளார் யாணர்த்தற்றே என்மகன்
வளனும் செம்மலும் எமக்கு.'' —புறம். 254: 7-9.

'' நடுவூருள் வேதிகை சுற்றுக்கோள் புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்.'' —நாலடி. 96.

''—துன்னிக்
குழைகொண்டு தாழ்ந்த குளிர்மரம் எல்லாம்
உழைதங்கண் சென்றார்க்கு ஒருங்கு.'' ஷ 167.

''—பழுமரம்போல்
பல்லார் பயன்துய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்.'' ஷ 202.

'' கற்றை பஞ் சுடர்மணிக் கனகம் ஏனைய
சிற்றையென் னுதருள் பெரியர் வண்மைபோல்
மற்றவன் உள்ளவன் மரபும் தம்பயன்
எற்றையும் உவப்புறு ஈகை சான்றவே.'' —கந்த.

1 தொல். எழுத். 250. 2 தொல். எழுத். 355. 3 பாடல். 4. வரி. 7.

217. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின். (எ)

**உரைப்பகுதி :**

**பரிமே:—** செல்வம் பெருந்தகையான்கண் படின் - செல்வம் ஒப்புரவு செய்யும் பெரிய தகைமையை உடையான்கண்ணே படுமாயின், மருந்தாகித் தப்பா மரத்தற்று - அஃது எல்லா உறுப்பும் பிணிகட்கு *மருந்தாய்த் தப்பாத மரத்தை ஒக்கும்.

தப்புதலாவது கோடற்கரிய இடங்களில் நின்றுதல், மறைந்து நின்றுதல், காலத்தான் வேறுபட்டாதல் பயன்படாமை தன் குறை நோக்காது எல்லார் வருத்தமும் தீர்க்கும் என்பதாம். இவை மூன்று பாட்டானும் கடப்பாட்டாளனுடைய பொருள் பயன்படுமாறு கூறப்பட்டது.

**மணக்:**—*பிணி மருந்தாகித் தேடுவார்க்கு மறைதல் இல்லாத மரத்தை ஒக்கும்; செல்வமானது பெருந்தகைமையான்மாட்டு உண்டாயின் என்றவாறு.*

**பரிப்—:***தப்புதல் என்றது ஒளித்தலே. இவன்கரவானுதலின், செல்வம் உலகத்தார்க்குப் பசிமருந்தாம் என்றது. இவற்றுள் ஊருணி நீர்நிறைந்தாற்போலும் என்றும், பயன்மரமுள்ளூர்ப் பழுத்தற்றுலென்றும், மருந்து மரம்போலும் என்றும், கூறினமையின் 'பெருஞ்செல்வமின்மை' இரண்டு கொள்க.*

**பருதி:** - *பிரத்யக்ஷமான மருந்துமரம் நடுவூர்க்குள்ளே ஒருவர் சுதந்தரமற நின்றதற்கு ஒக்கும், நல்லோர் பெற்ற செல்வம் என்றவாறு.*

**காலிங்:—** .... .... .... .... .... ....

**ஒப்புமைப்பகுதி :—**

"அல்லல் ஒருவர்க்கும்..................மருந்து" —பழமொழி.

218. இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர். (அ)

**உரைப்பகுதி:**

**பரிமே: —** இடன் இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார் - செல்வம் சுருங்கியகாலத்தும் ஒப்புரவு செய்தற்குத்தளரார், கடன் அறி காட்சியவர் - தாம் செய்யத்தகுவற்றை அறிந்த இயற்கையறிவுடையார்.

* 'மருந்துகொள் மரம்' புறநானூறு, 180:5,

பிற எல்லாம் ஒழியினும், இஃது ஒழியார் என்பதாம்.

மணக்:— செல்வம் விரிவற்ற காலத்திலும் ஒப்புரவிற்குத் தளரார் ஒப்புரவை யறியும் அறிவுடையார் என்றவாறு.

இது செல்வம் விரிவல்லாத காலத்திலும் செய்யவேண்டுமென்றது (3)

பருதி:—எ - து ஒப்புரவினால் வகையற்ற இடத்திலும் ஒப்புரவு குன்றுர்; உலகத்தில் செய்யுமுறைமை அறிபவர் என்றவாறு. (8)

காளிங்:— எ - து தமக்கு ஒன்றும் தருதற்கு இடமில்லாதவாறு வறுமை வந்துற்றகாலத்தும், ஒப்புரவு செய்தற்கு ஒதுங்குதல் இலர்; யாரெனின், ஒப்புரவு என்னும் கடப்பாட்டினை அறிந்த அறிவினையுடையார் என்றவாறு.

கடப்பாடு என்பது முறைப்பாடு, காட்சி என்பது அறிவு. (9)

## ஒப்புமைப்பகுதி:

"உறுபுனல் தந்துல கூட்டி அறுமிடத்தும்
கல்லூற் றுழியூறும் ஆறேபோல்—செல்வம்
பலர்க்காற்றிக் கெட்டுவந்தக் கண்ணும் சிலர்க்காற்றிச்
செய்வர் செயற்பா லவை" —நாலடி, 185.

"அடர்ந்து வறியராய்" ---பழமொ.

"நரம்பொழுக்து" --நாலடி.

**219. நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர[1]**
**செய்யா தமைகலா ஆறு,** (கூ)

## உரைப்பகுதி:

பரிமே:— நயன் உடையான் நல்கூர்ந்தான் ஆதல் - ஒப்புரவு செய்தலையுடையான் நல்கூர்ந்தான் ஆதலாவது, செயும் நீர செய்யாது அமைகலா ஆறு - தவிராது செய்யும் நீர்மையையுடைய அவ்வொப்புரவு களைச் செய்யப்பெருது வருந்துகின்ற இயல்பாம்.

தான் நுகர்வன நுகரப்பெருமையன்று என்பதாம். இவை இரண்டு பாட்டானும் வறுமையான், ஒப்புரவு ஒழிதற்பாற்று அன்று என்பது கூறப்பட்டது.

மணக்:— நயனுடையான் நல்கூர்ந்தான் ஆகின்றது செய்ய வேண்டுவன செய்யாதே அமையமாட்டாத இயல்பாம் என்றவாறு.

இது செல்வம் குறைபடினும் செய்வர் என்றது. (4)

(1) 'செயவீர்மை' மணக்குடவர் பாடம்,

பருதி:—ஒப்புரவாளன் மிடித்தாலும் அற்பமாகிலும் ஒப்புரவு செய்வான். அது எது போலும் எனில், பெருகாறு விளைவித்து வற்றின தறுவாய்க்கு ஊற்றுநீர் கொடுப்பதுபோல என்றவாறு. (6)

காளிங்:— எ - து இல்லொழுக்கம் உடையோன் தான் பிறர்க்குச் செய்யத்தகும் ஒப்புரவுகளைச் செய்யாது நல்கூர்ந்தானுவது எப்போது எனில், தமது யாக்கை முடியுமிடத்தல்லது ஒப்புரவுக்கு ஒல்கானுதலால் ஒப்புரவு ஒழியுங்காலத்து உயிர்வாழான் என்றவாறு.

அது எங்ஙனமெனில் [1]பால் புளித்தலும் பகல் இருளாதலும் இல்லையாதலால், நயனுடையான் ஒப்புரவுக்கு இளையான் என்பது கருத்து. (8)

## 220. ஒப்புரவி னுல்வரும் கேடெனின் அஃதொருவன்
## விற்றுக்கோள் தக்க துடைத்து. (௧0)

**உரைப்பகுதி:**

**பரிமே:—** ஒப்புரவினுல் கேடுவரும் எனின் - ஒப்புரவுசெய்தலான் ஒருவனுக்குப் பொருட்கேடு வரும் என்பார் உளராயின், அஃது ஒருவன் விற்றுக்கோள் தக்கது உடைத்து - அக்கேடு தன்னை விற்றாயினும் கொள்ளும் தகுதியை உடைத்து.

தன்னை விற்றுக் கொள்ளப்படுவதொரு பொருளில்லையன்றே இஃதாயின் அதுவும் செய்யப்படும் என்றது புகழ்பயத்தல் நோக்கி: இதனுல் ஒப்புரவினுல் கெடுவது கேடன்று என்பது கூறப்பட்டது.

**மணக்:**—ஒருவன் ஒப்புரவு செய்தலினுலே பொருட்கேடு வரும் என்று சொல்லின் அக்கேட்டைக் கேடாகச் சேர்த்துக்கொள்ளல் கூடாது; அஃது ஒன்றை விற்று ஒன்றைக் கொள்ளுகின்ற வாணிகமாகக் கொள்ளும் தகுதியுடைத்து என்றவாறு.

கெட்டானுயினும் அதனை ஆக்கமாகக் கொள்ளல் தகும்; பிற்பயப்பன நன்மையாதலான். (5)

**பருதி:**—ஒப்புரவினுல் மிடி வருமாகில் தன்னை விற்றாகிலும் ஒப்புரவு செய்க என்றவாறு. (9)

**காளிங்:**— ... ... ... (6)

---

[1] புறநானூறு, 2: 17, புறப்பொருள் வெண்பாமாலை, 167, உரை.

## உரைவிளக்கப்பகுதி:

இராமா:—இனிக் கோட்டக்கது என்பதற்கு, செய்தக்கது என்பது போலச் செயவெனெச்சம் ஈறுகெட்டு முதல் நீண்டு நின்றது எனக் கொண்டு, கொள்ளத்தக்க தொழிலே உடையது எனப்பொருள் உரைத்தால் உளதாந் தன்மை உணர்க.

## மேற்கோள்பகுதி:

காரிரத்ன: *பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள்.* *(மாற. 251.)*

## ஒப்புமைப்பகுதி :

" பிறந்தநாள் தொடங்கி யாரும் துலேபுக்க பெரியோன் பெற்றி
மறந்தநாள் உண்டே என்னைச் சரண் என்று வாழ்கின்றுனைத்
துறந்தநாட் கின்றுவந்து துன்னினுன் சூழ்ச்சியாலே
இறந்தநாள் அன்றே என்றும் இருந்தநாள் ஆவதென்றுன்,"

—கம்ப, யுத்த, விபிடண, 110

# 23. ஈகை

பரிமே:— அஃதாவது வறியராய் ஏற்றூர்க்கு மாற்றுதுகொடுத்தல். இது மறுமைநோக்கியது ஆகலின், இம்மை நோக்கிய ஒப்புரவறிதலின் பின் வைக்கப்பட்டது.

*மணக்:— ஈகையாவது, இல்லென இரந்துவந்தார் யாவர்க்கும் வரையாது கொடுத்தல்.*

*பருதி:— ஈகையாவது, ஒப்புரவாகிய மேன்முறைமையிலும் கொடுத்தல் விசேஷம் என்றவாறு.*

**221. வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து. (க)**

**உரைப்பகுதி:**

பரிமே:— வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை - ஒருபொருளும் இல்லாதார்க்கு அவர் வேண்டியதொன்றைக் கொடுப்பதே பிறர்க்குக் கொடுத்தலாவது; மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீரது உடைத்து - அஃது ஒழிந்த எல்லாக்கொடையும் குறியெதிர்ப்பைக் கொடுக்கும் நீர்மையை உடைத்து.

ஒழிந்தகொடைகளாவன வறியரல்லாதார்க்கு ஒருபயன் நோக்கிக் கொடுப்பன. குறியெதிர்ப்பையாவது அளவுகுறித்துவாங்கி அவ்வாங்கிய வாறே எதிர்கொடுப்பது. நீரது என்புழி அது என்பது பகுதிப்பொருள் விகுதி. பின்னும் தன்பால் வருதலின், குறியெதிர்ப்பைக் கொடுக்கும் நீரதுடைத்து என்றூர். இதனுன் ஈகையது இலக்கணம் கூறப்பட்டது.

*மணக்:— ஈகையாவது இல்லாதார்க்கு யாதானும் ஒன்றைக் கொடுத்தல்; இஃதொழிந்த கொடையெல்லாம் குறியெதிர்ப்பைக் கொடுத்த நீர்மையாதலையுடைத்து என்றவாறு.*

*பரிப்:—இது கொடுக்குங்கால் இல்லாதார்க்குக் கொடுக்கவேண்டும் என்றது.* (2)

பருதி:— எ-து வறியவர்க்குக் கொடுப்பதே கொடை; மற்ற தெல்லாம் வட்டிக்குக் கொடுப்பதை ஒக்கும் என்றவாறு. (1)

காளிங்:— வறியவர்க்கு என்ஞான்றும் யாதானும் ஒன்றினைக் கொடுப்பதே கொடையாவது; மற்று இம்மைப்பயனும் மறுமைப்பயனும் கருதிக் கொடுப்பன எல்லாம் தமக்கோர் ஊதியம் குறித்துக் கொடுக்கின்ற மையின் அது கொடையல்ல என்றவாறு.

நீரது உடைத்து என்றது ஒப்புடைத்து என்றது. (1)

## உரைவிளக்கப்பகுதி:

நுண்:— நீரது: அது பகுதிப்பொருள்விகுதி; பகுதிப்பொருள் விகுதியாவது; பகுதியின் பொருளையேபடும்; விகுதிபெற்றிருந்தும் என்க. பகுதி விகுதியாவது - குழை என்பது பகுதி; அன் என்பது விகுதி; குழை யுடையன் குழையன் என முடிக்க. அஃது இவ்வாறு பொருள்படாமை காண்க. "நத்தம் போல்கேடு"(235)" நுனிக்கொம்பர்"(476)"உள்ளத்தார் காதலவராக" (1249) "செயற்கை அறிந்தக் கடைத்தும்" (637) என்பனவும் ஆம்.

இராமா:— நீரது என்ற இடத்து அகரம் சாரியை; து பகுதிப் பொருள் விகுதி. குறிஎதிர்ப்பை என்பது இறந்தகால வினைத்தொகைத் தொடர்மொழி, எதிர்காலத்திலே பெறும்படியாகக் குறித்த எதிர்ப்பை என விரியும்.

## மேற்கோள்பகுதி:

சுவாமி:— நீர் எனப் பகாப்பதமாகவே பொருள் கொள்வர். இதனைத் தமிழ்நூலோர் பகுதிப்பொருள்விகுதி எனப்பெயரிட்டு வழங்கு வர். (இ. கொ. 117.)

## ஒப்புமைப்பகுதி:

"ஆற்றுதல் என்பதொன்று அலந்தவர்க்கு உதவுதல்." —கலி. 133, 6.

"இம்மைச் செய்தது மறுமைக்காம் எனும்
அறவிலை வணிகன் ஆய் அலன்." —புறம் 134: 172.

"ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர். —மணி. 11: 92.

"சிறுநன்றி யின்றிவர்க்குயாம் செய்தக்கால் நாளைப்
பெறுநன்றி மன்னும் பெரிதென்று—உறுநன்றி
தானவாய்ச் செய்வதூஉம் தானமன் றென்பவே
வானவாம் உள்ளந் தவர்." —யா. வி.: 4: மேற்,

''வைப்பானே வள்ளல் வழங்குவான் வாணிகன்.'' ---சிறுபஞ்ச. 34'

''ஏற்றகை மாற்றாமை என்னானும் தாம்வரையார்
ஆற்றாதார்க் கீவதாம் ஆண்கடன்---ஆற்றின்
மலிகடல் தண்சேர்ப்ப மாறீவார்க் கீதல்
பொலிகடன் என்னும் பெயர்த்து.'' ---நாலடி. 98.

'தொடுத்த வறுமையும் பயனும் தூக்கி வழங்குநர்போல.''
---திருவிளை, வாதவூ, உபதே, 2.

## 222. *நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்எனினும் ஈதலே நன்று. (உ)

### உரைப்பகுதி:

**பரிமே:**—கொளல் நல்லாறு எனினும் தீது - ஏற்றல் வீட்டுல கிற்கு நல்லநெறி என்பார் உளராயினும் அது தீது; மேலுலகம் இல் எனினும் ஈதலே நன்று - ஈந்தார்க்கு அவ்வுலகு எய்துதல் இல்லை என் பார் உளராயினும் ஈதலே நன்று.

எனினும் என்பது இருவழியும் அங்ஙனங் கூறுவாரின்மை விளக்கிநின்றது. பிரிநிலை ஏகாரத்தால் பிற அறங்களின் ஈதல் சிறந்தது என்பது பெற்றாம். நல்லது கூறுவார் தீயதும் உடன் கூறினர்.

*மணக்:— ஒருவன்மாட்டுக் கொள்ளல் நன்மை பயக்கும் நெறி எனினும் கோடல் தீது; ஒருவர்க்குக் கொடுத்தால் பாவம் உண்டெனினும் கொடுத்தல் நன்று என்றவாறு.*

*கொள்வோரமைதி அறிந்து கொடுக்கவேண்டும் எனினும், இது வரையாது கொடுத்தலாதலால், யாதொருவாற்றானும் கொடை நன்று என்பது கூறிற்று.* (1)

*பருதி:— எ - து இவர்கையாலே ஏற்றால் புண்ணியம் உண்டு என்று சொன்னாலும் ஏற்பது பொல்லாது; இவர்கையிலே கொடுத்தால் நரகம் என்றாலும் கொடுத்தலே நன்று என்றவாறு.* (10)

---

* 'நல்லார்' என்பது பருதியார் பாடம்.
நல்லார் எனப் பாடங்கொண்டு, முனி ஏற்கிறவிடு கணிகை விபசாரி முதலியோர் இப்பொழுது நல்ல ஒழுக்கமாக நடக்தாலும் அவர்களிடம் தானம் வாங்குதல் தீது எனப் பொருள் கொள்ளுதலும் உண்டு என்பர் கவி ராஜபண்டிதர்.

**காளிங்:—** எ - து தாம் பிறரொருவர்மாட்டுச் சென்று ஏற்றுக் கொள்ளுவது நல்வழி என்று அறநூல் சொல்லினும், இரத்தல் மிகவும் தீது; மற்றுப் பிறர் ஒருவருக்குக் கொடுத்த அதனால் மறுமைப்பயன் இல்லை எனினும் ஈதலே நன்று என்றவாறு.

இனி ஈவார்க்கு இங்ஙனம் மறுமைப் பயனேயோ பயப்பது இம்மையில் பெறுவதொன்று இல்லையோ எனின், இம்மையிடத்தும் எஞ்ஞான்றும் தம்பெயர் அழியாதுநிற்பதோர் பெரும்புகழ்எய்துவர் என்ப தனை அறிவிக்கின்றது மேலதிகாரம்*. (10)

**பெருந்தே:—** இதனுள் தீது என்றும், நன்று என்றும் வந்தமை யால் முரண் என்னும் அலங்காரமாயிற்று. (வீரசோ. 154.) இரட்டுற மொழிதலுக்கு மேற்கோள். (ஷை 180.)

**காரிரத்ன:—** "இலன் என்னும் எவ்வம் உரையாமை" என்னும் குறளுக்கு முன்னர் உத்திக்கேற்பக் கூறிய பொருளன்றி "நல்லாறெனி னும்......நன்று" என்னும் மேலிற் குறளின் பொருள்கட்கு ஒன்ற உம்மையை விரித்து இலனென்னும் எவ்வம் உரையாமையும் ஈகையும் குலனுடையான்கண்ணே உள என உரைத்துக்கொள்க. (மாற. 25.)

**ஒப்புமைப்பகுதி:**

"ஈ என் கிளவி இழிந்தோன் கூற்றே" —தொல். சொல். 445.

"ஈ என இரத்தலோ அரிதே" —புறம். 154: 8.

"ஈ என இரத்தல் இழிந்தன்று; அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;
கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று" —204: 1 - 4.

"இன்னுயிரேனும் கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால்"
—கம்ப. வேள்வி 29.

"ஈவதே பெருமையன்றி இரக்கின்றது இழிவே அன்றோ"
—திருவிளை. மாணிக். 30.

**223. இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள. (௩)**

* மேலதிகாரம் என்றது புகழ் என்ற அடுத்த அதிகாரத்தை.

**உரைப்பகுதி:**

பரிமே:— இலன் என்னும் எவ்வம் உரையாமை - யான் வறியன் என்று இரப்பான் சொல்லும் இளிவரவைத் தான் பிறர்கட் சொல்லாமையும்; ஈதல் - அதனைத் தன் கண் சொன்னூர்க்கு மாற்றாது ஈதலும்; உள குலனுடையான்கண்ணே - இவை இரண்டும் உளவாவன குடிப்பிறந்தான் கண்ணே.

மேல் தீது என்றது ஒழிதற்கும் நன்று என்றது செய்தற்கும் உரியவனை உணர்த்தியவாறு. இனி 'இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்' என்பதற்கு அவ்விளிவரவை ஒருவன் தனக்குச் சொல்வதற்கு முன்னே அவன் குறிப்பறிந்து கொடுத்தல் எனவும், அதனைப் பின்னும் பிறனொருவன்பாற்சென்று அவன் உரையாவகையால் கொடுத்தல் எனவும், யான் இதுபொழுது பொருளுடையேன் அல்லேன் எனக் கரப்பார் சொல்லும் இளிவரவைச் சொல்லாது கொடுத்தல் எனவும் உரைப்பாரும் உளர். அவர் ஈதல் என்பதனைப் பொருட் பன்மைபற்றி வந்த பன்மையாக உரைப்பர்.

மணக்:— *இரந்துவந்தார்க்கு இலன் என்னுநின்ற துன்பத்தைக் கூறாதே ஈதலும், குடிப்பிறந்தான் மாட்டே உளதாம் என்றவாறு.*

பரிப்:—*இல்லை என்று சொல்வதன் முன்னே குறிப்பறிந்து கொடுத்தலெனினும் அமையும். இது கொடுக்குங்கால் மறாது கொடுக்கவேண்டும் என்றது.* (3)

பருதி:— *எ - து தன்னிடத்திலே ஏற்றவன் [1] பிறத்தியிலே போய் எனக்கு என்று சொல்லாதவாறு மிடிதீரக் கொடுப்பது குடிப்பிறந்தார்க்கு [2] 'வரவித்தை' என்றவாறு.*

காளிங்:— *எ - து மற்றெவ்வாற்றானும் தம்மாட்டு வந்தோர்யாவர்; மற்றவர் 'எமக்கு [3]வகையிலோம்' என்று சொல்லும் இத்துயருறு சொல்லினைச் செவிகேட்பச் சொல்லுதற்கு முன்னமே கொடுத்தல் யாவர் மாட்டுளவோ எனில், குலமரபுடையோன் மாட்டே உளவாம் என்றவாறு,*

எவ்வம் என்பது துயரம். (9)

**உரைவிளக்கப்பகுதி:**

நுண்:— *குலன் - குடி, ஈதலைப் பலவாக்கிய பக்ஷாந்தரம் மூன்று காண்க. ''ஏதிலார்போலப் பொதுநோக்கு'' (1099) என்பதற்கும் இவ்வுரையாசிரியர் அவ்வாறு எழுதினர் என்க.*

---

[1] 'புறத்திலே' எனவும், பாடம். [2] இதற்குப் பொருள் விளங்க வில்லை. [3] 'உவகையிலோம்' எனவும் பாடம்.

இராமா:— வேரூர் உரை: செல்வம் உயர்ந்தகாலத்திலே நான்பொருளுடையன் என்று இனிதாகச் சொல்லிக் கொடுப்பனவும், அது சுருங்கிய காலத்திலே நான் இல்லாதவன் என்று துன்பவார்த்தைகளைச் சொல்லி இரந்தவரை விலக்குவனவும், யாவர்க்கும் எளியவையாம். இனி, அரியவை யாவை? அவை யாரிடத்து உண்டாம் எனின், இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல் - ஒருவன் செல்வம் சுருங்கியகாலத்தே தான் இல்லாதவன் ஆவான் ஆதலால் தன்னைவந்து இரந்தவர்க்குத் தான் நான் தரித்திரனுனேன் என்று சொல்லும் துன்ப மொழிகளைச் சொல்லாது கொடுப்பவை அரியவையாம், குலன் உடையான்கண்ணே உள - அவை குலத்தை உடைமையாகப் பெற்றவனிடத்தே உண்டாம் என்றவாறு.

வினைவிசை எச்சம் வருவிக்கப்பட்டது. குலத்தை உடைமையாகப் பெறுதலாவது அக்குலத்திலுள்ளோர் யாவருக்கும் தலைவனுக விளங்குவது. செல்வம் சுருங்கியகாலத்து வேண்டுவன கொடுத்தல் கூடாதெனின், அது கூடுதற்கு அவன் குலத்தை உடைமையாகப் பெறுதற்கு அமைந்த நற்குண நற்செய்கைகளும், கொடையின் கண் மன ஊக்க உறுதியும், தெய்வ அருளும், பிறவும் காரணமாதலால் கூடும்என்க. செல்வம் சுருங்கிய காலத்தில் இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈந்ததைப் பாம்பின் புற்றிலே கையிட்டோன் முதலியோரிடத்தில் காண்க.

## மேற்கோள்பகுதி:

நச்:— இக்குறள் ஈதல் கூறியது. (தொல். பொருள். சூ. 75.)

இளம்:— ஈதலாவது இல்லென இரந்தோர்க்குக் கொடுத்தல்: உதாரணம் 'இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்' (தொல். பொருள் 74.)

காரிரத்ன:— 'இலன்............உள' என்பதனுள் பல பொருள் தோன்றியவிடத்து முதலேகண்ட இரண்டுகிரிகையும் அன்றி; இரப்போன் என்றும் ஒருவர்பால் யான் ஒன்றும் இலன் என்று மானபங்கம் கூறுமல் இரக்கப்படுவோன் ஈகை எனப்பொருள் கோடலுமாம். (மாற - 25, உரை.)

யா. வி. உரை:— ஒன்பதெழுத்து ஈற்றடி வெண்பாவுக்குமேற்கோள். (சூ. 95.)

"இல்லது நோக்கி இளிவரவு கூறுமுன்
நல்லது வெஃகி வினை செய்வார்." —பரிபா. 10: 87-88.

'எமக்கில் என்னுர் நின் மறங் கூறு குழாத்தர்' பதிற்: 4. 39. 2.
இல்லென மறுக்கும் சிறுமையு மிலனே. புறம் 180
'இல்லென இரந்தோர்க் கொன்றீயாமை இழிவென!' கலி, 2- 15

''நிற்பரடிய அலங்கு செந்நாப்
பிறரிசை நூவலாமை
ஓம்பாதியும் ஆற்றல் எங்கோ '' புறம். 22: 31: -33

:''பிறன்கடை மறப்ப நல்குவன் செலினே'' — 68-19.

''இரவினுனே யித்தோன் எந்தை
அன்றை ஞான்றினொடு இன்றினுங்கும்
இரப்பச் சிந்தியேன.'' —376: 16 - 18.

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத்து இசை விளங்கத்—தொல்லை
இரவாமல் ஈந்த இறைவர்போல் நீயுங்
கரவாமல் ஈகை கடன்.'' —புறப்பொருள். 184.

'' செருமான வேற்சென்னி தென்னுறந்தை யார்தம்
பெருமான் முகம்பார்த்த பின்னர்—ஒருநாளும்
பூதலத்தோர் தம்மைப் பொருள்நசையாற் பாராவாம்
காதலித்துத் தாழ்ந்திரப்போர் கண் .''தண்டி. சூ. 21. உரை.

''வளங்குன்றினும் இன்மைகூறுத்தன் நீர்மைகுன்றுன்
எனும் தன்மை. ', —திருவிளை. உலவாக்கோட். 6.

''இன்மையால் சென்றிரந்தார்க்கு இல்லையென்னுது ஈந்துவக்குந்
தன்மையார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. ''
—சம்பந் - ஆக்கூர். 9.

''செல்வமேவிய நாளில் இச்செயல் செய்வ தன்றியும் மெய்யினுல்
அல்லல் நல்குரவான போதினும் வல்லர் என்றறி விக்கவே. ''
—பெரிய, இளையா. 6.

''இரப்பவன் வாளா தேக இலன் எனும் எல்வம் கூறுது
இரப்பினை யிரப்பல் நன்றும் அதனின்நன் றுவதாகும்
இரப்பவன் இலன் என்றுரர இயம்பிய எவ்வம் சொல் என்று
இரப்பினும் பிறர்பால் கூறுது இரக்கமோடு ஈதல் மைந்தா.''

''அருத்தியின் இலன் என்னுமுன் அளித்தலும் இலன்என்றப்பால்
உரைத்தில னுகச் சால உதவலும் ஏற்கின்றுனும்
வருத்துற விலன் என்னுமை வழங்கிட வரைவில் செல்வம்
பொருத்தலும் ஒன்றினென்று புகழ்மிக விளங்கி நிற்கும்.''

''நலமிகு செல்வம் பெற்றும் நல்குரவினரைக் காத்தல்
இலனற மாதிச் சீர்த்தி இலனெனப் பிறர்சொல் எவ்வ
வலனுரைக்கு அஞ்சியேனும் வறியனை இலன் என்றெள்ளாது
அலர்புகழ் பயனும் வேண்டின் ஆக்கையும் அளிக்க மைந்தா!.''
—விநாயகர், அரசிய, 38-40

**224. இன்ன திரக்கப் படுதல் இரந்தவர்**
**இன்முகம் காணும் அளவு.** (சு)

**உரைப்பகுதி :**

**பரிமே:—** இரக்கப்படுதல் இன்னது - இரத்தலேயன்றி இரக்கப் படுதலும் இனிதன்று; இரந்தவர் இன்முகம் காணும் அளவு - ஒரு பொருளையிரந்தவர் அது பெற்றதனல் இனிதாகிய அவர் முகங்காணும் அளவும்.

எச்சவும்மையும் முற்றும்மையும் விகாரத்தால்தொக்கன. இரக் கப் படுதல் - இரப்பார்க்கு ஈவல் என்று இருத்தல். அதனை இன்ன தென்றது *"எல்லாம் - இரப்பார்க்கொன்றீயாமை" கூடுங்கொல்லோ என்னும் அச்ச நோக்கி. எனவே, எல்லாப் பொருளும் ஈதல் வேண் டும் என்பது பெறப்பட்டது.

மணக்:—பிறன் ஒருவனல் இரக்கப்படுதலும் இன்னது; எவ்வள வும் எனின், இரந்துவந்தவன் தான்வேண்டியது பெற்றதனனே இனிதான முகங் காணுமளவும் என்றவாறு.

இது கொடுக்குங்கால் தாழாது கொடுக்கவேண்டும் என்றது. (5)

பருதி:— எ - து தேகி என்பது பொல்லாது; எவ்வளவும் என்னில், தாதாவானவன் அவன் முகங்காணுமளவும் என்றவாறு.

தேகியின் நகைமுகங்கண்டால் துயரங் கெடும் என்பதாம் (8)

காளிங்:— எ - து பிறரால் இரக்கப்படுதல் மிகவும் இன்னங்கு உடைத்து மற்றும் தம்பால்வந்து இரந்தவரது இனிய முகம் காணுமள வும் என்றவாறு.

(5)

**உரைவிளக்கப்பகுதி:**

**நுண்:—** இரக்கப்படுதல் - இரப்பார்க்கு ஈவனென்றிருத்தல். படு தல் எச்சவும்மை. அளவு முற்றும்மை; செய்யுட்டொடை விகாரத்தால் தொக்கு நின்றன, இரக்கப்படுதல் செயப்படுபொருண்மேல் நில்லாது ஈவல் என்று இருத்தற்றெழில்மேல் நின்றது. "அகத்தின்ன வஞ்சரை அஞ்சப்படும்" (824) என்பதும் அது. கோவையாருள் 'கொள்ளப்

* நாலடி. 145

படாது' (87) என்பதற்குப் பேராசிரியரும் இவ்வாறுரைத்தார்*. 'உதவி செயப்பட்டார்' (105) என்பதும் 'உட்கப்பட்டார்' (921) என்பதும், பாயிரத்துள் 'கற்கப்படட்டார்' என்பதும் இவ்வாறு வேறு பொருள்படும் என்க.

இராமா :—இரக்கப்படுதலும் என்கின்ற இறந்தது தழுவிய எச்ச உம்மையும், காணுமளவும் என்கிற முற்றும்மையும் குறைந்து நின்றன.

## ஒப்புமைப்பகுதி :

"ஈத்தவகையால் உவவாதார்க்கு ஈப்பு இன்னு" —இன்னு. 22.

## 225. ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை மாற்றுவார் ஆற்றலின் பின்.

## உரைப்பகுதி :

**பரிமே :**—ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் - தவத்தான் வலியார்க்கு வலியாவது தம்மையுற்ற பசியைப் பொறுத்தல்; அப்பசியை மாற்றுவார் ஆற்றலின் பின் - அவ்வலிதான் அங்ஙனம் பொறுத்தற்கரிய பசியை ஈகையால் ஒழிப்பாரது வலிக்குப்பின்.

தாமும் பசித்துப் பிறரையும் அது தீர்க்கமாட்டாதார் ஆற்றலில், தாமும் பசியாது பிறரையும் அது தீர்ப்பார் ஆற்றல் நன்று என்பதாம்.

**மணக் :**—பெரியாரது பெருமையாவது பசியைப் பொறுத்தல்; அதுவும் பெரிதாவது பிறர் பசியைத் தீர்ப்பாரது பெருமைக்குப் பின்பு என்றவாறு.

இது தவம்பண்ணுவாரினும் தானம்பண்ணுவார் வலியுடையர் என்றது. (10)

**பருதி :**—எ - து ஆற்றுவார் பசி ஆற்றலே பெரிது; அவன் சருகு பொசித்து தவசு பண்ணுவாரிலும் பெரியனும்; எப்படி என்றுல் சருகு பொசிப்பார், ஒருவரையும் பசி யாற்ற மாட்டார்; தன் ஆத்துமாவையும் ஒறுப்பார்; ஆகையால் இவனுக்கு அவர்கள் சரியல்லர் என்றவாறு. (3)

**காளிங் :**—எ -து தவம் மானம் முதலாகிய அனைத்துக் காரணங்களையும் தாம் இயற்றுகின்ற அறநெறிக்கு வழுவுதலுண்டாகாமே அவற்றின்

* கொள்ளப்படாது என்பது வினைமுதன்மேலும் செயப்படுபொருண் மேலும் அன்றி வினைமேல் நின்ற முற்றுச்சொல் அகத்தின்னுவஞ்சரை அஞ்சப்படும் என்பது போல'
—பேராசிரியர்

மதங்களை ஆற்றி ஒழுகுவாருடைய ஆற்றலின் மிக்க தவமாவது யாதோ எனில், பசியை ஆற்றலாகின்ற பெருந்தவமானது வறியவர் வந்தால் அப்பசிப்பிணிக்கு மருந்தாகிய அமுதம் கொடுத்து மாற்றதனை ஒழிப்பாரது புண்ணியத்திற்குப்பின் என்றவாறு. (4)

226. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. (௬)

**உரைப்பகுதி :**

**பரிமே:**— அற்றார் அழி பசி தீர்த்தல் - வறியாரது மிக்க பசியை அறநோக்கித் தீர்க்க; பொருள் பெற்றான் ஒருவன் வைப்புழி அஃது - பொருள்பெற்றான் ஒருவன் அதனைத் தனக்கு உதவ வைக்குமிடம் அவ் அறமாகலான்.

எல்லா நன்மைகளும் அழியவருதலின், அழிபசி என்றார். அறன் நோக்கி என்பது எஞ்சி நின்றது. அற்றாரழிபசி தீர்த்த பொருள் பின் தனக்கே வந்துதவும் என்பதாம்.

**மணக் :**—பொருளற்றாரது குணங்களையழிக்கும் பசியைப் போக்குக; அது செய்ய ஒருவன்தான் தேடின பொருள் வைத்தற்கு இடம் பெற்றானும் என்றவாறு.

இது பகுத்துண்ணப் பொருளழியாது என்றது. (9)

**பருதி :**—எ - து பொருளற்றாரது பசி தீர்த்தல் ஒருவன் பெற்ற பொருளைச் சேமிக்குமிடம் என்றவாறு. (2)

**காளிங் :**—எ - து தன் கைப்பொருள் அற்றாராகிய வறியோரது மிக்க பசியினைத் தீர்த்தல் யாது மற்றஃது பொருள் நசித்துப் போகாமை தனது நெஞ்சறிந்து மகிழ்ந்து தானே தன் கையால் எடுத்து வைப்பதோரிடத்தினைப் பெற்றான் என்றவாறு. (8)

**உரைவிளக்கப்பகுதி :**

**இராமா :**—எல்லா நன்மைகளும் அழியவரும் என்பதை 'பிறந்த குலம் மாயும்; பேராண்மை மாயும்; சிறந்த தங்கல்வியும் மாயும் - கறங்கருவி, கன்மேல் கழூஉம் கணமலை நன்னாட *இன்மை தழுவப்பட்டார்க்கு என்பதுகொண்டு காண்க.

---

* நாலடி. 285,

**மேற்கோள்பகுதி :**

தெய்வச் :—ஒருவன் தேடின பொருள் வைத்தற்கு இடம் பெற்றானும் என உரைக்கவேண்டுதலின், ஆம் என்னும் வினைக்குறிப்பு எஞ்சிநின்றது. (தொல். சொல். 424)

**ஒப்புமைப்பகுதி :**

"அழிபசி வருத்தம் வீட" —சிறுபா. 10.
"வைத்தவனை" —பழமொழி.
"செல்வத்தைப்..........வைப்பு" --அறநெறிச்

**227. பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்**
**தீப்பிணி தீண்டல் அரிது. (எ)**

**உரைப்பகுதி :**

**பரிமே:**—பாத்து ஊண் மரீஇயவனை - எஞ்ஞான்றும் பகுத்து உண்டல் பயின்றவனை; பசி என்னும் தீப்பிணி தீண்டல் அரிது – பசி என்று சொல்லப்படும் தீயநோய் தீண்டுதல் இல்லை.

இவ்வுடம்பினின்று ஞான ஒழுக்கங்களை அழித்து அதனால் வரும் உடம்புகட்கும் துன்பஞ்செய்தலின், தீப்பிணி எனப்பட்டது; தனக்கு மருத்துவன் தானாகலின், பசிப்பிணி நணுகாது என்பதாம். இவை ஆறு பாட்டானும் ஈதலின் சிறப்புக் கூறப்பட்டது.

**மணக் :**—பகுத்து உண்டலைப் பழகியவனைப் பசியாகிய பொல்லா நோய் தீண்டுதல் இல்லை என்றவாறு.

இஃது ஒருவன் பிறர்க்கீயாதொழிகின்றமை, ஈந்தால் பொருள் குறையும்; அதனாலே பசியுண்டாம் என்றஞ்சியன்றே? அவ்வாறு நினைத்தல் வேண்டா; பகுத்துண்ணப் பசி வராது என்று கூறிற்று. (8)

**பருதி :**—எ - து பசித்தவர் உண்டோ என்று பார்த்துக் கூட்டிக் கொண்டுவந்து பசியாற்றுவானை இம்மை மறுமைக்கும் பசிப்பிணி தீண்டாது என்றவாறு. (4)

**காளிங் :**—எ - து அங்ஙனம் தான் தனித்துண்ணாது பிறர்க்கும் பகுத்துண்ணும் பகுத்தூணினையே எஞ்ஞான்றும் மருவி வருகின்றவனை மற்றுப் பசி என்று சொல்லப்படும் கொடுந் தீயாகியபிணி எஞ்ஞான்றும் தீண்டுதலரிது என்றவாறு. (7)

228. ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். (அ)

உரைப்பகுதி :

பரிமே:—தாம் உடைமை வைத்து இழக்கும் வன்கணவர் - தாம் உடையபொருளை ஈயாது வைத்துப் பின் இழந்துபோம் அருளிலாதார், ஈத்து உவக்கும் இன்பம் அறியார்கொல் - வறியார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவர் உவத்தலான் அருளுடையார் எய்தும் இன்பத்தினைக் கண்டறியார் கொல்லோ !

உவக்கும் என்பது காரணத்தின்கண் வந்த பெயரெச்சம்; அ∴து இன்பம் என்னுங் காரியப்பெயர் கொண்டது. அறிந்தாராயின், தாமும் அவ்வின்பத்தை எய்துவதல்லது வைத்து இழவார் என்பது கருத்து.

மணக் :—கொடுத்த கொடையினால் பெற்றவர்க்கு வரும் முக மலர்ச்சியைக் கண்டறியாரோ ? தாம் உடைய பொருளைக் கொடாதே வைத்துப் பின் இழக்கின்ற வன்கண்ணர் என்றவாறு.

இஃது இடார் இழப்பர் என்றது. (6)

பருதி:— எ - து கொடுத்து அதனால்வரும் இன்பம் அறியார்; அவர் யாரென்னில், உடைமையைத் தேடிவைத்துத் தானும் பொசியாமல் பாழே கெடுப்பவர் என்றவாறு. (6)

காளிங்:—எ - து வேண்டுநர் யாவருக்கும் கொடுத்து, அதனால், தனது மனம் மகிழும் இன்பத்தை அறியார் போலும்; யாரோ எனில், உடைமையாகிய பொருளினை வழங்காது ஈட்டிவைத்து இழந்து உயிர் கழியும் தறுகணாளர் என்றவாறு. (2)

உரைவிளக்கப்பகுதி:

நுண்:—ஈத்து வினையெச்சத்திரிசொல். தம்முடைமை என நிற்கற்பாலது தாமுடைமை எனவும், முன்னர்க் காமத்துப்பாலில், "தாமுடைய நெஞ்சந்துணையல்வழி" (1299) "தமரல்வழி" (1300) எனவும் "பூங்கணையார்" என்னுங் கோவையாருள் (19) 'பாங்கனையானன்ன பண்பனை' எனவும், 'தெளிநீயனைய பொன்னே பன்னுகோலம் தெளிவுறவே' (122) எனவும், [1]"வேனில் வெயிற்குலர்ந்த மெய்வறுமை கண்டு இரங்கி, வானின் வளஞ்சுரந்த வண்புயற்குத் - தானுடைய, தாது மேதக்க மதுவும்

[1] தண்டி. சூ. 29. மேற்கோள்.

தடஞ்சினையால், போதிமீ தேந்தும் பொழில்'' என்பதனுள் தானுடைய எனவும், பிற்காலக்கவியிலும் 'தானுடைய மெய்ந்நுடக்கம் தண்மாதவிக்கு அளித்து' எனவும் பெரும்பான்மையும் வரும்.

[1] ''தாம் நாம் என்னும் மகர இறுதியும், யாம் என் இறுதியும் அதனோரன்ன'' என்னுஞ் சூத்திரவிதி பெறாது, உருபு புணர்ச்சிக்கும் பொருட்புணர்ச்சிக்கும் மாறுபட்டு வருதலின் இவற்றின்கண் உரையாசிரியர் பரிகரியாமையால், இவ்வுரையாசிரியர் கருத்தும் எம்மனோர்க்கு அறிதல் அரிது என்க.

## மேற்கோள்பகுதி:

**காரிரத்ன;**—பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற. 251)

**நச்;**—வணிகர் வேளாளர் இருவர்க்கும் ஈதற் சிறப்பு கூறியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 75.)

**குணசா:**—மருட்செந்தொடைக்கு மேற்கோள். (யா. கா. 43.)

**யா. வி. உரை.**—முதற்சீர் கடையொத்து வந்தமையால் கடையியைபுக்கு மேற்கோள். (சூ. 39)

**அடியார்:**—'இருகரும் புருவமாக ஈக்க'; ஈக்க, 'ஈத்துவக்கும்' என்றாற் போல நின்றது. (சிலப், மனையறம். 45.)

## ஒப்புமைப்பகுதி:

''ஈவாரைக் கொண்டாடி ஏற்பாரைப் பார்த்துவக்கும்
சேய்மாடக் கூடம்,'' பரிபா. திரட்டு. 11.

''ஈதல் இன்பம் வெஃகி.'' —அகம் 69: 5.

''இல்லது நிரப்பல் ஆற்று தோரினும்
உள்ளி வருநர் நசை இழப்போரே'' —புறம். 203: 7 - 8

''செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே.'' — ௸ 139: 7 - 8.

''வருந்திவந்தோர் அரும்பசி களைந்தவர்
திருந்து முகம் காட்டும் என் தெய்வக்கடிஞை.''
—மணி. பாத்திரமரபு. 44 - 45

''ஈட்டிய எல்லாம் ஈதற்கே என்பது
காட்டிய கைவண்மை காட்டினர் - வேட்டொறும்
காமருதார்ச் சென்னி கடல்சூழ் புகார்வணிகர்
தாமரையும் சங்கும்போற் றந்து.'' —பெரும்பொருள் விளக்கம்

[1] தொல்; எழுத். 188.

"கருங்குளவி சூரைத்தூற் றீச்சங் கனிபோல்
வருந்தினர்க் கொன்றியாதான் வாழ்க்கை - அரும்பகலே
இச்சித் திருந்தபொருள் தாயத்தார் கொள்வரே
எற்றேமற் றெற்றேமற் றெற்று." —தனிக்கவி.

—கொன்னே.
வழங்கான் பொருள்காத்து இருப்பானேல் ஆஆ
இழந்தான் என்று எண்ணப்படும்." —நாலடி. 9.

"உடா அதும் உண்ணாதும் தம்முடம்பு செற்றும்
கெடா அத நல்லறமும் செய்யார் - கொடாஅது
வைத்தீட் டினார் இழப்பர் வான்தோய் மலைநாட
உய்த்தீட்டும் தேனீக் கரி." டி 10

## 229. இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
## தாமே தமியர் உணல்

**உரைப்பகுதி:**

**பரிமே**:—நிரப்பிய தாமே தமியர் உணல் - பொருட்குறை நிரப்ப வேண்டி வறியார்க்கு ஈயாது தாமே தனித்து உண்டல், இரத்தலின் இன்னாதுமன்ற - ஒருவர்க்குப் பிறர்பாற்சென்று இரத்தலினும் இன்னாது ஒருதலையாக.

பொருட்குறை நிரப்பலாவது ஒரோ எண்களைக் குறித்து 'இத்துணையீட்டுதும்' என் ஈட்டத்தையே மேற்கொண்டு இவறிக்கூட்டு தல். தனித்தல்-பிறரை ஒழித்தல். இரத்தற்குள்ளது அப்பொழுதை இளிவரவே பின் நல்குரவு இல்லை; தமியருண்டற்கு அவை இரண்டும் உளவாமாகலின், இரத்தலின் இன்னாது என்றார். நிரப்பிய என்ப தற்குத் தேடிய உணவுகளை என்று உரைப்பாரும் உளர்.

**மணக்**:—*இரத்தல்போல மெய்யாக இன்னாதாம், தேடின உணவைத் தாமே தமியராயிருந்து உண்டல் என்றவாறு.*

*தமியராய் என்றது ஒருவருங் காணாமல் என்றது.* (7)

**பரிதி**:—*எ - து தேகி என்பது பொல்லாது; அதிலும் பொல்லாது தான்பெற்ற செல்வத்தைத் தானே பொசித்தல்; அது எப்படி என்றால் தேகி என்பவன், கொடுப்பார்க்குப் புண்ணியத்தைக் கொடுத்தான்; இவன் தனக்குப் பாவமே தேடினான்; ஆகையால் இவனுக்குச் சரியல்ல என்றவாறு.*

காளிங்:—எ - து யாவரானும் பிறர்மாட்டுச் சென்று இரத்தல் சால இன்னாங்குடைத்து; மற்றதனினும் இன்னாங்குடைத்து ஒன்று உண்டு; மற்றது யாதோ எனில், ஒருவர்க்கு ஈந்தால் அதனாலே, நமக்கு ஊண் குறைவுபடும் என்று, தாம் வயிற்றை நிரப்புதற்காகத் தாமே தமியரா யிருந்து உண்டல் என்றவாறு.

## உரைவிளக்கப்பகுதி:

நுண்:—நிரப்பிய என்பது செய்யிய என்னும் வினையெச்சம். ''பெருங்கடல் ஆடிய'' என்றார் நாலடியாரில். இச்செய்யுளாசிரியரும் ''கோட்டுப்பூச் சூடினும்.......காட்டிய சூடினீர் என்று'' (1313) ''தினிய இருந்தது'' (1296) எனக்காமத்துப்பாலுட் கூறினார்.

## ஒப்புமைப்பகுதி:

''என்னை இரவூக்கும் இன்னா இடும்பைசெய்தாள்.'' —கலி. 141: 13.

''இரப்பான்போல் இளிவந்தும் சொல்லும் உலகம்.'' மேற்படி.47: 1

''இரவு உள்ள உள்ளம் உருகும்'' —குறள். 1069

''இரவினை உள்ளுங்கால் உள்ளம் உருகுமால்'' —நாலடி. 305.

''உள்கூர் பசியால் உழைநசைஇச் சென்றார்கட்கு
உள்ளூர் இருந்தும் ஒன்றாற்றாதான்—உள்ளூர்
இருந்துயிர் கொன்னே கழியாது தான்போய்
விருந்தினன் ஆதலே நன்று'' மேற்படி 286.

''தானோர் இன்புறல் தனிமையிற் றுவ்வாது.'' —முதுமொழி. 40.

''அல்லல் வாழ்க்கை பலிகொண்டுறுமாதாவு என்னைகொலாம்
சம்பந்—சிரபுரம்—பாடல் 2.

## 230. சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
## ஈதல் இயையாக் கடை.

## உரைப்பகுதி:

பரிமே:—சாதலின் இன்னாதது இல்லை-ஒருவற்குச் சாதல்போல இன்னாதது ஒன்று இல்லை; அதூஉம் ஈதல் இயையாக்கடை இனிது-அத்தன்மைத்தாகிய சாதலும் வறியார்க்கு ஒன்று ஈதல் முடியாதவழி இனிது.

பிறர்க்குப் பயன்படாத உடற்பொறை நீங்குதலான், இனிது என்றார். இவை மூன்று பாட்டானும் ஈயாமையின் குற்றம் கூறப் பட்டது.

**மணக்:**—சாதலின் மிக்க துன்பம் இல்லை; அதுவும் இனிதாம் இரந்து வந்தார்க்குக் கொடுத்தல் முடியா இடத்து என்றவாறு.

இஃது ஈயாது வாழ்தலில் சாதல் நன்று என்றது. (5)

**பருதி:**—எ - து மரணம் என்று சொல்லுகிறது பாரமிகுதி; அதிலும் நன்று கொடாமல் வீணுள் கழித்தல் என்றவாறு. (7)

**காளிங்:**—எ - து இவ்வுலகத்து ஒருவர் இனிது வாழாது இறந்து படுதல் இன்னுங்குடையது இல்லை யன்றே; மற்று அதுவும் இனிது. பிறர்க்கு ஒன்று கொடுத்தால் கூடாத இடத்து என்றவாறு. (3)

## உரைவிளக்கப்பகுதி:

**இராமா:**—அது என்னும் முற்றுகரத்தின்மேல் இழிவுசிறப்பு உம்மையின் உயிரேறி, அதும் என நின்று, பின் செய்யுள் இசைநிறைக்க வேண்டிக் குறில் நெடிலாய் அளபெடுத்து அதூஉம் என நின்றது.

## மேற்கோள்பகுதி:

**மயிலை:**—ஏழாம் வேற்றுமையில் கடை என்ற உருபிற்கு மேற்கோள் (நன். 301.)

**சங்கர:**—கடை என்பது எதிர்மறைப் பெயரெச்சம் கொண்ட இடப் பெயர் என்றால் என்னை எனின், அதனகத்து இடப்பொருளின்றி ஈதல் இயையாதாயின் என்னும் பொருள் தந்து நிற்றலின் வினையெச்ச விகுதியேயாமென்க. (நன். 343.)

**பெருந்தே:**—குறள் வெண்பாவிற்கு உதாரணம். (வீர. 114.)

## ஒப்புமைப்பகுதி:

"சாதலன்ன பிரிவு" —அகம். 339: 11.

"இரப்போர்க்கு ஈயா இன்மை யானுறவே" —புறம். 72; 18.

"இரப்போன் இன்மை கண்டும்
கரப்போன்சிறுமை யானுறுகவ்வே" —தகடூர்யாத்திரை.

---

கலி 43: 26-26. வி: சூ 53 (கருங்கடல்)
மேற்படி 61: 11 - 12. கம்ப: கார்காலம் 103.

# 24. புகழ்

**பரிமே:**—அஃதாவது இல்வாழ்க்கை முதல், ஈகை யீறுகச் சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப்பயனுகி இவ்வுலகின் கண் நிகழ்ந்து இறவாது நிற்குங் கீர்த்தி. இது, பெரும்பான்மையும் ஈதல்பற்றி வருதலின், அதன்பின் வைக்கப்பட்டது.

**மணக் :**—*புகழாவது புகழ்படவாழ்தல்.*

**பருதி :**—*புகழாவது, பிறந்தால் கீர்த்தியுடனே வாழவேணும் என்றவாறு.*

**231. ஈதல் இசைபட வாழ்தல் அது அல்ல-**
**தூதியம் இல்லை உயிர்க்கு. (க)**

**உரைப்பகுதி:**

**பரிமே :**—ஈதல் - வறியார்க்கு ஈக; இசைபட வாழ்தல் - அதனல் புகழுண்டாக வாழ்க; அது அல்லது உயிர்க்கு ஊதியம் இல்லை - அப் புகழ்லலது மக்களுயிர்க்குப் பயன் பிறிதொன்று இல்லையாகலான்.

இசைபடவாழ்தற்குக் கல்வி ஆண்மை முதலிய பிறகாரணங்களும் உளவேனும்; *உணவின் பிண்டம் உண்டி முதற்று ஆகலின், ஈதல் சிறந்தது என்பதற்கு ஞாபகமாக ஈதல் என்றார். உயிர்க்கு என்பது, பொதுப்படக் கூறினரேனும் விலங்குயிர்கட்கு ஏலாமையின், மக்கள் உயிர்மேல் நின்றது.

**மணக்;**—*புகழ்பட வாழ்தலாவது கொடுத்தல்; அக் கொடையான் அல்லது உயிர்க்கு இலாபம் வேறொன்று இல்லை என்றவாறு.*

*இது புகழுண்டாமாறு கூறிற்று.* (2)

**பருதி:**—*எ - து ஆத்துமாவுக்குப் பயன் தேகி என்பவர்க்குக் கொடுப்பதும், புகழுடன் வாழ்வதும் அல்லது வேறொன்றும் இல்லை என்றவாறு.*

---

* புறம். 18; 20.

காளிங்:—எ - து கீழ்ச்சொன்ன ஈதலின் பின்னரே புகழதிகாரம் என்னை யெனின், அது பயக்கப் பெருகி நிகழ்வது புகழாகலான் இவை இரண்டுமல்லது மற்றிவைபோல்வன லாபம் ஒன்றும் இல்லை உலகத்தில் அறமியற்றும் மக்கட்கு என்றவாறு. (9)

## உரைவிளக்கப்பகுதி :

**நுண்:**—ஈதலால் புகழுண்டாக வாழ்தல் என்றார் "இரப்பார்க்கு ஒன்று ஈவார்மேல் நிற்கும் புகழ்" (232) என்பதுவும் இக்கருத்து. படுதல் - உண்டாதல். இனி, இவ்வுரையாசிரியர் பரிபாட்டினுள் [1]"இலம்படுபுலவர் ஏற்றகை ஞெமரப், பொலன்சொரி வழுதி" என்பதற்குத் தொல்காப்பியத்துள், [2]"இலமென் கிளவிக்கு" என்னுஞ் சூத்திரத்திற்கு இளம்பூரணர் உரைத்தாங்கு உரைத்தார். அத்தன்மை எம்மனோர்க்கு அறிதல் அரிது என்க. நச்சினார்க்கினியர் அதனை வேறுரைத்தார் என்க.[3]

**இராமா:**—ஈதல் என்பது [4]'சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் எனவும்- 'ஈயாச் சிறுவிலைக் காலத்தாயினும்' எனவும் பெரும்பாலும் உண்ணும் பண்டங்கள், உணவு முதலியவற்றையே குறித்து வழங்கி வருவது காண்க.

## ஒப்புமைப்பகுதி :

"விழுநிதி ஈதலுள்ளமொடு இசை வேட்குவையே."
—மதுரைக். 204 - 205.

"எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயலென்று—வையகத்து
ஈதல் இசைபட வாழ்தல் அது அல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு."
—யா வி. சூ. 60. மேற்.

**232. உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்
றீவார்மேல் நிற்கும் புகழ். (உ)**

## உரைப்பகுதி :

**பரிமே:**—உரைப்பார் உரைப்பவை எல்லாம் - உலகத்து ஒன்றுரைப்பார் உரைப்பன எல்லாம், இரப்பார்க்கு ஒன்று ஈவார் மேல் நிற்

---

[1]பா. 10, வரி 126 - 127.

[2]தொல். எழுத்து. 316.

[3]"இல்லத்தால் பற்றப்பட்ட புலவர்" என்றார் இளம்பூரணர். "இல்லாமை உண்டாகின்ற புலவர்" என்றார் நச்சினார்க்கினியர். "இன்மையால் பற்றப்பட்ட புலவர்" என்பது பரிபாடல் உரை.

[4]குறள். 412.

கும் புகழ்-வறுமையான் இரப்பார்க்கு அவர் வேண்டியது ஒன்றை ஈவார் கண் நிற்கும் புகழாம்.

*புகழ்தான் உரையும் பாட்டும் என இருவகைப்படும். அவற்றுள் உரைப்பாருரைப்பவை என எல்லார்க்குமுரிய வழக்கினையே எடுத்தா ராயினும், இனம்பற்றிப் புலவர்க்கேயுரிய செய்யுளும் கொள்ளப்படும். படவே, பாடுவார் பாடுவன எல்லாம் புகழாம் என்பதூஉம் பெற்றும். ஈதற் காரணஞ் சிறந்தமை இதனுள்ளுங்காண்க. இதனைப் பிறர் மேலும் நிற்கும் என்பார் எல்லாம் சொல்லுக: புகழ் ஈவார்மேல் நிற்கும் என்று உரைப்பாரும் உளர். அது புகழது சிறப்பு நோக்காமை அறிக.

**மணக்:**—சொல்லுவார் சொல்லுவன எல்லாம், இரந்து வந்தார்க்கு அவர் வேண்டியது ஒன்றைக் கொடுப்பார்மேல் நில்லாநின்ற புகழாம் என்றவாறு.

**பருதி:**—எ - து சொல்லுவார் சொல்லுவதெல்லாம் தேகி என்பார்க் குக் கொடுப்பார்மேலது புகழ் என்றவாறு. (5)

**காளிங்:**—எ - து உரைப்பார் உரைப்பவையான சுருதியும் மிருதி புராணமும் கலைகளும் பிறவும் மற்றும் உலகத்தார் நாவில் பிறக்கும் நல்ல சொற்களும் இவை எல்லாம் வறியோர்க்கு ஒன்று ஈவார்மேல் நிற்கும் புகழ் எனச் சொல்லும் என்றவாறு. (7)

## மேற்கோள்பகுதி :

**மயிலை:**— நான்காம் வேற்றுமை உருபு கொடைப்பொருளில் வந்த தற்கு மேற்கோள். (நன். 297) உரை என்னும் சொல் தொழிற் பண்பா யினமைக்கு உதாரணம். (நன். 457)

**சங்கர:**—'இரப்பார்க்கு ஒன்றீவார்' இது நான்காம் வேற்றுமை கொடைப்பொருளுக்கு மேற்கோள். (நன். 297) உரைப்பார் உரைப்பவை எல்லாம் என்பது சொல் என்னும் ஒருகுணந்தழுவிய உரிச்சொல். நன். 458.)

**யா. வி. உரை:**—ஏழெழுத்து ஈற்றடி வெண்பாவிற்கு மேற்கோள் (சூ. 95.)

*"உரையும் பாட்டும் உடையோர் சிலரே."—புறம், 27 : 5.

**ஒப்புமைப்பகுதி :**

''ஈவாரைக் கொண்டாடி ஏற்பாரைப் பார்த்துவக்கும்
சேய்மாடக் கூடல்.'' —பரிபா, திரட்டு, 11.

''வெய்ய குரற்றோன்றி வெஞ்சினவே றுட்கொளினும்
பெய்யும் மழைமுகிலைப் பேணுவரால்—வையத்து
இருள்பொழியும் குற்றம் பலஎனினும் யார்க்கும்
பொருள் பொழிவார் மேற்றே புகழ்.'' தண்டி. சூ. 47. மேற்கோள்.

''இரப்போர்க் கீதலின் எய்தும் சிறப்பில்லை.'' முதுமொழிக். 60.

**233. ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்**
**பொன்றாது நிற்பதொன் றில். (ந)**

**உரைப்பகுதி :**

**பரிமே :**—ஒன்றா உயர்ந்த புகழல்லால் - தனக்கு இணையின்றாக ஓங்கிய புகழல்லது, உலகத்துப் பொன்றாது நிற்பது ஒன்று இல்-உலகத்து இறவாது நிற்பது பிறிதொன்று இல்லை.

இணையின்றாக ஓங்குதலாவது கொடுத்தற்கரிய உயிர் உறுப்புப் பொருள்களைக் கொடுத்தமைபற்றி வருதலால் தன்னோடொப்பது இன்றித் தானே உயர்தல். அத்தன்மைத்தாகிய புகழே செய்யப்படுவது என்பதாம். இனி ஒன்றா என்பதற்கு ஒருவார்த்தையாகச் சொல்லின் எனவும், ஒரு தலையாகப் பொன்றாது நிற்பது எனவும் உரைப்பாரும் உளர். இவை மூன்றுபாட்டானும் புகழது சிறப்புக் கூறப்பட்டது.

*மணக்:—உயர்ந்தபுகழல்லது இணை யின்றாக உலகத்துக் கெடாது நிற்பது பிறிதில்லை என்றவாறு.*

*இது புகழ், மற்றுள்ளபொருள்போல் அன்றி அழியாது நிற்கும் என்றது.*

*பருதி:—எ-து ஒன்றா உலகத்தில் மிகுத்த புகழல்லாது நிலவாது; ஆதலால் மிகுத்த புகழைத் தேடுவான் என்றவாறு. (3)*

*காளிங்:—எ-து நிலையாதாகிய இவ்வுலகத்தின்கண் கெடாது நிலைநிற்பது யாதோ எனின் ஓங்கியபுகழ் ஒன்றுமேயல்லது வேறொன்றும் இல்லை. என்றவாறு. (6)*

**மேற்கோள்பகுதி :**

அடியார்:—'இம்மைக்கு இன்பமும் மறுமைக்கு இன்பமும்': இனி ஒருவர்க்கு இம்மைமறுமைகட்கு இன்பத்தைத்தந்து பூமி உள்ளளவும் நிற்பது புகழ் எனலுமாம். 'ஒன்று உலகத்து உயர்ந்த புகழல்லால்...இல். எனவும் கூறினாராகலின். (சிலப். காடுகாண். 112)

**ஒப்புமைப்பகுதி :**

[1]"நில்லா வுலகத்து நிலைமை தூக்கி." —பொருந. 176.

"தொன்றோங் காளர் துணியப்பட்ட
பொன்று இயற்கைப் புகழது பெருமையும்" —பெருங். 1;8;9:10

"வீங்கல் வேண்டுவோன் பல்புகழ் தண்டான்" —முதுமொழி. 29

வில்லி: நச்சு. 57.
கந்த: சூரபன்-வதை. 448.

**234. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.[2]** (ச)

**உரைப்பகுதி :**

**பரிமே :**—நிலவரை நீள் புகழ் ஆற்றின் - ஒருவன் நில எல்லைக் கண்ணே பொன்றாது நிற்கும் புகழைச் செய்யுமாயின், புத்தேள் உலகு புலவரைப் போற்றாது - புத்தேளுலகம் அவனையல்லது தன்னை எய்தி நின்ற ஞானிகளைப் பேணாது.

புகழுடம்பான் இவ்வுலகும் புத்தேளுடம்பான் அவ்வுலகும் ஒருங்கேஎய்தாமையின், புலவரைப் போற்றாதுஎன்றார். அவன் இரண்டு உலகும் ஒருங்கெய்துதல் * "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்;

---

[1] "நிலைபெறும் தகைமையுடைத்தாதலின் புகழை நிலைமை என்றார்" என்பது நச்சினார்க்கினியர் உரை.

[2] பூமி எல்லையிலே தன்னுடைய கீர்த்தியை அதிகம் என்று சொல்லும் யதியைத்தேவர்கள் துதிக்கமாட்டார்கள்; இகழ்ச்சி பண்ணுவார்கள். தன்னைத்தான் மெச்சுவது கெர்வம்; அந்த யதி நல்ல கதியும் இல்லாது கெடுவான் என்பதாம்.

கவிராஜபண்டிதர்,

* புறம். 27: 7-8.

வலவனேவா வானவூர்தி, எய்துப என்பதஞ் செய்வினை முடித்து"
எனப் பிறராலுஞ் சொல்லப்பட்டது.

**மணக்:—** ஒருவன் நிலத்தெல்லையின் கண்ணே நெடிய புகழைச் செய்வனாயின், தேவருலகம் புலவரைப் போற்றாது இவனைப் போற்றும் என்றவாறு.

புலவரென்றார் தேவரை; அவர் புலனுடையாராதலான். இது புகழ் செய்தாரைத் தேவருலகம் போற்றும் என்றது. (5)

**பருதி:—** எ – து பூமியிலே பிறந்தார் புகழுடனே வாழ்வாராயின், தேவர்களைத் தெய்வலோகத்தார் போற்றார், பூமியிலுள்ளாரைப் போற்றுவர் என்றவாறு. (4)

**காளிங்:—** எ - து வையத்து வாழும் இல்வாழ்க்கைப் பண்பினர் யாவரும் கீழ்சொல்லிப் புகழ்ந்த இல்லறத்தினுகிய நெடும்புகழை இடைவிடாது நடத்துவராயின் இவரைப் போற்றுவதல்லது துறவறத்தின் கண் நின்ற புலவராகிய அறிவுடையோரைத் தேவருலகு போற்றாது என்றவாறு. (5)

## உரைவிளக்கப்பகுதி:

**நுண்:—** "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவனேவா வானவூர்தி, எய்துப என்பதஞ் செய்வினை முடித்து" எனக் காட்டுதலால் புலவர்பாட்டுக்கொள்ளுதல் அறமாம் என்க.

**இராமா:—** இனிப் புலவரைப் போற்றாது புத்தேளுலகு என்றதற்குத் தேவருலகானது தன்னில் தலைமை பெற்ற கடவுளரைப் போற்றாது என்பதே தெளிவு. என்ன எனில் ஞானிகள் வீட்டுலகத்துக்கு உரியர் ஆதலால் எனக் காண்க.

## மேற்கோள் பகுதி :

**யா. வி. உரை:—** ஆறெழுத்து ஈற்றடி வெண்பாவிற்கு மேற்கோள், (சூ. 95.)

## ஒப்புமைப்பகுதி:

"தொலையா நல்லிசை உலகமொடு நிற்ப" —மலைபடு. 70.
"செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட" — ஷை 338.
"மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும்" —திரிகடு, 16.

235. நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது. (ரு)

உரைப்பகுதி :

பரிமே:—நத்தம் (ஆகும்) கேடும்- புகழுடம்பிற்கு ஆக்கமாகும் கேடும், உளது ஆகும் சாக்காடும் - புகழுடம்புளதாகுஞ் சாக்காடும், வித்தகர்க்கு அல்லால் அரிது - சதுரப்பாடு உடையார்க்கல்லது இல்லை.

நந்து என்னுந் தொழிற்பெயர் விகாரத்தால் நத்து என்ருய், பின் அம் என்னும் பகுதிப்பொருள் விகுதிபெற்று, நத்தம் என்ருயிற்று. போல் என்பது ஈண்டு உரையசை. ஆகும் என்பதனை முன்னுங் கூட்டி, அரிது என்பதனைத் தனித்தனி கூட்டியுரைக்க. ஆக்கமாகுங் கேடாவது புகழுடம்பு செல்வமெய்தப் பூதவுடம்பு நல்கூர்தல். உள தாகுஞ் சாக்காடாவது புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறத்தல் நிலையாதனவற்ருன் நிலையின எய்துவார் வித்தகராகலின், வித்தகர்க் கல்லால் அரிது என்ருர். இவை இரண்டுபாட்டானும் புகழுடையார் எய்தும் மேன்மை கூறப்பட்டது.

மணக்:— *ஆக்கம் போலக் கேடும் உளதாளுற்போலச் சாதலும் வல்லவர்க்கல்லது அரிது என்றவாறு.*

*இது புகழ்படவாழ்தல் மக்களெல்லார்க்கும் அரிது என்றது.* (10)

பரிதி:— *எ - து சங்கு ஆயிரம் சூழ்ந்த வலம்புரிபோலே, கிளையானது தன்னைச்சூழவாழ்வது, கீர்த்திமானுக்குக்கைவரும் என்றவாறு.*(9)

காளிங்:— *எ - து வலம்புரிச்சங்கானது தன்னிலை குலைந்து பிறர் கைப்படினும் தன் பெருமை குன்ருதது போல இல்லறமியற்றும் நல்லறிவாளர் தாம் வாழுமிடத்தும் கெடுமிடத்தும் தம்புகழ் விளங்கக் கெடுவதோர் கேடும் அதுவே அன்றி மற்றிறந்துபடினும் விரிபுகழ் விளைக்கும் அல்லது மற்றுளோர்க்கு என்றும் அரிது என்றவாறு.* (10)

உரைவிளக்கப்பகுதி:

நுண்:... *'போல் - ஒப்பில்போலி; மலைநாட்டுள் மங்கல மென்பதோர் ஊருண்டு போலும்'' என்பதும் அது. ஆகும் என்பதனை முன்னுங்*

கூட்டி அரிது என்பதனைத் தனித்தனி கூட்டுக. தனித்தனி கூட்டா தொழியின் பன்மையொருமை மயக்கமாதலால் என்க. "கடுமொழியுங் கையிகந்த தண்டமும்............தேய்க்குமரம்" '567' "இகலின் மிகலினிது என்பவன் வாழ்க்கை......... கணித்து '856' என்பனவும் இவ்வாறும் நத்தம் போற் கேடு - புகழுடம்பிற்கு ஆக்கமாகுங்கேடு. உளதாகுஞ் சாக்காடு - புகழுடம்பு உளதாகுஞ் சாக்காடு. நந்து என்னும் தொழிற் பெயர் விகாரத்தால் நத்து என்றாயிற்று. அம் பகுதிப் பொருள் விகுதி.

இராமா:— பொருந்தல், திருந்தல் என்னும் தொழிற் பெயர்கள் பொருத்தம், திருத்தம் என நின்றதுபோல நந்தல் என்னும் தொழிற் பெயர் நத்தம் என நின்றது. போல் என்பது இங்கே அசைநிலை இடைச் சொல். ஞானத்தைக் குறித்து வருகின்ற விது என்னும் வடமொழி வித்து, வித்தம், வித்தகம் என விகாரப்பட்டு வருதலால் வித்தகர் அறிஞர்.

**மேற்கோள்பகுதி:**

சுவாமி:— நத்தம் என்ற பகுபதத்தை நத்து என்னும் பகாப்பத மாகவே பொருள் கொள்வர். இதனைத் தமிழ்நூலார் பகுதிப்பொருள் விகுதி என்று பெயரிட்டு வழங்குவர். (இ. கொ. 117.)

நச்:— சங்கு சுட்டாலும் நிறம் கெடாதது போலக் கெட்டாலும் தன் தன்மைகெடாத குடியுமாம்; 'நத்தம்போற் கேடும்' என்ப. 'சீவக. 547.

சிவஞான;— நத்தம்போற்கேடும் உளதாகும் என்பது 'நட்பாடல் தேற்றாதவர்' என்புழிப்போல ஈண்டுப் பொருட்கேற்ப 'ஆக்கும்' என் பதனை 'ஆகும்' எனத் தன்வினையாகவே கொள்க. ('கம்ப, சங்கோத். பக். 15')

**236. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.** (சா)

**உரைப்பகுதி:**

பரிமே:—தோன்றின் புகழொடு தோன்றுக - மக்களாய்ப் பிறக் கின் புகழுக்கு எதுவாகிய குணத்தோடு பிறக்க; அஃது இலார் தோன் றலின் தோன்றாமை நன்று - அக்குணமில்லாதார் மக்களாகப் பிறத் தலின் விலங்காய்ப் பிறத்தல் நன்று.

புகழ் ஈண்டு ஆகுபெயர். அ∴திலார் என்றமையின் மக்களாய் என்பதூஉம், மக்களாய்ப் பிறவாமை என்ற அருத்தாபத்தியான் விலங்காய்ப் பிறத்தல் என்பதூஉம் பெற்றும். இகழ்வார்இன்மையின் நன்று என்றார்.

**மணக் :—** பிறக்கின் புகழுண்டாகப் பிறக்க; அ∴து இலார் பிறக்குமதின் பிறவாமை நன்று என்றவாறு.

இது புகழ்பட வாழவேண்டும் என்றது. (1)

**பரிப் :—** பிறக்கிற் பழியுண்டாம். பிறவாதொழிய அஃதில்லையாம் ஆதலின் நன்றென்று கூறினர்.

**பருதி :—** எ-து பிறந்தால் புகழுடனே வாழவேணும்; அந்த நெறியில்லாதார் பிறப்பதிற் பிறவாமலிருப்பதே நன்று என்றவாறு. (1)

**காளிங் :—** எ-து ஒருவர் தம்புகழ் பரம்புவதாகப் பழியினை நீக்கிப் புகழ் பெறுதலே தோற்றமாவது அ∴திலார் நானிலத்தின்கண் தாம் ஒரு மக்கள் உருவுகொண்டு தோன்றுதலின் இறந்து படுதலே பெரிதும் நன்மையுடைத்து என்றவாறு. (1)

## உரைவிளக்கப்பகுதி :

**நுண் :—** அருத்தாபத்தி.

இராம :— புகழ் காரிய ஆகுபெயர். இனி இந்த அருத்தாபத்திப் பிரமாணங் கொள்ளாது, பிறத்தலின் பிறவாமை நன்று எனச்சொல்லின் முடிவினப்பொருள் முடித்தலே தெளிவு.

## மேற்கோள்பகுதி :

**சங்கர :—** அ∴திலார் என ஆய்த எழுத்து மெய்போல அலகு பெருததற்கு மேற்கோள். (நன். 60.)

## ஒப்புமைப்பகுதி :

''பாடல் பெருனேல் பலர்மெச்ச வாழானேல்
நாடறிய நன்மணங்கள் நாடானேல்—சேடன்
இவன்வாழும் வாழ்க்கை இருங்கடல்சூழ் பாரில்
கவிழ்ந்தென் மலர்ந்தென்னை காண்.'' —தனிக்கவி.

''மண்ணுறு முரசுடை மன்னர் மாலையில்
எண்ணுறப் பிறந்திலன் இறத்தல் நன்றென்றுள்.''
—கம்ப. மந்தரை. சூழ். 58

பிறந்தால் கோடீஸ்வரனகப் பிறக்கவேண்டும் இல்லையானல் பிறவாமலே இருப்பது நல்லது என்ற உலகியல் வழக்கைப் போன்று எழுந்தது இக் குறள்.
—தொகுப்பாசிரியர்.

**237. புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன். (எ)**

**உரைப்பகுதி :**

**பரிமே** :— புகழ்பட வாழாதார் - தமக்குப் புகழுண்டாக வாழ மாட்டாதார், தம் நோவார் - அதுபற்றிப் பிறரிகழ்ந்தவழி இவ்விகழ்ச்சி நம் மாட்டாமையான் வந்தது என்று தம்மை நோவாதே, தம்மை இகழ்வாரை நோவது எவன் - தம்மை இகழ்வாரை நோவது என்கருதி.

புகழ்பட வாழலாயிருக்க அதுமாட்டாத குற்றம்பற்றிப் பிறர் இகழ்தல் ஒருதலையாகலின், இகழ்வாரை என்றார்.

**மணக் :**— *புகழ்பட வாழமாட்டாதார் தங்களை நோவாது தம்மை இகழ்வாரை நோகின்றது யாதினுக்கு ? என்றவாறு.*

*இது புகழ்பட வாழமாட்டாதார் இகழப்படுவர் என்றது.* (6)

**பருதி :**— *எ - து புகழ்பெற வாழவேணும் என்று விரதங்களை நோற்காதவர்கள் தம்மை இகழ்வாரை ஏன்தான் விதனப்படுவார்கள் என்றவாறு.* (6)

**காளிங் :**— *எ - து மற்று இவ்வுலகத்துத் தம்புகழை நிறுத்தி வாழுகை கல்லாதார் தம்மையே நொந்துகொள்ளுமல்லது மற்றொருவர்க்கு ஈயாத பாவியர் என்று இங்ஙனம் தம்மை இகழ்ந்து உரைப்பாரை நோகின்றது எது கருதியோ என்றவாறு.* (20)

**மேற்கோள்பகுதி :**

**நச் :**— *மக்கட் பாடாண்திணையுள் கொடார்ப்பழித்தல் என்னும் துறைக்கு இக்குறள் மேற்கோள். (தொல். பொருள். 90.)*

**காரிரத்தின :**— *பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாறி. 251.)*

**யா. வி. உரை :**— *எட்டெழுத்து ஈற்றடி வெண்பாவிற்கு மேற்கோள். (சூ. 95.)*

தாம் நோலார் என்பது பருதியார் பாடமாக இருத்தல் வேண்டும்.
—தொகுப்பாசிரியர்.

**238. வசைஎன்ப வையத்தார்க் கெல்லாம் இசைஎன்னும்
எச்சம் பெறாஅ விடின். (அ)**

**உரைப்பகுதி :**

**பரிமே :**— இசை என்னும் எச்சம் பெறாவிடின் - புகழென்னும் எச்சம் பெறலாயிருக்க அது பெறாது ஒழிவாராயின், வையத்தார்க்கு

எல்லாம் வசைஎன்ப - வையகத்தோர்க்கெல்லாம் அதுதானே வசை என்று சொல்லுவர் நல்லோர்.

எச்சம் என்றூர், செய்தவர் இறந்துபோகத் தான் இறவாது நிற்றலின். இகழப்படுதற்குப் பிறிதொருகுற்றம் வேண்டா என்பது கருத்து.

மணக் :— உலகத்தார்க்கெல்லாம் புகழாகிய ஒழிபு பெருவிடின் அப்பெருமைதானே வசையாம் என்று சொல்லுவர் என்றவாறு.

மேல் புகழில்லாதாரை இகழ்ப என்றூர்; அவர் குற்றமில்லாராயின் இகழப்படுவரோ என்றூர்க்கு, வேறு குற்றம் வேண்டா; புகழின்மைதானே அமையும் என்றூர். (7)

பருதி :— எ - து கீர்த்தியுடனே வாழ அறியாதார் பெறுவது எது என்னில், வசை என்றவாறு. (7)

காளிங் :— எ - து வையத்து வாழும் மக்களாயினூர்க்கெல்லாம் பெரியவசை என்று சொல்லுப சான்றோர்; மற்று யாது பெருவிடின் எனில், புகழென்று எடுத்தேத்திச் சொல்லப்படுகின்ற பெருஞ்செல்வத்தைப் பெருத இடத்து என்றவாறு. (8)

எச்சம் என்பது செல்வம்

## உரைவிளக்கப்பகுதி :

இராமா :— வேறு உரை : இசை என்னும் எச்சம் பெருவிடின் - ஒருவன் இல்லறம் என்னும் மனையைத்தழுவிப் புகழ் என்னும் புத்திரனைப் பெருவிட்டால், வையத்தார்க்கெல்லாம் வசை என்ப - அது எல்லா உலகத்தார்க்கும் சொல்லக்கிடந்த பழி என்று சொல்லுவர் அறிந்தோர் என்றவாது.

ஒருவன் இயல்பாகிய புத்திரனைப் பெருவிடின் அவனுக்கு நற்கதி இல்லை என்று இந்த ஒரு உலகத்தார்க்குச் சொல்லக்கிடந்த நிந்தை என்பதும், மகப்பேறு ஏட்டினுள்ளும் சிறந்தபுகழாகிய புத்திரனைப்பெற்ருனயின் இயல்பாகிய புத்திரனைப் பெருதபழியும் நீங்கி எல்லா உலகத்தாரும் புகழப்படுதலால் இசை என்னும் எச்சம் பெருவிடின் எல்லா உலகத்தார்க்கும் சொல்லக்கிடந்த நிந்தை என்பதும் நூல்வழக்கு என்று சொல்ல வந்தவர் என்ப என்றூர். இசை என்னும் எச்சம் பெருவிடின் என்றதால் இல்லறமாகிய மனைவியைத் தழுவி என்பதும், இயல்பாகிய புத்திரனைப் பெருவிடின் என்பதும், வசை என்ப வையத்தார்க்கெல்லாம் என்றதனுல் இந்த ஒரு உலகத்தார்க்குச் சொல்லக்கிடந்த நிந்தை என்பதும் பெற்ரும் இதனுள் சொல்லக் கிடந்த என்பது அவாய்நிலையான் வந்தது. இசை

என்னும் எச்சம் பெற்ற உலகத்தார்க்கெல்லாம் அது விரோதமாதலால் வையத்தார்க்கெல்லாம் வசை என்ற இடத்துக்கு உருபு பகைப்பொருள்பட நின்றதெனக் காண்க. வையத்தாரெல்லாராலும் சொல்லக் கிடந்ததிந்தை எனக்கொண்டு உருபுமயக்கம் எனினும் அமையும். இந்தக் குறளை எச்சம் பெறுவிடின் வசை என்ப எனத்தன்மையணிக்கும், இசையென்னும் எச்சம் பெறுவிடின் என உருவக அணிக்கும் பிரித்துக்கூட்டுக. எச்சம் என்பது புதல்வன் புதல்வி என்கின்ற இருபாலுக்கும் ஒத்ததாயினும் வசை என்ப என்னும் குறிப்பினுலே புதல்வன் என்பது பெற்றும். என்னெனின் புதல்வியைப்பெறினும் வசை என்பது நூல்வழக்கும் உலகவழக்குமாதலால் எனக் காண்க. புகழ்படவாழாதாரை எல்லா உலகத்தாரும் இகழ்வர் என்பது கருத்து.

**எச்சம் :—** எச்சம் என்பதற்கு செல்வம் எனப் பொருள் காண்பர் காளிங்கர். ஒழிபு என்பர் மணக்குடவர். மீதமிருப்பது என்பர் பரிமேலழகர். பழியின்றியிருத்தல் மட்டும் வசையின்மைக்கு வழியாகாது. புகழுடனிருத்தலும் வேண்டும் என் விளக்கியவாறு. ஒருவன் உள்ள காலத்திலேயே அவனிருந்து சென்ற இடத்திலும் புகழப்படுதல் என்பர் சிலர். உள்ள காலத்து அவனுடைய செல்வாக்கிற்கும் கொடுமைக்கும் அஞ்சிப் புகழ்வர். அப்புகழ் உண்மைப் புகழாகாது. இறந்த பின்னும் பாராட்டப்பெறுவதே புகழ் என்ற பரிமேலழகர் கருத்து எவ்வளவு சிறந்தது.

—தொகுப்பாசிரியர்

**239. வசைஇலா வண்பயன் குன்றும் இசைஇலா
யாக்கை பொறுத்த நிலம்.** (கூ)

**உரைப்பகுதி :**

**பரிமே :—**இசை இலா யாக்கை பொறுத்த நிலம் - புகழில்லாத உடம்பைச் சுமந்த நிலம், வசை இலாவசை வண்பயன் குன்றும் - பழிப்பில்லாத வளப்பத்தையுடைய விளையுள் குன்றும்.

உயிருண்டாயினும் அதனுல் பயன் கொள்ளாமையின் யாக்கை எனவும், அது நிலத்திற்குப் பொறையாகலின் பொறுத்தல் எனவும் கூறினுர். விளையுள் குன்றுதற்கு ஏது பாவயாக்கையைப் பொறுக்கின்ற வெறுப்பு. குன்றும் என இடத்துநிகழ்பொருளின் தொழில் இடத்தின் மேல் நின்றது. இவை நான்கு பாட்டானும் புகழில்லாதாரது தாழ்வு கூறப்பட்டது.

**மணக் :—** புகழில்லாத உடம்பைப் பொறுத்த நிலம் பழியற்ற நல்விளைவு குறையும் என்றவாறு.

இது புகழில்லாதான் இருந்த இடம் வீளைவு குன்றும் என்றது. (9)

பருதி :— எ - து வசையற்ற பயன் குன்றிவிடும்; கீர்த்தியை வேண்டாதான் இருந்த பதி என்றவாறு. (8)

காளிங் — எ - து வசையில்லாத வளவிய பயனுகிய வள மெல்லாங் குறைபடும்; யாதோ எனில் புகழியற்றுதல் இல்லாத ஆக்கையை உடைய மூர்க்கனைச் சுமந்தநிலம் என்றவாறு. (4)

**உரைவிளக்கப்பகுதி :**

இராமா :— பிரயோசனம் குறைதலும் அது குறையப்படுதல் பூமியும் ஆதலாலே குன்றும் என்பது செயப்பாட்டுவினை செய்வினையாக நின்றது.

**240. வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய**
**வாழ்வாரே வாழா தவர். (௪௰)**

**உரைப்பகுதி:**

**பரிமே :** — வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார் - தம்மாட்டு வசை உண்டாகாமல் வாழ்வாரே உயிர்வாழ்வாராவர்; இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர் - புகழுண்டாகாமல் வாழ்வாரே இறந்தாராவர்.

வசை ஒழிதலாவது இசை என்னும் எச்சம் பெறுதல் ஆயினமையின் இசை ஒழிதலாவது வசைபெறுதலாயிற்று. மேல் இசையிலா யாக்கை என்றதனை விளக்கியவாறு- இதனல் இவ்விரண்டு உடன் கூறப்பட்டன. மறுமைப்பயன் 'வானுறையுந்தெய்வத்துள் வைக்கப் படும்' என மேலே*கூறப்பட்டது. படவே, இல்லறத்திற்கு இவ்வுகில் புகழும், தேவருலகில் போகமும் பயன் என்பது பெற்ரும்.

இனி மனு முதலிய அறநூல்களால் பொதுவாகக் கூறப்பட்ட இல்லறங்களெல்லாம் இவர் தொகுத்துக்கூறிய இவற்றுள்ளே அடங் கும். அஃது அறிந்து அடக்கிக்கொள்க; யாம் உரைப்பின் பெருகும்.

மணக் :— வசையொழிய வாழுமவர்களே உயிர்வாழ்வாராவர்; புகழொழிய வாழ்வாரே உயிர்வாழாதார். என்றவாறு.

இது புகழில்லார் பிணத்தோடு ஒப்பர் என்றது. (8)

*குறள். 50.

பருதி :— எ - து வசை யில்லாமல் வாழ்கின்றது வாழ்வுக்கு லட்சணம்; அதுவன்றியே, வித்தையும், புத்தியுடனும் வாழ்கின்றது, அதிலும் பெரியது என்றவாறு. (10)

காளிங் :— எ - து ஏற்பவர்க்கு ஈயாப் பெரும்பாவியர் இவர் என்றுசொல்லும் வழுவுரை தமக்கிலதாக வாழ்வாரே ஈண்டுஉயிர்வாழ்வார் என்று யாவராலும் சொல்லப்படுவார்; ஆதலால் யாவர்க்கும் உபகரிக்கும் பெரும்புகழாளர் இவர் என்று யாவரும் சொல்லும் புகழ்ந்துரை தமக்கு இலதாமாறுவாழ்வாரே ஈண்டு உயிர்வாழாத நடைப்பிணம்என்றவாறு.(3)

## உரைவிளக்கப்பகுதி :

இராமா :— இசை தோன்ற வசைதோன்ற என்று சொல்ல வந்தவர் அருத்தாபத்தியால் வசையொழிய இசைஒழிய என்றூரல்லது, அவை இரண்டும் முன்பு உளவாய்ப் பின்பு நீங்க என்றூர் அல்லர். புகழில்லாதார் உற்றறிபுலன் ஒன்றுமில்லாத சடப்பொருளோடு ஒப்பர் என்பதாயிற்று. இதனாலே குணமும் குற்றமும் சொல்லப்பட்டன.

## ஒப்புமைப்பகுதி :

''மன்னு உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே'' —புறம். 165: 1 - 2.

''நில்லா உலகத்து நிலைமை தூக்கி
அந்நிலை அணுகல் வேண்டி'' —பெரும்பா : 466 - 7.

''ஒருவனது இரண்டு யாக்கை ஊன்பயில் நரம்பின் யாத்த
உருவமும் புகழும் என்றாங்கு அவற்றினுாழ் காத்துவந்து
மருவிய உருவம் இங்கே மறைந்துபோம் மற்றையாக்கை
திருவமர்ந் துலக மேத்தச் சிறந்துபின் நிற்கும் அன்றே''
—சூளா, சியவதை. 204.

''மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கள் மாயாது
ஏந்திய கைகொடு இரந்தவர் எந்தாய்
வீந்தவர் என்பவர் வீந்தவ ரேனும்
ஈந்தவர் அல்லது இருந்தவர் யாரே.'' —கம்ப. வேள்வி. 30.

இல்லறவியல் முற்றிற்று.

# துறவறவியல்

இனி முறையானே துறவறங்கூறிய தொடங்கினர். துறவறமாவது மேற்கூறிய இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவுடையராய்ப் பிறப்பினை அஞ்சி வீடுபேற்றின்பொருட்டுத்துறந்தார்க்கு உரித்தாய அறம். அது தான் வினைமாசு தீர்ந்து அந்தக்கரணங்கள் தூயவாதற் பொருட்டு அவரால் காக்கப்படும் விரதங்களும், அவற்ருன் அவை தூயவாயவழி உதிப்பதாய ஞானமும் என இருவகைப்படும்.

## விரதம்

அவற்றுள் விரதங்களாவன இன்ன அறஞ்செய்வல் எனவும் இன்னபாவம் ஒழிவல் எனவும் தம் ஆற்றலுக்கு ஏற்ப வரைந்துகொள்வன. அவைதாம் வரம்பிலவாகலின் பெருகுமென்று அஞ்சி, அவைதம்முள்ளே பலவற்றையும் அகப்படுத்துநிற்குஞ் சிறப்புடையன சிலவற்றை ஈண்டுக்கூறுவான் தொடங்கி, முதற்கண் அருளுடைமை கூறுகின்ருர்.

## 25. அருளுடைமை

பரிமே:— அஃதாவது தொடர்புபற்ருது இயல்பாக எல்லா உயிர்கள்மேலும் செல்வதாகிய கருணை. இல்லறத்திற்கு அன்புடைமை போல இது துறவறத்திற்குச் சிறந்தமையின் முற்கூறப்பட்டது.

மணக் :— *அருளுடைமையாவது யாதானும் ஒருயிர் இடர்ப்படின் அதற்குத் தன்னுயிர்க்கு உற்ற துன்பத்தினல் வருந்துமாறுபோல வருந்தும் ஈரமுடைமை.*

பரிப் :— *துறவறமாவது தவமேற்கொண்டொழுகுதல். அது வானப்பிரத்தம் சந்நியாசம் என இரண்டு வகைப்படும். அது கூறப்பட்ட அதிகாரம் பதின்மூன்றினும் வானப்பிரத்தம் அருளுடைமையும், புலான் மறுத்தலும், தவமும் ஒரோவதிகாரத்தானும், அவற்றின் பின் காமம் வெகுளி மயக்கம் மூன்று குற்றத்தினும் காமப்பகுதியாயின தவிர்தல் மூன்றதிகாரத்தானும், வெகுளிப்பகுதியாயின தவிர்தல் மூன்றதிகாரத்தானும், மயக்கந்தவிர்தல் ஓரதிகாரத்தானும் கூறப்பட்டது. அவற்றுள் அருளுடைமையும் புலான் மறுத்தலும் இல்வாழ்வார்க்கும் ஏற்றதாதலால் அதன் பின்னுகத் தவத்திற்கு முன்னுகக் கூறப்பெற்றன.*

பருதி :— *அருளுடைமையாவது வானப்பிரஸ்தம்:*

காளிங்:— இனி மற்று இவ் இல்லறத்தின்பின்னரே துறவறம் அறிவிப்பான் எடுத்துக்கொண்டார்; அஃதாவது மேல்வருகின்ற துறவறத்துக்கெல்லாம் முதற்காரணம், ஒருவன் தன்நெஞ்சத்து அருளுடைமையாகலான், அனைத்துயிர்க்கும் ஒப்பநிகழ்வதாகிய அருளில்வழி மற்றவர் செய்யுந் தவம் வஞ்சனையுடைத்தாய் அஞ்சத்தக்கதாகலானும் துறவறம் பூண்பார்க்கு நிறையருள்வேண்டும் என்பதனாலும் அதனை அறிவிக்கின்றது அருளுடைமை என்னும் அதிகாரம்.

**241. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்**
**பூரியார் கண்ணும் உள.** (க)

**உரைப்பகுதி :**

**பரிமே:**— செல்வத்துள் செல்வம் அருட்செல்வம் - செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்து எடுக்கப்பட்ட செல்வமாவது அருளான் வரும் செல்வம்; பொருட்செல்வம் பூரியார்கண்ணும் உள - அஃது ஒழிந்த பொருளான் வருஞ் செல்வங்கள் இழிந்தார்கண்ணும் உளவாம் ஆகலான்.

அருளான்வரும் செல்வமாவது உயிர்களை ஓம்பி அவ்வறத்தான் மேம்படுதல். உயர்ந்தார்கண்ணேயல்லது இல்லாத அருட் செல்வமே சிறப்புடைய செல்வம்; ஏனை நீசர்கண்ணும் உளவாம் பொருட்செல்வங்கள் சிறப்பில என்பதாம்.

மணக் :— செல்வத்துள் வைத்துச் செல்வமாவது அருளுடைமையாகிய செல்வமாம்; பொருட்செல்வமானது கீழாயினோர்மாட்டும் உளவாதலால் என்றவாறு.

இ-து அருள்சிலை கூறிற்று. (2)

பருதி :— எ-து செல்வமாவது, மெய் வாய் கண் மூக்குச் செவி என்க; இதிற் பெரிய செல்வம் அருட்செல்வம் என்க. பொருட்செல்வம் அறிவிலாதவரிடத்தும் உண்டென்று அறிக என்றவாறு. (7)

காளிங்:— எ-து பொருளாகிய செல்வம் உலகத்து, குலமக்கட்கும் கீழ்மக்கட்கும் மற்றறிவுடையோர்க்கும் அறிவுகேடர்க்கும் ஒப்பதாக வந்து எய்துமாதலால் மற்றிது சிற்றின்பம் பயக்குமதுவேயாதலால் கற்றுஉணர்ந்தோர் இதனைச் செல்வம்என்று கருதார்; இனிஅருட்செல்வமானது அளவிறந்த இன்பம்பயப்பதொன்றாதலான் இதனை என்றும் அழியாத செல்வம் என்று கொள்வர் அறிவுடையோர் என்றவாறு. (9)

**மேற்கோள்ப்குதி :**

இளம்:— 'அருளொடு புணர்ந்த அகற்சி': அருளுடைமையாவது யாதானும் ஒருயிர் இடர்ப்படுமிடத்துத் தான் உயிர் வருந்தினாற்போல வருந்தும் ஈரம் உடைமை என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 75)

*பெருந்தே :— இன்னது அல்லது இதுவென மொழிதலுக்கு மேற்கோள். (வீரசோ. 180)*

*காரிரத்ன:— பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற. 251.)*

**242. நல்லாற்ருன் நாடி அருளாள்க பல்லாற்ருன்**
**தேரினும் அ∴தே துணை. (உ)**

**உரைப்பகுதி** :

**பரிமே :—** நல்லாற்ருன் நாடி அருள் ஆள்க - அளவைகளானும் பொருந்துமாற்ருனும் நன்ருன நெறியிலே நின்று நமக்குத் துணையாம் அறம் யாதென்ருராய்ந்து அருளுடையராக; பல்லாற்ருன் தேரினும் துணை அ∴தே - ஒன்றையொன்று ஒவ்வாத சமயநெறிகள் எல்லாவற்ருனும் ஆராய்ந்தாலும் துணையாவது அவ் அருளே, பிறிதில்லை.

அளவைகளாவன பொறிகளால்காணுங் காட்சியும், குறிகளான் உய்த்துணரும் அனுமானமும், கருத்தாமொழியாகிய ஆகமமும் என மூன்று. ஒப்புப்பற்றியுணரும் உவமையும், இங்ஙனமன்ருயின் இது கூடாதென்றுணரும் அருத்தாபத்தியும், உண்மைக்குமாருய இன்மையும் என இவற்றைக் கூட்டி ஆறு என்பாரும் உளர். இவையும் ஒருவாற்ருன் அவற்றுள்ளே அடங்குதலின், மூன்றென்றலே கருத்து. பொருந்துமாருவது இது கூடும் இது கூடாது எனத் தன்கண்ணே தோன்றுவது இதனை வட நாலார் யுத்தி என்ப. ஆற்ருன் என்பது வேற்றுமைமயக்கம்: ஒன்றை யொன்று ஒவ்வாமையாவது மதவேறுபாட்டான் அளவைகளும் பொருள்களும் தம்முள் மாறுகோடல்; அன்னவாயினும் அருள்துணை என்றற்கண் ஒக்கும் என்பதாம். உயிரை விட்டு நீங்காது இருமையினும் உதவலின் துணை என்ருர் இவை இரண்டுபாட்டானும் அருளினது சிறப்புக் கூறப்பட்டது.

**மணக்:—** *நல்லவழியாலே நாடி அருளை உண்டாக்குக; பலவழியினும் ஓடி ஆராயினும், தமக்கு அவ் அருளே துணையாம் என்றவாறு.*

*நல்லாற்ருன் நாடி அருளாள்க என்றது அருளுடைமை யுண்டாகப் பல அறங்களையுஞ் செய்க என்றவாறு. இ∴து அருளுடைமை வேண்டும் என்றது. (1)*

**பருதி:—** *எ - து நல்லநெறி எதுவாகும் என்று விசாரிக்கில், எல்லார்க்கும் கிருபை பாலித்தலே பெரியது என்றவாறு. (3)*

**காளிங்:—** *எ - து வீட்டின்பத்திற்கு இதுவே நன்னெறியாவது என்னுமரபிஞல் குறிக்கொண்டு முன் சொன்ன அருளினையே மருவுக; என்னை எனில் பல வழியாலும் மறை நூல் சொல்லுகின்ற முறைமை*

வகுத்தாராயினும் மற்றவருள் தானே வீட்டின்பம் சேர்தற்கு மிக்கதுணை யாம் என்றவாறு. (7)

## உரைவிளக்கப்பகுதி:

நுண்:— பொறிகளால் காணும் காட்சியும், குறிகளான் உய்த்துணரும் அநுமானமும் கருத்தாமொழியாகிய ஆகமமும் என மூன்று. ஒப்புப்பற்றி உணரும் உவமையும், இங்ஙனமன்றாயின் இது கூடாது என்று உணரும் அருத்தாபத்தியும், உண்மைக்கு மாறாய இன்மையும் என்னும் மூன்றுமாக ஆறு அளவை என்க. இவற்றை வடநூலார் பிரத்யக்ஷம், அநுமானம், சாப்தம், திருஷ்டாந்தம், அருத்தாபத்தி, அநுபலத்தி என்பர். ''அறத்தாறிது எனவேண்டா'' (37) ''அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்'' (71) ''உயிருடம்பின் நீக்கியார் என்ப'' (330) ''பொருளாட்சி போற்றாதார்க்கில்லை'' (252) ''படைகொண்டார் நெஞ்சம் போல்'' (253) ''தினற்பொருட்டால் கொல்லாது உலகு எனின்'' (256) என்பன முறையே காண்க ஒழிந்தது வந்தவழிக் காண்க. ஆற்றான் என்பது வேற்றுமைமயக்கம்.

## ஒப்புமைப்பகுதி :

''அறனும் அருளுடையார் கண்ணதே ஆகும்'' —சிறுபஞ்ச. 3

''நெகிழ்ந்த அருளினன் ஆகும் அறம்'' —ஷை 35.

**243. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த**
**இன்னா உலகம் புகல்.** (௩)

## உரைப்பகுதி :

பரிமே:— இருள் சேர்ந்த இன்னா உலகம் புகல் - இருள் செறிந்த துன்ப உலகத்துள் சென்று புகுதல், அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை - அருள்செறிந்த நெஞ்சினையுடையார்க்கு இல்லை.

இருள்செறிந்த துன்பவுலகம் என்றது திணிந்த இருளையுடைத்தாய்த் தன்கட்புக்கார்க்குத் துன்பஞ்செய்வதோ. நரகத்தை; அது கீழ் உலகத்துள் ஓரிடமாகலின் உலகம் எனப்பட்டது.

மணக்:— அருளைப் பொருந்தின நெஞ்சினை உடையவர்க்கு இருளைப் பொருந்தின நரகலோகம் புகுதல் இல்லை என்றவாறு.

இது நரகம் புகார் என்றது. (3)

பருதி:— எ - து சர்வரிடத்திலும் கிருபை ஆள்பவர்க்கு நரக லோகம் இல்லை; தெய்வலோகம் சித்திக்கும் என்றவாறு. (1)

காளிங்:— எ - து அனைத்துயிர்மாட்டும் ஒத்த அருளானது பொருந்திய நெஞ்சினையுடையார்க்கு எஞ்ஞான்றும் இல்லை; யாதோ எனில், உண்மை உணராமை காரணமாக வந்துசேர்ந்த இன்னாங்குடைய உலகங்களைச் சென்றடைதல் என்றவாறு. (6)

244. மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற் கில்என்ப
தன்னுயிர் அஞ்சும் வினை. (ச)

**உரைப்பகுதி :**

**பரிமே:**—மன்னுயிர் ஓம்பி அருள் ஆள்வாற்கு - நிலைபேறுடைய உயிர்களைப் பேணி அவற்றின்கண் அருளுடையன் ஆவானுக்கு, தன் உயிர் அஞ்சும் வினை இல் என்ப - தன்னுயிர் அஞ்சுதற்கு ஏதுவாகிய தீவினைகள் உளவாகா என்று சொல்லுவர் அறிந்தோர்.

உயிர்களெல்லாம் நித்தமாகலின், மன்னுயிர் என்றார். அஞ்சுதல் துன்பநோக்கி அஞ்சுதல். அன்ன அறத்தினேன் கொலை முதலிய பாவங்கள் செய்யான் எனவே மறுமைக்கண் நரகம் புகாமைக்கு ஏது கூறியவாறாயிற்று.

*மணக் :— நிலைபெற்ற உயிரை ஓம்பி அருளை ஆள்வானுக்குத் தன்னுயிரஞ்ச வரும் வினை வருவதில்லை என்று சொல்லுவார் என்றவாறு.*

*இது தீமை வராது என்றது.* (4)

பருதி:— எ-து தன்னுயிர்போலே எல்லாரையும் பரிந்து பார்த்துநடப்பார்க்கு, எந்தக்காலத்திலும் வினையில்லை என்றவாறு. (2)

காளிங் :— எ - து இவ்வுலகத்து மன்னப்பட்ட உயிர்களனைத்தையும் பாத்துகாத்தியல்வதோர் அருளினையுடையார்க்கு என்றும் இல்லை என்று சொல்லுவர் சான்றோர்: யாதோ எனின் தனது உயிர், வீட்டின்பத்தின்கண் செல்லுமிடத்துத் தான் அஞ்சுவதோர் காரியம் என்றவாறு. (5)

*மன்ன என்றது நிலைபெறுதலை.*

**ஒப்புமைப்பகுதி:**

"வெல்புகழ் மன்னவன் விளங்கிய ஒழுக்கத்தான்
நல்லாற்றின் உயிர்காத்து நடுக்கறத் தான்செய்த
தொல்வினைப் பயன்துய்ப்பத் துறக்கம்வேட் டெழுந்தாற்போல்.
—கலி. 118; 1-3

**245. அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்**
**மல்லன்மா ஞாலம் கரி. (ரு)**

**உரைப்பகுதி:**

**பரிமே:**—அருள் ஆள்வார்க்கு அல்லல் இல்லை - அருளுடையார்க்கு இம்மையினும் ஒருதுன்பம் உண்டாகாது; வளி வழங்கும் மல்லல்மா ஞாலம் கரி - அதற்குக் காற்று இயங்குகின்ற வளப்பத்தையுடைய பெரிய ஞாலத்து வாழ்வார் சான்று.

சான்றுவார் - தாம் கண்டு தேறிய பொருளைக் காணுதார்க்குத் தேற்றுதற்கு உரியவர். அருளாள்வார்க்கு அல்லலுண்டாக ஒருகாலத்தும் ஓரிடத்தும் ஒருவரும் கண்டறிவார் இன்மையின், இன்மைமுகத்தான் ஞாலத்தார் யாவருஞ் சான்று என்பார், வளி வழங்கு மல்லன்மா ஞாலங்கரி என்றுர். எனவே, இம்மைக்கண் என்பது பெற்றும். ஞாலம் ஆகுபெயர். இவை மூன்றுபாட்டானும் அத்துணையுடையார்க்கு இருமையிலும் துன்பம் இல்லாமை கூறப்பட்டது.

**மணக்:**—*அருளுடையார்க்கு அல்லலில்லை; அதற்குச் சான்று காற்று இயங்குகின்ற வளப்பத்தினையுடைய பெரிய உலகம் என்றவாறு.*

*இஃது அருளுடையார்க்கு அல்லலின்மை உலகத்தார்மாட்டேகாணப் படும் என்றது.* (5)

பருதி :—*எ - து கிலேசம், அருளை விரும்பினுரிடத்து வாராது, அதற்கு வாயு இயங்கும் பூமி சாட்சி என்றவாறு.* (4)

காளிங்:—*எ - து இல்லற முதலாகிய நல்வினை செய்வார்க்கும் அதனின் நீங்கிய தீவினை செய்வார்க்கும் உயர்ந்தும் இழிந்தும் பிறந்திறந்துழலும் பெருந்துயர் உறவேண்டுதலான். மற்றிவ்வல்லலானது, அனைத்துயிர் மாட்டும் அவற்றிற்குத் துயர்செய்யாத அருளுடைமையை எஞ்ஞான்றும் இடைவிடாது ஆளும் அமைவுடையோர்க்கு இல்லை; மற்று இதற்குக் காற்று வழங்கும் கடல்சூழ் உலகமே சான்று என்றவாறு* (1)

**246. பொருள்நீங்கிப் பொச்சாந்தார்* என்பர் அருள்நீங்கி**
**அல்லவை செய்தொழுகு வார். (சு)**

**உரைப்பகுதி :**

**பரிமே:**—அருள் நீங்கி அல்லவை செய்து ஒழுகுவார்-உயிர்கண் மாட்டுச் செய்யப்படும் அருளைத் தவிர்ந்து தவிரப்படுங் கொடுமை

* 'பொய்ச்சாந்தார்' எனவும் பாடம்.

களைச் செய்தொழுகுவாரை, பொருள் நீங்கிப் பொச்சாந்தார் என்பர்-முன்னும் உறுதிப்பொருளைச் செய்யாது தாம் துன்புறுகின்றமையை மறந்தவர் என்று சொல்லுவர் நல்லோர்.

உறுதிப்பொருள் அறம். துன்புறுதல் பிறவித்துன்பம் மூன்றனை யும்* அனுபவித்தல். மறந்திலராயின், அவ்வாறு ஒழுகார் என்பது கருத்து.

§மணக்:—*முற்பிறப்பின்கண் அருளினின்று நீங்கி அல்லாதவற்றைச் செய்தொழுகினவர், இப்பிறப்பின்கண் பொருளினின்று நீங்கி மறவியும் உடையவர் என்று சொல்லுவர் என்றவாறு.*

*இது பொருளில்லையாம் என்றது.* (8)

பருதி:—*எ - து சத்தியத்தைச் சேராமல், பொய்ங்நெறி ஒழுகுவார் அருளை நீங்கிக் கொடுமைத்தொழில் செய்வார் என்றவாறு.* (5)

காளிங்:—*எ - து மெய்ப்பொருளாகிய இதனை நீங்கி மற்றிதனை இகழ்ந்துவிடுவார் என்று சொல்லுவர் சான்றோர்: யாரை எனின், அருள் நீங்கி அ:.தல்லனவற்றையே செய்து பின்னும் மீட்சி விகாரமின்றியே மறித்து அதன்கண்ணே ஒழுகுகின்ற அறிவில்லாதாரை என்றவாறு.*

*பொய்ச்சாப்பு என்பது இகழ்ச்சி.* (8)

அருளிலிருந்து நீங்கிக் கொடுமைகளைச் செய்து ஒழுகுபவர்கள் (வரும் பிறவியில்) உறுதிப்பொருளிலிருந்தும் நீங்கி மறதியையும் உடையவராவர். துணிவுபற்றி 'நீங்கிப் பொச்சாந் தார்' என இறந்தகாலத்தாற் கூறினர். முற்பிறவியில் அருளைவிட்டு அல்லவை செய்தாரே வறுமையும் மறதியும் உடையவராவன்று உரைப்பின் துறவிக்கு வறுமையும், புறச்சூழலில் மறதி யும் வரவேற்கத்தக்கன ஆதலின் அப்பொருள் துறவறவியலுக்குப் பொருந்தாமை அறிக.

—தொகுப்பாசிரியர்

**247. அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்**
**கிவ்வுலகம் இல்லாகி யாங்கு.** (எ)

**உரைப்பகுதி :**

**பரிமே:**—அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை - உயிர்கள் மேல் அருளில்லாதார்க்கு வீட்டுலகத்தின்பம் இல்லை, பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி ஆங்கு - பொருளில்லாதார்க்கு இவ் வுலகத்தின்பம் இல்லையாயினாற்போல.

* 4-ம் குறள் உரையில் காண்க.

அவ்வுலகம் இவ்வுலகம் என்பன ஆகுபெயர். இவ்வுலகத்து இன்பங்கட்குப் பொருள் காரணமானாற்போல, அவ்வுலகத்து இன்பங்கட்கு அருள்காரணம் என்பதாயிற்று.

மணக்;—அருள் இல்லாதார்க்கு மேலுலகம் உறுங் காட்சி இல்லை; பொருள் இல்லாதார்க்கு இவ்வுலகின்கண் இன்பம் உறுங்காட்சி இல்லையானாற்போல என்றவாறு.

இஃது அருளில்லாதார் சுவர்க்கம் புகார் என்றது. (6)

பருதி:— எ - து அருளில்லாதார்க்குத் தெய்வலோகம் இல்லை: அதுபோலப் பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்றவாறு. (10)

காளிங்:—எ - து இவ்வுலகத்தொருவர் துறவின்கண் இயலுமிடத்து அருள் என்னும் பெருந்துணை இலராயின், இப்பிறவித்துயர் நீங்கத் தாம் வீட்டின்பம் பெறுவதொன்றில்லை; என்போல எனில் பொருளீட்டம் இல்லாதார்க்குப் பிறவிக்கண் பெறுவதாகிய இவ்வுலகம் இல்லாதிருக்கின்றது யாதொருபடி மற்று அப்படியே என்றவாறு. (2)

**மேற்கோள்பகுதி:**

மயிலை:— உடம்போடு கூடிய உயிர்க்குணம் 'அருள்' என்பதற்கு மேற்கோள். (நன். 451.)

பெருந்:—தர்க்கத்தில் எடுத்துக்காட்டுப் போலி. (வீரசோ. 180.)

சுவாமி:—இல்லாகி யாங்கு என்பதற்கு இல்லையானாற் போல என்று 'ஆனால்' என்பதை விரித்துப் பொருளெழுதி வாளாபோயினர் என மறுப்பர். (இ. கொ. 86.)

அடியார்:—'பிணிப்பறுத்தோர்' பிணிப்பு-பற்று; ஆவது அன்பாகிய ஒரு தளை. அதனை அறுத்தோர் அருளுடையோர்; அவர் பெற்றியாவது சுவர்க்கம் எனக்கொள்க. 'அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை.......... ஆங்கு' என்றாராகலின். (சிலப். அடைக்கலக். 100.)

**248. பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்**
**அற்றார்மற் றாதல் அரிது.** (அ)

**உரைப்பகுதி:**

பரிமே:—பொருள் அற்றார் ஒருகால் பூப்பர் - ஊழான் வறியராயினர் அது நீங்கிப் பின் ஒருகாலத்துச் செல்வத்தால் பொலிவர்.

அருள் அற்றார் அற்றார் மற்று ஆதல் அரிது - அவ்வாறின்றி அருளி தார் பாவம் அருமையின் அழிந்தாரே; பின் ஒருகாலத்தும் ஆதலில்லை.

மற்று வினைமாற்றின்கண் வந்தது. மேல் பொருளின்மையோடு ஒருவாற்றான் ஒப்புமை கூறினாராகலின், அது மறுத்து, பிறவாற்றான் அதனினும் கொடிது என்பது கூறியவாறு.

*மணக் :—பொருளில்லாதார் ஒருகாலத்தே பொருளுடையார் ஆத லும் கூடும்; அருளில்லாதார் கெட்டார், பின்பு ஆக்கமுண்டாகாது என்ற வாறு.*

*இது பொருளின்மையேயன்றி எல்லாக்கேடும் உண்டாம் என்றது.* (9)

*பருதி :—எ - து பொருளற்றார் ஒருகாலத்திலே செல்வராவர்; அரு ளற்றார் நரகாத்துமாக்கள் ஆவர் என்றவாறு.* (6)

*காளிங்:—எ - து முன் தமக்குள்ள பொருட்செல்வத்தார் பின்னும் ஒருகாலம் பொருட்பொலிவுடையார் ஆகவும் கூடும்; இனி அவ்வாறன்றி வீட்டின்பக்காரணமாகிய மெய்யருளற்றார் மறித்து ஆக்கமுடையார் ஆதல் அரிது என்றவாறு.* (10)

*பூப்பர் என்பது பொலிவுடையார் என்றது.*

**249. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்**
**அருளாதான் செய்யும் அறம்.** (கூ)

**உரைப்பகுதி:**

**பரிமே:—**அருளாதான் செய்யும் அறம் தேரின் - உயிர்கண் மாட்டு அருள்செய்யாதவன் செய்யும் அறத்தை ஆராயின், தெருளா தான் மெய்ப்பொருள் கண்டு அற்று - ஞானம் இல்லாதவன் ஒருகால் மெய்ப்பொருளை உணர்ந்தாற் போலும்.

மெய்ப்பொருள் - மெய்ந்நூலில் சொல்லும்பொருள். நிலைபெற்ற ஞானமில்லாதவன் இடையே மெய்ப்பொருளை உணர்ந்தால் அதனைத் தன் ஞானமின்மையால் தானே அழித்துவிடும். அதுபோல அருளா தான் இடையே அறஞ்செய்தால் அதனைத் தன்னருளாமையால் தானேயழித்து விடும் என்பதாயிற்று; ஆகவே, பிற அறங்கட்கெல் லாம் அருளுடைமை மூலம் என்பது பெற்றும்: இவை நான்கு பாட்டா னும் அத்துணை இல்லாதார்க்கு வரும் குற்றம் கூறப்பட்டது.

*மணக்:—தெளிவில்லாதான் மெய்ப்பொருளைத் தெளிந்தாற்போலும்; ஆராயின், அருளில்லாதான் செய்யும் அறமும் என்றவாறு.*

*இஃது அறஞ்செய்யவும் மாட்டார் என்றது.* (7)

பருதி:—எ - து குழந்தைகையில் மாணிக்கம் என்று அறிக அறிவில்லாதான் செய்யும் தன்மம் என்றவாறு. (9)

காளிங்:—எ - து இவ்வுலகத்து மெய்ஞ்ஞானமென்னும் அறிவில்லாதான் வீட்டின்பமென்னும் மெய்ப்பொருளினை விடக்கண்ட அத்தன்மையுடைத்து; நான்முறைவழி நுண்ணிதாக ஆராய்ந்து தன் நெஞ்சத்து அனைத்துயிர்க்கும் ஒப்ப நிகழ்வதோர் அருளிலாதான் செய்யக் கருதும் துறவறமானது என்றவாறு. (4)

தெருளாதான் என்பது அறிவில்லாதான். தேரின் என்பது ஆராயின்.

**ஒப்புமைப்பகுதி:**

> "மாட்டார்பூம் பிண்டி வளங்கெழு முக்குடைக்கீழ் மாலேகண்டீர்
> மூட்டாத இன்பப் புதாத்திறக்குந் தாளுடைய மூர்த்திபாதம்
> எட்டானும் பத்தானும் இல்லாதார்க்கு இவ்வுலகில் இன்பமேபோல்
> ஒட்டாவே கண்டீர் வினையவனைத் தேருதார்க்கு உணர்ந்தீர் அன்றே!
> —சீவக. 1549.

> "பத்தெட்டு உடைமை பலருள்ளும் பாடெய்தும்" —நாலடி 281.

**250. வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து. (க0)**

**உரைப்பகுதி:**

பரிமே:—வலியார்முன் தன்னை நினைக்க - தன்னின் வலியார் தன்னை நலியவரும் பொழுது அவர்முன் தான் அஞ்சிநிற்கும் நிலையினை நினைக்க, தான் தன்னின் மெலியார் மேல் செல்லுமிடத்து - அருளில்லாதவன் தன்னின் எளியார்மேல் தான் நலியச் செல்லும்பொழுது.

மெலியார் எனச் சிறப்புடைய உயர்திணைமேல் கூறினாராயினும் ஏனை அஃறிணையுங் கொள்ளப்படும். அதனை நினைக்கவே இவ்வுயிர்க்கு அவ்வாறே அச்சமாம் என்றறிந்து அதன்மேல் அருளுடையனும் என்பது கருத்து. இதனால் அருள் பிறத்தற்கு உபாயம் கூறப்பட்டது

மணக்:—தாம் தம்மின் மெலியார்மேல் வெகுண்டெழுமிடத்து, தம்மின் வலியார்முன் தாம் நிற்குநிலையை நினைக்க என்றவாறு. (10)

பரிப் :—அருள் உண்டாக்குமாறு கூறிற்று.

பருதி :—எ - து தான் தனக்கு எளியார் மேல் கோபிக்குங் கோபத்தைத் தனக்குவலியாரிடத்திலே சென்று அறிக என்றவாறு. (8)

காளிங்:—எ - து தான் தன்னின் வலியார்முன் சென்றால் அவரால் உறும் துயர், இழிவு, எளிமை இவையிற்றை நினைத்துக் கொள்க. அது எவ்விடத்து என்னின் தான் தன்னின் மெலியாரை அடர்க்கச் செல்லுமிடத்து என்றவாறு. (3)

# 26. புலான்மறுத்தல்

பரிமே:— அ∴தாவது ஊனுண்டலை ஒழிதல். கொலைப் பாவத்தைப் பின்னும் உளதாக்கலின் அதற்குக் காரணமாதலையும் முன்னும் அதனுன் வருதலின் அதன்காரியமாதலையும் ஒருங்குடைத் தாய ஊனுண்டல் அருளுடையார்க்கு இயைவதன்று ஆகலின் அதனை விலக்குதற்கு, இ∴து அருளுடைமையின்பின் வைக்கப்பட்டது.

மணக்:— *புலான் மறுத்தலாவது புலால் தின்ருல் அருளில்லையாம் என்பதனுல் புலாலை விடுக.*

பரிப்:— *புலான் மறுத்தலாவது புலாலுண்டலைத் தவிர்த்தல் இஃது உண்பார்க்கு அருளின்ரும் என்பதனுல் அதன்பிற் கூறப்பெற்றது.*

பருதி:— *புலால் மறுத்தலாவது சர்வாத்மாக்களிடத்திலும் அருளுண்டாகில் புலால்மறுக்கவேணும் என்றவாறு.*

**251. தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறி தூன்உண்பான்
எங்ஙனம் *ஆளும் அருள். (க)**

**உரைப்பகுதி :**

**பரிமே :**— தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான் - தன்னுடம்பை வீக்குதற்பொருட்டுத் தான் பிறிதோருயிரின் உடம்பைத் தின்பவன், எங்ஙனம் ஆளும் அருள் - எவ்வகையான் நடத்தும் அருளினை.

பயனிலாத ஊன் பெருக்கலைப் பயனெனக்கருதி இக்கொடுமை செய்வானே அறிவிலாத கொடியோன் என்றவாருயிற்று. எங்ஙனம் ஆளும் அருள் என்பது ஆளான் என்பதுபயப்பநின்ற இகழ்ச்சிக்குறிப்பு

மணக்:— *தன்னுடம்பை வளர்த்தற்குத் தான் பிறிதொன்றினது உடம்பை உண்ணுபவன், அருளுடையவனுவது மற்றியாதானே? என்றவாறு.*

*'ஊனுண்ண அருள்கெடுமோ?' என்ருர்க்கு, இது கூறப்பட்டது.* (3)

பருதி:—*எ - து தன்னுடம்பு பெருக்குதற்குத் தான் பிறிதொன்றின் உடலைத்தின்பார்க்கு எப்படி அருள் உண்டாம் என்றவாறு,* (5)

*''ஆகும் அருள்'' என்பது பருதி பாடம்.

காளிங்:— எ - து தன் ஊனினைப் பெருக்கி வளர்ப்பதோர் காரணமாக, தான் பிறிதொன்றினது ஊனை உண்கின்ற பாவியானவன் மற்ற அனைத்துயிர்மாட்டும் அருளினை எவ்வாற்ருல் மருவிப்போதுமோ என்றவாறு. (6)

## மேற்கோள்பகுதி :

நீலகேசி உரை:— அன்பு செய்யப்பட்டார் துன்புகண்டன்றே அன்புடையார் இரங்குவது; அதுபோல அருள் செய்யப்பட்ட பிராணிகளின் சரீரங்கள் சோர்ந்துகிடப்பக் கண்டால் அருளுடையார் அருள் செய்ப அன்றே; இவன் அருளில்லாமையினன்றே பிணம் தின்கின்றது என்ப ஆதலின் அருளிலன். 'தன்னூன்....அருள்' என்பதும் கொள்க. (190.)

## ஒப்புமைப்பகுதி:

"ஊனைந்தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே." —இனியவை. 5.

"ஊனைத்தின்று ஊனைப்பெருக்கல் முன் இன்ஞ." —இன்ஞ.

## 252. பொருளாட்சி போற்ருதார்க் கில்லை அருளாட்சி
## ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு. (உ)

## உரைப்பகுதி :

பரிமே :— பொருளாட்சி போற்ருதார்க்கு இல்லை - பொருளால் பயன்கோடல் அதனைப் பாதுகாவாதார்க்கு இல்லை; ஆங்கு அருளாட்சி ஊன் தின்பவர்க்கு இல்லை - அதுபோல அருளால் பயன்கோடல் ஊன் தின்பவர்க்கு இல்லை.

பொருட்பயன் இழத்தற்குக் காரணம் காவாமைபோல, அருட்பயன் இழத்தற்கு ஊன்தினல் காரணம் என்பதாயிற்று. ஊன்தின்ருராயினும் உயிர்கட்கு ஒரு தீங்கும் நினையாதார்க்கு அருளாடற்கு இழுக்கில்லை என்பாரை மறுத்து, அஃது உண்டென்பது இவை இரண்டுபாட்டானும் கூறப்பட்டது.

மணக்:— பொருளினை யாளுதல் அதனைக் காக்கமாட்டாதார்க்கு இல்லை; அதுபோல், அருளினை யாளுதல் ஊன் தின்பவர்க்கு இல்லை என்றவாறு.

இஃது ஊனுண்ண அருட்கேடு வரும் என்றது. (2)

பருதி:— எ - து பொருளாட்சி செலவழிப்பார்க்கு இல்லை; அது போல அருளாட்சி புலால் உண்பார்க்கு இல்லை என்றவாறு. (4)

காளிங்:— எ - து தம்பொருளினைக் கெடாமல் பேணிவாழும் ஆட்சியினைக் குறிக்கொண்டு பாதுகாவாதார்க்கு இல்லை; மற்றதுபோல அருந்தவமுயல்வார்க்கு ஓர் பெருந்துணையாக முன் சொன்ன அருளினைக் கெடாமல் ஆண்டு பெறுவதோர் ஆட்சிப்பாடு இல்லை பிறிதொன்றின் நோவு அறியாது தின்பவனுக்கு என்றவாறு. (7)

**மேற்கோள்பகுதி:**

**நீலகேசி உரை:—** அருளுடையோம் என்று சொல்லுப, ஊன் தின்ப; 'அருளாட்சி ஆங்கில்லை ஊன் தின்பவர்க்கு' என்றலின் (251.)

**ஒப்புமைப்பகுதி:**

உரைப்ப பேரருள் உண்பன் மீனெடு ஊன்.'' —நீலகேசி. 251

## 253. படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன் உடல்சுவை உண்டார் மனம். (௩)

**உரைப்பகுதி:**

**பரிமே:—** படை கொண்டார் நெஞ்சம்போல் - கொலைக்கருவியைத் தம்கையிற்கொண்டவர் மனம் அதனால் செய்யும் கொலையையே நோக்குவதல்லது அருளை நோக்காதவாறுபோல, ஒன்றன் உடல் சுவை உண்டார் மனம் நன்று ஊக்காது - பிறிதோருயிரின் உடலைச் சுவைபட உண்டவர் மனம் அவ் ஊனையே நோக்குவதல்லது அருளை நோக்காது.

சுவைபடவுண்டல் - காயங்களான் இனிய சுவைத்தாக்கி உண்டல். இதனால் ஊன் தின்றார் மனம் தீங்குநினைத்தல் உவம அளவையால் சாதித்து, மேலது வலியுறுத்தப்பட்டது.

மணக்:— ஆயுதம் கையிற்கொண்டவர் நெஞ்சுபோல், நன்மையை நினையாது; ஒன்றினுடலைச் சுவைபட உண்டார் மனம், என்றவாறு. (4)

பரிப்:—மேல் ஊனுண்டார் அருளாளுதற்கு வேறுநெறியில்லை என்றார்க்கு அஃதுண்டாலும் உயிர்க்கு அருள் செய்வாராயின் அருளுண்டாகாதோ என்றார்க்குங் கூறப்பட்டது.

பருதி:— எ - து அரிவாளும் கையும் பிடித்தவர்மனம் கொலைமேலே நினைப்பதுபோலப் புலாலுண்டார் மனமும் கொலையை நினைக்கும் என்றவாறு. (9)

காளிங்:—எ - து அந்தணராயினும் ஆயுதத்தைக் கைப்பற்றினல் அதனைச் சுற்றுதல், எறிதல், நீட்டுதல், விமிர்தல், வெட்டுதல் செய்வர்; மற்றதுபோல நன்றிக்கண் செல்லாது யாது எனில், ஓர் உயிர்வாழ் சாதி யின் ஊனின் சுவை கருதி உண்டாரது நெஞ்சம் என்றவாறு. (4)

## 254. அருளல்ல தியாதெனின் கொல்லாமை கோறல்
## பொருளல்ல தவ்வூன் தினல். (சு)

**உரைப்பகுதி:**

**பரிமே:**—அருள் யாதெனில் கொல்லாமை - அருள் யாதெனின் கொல்லாமை; அல்லது (யாதெனின்) கோறல்-அருளல்லது யாதெனின் கோறல்; அவ் ஊன் தினல் பொருளல்லது - ஆகலான், அக்கோறலான் வந்த ஊனைத் தின்கை பாவம்.

உபசாரவழக்கால் கொல்லாமை கோறலாகிய காரியங்களை அருள் அல்லது எனக் காரணங்களாக்கியும், ஊன்தின்கையாகிய காரணத் தைப் பாவம் எனக் காரியமாக்கியும் கூறினர். அருளல்லது - கொடுமை. சிறப்புப் பற்றி அறமும் பொருளெனப்படுதலின், பாவம் பொருளல்லது எனப்பட்டது. கோறல் என முன்னின்றமையின், 'அவ் வூன் என்றார். இனி இதனை இவ்வாறன்றி அருளல்லது என்பதனை ஒன்றுக்கி, கொல்லாமை கோறல் என்பதற்குக் கொல்லாமை என்னும் விரதத்தை அழித்தல் என்று உரைப்பாரும் உளர்.

**மணக்:**—அருளல்லது யாதெனின், கொல்லாமையைச் சிதைத்தல்; பொருளல்லது யாதெனின் அவ் ஊனைத் தின்றல் என்றவாறு.

இஃது அதனை உண்டதனல் அருள் கெடுதலேயன்றி, பெறுவதொரு பயனும் இல்லை என்றது. (6)

**பருதி:**—எ - து அருளாவதும், அருளல்லாமையும் யாவை எனில், கொல்லாமையே அருள்; அருள் அல்லாமையே கொலை. உபதேசமும், உபதேசம் இல்லாமையும் யாவை என்னில், உபதேச நெறியே புலால் மறுத்தல்; உபதேச நெறியல்லாமை புலாலுண்டல் என்றவாறு. (3)

காளிங்:—எ - து உலகத்து அருளும் அல்லதும் யாவை எனின் ஒன் றினை ஊன் சுவை கருதிக் கொல்லாமையும் அதனைக் கோறலும் அன்றே; மற்றது போல ஒருவன் தவப்பெருநெறியல்லது உங்குயாது எனில் மற்ற ஊனைத்தின்றல் என்றவாறு. (8)

கொல்லாமை கோறலை 'செய்ந்நன்றி கொன்றான்' என்றாற்போலக் கொள்க. அன்றியும், அருளும், அருளல்லாததும் கொல்லாமையும் கோற

லும் என்று பொருளுரைப்பாரும் உளர். இஃது அருள் கெடுத்தலே யன்றி அதனை உண்டாற் பெறுவதொரு பயனுமில்லை யென்றது. உடம்பு வளர்தல் பயனாயின் அதற்குப் பிறிதும் உணவுண்டாதலால்.

## உரைவிளக்கப்பகுதி :

**நுண்:**—கோறல் என முன்னின்றமையின் 'அவ்வூன்' எனச் சுட்டிக் காட்டினார்; அல்லாக்கால், செய்யுளாதலின் சுட்டு முற்கூறினார் என்பது. அஃது "ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால் காத்தோம்பல் சொல்லின் கட் சோர்வு" (642) என்பதனுட் காண்க. யாதெனின் என்பதனை முன்னுங் கூட்டுக.

## மேற்கோள்பகுதி :

**பேராசிரியர்:**—இயலசை சார்ந்து ஒற்றியற்றாகி குற்றிகரம் வந்ததற்கு மேற்கோள். (தொல். பொருள். 320.)

**குணசா:**—குற்றியலிகரம் ஒற்றியல்பினவாய் நின்று அலகு பெறுமைக்கு மேற்கோள். (யா. கா. 38)

'பொருள்கோள்' என்பது உம்மைத்தொகை. பொருளும் பொருள் கோளும் என; என்னை ? 'அருளல்லது' என்பதில் அருளும் அருளல்லதும் என' உம்மை தொக்காற்போல. (யா. கா. 45.)

**யா. வி. உரை:**—குற்றியலிகரம் அலகு பெறுமல் வந்ததற்கு மேற்கோள். (சூ. 4.)

நச்சர்:— ஷை (தொல். செய்யுள். 8.)

**255. உண்ணாமை உள்ள துயிர்நிலை ஊன்உண்ண**
**அண்ணாத்தல் செய்யா தளறு. (ரு)**

## உரைப்பகுதி :

பரிமே:—உயிர்நிலை ஊன் உண்ணாமை உள்ளது - ஒருசார்உயிர் உடம்பின்கண்ணே நிற்றல் ஊனுண்ணாமை என்கின்ற அறத்தின் கண்ணது; உண்ண அளறு அண்ணாத்தல் செய்யாது - ஆகலான், அந் நிலைகுலைய ஒருவன் அதனை உண்ணுமாயின் அவனை விழுங்கிய நிரயம் பின் உமிழ்தற்கு அங்காவாது.

உண்ணப்படும் விலங்குகள் அதனால்தேய்ந்து சிலவாக, ஏனைய பலவாய் வருதலின், உண்ணாமையுள்ளது உயிர்நிலை என்றார். உண்

ணின் என்பது உண்ண எனத் திரிந்து நின்றது. ஊனுண்டவன் அப் பாவத்தான் நெடுங்காலம் நிரயத்துள் அழுந்தும் என்பதாம். கொலைப் பாவம் கொன்ருர்மேல் நிற்றலின் பின்ஊனுண்பார்க்குப் பாவமில்லை என்பாரை மறுத்து, அஃது உண்டு என்பது இவ்இரண்டுபாட்டனும் கூறப்பட்டது.

**மணக்:**—*உயிர் நிலையைப் பெறுதல் ஊனை உண்ணுமையினுல் உள்ளது; ஊனை உண்ண, உண்டாரை எல்லாவுலகத்தினும் இழிந்த நரகம் விழுங்கிக்கொண்டு அங்காவாது என்றவாறு.*

*அங்காவாமை - புறப்பட விடாமை.* (10)

**பரிப்:**—*உயிர்நிலையென்றது உயிர்க்கு நிலைபேருன முத்தித்தானம். இஃது உண்பார்க்கு உள்ளதாகும் குற்றம் கூறிற்று.*

**பருதி:**—*எ - து புலால் விடுத்தல் உயிர் நிலை பெறுதல்; புலால் உணவு, நரகத்தை விட்டு மேலேறவொட்டாது என்றவாறு.* (6)

**காளிங்:**—* ... ... ... (10)

## மேற்கோள்பகுதி :

**மயிலை:**—*தாப்பிசைப் பொருள்கோளுக்கு மேற்கோள்.* (415)

| | | |
|---|---|---|
| **சங்கர:**— | ஷை | (நன். 416) |
| **குணவீர:**— | ஷை | (நேமி. 68) |
| **குணசா:**— | ஷை | (யா. கா. 45) |
| **யா. வி. உரை:**— | ஷை | (சூ. 95.) |

## ஒப்புமைப்பகுதி :

"ஊன்சுவைத் துடம்பு வீக்கி நரகத்தில் உறைதல் நன்றே
ஊன்றிஞது உடம்பு வாட்டித் தேவராய் உறைதல் நன்றே
ஊன்றிஇவ் விரண்டினுள்ளும் உறுதியே யுரைத்தி டென்ன
ஊன்திஞ தொழிந்து புத்தே ளாவதே உறுதி என்ருன்."

—சிந்தா. 2135.

**256. தினற்பொருட்டால் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.** (சா)

## உரைப்பகுதி :

**பரிமே:**—தினற்பொருட்டு உலகு கொல்லாது எனின்-பேதைமை காரணமாக அல்லது ஊன்தின்கை காரணமாக உலகம் கொல்லாதா

*இவர் உரை பருதியார் உரையை ஒத்துள்ளது.

யின், விலைப்பொருட்டு ஊன்தருவார் யாரும் இல் - பொருள் காரண மாக ஊன்விற்பார் யாவரும் இல்லை.

உலகு என்பது ஈண்டு உயிர்ப்பன்மைமேல் நின்றது. பின் நிகழும் தின்கை முன்னிகழுங் கொலைக்குக் காரணமாகாமையின் தின் பார்க்குக் காரணத்தான்வரும் பாவமில்லை என்ற வாதியைநோக்கி, அருத்தாபத்தியளவையால் காரணமாதல் சாதித்தலின், இதனுன் மேலது வலியுறுத்தப்பட்டது.

**மணக்:**—*தின்னுதற்காக உலகத்தார் கொள்ளாராயின், விலைக்காக ஊன்விற்பார் யாரும் இல்லை என்றவாறு.*

*இது கொன்றுதின்னுது விலைக்குக்கொண்டு தின்பார்க்குக் குற்ற மென்னை என்றார்க்கு, அதனுலும் கொலைப்பாவம் வரும் என்றுகூறிற்று.*(5)

**பருதி:**—*எ - து தின்பது பொருட்டாகப் புலால் விற்பார்கள்: புலால் விட்டாரிடத்தில், புலால் விற்பார் இல்லை; அதெப்படி என்றால், அகரத் திலே* மாங்கிசம் விற்பாரில்லை என்றறிக என்றவாறு.* (10)

**காளிங்:**—*எ - து இவ்வுலகமானது ஒன்றின் சுவை கருதி மற்றதனைத் தினற்பெருட்டால் கொல்லாதாயின் இவ்வுலகத்து யாவரும் பொருள் விலையின் பொருட்டாக ஒன்றின் ஊனினைக் கொண்டுவந்து விற்பாரும் இல்லை என்றவாறு.* (3)

## ஒப்புமைப்பகுதி :

"கொன்றான் கொலையை உடன்பட்டான் கோடாது
கொன்றதனைக் கொண்டான் கொழிக்குங்கால்—கொன்றதனை
அட்டான் இடவுண்டான் ஐவரினும் ஆகுமெனக்
கட்டெறிந்த பாவங் கருது."

—சிறுபஞ்ச. 70

"கொன்றவன் குறைத்தவன் கொணர்ந்து விற்றவன்
ஒன்றிய பொருள்கொடுத் துவந்து கொண்டவன்
நன்றிது வென்றவன் நாவிற் பெய்தவன்
என்றிவர் அறுவரும் நரகம் எய்துவர்."

—கம்ப.

## 257. உண்ணுமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
## புண்ண துணவார்ப் பெறின். (எ)

## உரைப்பகுதி :

**பரிமே :**— பிறிதொன்றன் புண் - புலாலாவது பிறிதோருடம் பின் புண், அது உணர்வார்ப் பெறின் உண்ணுமை வேண்டும் - அது

* அகரம் - அக்கிரகாரம்.

தூய்து அன்மை அறிவாரைப்பெறின், அதனை உண்ணது ஒழியல் வேண்டும்.

அஃது என்னல் வேண்டும் ஆய்தம் விகாரத்தால் தொக்கது. அம் மெய்ம்மை யுணராமையின், அதனை உண்கின்ருர் என்பதாம். பொருந்து மாற்ருனும் புலாலுண்டல் இழிந்தது என்பது இதனுல் கூறப்பட்டது.

மணக்:— புலாலை உண்ணுமை வேண்டும்; அது பிறிதொன்றின் புண்; ஆதலால், அதனை அவ்வாறு காண்பாருண்டாயின் என்றவாறு.

இது புலால்மறுத்தல் வேண்டும் என்பதூஉம், அது தூயதாம் என்பதூஉம் கூறிற்று. (1)

பரிப்:—காணுதார்க்கு அமிழ்தாயே தோற்றும். (1)

பருதி :— எ - து புலாலைத் தின்னுமல் வேண்டும் : அது எது எனில் தன்னுடம்பின் புண்ணைத் தானே தின்னுன் அதுபோல் பிறிதொன்றின் புண் என்றவாறு. (7)

காளிங் :— எ - து இப்படியாதலால் எஞ்ஞான்றும் புலாலினை உண்ணுமையைக் கருதவேண்டும். என்னெனில் மற்று அதனது உண்ணுமைத் தன்மையை ஓர்ந்துணர்வாரைப் பெறின் மற்றவ் ஊன்தானும் பிறிதொன்றினது புண் அல்லது மற்ருென்றும் இல்லை ; (இப்படியாதலால் எஞ்ஞான்றும் புலாலினை உண்ணுமையைக் கருதவேண்டும் என்றவாறு ) (5)

## உரைவிளக்கப்பகுதி :

நுண் :— புண்ணதுஉணர்வார் - ஆய்தம் விகாரம் என்றது, கண்டு எனக் குற்றியலுகரத்திறே உயிரேறுவதல்லது அது என்னுஞ் சுட்டீற்று உகரம் உயிரேருது என்பது நோக்கி; "வாளதுணர்வார்ப் பெறின்" (334) என்பதனுட். காண்க. "விலங்கலைக் கால்விண்டு" என்னும் கோவையாரில் (24) 'துலங்கலைச் சென்றிதென்னே' என்பதன் பதவுரையினும் காண்க.

## மேற்கோள் பகுதி :

தெய்வச் :— உண்டு என்பது பொதுவினை என்பதற்கு உண்ணுமை வேண்டும்புலால்' என்பது மேற்கோள் (தொல், சொல் 45.)

நீலகேசி உரை :— 'தூய்மையிலா முடை சுக்கில சோணித, மாமது போன்ம் எனின் ஆன்முலைப் பாலன்ன தூய்மையதன்று' என்றதன் உரையில் ஆன்முலைப்பாலினை எக்குலத்து எத்தவத்தார் இழிக்கின்ருர் ? ஆதலால், மாம்சம் சுத்தமானது என்று கூறுபவனை மறுக்கும் போது 'உண்ணுமை வேண்டும்.........பெறின்' என மாம்ஸம் நிந்திக்கப்படுகின்றதன்றே; ஆகலின் மாம்சத்தைப் பாலோடு ஒப்பிப்பது லோகவிரோதம் என்பது என்றுகுறிக்கின்ருர். (341)

**ஒப்புமைப்பகுதி :**

"தம்புண்கழுவி மருந்திடுவர் தாம்பிறிதின்
செம்புண் வறுத்த வறைதின்பர்" —அறநெறி. 97.

## 258. செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார் உயிரின் தலைப்பிரிந்த ஊன். (அ)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் - மயக்கமாகிய குற்றத்தின் நீங்கிய அறிவினையுடையார், உயிரின் தலைப்பிரிந்த ஊன் உண்ணார் - ஒருயிரின் நீங்கிவந்த ஊனை உண்ணார்.

தலைப்பிரிவு என்பது ஒரு சொல். பிணம் என ஊனின் மெய்ம்மை தாமேயுணர்தலின், உண்ணார் என்றார்.

**மணக் .—** *குற்றத்தினின்று நீங்கின தெளிவுடையார் உண்ணார் உயிரினின்று நீங்கின உடம்பை என்றவாறு.*

*இது மேற்கூறிய குற்றமெல்லாம் பயத்தலின், அதனைத் தெளிவுடையார் உண்ணார் என்றது.* (7)

**பருதி :—** *எ - து அசுத்தத்தின் நெறியை அறிந்த காட்சியினர் உண்ணார்; உயிர்போன உடலை என்றவாறு.*

*உயிர்போன உடல் சவம் என்பதாம்.* (8)

**காளிங் :—** *எ - து பாவத்தின்கண் நீங்கி நின்ற அறிவினையுடையோர்*...........* (9)

**மேற்கோள்பகுதி**

**பேரா :—** (*தொல்-பொருள் 170.*)

**சிவஞான:—** *'செயிரில் தலைப்பிரிந்த காட்சியார்' என்றாற் போல்வன இடைச்சொற்களாய்த் தாம் சேர்ந்த வினையைச் சிறப்பித்துப் பொருட்கு உபகாரப்பட்டு வரும். இவ்வாறு வருவனவற்றை வடநூலார் உபசர்க்கம் என்பர். (பாயிர. பக். 11.)*

* இப்பகுதி சிதைவுபட்டுள்ளது.

259. அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. (கூ)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் – தீயின்கண் நெய் முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம் வேள்வி வேட்டலினும் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று. ஓர் விலங்கின் உயிரைப் போக்கி அது நின்ற ஊனை உண்ணாமை நன்று.

அவ் வேள்விகளான் வரும் பயனினும் இவ்விரதத்தான் வரும் பயனே பெரிது என்பதாம்.

**மணக் :—** *நெய் முதலான அவியைச் சொரிந்து ஆயிரம்வேள்வி வேட்டவினும், ஒன்றினுயிரை நீக்கி அதன் உடம்பை யுண்ணாமை நன்று என்றவாறு.* (8)

**பரிப்:—** *மேற்றெளிவுடையார் உண்ணார் என்றார். அவர் உண்ணாதது யாதனைக் கருதி யென்றார்க்கு, அது எல்லாப் புண்ணியத்தினும் நன்று என்று கூறப்பெற்றது.*

**பருதி :—** *எ - து நெய் முதலானவற்றை ஓமத்திலே சொரிந்து ஆயிரம் யாகம் செய்வதில், ஒரு உயிரைக் கொன்று புலால் தின்னாமை நன்று என்றவாறு.* (1)

**காளிங் :—** *எ - து வேள்வித்தீக்கு உரித்தாயுள்ள நெய்யும் அன்னமும் முதலாகிய ஓமத்திரவியங்களைக் குறைவறச் சொரிந்து ஆயிரம் வேட்டலினும் மிகநன்று; மற்றொன்றினையே கொன்று அதன் ஊனை உண்ணாமை என்றவாறு.* (1)

**மேற்கோள் பகுதி :**

காரிரத்ன:— *பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள்.* (மாற. 251)

260. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும். (ம)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** கொல்லான் புலாலை மறுத்தானை - ஒருயிரையும் கொல்லாதவனுமாய்ப் புலாலையும் உண்ணாதவனை, எல்லா உயிரும் கைகூப்பித் தொழும் - எல்லா உயிரும் கைகுவித்துத் தொழும்.

இவ்விரண்டறமும் ஒருங்குடையார்க்கல்லது ஒன்றேயுடையார்க்கு அதனால் பயனில்லை. ஆகலின் கொல்லாமையும் உடன்கூறினர்.

இப் பேரருளுடையான் மறுமைக்கண் தேவரின் மிக்கானும் என அப்பயனது பெருமை கூறியவாறு. இவை மூன்றுபாட்டானும் ஊனுண்ணாமையது உயர்ச்சி கூறப்பட்டது.

மணக்:— கொல்லானுமாய்ப் புலாலையுண்டலையும் தவிர்த்தவனை. கைகுவித்து எல்லா உயிரும் தொழும் என்றவாறு.

மேல் எல்லாப் புண்ணியத்திலும் இது நன்று என்றார்; அது யாதினைத் தரும் என்றார்க்கு, கொல்லாதவன் தேவர்க்கும் மேலானவன் என்று கூறினர். (9)

பருதி:— எ - து கொல்லாமையும், புலால் மறுத்தலும் உள்ளானை எல்லா உயிரும் தொழும் என்றவாறு. (2)

காளிங் :— எ - து தனக்குச் சுவைகருதி ஒன்றினைக் கொல்லானுமாய், புலாலினைத் தின்ன மறுப்பதுசெய்வானுமாய் இருந்தானை அனைத்து உயிரும் கைகூப்பித் தொழும் என்றவாறு.. (2)

## மேற்கோள் பகுதி:

அடியார்க் :— 'வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு, யாவதும் உண்டோ எய்தா அரும்பொருள்' 'யாமெய்யா........பிற' எனவும், கொல்லான்.......தொழும்' எனவும் உட்கொண்டவாறு எனக்கொள்க, (சிலப். காடுகாண். 158-9)

குணவீர :— இக்குறளில் 'மறுத்தானை' என்றதாயினும் ஐம்பால் மேலும் ஒட்டிக்கொள்க. (நேமி. சூ· 66.)

குணசா ;— ஒழுகிசைச் செப்பலோசைக்கு மேற்கோள். (யா. கா.

காரிரத்ன :— காதைகரப்பு என்ற சித்திரகவியில் இக்குறள் எழுத்துக்கள் அமைந்திருப்பதைக் காட்டுவர். (மாற. 289.)

## ஒப்புமைப்பகுதி :

''கொலையின தின்மை கூறின் குவலயத் திறமை செய்யும்''

—யசோதா. 243.

# 27. தவம்.

பரிமே :— அஃதாவது மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டிசுருக்கலும், கோடைக்கண் வெயில் நிலை நிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்றால் தம்உயிர்க்கு வரும் துன்பங்க களைப் பொறுத்து, பிற உயிர்களை ஓம்புதல். புலால்மறுத்து உயிர்கண் மேல் அருள் முதிர்ந்துழிச் செய்யப்படுவதாகலின், இது புலால்மறுத் லின் பின் வைக்கப்பட்டது.

*மணக் :— தவமாவது ஊணும் உறக்கமும் குறைத்தலும், வெயி லும் பனியும் தாங்கலும், தேவர்வழிபாடு முதலாயினவும் மேற்கொண்டு முயறல்.*

*பரிப் :— இஃது இவ்வறத்திற்கு முன்வைக்கற்பாலது. அருளுடை யார்க்கும் புலால் உண்ணாதார்க்குமல்லது நடித்துதற்கருமையின்பிற் கூறப் பெற்றது.*

*பருதி :— தவமாவது, தவஞ்செய்யும் நெறியைச் சொல்லும் என்றவாறு.*

**261. உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற் குரு.*** (க)

உரைப்பகுதி:

பரிமே ;— தவத்திற்கு உரு - தவத்தின் வடிவு, உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே - உண்டிசுருக் கல் முதலியவற்றால் தம் உயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்தலும் தாம் பிற உயிர்கட்குத் துன்பஞ்செய்யாமையுமாகிய அவ்வளவிற்று.

மற்றுள்ளன எல்லாம் இவற்றுள்ளே அடங்குதலின், அற்றே எனத் தேற்றேகாரங் கொடுத்தார். தவத்திற்கு உருஅற்று என்பது யானையதுகோடு கூரிது என்பதனை யானைக்குக் கோடு கூரிது என் றாற்போல ஆறுவதன்பொருட்கண் நான்காவது வந்த மயக்கம், இத னால் தவத்தது இலக்கணம் கூறப்பட்டது.

---

*'உருவு' எனவும் பாடம்.

மணக் :— தமக்கு உற்றநோயைப் பொறுத்தலும் பிறவுயிர்க்கு நோய்செய்யாமையும் ஆகிய அத்தன்மையே தவத்திற்கு வடிவாம் என்றவாறு. (4)

பருதி :— எ - து பிறர் நோவுக்கு இரங்கலும் தான் பிறர்க்கு வருத்தஞ் செய்யாமையும் ஆகிய இவையே தவத்திற்கு வடிவு என்றவாறு. (7)

காளிங் :— எ - து தமக்கு வந்துற்றநோயைத் தாம் பொறுத்தலும் தாம் பிற உயிர்க்கு இடுக்கண் செய்யாமையுமாகிய அத்தன்மைத்தே, ஒருவரொருவர் செய்யுந் தவத்திற்கு வடிவாவது என்றவாறு.

உறுகண் என்பது இடுக்கண். நோன்றல் என்பது பொறுத்தல். (9)

## உரைவிளக்கப்பகுதி :

நுண் :— தவத்திற்கு உரு அற்று என்பது, யானையதுகோடு கூரிது என்பதுபோலும். 'இதனின் இது இற்று என்னுங் கிளவியும்' (தொல். சொல். 110) என்பதனால் அறிக.

## மேற்கோள்பகுதி :

நீலகேசி உரை : ஒருவழி நிற்றல் இருத்தல்செய்து ஞான தியானங்கள் பயில்வுழி வெயிலும் மழையும் காற்றும் முதலாயின வந்தால் அவற்றைச் சக்திக்குத் தக்கவாறு பொறுத்தாம். என்னை ? 'உற்றநோய் நோன்றல்..........உரு' என்பது எம் ஒத்தாகலின். தாமே வந்தன பொறுத்தலல்லது, வெயில் முதலாயினவற்று வருந்துதலே தவமென்று சொன்னோமோ? இல்வாழ்க்கைக்கண் நின்றும், இல்வாழ்க்கைக் காரியங்கள் ஒன்று செய்வுழி ஒழிந்த காரியங்கள் துறந்து, க்ருஷி முதலாயின செய்ய அவ்வழி வந்தன வெயில் முதலாயினவும், சக்திக்குத் தக்கவாறு பொறுப்பதற்காகக் காயம் வருந்தினராவரோ ? (353)

## ஒப்புமைப்பகுதி :

"உயிர்நோய் செய்யாமை யுறுநோய் மறத்தல்
செயிர்நோய் பிறர்கண் செய்யாமை—செயிர்நோய்
விழைவு வெகுளி இவைவிடுவா னுயின்
இழிவன் றினிது தவம்." —சிறுபஞ்ச. 31

## 262. தவமும் தவம்உடையார்க் காகும் அவம்அதனை அஃதிலார் மேற்கொள் வது. (உ)

## உரைப்பகுதி :

பரிமே :— தவமும் தவமுடையார்க்கு ஆகும் - பயனேயன்றித் தவந்தானும் உண்டாவது முன்தவமுடையார்க்கே, அதனை அஃது இலார்

மேற்கொள்வது அவம் - .ஆகலான், அத்தவத்தை அம் முற்றவமில்லா தார் முயல்வது பயனின்முயற்சியாம்.

பரிசயத்தால் அறிவும் ஆற்றலும் உடையராய் முடிவுபோக்கலின் தவமுடையார்க்கு ஆகும் என்றும். அஃது இல்லாதார்க்கு அவை இன் மையான் முடிவுபோகாமையின் அவமாம் என்றும் கூறினர்.

மணக் :— *தவஞ்செய்தலும் முன்பு நல்வினை செய்தார்க்கு வரும், அந் நல்வினையில்லாதார் அத்தவத்தை மேற்கொள்வது பயன் இல்லை என்றவாறு.*

*இது தவமிலார்க்குத் தவம் வாராது ; வரினும் தப்பும் என்றது.* (3)

பருதி :— *எ - து இளமையிலே தவஞ்செய்கிறோம் என்றாலும் தவத்துக்கு இடையூறு ஆக்கும்; போனசென்மத்தில் விட்டகுறை உண்டாகில், அத்தவத்தை முயலப்பண்ணி முடிப்பிக்கும் என்றவாறு.* (2)

*காளிங் ;— .... ... (2)

**ஒப்புமைப்பகுதி :**

" முன்முறை செய்தவத்தின் இம்முறை இயைந்தேம். " —பரிபா. 11: 138.

" அகத்தாரே வாழ்வார்என் றண்ணாந்து நோக்கிப்
புகத்தாம் பெருஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி இருப்பரே மேலைத்
தவத்தால் தவம்செய்யா தார். " —நாலடி. 31.

**263. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்.** (௩)

**உரைப்பகுதி :**

பரிமே:— மற்றையவர்கள் - இல்லறத்தையே பற்றி நிற்பார். துறந்தார்க்குத் துப்புரவு வேண்டித் தவம் மறந்தார்கொல் - துறந் தார்க்கு உண்டியும் மருந்தும் உறையுளும் உதவலை விரும்பித் தாம் தவஞ் செய்தலை மறந்தார்போலும்.

துப்புரவு - அனுபவிக்கப்படுவன. வேண்டிய வேண்டியாங்கு எய்தற்பயத்ததாகலின் யாவராலும் செய்யப்படுவதாய தவத்தைத் தாம் செய்யும் தானத்தின்மேல் விருப்பமிகுதியான் மறந்தார்போலும் எனவே, தானத்தில் தவம் மிக்கது என்பது பெற்றும்.

மணக் :— *துறந்தவர்களுக்கு உணவுகொடுத்தலை வேண்டித் தவிர்ந்தாராயினரோ? இல்வாழ்வார் தவம் செய்தலை என்றவாறு.*

*இவருரை பருதியார் உரை போன்றதே.

*இது தானத்தினும் தவம் மிகுதியுடைத்து என்றது.* (2)

பருதி :— *எது துறந்து தவம் பண்ணினவற்கு ஆகாரம் விசாரிக்கவேண்டிப் பிறந்தார்களோ ஸ்திரிபர்த்தாக்கள் என்றவாறு.* (9)

*காளிங் :— ... .... ... (7)

**மேற்கோள்பகுதி:—**

இளம் :— *உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்; ஒழியாது என்றதால் ஒரோ வழி ஒழிந்தும் வரும். ஒன்னார்த்தெறலும் உயர்திணையுள் ஒழிந்து வந்தது.* (தொல். எழுத்து. 157.)

**264. [2]ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்**
**எண்ணின் தவத்தான் வரும்.** (சு)

**உரைப்பகுதி:**

**பரிமே:—** ஒன்னார்த் தெறலும் - தம் அறத்திற்குப் பகையாய் அழிவுசெய்தாரைக் கெடுத்தலும், உவந்தாரை ஆக்கலும் - அதனை யுவந்தாரை உயர்த்தலுமாகிய இவ்விரண்டையும், எண்ணின் தவத் தான் வரும் - தவஞ்செய்வார் நினைப்பராயின், அவர் தவவலியான் அவை அவர்க்கு உளவாம்.

முற்றத்துறந்தார்க்கு ஒன்னரும் உவந்தாரும் உண்மை கூடாமை யின், தவத்திற்கு ஏற்றி உரைக்கப்பட்டது. எண்ணி என்றதனன் அவர்க்கு, அவை எண்ணுமை இயல்பு என்பது பெற்றும். ஒன்னர் பெரியராயினும், உவந்தார் சிறியராயினும், கேடும் ஆக்கமும் நினைந்த துணையானே வந்து நிற்கும் எனத் தவஞ்செய்வார்மேலிட்டுத் தவத்தி னது ஆற்றல் கூறியவாறு.

மணக் :— *இவ்விடத்துப் பகைவரைத் தெறுதலும், நட்டோரை ஆக்குதலுமாகிய வலி ஆராயின், முன்செய்த தவத்தினலே வரும் என்றவாறு.*

*இது பிறரை ஆக்குதலும் கெடுத்தலும் தவத்தினலே வரும் என்றது.* (8)

* இவர் உரை பருதியார் உரை போன்றதே. [2] 'ஒன்னரை' எனவும்பாடம்.

பருதி :—எ - து சத்துருக்களைச் செயிப்பதும், மித்துருக்களை அழிப்பதும் தவத்தால்வரும் என்றவாறு. (4)

*காளிங் :— ... .... ... (4)

## 265. வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும். (ரு)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் - முயன்றால் மறுமைக்கண் தாம் வேண்டிய பயன்கள் வேண்டியவாறே பெறலாம் ஆதலால், செய்தவம் ஈண்டு முயலப்படும் - செய்யப்படுவதாய தவம் இம்மைக்கண் அறிவுடையோரான் முயலப்படும்.

ஈண்டு என்பதனுன் மறுமைக்கண் என்பது பெற்றும். மேற்கதி, விடுபேறுகள் தவத்தானன்றி எய்தப்படா என்பதாம். இவை நான்கு பாட்டானும் தவத்தது சிறப்புக் கூறப்பட்டது.

மணக் :— விரும்பியன விரும்பினபடியே வருதலால், தவம் செய்தலை இவ்விடத்தே முயல வேண்டும் என்றவாறு.

இது போகநுகர்ச்சியும் இதனல்வரும் என்றது. (10)

பருதி :— எ - து தான் வேண்டின காமியத்தைத் தவம் தருகையினுலே மேன்மேலே தவம் பண்ணுவான் என்றவாறு. (10)

காளிங்:— எ - து அணிமாதியாகிய சித்திகளும் சுவர்க்கமும் முத்தியும் என்பனவற்றுள் தாம் விரும்பியவற்றை மற்றவ் விரும்பிய வண்ணமே ஒரு குறைபாடின்றிப் பெறுதலினுன் மற்றவை அவற்றிற்குரிய தாகச் செய்யத்தக்கது தவமானது உலக மக்களுள் சிறந்தாரால் செய்ய அடுக்கும் என்றவாறு.

வேண்டிய என்பது விரும்பிய.

இனி ஒருவன் இவ்வாறு ஒழுகுகின்ற தவநெறி ஒழுக்கம் தனது மனக் குறிப்பினுலன்றியே புறத்துத் தவமுடையோன்போல ஒழுகின் அது தவ் நெறிக்குக் கூடா ஒழுக்கம் ஆதலால் அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம். (10)

• இவர் உரை பருதியார் உரைபோன்றதே.

## மேற்கோள்பகுதி :

**நக்கீரர்:** —இனிக் காமம் நன்றுமாறும் உண்டு என்று கூறி, காரணம் கூறும்பொழுது 'மக்கள் பாட்டினனும், வலியானும், வனப்பானும், பொருளானும் பெறலாவதன்று 'தவஞ்செய்தால் பெறலாம்' என்னை? 'வேண்டிய......படும்' என்பதாகலான் என்று குறிப்பர். (இறை. சூ. 1)

## ஒப்புமைப்பகுதி:

"அருந்தவம் ஆற்றியார் நுகர்ச்சிபோல்" —கலி. 30. 1.

"வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர்." —திருமுரு. 248.

"தவஞ்செய் மாக்கள் தம்முடம்பிடாது
அதன்பயம் எய்திய அளவைமான." —பொருந. 99.

"நோற்ருர்க்குச் சோற்றுள்ளும் வீழும் கறி." —பழமொழி. 150.

"முற்பெரிய நல்வினை முட்டின்றிச் செய்யாதார்
பிற்பெரிய செல்வம் பெறலாமோ." ஷை 312.

"விழுப்பொருள் பரவைஞாலம் நோற்பவர்க் குரியவாகும்.
—சிவக. 2986.

"வேண்டிய விளைத்துக்கொள்ளும் விழுத்தவம் விளைத்துவந்தான்."
—சூளா. சுயம். 113.

"பெருந்தவ முள்வழி விரும்புபு செல்லும்
பொருளும் போகமும் புகழும் போல." —பெருங்கதை. 2: 8: 126.

"வேண்டின வேண்டினர்க் களிக்கும் மெய்த்தவம்."
—கம்ப. ஆரண்ய. அகத். 8.

"பண்ணிய தவத்தால் அன்றி யாதானும் படுபொருள் பிறிதிலை."
—திருவிளை. வேதத்து. 7.

"அத்தவம் பிறவியை அகற்றி மேதகு
முத்தியை நல்கியே முதன்மை யாக்குறும்
இத்துணை யன்றியே இம்மை இன்பமும்
உய்த்திடும் உளந்தனில் உன்னும் தன்மையே." கந்த. காசிய. 16.

"ஆற்றலில் தம்முடல் அலசப் பற்பகல்
நோற்றவர் அல்லரோ நுவலல் வேண்டுமோ!
தேற்றுகி லீர்கொலோ தேவ ராகியே
மேற்றிகழ் பதந்தொறும் மேவுற்ருேர் எலாம்." ஷை

**266. தவம்செய்வார் தங்கருமம் செய்வார்மற் றல்லார்**
**அவம்செய்வார் ஆசையுட் பட்டு.** (சு)

## உரைப்பகுதி:

**பரிமே:—** தங்கருமம் செய்வார் தவம்செய்வார் - தங்கருமம் செய்வாராவார் துறந்து தவத்தைச்செய்வார், மற்று அல்லார் ஆசையுள் பட்டு அவம் செய்வார் - அவரையொழிந்த பொருளின்பங்களைச் செய் வார் அவற்றின்கண் ஆசையாகிய வலையுட்பட்டுத் தமக்குக் கேடு செய் வார்.

அநித்தமாய் மூவகைத் துன்பத்ததாய் உயிரின்வேருய உடற்கு வருத்தம் வரும் என்று ஒழியாது தவத்தினைச் செய்ய, பிறப்புப் பிணி மூப்பு இறப்புக்களான் அநாதியாகத் துன்பமெய்திவருகின்ற உயிர் ஞானம் பிறந்து வீடு பெறும் ஆகலின், தவஞ்செய்வாரைத் தங்கரு மஞ்செய்வார் என்றும், கணத்துள் அழிவதாய சிற்றின்பத்தின் பொருட் டுப் பல பிறவியும் துன்புறத்தக்க பாவஞ்செய்துகோடலின், அல்லா தாரை அவஞ்செய்வார் என்றும் கூறினர். மற்று வினைமாற்றின்கண் வந்தது.

**மணக்:—** *தம்கருமம் செய்வார் தவம் செய்வார்; அஃதல்லாதன செய் வார் எல்லாம் ஆசையிலே அகப்பட்டுப் பயனில்லாதன செய்கின்றார் என்றவாறு.* (1)

*இது தவம்பண்ண வேண்டும் என்றவாறு.*

**பருதி:—** *எ - து [1]நிலையாமை, நோய், மூப்பு, சாக்காடு என்று எண்ணித் தலையாவார் தங்கருமஞ் செய்வர்; தங்கருமமாவன தவம், பூசை, நியதி, தானம், தன்மம் என்பன. மற்றல்லாதார் சென்னவழி தேடி ஆசைவிலங்கிட்டு அவம் செய்வார் என்றவாறு.* (1)

**[2]காளிங் :—** ... ... ... (1)

## மேற்கோள்பகுதி :

**காரிரத்ன:—** *பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள்.* (*மாற*, **251.**)

## ஒப்புமைப்பகுதி :

"தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார்." —திருமுரு. 89.
"என்னுயிர்க் குறுவதும் செய்ய எண்ணினேன்." —கம்ப, மந்திர. 15.

---

1 "நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணித் தலையாயார் தங்கருமஞ் செய்வார்". —நாலடி 52

2 [illegible] பருதியார் உரை போன்றதே.

**267. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. (எ)**

**உரைப்பகுதி :**

**பரிமே :—** சுடச் சுடரும் பொன்போல்-தீயின்கணூடும் பொன்னுக்கு அது சுடச்சுடத் தன்னோடு கலந்த குற்றம்நீங்கி ஒளிமிகுமாறு போல, நோற்கிற்பவர்க்குத் துன்பம் சுடச் சுட ஒளிவிடும்—தவஞ்செய்ய வல்லார்க்கு அதனுன் வருந்துன்பம் வருத்த வருத்தத் தம்மொடு கலந்த பாவம் நீங்கி ஞானமிகும்.

சுடச்சுடரும் பொன்போல் என்றாராயினும், கருத்துநோக்கி இவ்வாறு உரைக்கப்பட்டது. ஒளிபோலப் பொருள்களை விளக்கலின் ஒளி என்றார்.

**மணக்:—**நெருப்பின்கண்ணே இட இடத் தன்னோடு கலந்த மாசு அற்று ஒளிவிடுகின்ற பொன்னைப்போல, துன்பம் நலிய நலியத் தவம் செய்வார்க்குத் தம்மோடு மருவின வினைவிட்டு ஒளிவிடும் என்றவாறு. (6)

இது வினைவிட்டு ஒளி உண்டாம் என்றது.

**பருதி :—** எ - து சுடவைத்த பொன் களங்கமற்றது போலக் கன்மம் விடும் தவஞ்செய்கையினுலே; விக்கினம் வந்தால் அந்த விக்கினத்தைப் பாராமல் தவம் பண்ணுவார்க்கு என்றவாறு. (6)

**காளிங்:—** எ - து தீப்பெற்று நின்று ஒளிவிட்டு விளங்கும் பொன்னைப்போல விளங்காநிற்கும் யாதோவெனில் வீட்டின்பமாகிய ஒரு பெருமைபொருள்; யார்க்கு எனின் முன் தம்மாட்டுவந்து மயங்கிக்கிடக்கின்ற அவங்களானவற்றை உருவழியச் சுடுமாறு பலயாண்டும் பயிலக் குறிக்கொண்டு நோற்றலை வல்லாற்கு என்றவாறு. (6)

**உரைவிளக்கப்பகுதி :**

**நுண் :—** சுடரும் - ஓடும். ஒளி - ஞானம்.

**மேற்கோள்பகுதி :**

**யா. வி. உரை :—** தலையாகுமோனைக்கு மேற்கோள் (37.) மோனை முதற்றொடையான்வந்த இனக்குறள் வெண்பாவிற்கு மேற்கோள். (56.)

வெள்ளியம்பலவாணர்: முத்தி நிச்சயம் பேருரை. பக்.115. இன்னிலை.

**ஒப்புமைப்பகுதி:**

"ஆரழன் முளரியன்ன அருந்தவம்." —சீவக. 2632.

"தவத்தழல் எழுந்து உயிராம் பொற்குதுவைத்
துவக்கஜச் சுடச்சுடத் தோன்று நீரொளி
நிவத்தலால் நின்று ஒளிதுளும்பும் மூர்த்தியான்." —மேரு. 547

"விட்டி நின்றது வெவ்வினை எண்மையின்
கேட்டில் எண்குணம் எய்திஓர் கேடிலா
மாட்சி யாலுல கந்தொழ மாற்றற
ஓட்டி வைத்தசெம் பொன்னெத் தொளிருமே." ஷை 70.

"கொள்கைக் கட்டழல் உள்ளுற மூட்டி
மாசுவினை கழித்த மாதவர் போலத்
தீயகத் திலங்கித் திறல்விடு கதிரொளி
சேடுறக் கிடந்த செம்பொன்." —பெருங். 2: 19; 62 - 65.

## 268. தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய மன்னுயிர் எல்லாம் தொழும். (அ)

**உரைப்பகுதி :**

பரிமே:— தன் உயிர் தான் அறப்பெற்றானை - தன்னுயிரைத் தான் தனக்கு உரித்தாகப் பெற்றவனை, ஏனைய மன்னுயிர் எல்லாம் தொழும் - பெருதனவாகிய மன்னுயிர்களெல்லாம் தொழும்.

தனக்குரித்தாதல் தவமாகிய தன்கருமஞ்செய்தல். அதனினுங்குப் பெறுதற்கரியது இன்மையின், பெற்றானை என்றார். அது பெருதன என்றது ஆசையுட்பட்டு அவஞ்செய்யும் உயிர்களை. சாபமும் அருளுமாகிய இரண்டாற்றலும் உடைமையின், தொழும் என்றார்.

*மணக் :— தன்னுயிரானது தான் என்று கருதும் கருத்து அறப் பெற்றவனை, ஒழிந்தனவாகிய நிலைபெற்ற உயிர்கள் எல்லாம் தொழும் என்றவாறு.* (5)

*உயிர் என்றது சலிப்பற்ற அறிவை; தான் என்றது சிவனுகி நிற்கின்ற நிலைமையை; தானறுதலாவது அகங்காரம் அறுதல்.*

பருதி:— *எ - து தன் ஆத்மா ஈடேறப்பார்ப்பானை* 'இவனாலே *நாமும் ஈடேறுவோம்' என்று சகல ஆத்மாவும் தொழும் என்றவாறு.* (3)

[1] 'தன் உயிரைத் தான் அறப்பெறுதலாவது தன்னோடு கூடிய கருமங்களை வென்று, தன்னுடைய சுத்த சுபாவ குணத்தை அடைந்து பரிசுத்த ஆத்மனாகிற நிலையைப் பெறுதல்; அத்தகைய ஆத்மனே பரமாத்மன் என்றும், கடவுள் என்றும் அருகன் என்றும் முவுலகத்தோராலும் போற்றப்படும். **—கவிராஜபண்டிதர்.**

1 காளிங்:— ... ... ... ...

## 269. கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்டவர்க்கு. (௯)

**உரைப்பகுதி :**

**பரிமே:—** கூற்றம் குதித்தலும் கைகூடும்-கூற்றத்தைக் கடத்தலும் உண்டாவதாம், நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு-தவத்தான் வரும் ஆற்றலைத் தலைப்பட்டார்க்கு.

சிறப்பும்மை அது கூடாமை விளக்கிற்று; மன்னுயிரெல்லாம் தொழுதலேயன்றி இதுவும் கைகூடும் என எச்சவும்மையாக உரைப்பினும் அமையும். ஆற்றல் சாப அருள்கள். இவை நான்குபாட்டானும் தவஞ்செய்வாரது உயர்ச்சி கூறப்பட்டது.

**மணக் :—** கூற்றத்தைத் தப்புதலும் கைகூடும்; தவத்தினாகிய வலியைக் கூடினார்க்கு என்றவாறு.

இது மார்க்கண்டேயன் தப்பினாற்போல என்றது. (7)

**பருதி :—** எ-து தலை எழுத்து முடிந்த நாள்வர அப்போது கூற்றுவனையும் வெல்லலாம் தவத்திற் பெரியோர்க்கு என்றது.

அதற்கு, நந்திகேசுவர தேவனையும் மார்க்கண்டேயனையுங் கண்டு கொள்க என்பது. (5)

2 காளிங்:— ... ... ... ... (5)

**உரைவிளக்கப்பகுதி :**

**நுண்:—** குதித்தல் - கடத்தல். அர்த்தாங்கிகாரத்துள் கடத்தலும் என்றதனை எச்சவும்மையாக்கினர். முற்கவிப்பொருளைக் குறித்தென்க.

## 270. இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். (௰)

**உரைப்பகுதி:**

**பரிமே :—** இலர் பலராகிய காரணம் - உலகத்துச் செல்வர்கள் சிலராக நல்கூர்வார் பலராதற்குக் காரணம் யாது எனின், நோற்பார்

---

1 2 இவர் உரை பருதியார் உரை போன்றதே.

சிலர் நோலாதவர் பலர் - அது தவஞ்செய்வார் சிலராக அது செய்யாதார் பலராதல்.

செல்வம் நல்குரவு என்பன ஈண்டு அறிவினது உண்மை இன்மைகளையும்[1] குறித்து நின்றன; என்னை? "நுண்ணுணர் வின்மை வறுமை அஃதுடைமை பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்" என்றாராகலின். நோற்பார் சிலர் எனக் காரணம் கூறினமையான், காரியம் வருவித்து உரைக்கப்பட்டது. தவஞ்செய்யாதார்க்கு இம்மையின்பமும் இல்லை என இதனால் அவரது தாழ்வு கூறப்பட்டது.

**மணக்:—** *பொருளில்லாதார் உலகத்துப் பலராதற்குக் காரணம், தவம்செய்வார் சிலராதல்; அது செய்யாதார் பலராதல் என்றவாறு.* (9)

**பருதி:—** *எ - து பாக்கியவான்கள் சிறிதாக மிடியாளர் பெருத்ததாகிய காரியம் எது என்னில், தவம் பண்ணினவர்கள் அற்பம்; தவம் செய்யாதார் பலராகையால் என்றவாறு.* (8)

**காளிங்:—** *எ - து இவ்வுலகத்து இவ்வாறு தமது பேரிடர் நீங்கிப் பெரும்பயனுறுதலைப் பலரும் இலராதற்குக் காரணம் யாதோ எனின், உலகத்தில் ஞானம் பெறநோற்பார் சிலர். மற்றுநோலாதார் அளவிறந்தாராவர் என்றவாறு.* (8)

## உரைவிளக்கப்பகுதி :

**நுண் :—** *தவம் துறந்தார்மேற்றாகலின் செல்வம் நல்குரவு ஈண்டு அறிவின் உண்மை இன்மைகளாயின ; "நுண்ணுணர் வின்மை வறுமை அஃதுடைமை, பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்" எனக்காட்டியதும் அதனை நோக்கி என்க.*

## மேற்கோள்பகுதி :

**பெருந்தே:—** *ஏதுவின் முடித்தலுக்கு மேற்கோள். (வீரசோ. 980)*

---

[1] "உண்மை இன்மைகளைக் குறித்து நின்றன" .

மேற்குறித்தபடி உம்மையிருப்பின் பொருளுடைமையும் இன்மையுமேயன்றி அறிவினதுடைமை இன்மைகளையும் குறித்தன எனப்பொருள்படும். அங்ஙனமாயின் இருவகைப்பற்றையும் முற்றத்துறந்து, எல்லாவுயிர்களையும் ஒப்பநோக்குதலாகிய அருளையுடையனாய், உடலோம்பும் ஊனுணவை வெறுத்து, புலன்களையடக்கும் ஞானவாயிலாகிய தவத்தினை மேற்கொண்ட துறந்தான் பொருளுடைமையைக் கருதித் தவத்தினை மேற்கொண்டான் என்பது பேரதருமாகலின் அதிகார இயைபிற்கு ஆகாமையறிக. நுண்பொருண்மாலை உடையாரும் இக்கருத்தையே வலியுறுத்தல் காண்க. பயின்றோர், உம்மையும் விரித்து, 'இம்மை யின்பமும் இல்லை' எனக் குறிப்பெழுதினர் போலும்.

—தொகுப்பாசிரியர்.

[2] நாலடி. 251.

# 28. கூடாவொழுக்கம்

பரிமே :— அஃதாவது தாம் விட்டகாம இன்பத்தை உரனின்மையின் பின்னும் விரும்புமாறுதோன்ற அவ்வாறே கொண்டு நின்று தவத்தோடு பொருந்தாததாய தீயஒழுக்கம். அது விலக்குதற்கு இது தவத்தின்பின் வைக்கப்பட்டது.

மணக் :— *கூடா ஒழுக்கமாவது மேற்கூறிய * தவத்திற்குப் பொருந்தாத ஒழுக்கம்.*

பருதி:— *கூடா ஒழுக்கமாவது தவம் செய்கையிலே அவநெறி செய்கையை விடுவான் என்றவாறு.*

**271. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்.** **(க)**

**உரைப்பகுதி :**

**பரிமே :**— வஞ்ச மனத்தான் படிறு ஒழுக்கம் - வஞ்சம் பொருந்திய மனத்தையுடையவனது மறைந்த ஒழுக்கத்தை, பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் - உடம்பாய் அவனோடு கலந்து நிற்கின்ற பூதங்களைந்தும் கண்டு தம்முள்ளே நகும்.

காமம் தன்கண்ணேதோன்றி நலியாநிற்கவும் அதனது இன்மை கூறிப் புறத்தாரை வஞ்சித்தலின் வஞ்சம் என்றும், அந்நலிவு பொறுக்க மாட்டாதொழுகும் களவொழுக்கத்தைப் படிற்றொழுக்கம் என்றும், உலகத்துக்களவுடையார் பிறரறியாமல் செய்வனவற்றிற்கு ஐம்பெரும் பூதங்கள் சான்றாகலின், அவ்வொழுக்கத்தையும் அவன் மறைக்கின்றவாற்றையும் அறிந்து அவனறியாமல் தம்முள்ளே நகுதலின், அகத்தே நகும் என்றும் கூறினார் செய்த குற்றம் மறையாது ஆகலின், அவ் ஒழுக்கம் ஆகாது என்பது கருத்து.

மணக்:— *கள்ள மனத்தை உடையானது குற்றத்தினை உடைய ஒழுக்கத்தைப் பிறர் அறியாராயினும், தன் உடம்பின் உண்டான பூதங்கள் ஐந்தும் அறிந்து தம்முள்ளே நகாநிற்கும் என்றவாறு.*

*பூதங்கள் என்றது அவையிற்றின் காரியமாகிய பொறிகளை.*

---

* 'தவத்தார்க்கு' எனவும் பாடம்.

பருதி:— எ - து தவநெறி செய்கையிலே, அவநெறி செய்வானை ஐந்து பூதமும் நகைக்கும் என்றது; அது எது எனில், இவன் அவநெறி செய்ய, நாம் நரகத்திலே வீழ ஏதுவானேம் என்பதால் என்றவாறு.

காளிங்:— எ - து இங்ஙனம் கூடா ஒழுக்கமாகத் தவநெறி ஒழுகுகின்ற வஞ்சமனத்தானது பொய்யான ஆசாரத்தினைக் கண்டு யாவரும் அச்சம் உறுவர்; மற்று அஃதன்றித் தம்முள்ளே இகழ்ந்து சிரிப்பதுஞ் செய்வார்கள் என்றவாறு.

படிற்று ஒழுக்கம் என்பது பொய்யான ஆசாரம்.

## உரைவிளக்கப்பகுதி :

நுண் :— பூதங்கள் ஐஞ்சும் என்றே ஓதுக. கோவையாருள் "பணங்களைஞ்சாலும்.........குணங்களைஞ்சாற் பொலியும்" (235) என அடிப்பாடு நோக்கி வருவது காண்க. "விச்சதின்றியே விளைவு செய்குவாய்" என்னுந் திருவாசகத்தில் "வைச்சுவாங்குவாய்......பிச்சனுக்கிஞய்" என வருவனவும் அது. "விச்ச விரப்புக்கொன்ருங்கு" (532) என்பதும் அது.

### 272. வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
### தானறி குற்றப் படின். (உ)

## உரைப்பகுதி :

பரிமே:— வான் உயர் தோற்றம் எவன் செய்யும் - ஒருவனுக்கு வான்போலுயர்ந்த தவவேடம் என்ன பயனைச் செய்யும், தான் அறி குற்றம் தன் நெஞ்சம் படின்-தான் குற்றம் என்றறிந்த அதன்கண்ணே தன் நெஞ்சு தாழுமாயின்.

வானுயர் தோற்றம் என்பது "வான்தோய்குடி" என்றாற்போல இலக்கணைவழக்கு. அறியாது செய்த குற்றமல்லது அறிந்துவைத்துச் செய்த குற்றம் கழுவப்படாமையின், நெஞ்சு குற்றத்ததாயே விடும்; விடவே, நின்ற வேடமாத்திரத்துக்குப் புறத்தாரை வெருட்டுதலேயல்லது வேறுபயனில்லை என்பதாம்.

மணக் :— வானளவு உயர்ந்த பெருமை உண்டாயினும் அஃது யாதினைச் செய்யவற்று; தன்நெஞ்சறியக் குற்றம் உண்டாயின் என்றவாறு

தான் - அசை, இஃது இக்கூடா ஒழுக்கத்தானைப் பிறர் அறிந்து இகழாராயினும், அவன் செய்கின்ற தவத்தினல் பயனுண்டாகாது என்றது

பருதி:— எ - து வான்போல பெரிய தபசு பண்ணி ஆவது என்ன? தன் ஆத்துமா அறிய அவநெறி செய்வானாகில்; அது எப்படி என்றால் அவநெறி, தவநெறியைக் கெடுக்கும் என்றவாறு.

காளிங்:— எ - து இவ்வுலகத்து ஒருவர்தம் பெயர் தேவர் அறியுமாறு விளங்கிற்றாயினும், அஃது என்செய்யும்; யாதுமோர் பயனும் இல்லை; எப்பொழுது எனில் தன்னுடைய நெஞ்சமானது தானறிவதொரு தவநெறிக்குற்றம் உடைத்தாயின் என்றவாறு.

## உரைவிளக்கப்பகுதி:

**நுண்** :— வானுயர் தோற்றம் என்பது, நாலடியில் * 'வான்றோய் குடி' என்றாற்போல இலக்கணை வழக்கு. அன்றியும் வான்றோய் வன்ன குடிமையுமாம். "உடையான் அரசருள் எறு" (381) 'உடையார் முன் இல்லார்போல்" (395) "வானுயர் தோற்றம்" (272) என்பனவற்றுள் உபசார வழக்கும் இலக்கணைவழக்கும் முறையே காண்க. காமத்துப் பாலுள் "யாருள்ளித் தும்மினீர்" (1317) என்பதன்கண் மகளிர் வழக்குங் காண்க.

## ஒப்புமைப்பகுதி:

"வானினும் உயர்ந்தன்று" —குறுந், 3,

### 273. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
### புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று. (ங)

## உரைப்பகுதி :

பரிமே :— வலி இல் நிலைமையான் வல்லுருவம் - மனத்தைத் தன்வழிப்படுத்தும் வலியில்லாத இயல்பினையுடையான் வலியுடையார் வேடத்தைக்கொண்டு தான் அதன்வழிப்படுதல், பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று - பசு காவலர் கடியாமல் புலியின் தோலைப் போர்த்துப் பைங்கூழை மேய்ந்தாற்போலும்.

இல்பொருளுவமை. வலியினிலைமையான் என்ற அடையானும், மேய்ந்தற்று என்னுந்தொழிலுவமையானும், வல்லுருவத்தோடு மனவழிப்படுதல் என்பது பெற்றாம். காவலர் கடியாமை புலி புல் தின்னாது என்பதனானும், அச்சத்தானும் ஆம்; ஆகமே வல்லுருவங்கோடற்குப் பயன் அன்னகாரணங்களான் உலகத்தார் அயிராமையாயிற்று. இவ்வாறு

* நாலடி 142.

தனக்குரிய இல்லாளையும் துறந்து, வலியும் இன்றிப் பிறர் அயிராத வல்லுருவமுங் கொண்டு நின்றவன் மனவழிப்படுதலாவது தன்மனம் ஓடிய வழியே ஓடி மறைந்து பிறர்க்குரிய மகளிரை விழைதலாம். அவ்வாறுதல், பெற்றம் தனக்குரிய புல்லைவிட்டுப் பிறர்க்குரிய பைங்கூழை மேய்ந்தாற்போலும் என்ற உவமையான் அறிக.

**மணக் :—** *வலியில்லாத நிலைமையை உடையவன் வலிதாகிய தவ உருவம் கோடல், பெற்றமானது பிறர் பயப்படும்படிப் புலியினது தோலைப் போர்த்துப் பைங்கூழ் மேய்ந்த தன்மைத்து என்றவாறு.*

**பருதி :—** *எ - து தவத்தில் உறுதியில்லாதான் வலுவாகக் கொண்ட வேஷம், ரிஷபம் மேயவேண்டிப் புலித்தோல் போர்த்துப் புறப்பட்டதற்குச் சரி என்றவாறு.*

**காளிங் :—** *எ - து இவ்வுலகத்துத் தான் கொண்டதோர் தங்குறைமுடிப்பதொரு கோட்பாட்டுவலி தன்நெஞ்சத்தில்லாத தன்மையான் அவன்மாட்டுத் தவநெறி வலிபெற்று நின்றது போலத் தோன்றுகின்ற கோலமானது யாதினை ஒக்குமோ எனில், புலிபோல்வதோர் மனத்திட்பம் இல்லாத பசுவானது திட்பமுள்ளது போலப் புலியினது தோலினைப் போர்த்து நடித்தும், பண்டைப் புல்லினையே பின்னும் மேய்ந்த அத்தன்மைத்து என்றவாறு.*

**உரைவிளக்கப்பகுதி :**

**நுண் :—** *அதன் என்றது மனம்.*

**மேற்கோள்பகுதி :**

பெருந்தே :— *இஃது இல்லாதது சொன்னமையால் அபூத உவமையாயிற்று.* (வீரசோ. 155.)

காரிரத்ன :— *பாவிக அலங்காரத்திற்கு மேறகோள்* (*மாற.* 251.)

**274. தவமறைந்து அல்லவை செய்தல் புதன்மறைந்து**
**வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.** (ச)

**உரைப்பகுதி :**

பரிமே:—தவம் மறைந்து அல்லவை செய்தல்-அவ்வலியின் நிலைமையான் தவவேடத்தின்கண்ணே மறைந்து நின்று தவமல்லவற்றைச்

செய்தல்; வேட்டுவன் புதல் மறைந்து புள் சிமிழ்த்தற்று - வேட்டுவன் புதலின் கண்ணே மறைந்து நின்று புட்களைப் பிணித்தாற்போலும்.

தவம் ஆகுபெயர். தவமல்லவற்றைச் செய்தலாவது பிறர்க்குரிய மகளிரைத் தன் வயத்தராக்குதல். இதுவும் இத்தொழில் உவமை யானறிக.

**மணக் :**—*தவத்திலே மறைந்து தவம் அல்லாதவற்றைச் செய்தல் வேட்டுவன் தூற்றிலே மறைந்து புள்ளைப் பிணித்தாற் போலும் என்றவாறு.*

*அர்ச்சுனன் தவமறைந்து அல்லவை செய்தான்.*

**பருதி :**—*எ - து தவவேடத்திலே மறைந்து, அவநெறி செய்வாரும் செடியில் மறைந்து புள்ளை வதைப்பாருஞ் சரி என்றவாறு.*

**காளிங்:**—*எ - து ஒருவன் தவத்தின் மறைந்து நின்று அல்லனவற்றைச் செய்தொழுகுதல் எத்தன்மைத்தோ எனில் வேட்டுவனவன் புதலினுள் மறைந்து நின்று பேடை சேவல் என்னும் புள் விரும்பி வாய் மேல் விரலால் எற்றிப்பயில விளித்த அத்தன்மைத்து என்றவாறு.*

*புதல் என்றது சிறுசெடி, சிமிழ்த்தல் என்றது அவன் வாய்மேல் விரலெற்றி அதுபட விளித்தல்.*

**ஒப்புமைப்பகுதி :**

"தவமறைந்து அல்ல செய்வார்." —பெரிய, சம்

"சிறகமை பறவை பேர்ப்பான் உடம்பெலாம் செடியின் மூடிப்
பறவையைச் சிமிழ்ப்பின் வாங்கும் பாவியைப் போல." —மேரு. 268.

**275. பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்
றேதம் பலவும் தரும்.** (ரு)

**உரைப்பகுதி:**

**பரிமே:**—பற்று அற்றேம் என்பார் படிறு ஒழுக்கம் - தம்மைப் பிறர் நன்கு மதிக்கற்பொருட்டு யாம் பற்றற்றேம் என்று சொல்வாரது மறைந்த ஒழுக்கம்; எற்று எற்று என்று ஏதம் பலவும் தரும் - அப்பொழுது இனிதுபோலத் தோன்றுமாயினும், பின் என்செய்தேம் என்

செய்தேம் என்று தாமே இரங்கும் வகை அவர்க்குப பல துன்பங்களை யும் கொடுக்கும்.

சொல்லளவல்லது பற்றருமையின், பற்றற்றேம் என்பார் என்றும் சிறிதாய்க் கணத்துள்ளே அழிவதாய இன்பத்தின் பொருட்டுப் பெரிதாய் நெடுங்காலம் நிற்பதாய பாவத்தைச் செய்வார் அதன் வினை வின் கண் [1]அந்தோ வினையென்று அழுவராகலின், எற்று எற்று என்றும் கூறினர். இவை ஐந்து பாட்டானும் கூடா ஒழுக்கத்தின் இழுக்கம் கூறப்பட்டது.

**மணக் :**—*பற்றினை அற்றேம் என்பாரது குற்றத்தினை உடைய ஒழுக்கம் எல்லாரும் எற்றுஎற்று என்று சொல்லும்படி, பல குற்றமும் உண்டாக்கும் என்றவாறு.*

*எற்று என்பது திசைச்சொல்; இது தீமைபயக்கும் என்றது.*

**பருதி :**—*எ - து மூன்றுவகை ஆசை குடிகொண்டிருக்கவும், பற்றற்றேம் என்று வார்த்தையினலே சொல்லி நடக்கிறதெல்லாம் அதிக்கிரமமே செய்வார்க்குக் குற்றம் வெகுவிதமாகவரும் என்றவாறு.*

**காளிங் :**—*எ - து தன் நெஞ்சினல் பற்றருதே வறிதே இவ் உலகத்திலே பற்றும் அற்றேம் என்று சொல்லுமவனது பொய்யான ஆசாரமானது தானே கொடிய வினையாதலால் அஃதிங்கன்யேறி முயென்று நிரைத்தழவு தொறுருக்குச் செல்வதாகிய குற்றம் பலவுந்தரும் என்றவாறு.*[2]

இம்மைத்தவழும் கயிறு—பழமொழி.

276. நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல். (ஙா)

**உரைப்பகுதி :**

பரிமே :—நெஞ்சின் துறவார் - நெஞ்சால் பற்றறுதுவைத்து துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் - பற்றற்றார்போன்று தானம் செய்வாரை வஞ்சித்து வாழுமவர்போல், வன்கணார் இல் - வன் கண்மையை உடையார் உலகத்து இல்லை.

1 சிந்தாமணி. 2625.
2 இப்பகுதிக்குப் பொருள் புலப்படவில்லை.

தானம்செய்வாரை வஞ்சித்தலாவது யாம் மறுமைக்கண் தேவ ராதற்பொருட்டு இவ் அருந்தவர்க்கு இன்னது ஈதும் என்றும் அறியாது ஈந்தாரை அதுகொண்டு இழிபிறப்பினர் ஆக்குதல். அவர் இழிபிறப் பினராதல் [1] "அடங்கலர்க் கீந்த தானப்பயத்தினல் அலறு முந்நீர்த், தடங்கடல் நடுவுள் தீவு பலவுள அவற்றுள்தோன்றி, உடம்பொடு முகங்கள் ஒவ்வார் ஊழ்கனி மாந்திவாழ்வார், மடங்கலஞ் சீற்றத்துப் பின் மானவேல் மன்னர் ஏறே" என்பதனுன் அறிக. தமக்கு ஆவன செய்தார்க்கு ஆகாதன விளைத்தலின் வன்கணர் இல் என்றார்.

**மணக்:**-*நெஞ்சில் துறவாராய்த் துறந்தாரைப்போல வஞ்சனை செய்து வாழுமவர்களைப் போலக் கொடியார் இல்லை உலகத்து என்றவாறு.*

**பருதி:**—*எ - து மனத்தில் மூன்று ஆசையும் இருக்க ஆசையை விட் டோம் என்பார் வஞ்சகர்க்குள் வஞ்சகர் என்றவாறு.*

**காளிங்:**—*எ - து இவ் உலகத்துச்சிலர் துறக்கக் கருதுகின்றது மற்ற தனை நெஞ்சினுல் துறவாராய் வறிதே துறந்தார் போலப் பாவித்து இங் ஙனம் வஞ்சித்து உயிர் வாழ்வாரைப் போலத் தறுகணுளர் ஒருவரும் இல்லை என்றவாறு.*

**மேற்கோள்பகுதி :**

**சுவாமி:**—*நல்வினை தீவினையானதற்கு மேற்கோள்* (இ. கொ. 81.)

**277. புறங்குன்றி கண்டனைய ரேனும் அகம்குன்றி**
**மூக்கில் கரியார் உடைத்து.** (எ)

**உரைப்பகுதி :**

**பரிமே :**—குன்றிப்புறம் கண்டு அனையரேனும் - குன்றியின் புறம்போல வேடத்தால் செம்மை உடையராயினும்; குன்றி மூக்கின் அகம் கரியார் உடைத்து - அதன் மூக்குப்போல மனம் இருண்டிருப் பாரை உடைத்து உலகம்.

குன்றி ஆகுபெயர். செம்மை கருமை என்பன பொருளின்கண் நிறத்தைவிட்டுச் செப்பத்தினும் அறியாமையினும் சென்றனவாயினும் பண்பால் ஒத்தலின் இவை பண்புவமை. [2] "சூழின் மலிமனம் போன்றிருளா நின்ற கோகிலமே" என்பதும் அது.

[1] சிந்தாமணி. 2842. [2] திருக்கோவையார். 322.

மணக்:—புறத்தே குன்றி நிறம்போன்ற தூய வேடத்தராய் இருப்பினும், அகத்தே குன்றிமூக்குப் போலக்கரியராய் இருப்பாரை உடைத்து இவ்வுலகம் என்றவாறு.

இஃது அறிஞர், தவத்தவரை வடிவுகண்டு நேர்படார் என்றது.

பருதி:—எ - து வேஷதாரிகளாய் மனத்திலே வெகு ஆசை உள்ளவரும், குன்றிமணியுஞ் சரி என்றவாறு.

காளிங் :—தாம் புறத்துக்கொண்ட தவக்கோலத்தால் பிறர்க்குக் குன்றிகண்டாற் போல்வதோர் செம்மையுடையராயினும் மற்ற அகத்தால் அக்குன்றியினது மூக்கினைக்கண்டாற் போலக் கரியதன்மையரை உடைத்து இவ்வுலகு என்றவாறு.

**மேற்கோள்பகுதி :**

சுவாமி:—கண்டனையரேனும்; ஏனும் என்பதற்கு ஆனாலும் எனப் பொருள் எழுதி வாளாபோயினர் என மறுப்பர். (இ. கொ. 86.)

278. மனத்தது மாசாக மாண்டார்நீர் ஆடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர். (அ)

**உரைப்பகுதி:**

பரிமே:—மாசு மனத்தது ஆக - மாசு தம்மனத்தின் கண்ணதாக, மாண்டார் நீராடி—பிறர்க்குத் தவத்தான் மாட்சிமை உடையராய் நீரில் மூழ்கிக்காட்டி, மறைந்து ஒழுகும் மாந்தர் பலர் - தாம் அதன் கண்ணே மறைந்து செல்லும் மாந்தர் உலகத்துப் பலர்.

மாசு - காம வெகுளி மயக்கங்கள். அவை போதற்கன்றி மாண்டாரென்று பிறர் கருதுதற்கு நீராடுதலான், அத்தொழிலை அவர் மறைதற்கு இடனாக்கினர். இனி மாண்டார் நீராடி என்பதற்கு மாட்சிமைப் பட்டாரது நீர்மையை உடையராய் என உரைப்பாரும் உளர். இவை மூன்று பாட்டானும் அவ்வொழுக்கம் உடையாரது குற்றமும், அவரை அறிந்து நீக்கல் வேண்டும் என்பதும் கூறப்பட்டன.

மணக்:—மாசு மனத்தின் கண் உண்டாகவைத்து, மாட்சிமைப் பட்டாரது நீர்மையைப் பூண்டு, பொருந்தாத இடத்திலே மறைந்து ஒழுகும் மாந்தர் பலர் என்றவாறு.

இது பலர்க்குக் கூடா ஒழுக்கம் உண்டாகும் என்றது.

பருதி:—எ - து மனத்திலே மாசாகிய குற்றம் பெருகி மாண்டாராகி யிருக்கவும், மார்கழித் தீர்த்தம் என்றும், மகா தீர்த்தம் என்றும் ஆடி அதிலே மறைந்தொழுகு மாந்தரும் உண்டு என்றவாறு.

காளிங்:—எ - து தம்மனத்துள்ள துறவற நெறிக்குக் குற்றமாகியவற்றைப் புறமே உலகத்தார் கண்டு மதிக்குமாறு மாட்சிமைப்பட பலகாலும் நீராடி, தமதுள்ளத்துக்கிடந்த மாசானது பிறர்க்குப் புலப்படாமல் அதனை மறைத்து இங்கனம் கூடா ஒழுக்கத்தினை ஒழுகுமானிடர் உலகத்துப் பலர் என்றவாறு.

## 279. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
## வினைபடு பாலால் கொளல். (௯)

**உரைப்பகுதி:**

**பரிமே:**—கணை கொடிது யாழ் கோடு செவ்விது - அம்பு வடிவால் செவ்விதாயினும், செயலால் கொடிது; யாழ் கோட்டால் வளைந்ததாயினும், செயலால் செவ்வியது; ஆங்கு என்ன வினைபடு பாலால் கொளல் - அவ்வகையே தவஞ் செய்வோரையும் கொடியர் செவ்வியர் என்பது, வடிவால் கொள்ளாது அவர் செயல்பட்ட கூற்றானே அறிந்து கொள்க.

கணைக்குச் செயல் கொலை. யாழுக்குச் செயல் இசையால் இன்பம் பயத்தல். அவ்வகையே செயல் பாவமாயின் கொடியர் எனவும் அறமாயின் செவ்வியர் எனவும் கொள்க என்பதாம். இதனுன் அவரை அறியுமாறு கூறப்பட்டது.

**மணக்:**— செவ்விய கணை கொடுமையைச் செய்யும்; கோடிய யாழ் செவ்வையைச் செய்யும்; அதுபோல, யாவரையும் வடிவு கண்டறியாது அவரவர் செய்யும் வினையின் பகுதியாலே அறிந்துகொள்க என்றவாறு.

**பருதி:**— எ - து அம்பு செவ்வையாயிருந்தும் கொலை விளைத்தது; யாழ் கோணியிருந்தும் இன்பம் விளைத்தது. அதுபோலேதவத்தார்வேஷங் கண்டு கொள்ளவேண்டாம்; அவரவர் ஞானநெறி யுறுதியை அறிந்து கொள்க என்றவாறு.

**காளிங்:**— எ - து உலகத்துக் கணையினது உருபு சாலச் செவ்விதாயினும், மற்று அதன் வினை சாலக்கொடிது. யாழினது உருபு சாலக்

கோட்டமுடைத்தாயினும் மற்று அதன் வினைவழி சாலச்செவ்விது. அவ்விடத்தவ்விடத்து ஈண்டும் தன் குற்றந்தெரிந்த கூடா ஒழுக்கத்தையும் மற்றதனினின்றும் தெரிந்துணரும் இடத்து அத்தன்மையாகிய வினைவிடு பகுதியால் தெரிந்து கொள்க. மற்றுருபின் பகுதியால் கொள்ளற்க என்றவாறு.

**280. *மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்த தொழிந்து விடின். (ய)**

**உரைப்பகுதி :**

**பரிமே:—** மழித்தலும் நீட்டலும் வேண்டா - தவஞ்செய்வார்க்குத் தலை மயிரை மழித்தலுஞ் சடையாக்கலுமாகிய வேடமும் வேண்டா, உலகம் பழித்தது ஒழித்துவிடின்-உயர்ந்தோர் தவத்திற்கு ஆகாது என்று குற்றங்கூறிய ஒழுக்கத்தைக் கடிந்துவிடின்.

பறித்தலும்மழித்தலுள் அடங்கும் மழித்தல் என்பதே தலை மயிரை உணர்த்தலின், அது கூறுராயினர். இதனல் கூடாவொழுக்கம் இல்லாதார்க்கு வேடமும் வேண்டா என அவரது சிறப்புக் கூறப்பட்டது.

**மணக்:—** தவத்தினர்க்குத் தலையை மழித்தலும் நீட்டலும் வேண்டா; [1] உலகத்தார் கடிந்தவையிற்றைத் தாமும் கடிந்து விடுவாராயின் என்றவாறு.

இது வேடத்தால் பயனில்லை; நல்லொழுக்கமே வேண்டும் என்றது.

**பருதி:—** எ - து முண்டிதமும் சடையும் வேண்டாம்; மூன்று வகை ஆசையை விடுவானகில் என்றவாறு.

**காளிங் :—** எ - து நெஞ்சினல் துறவறம் பேணக் கருதுவார் வெறுந் தலை முண்டித்தலும் சடைவளர்த்தலும் மற்று உம்மையால் தண்டு தரித்தலும் துவராடையுடுத்தலும் பிறவுமாகிய புறக்கோலம் புனையவேண்டுவது இல்லை. உலகத்து உயர்ந்தோராகிய தமது உணர்வினலும் தாங் கற்றுணர்ந்த நூலினலும் இவை இவை தகா என்று ஓரீஇயவற்றைத் தாமும் அவ்வாறு ஒழித்துவிடின் என்றவாறு.

இனி மற்றிவ்வாறன்றி முன்னம் துறவு பூண்டு ஒழுகுவானும் அங்ஙனம் ஒழுகுகின்றது மறந்து இடங்கண்டு பிறன்பொருள் கவரக்கருதும்

* 'வழித்தலும்' எனவும் பாடம்.

எனில், முன்பு தான் ஒழுகிப்போந்த ஒழுக்கமும் கெட்டுப் பெரிதும் குற்றம் தங்குமாதலால் இதன் பின்னரே அதன் [1]தகாமையை அறிவிக்கின்றது:

## ஒப்புமைப்பகுதி :

''வீடு வேண்டி விழுச்சடை நீட்டல் மெய்ம்
மூடு கூறையின் மூடுதல் வெண்டலை
ஓடு கோடல் உடுத்தல் என்று இன்னவை
பீடிலாப் பிறவிக்கு வித்து என்பவே. —சீவக. 1427.

''போர்த்தல் உடைநீக்குதல் பொடித்துகள் மெய்பூசல்
கூர்த்தபனி யாற்றுதல் குளித்தபுனல் நித்தல்
சார்த்த ரிடுபிச்சையர் சடைத்தலைய ராதல்
வார்த்தையிவை செய்தவ மடிந்தொழுகவென்றான்'' —குண்டல. 20

உலகம் பழித்தது ஒழித்துவிடின் என்பதற்குப் பெரியோர்கள் தபசுக்கு ஆகாது என்று ஜிநாகமத்துச் சொன்னவைகளைத் தாங்களும் கடிந்து விடுகிறதே செய்யவேணும் என்று பொருள் உரைப்பர்.

—கவிராஜ பண்டிதர்.

1 தகாமையை என்றது கள்ளாமை என்ற அடுத்த அதிகாரத்தை.

# 29. கள்ளாமை

**பரிமே :—** அஃதாவது பிறருடைமையாயிருப்பது யாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக் கொள்ளக்கருதாமை. கருதலும் செய்தலோடு ஒத்தலின், கள்ளாமை என்றார். இல்வாழ்வார்க்காயின் தமரோடு விளையாட்டுவகையால் அவரை வஞ்சித்துக் கோடற்கு இயைந்த பொருள்களை அங்ஙனம் கொள்ளினும் அமையும், துறந்தார்க் காயின் அதனைக் கருதியவழியும் பெரியதோர் இழுக்காம் ஆகலின், இது துறவறமாயிற்று. புறத்துப் போகாது மடங்கி ஒருதலைப்பட்டு உயிரையே நோக்கற்பாலதாய அவர் மனம் அஃதொழிந்து புறத்தே போந்து பஃறலைப்பட்டு உடம்பின் பொருட்டுப் பொருளை நோக்குதலே யன்றி, அது தன்னையும் வஞ்சித்துக் கொள்ளக் கருதுதல் அவருக்குப் பெரியதோரிழுக்காதல் அறிக. இவ்வாறு வாய்மைமுதல் கொல்லாமை யீறுய நான்கு அதிகாரத்திற்கும் ஒக்கும். பொருள் பற்றி நிகழுங் குற்றத்தை விலக்குகின்றதாகலின், இது காமம் பற்றி நிகழ்வதாய கூடாஒழுக்கத்தின் பின் வைக்கப்பட்டது.

**மணக்:—** *கள்ளாமையாவது யாதொரு பொருளையும் களவிற் கொள்ளாராதல்.*

**பரிப்:—** *மேலின்பங் காரணமாக மறைந் தொழுகாமை கூறினர். இது பொருள் காரணமாக மறைந் தொழுகலாகலான் அதன்பிற் கூறப்பட்டது இது முதலாகக் கொல்லாமை ஈறுகக் கூறுகின்ற அறங்களெல்லாம் இல்லறத்தினின்றார்க்கு முரியவாகக் கொள்ளப்படும்.*

**பருதி:—** *கள்ளாமையாவது கபட புத்தியை விடுதல் என்றவாறு.*

**281. எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்**
**கள்ளாமை காக்கதன் நெஞ்சு (க)**

**உரைப்பகுதி:**

**பரிமே :—** எள்ளாமை வேண்டுவான் என்பான் - வீட்டினை இகழாது விரும்புவான் இவன் என்று தவத்தோரான் நன்கு மதிக்கப் படுவான், எனைத்தொன்றும் கள்ளாமை தன் நெஞ்சு காக்க - யாதொரு பொருளையும் பிறரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாவகை தன்னெஞ் சினைக் காக்க.

எள்ளாது என்னும் எதிர்மறைவினையெச்சம் எள்ளாமை எனத் திரிந்து நின்றது. வீட்டினை இகழ்தலாவது காட்சியே அளவையாவது

என்றும், நிலம் நீர் தீ வளி எனப் பூதம் நான்கே என்றும், அவற்றது புணர்ச்சி விசேடத்தால் தோன்றிப் பிரிவான் மாய்வதாய உடம்பின் கண்ணே அறிவு மதுவின்கண் களிப்புப்போல வெளிப்பட்டழியும் என்றும், [1]இறந்த வுயிர் பின் பிறவாது என்றும், இன்பமும் பொருளும் ஒருவனுல் செய்யப்படுவன என்றும் சொல்லும் உலோகாயத முதலிய மயக்கநூல்களைத் தெளிந்து, அவற்றிற்கு ஏற்ப ஒழுகுதல். ஞானத்திற்கு ஏதுவாய மெய்ந்நூற்பொருளையேனும் ஆசிரியனை வழிபட்டன்றி அவனை வஞ்சித்துக் கொள்ளின், அதுவும் களவாம் ஆகலின், எனைத்தொன்றும் என்ருர். நெஞ்சு கள்ளாமல் காக்க எனவே, துறந்தார்க்கு விலக்கப்பட்ட கள்ளுதல் கள்ளக்கருதுதல் என்பது பெற்ரும்.

*மணக்:— பிறரால் இகழப்படாமையை வேண்டுவான் இவன் என்று சொல்லப்படும் அவன், யாதொரு பொருளையும் களவில் கொள்ளாமல் தன் நெஞ்சைக் காக்க என்றவாறு.* (1)

*இது [2] களவு ஆகாது என்றது.*

*பருதி:— எ - து பர சமயத்தார் தந்த வசை இகழாமல் வேண்டு மாகில் கபடுள்ளது விடுக என்றவாறு.* (10)

*காளிங்:— எ - து அறநூலாலும் சான்ருேராலும் எஞ்ஞான்றும் இகழாமை வேண்டுவான் என்பான் ஒருவன் உலகத்து யாதானும் ஒன்றினையும் தனது நெஞ்சமானது கள்ளாதவண்ணம் காக்க; எனவே அதனை யாண்டும் செல்லாமை மீட்க என்றே பொருள் என்றவாறு.*

*எள்ளாமை என்பது இகழாமை.* (8)

## மேற்கோள்பகுதி :

*மயிலை:— 'தன்னை எள்ளாமை வேண்டுவான் என்பான் ............ கள்ளாமை காக்க தன் நெஞ்சு' என உருபுச்சொற்கள் எஞ்சவந்தனவும் வினையும் வினைக்குறிப்புமாய் அடங்கலின் வினையெச்சமேயாம் என்பதற்கு மேற்கோள்.* (நன். 359.)

*ஏதோ காரணம்பற்றித் தம்பொருளையும் போகத்தையும் வெறுத்து வந்தார்க்குப் பின் போகம் பழைய வாசனையாற் பற்ற அதற்கு இன்றியமையாத பொருளைத்தேட முடியாமையால் கள்ளக் கருத்து உண்டாகும். அக்கருத்து 'உலகம் இகழும்' என்று எண்ண இல்லையாம் ஆதலின் நெஞ்சைக் காக்க என்ருர்—தொகுப்பாசிரியர்*

---

1 'மறுபிறப்பில் என்னும் மடவோரும்' பரி-5-76.

2 களவு காரணக்களவு காரியக்களவு என இருவகைப்படும் எனக்கூறி 'அளவிலா நிதியை விட்டுப் பிறன்பொருள் அதனை மேவல், களவுதான் இரண்டு கூறும் இயல்பு காரணங்கள் தம்மால் அளவிலாப் பொருள் உண்டாயும் பிறன் பொருட்கிவறல் ஆதி, களவு தான் கடையதாகும் கைப்பொருள் அற்றவர்க்கே' என்ற பாடலையும் காட்டுவர்.

**282. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்**
**கள்ளத்தால் [1]கள்வேம் எனல். (உ)**

**உரைப்பகுதி :**

**பரிமே :—** உள்ளத்தால் உள்ளலும் தீதே - குற்றங்களைத் தந் நெஞ்சால் கருதுதலும் துறந்தார்க்குப் பாவம்; பிறன் பொருளைக்கள்ளத் தால் கள்வேம் எனல் - ஆதலால், பிறனொருவன்பொருளை அவன் அறியா வகையால் வஞ்சித்துக்கொள்வேம் என்று கருதற்க.

உள்ளத்தால் என வேண்டாது கூறினர், அவர் உள்ளம் ஏனை யோர் உள்ளம்போலாது சிறப்புடைத்து என்பது முடித்தற்கு. உள்ள லும் என்பது இழிவுசிறப்பும்மை. அல்விகுதி வியங்கோளெதிர்மறைக் கண் வந்தது. இவை இரண்டுபாட்டானும் இந்நடைக்குக் களவாது இது என்பதூஉம், அது கடியப்படுவது என்பதூஉம் கூறப்பட்டன.

**மணக் :—** *பிறன் பொருளை நெஞ்சினால் நினைத்தலும் தீதாம்; ஆதலால், அதனை மறைவினாலே ள்வேம் என்று முயலாது ஒழிக என்றவாறு.*

*இது களவு தீது என்றது.* (2)

**பருதி :—** *எ - து தவம் செய்வார்க்குப் பர்த்தாக்கள் இரங்கிக் கொடுக்கும பொருள் அன்றியிலே, ஒருதிருப்பணிபோலே காட்டிவாங்கு தல் கனவிலும் நிலைப்பதல்ல என்றவாறு.* (9)

**காளிங் :—** *எ - து துறவோனாகிய ஒருவன் பிறனொருவன் வழங்கிய பொருளையும் விரும்பாமல், நெஞ்சினால் நினைத்தலும் தீதே பிறன் பொருளைக் கள்ளத்தாற் கள்வோம் என்று கருதுதல் என்றவாறு.*

**மேற்கோள்பகுதி**

**காரிரத்ன :—** *பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள்.* (*மாற*, 251)

**ஒப்புமைப்பகுதி :**

" மனத்தினாலும் பிறர்பொருளை வெளவவெனவே சிறிதேனும்
நினைத்திடாமை கள்ளாமை. "
—இலிங்க.

'கள்ளாமை தன் நெஞ்சு காக்க' என்று கூறியவர் கள்வேம் என உள்ளத்தால் உள்ளலுந் தீதே' என்றல் கூறியது கூறலாகாதோ எனின், ஆகாது; சென்றகுறளில் இம்மையில் இகழா மைக் காக்க என்று கூறப்பெற்றது. இக்குறளில் மறுமைக்குப் பாவமாம் என்று கூறப் பெற்றது ஆதலின்.
—தொகுப்பாசிரியர்.

[1] கொள்வோம் என்பது பருதியார் கொண்ட பாடம்.

283. களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந் (ந)
தாவது போலக் கெடும்.

**உரைப்பகுதி :**

**பரிமே :—** களவினால் ஆகிய ஆக்கம் - களவினால் உளதாகிய பொருள், ஆவது போல அளவிறந்துகெடும் - வளர்வதுபோலத் தோன்றித் தன் எல்லையைக் கடந்து கெடும்.

ஆக்கத்திற்கு ஏதுவாகலின், ஆக்கம் எனப்பட்டது. எல்லையைக் கடந்து*கெடுதலாவது தான் போங்கால் பாவத்தையும் பழியையும் நிறுத்திச் செய்த அறத்தையும் உடன்கொண்டுபோதல். அளவறிந்து என்று பாடம் ஓதி, அவர் பயன்கொள்ளும் அளவு அறிந்து அவ்வளவிற்கு உதவாது கெடும் என்று உரைப்பாரும் உளர்.

**மணக் :—** *களவில் கொண்ட பொருளால் ஆகிய ஆக்கம் மேன் மேலும் மிகுவதுபோலக் கெடும் என்றவாறு.*

*இது பொருள் நிலையாது என்றது.* (4)

**பரிப் :—***அளவிறப்பு—மிகுதி*

**பருதி :—** *எ - து கபடத்தினால் பெற்ற செல்வம் ஆகிறுப்போலே அழிந்துபோம் என்றவாறு.* (3)

**காளிங் :—** *எ - து தமது உரவினான் ஆகிய ஆக்கமன்றி, பிறர் பொருளைக் களவினால் விரும்பிய ஆக்கம் உளதாகில் அப்பொழுதைக்கு ஆவதுபோலக் காட்டி, பின்பு விளையுங்காலத்து உயிர்க்கேடும் பொருட்கேடும் உறுப்புக்கேடும் என இவை முதலானகேடும் வந்து பின்பு நரகத்தில் தள்ளும் என்றவாறு.* (10)

**ஒப்புமைப்பகுதி :**

"அல்லது செய்வார் அரும்பொருள் ஆக்கத்தை
நல்லது செய்வார் நயப்பவோ—ஒல்லொலிநீர்
பாய்வதே போலும் துறைவகேள் தீயன
ஆவதே போன்று கெடும்." —பழமொழி. 173.

* கெடுதலாவது திருடினவனுடைமையைக் கண்டால் ராசாங்கத்தார் அவன் உடைமை எல்லாம் எடுத்துக்கொள்ளுவார்கள்; சரீரவாதையும் பண்ணுகிறதினாலே பாவமும் பழியும் வரும் என்பதாம். —கவிராஜபண்டிதர்

284. களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும். (ச)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** களவின்கண் கன்றிய காதல் - பிறர்பொருளை வஞ்சித்துக் கோடற்கண்ணே மிக்க வேட்கை, விளைவின்கண் வீயா விழுமம் தரும் - அப்பொழுது இனிதுபோலத் தோன்றித் தான் பயன் கொடுக்கும்பொழுது தொலையாத இடும்பையைக் கொடுக்கும்.

கன்றுதலான் எஞ்ஞான்றும் அக்களவையே பயில்வித்து அதனால் பாவமும் பழியும் பயந்தேவிடுதலின், வீயாவிழுமம் தரும் என்றார். இவை இரண்டுபாட்டானும் அது கடியப்படுதற்குக் காரணம் கூறப் பட்டது.

**மணக் :—** *களவின் கண்ணே மிக்க ஆசை, பயன்படும் காலத்துக் கேடில்லாத நோயைத் தரும் என்றவாறு.* (5

*இது நரகம் புகுத்தும் என்றது.*

**பருதி :—** *எ - து கபடபுத்தி இருக்கையிலே எத்தனை தன்மதானம் பண்ணினும், உவர்நிலத்தில் இட்ட பயிராம் என்றவாறு.* (2)

**காளிங் :—** *எ - து இது நமக்குத் தகாது என்று கருதாது களவின்மாட்டு அழுந்திய ஆசையானது, விளைவினிடத்து எஞ்ஞான்றும் ஒழியாத நரகத்துள் வீழ்ந்து அழும் துன்பத்தைத்தரும் என்றவாறு.* (3)

**ஒப்புமைப்பகுதி :**

" வினைப்பயன் விளையுங் காலை உயிர்கட்கு
மனப்பேரின்பமும் கவலையும் காட்டும். " —மணி. பவத்திற. 62 - 63.

" பீடில் செய்திக ளாற்கள வில்பிறர்
வீடில் பல்பொருள் கொண்ட பயனெனக்
கூடிக் காலொடு கைகளைப் பற்றிவைத்து
ஓடலின்றி உலையக் குறைக்குமே. "

—வளையாபதி.

255. அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
*பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல். (ரு)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** அருள் கருதி அன்பு உடையராதல் - அருளினது உயர்ச்சியை அறிந்து அதன்மேல் அன்புடையராய் ஒழுகுதல்,

* ' பொய்ச்சாப்பு ' எனவும் பாடம்.

பொருள் கருதிப் பொச்சாப்புப் பார்ப்பார்கள் இல் - பிறர்பொருளை வஞ்சித்துக்கொள்ளக்கருதி அவரது சோர்வு பார்ப்பார்மாட்டு உண்டாகாது.

தமக்குரிய பொருளையும் அதனது குற்றம் நோக்கித் துறந்து போந்தவர், பின் பிறர்க்குரிய பொருளை நன்குமதித்து அதனை வஞ்சித்துக் கோடற்கு அவரது சோர்வு பார்க்கும் மருட்சியரானல், அவர் மாட்டு, உயிர்கண்மேல் அருள் செய்தல் நமக்கு உறுதியென்று அறிந்து அவ் அருளின் வழுவாது ஒழுகும் தெருட்சி கூடாது என்பதாம்.

மணக் :— *அருளைக் குறித்து உயிர்மீது அன்புடையராய் ஒழுகுதல் பொருளைக் குறித்துப் பிறரது மறவியைப் பார்ப்பார்மாட்டும் இல்லை என்றவாறு.*

*இஃது அருளும் அன்பும் இல்லையாம் என்றது* (7)

பருதி :— *எ - து பிறவா நெறி வேண்டி அன்புபெறுங்கருத்தை அறியார் மூன்றுவகை ஆசை மிகுத்துப் பொய் நெறியிலே நிற்பார் என்றவாறு.* (8)

காளிங் :— *எ - து அனைத்துயிர்க்கும் ஒப்ப நிகழ்வதோர் அருளினைக் கருதி அவ்வுயிர்கண்மாட்டு அன்பு பெரிதுடையராவோம் என்பது பிறன் பொருளை முழுதும் வவ்வ, கருத்திற் காவற் குறிக்கோள் முறைமையை இகழ்ந்து, அதனல் மகிழ்ச்சியுடையார்க்கு ஒருநாளும் இல்லை என்றவாறு.*

*பொய்ச்சாப்பு என்பது இகழ்ச்சி.* (7)

**286. அளவின்கண் நின்றொழுகல் ஆற்ருர் களவின்கண்**
**கன்றிய காத லவர்.** (சு)

**உரைப்பகுதி :**

பரிமே :— அளவின்கண் நின்று ஒழுகல் ஆற்ருர் - உயிர் முதலிவற்றை அளத்தலாகிய நெறியின்கண் நின்று அதற்கேற்ப ஒழுக மாட்டார்; களவின்கண் கன்றிய காதலவர் - களவின்கண்ணே மிக்க வேட்கையை உடையார்.

உயிர் முதலியவற்றை அளத்தலாவது காட்சி முதலாகச்சொல்லப் பட்ட அளவைகளான் உயிர்ப்பொருளையும் அதற்கு அநாதியாய்

வருகின்ற நல்வினை தீவினைக் குற்றவிளைவுகளையும், அவற்றான் அது நாற்கதியுள் பிறந்து இறந்து வருதலையும், அது செய்யாமல் அவற்றைக் கெடுத்தற்கு உபாயமாகிய யோக ஞானங்களையும், அவற்றான் அஃது எய்தும் வீட்டினையும், அளந்து உள்ளவாறு அறிதல். இதனை ஆரு கதர் தருமத்தியானம் என்ப. அதற்கு ஏற்ப ஒழுகுதலாவது அவ் வளக்கப்பட்டனவற்றுள் தீயனவற்றினீங்கி நல்லனவற்றின் வழிநிற்றல்.

**மணக் :—** *களவின்கண்ணே மிக்க ஆசையை உடையவர் நெறியின்கண் நின்று ஒழுகுதலைச் செய்யமாட்டார் என்றவாறு.*

*இது நெறிசெல்லமாட்டார் என்றது.* (8)

**பருதி:—** *எ-து தவநெறியிலே நிற்கமாட்டார் கபடபுத்தியிலேமிகுத் தவர் என்றவாறு.* (6)

**காளிங்:—** *எ - து தமக்கு ஒத்த நீதியின் மரபிலே நின்று ஒழுகுதலை அறியார்; யாரோ எனில் களவின்மாட்டு அழுந்திய காதலை உடையோர் என்றவாறு.* (5)

**287. களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்**
**ஆற்றல் புரிந்தார்கண் இல்.** (எ)

**உரைப்பகுதி:**

**பரிமே:—**களவு என்னும் கார் அறிவு ஆண்மை - களவு என்று சொல்லப்படுகின்ற இருண்ட அறிவினை உடையராதல்; அளவு என்னும் ஆற்றல் புரிந்தார்கண் இல் - உயிர் முதலியவற்றை அளத்தல் என்னும் பெருமையை விரும்பினார்கண் இல்லை.

இருள்-மயக்கம். காரியத்தைக் காரணமாக உபசரித்துக் களவு என்னுங் காரறிவாண்மை என்றும், காரணத்தைக் காரியமாக்கி அளவு என்னும் ஆற்றல் என்றும் கூறினர். களவும் துறவும் இருளும் ஒளியும் போலத் தம்முள் மாறுகலின், ஒருங்கு நில்லா என்பது இவை மூன்று பாட்டாலும் கூறப்பட்டது.

**மணக்:—** *களவாகிய பொல்லா அறிவுடைமை நேராகிய பெருமை யைப் பொருந்தினார்மாட்டு இல்லை என்றவாறு.*

இது நேரறிந்தவர் களவு காணார் என்றது. (9)

பருதி :— எ - து களவாகிய அஞ்ஞானம் விசாரித்ததில் அளவாகிய யாக்கை நிலையாமை கண்டாரிடத்து இல்லை என்றவாறு. (4)

காளிங்:—எ - து துறவுநெறி உடையார்மாட்டு யாதானும் ஒரு காரணத்தால் ஒருகால் ஒரு களவியல் கருதத்துணியுமாயின், மற்றது பெரிதும் அறிவின்மை ஆகலான், மற்றக் களவினைக் கருதுகின்ற அறியாமையானது அளவு என்கின்ற நன்னெறியுடையார்மாட்டு எஞ்ஞான்றும் இல்லை என்றவாறு. (1)

## மேற்கோள் பகுதி :

இளம்:—கள்ளாமையாவது பிறர்க்குரிய பொருளைக் களவினால் கொள்ளாராதல் என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 75.)

நச்:—ஒருயிர்க்கு இடர்வந்துழித் தன் உயிரைக் கொடுத்துக் காத்தலும் அதன்வருத்தம் தனதாக வருந்துதலும், பொய்யாமை கள்ளாமை முதலியனவும் ஆம் என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 76.)

### 288. அளவறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்
### களவறிந்தார் நெஞ்சில் கரவு. (அ)

## உரைப்பகுதி :

பரிமே:—அளவு அறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும் - அவ்வளத்தலையே பயின்றவர் நெஞ்சத்து அறம் நிலைபெற்றாற் போல நிலைபெறும், களவு அறிந்தார் நெஞ்சில் கரவு-களவையே பயின்றவர் நெஞ்சத்து வஞ்சனை.

உயிர் முதலியவற்றை அளந்து அறிந்தார்க்குத் துறவறம் சலியாது நிற்கும் என்பது இவ்வுவமையால் பெற்றாம். களவோடு மாறின்றி நிற்பது இதனாற் கூறப்பட்டது.

மணக்:—நேர் அறிந்தவர் நெஞ்சத்து அறம் நிற்குமாறுபோல, நிற்கும்; களவு அறிந்தவர் நெஞ்சில் வஞ்சகமும் என்றவாறு.

இது களவு காண்பாரைப் பின்பு களவினின்று தவிர்த்தல் முடியாது என்றது. (10)

பருதி :— எ - து யாக்கை நிலையாமைகண்டவர் மனத்தில் தன்மம் போலே, நிலைபெற்று நிற்கும் களவாகிய கவடும் களவறிந்தாரிடத்து என்றவாறு. (5)

காளிங் :—எ - து நீதியினெறித்தமரபு உணர்ந்தோர் உள்ளத்துத் துற வறமாகிய அறம் குடிக்கொண்டு நிற்குமாப்போல் நிலைநிற்கும்; அது யாது எனில், களவினை யறிந்தோர்மாட்டு நரகமானது என்றவாறு.

கரவு என்றது களவு என்று சொல்லுவாரும் உளர். (6)

**ஒப்புமைப்பகுதி :**

"குத்திரஞ் செய்தலிற் கள்வனுதல் அறிப." —முதுமொழி. 17

**289. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல**
**மற்றைய தேற்ரு தவர். (கூ)**

**உரைப்பகுதி :**

**பரிமே:**—அளவு அல்ல செய்தாங்கே வீவர் - அவ்வளவல்லாத தீய நினைவுகளை நினைத்தபொழுதே கெடுவர், களவு அல்ல மற்றைய தேற்ருதவர் - களவல்லாத பிறவற்றை அறியாதவர்.

தீயநினைவுகளான பொருளுடையாரை வஞ்சிக்குமாறும், அவ்வஞ் சனையால் அது கொள்ளுமாறும், கொண்ட அதனுல் தாம் புலன்களை நுகருமாறும் முதலாயின. நினைத்தலும் செய்தலாகலில் செய்து என் றும், அஃது உள்ள அறங்களைப் போக்கிக் கரந்த சொற்செயல்களைப் புகுவித்து அப்பொழுதே கெடுக்குமாகலின் ஆங்கே வீவர் என்றும் கூறினர். மற்றையவாவன துறந்தார்க்கு உணவாக ஓதப்பட்ட காய் கனி கிழங்கு சருகு முதலாயினவும், இல்வாழ்வார் செய்யும் தானங் களும் ஆம். தேற்ருமை அவற்றையே நுகர்ந்து அவ்வளவான் நிறைந் திருத்தலை அறியாமை, இதனுல் கள்வார் கெடுமாறு கூறப்பட்டது.

**மணக்:**—நேர் ஆகாதன செய்து அவ்விடத்தே கெடுவார்; களவு அல்லாத மற்றைய அறங்களைத் தெரியாதவர் என்றவாறு,

இது கள்வாரை அரசர் கொல்வர் என்றது. (6)

**பருதி:**—எ-து தவத்திற்கு ஏலாத காரியஞ்செய்து நரகத்திலேவீழ்வர்: கபடபுத்தியல்லது ஞானவழியை அறியாதார் என்றவாறு. (7)

காளிங் :—எ - து° செய்யத்தகும் தகவுகேடாகிய மிகைநடைகளைச் செய்து அப்பொழுதே கெடுவர்; யாவரோ எனில் களவல்லனவாகிய நன் மரீபுகளைத் தெளியாதவர் என்றவாறு. (4)

**290. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு. (க0)**

**உரைப்பகுதி :**

**பரிமே:—** கள்வார்க்கு உயிர்நிலை தள்ளும் - களவினைப் பயில் வார்க்குத் தம்மின் வேறல்லாத உடம்பும் தவறும், கள்ளார்க்குப் புத் தேளுலகு தள்ளாது - அது செய்யாதார்க்கு நெடுஞ்சேணதாகிய புத் தேள் உலகும் தவறாது.

உயிர் நிற்றற்கு இடனாகலின், உயிர்நிலை எனப்பட்டது. சிறப்பு உம்மைகள் இரண்டும் விகாரத்தால் தொக்கன. இம்மையினும் அரச னால் [1]ஒறுக்கப்படுதலின் உயிர்நிலையும் தள்ளும் என்றும், மறுமையி னும் தேவராதல் கூடுதலின் புத்தேளுலகுந் தள்ளாது என்றுங் கூறி னார். [2]"மற்றது தள்ளினுந் தள்ளாமை நீர்த்து" என்புழியும் தள்ளு தல் இப்பொருட்டாதலறிக. இதற்குப் பிறவாறு உரைப்பாரும் உளர். இதனால் இருவர்பயனும் ஒருங்கு கூறப்பட்டது.

**மணக் :—** பிறர்பொருளைக் கள்வார்க்கு உயிர்நிலையாகிய வீடு பெறு தல் தப்பும்; கள்ளாதார்க்குத் தேவர் உலகம் பெறுதல் தப்பாது என்ற வாறு.

இது கள்வார் முத்தி பெறுதலும் இலர்; கள்ளாதார் சுவர்க்கம் பெறா மையும் இலர் என்றது. (3)

**பருதி :—** எ - து கபடியர்க்கு அற்பாயுசுவாய் சுவர்க்கமில்லை; கள வில்லார்க்குத் தீர்க்காயுசு உண்டாய் மறுமைக்கும் சுவர்க்கம் உண்டு என்றவாறு. (1)

**காளிங்:—** எ - து அருளுடைமை முதலாக வருகின்ற அதிகாரப் புற நடைக் கருத்தாகிய துறவியற்றுவார் இறையிலே களவு இயற்றுவாரா யின் முத்தியினை நீங்குவார். அதனால் களவு இயற்றாது இத்துறவு இயற்று

---

[1] 'திருடினவனை அரசர்கள் தண்டித்துக் கையைக் காலை அறுப்பார் என்பதாம்' —**கவிராஜ பண்டிதர்.** [2] குறள், 596.

வார்க்குக் கடவுளர் யாவரும் சான்றோராதலால் அதனை நீக்கார்: தாமும் அதற்கு அருளுதவி செய்வார் என்றவாறு.

உயிர்நிலை என்பது முத்தி.

இனி இதன்கீழ்ச் சொன்ன தவத்திற்குத் துணை உறுப்பாகக் கூடா ஒழுக்கம் இன்மையும், களவு மாசு இன்மையும், பொய்யாமையும் முதலிய வேண்டுதலால் இதன் பின்னரே வாய்மையை அறிவிக்கின்றது. (9)

## மேற்கோள்பகுதி :

நச்:—கள்வார்க்குத் தள்ளும், நான்காம் வேற்றுமை வாய்பாடுகளில் பகைப்பொருளுக்கு உதாரணம். (தொல். சொல். 77)

மயிலை:—'பொருட்டு முறையாதியின் இதற்கு இது எனல் பொருளே' என்பதில் ஆதி என்றதனுல் நான்காம் வேற்றுமை ஏனைய வேற்றுமைகள் போல அளவுபட்ட பொருண்மைத்தன்றி வரும். அவையும் இதற்கு இஃது என்பதுபட உரைத்துக்கொள்க என்பதற்கு மேற்கோள். (நன். 297)

# 30. வாய்மை

**பரிமே :**—அஃதாவது மெய்யினது தன்மை. பெரும்பான்மையும் காமமும் பொருளும்பற்றி நிகழ்வதாய பொய்ம்மையை விலக்கலின், இது கூடாவொழுக்கம் கள்ளாமைகளின் பின் வைக்கப்பட்டது.

**மணக் :**—*வாய்மையாவது பொய் சொல்லாமை.*

**பருதி:**—*வாய்மையாவது சத்தியமே சொல்லுக என்றவாறு.*

**291.** வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல் (க)

**உரைப்பகுதி:**

**பரிமே:**—வாய்மை எனப்படுவது யாது எனின் - மெய்ம்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாது என்று வினவின், தீமை யாதொன்றும் இலாத சொலல்-அது பிறிதோருயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதல்.

தீமை யாதொன்றும் இலாத என இயையும், எனப்படுவது என் பது ஊரெனப்படுவது உறையூர் என்றாற்போல நின்றது. இதனான் நிகழ்ந்தது கூறல் என்பது நீக்கப்பட்டது. அதுதானும், தீங்கு பயவா தாயின் மெய்ம்மையாம், பயப்பின் பொய்ம்மையாம் என்பது கருத்து.

**மணக்:**—*பொய்சொல்லாத மெய் என்று சொல்லப்படுவது யாது என்று வினவின், பிறர்க்கு யாதொன்றானும் தீமை பயவாத சொற்களைச் சொல்லுதல் என்றவாறு.*

*வாய்மை யாது என்றார்க்கு, இது கூறப்பட்டது.* (3)

**பருதி:**—*எ - து உண்மையே சொல்வதற்குச் சரி; யாவர்க்கும் தோஷ வார்த்தை சொல்லாமல் இருப்பது என்றவாறு.* (1)

**காளிங் :**— *எ - து வாய்மை என்று சான்றோரால் எடுத்து ஏத்தப் படுவது யாதோ எனில், தமது நாவினால் யாதானும் ஒன்றும் தமக்கும் பிறர்க்கும் ஒரு தீங்கும் இல்லாதனவாகிய தூயசொற்களைச் சொல்லுதல் என்றவாறு.*

*வாய்மை என்பது மெய்ம்மை.* (1)

**மேற்கோள்பகுதி :**

**நச்:**—பொய்யாமைக்கு மேற்கோள். (தொல் - பொருள். 76.)

**இளம்:**—பொய்யாமையாவது தீமை பயக்கும் சொற்களைக் கூறுமை என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 75.)

**292. பொய்ம்மையும் வாய்மைஇடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின். (உ)**

**உரைப்பகுதி**

**பரிமே :**— புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்-பிறர்க்குக் குற்றம் தீர்ந்த நன்மையைப் பயக்குமாயின், பொய்ம்மையும் வாய்மை இடத்த-பொய்மைச் சொற்களும் மெய்ம்மைச் சொற்களின் பாலவாம்.

குற்றந்தீர்ந்த நன்மை அறம்; அதனைப் பயத்தலாவது கேடாதல் சாக்காடாதல் எய்தநின்றதோருயிர் அச்சொற்களின் பொய்ம்மை யானே அதனின்நீங்கி இன்புறுதல். நிகழாதது கூறலும் நன்மை பய வாதாயின் பொய்ம்மையாம். பயப்பின் மெய்ம்மையாம் என்பது கருத்து. இவை இரண்டுபாட்டானும் தீங்கு பயவாத நிகழ்ந்தது கூற லும், நன்மை பயக்கும் நிகழாதது கூறலும் மெய்ம்மை எனவும் நன்மை பயவாத நிகழாதது கூறலும் தீங்கு பயக்கும் நிகழ்ந்தது கூற லும் பொய்ம்மை எனவும் அவற்றது இலக்கணம் கூறப்பட்டது,

**மணக்:**—பொய்யும் மெய்யோடு ஒக்கும்; குற்றம் தீர்ந்த நன்மையைப் பயக்கும் ஆயின் என்றவாறு. (4)

**பரிப் :**—மேற்றன் னெஞ்சறிவது பொய்யற்க வென்றார், அதனைப் பொய்யாது சொல்லுங்கால் தீமை பயப்பனவுமுள; அதனைப் பட்டாங் குக் கூறுது மறைத்துச் சொல்ல நன்மை பயக்குமாயின்.

**பருதி:**—எ - து பொய்யும் மெய் சொல்லுதற்கு ஒக்கும்; நன்மை யைக் கொடுக்குமாகில் என்றவாறு. (2)

**காளிங் :**—* ... ... (9)

**நக்கீரர்:**—நிகழ்ந்த ஒழுக்கம் மறைத்துக் களைந்து படைத்து மொழிந் தமையால் பொய்யுரைத்தவாறும் பிற எனின், பொய்யுரைக்கப்பட்டது ஆகாது. என்னை? பழியும் பாவமும் அதனால் வாராமையின். என்னை? "பொய்மை .........எனின்" என்றார் ஆதலின் குற்றமன்று என்பது. (இறை. 29 )

* இவர் உரை பருதியார் உரை போன்றதே.

**மேற்கோள்பகுதி :**

**குணசா :—** மூன்றும் எழுத்து ஒன்றிவந்த எதுகைக்கு மேற்கோள். (யா. கா. 43)

**யா. வி, உரை :—** மூன்றும் எழுத்து ஒன்றிய எதுகைக்கு மேற்கோள். (சூ. 36)

**நீலகேசி உரை :—** 'உய்யக்கொள்வன் எனச் சொல்லி உள்ளத்தால் கையில் காட்டல் கரவு உளதாம் எனில்' என்பதன் உரையில் ஒருத்தனை அவ்வாறு ரக்ஷிக்கவேண்டினல் எமக்குக் கைகாட்டியும் நிலம் காட்டியும் வஞ்சனையால் சொல்லவேண்டுவதில்லை; என்னை? "பொய்மையும் ......எனின்" என்பது எம்மோத்தாதலால் பிராணி பீடாநிவர்த்தியர்த்தமாகப் பொய் உரைத்தலும் ஆவது ஆதலின் என்பது. நன்மை வேண்டிப் பொய் சொல்லுவதாயின் நன்மை வேண்டிக் கொலை முதலாயினவும் ஆமோ எனில், நன்மையாவது சீவன்கட்குப் பீடை புகுதாமல் வர்த்தித்தலாதலின் கொலைமுதலாயின ஜீவன்கட்குப் பீடாநிமித்தமாதலின் ஆகாது என்பது. (326)

**ஒப்புமைப்பகுதி:**

"உம்மையின் மறுமை தன்னில் உறுபயன் இரண்டும் பார்க்கின்
இம்மையில் விளங்கும் யார்க்கும் அவரவர் இயற்கையாலே
மெய்ம்மையே ஒருவர்க்குற்ற விபத்தினை மீட்குமாகில்
பொய்ம்மையும் மெய்ம்மை போலப் புண்ணியம் பயக்குமாதோ."

—வில்லி. பதினைந்தாம். 24.

**293. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**தன்னெஞ்சே தன்னைச் சுடும். (ந.)**

**உரைப்பகுதி:**

**பரிமே :—** தன் நெஞ்சு அறிவது பொய்யற்க - ஒருவன் தன் நெஞ்சு அறிவதொன்றனைப் பிறர் அறிந்திலர் என்று பொய்யாது ஒழிக. பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும்-பொய்த்தானாயின் அதனை அறிந்த தன் நெஞ்சே அப்பாவத்திற்குக் கரியாய் நின்று தன்னை அதன் பயனாய்-துன்பத்தை எய்துவிக்கும்.

நெஞ்சு கரியாதல் [1] "கண்டவர் இல்லென வுலகத்துள் உணராதார், தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளுள், நெஞ்சறிந்த கொடியவை மறைப்பவு மறையாவாம், நெஞ்சத்திற் குறுகிய கரி இல்லையாகலின்" என்பதனுனும் அறிக. பொய் மறையாமையின், அது கூறலாகாது என்பது இதனல் கூறப்பட்டது.

மணக் :— தன் நெஞ்சு அறிந்ததனைப் பொய்யாது சொல்லுக பொய்ப்பனுயின், தன் நெஞ்சுதானே தன்னை ஒறுக்கும் என்றவாறு.

[2] சுடுதலாவது அதனல் பிறர்க்கு உளதாகும் தீமையைக் கண்டு 'என்செய்தோம் யாம்' என்று வருந்துவித்தல். இது பொய்யாமை வேண்டும் என்றது. (1)

பருதி :— எ - து மனமறிந்த பொய்யைச் சொல்லவேண்டாம் சொன்னுணுகில், ஆத்மா விதனப்படும்; அது எது எனில், வாக்கு என்கிற புலன் பொய்சொல்ல நாம் நரகத்துக்கு ஏதுவாகிறோம் என்று, நின்ற புலன்கள் விதனப்படும் என்றவாறு. (9)

காளிங் :— எ - து வாய்மையானது இத்துணைப் பெருமையாதலான் தான் சொல்லுவது ஒன்றினைப் பிறர் அறியாது வாய்மையாகக் கருதினரேனும் மற்றிது பெரிதும் குற்றமாதலால் தனது நெஞ்சு அறிவதாக எஞ்ஞான்றும் பொய்யற்க; என்னை எனின், அவ்வாறு பொய்த்தபின் உள்ளறிகருவியாகிய தன்னெஞ்சுதானே தன்னைச்சுடும் என்றவாறு. (4)

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— பொய்த்தபின் - பொய்த்தானுயின் எனச் செயின் என் வினைஎச்சவாய்பாடாய் முடிந்ததால் [3] 'பின் முன் கால் கடை' என்னும் சூத்திரத்திற்கேற்பப் பின் என்பதோர் வாய்பாடு பெற்ற வினையெச்சம் என்க.

## மேற்கோள்பகுதி :

மயிலை :— 'கேட்குநர்போலவும்' என்னும் சூத்திரத்தில் இயற்றுனபோலவும் என்பதற்கு மேற்கோள். (408)

சங்கர :— இவரும் அதற்கே எடுத்துக்காட்டுவார். (நன். 409)

1 கலி 125: 1 - 4. 2 'சுடுதலாவது அசத்தியம்சொன்ன தோஷத்தினுல் நரக துக்கங்களை அநுபவிக்கிறபோது நெஞ்சு சுடநின்று அநுபவிக்கும்' —கவிராஜபண்டிதர்.
3 தொல். சொல். 226

ஒப்புமைப்பகுதி :

"அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க் கில்லை." —குறுந். 184.

" கண்டவர் இல்லென உலகத்துள் உணராதார்
தங்காது தகைவின்றித் தாம்செய்யும் வினைகளுள்
நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினும் மறையாவாம்
நெஞ்சத்துக் குறுகிய கரிஇல்லை யாகலின். " —கலி. 125; 1-4

" தன்னைத் தன்நெஞ்சம் கரியாகத் தான் அடக்கில்
பின்னைத்தான் எய்தா அறனில்லை. " —அறநெறி. 207

**294. உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன். (சு)**

உரைப்பகுதி :

**பரிமே :—** உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் - ஒருவன் தன் உள்ளத்திற்கேற்பப் பொய்கூறாது ஒழுகுவானாயின்; உலகத்தார் உள்ளத்துளெல்லாம் உளன் - அவன் உயர்ந்தோர் உள்ளத்தின்கண் எல்லாம் உளனாம்.

உள்ளத்தால் என்பது வேற்றுமை மயக்கம். பொய் கூறாது ஒழுகுதலாவது மெய் கூறி ஒழுகுதல், அவனது அறத்ினது அருமை நோக்கி உயர்ந்தோர் எப்பொழுதும் அவனையே நினைப்பர் என்பதாம். இதனான் இம்மைப் பயன் கூறப்பட்டது.

**மணக் :—** *தன் நெஞ்சினால் பொய்யை நினையாது ஒழுகுவனாயின்; உலகத்தார் நெஞ்சினுள் எல்லாம் உளவனாவன் என்றவாறு.*

*இது பொய்யை நினையாதாரை எல்லாரும் போற்றுவர் என்றது.* (5)

**பருதி :—** *எ - து மனம் பொருந்த மெய் சொல்லுவானாகில் சர்வேசுவரனுக்கு நிகராகையால் உலகத்தார் ஆத்துமாவில் இருப்பன் என்றவாறு.* (4)

**காளிங் :—** *எ - து ஒருவன் தனது வாக்கினால் சொல்லுஞ் சொல்லானது மனத்தினும் பிழையர்மையே வாய்மைக்கு இலக்ஷணமாகலால், மற்றங்ஙனம் உரைப்பதனை உள்ளத்தால் பிழையாது உரைத்து ஒழுகும் எனின், மற்றிவன் உலகத்துச் சான்றோராகிய உயர்ந்தோர் உள்ளத்துளெலாம் உளன் எனவே இவரது அருட்குறிப்பு எஞ்ஞான்றும் உடையது என்றவாறு.* (2)

295. மனத்தொடு வாய்மை மொழியின் *தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை. (ரு)

## உரைப்பகுதி :

**பரிமே:—** மனத்தொடு வாய்மை மொழியின் - ஒருவன் தன் மனத்தொடு பொருந்த வாய்மையைச் சொல்வானுயின்; தவத்தொடு தானம் செய்வாரின் தலை - அவன் தவமும் தானமும் ஒருங்கு செய் வாரினும் சிறப்பு உடையன்.

மனத்தொடு பொருந்துதல் மனத்திற்கு ஏறுதல். புறமாகிய மெய்யால் செய்யும் அவற்றினும் அகமாகிய மனமொழிகளால் செய்யு மது பயனுடைத்து என்பதாம்.

**மணக் :—** மனத்தோடே கூட மெய் சொல்லுவனுயின், தவத்தோடே கூடத் தானஞ்செய்வாரில் தலையாவான் என்றவாறு.

இஃது எல்லா நன்மையும் பயக்கும் என்றது. (6)

**பருதி:—** எ - து மனமும் வாக்கும் கூடிச் சத்தியமே சொல்வா னுகில் தனத்தாலே தசதானம் பண்ணுவாரிலும் பெரியன் என்றவாறு. (3)

**காளிங்:—** எ - து மற்று இங்ஙனம் மனத்தோடு கூடிய வாய்மை யானது சான்றோர் செய்யுந் தவத்தினும் தானத்தினும் சாலத் தலைமைப் பாடு உடைத்து என்றவாறு. (3)

## மேற்கோள்பகுதி :

**நச் :—** மனத்தொடு வாய்மை மொழியின் : இதில் ஒடு ஆன் ஆயிற்று. (தொல். சொல். 75.)

**மயிலை :—** மூன்றும் வேற்றுமை ஒடு உருபிற்கு மேற்கோள். (நன். 296.)

**சங்கர :—** மனத்தொடு வாய்மை என்ற குறளில் ஒடு உருபு உடன் நிகழ்வதாக்கின். ஏற்புழிக்கோடலான் இவ் உருபிற்கு உடன் நிகழ்ச்சிப் பொருள் ஒன்றுமே கொள்க. (நன். 297.)

---

* 'தனத்தொடு ' என்பது பருதியார் பாடம்.

296. பொய்யாமை அன்ன புகழில்லை [1]எய்யாமை
எல்லா அறமும் தரும். (சு)

**உரைப்பகுதி:**

**பரிமே :—** பொய்யாமை அன்ன புகழ் இல்லை - ஒருவனுக்கு இம்மைக்குப் பொய்யாமையை ஒத்த புகழ்க்காரணம் இல்லை; எய்யாமை எல்லா அறமும் தரும் - மறுமைக்கு மெய்வருந்தாமல் அவனுக்கு எல்லா அறங்களையும் தானே கொடுக்கும்.

புகழ் ஈண்டு ஆகுபெயர். இல்லறத்திற்குப் பொருள்கூட்டல் முதலியவற்றானும் துறவறத்திற்கு உண்ணாமை முதலியவற்றானும் வருந்தல் வேண்டுமன்றே, அவ்வருத்தங்கள் புகுதாமல் அவ் இரு வகைப் பயனையும் தானே தரும் என்பார், எய்யாமை எல்லா அறமும் தரும் என்றார்.

**மணக் :—** *பொய்யாமையை உடையன் என்பதனோடு ஒத்தபுகழ் வேறொன்று இல்லை; பொய்யாமையானது அவன் அறியாமல் தானே எல்லா அறங்களையும் கொடுக்கும் ஆதலான் என்றவாறு.* (7)

**பரிப்:—** *இது மேற்றானத்தினும் தவத்தினும் நன்றென்றார், அஃதா மாறு என்னை யென்றார்க்கு, இஃதொன்றனையுஞ் செய்ய மேலனவெல் லாம் முயலாமற்றானே யெய்தும் என்பது கூறப்பெற்றது.*

**பருதி:—** *எ - து சத்தியத்தைப் போலே புகழில்லை; இந்த நிலைமை யிலே நிற்பானாகில் சிவபுண்ணியம், [2] பசுபுண்ணியம் எல்லாம் உண்டாம் என்றவாறு.* (5)

**காளிங்:—** *எ - து ஒருவர்க்கு வாய்மையை ஒத்ததோர் வன்புகழில்லை இனி மற்று அதனினும் அரியது ஒன்று உண்டாவது யாதோ எனில், யான் வாய்மைக்குணமுடையேன் என்று மதித்திராமையும் உடையனாயின்; மற்று அது தான் வருந்தாதிருக்க எல்லா அறத்தின் பயனையும் தரும் என்றவாறு.*

*எய்யாமை என்பது முயலாமை; அறியாமை என்பாரும் உளர்.* (5)

**ஒப்புமைப்பகுதி:**

"வாய்மொழியாற் புகழ் நிறைந்த நன்மாந்தர்" —மதுரைக் 19-20.

"வாய்மையின் வழாஅது மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவதும் உண்டோ எய்தா அரும் பொருள்."
—சிலப். காடு காண். 158-159.

---

1 'பொய்யாமை' என்பது மணக்குடவர் பரிப்பெருமாள் பாடம். 2 'தபசு' புண்ணியம் எனவும் பாடம்.

**297. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. (எ)**

**உரைப்பகுதி :**

**பரிமே :—** பொய்யாமை பொய்யாமை ஆற்றின் - ஒருவன் பொய்யாமையே பொய்யாமையே செய்ய வல்லனுயின்; பிற அறம் செய்யாமை செய்யாமை நன்று-அவன் பிறஅறங்களைச் செய்யாமையே செய்யாமையே நன்று.

அடுக்கு இரண்டனுள் முதலது இடைவிடாமைமேற்று; ஏனையது துணிவின்மேற்று. பல அறங்களையும் மேற்கொண்டு செய்தற்கு அருமையால் சில தவறின் குற்றப்படுதலின், அவை எல்லாவற்றின் பயனையும் தானே தரவற்றுய இதனையே மேற்கொண்டு தவருமற்செய்தல் நன்று என்பார், செய்யாமை செய்யாமை நன்றென்றுர். இதனை இவ்வாறன்றிப் பொய்யாமையைப் பொய்யாமல் செய்யின் பிற அறஞ் செய்கை நன்று எனப் பொழிப்பாக்கிப் பொய்கூறின் பிறஅறஞ் செய்கை நன்றுகாது என்பது அதனுற்போந்த பொருளாக்கி உரைப் பாரும் உளர். பிறஅறங்களெல்லாம் தரும்பயனைத் தானே தரும் ஆற்றலுடைத்து என மறுமைப்பயனது மிகுதி இவை மூன்று பாட்டானும் கூறப்பட்டது.

**மணக்:—** *பொய்யாமையைப் பொய்யாமல் செலுத்துவனுயின், பிற அறங்களைச் செய்தல் நன்றும்; அல்லது தீதாம் என்றவாறு.* (8)

**பரிப்:—** *இது பொய்பட ஒழுகுவனுயின் தவம் செய்தாலும் பயன் படாது என்றது.*

**பருதி:—** *எ - து பொய்யாமையாகிய சத்தியத்தை மறவாமல் நடத்துவானுகில், தன்மம் செய்யாமல் இருந்தாலும் நன்று என்றவாறு.* (7)

**காளிங்:—** *எ - து பொய்யாமையாகிய வாய்மையைச் செலுத்தும் இடத்து இடையிடையே பொய்புகுந்து வழங்காமல் நடத்தவல்லனுகில், அதுவே அறம். இதற்கு வேருகிய பாவங்களை மேற்கொண்டு செய்யாமையாகிய-தவிர்தலை உடைய செயல்களே நன்று என்றவாறு.*

*செய்யாமை செய்யாமை என்றது ஒருவன் அறம் செய்யக் கருதும் இடத்துப் பொய்யுரையாகிய பாவங்களையும் தவிருவான் என்பது பொருள் ஆயிற்று என அறிக என்றவாறு.*

*இப்படியன்றி இடையே பொய்புகின் அறமும் நன்றுகாது என்றவாறு.* (7)

### உரைவிளக்கப்பகுதி :

நுண் :— இதன் பக்ஷாந்தரத்துள் 'செய்யாமை செய்யாமை'க்குச் 'செய்கை' பொருள் என்றார்; அது தண்டியலங்காரத்துள் இன்மையதபாவத்திற்கு உதாரணம் காட்டிய 'வாராமை யில்லை வயவேந்தன்' என்பது 'வருவன் வயவேந்தன்' எனப்பொருள் பட்டதுபோல என்க.

### மேற்கோள்பகுதி :

காரிரத்ன:—பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற. 251)

சுவாமி:—'அடுக்கல்லவையும் அடுக்கவைபோல் வரும், அவ் அடுக்கு அணியினுள் அளவில்லை என்க' என்றதற்கு மேற்கோள். (இ. கொ. 121)

சுப்பிரமணிய:—தெளிவு என்னும் குணவலங்காரத்தில் கௌடர் நெறிக்கு மேற்கோள். (தண்டி. 17. உரை.)

### மேற்கோள்பகுதி :

''பொய்கடிந்து அறத்தின் வாழ்வார்.'' —பெரிய. திருநீல. 2.

## 298. புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை வாய்மையால் காணப் படும். (அ)

### உரைப்பகுதி :

பரிமே :— புறம் தூய்மை நீரான் அமையும் - ஒருவனுக்கு உடம்பு தூய்தாந்தன்மை நீரானே உண்டாம்; அகம் தூய்மை வாய்மையான் காணப்படும் - அதுபோல மனந்தூய்தாந்தன்மை வாய்மையான் உண்டாம்.

காணப்படுவது உள்ளதாகலின், உண்டாம் என்று உரைக்கப்பட்டது. உடம்பு தூய்தாதல் வாலாமை நீங்குதல். மனம்தூய்தாதல் மெய்யுணர்தல். புறந்தூய்மைக்கு நீரல்லது காரணமில்லாதாற்போல, அகந்தூய்மைக்கு வாய்மையல்லது காரணமில்லை என்றவாறாயிற்று. இதனானே துறந்தார்க்கு இரண்டு தூய்மையும் வேண்டும் என்பதூஉம் பெற்றாம்.

மணக் :— உடம்பு தூயது ஆதல் நீரினாலே அமைந்து விடும்; மனத்தின் தூய்மை மெய்சொல்லுதலினாலே அறியப்படும் என்றவாறு. (9)

பரிப்:—இது மேற் செய்த தவமும் பயன்படாது என்றார் ; அதற்குக் காரணம் என்னை என்றார்க்கு, 'அவர் மனந்தூயரன்மையானே' என்றது.

பருதி:— எ - து உடம்பின் அழுக்கைச் சலம் சுத்தம் பண்ணும்; மனத்தில் சுத்தம் சத்தியவாக்கிய சுத்தம் என்று காட்டும் என்றவாறு. (8)

காளிங்:— எ - து ஒருவன் தனது புறமாகிய உடல் தூய்மை நீரினாலே தூய்மையுறும். மற்று அகத்தூய்மையானது அவ் அகமாகிய உள்ளத்தினின்றும் புலப்படுகின்ற சொல் அறநெறி வழுவாமையாகிய வாய்மையான் அறியப்படும் என்றவாறு. (6)

## ஒப்புமைப்பகுதி:

"வாய்மை யென்னும் ஈதன்றி வையகம்
தூய்மையென்னும் ஒன்றுண்மை சொல்லுமோ ?" —கம்ப.

**299. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. (௯)**

## உரைப்பகுதி :

**பரிமே** :—எல்லா விளக்கும் விளக்கு அல்ல - புறத்திருள் கடியும் உலகத்தார் விளக்குகளெல்லாம் விளக்காகா; சான்றோர்க்கு விளக்கு பொய்யா விளக்கே - துறவான் அமைந்தார்க்கு விளக்காவது மனத்திருள் கடியும் பொய்யாமையாகிய விளக்கே.

உலகத்தார் விளக்காவன ஞாயிறு, திங்கள், தீ என்பன. இவற்றிற்குப் போகாதஇருள் போகலின், பொய்யாவிளக்கே விளக்கு என்றார். அவ்விருளாவது அறியாமை. பொய்யாத விளக்கு என்பது குறைந்து நின்றது. பொய்கூறாமையாகிய விளக்கு என்றவாறு. இனி இதற்குக் கல்வி முதலியவற்றான் வரும் விளக்கமெல்லாம் விளக்கமல்ல, அமைந்தார்க்கு விளக்கமாவது பொய்யாமையான் வரும் விளக்கமே என்று உரைப்பாரும் உளர்.

மணக்:— சான்றோர்க்கு எல்லா அறத்தினாலும் உண்டான ஒளியும் ஒளி அல்ல; பொய்யாமையால் உண்டான ஒளியே ஒளியாகும் என்றவாறு.

இது, பொய்யாவிளக்குச் சான்றோர்க்கு இன்றியமையாது என்று கூறிற்று. (10)

பருதி:— எ - து எல்லா விளக்காவன தானம், தன்மம், கல்வி ஞானம், பூசை என்பன. இந்த விளக்கிலும் பொய் சொல்லாததே விளக்கு என்றவாறு. (6)

காளிங் :—[1] ... ... ... ... (8)

**மேற்கோள்பகுதி :**

குணசாகரர்:... இடையின எதுகைக்கு மேற்கோள். (யா. கா. 437)

யா. வி. உரை:— ஷை (சூ. 37.)

நச்:— ஷை (தொல். செய். 94.)

**ஒப்புமைப்பகுதி :**

''புகழ்செய்யும் பொய்யா விளக்கம். —நான்மணி. 22.

## 300. யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும் வாய்மையின் நல்ல பிற. (ம)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** யாம் மெய்யாக் கண்டவற்றுள் - யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள்; எனைத்தொன்றும் வாய்மையின் நல்ல பிற இல்லை. யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிற அறங்கள் இல்லை.

மெய்யுணர்த்துவனவற்றை மெய் என்றார். அவையாவன தங்கண் மயக்கமின்மையின் பொருள்களை உள்ளவாறு உணரவல்லராய்க் காம வெகுளிகளின்மையின் அவற்றை உணர்ந்தவாறே உரைக்கவும் வல்லராய இறைவர் அருளான் உலகத்தார் உறுதி எய்துதற்பொருட்டுக் கூறிய ஆகமங்கள்; அவை எல்லாவற்றினும் இஃதொப்ப முடிந்தது என்பதாம். இவை மூன்று பாட்டானும் இவ்அறத்தினது தலைமை கூறப்பட்டது.

மணக்:—*யாம் மெய்யாகக் கண்டவற்றுள் மெய் சொல்லுதல் போல நன்றாய் இருப்பன வேறு யாதொன்றும் இல்லை என்றவாறு.*

*இஃது எல்லா அறமும் இதனோடு ஒவ்வாது என்று அதன் தலைமை கூறிற்று என்றது.* (2)

---

1 இவர் உரைப்பகுதி சிதைந்துள்ளது.

பருதி:— எ - து ஆத்மாவைச் செனனத்திலே தள்ளாமல் திருவடியிலே சேர்ப்பது சத்தியவாக்கியம் அன்றி, வேறொன்றும் கண்டிலோம். அசத்தியம் சொன்ன தன்மபுத்திரன் நரகங்கண்டான். சத்தியம் சொன்ன அரிச்சந்திரன் ஸ்ரீ பரமேசுவரன் பாதம் கண்டு சிவலோகம் சேர்ந்தான் என்றவாறு. (10)

காளிங்:—[1] ... .... .... (10)

**மேற்கோள்பகுதி :**

அடியார்க்:—[2] ... ... ...(சிலப். நாடுகாண். 158-9.)

[1] இவர் உரை பருதியார் உரை போன்றதே. [2] 260ம் குறள் மேற்கோள் பகுதியில் காண்க.

# 31. வெகுளாமை.

**பரிமே :—** அஃதாவது சினத்தைச் செய்தற்குக் காரணம் ஒருவன்மாட்டு உளதாய இடத்தும் அதனைச் செய்யாமை. இது பொய்ம்மைபற்றி நிகழ்வதாய வெகுளியை விலக்கலின், வாய்மையின் பின் வைக்கப்பட்டது.

**மணக்:—** *வெகுளாமையாவது வெகுளுதற்குக் காரணம் உள்ள இடத்தும், வெகுளாராதல்.*

**பரிப்:—** *வெகுளற்குக் காரணம் உள்வழியும் வெகுளாராதல்: மேற் காம்ப் பகுதி கூறினர் இது வெகுளிப் பகுதியாதலால் அவற்றின் பிற் கூறப்பட்டது.*

**பருதி:—** *வெகுளாமையாவது, வாக்கினுல் பொய் சொல்லாதது போலே, மனத்தினுல் குற்றமாகிய கோபத்தையும் விடுக என்றவாறு.*

**301. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்**
***காக்கின்என் காவாக்கால் என். (க)**

**உரைப்பகுதி:**

**பரிமே:—** சினம் செல் இடத்துக் காப்பான் காப்பான் - தன் சினம் பலிக்கும் இடத்து அதனை எழாமல் தடுப்பானே அருளால் தடுப்பானுவான். அல்இடத்துக் காக்கின் என் காவாக்கால் என் - ஏனைப் பலியாத இடத்து அதனைத் தடுத்தால் ஏன்? தடாது ஒழிந்தால் என்?

**செல்லிடம்** அல்லிடம் என்றது தவத்தால் தன்னின்மெலியாரையும் வலியாரையும் வலியார்மேல் காவாவழியும் அதனுன் அவர்க்கு வருவதோர் தீங்கின்மையில் காத்தவழியும் அறனில்லை என்பார், காக்கின் என் காவாக்கால் என் என்ருர். இதனுன் வெகுளாமைக்கு இடம் கூறப்பட்டது.

**மணக் :—** *தனக்கு இயலுமிடத்தே வெகுளாதவன் வெகுளாதவனுவான்; இயலாவிடத்தில் அதனைத் தவிர்ந்ததனுலும் பயனில்லை; தவிராததனுலும் பயனில்லை என்றவாறு.*

*இது வெகுளாமையாவது வலியவன் வெகுளாமை என்றது.* (2)

---

* 'காக்கிலென்' எனவும் பாடம்,

பருதி :—எ - து தனக்குக் கை செல்லுமிடத்தில் சினங்காட்டாது ஒழிக; தனக்குக் கை செல்லா இடத்திலே சினம் காட்டினாலும் காட்டா விடினும் பிரயோசனம் இல்லை என்றவாறு. (3)

காளிங் :—[1] ... ... ... (3)

**ஒப்புமைப்பகுதி:**

"....சுருக்குக செல்லாவிடத்துச் சினம்" —நான்மணி: 87.

## 302. செல்லா இடத்துச் சினம்தீது செல்லிடத்தும்
## இல்அதனின் தீய பிற. (உ)

**உரைப்பகுதி :**

பரிமே :— சினம் செல்லா இடத்துத் தீது - ஒருவன் வெகுளி தன்னின் வலியார்மேலெழின் தனக்கே தீதாம், செல் இடத்தும் அதனின் தீய பிற இல் - மற்றையெளியார்மேலெழினும் அதனின் தீயன பிற இல்லை.

செல்லா இடத்துச் சினம் பயப்பது இம்மைக்கண் அவரான்வரும் ஏதமே, ஏனையது இம்மைக்கண் பழியும் மறுமைக்கண் பாவமும் பயத்தலின், அதனில் தீயன பிற இல்லை என்றார். ஓரிடத்தும் ஆகாது என்பதாம்.

மணக் :— இயலாவிடத்துச் சினந்தீது; இயலுமிடத்தினும் அதில் தீதாக இருப்பன பிற இல்லை என்றவாறு. (4)

பரிப்:— இது இயலாத இடத்து இம்மையிலே தீதாயினும் இயலுமிடத்து மறுமையிலே தீதாம் ஆதலாள் எவ்விடத்தினும் தவிர வேண்டும் என்றது.

பருதி:—எ - து தனக்குச் செல்லா இடத்தும் சினம் பொல்லாது. தனக்குச் செல்கிற இடத்தும் சினம் பொல்லாது என்றவாறு. (2)

காளிங் :—[2] .... .... ... (2)

## 303. மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
## பிறத்தல் அதனான் வரும். (ங)

**உரைப்பகுதி:**

பரிமே :— யார்மாட்டும் வெகுளியை மறத்தல் - யாவர்மாட்டும் வெகுளியை ஒழிக; தீய பிறத்தல் அதனான் வரும்-ஒருவர்க்குத் தீயன எல்லாம் உளவாதல் அதனான்வரும் ஆகலான்.

---

1, 2 இவர் உரை பருதியார் உரை போன்றதே.

வலியார், ஒப்பார், எளியார் என்னும் மூவர்மாட்டும் ஆகாமையின் யார்மாட்டும் என்றும், மனத்தால் துறந்தார்க்கு ஆகாதனவாகிய தீச் சிந்தைகள் எல்லாவற்றையும் பிறப்பித்தலின் தீயபிறத்தல் அதனான் வரும் என்றும் கூறினர்.

**மணக்:**— *வெகுளியை யார்மாட்டும் செய்தலை மறக்க; தீயன பிறத்தல் அவ் வெகுளியானே வருமாதலான் என்றவாறு.*

*இது வெகுளாமை வேண்டும் என்றது.* (1)

**பருதி** :—*எ - து யாரிடத்திலும் கோபத்தை விடுக; விடாது ஒழியில் பொல்லாங்கு கோபமுன்னிலையாக வரும் என்றவாறு.* (8)

**காளிங்** :—*யாவர்மாட்டும் ஒருவன் வெகுளியை மறத்தலே காரியமாவது; என்னை எனின் தனக்கு எல்லாத் தீயனவும் தோன்றுதல் மற்று அவ் வெகுளியானே வரும் ஆதலால் என்றவாறு.* (7)

**ஒப்புமைப்பகுதி :**

"ஆதலால் வெகுளியே பகை நமக்கெலாம்
தீதெலாம் வினையினுல் தீக்கதிப் பெயும்
காதலால் தம்மையும் ஒருகணத்துளே
ஏதிலார் ஆக்கும் இ·.து இகழத்தக்கதே" —மேரு. 217

**304. நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.** (௪)

**உரைப்பகுதி :**

**பரிமே:**—நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் - துறந்தார்க்கு அருளானுளவாய முகத்தின்கண் நகையையும் மனத்தின்கண் உவகையையும் கொன்றுகொண்டு எழுகின்ற சினமேயல்லது; பிற பகையும் உளவோ - அதனின் பிறவாய பகைகளும் உளவோ இல்லை.

துறவால் புறப்பகை இலராயினும் உட்பகையாய் நின்று அருள் முதலிய நட்பினையும் பிரித்துப் பிறவித் துன்பமும் எய்துவித்தலான், அவர்க்குச் சினத்தின்மிக்க பகை இல்லையாயிற்று. இவை மூன்றுபாட்டானும் வெகுளியது தீங்கு கூறப்பட்டது.

மணக் :—நகுதலேயும் மகிழ்தலேயும் கெடுக்கின்ற சினத்தைப்போல, பகையாய் இருப்பனவும் வேறும் சில உளவோ; என்றவாறு.

இஃது இன்பக்கேடு வரும் என்றது. (8)

பருதி :—எ - து முகத்தில் சிரிப்பும் மனத்தில் களிப்பும் கொல்லுகின்ற சினத்திலும், தனக்கு வேறே பகைவேணுமோ? சினமே அமையும் என்றவாறு. (7

காளிங்:—நகையாகிய முகமலர்ச்சியும் உவகையாகிய மன மகிழ்ச்சியும் இவை இரண்டினேயும் கொன்றுவிடுவதாகிய சினத்தைப்போல வேறு சில பகையும் உளவோ? எனவே இதனைப்போல இவ்வுலகத்துப் பெருங்கேடு செய்யவல்லனவாய் இருப்பன சில பகையாவை இல என்று பொருளாயிற்று என்றவாறு. (6)

## மேற்கோள்பகுதி :

பெருந் :—நிகழ்காலத்து அடைமொழிக்கு மேற்கோள் (வீரசோ.) 164, உரை.)

**305. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம். (ரு)**

## உரைப்பகுதி :

பரிமே :—தன்னைத் தான் காக்கின் சினம் காக்க-தன்னைத்தான் துன்பம் எய்தாமல் காக்க நினைத்தானாயின், தன்மனத்துச் சினம்வாராமல் காக்க, காவாக்கால் சினம் தன்னையே கொல்லும் - காவானாயின் அச்சினம் தன்னையே கெடுக்குந் கடுந்துன்பங்களை எய்துவிக்கும்.

[1]வேண்டிய வேண்டியாங் கெய்தற் பயத்ததாய தவத்தைப் பிறர் மேல் சாபம் விடுதற்காக இழந்து அத்தவத்துன்பத்தோடு பழைய பிறவித் துன்பமும் ஒருங்கு எய்துதலின், தன்னையே கொல்லும் என்றார். "[2]கொல்லச் சுரப்பதாம் கீழ்," என்புழிப்போலக் கொலைச்சொல் ஈண்டுத் துன்பமிகுதி உணர்த்தி நின்றது.

மணக்:—ஒருவன் தன்னைத் தான் காக்கவேண்டுவனாயின், சினம் [3]தோன்றாமல் காக்க; காவானாயின், சினம் தன்னையே கொல்லும் என்றவாறு.

---

[1] குறள் 265, [2] நாலடி 279, [3] தோற்றாமல் பரிப்: பாடம்.

*இஃது உயிர்க்குக் கேடு வரும் என்றது.* (6)

**பருதி :**—*எ - தீ தன் ஆத்மாமை ரட்சிக்கவேணுமாகில், சினம் காப்பான்; அல்லது, தன்னைச் சினங்கொல்லும் என்றவாறு.* (4)

***காளிங் :**— ... .... .... (4)

**306. சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்**
**ஏமப் புணையைச் சுடும்.** (சா)

**உரைப்பகுதி :**

**பரிமே:**—சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி - சினம் என்னும் நெருப்பு, இனம் என்னும் ஏமப்புணையைச் சுடும் - தனக்கு இடமானவரையேயன்றி அவர்க்கு இனமாகிய ஏமப்புணையையும் சுடும்.

சேர்ந்தாரைக்கொல்லி என்பது ஏதுப்பெயர்; தான் சேர்ந்த இடத்தைக் கொல்லுந்தொழிலது என்றவாறு. சேர்ந்தாரை என உயர்திணைப் பன்மைமேல் வைத்து ஏனை நான்குபாலும் தம்கருத்தோடு கூடிய, பொருளாற்றலால்கொண்டார்; ஈண்டு உருவகஞ் செய்கின்றது துறந்தார் சினத்தையே ஆகலின், சினமென்னும் நெருப்பு என்ற விதப்பு, உலகத்து நெருப்புச் சுடுவது தான் சேர்ந்த இடத்தையே, இந் நெருப்புச் சேராத இடத்தையும் சுடுமென்னும் வேற்றுமை தோன்ற நின்றது, ஈண்டு இனம் என்றது முற்றத் துறந்து தவஞானங்களால் பெரியராய்க் கேட்டார்க்கு உறுதிமொழிகளை இனியவாகச் சொல்லுவாரை. உருவகநோக்கிச் சுடும் என்னுந் தொழில் கொடுத்தாராயினும் அகற்றும் என்பது பொருளாகக் கொள்க. ஏமப்புணை ஏமத்தை உபதேசிக்கும் புணை, இனம் என்னும் ஏமப்புணை என்ற ஏகதேசவுருவகத்தால் பிறவிக்கடலுள் அழுந்தாமல் வீடு என்னுங் கரையேற்றுகின்ற என வருவித்துரைக்க. எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. தன்னையும் வீழ்த்து எடுப்பாரையும் அகற்றும் என்பதாம்.

**மணக்:**—*சினம் என்று சொல்லப்படுகின்ற நெருப்பு தான் துன்பக் கடலில் அழுந்தாமல் தன்னைக் கரையேற விடுகின்ற நட்டோராகிய புணையைச் சுடும் என்றவாறு.*

* இவ் [illegible]

சேர்ந்தாரைக் கொல்லி-நெருப்பு; இது காரணக்குறி, இது சினம் தன்னை அடுத்தாரைக் கொல்லும் என்றது. (6)

பருதி:— எ - து தனக்குச் சேர்ந்தபேரை அகலப்பண்ணுகின்ற கோபம் என்னும் நெருப்பு, தனக்கு உறவானாரைக் கொல்லும் என்றவாறு. (6)

காளிங்:— எ - து உலகத்துச் சான்றோரால் கொடியனவற்றுள் மிகவுங் கொடியது இது என்று எடுத்துச் சொல்லப்பட்ட அடைந்தாரைக் கொல்லியாகிய கொடுந்தீயானது மற்று இத்துறவோர்க்குத் துணையாகிய அருளும் பொறையும் ஆசாரமும் முதலிய சேமமாகிய தெப்பத்தைச்சுட்டு விடும் என்றவாறு. (9)

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— சேர்ந்தாரைக் கொல்லி என்பது, தான் சேர்ந்த இடத்தைக் கொல்லும் தொழிலது என விரியும். வடநூலாரும் தீக்கு ''ஆசிருதவரி'' என்று ஏதுப் பெயர் கூறுவர்.

## மேற்கோள்பகுதி :

காரிரத்ன:—மாட்டேறில்லா உருவகத்திற்கு மேற்கோள். (மாற. 120. உரை.)

## ஒப்புமைப்பகுதி:

''செவ்வியனுய்ச் செற்றுச் சினங்கடிந்து வாழ்வினிதே'' —இனியவை, 37.

''மூங்கிலிற் பிறந்த முழங்குதீ மூங்கில்
முதலற முறுக்குமாபோலத்
தாங்கரும் சினத்தீ தன்னுளே பிறந்து
தன்னுறு கிளையெலாம் தகிக்கும்'' —கம்ப.

**307. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு**
***நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. (எ)**

## உரைப்பகுதி :

பரிமே:—சினத்தைப் பொருள் என்று கொண்டவன் கேடு - சினத்தைத் தன்னுற்றல் உணர்த்துவதோர் குணம் என்று தன்கண் கொண்டவன் அவ்வாற்றல் இழத்தல், நிலத்து அறைந்தான்

* 'நிலந்தெறிந்தான்' 'நிலத்தெறிந்தான்' எனவும் மணக். பரிப். பாடம்.

கை பிழையாதற்று - நிலத்தின்கண் அறைந்தவன் கை அந்நிலத்தை உறுதல் தப்பாதவாறுபோலத் தப்பாது.

வைசேடிகர் பொருள், பண்பு, தொழில், சாதி, விசேடம், இயைபு என்பனவற்றை அறுவகைப் பொருள் என்றாற்போல, ஈண்டுக் குணம் பொருள் எனப்பட்டது. பிழையாததற்று என்பது குறைந்து நின்றது. இவை மூன்று பாட்டானும் வெகுண்டார்க்கு வரும் தீங்கு கூறப் பட்டது.

**மணக் :—** *சினத்தைப் பொருளாகக் கொண்டவன் கெடுதல், நிலத் தெறிந்தவன் கை தப்பாமல் பட்டதுபோலும் என்றவாறு.*

*இது பொருட்கேடு வரும் என்றது.* (7)

**பருதி :—** *எ - து கோபத்தைப் பொருளென்று கொண்டார்க்குக் கேடுவராது தப்பாது; அது எப்படி என்றால், நிலத்தில் அடித்த கை தப்பாதுபோல் என்றவாறு.* (5)

**காளிங் :—** *எ - து இம்மை மறுமை இரண்டினையும் கெடுப்பதாகிய சினத்தைப் பொருளெனவே கைக்கொண்டவனது கேடானது சிறிதும் தப்பாது என்பது எங்ஙனமெனில் நிலத்தை இலக்காகக் குறித்துக் கொண்டு மற்று அந்நிலத்தின்கண் கண்புதைத்து எறியினும் கை பிழை யாது என்றவாறு.* (5)

**308. இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்**
**புணரின் வெகுளாமை நன்று. (அ)**

**உரைப்பகுதி :**

**பரிமே :—** இணர் எரி தோய்வு அன்ன இன்னா செயினும் - பல சுடரை உடைத்தாய பேரெரி வந்து தோய்ந்தாலொத்த இன்னாதவற்றை ஒருவன் செய்தானாயினும், வெகுளாமை புணரின் நன்று - அவனை வெகுளாமை ஒருவற்குக் கூடுமாயின் அது நன்று.

இன்னாமையின் மிகுதி தோன்ற இணரெரி என்றும், அதனை மேன்மேலுஞ் செய்தல்தோன்ற இன்னா என்றும், அச்செயல் முனிவ ரையும் வெகுள்விக்கும் என்பது தோன்றப் புணரின் என்றும் கூறி னார். இதனான் வெகுளாமையது நன்மை கூறப்பட்டது.

**மணக் :—** தொடர்வுபட்ட நெருப்பு மேன்மேலும் வந்துற்றாற்போல ஒருவன் தனக்கு இன்னாதவற்றைப் பலகால்செய்யினும் கூடுமாயின் வெகுளாது ஒழிதல் நன்று என்றவாறு.

மேல் வலியவன் பொறுக்க வேண்டும் என்றார். அவன் பொறுக்குங் கால் தீமைசெய்யினும் பொறுக்க வேண்டும் என்றார். (3)

**பருதி :—** எ - து பூங்கொத்தை அக்கினியில் இட்டாற்போலே ஒருவர் தனக்குப் பொல்லாங்கு செய்தாலும் அவ்விடத்தும் கோபம் விடுகை நன்று என்றவாறு. (9)

**காளிங் :—*** ... ... ... (8)

## மேற்கோள்பகுதி

**மயிலை :—** 'இணரெரி தோய்வன்ன' என்ற இக்குறள் பிறர் இன்னா செயினும் தான் வெகுளாமை நன்று என எஞ்சிய பெயர்கொண்டு முடிதலில் பெயரெச்சமாயிற்று. (நன் 359)

**சங்கர :—** பிற உயிர்க்கு இன்னாசெய்யின், அவை பிழையாது தமக்கு வருதல் கருதித் தம்மாட்டு அன்பும், பிறவுயிர்கண்மாட்டு அருளும், இன்னாசெய்தலான் மேன்மேல் வளரும் பிறப்பிறப்பின் அச்சமும், நம்மால் இன்னா செய்யப்பட்டாரை நாமடைந்து இரத்தல் கூடினுங்கூடும் அதனால் யார்மாட்டும் இன்னாசெய்யக் கடவேமல்லேம் என்னும் வருங்கால உணர்ச்சியும் இலராய் ஒருவர் தன்னால் ஆற்றல் கூடாத இன்னாதனவற்றைத் தன்கட் செய்தாராயினும் அவர் தமக்கு வேண்டுவதோர் குறை முடித்தல் கருதி நாணாது தன்னையடைந்தாராயின் அவர் செய்த இன்னாமை கருதி அவரை வெகுளாது அவற்றை மறந்து அவர்வேண்டுங் குறை முடித்து, முன் செய்த இன்னாமையால் அவர் கூசி ஏகுதல் தவிர்தற்குக் காரணமாகிய மெய்ப்பாடு முதலியன தன்கட் குறிப்பின்றி நிகழ அவர்க்கு இனியனா யிருத்தல் தன் சால்புக்கு நன்றென நால்வகைச் சொற்களுள் வேண்டுவன எல்லாந் தந்து அகலங்கூறவேண்டி நிற்பன இசையெச்சம் ஆம் என்க. (நன், சூ. 360.)

பேரா. (தொல் - பொருள் 277)

## ஒப்புமைப்பகுதி :

" பெரியதப் புநராயினும் பகைவர்
பணிந்து திறைபகரக் கொள்ளுநை" —பதிற். 2-7

---

* இவர் உரை பருதியார் உரை போன்றதே.

"பொறையின் ஆற்றலால்
மூண்டெழு வெகுளியை முறையின் நீக்கினர்
ஆண்டுறை அரக்கரால் அலைப்புண்டாரரோ, —கம்ப.

**309. *உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின். (கூ)**

**உரைப்பகுதி :**

**பரிமே :—** உள்ளத்தால் வெகுளி உள்ளான் எனின் - தவஞ் செய்யுமவன், தன் மனத்தால் வெகுளியை ஒருகாலும் நினையானாயின், உள்ளியது எல்லாம் உடன் எய்தும் - தான் கருதிய பேறு எல்லாம் ஒருங்கே பெறும்.

உள்ளத்தால் என வேண்டாது கூறிய அதனான், அருளுடையுள்ளம் எனபது முடிந்தது. அதனால் உள்ளாமையாவது அவ்வருளாகிய பகையை வளர்த்து அதனான் முற்றக்கடிதல். இம்மை மறுமை வீடு என்பன வேறு வேறு திறத்தனவாயினும், அவையெல்லாம் இவ்வொன்றானே எய்தும் என்பார், உள்ளியது எல்லாம் உடன் எய்தும் என்றார். இதனான் வெகுளாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

**மணக் :—** *தன் நெஞ்சினால் வெகுளியை நினையானாகில், தான் நினைத்தன எல்லாம் ஒருகாலத்தே கூடப்பெறுவன் என்றவாறு.* (9)

**பரிப் :—** *இது நினைத்தன பெறும் என்றது.*

**பருதி :—** *எ - து நினைத்த காரியம் எல்லாம் கைகூடும்; மனத்திலும் கோபம் விடுவானாகில் என்றவாறு.* (10)

**காளிங் :—** *எ - து இவ்வெகுளியைத் தனது நெஞ்சத்தாலும் கருதாது எஞ்ஞான்றும் ஒடுங்கிய உள்ளத்தானுமாயின் மற்று அவன் கருதிய எல்லாம் ஒக்கவே எய்துவன்; எனவே ஈண்டு தன் துணையாக் கீழ்ச் சொல்லிய அருள் முதலியவற்றாலும் குறைபாடு இன்றி அளவில்லாத இன்பம் எய்துவன் என்பது பொருள் என்றவாறு.*

*இனி அத்துறவோர்க்குச் சினம் இன்மையால் சிறக்கும் செய்தியானது ஆற்றலால் பிறர்க்கு இன்னாதனவற்றைச் செய்யாது தம்போல நோக்கி, தவம் ஆற்றுதல் அன்றே; அதனால் அதன்பின்னரே அதனை அறிவிக்கின்றது.* (10)

---

* 'உள்ளியவெல்லாம்' எனவும் பாடம்.

**மேற்கோள்பகுதி :**

மயிலை :— அஃறிணைப் பன்மையுடன் ஒருமை மயங்கியதற்கு மேற்கோள். (நன். 379.)

தெய்வச் :— தொல் - சொல் 59

சிவஞான :— கம்ப. விருத்தி. பக். 9

**310. இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. (ம)**

**உரைப்பகுதி:—**

பரிமே:— இறந்தார் இறந்தார் அனையர் - சினத்தின்கண்ணே மிக்கார் உயிருடையராயினும் செத்தாரோடு ஒப்பர், சினத்தைத் துறந் தார் துறந்தார் துணை - சினத்தைத் துறந்தார் சாதல்தன்மையராயினும் அதனை ஒழிந்தாரளவினர்.

மிக்க சினத்தை உடையார்க்கு ஞானம் எய்துதற்குரிய உயிர் நின்றதாயினும் கலக்கத்தான் அஃதெய்தாமை ஒருதலையாகலின், அவரை இறந்தார் அனையர் என்றும், சினத்தை விட்டார்க்குச் சாக்காடு எய்துதற்குரிய யாக்கை நின்றதாயினும், ஞானத்தான் வீடுபெறுதல் ஒருதலையாகலின், அவரை வீடுபெற்றாரோடு ஒப்பர் என்றும் கூறினர். இதனான் அவ்விருவர் பயனும் ஒருங்கு கூறப்பட்டது.

மணக் :— சினத்தை மிகுத்தார் செத்தாரோடு ஒப்பர் ; அதனை ஒழிந்தார் எல்லாப் பொருளையும் துறந்தாரோடு ஒப்பர் என்றவாறு.

பரிப் :— இது வெகுளாதார் பெரியர் என்றது. (10)

பருதி :— [1]மாண்டார்க்குச் சரியான சினத்தைத் துறந்தார்க்கு நிகராவது, தொண்ணூற்றாறு தத்துவத்தையும் உடலோடே இருக்கையிலே புளியம்பழமும் ஓடும்போலே துறந்தார் நிகராம் என்றவாறு. (1)

காளிங் :—2 ... .... .... (1)

**மேற்கோள்பகுதி :**

சாரிரத்ன :— பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற. 251)

**குறிப்பு:—**

உயிர்க்குணமாகிய செறல் நீங்கினமையின் துறந்தார் மாண்டார்க்குச் சரியாயினர்.

1 'இறந்தார் அனைய' என்பது பருதி பாடம். : தொகுப்பாசிரியர்.
2 இவர் உரை பருதியார் உரை போன்றதே.

# 32. இன்னுசெய்யாமை

பரிமே:— அஃதாவது தனக்கு ஒருபயன் நோக்கியாதல், சோர்வானுதல் ஒருயிர்க்கு இன்னுதவற்றைச் செய்யாமை. இன்னு செய்தல் வெகுளி யொழியவும் நிகழும் என்பது அறிவித்தற்கு, இது வெகுளாமையின் பின் வைக்கப்பட்டது.

மணக்:— *இன்னுசெய்யாமையாவது தமக்கு இன்னுதவற்றைப் பிறர்க்குச் செய்யாமை. இது வெகுளி பிறந்து நிகழ்வது ஒன்ருதலின், அதன்பின் கூறப்பட்டது.*

பருதி :— *இன்னு செய்யாமையாவது, முனி, கோபத்தினுலே ஒருவரைச் சபிக்க ஒண்ணுது என்றவாறு.*

**311. சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னு**
**செய்யாமை மாசற்ருர் கோள். (க)**

**உரைப்பகுதி :**

பரிமே:— சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் - யோகமாகிய சிறப்புத் தரும் அணிமா முதலிய செல்வங்களைப் பிறர்க்கு இன்னு செய்து பெறலாமாயினும்; பிறர்க்கு இன்னு செய்யாமை மாசு அற்ருர் கோள் - அதனைச் செய்யாமை ஆகமங்கள் கூறியவாற்ருன் மனம் தூயாரது துணிவு.

உம்மை பெருமைமேற்று. சிறப்புடையதனைச் சிறப்பு என்றும், அதன் பயிற்சியான் வாயுவை வென்று எய்தப்படுதலின் எட்டுச் சித்திகளையும் சிறப்பீனும் செல்வம் என்றும், காமம் வெகுளி மயக்கம் என்னும் குற்றங்கள் அற்றமையான் மாசற்ருர் என்றும் கூறினுர். இதனுல் தமக்கு ஒருபயன் நோக்கிச் செய்தல் விலக்கப்பட்டது.

மணக்:— *மிகுதியைத் தருகின்ற செல்வத்தைப் பெறினும் பிறர்க்கு இன்னுதவற்றைச் செய்யாமை குற்றமற்ருர் கோட்பாடு என்றவாறு.*

---

*இது பழி; வாராத செல்வம் பெறினும் தவிரவேண்டும் என்றது.* (4)

பருதி:— எ - து எட்டுவகைப் போகந் தருகின்ற செல்வம் பெற்றாலும், பிறர்க்கு விதனஞ்செய்யாமை இருப்பது நல்லோர் கொள்கை என்றவாறு. (4)

காளிங்:— எ - து மறுமைக்கு முத்தியையும் இம்மைக்குச் செல்வத்தையும் பெறினும் தன் நெஞ்சு அறிய துயருறுவதைப் பிறர்க்குச் செய்யாது ஒழிதல் உட்குற்றமற்ற உணர்வுடைத் துறவோரது நெஞ்சின் கோட்பாடு என்றவாறு.

சிறப்பு என்பது முத்தி. செல்வம் என்பது திரு. (8)

## 312. கறுத்தின்னா *செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
## செய்யாமை மாசற்றார் கோள். (உ)

**உரைப்பகுதி:**

பரிமே:— கறுத்து இன்னா செய்தவக்கண்ணும் - தம்மேற் செற்றம் கொண்டு ஒருவன் இன்னாதவற்றைச் செய்த இடத்தும், மறுத்து இன்னா செய்யாமை மாசு அற்றார் கோள் - மீண்டு தாம் அவனுக்கு இன்னாதவற்றைச் செய்யாமையும் அவரது துணிவு.

இறந்தது தழீஇய எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. அவ்வின்னாதவற்றை உட்கொள்ளாது விடுதல் செயற்பாலது என்பதாம்.

மணக்:— தாஞ்செய்த குற்றத்தினாலே வெகுண்டு, இன்னாதவற்றைச் தமக்குச் செய்தவன் மாட்டும், தாம் அதற்கு மாறாகப் பின்பு இன்னாதவற்றைச் செய்யாமை குற்றமற்றார் கோட்பாடு என்றவாறு. (2)

பருதி:— எ - து தனக்கு ஒருவர் மனங்கன்றப் பொல்லாங்கு செய்தால் அவனுக்குத் தான் பொல்லாங்கு செய்யாமை இருப்பது நல்லோர் கொள்கை என்றவாறு. (6)

காளிங்:— எ - து ஒருவர் தம்மாட்டுச் சினந்து இன்னாதன வற்றைச் செய்தவர்மாட்டும் தாம் பெயர்த்து அவர்க்கு இன்னாதன செய்யாமை உள்ளழுக்கற்ற உணர்வுடைய துறவோரது கோட்பாடு என்றவாறு.

கறுத்து என்பது சினந்து. (3)

* 'செய்தவர்' என்பதும் பாடம்.

**313.** [1]**செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்**
**உய்யா விழுமம் தரும்.** (௩)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின் - தான் முன்பு ஓர் இன்னாமை செய்யாதிருக்கத் தன்மேல் செற்றங் கொண்டவர்க்கும் இன்னாதவற்றைத் துறந்தவன் செய்யுமாயின், உய்யா விழுமம் தரும் - அச்செயல் அவனுக்குக் கடக்க முடியாத இடும்பையைக் கொடுக்கும்.

அவ்விடும்பையாவது தவம் இழந்து பழியும் பாவமும் எய்தல்.

**மணக் :—** *தானொரு குற்றம் செய்யாதிருக்க, தனக்கு இன்னாத வற்றைச் செய்தவர்க்கும், இன்னாதவற்றைச் செய்யின், அஃது உய்வில்லாத நோயைத்தரும் என்றவாறு.*

*இது காரணமின்றி இன்னாதன செய்தவர்க்கும் பொல்லாங்கு செய்தலைத் தவிரவேண்டும் என்றது.* (3)

**பருதி:—** *எ - து தானொருத்தற்குப் பொல்லாங்கு செய்யாதிருக்கையிலே, தன்மீது கோபித்தார்க்குத் தான் மீண்டும் இன்னாதனவற்றைச் செய்தாராயின், அது பிழைப்பில்லாத நரகந்தரும் என்றவாறு.* (5)

**காளிங் :—** *எ - து தாம் பிறர்க்கு ஓர் இன்னாமை முன்னம் செய்யாதிருக்க, தம்மைவந்து செறுத்தவர்க்கு, தாம் பெயர்த்து இன்னாதனவற்றைச் செய்தானாயின் தமக்கு உய்ந்து கரையேறுதற்கு அரிதாகிய பெருந் துன்பத்தைத் தரும் என்றவாறு.* (7)

**314. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
[2]**நன்னயம் செய்து விடல்** (௪)

**உரைப்பகுதி :**

**பரிமே:—** இன்னா செய்தாரை ஒறுத்தல் - தமக்கின்னாதவற்றைச் செய்தாரைத் துறந்தார் ஒறுத்தலாவது, அவர் நாண நன்னயம் செய்து விடல் - அவர் தாமே நாணுமாறு அவர்க்கு இனிய உவகைகளைச் செய்து அவ்விரண்டனையும் மறத்தல்.

---

1 'செய்யாமை' என்பதும் பாடம். 2 'நன்மையே செய்து விடல்' என்பது பரிதியார் பாடம்.

மறவாவழிப் பின்னும் வந்து கிளைக்கும் ஆகலின், மறக்கற்பால வாயின. அவரை வெல்லும் உபாயம் கூறியவாறு. இவை மூன்று பாட்டானும் செற்றம் பற்றிச் செய்தல் விலக்கப்பட்டது.

*மணக்:— இன்னாதன செய்தாரை ஒறுக்குமாறு என்னை எனின், அவர் நாணும்படியாக நல்ல நயமுடையவற்றைச் செய்துவிடுக என்ற வாறு.*

*இஃது ஒறுக்கும் நெறி கூறியது.* (10)

*பருதி :— எ - து தனக்குப் பொல்லாங்கு செய்தார்க்கு அவர் நாணு தல் பிறக்கும்படியாக நன்மையே செய்வது தகுதி என்றவாறு.* (9)

*காளிங் :— எ - து துறவோர்க்கு இன்னாதனவற்றைச் செய்தாரை ஒறுத்தலாவது யாதோ எனில் தமது பெருமையின் நிலைமைகண்டு மற்று அவர் தாமே நாணுமாறு தாம் அவர்க்கு நல்லருளே *செய்துவிடல் என்றவாறு.*

*நயம் என்பது ஒழுக்கம்.* (9)

## உரைவிளக்கப்பகுதி :

**நுண்** :— 'அவ்வித்துக்.....................காட்டிவிடும்' (167) என்பது போல 'செய்துவிடல்' இரு சொல். உரையுள், 'அவ்விரண்டையும்' என்றது, அவ்விரண்டு குறட்பொருளையும் என்க.

## ஒப்புமைப்பகுதி :

"உபகாரஞ் செய்ததனை ஓராதே தங்கண்
அபகாரம் ஆற்றச் செயினும்—உபகாரம்
தாம்செய்வ தல்லால் தவற்றினால் தீங்கூக்கல்
வான்தோய் குடிப்பிறந்தார்க் கில்" —நாலடி. 69.

"நேர்த்தின்னா மற்றவர் செய்தக்கால் தாமவரைப்
பேர்த்தின்னா செய்யாமை நன்று." —நாலடி. 67.

---

* 'செய்தால் இத்தகைய நன்மை செய்த பெரியவர்களுக்கு அறியாமல் பொல்லாங்கு செய்தோமே என்று தங்கள் மனசைத் தாமே நொந்து கொள்வார்கள்'

—கவிராஜ பண்டிதர்.

315. அறிவினான் ஆகுவ துண்டோ *பிறிதினோய்
தந்நோய்போல் போற்றாக் கடை. (௫)

**உரைப்பகுதி :**

**பரிமே:—** அறிவினான் ஆகுவது உண்டோ – துறந்தார்க்கு உயிர் முதலியவற்றை உள்ளவாறு அறிந்த அறிவினான் ஆவதொரு பயன் உண்டோ, பிறிதின் நோய் தந்நோய்போல் போற்றாக்கடை - பிறிதோர் உயிர்க்கு வரும் இன்னாதவற்றைத் தம் உயிர்க்கு வந்தன போலக் குறிக்கொண்டு காவாவிடத்து.

குறிக்கொண்டு காத்தலாவது நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல் முதலிய தந்தொழில்களானும் பிறவாற்றானும் உயிர்கள் உறுவனவற்றை முன்னே அறிந்து உறாமல் காத்தல். இது பெரும்பான்மையும் அஃறிணைக்கண் நுண்ணியவுடம்புடையவற்றைப் பற்றி வருதலின் பொதுப்படப் பிறிதினோய் என்றும், மறப்பான் அது துன்புறினும் நமக்கு இன்னாசெய்தலாம் என்று அறிந்து காத்தல் வேண்டும் ஆகலின் அது செய்யாவழி அறிவால் பயனில்லை என்றும் கூறினார். இதனால் சோர்வால் செய்தல் விலக்கப்பட்டது.

**மணக்:—** *பிறிதோருயிர்க்கு உறும் நோயைத் தனக்கு உறும் நோய் போலக் காவாத இடத்து, அறிவுடையனாகிய அதனால் ஆகுவதொரு பயன் உண்டாகாது.*

*இஃது அறிவுடையார் செய்யார் என்றது.* (6)

**பருதி:—** *எ - து அறிவென்னும் பொருளைக் கொண்டிருக்கவல்லவன் பிறர் நோவையும் தன்நோவு என்று போற்றுவானாகில் அவன் கேடிலாத கதியினை அடைவன் என்றவாறு.* (10)

**காளிங்:—** *எ - து துறவுநெறி ஒழுக்கத்துத் தூய்ய அறிவினர் பிறிதுயிர்க்கு வருவதோர் இடரையும் தமது இடர்போலத் தேர்ந்து குறிக்கொள்ளாத விடத்து தம் அறிவினால் மேலாவதோர் ஆக்கம் உண்டோ; எனவே அஃது இல்லை என்றவாறு.* (10)

**மேற்கோள்பகுதி :**

**குணசாகரர்:—** *அம்மை என்னும் வனப்புக்கு மேற்கோள். (யா. கா. 45)*

---

* 'பிறிது நோய்' எனவும் பாடம்.

யா. வி. உரை:— ஷெ (சூ. 95.)

**ஒப்புமைப்பகுதி :**

''பிறர்நோயும் தந்நோய்போல் போற்றி அறனறிதல்
சான்றவர்க் கெல்லாம் கடன்.'' —கலி. 139: 2. 3

**316. இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை**
**வேண்டும் பிறன்கட் செயல். (சூ)**

**உரைப்பகுதி :**

**பரிமே** :— இன்னா எனத் தான் உணர்ந்தவை - இவை மக்கட்கு இன்னாதன என அனுமானத்தால் தானறிந்தவற்றை, பிறன்கண் செயல் துன்னாமை வேண்டும் - பிறன் மாட்டுச் செய்தலை மேவாமை துறந்தவனுக்கு வேண்டும்.

இன்பத்துன்பங்கள் உயிர்க்குணமாகலின், அவை காட்சியளவை யான் அறியப்படாமை அறிக. அறமும் பாவமும் உளவாவது மனம் உள்ளுய வழியாகலான், உணர்ந்தவை என்றார்.

**மணக்**:— தான் இன்னாதன இவை யென்று அறிந்தவற்றைப் பிறற்குச் செய்தலை மேவாமை வேண்டும் என்றவாறு. (1)

**பரிப்**:— இஃது இன்னா செய்யாமை வேண்டும் என்றது. (1)

**பருதி**:— எ - து தன் மனதிற்குப் பொருந்தாத பொல்லாங்கு தனக்கு வேண்டாதார்க்கும் செய்வானல்லன் என்றவாறு. (1)

**காளிங்**:— எ - து ஒருவன் தனக்கு இன்னாதன எனத் தான் அறிந்தனவற்றைப் பிறர்மாட்டுச் செய்தலை அடையாமை வேண்டும் என்றவாறு.

துன்னாமை என்பது அடையாமை. (1)

**ஒப்புமைப்பகுதி :**

''தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோல்
மன்னுயிர் எவையும் ஓம்பி வாழுமேல்
இன்னுயிர்க் கிறைவனாய் இன்ப மூர்த்தியாய்
பொன்னுமி ராய்ப்பிறந் துயர்ந்து போருமே.'' —சீவக. 3107.

**317. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் [1]மனத்தானாம்**
**[2]மாணா செய்யாமை தலை. (எ)**

**உரைப்பகுதி :**

**பரிமே :**—மனத்தான் ஆம் மாணா - மனத்தோடு உளவாகின்ற இன்னாத செயல்களை, எஞ்ஞான்றும் யார்க்கும் எனைத்தானும் செய்யாமை தலை - எக்காலத்தும் யாவர்க்கும் சிறிதாயினும் செய்யாமை தலையாய அறம்.

ஈண்டு மனத்தான் ஆகாதவழிப் பாவம் இல்லை என்பது பெற்றாம். ஆற்றலுண்டாய காலத்தும் ஆகாமையின் எஞ்ஞான்றும் என்றும், எளியார்க்கும் ஆகாமையின் யார்க்கும் என்றும், செயல் சிறிதாயினும் பாவம் பெரிதாகலின் எனைத்தானும் என்றும் கூறினார்.

**மணக்:**— *யாதொன்றாயினும் எல்லாநாளும் யாவர்மாட்டும் இன்னாதவற்றை மனத்தினாலும் செய்யாமை நன்று என்றவாறு.* (5)

**பருதி:**— *எ - து ஆரளவிலும் பொல்லாங்கு செய்யாமல் மனத்தாலும் பொல்லாங்கு நினையாமல் இருப்பது தலைமை என்றவாறு.* (8)

**காளிங்:**— *எ - து ஒருவன் உலகத்து யாவர்க்கும் எஞ்ஞான்றும் எத்துணையும் சிறிதாயினும் இன்னாதனவற்றைத் தன் மனத்தினாலும் கருதுதல் செய்யாமையும், வாக்கினாலுரைத்தல் செய்யாமையும் காயத்தாற் செயல் செய்யாமையுமே தலைமைப்பாடாவது என்றவாறு.* (6)

**உரைவிளக்கப்பகுதி :**

**நுண்:**— *அறியாமல் செய்ததற்குப் பாவம் இல்லை என்பது காண்க. பாண்டுவும் தசரதனும் பாவமெய்தியதென்னை? எனக்கடாவுக.*

**318. தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ**
**மன்னுயிர்க் கின்னா செயல். (அ)**

**உரைப்பகுதி :**

**பரிமே :**— தன் உயிர்க்கு இன்னாமை தான் அறிவான் - பிறர் செய்யும் இன்னாதன தன்னுயிர்க்கு இன்னாவாந் தன்மையை

[1] 'மனத்தானும்' என்பது மணக்குடவர் பாடம். [2] 'இன்னா' என்பது பருதியார் பாடம்.

அனுபவித்து அறிகின்றவன், மன் உயிர்க்கு இன்னு செயல் என்கொல் – நிலைபேறுடைய பிறவுயிர்கட்குத் தான் அவற்றைச் செய்தல் என்ன காரணத்தான்.

இவ்வாறே இவை பிற உயிர்க்கும் இன்னு என்பது அனுமானத் தான் அறிந்துவைத்துச் செய்கின்ற இப்பாவம் கழுவப்படாமையின். இன்னுதன யான் வருந்தப் பின்னே வந்து வருத்தும் என்பது ஆகமத் தானும் அறிந்து ஒழியற்பாலன் என்பது தோன்றத் தான் என்றும் அத்தன்மையான் ஒழியாமைக்குக் காரணம் மயக்கம் என்பது தோன்ற என்கொலோ என்றும் கூறினுர். இவை மூன்றுபாட்டானும் பொதுவகையான் விலக்கப்பட்டது.

**மணக் :—** *தன்னுயிர்க்கு உற்ற இன்னுமையை உயிரில்லாப் பொருள்கள்போல அறியாது கிடைத்தலன்றித் தான் அறியுமவன், பின்னைப் பிறவுயிர்க்கு இன்னுதவற்றைச் செய்கின்றது யாதினைக் கருதியோ என்றவாறு.* (7)

**பருதி :—** *எ - து தன் ஆத்மாவுக்குப் பொல்லாங்கு வருகின்ற போது தான் விதனப்படானே? அப்படியே, தான் ஒருத்தருக்கும் பொல்லாங்கு செய்யக்கடவனல்லன் என்றவாறு.* (2)

**காளிங் :—** *எ - து தன்னுயிர்க்குச் சில இன்னுதனவற்றைத் தான் அறிந்து ஒழுகுவான் இனி மற்று உலகத்துப் பிறந்து இறந்து இங்ஙனம் நிலைபெற்று வருகின்ற உயிர்கட்குத் தான் சில இன்னுதன செய்யுஞ் செயல் என்னைகொல்லோ என்றவாறு.* (4)

## மேற்கோள்பகுதி :

**நச் :—** *'அருளொடு புணர்தலாவது ஒருயிர்க்கு இடர்வந்துழித்தன் உயிரைக் கொடுத்துக்காத்தலும் அதன் வருத்தம் தனதாக வருந்துதலும், பொய்யாமை கள்ளாமை முதலியனவும் ஆம். இக்கருத்து நிகழ்ந்த பின்னர் துறவுள்ளம் பிறத்தலின் இதுவும் அறவெற்றியாயிற்று. இதில் இக் குறள் பிற உயிர்களின் வருத்தம் தனதாக வருந்துதலுக்கு மேற்கோள். (தொல். பொருள். 76.)*

**பெருங் :—** *சாந்தச் சுவைக்கு மேற்கோள் (வீரசோ. 170 உரை)*

**சுப்பிர :—** ஷை *(தண்டி. 70. உரை)*

**யா வி. உரை :—** *இரண்டடியான் வந்த வெண்பாச் சிறுமைக்கு மேற்கோள் (சூ. 32) எதுகை முதற்றொடையான் வந்த இனக்குறள் வெண்பாவிற்கு மேற்கோள். (சூ. 59.)*

ஒப்புமைப்பகுதி :

''வினைப்பயம் ஒன்றின்றி வேற்றுமை கொண்டு
நினைத்துப் பிறர்பனிப்பச் செய்யாமை வேண்டும்
புனப்பொன் னவிர்சுணங்கிற் பூங்கொம்ப ரன்னாய்
தனக்கின்னா இன்னா பிறர்க்கு. —பழமொழி. 266.

''இறப்ப நுமக்கடுத்த எவ்வநோய் யாவும்
பிறர்க்கு மஃதாமென்று கொண்மின் - உறக்கருதி

அவ்வாறு மக்குறுதி யெண்ணுதிர் நீர் எல்லார்க்கும்
அவ்வாறே யெண்ணல் அறம்.'' —பாரத.

''தன்உயிர் தான்பரிந்து ஓம்புமாறு போல்
மன்உயிர் வைகலும் ஓம்பிவாழுமே.'' —சீவக. 3107

**319. பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் *தாமே வரும்.** (௯)

உரைப்பகுதி :

பரிமே :— பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் - துறந்தவர் பிறர்க்கு இன்னாதனவற்றை ஒருபகலது முற்கூற்றின்கண் செய்வராயின், தமக்கு இன்னா பிற்பகல் தாமே வரும் - தமக்கு இன்னாதன அதன் பிற்கூற்றின்கண் அவர் செய்யாமல் தாமேவரும்.

முற்பகல் பிற்பகல் என்பன பின் முன்னாகத்தொக்க ஆறும்வேற்றுமைத்தொகை. தவமழிதலின், அங்ஙனம் கடிதினும் எளிதினும் வரும்; அதனால் அவை செய்யற்க என்பதாம். இனித் தானே வரும் என்பது பாடமாயின், அச்செயல்தானே தமக்கு இன்னாதனவாய் வரும் என் உபசாரவழக்காக்கி, ஆக்கம் வருவித்து உரைக்க.

மணக்:— *பிறர்க்கு இன்னாதவற்றை முற்பொழுது செய்யின், தாமே பிற்பொழுது தமக்கு இன்னாதனவாய் வரும்; மற்றொருவன் செய்யாமல் என்றவாறு.*

*இன்னாதன செய்ததனால் வருங் குற்றம் என்னை என்றார்க்கு இது கூறப்பட்டது.* (7)

பருதி :— *எ - து தான் ஒருத்தர்க்குப் பொல்லாங்கு செய்வானாகில் அந்தப் பொல்லாங்கு தனக்கே பிறகு வரும்; ஆகையால் ஒருவர்க்கும் பொல்லாங்கு செய்யவேண்டாம் என்றவாறு.* (8)

* 'தானே' எனவும் பாடம்.

காளிங்:— எ - து ஒருவன் பிறர்க்கு இன்னாதனவற்றை முற்காலத்துத் தாம் செய்யுமாயின் தமக்கு இன்னாதனவும் செய்த அக்கருமத்தின் பயன் பிற்காலத்துத் தானே வந்து எய்தும்; அதனை ஒருவர்க்கும் ஒழித்தல் அரிது என்றவாறு.

முற்பகல் பிற்பகல் என்றது முற்காலம் பிற்காலம் என்றது. (2)

## மேற்கோள்பகுதி :

பெருங் :— பிறநூன் முடிந்தது தானுடம்படுதலுக்கு மேற்கோள், (வீரசோழி. 180. உரை.)

காரிரத்ன:— பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற. 251.)

சிவஞான:— வினை முதற்பொருள் 'இன்னா தாமே வரும்' எனச் செயப்படு பொருட்கண் வந்தது. (நன். 299.)

சுவாமி:— இன்னா தாமே வரும் எனச் செயப்படு பொருள் தோற்றத் தோடு வினை முதலாய்ச் செயப்படுபொருள் குன்றிய வினை கொண்டது (இ. கொ. 26.)

சுப்பிர:— தெளிவு என்னும் குண அலங்காரத்திற்கு மேற்கோள். (தண்டி. 17. உரை.)

## ஒப்புமைப்பகுதி :

''பிறர்க்கின்னா செய்வது நன்றாமோ மற்று.'' —கலி. 62-8.

''முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் காண்குறூஉம் பெற்றியகாண்.'' —சிலம்பு வஞ்சின. 3-4.

''நெடியது காண்கலாய் நீயளியை நெஞ்சே
கொடியது கூறினாய் மன்ற—அடியுளே
முற்பகற் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் கண்டு விடும்.'' —பழமொழி. 130.

''முற்பகல் செய்வினை பிற்பகல் உறுநரின்,'' பெருங். 1:56:259.

''முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.'' —கொன்றை.

''பிறர்க்கின்னா செய்தலின் பேதைமை யில்லை.'' —அறநெறி. 95

''முன்னை செய்வினை இம்மையில் வந்து மூடுமாதலின்.''
—சுந்தரர். திருப்புறம். 7

''முற்பக லோர்பழி முடிக்கின் மற்றது
பிற்பகல் தமக்குறும் பெற்றி யென்னவே.''
கோபிச்சரக் 167 —கந்த, 2-ம் நாள்.சூரபன் 365

**320.** **நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்**
**நோயின்மை வேண்டு பவர்.** (ம)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம் - இன்னா தன எல்லாம் பிறிதோருயிர்க்கு இன்னாதன செய்தார் மேலவாம்; நோய் இன்மை வேண்டுபவர் நோய் செய்யார் - அதனால் தம்முயிர்க்கு இன்னாதன வேண்டாதார் பிறிதோருயிர்க்கு இன்னாதன செய்யார்.

* உயிர்நிலத்து வினைவித்திட்டார்க்கு விளைவும் அதுவே யாகலின், நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் என்றார். இது சொற்பொருட்பின்வருநிலை. இவை இரண்டு பாட்டானும் அது செய்தார்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது.

*மணக் :— இக்காலத்து நுகர்கின்ற துன்பமெல்லாம் முற்காலத்துப் பிறர்க்குத் துன்பம் செய்தார்மாட்டே உளவாம்; ஆதலால், இக்காலத்துப் பிறர்க்குத் துன்பத்தைச் செய்யார் வருங்காலத்துத் தமக்குத் துன்பம் வராமையை வேண்டுபவர் என்றவாறு.* (9)

*பருதி :— எ - து ஒருவர்க்குத் தான் செய்த விதனம், பின்பு தனக்கு வருகிறபடியினாலே, ஒருவர்க்கும் தாங்கள் விதனஞ்செய்யார் என்றவாறு.*

*அது எப்படி என்றால், பிரம்மராட்சதன் ஒரு ராசாவின் மகளைப் பற்றி நின்று சந்தியாவந்தனை செய ஆற்றங்கரையிலே வந்து நின்றளவில், பிராமணப் பிள்ளையின் பிள்ளை வாசிக்கின்றவனுக்கு அன்றையிற்பாடம் இந்தக்குறள் ஆகையால் அவன் முகசுத்தி பண்ணவந்தவன், இந்தக் குறளைப் பாடமாகச் சொல்லிக்கொண்டு வந்தான். இத்தை, பிரம்மராட்சதன் கேட்டுத் தானொரு பிராமண வடிவாய், இந்தப் பிள்ளை வாய்ப் பாடத்தை இரண்டு பிரகாரங் கேட்டு, 'நாம் இரசாவின் மகளை நோய் செய்தோமே! நமக்கு அந்தவிதனம் பிறகே வரும்' என்று பயப்பட்டு, இந்தப்பிள்ளை முன்னிலையாக, ராசகுமாரத்தியை விட்டுப்போச்சு என்றவாறு.* (4)

*காளிங்:— எ - து துன்பமானவை எல்லாம் பிறர்க்குத் துன்பம் செய்வார்மாட்டு உள்ளமுந்தவே வந்து விளையும்; ஆதலால், பிறர்க்கு இனிது நோக்கி, என்றும் தாம் ஒரு நோய் செய்வது இலர்; யாரோ எனில் தமக்குத் துன்பத்து இன்மையை விரும்புவார் என்றவாறு.* (5)

* சீவக 2762.

# 33. கொல்லாமை

பரிமே:— அஃதாவது ஐயறிவுடையன முதல் ஓரறிவுடையன ஈறாய உயிர்களைச் சோர்ந்துங் கொல்லுதலைச் செய்யாமை. இது, மேற் கூறிய அறங்களெல்லாவற்றினுஞ் சிறப்புடைத்தாய்க் கூறாத அறங் களையும் அகப்படுத்துநிற்றலின், இறுதிக்கண் வைக்கப்பட்டது.

*மணக்:— கொல்லாமையாவது யாதோருயிரையும் கொல்லாமை. இது வெகுளி முதிர்ந்துழி நிகழ்வதொன்றாதலின், அதன்பின் கூறப் பட்டது.*

*பருதி:— கொல்லாமையாவது, ஒருவர்க்குத் தான் பொல்லாங்கு செய்ததும், ஒருயிரைக் கொல்லுவதும் நிகராம் என்றவாறு.*

**321. அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்**
**பிறவினை எல்லாம் தரும். (க)**

**உரைப்பகுதி:**

பரிமே:— அறவினை யாது எனின் கொல்லாமை – அறங்க ளெல்லாமாகிய செய்கை யாது என்று வினவின் அஃது ஒருயிரையுங் கொல்லாமையாம், கோறல் பிறவினை எல்லாம் தரும் - அவற்றைக் கொல்லுதல் பாவச் செய்கைகள் எல்லாவற்றையும் தானே தரும் ஆதலான்.

அறம் சாதியொருமை. விலக்கியது ஒழிதலும் அறஞ்செய்தலாம் ஆகலின், கொல்லாமையை அறவினை என்றார். ஈண்டுப் பிறவினை என்றது அவற்றின்விளைவை. கொலைப்பாவம் விளைக்குந் துன்பம் ஏனைப் பாவங்களெல்லாங் கூடியும் விளைக்கமாட்டா என்பதாம். கொல்லாமை தானே பிற அறங்களெல்லாவற்றின் பயனையும் தரும் என்று மேற்கோள் கூறி, அதற்கு ஏது எதிர்மறைமுகத்தால் கூறிய வாறாயிற்று.

*மணக்— நல்வினை யாது எனின் கொல்லாமை; கொல்லுதல் எல் லாத் தீவினைப்பயனையும் தரும் ஆதலால் என்றவாறு.*

*இஃது, அறத்தொழிலாவது கொல்லாமை என்றது.* (4)

பருதி:— எ - து தன்ம நெறியாவது கொல்லாமை; கொலை செய்கை தன் ஆத்மாவுக்கு எல்லா விதனமும் தரும் என்றவாறு. (1)

காளிங் :— எ - து இருவினைப்பயனையும் கொண்ட வையத்து அறவினைக்குச் சிறந்தது யாதோ எனில், யாதானும் ஒன்றினையும் கொல்லாமை; ஆதலால் ஒன்றினைக் கொல்லுதலாகின்ற இது, பாவமாகிய எல்லாத் தீவினையும் தரும் என்றவாறு. (1)

## மேற்கோள்பகுதி :

இளம்:— கொல்லாமையாவது யாதொன்றையும் கொல்லாமை என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 75)

பெருந்:— தொகுத்துக் காட்டலுக்கு மேற்கோள். (வீரசோ. 180.)

காரிரத்ன:— பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற. 251.)

சுவாமி:— ''கொல்லாமை தரும்'' எனத் தொழிற்பெயர்க் கருத்தா. (இ. கொ. 26.) கொல்லாமை என்புழி செய்யாமை என்னும் மறையைச் செய்தல் என்னும் விதியாகவே துணிந்தது (ஷ 122.)

**322. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. (உ)**

## உரைப்பகுதி :

**பரிமே:—** பகுத்து உண்டு பல்லுயிர் ஓம்புதல் - உண்பதனைப் பசித்த உயிர்கட்குப் பகுத்துக்கொடுத்து உண்டு ஐவகை உயிர்களையும் ஓம்புதல், நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை - அறநூலுடையார் துறந்தார்க்குத் தொகுத்த அறங்கள் எல்லாவற்றினும் தலையாய அறம்.

பல்லுயிரும் என்னும் முற்றும்மை விகாரத்தால் தொக்காது ஓம்புதல் சோர்ந்துங் கொலைவாராமல் குறிக்கொண்டு காத்தல். அதற்குப் பகுத்து உண்டல் இன்றியமையா உறுப்பாகலின், அச்சிறப்புத் தோன்ற, அதனை இறந்தகால வினையெச்சத்தால் கூறினார். எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கு இயல்பாகலின், ஈண்டும் பொதுப்பட நூலோர் என்றும். அவரெல்லார்க்கும் ஒப்ப முடிதலான் இது தலையாய அறம் என்றும் கூறினார்.

மணக் :— பல்லுயிர்களுக்குப் பகுத்து உண்டு அவற்றைப் பாது காத்தல், நூலுடையார் திரட்டின அறங்களெல்லாவற்றினும் தலையான அறம் என்றவாறு. (3)

இஃது எல்லாச் சமயத்தாருக்கும் ஒன்று என்றது.

பருதி:— எ - து பெற்ற செல்வத்தைப் பகுத்து உண்டு தன் உயிர் போல எல்லா உயிரையும் பார்த்துக் காத்தல் தலைமையான காரியம் என்றவாறு. (3)

காளிங்:— எ - து தனக்குள்ளதுகொண்டு பலர்க்கும் பகுத்து ஊட்டி, தானும் உண்டு, அனைத்துயிர்களையும் கொலைபுரியாது பாது காத்தலே பெரிது என்று அனாதியில் பல அறநூல் கண்டவரும், முனிவர் அனைவரும் சிறந்த நல்லறம் இவை இவை என்று எண்ணி முடித்தவை எல்லாவற்றினும் சாலத் தலைமைப்பாடு உடைத்து என்றவாறு.

இவன் இடாமையால், பிறர் சாவினும் கொலையாம் என்பது கருத்து.(4)

**323. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று** (௩)

**உரைப்பகுதி :**

**பரிமே:—** ஒன்றாக நல்லது கொல்லாமை - நூலோர் தொகுத்த அறங்களுள் தன்னோடு இணைப்பது இன்றித் தானேயாக நல்லது கொல்லாமை; பொய்யாமை அதன் பின்சார நன்று - அஃதொழிந்தால் பொய் யாமை அதன் பின்னே நிற்க நன்று.

நூலோர் தொகுத்த அறங்கள் என்பது அதிகாரத்தான் வந்தது. அதிகாரம் கொல்லாமையாயினும் மேல் பொய்யாமை யாற்றின் எனவும் யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனவும் கூறினாராகலின், இரண்டு அறத்துள்ளும் யாது சிறந்தது என்று ஐயம் நிகழுமன்றே; அது நிகழா மைப் பொருட்டு, ஈண்டு அதன் பின்சாரப் பொய்யாமை நன்று என்றார் முற்கூறியது வலியுடைத்தாகலின். அதனைப் பின்சாரநன்றென்றது, நன்மை பயக்கும்வழிப் பொய்யும் மெய்யாயும், தீமை பயக்கும்வழி மெய்யும் பொய்யாயும் இதனைப் பற்ற அது திரிந்து வருதலால் என உணர்க. இவை மூன்றுபாட்டானும் இவ் அறத்தினது சிறப்புக் கூறப் பட்டது,

மணக்:— இணையின்றாக நல்லது கொல்லாமை; அதன் பின்பே அணைய, பொய்யாமையும் நன்று என்றவாறு.

இது சொல்லிய அறத்தினும் பொய்யாமை நன்று; அதினும் நன்று கொல்லாமை என்றது. (3)

பருதி:— எ - து தன்மநெறி எல்லாம் ஒன்றாகத் திரட்டியது அது; எது எனில், கொல்லாமை என்று அறிக; அதினும் பெரியது பொய் சொல்லாமை என்றவாறு. (2)

காளிங்:— எ - து அனைத்தறங்களினும் தனக்கு இணையின்றித் தானேயாகச் சிறந்தது யாதோ எனில், கொல்லாமையாகிய அறம் ஒன்றுமே; அதனால் இனிக் கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவானொருவன் இனி இதன்பின் செய்யவேண்டுவதும் ஒன்றுண்டு; அஃதாவது எஞ்ஞான்றும் பொய்யாமையைத் தப்பாமல் குறிக்கொள்ளல். அங்ஙனம் குறிக்கொண்டால் அது சாலத் தகைமையுடைத்து என்றவாறு. (3)

**324. *நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்**
**கொல்லாமை சூழு நெறி. (ச)**

## உரைப்பகுதி:

**பரிமே:—** நல்லாறு எனப்படுவது யாது எனின் – மேற்கதி வீடு பேறுகட்கு நல்ல நெறி என்று சொல்லப்படுவது யாது என்று வினவின்; யாது ஒன்றும் கொல்லாமை சூழும் நெறி - அஃது யாதோர் உயிரையும் கொல்லாமையாகிய அறத்தினைக் காக்கக் கருதும் நெறி.

யாதொன்றும் என்றது, ஓரறிவுயிரையும் அகப்படுத்தற்கு. காத்தல் வழுவாமற் காத்தல். இதனால் இவ்அறத்தினை உடையதே நன்னெறி என்பது கூறப்பட்டது.

மணக்:— நல்லவழி என்று சொல்லப்படுவது யாது எனின், அது யாதோர் உயிரையும் கொல்லாமையைச் சிந்திக்கும் வழி என்றவாறு.

இது நன்னெறியாவது கொல்லாமை என்றது. (2)

பருதி:— எ - து பெரியோர் இவர் என்றது, ஓர் உயிர்வதை செய்யாமலும் பொய் சொல்லாமலும், மாங்கிஷம் புசியாமலும், கோபந் தவிர்தலும், செபம் தவம் தானதன்மஞ்செய்தலும் ஆகிய குணங்கள் உடையாரே என்றவாறு. (10)

* 'நல்லார்' என்பது பருதியார் பாடம்

காளிங் :— எ - து உலகத்துத் தவநெறிகள் பலவற்றினும் சிறந்த நன்னெறிகள் என்று நூல்களால் எடுத்துச் சொல்லப்படுவன யாவையோ எனில் யாதானும் ஒன்றிணையும் கொல்லாமையைக் கருதுநெறி ஒன்றுமே என்றவாறு. (8)

## மேற்கோள்பகுதி :

மயிலை:— "ஒன்றொழி பொதுச்சொல்" என்ற சூத்திரத்தில் செப்பத்தால் பொருள் தருவன எல்லாம் வெளிப்படை என்றதற்கு மேற்கோள். (நன். 268)

## ஒப்புமைப்பகுதி :

"கொல்லாமை நன்று." —சிறுபஞ்ச. 51.

**325. நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை. (ரு)**

## உரைப்பகுதி:

பரிமே :— நிலை அஞ்சி நீத்தாருள் எல்லாம் - பிறப்புநின்ற நிலையை அஞ்சிப் பிறவாமைப்பொருட்டு மனைவாழ்க்கையைத் துறந்தார் எல்லாருள்ளும்; கொலை அஞ்சிக் கொல்லாமை சூழ்வான் தலை - கொலைப் பாவத்தை அஞ்சிக் கொல்லாமையாகிய அறத்தை மறவாதவன் உயர்ந்தவன்.

பிறப்பு நின்ற நிலையாவது இயங்குவ நிற்ப என்னும் இருவகைப் பிறப்பினும் இன்பமென்பது ஒன்றுஇன்றி உள்ளனவெல்லாம் துன்பமேயாய நிலைமை. துறவு ஒன்றேயாயினும், சமயவேறுபாட்டால் பலவாம் ஆகலின், நீத்தாருளெல்லாம் என்றார். இதனான் இவ் அறம் மறவாதவன் உயர்ச்சி கூறப்பட்டது.

மணக் :— * மனைவாழ்க்கையில் நிற்றலை அஞ்சித் துறந்தவர் எல்லாரினும் கொலையை யஞ்சிக் கொல்லாமையைச் சிந்திப்பான் தலைமை உடையவன்; இல்வாழ்க்கையில் நிற்பினும் என்றவாறு.

இஃது எல்லாத் துறவினும் நன்று என்றது. (5)

பருதி :— எ - து யாக்கை நிலையாமை அறிந்து, துறத்தாரிலும் கொல்லாவிரதம் கொண்டவன் பெரியன் என்றவாறு; அது எப்படி என்றால் உயிர் நிலையில்லை என்று, பிற உயிரைப்பார்த்துக் காத்தவன் பெரியவன் என்றவாறு. (4)

* 'நிலை - சம்சாரநிலை' —கவிராஜபண்டிதர்.

*காளிங் :— எ - து வினைவழி எய்திவருகின்ற பிறவித்தன்மையை அஞ்சிப் பிறவாமைக்குக் காரணமாகிய தவநெறி இயற்றுவார் எல்லாரி னும் மற்று இக்கொலைத் தொழிலை உயிரழிவு என்று அஞ்சி, மற்று இத னுல் எஞ்ஞான்றும் கொல்லாமையைக் குறிக்கொள்பவனே பெரிதும் தலை மைப் பாடு உடையவன் என்றவாறு.* (7)

**326. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்**
**செல்லா துயிருண்ணும் கூற்று.** (சு)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள் மேல் - கொல்லாமையை விரதமாக மேற்கொண்டு ஒழுகுவானது வாழ் நாளின்மேல், உயிர் உண்ணும் கூற்றுச் செல்லாது - உயிர் உண்ணுங் கூற்றுச் செல்லாது.

மிகப்பெரிய அறஞ்செய்தாரும் மிகப்பெரிய பாவஞ்செய்தாரும் முறையானன்றி இம்மைதன்னுள்ளே அவற்றின் பயன் அனுபவிப்பர் என்னும் அறநூல் துணிபுபற்றி, இப்பேரறஞ்செய்தான் தானும் கொல லப் படான். படானுகவே, அடியிற்கட்டிய வாழ்நாள் இடையூறின்றி எய்தும் என்பார், வாழ்நாள்மேல் கூற்றுச்செல்லாது என்ருர். செல லாதாகவே காலம் நீட்டிக்கும், நீட்டித்தால் ஞானம் பிறந்து உயிர் வீடு பெறும் என்பது கருத்து. இதனுன் அவர்க்குவரும் நன்மை கூறப் பட்டது.

**மணக் :—** *கொல்லாமையை விரதமாகக்கொண்டு ஒழுகுமவன் வாழ்நாளின்மேல், உயிருண்ணும் கூற்றுச் செல்லாது என்றவாறு.*

*பிறவாமை உண்டாமாதலால் கூற்றுச்செல்லாது என்ருர். இது கொல்லாமையின் பயன் கூறிற்று.* (7)

**பருதி :—** *எ - து கொல்லாவிரதம் நிலைபெற்றவன் மேலே யமன்வர அஞ்சுவான் என்றவாறு.* (9)

**காளிங் :—** *எ - து கொல்லாமையாகின்ற சிறந்த அறத்தினைத் தன்னிடத்து என்றும் கொண்டு இடைவிடாது நடாத்துகின்ருன் யாவன்? அவனது வாழ்நாள்மேல் சென்று அடராது மற்று ஏனை உயிர் உண்ணும் கூற்ருனது என்றவாறு.* (2)

## மேற்கோள்பகுதி :

நச் :— *யானையின் பசுந்தோல் பிறர் உடம்பில் பட்டால் கொல்லும் என்று உணர்க. "கொல்லாமை.........கூற்று" என்றார் பிறரும். (சீவக, 2787.)*

சுவாமி :— *"கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான்" : மறைச் சொல் விதிப்பொருள் தந்தது.* (இ. கொ, 77.)

## ஒப்புமைப்பகுதி :

"வேள்விவாய்க் கண்படுத்தும் வெவ்வினைசெய் யாடவர்கை
வாளின்வாய்க் கண்படுத்தும் வாரணத்தின் ஈருரிபோல்
கோளிவெற்பு நீளெரிவாய்க் கண்படுத்தும் இன்னணமே
நாளுலப்பித் திட்டார் நமரலாதார் எல்லாம்." —சிந்தா. 2787.

**327. தன்உயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறிது**
**தின்உயிர் நீக்கும் வினை.** (எ)

## உரைப்பகுதி :

**பரிமே:—** தன் உயிர் நீப்பினும் - அது செய்யாவழித் தன்னுயிர் உடம்பின் நீங்கிப் போம் ஆயினும், தான் பிறிது இன்னுயிர் நீக்கும் வினை செய்யற்க - தான் பிறிதோரின்னுயிரை அதன் உடம்பின் நீக்கும் தொழிலைச் செய்யற்க.

தன்னை அது கொல்லினும் தான் அதனைக் கொல்லற்க என்றது, பாவம் கொலையுண்டவழித் தேய்தலும் கொன்றவழி வளர்தலும் நோக்கி. இனித் தன்னுயிர் நீப்பினும் என்பதற்குச் சாந்தியாகச் செய்யாதவழித் தன்னுயிர் போமாயினும் என்று உரைப்பாரும் உளர்; பிற செய்தலும் ஆகாமையின், அஃது உரையன்மை அறிக.

மண்க் :— *தன்னுயிர் நீங்கினும் செய்யாது ஒழிக; தான் பிறிது ஒன்றினுடைய இனிய உயிரை விடுக்கும் தொழிலினை என்றவாறு.*

*உயிக்குக் கேடுவருங் காலத்து நோய்க்கு மருந்தாகக் கொல்லுதல் குற்றம் அன்று என்பார்க்கு, இது கூறப்பட்டது.* (1)

பருதி :— *எ - து தன்னுயிர் துறக்கும் காலமாகினும், இது பிழைக்கும் என்று, ஆடு, கோழி, பன்றியினைப் பிரார்த்தனை செய்வான் அல்லன்; அது எது எனில், அந்தப் பிராணனாலே, தன் பிராணன் பிழைப்பதாவது*

தனக்குள்ள வாணுள் தப்பாதே! தான் வீண் பாவம் எய்தவேண்டாம் என்றவாறு. (8)

காளிங் :— எ - து பிறிதொன்று வந்து தன்னுயிரை விடுவிப்பதாயினும் தான் மற்று அதன் பொருட்டாக வெகுண்டு இனிய அவ்வுயிரின் காரணம் கொலேவினே அஞ்சும் பண்பின்ருகிய வினையினைச் செய்யற்க என்றவாறு. (9)

**மேற்கோள்பகுதி :**

**பெருந்தே :—** மறுத்தலுக்கு மேற்கோள். (வீரசோ. 180. உரை.)

**328. நன்ருகும் ஆக்கம் பெரிதெனினும் சான்ருேர்க்குக்**
**கொன்ருகும் ஆக்கம் கடை. (அ)**

**உரைப்பகுதி :**

**பரிமே :—** நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனினும் - தேவர் பொருட்டு வேள்விக்கண் கொன்ருல் இன்பமிகுஞ் செல்வம் பெரிதாம் என்று இல்வாழ்வார்க்குக் கூறப்பட்டதாயினும், சான்ருேர்க்குக் கொன்று ஆகும் ஆக்கம் கடை – துறவான் அமைந்தார்க்கு ஒருயிரைக் கொல்லவரும் செல்வம் கடை.

இன்பமிகும் செல்வமாவது தாமும் தேவராய்த் துறக்கத்துச் சென்று எய்துஞ் செல்வம். அது சிறிதாகலானும், பின்னும் பிறத்தற்கு ஏதுவாகலானும், வீடாகிய ஈறிலின்பம் எய்துவார்க்குக் கடை எனப் பட்டது. துறக்கம் எய்துவார்க்கு ஆமாயினும் வீடெய்துவார்க்கு ஆகாது என்றமையின், விதி விலக்குகள் தம்முள் மலேயாமை விளக்கியவாருயிற்று. இஃது இல்லறமன்மைக்குக் காரணம். இவை இரண்டுபாட்டானும் கொலேயது குற்றம் கூறப்பட்டது.

மணக் :— நன்மையாகும் ஆக்கம் பெரிதேயாயினும், ஒருயிரைக் கொன்று ஆகின்ற ஆக்கம் உயர்ந்தோர்க்கு ஆகாது என்றவாறு.

இது பெரியோர் வீடுபேற்றை விரும்பிக் கன்மத்தை விடுத்தலால், வேள்வியின் வரும் கொலேயும் ஆகாது என்றது. (10)

பருதி:— எ - து கொலே செய்வாரும், புலேயரும் நிகராம்; பாவத்தின் சொரூபமாவது புலேயர் என்றவாறு. (5)

காளிங்:— எ - து ஒன்றின் கொலையானது எக்காலமும் கேடின்றி இனிதாகிய ஆக்கத்தைப் பெரிதும் பயக்கும் என்று அறநூல் சொல்லினும் துறவோர்க்கு ஒன்றினையும் கொன்றுகுவதோர் ஆக்கம் சாலக்கடை என்றவாறு.

இனி மற்று இத்துறவோர்க்குக் கொல்லாமை என்னும் குறிக்கோள் உண்டாயிற்று. உடம்பும் உயிரும் உடன்வாழு நிலை அழிதல் அஞ்சி அன்றே; இதனால் அது காரணமாகக் கொண்டு அனைத்து வகைப் பட்ட உடம்பும் உயிரும் வினைவழி வினைவழிப் பிறந்து வருகின்ற நிலையாமை யைத் தேர்தலும் அவரது நிலைக்கு உரித்தாகலான் மற்று இதன் பின்னரே *அதனை அறிவிக்கின்றது. (10)

## ஒப்புமைப்பகுதி :

''உழக்கேயுண்டு படைத்து ஈட்டிவைத்து இழப்பார்களும் சிலர்கள்
வழக்கே எனில் பிழைக்கேம் என்பர்.'' —சுந்தரர். திருக்கே. 4

## 329. கொலைவினையர் ஆகிய மாக்கள் புலைவினையர் புன்மை தெரிவார் அகத்து. (கூ)

## உரைப்பகுதி:

**பரிமே :—** கொலை வினையர் ஆகிய மாக்கள் - கொலைத் தொழிலை உடையராகிய மாந்தர், புன்மை தெரிவார் அகத்துப் புலை வினையர் - அத்தொழிலின் கீழ்மையை அறியாத நெஞ்சத்தாராயினும், அறிவார் நெஞ்சத்துப் புலைத்தொழிலினர்.

கொலைவினையர் என்றதனான், வேள்விக்கண் கொலையன்மை அறிக. புலைவினையர் என்றது தொழிலால் புலையர் என்றவாறு. இம் மைக்கண் கீழ்மையெய்துவர் என்பதாம்.

**மணக்:—** கொலைத் தொழிலினை உடையாராகிய மாக்கள் பொல்லா மையை ஆராய்வாரிடத்து, தொழிற்புலையாராகுவர் என்றவாறு.

இவரை உலகத்தார் கன்மசண்டாளர் என்று சொல்லுவார். (9)

**பருதி:—** எ - து ஒருயிரைக் கொன்றால், இதனாலே ஆக்கம் வரும் என் றாலும், அப்படிப்பெற்ற செல்வமும் சடுதியிலே கெடும் என்றவாறு. (6)

**காளிங்:—** எ - து கொலைத்தொழில் உடையராகிய மாக்கள், 'கடையாயின புலையரினும் இவரே புலைத்தொழிலுடையவர் என்று சொல்லப்படுவார்; நூல்முறைமையான நூல்களில் குற்றங்கள் ஆராயும் சான்றோரிடத்து என்றவாறு. (6)

* அதனை என்றது நிலையாமை என்ற அடுத்த அதிகாரத்தை.

330. [1]உயிருடம்பின் நீக்கியார் என்ப செயிருடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். (ம)

**உரைப்பகுதி :**

**பரிமே:**— செயிர் உடம்பின் செல்லாத் தீவாழ்க்கையவர் - நோக்கலாகா நோயுடம்புடனே வறுமை கூர்ந்த இழிதொழில் வாழ்க்கை யினை யுடையாரை, உயிர் உடம்பின் நீக்கியார் என்ப - இவர் முற்பிறப் பின்கண் உயிர்களை அவை நின்ற உடம்பினின்று நீக்கினவர் என்று சொல்லுவர் வினைவிளைவுகளை அறிந்தோர்.

செல்லாவாழ்க்கை தீவாழ்க்கை எனக்கூட்டுக. செயிருடம்பினர் ஆதல் 'அக்கேபோல் அங்கை யொழிய விரலழுகித் துக்கத் தொழு நோய் எழுபவே' என்பதனானும் அறிக. மறுமைக்கண் இவையும் எய்துவர் என்பதாம். இவை இரண்டுபாட்டானும் கொல்வார்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது.

[2] அருளுடைமை முதல் கொல்லாமையீறுகச் சொல்லப்பட்ட இவற்றுள்ளே சொல்லப்படாத விரதங்களும் அடங்கும்; அஃது அறிந்து அடக்கிக்கொள்க. ஈண்டு உரைப்பின் பெருகும்.

**மணக்:**— *முற்பிறப்பின்கண் உயிரை உடம்பினின்று நீக்கினர் இவர் என்று பெரியோர் கூறுவார்; குற்றமான உடம்பினையும் ஊணுஞ் செல்லாத தீய மனைவாழ்க்கையினையும் உடையாரை என்றவாறு.*

*இது கொலையினால் வருங் குற்றம் கூறிற்று.* (8)

**பருதி:**— *எ - து போனசென்மத்திலே கொலை செய்தவர் என்றறிக வியாதியான சரீரமும் தரித்திரமும் உள்ளபேர் என்றவாறு.* (7)

**காளிங்:**— *எ - து பிற உயிரை அவ்வுடம்பினின்றும் அவற்றின் துயர் கருதாது பிரித்திட்டவர் என்று சொல்லுப சான்றோர்; யாரை எனில் பின்பு தாம் உறும் துயரமானது உடம்பினின்றும் ஒருகாலும் நீங்காத கொடு நரகத்துள் வாழும் வாழ்க்கையினையுடையோரை என்றவாறு.* (5)

*செயிர் என்பது குற்றம்.*

**ஒப்புமைப்பகுதி :**

''அக்கேபோல் அங்கை ஒழிய விரலழுகித்
துக்கத் தொழுநோய் எழுபவே—அக்கால்
அலவனைக் காதலித்துக் கான்முறித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்.'' —நாலடி. 123.

[1] 'உயிருடம்பு நீக்கியார்' எனவும் பாடம். [2] 25-ம் அதிகாரம்.

# ஞானம்

இனி அவற்றின் பயனாகிய ஞானங்கூறிய தொடங்கினார். ஞானமாவது வீடு பயக்கும் உணர்வு. அது நிலையாமை முதல் அவா அறுத்தல் இறுதியாக நான்கு அதிகாரத்துள் அடக்கப்பட்டது.

## 34. நிலையாமை

**பரிமே:—** அவற்றுள் நிலையாமையாவது தோற்றமுடையன யாவும் நிலையுதலிலவாம் தன்மை. மயங்கியவழிப் பேய்த்தேரின் புனல் போலத் தோன்றி மெய்யுணர்ந்தவழிக் கயிற்றிலரவுபோலக் கெடுதலின் பொய் என்பாரும், நிலை வேறுபட்டு வருதலால் கணந்தோறும் பிறந்திறக்கும் என்பாரும், ஒருவாற்றான் வேறுபடுதலும் ஒருவாற்றான் வேறுபடாமையும் உடைமையின் நிலையுதலும் நிலையாமையும் ஒருங்கே உடைய என்பாரும் எனப் பொருட்பெற்றி கூறுவார் பலதிறத்தராவர்; எல்லார்க்கும் அவற்றது நிலையாமை உடம்பாடாகலின், ஈண்டு அதனையே கூறுகின்றார். இஃது உணர்ந்துழியல்லது பொருள்களின் பற்று விடாதாகலின், இது முன் வைக்கப்பட்டது.

**மணக் :—** *நிலையாமையாவது மயக்கத்தினால் தான் என்று நினைத்திருக்கின்ற யாக்கையும், தனது என்று நினைத்திருக்கின்ற பொருளும் நிலை நில்லாமையைக் கூறல்.*

**பருதி:—** *நிலையாமையாவது செல்வம், யாக்கை, இளமை இவைகள் நிலையல்ல என்றவாறு.*

**331. நில்லா தவற்றை நிலையின என்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை.** **(க)**

**உரைப்பகுதி:**

**பரிமே:—** நில்லாதவற்றை நிலையின என்று உணரும் புல்லறிவாண்மை - நிலையுதலிலவாகிய பொருள்களை நிலையுதலுடைய என்று கருதுகின்ற புல்லிய அறிவினை உடையராதல், கடை - துறந்தார்க்கு இழிபு.

தோற்றமுடையவற்றைக் கேடில என்று கருதும் புல்லறிவால் அவற்றின்மேல் பற்றுச்செய்தல் பிறவித் துன்பத்திற்கு ஏதுவாகலின் அது வீடெய்துவார்க்கு இழுக்கென்பது இதனுல் கூறப்பட்டது. இனிப் புல்லறிவாளர் பெரும்பான்மையும் பற்றுச்செய்வது சிற்றின்பத்துக்கு ஏதுவாகிய செல்வத்தின் கண்ணும், அதனை அனுபவிக்கும் யாக்கையின் கண்ணுமாகலின், வருகின்ற பாட்டுக்களான் அவற்றது நிலையாமையை விதந்து கூறுப.

**மணக்:—** *நில்லாத பொருள்களை நிலைநிற்பன என்று நினைக்கின்ற புல்லிய அறிவுடைமை இழிந்தது என்றவாறு.*

*எனவே, பொருள்களை உள்ளவாறு காண ஒட்டாத மயக்கத்தைக் கடிய வேண்டும் என்றவாருயிற்று.* (1)

**பருதி:—** *எ - து நில்லாத யாக்கையை நிற்கும் என்று கருதுவது புல்லறிவு என்று சொல்லப்படும்.* (1)

**காளிங்:—** *எ - து இவ்வுலகத்தின்கண் உண்மை நோக்கில் யாவையும் நிலையாவாயிருக்க அங்கனம் நில்லாதனவற்றை நிலையுடையன என்று கருதும் அறியாமை, இயல்பு உணர்வோர்க்கு எஞ்ஞான்றும் சாலக்கடை என்றவாறு.* (1)

**ஒப்புமைப்பகுதி:**

"பொய்த்தன்மைத் தாயமாயப் போர்வையை மெய்யென்று எண்ணும்
வித்தகத்தாயவாழ்வு வேண்டி நான் விரும்புகில்லேன்." —சுந்தரர். ஆரூர். 9.

**332. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.** (உ)

**உரைப்பகுதி :**

**பரிமே:—** பெருஞ்செல்வம் கூத்தாட்டு அவைக் குழாத்தற்று- ஒருவன்மாட்டுப் பெரியசெல்வம் வருதல் கூத்தாடுதல் செய்கின்ற அரங்கின்கண் காண்போர்குழாம் வந்தாற்போலும்; போக்கும் அது விளிந்தற்று - அதனது போக்கும் அக்கூத்தாட்டு முடிந்தவழி அக் குழாம் போயினாற் போலும்.

பெருஞ்செல்வம் எனவே துறக்கச் செல்வமும் அடங்கிற்று. போக்கும் என்ற எச்சவும்மையான், வருதல் என்பது பெற்றும். அக் குழாம் கூத்தாட்டுக் காரணமாக அரங்கின்கண் பல்திறத்தால் தானே

வந்து, அக்காரணம் போயவழித் தானும் போமாறு போல, செல்வமும் ஒருவன் நல்வினை காரணமாக அவன் மாட்டுப் பல்திறத்தால் தானே வந்து, அக்காரணம் போயவழித் தானும் போம் என்றதாயிற்று.

மணக்:— கூத்தாட்டுக் காண்டற்கு அவைக்கூட்டம் திரண்டாலொக்கும் பெருஞ்செல்வத் திரளும்; அந்த அவை எழுந்து போனாற் போலும் அது போமாறும், என்றவாறு. (3)

பருதி :— எ - து சந்தையிற் கூட்டம் நாலுபேரும் ஆறுபேறும் வந்து சந்தையில் காரியங் கண்டு மீண்டும் போவார்கள்; அப்படியல்ல செல்வம். எப்படி என்றால், கூத்தாடல் பார்க்க நாலு பேரும் ஆறு பேறும் வந்து கூத்துக்கண்டு, கூத்துக் குலைந்தபோது ஒருக்காலே பிரிந்து ஓடுவார்கள். அதற்கு ஒக்குமே செல்வத்தின் கூட்டம்; எப்படி என்றால், இவன் செய்த புண்ணியத்திற்குத் தக்கதாக இலட்சுமி இருப்பாள்; இவன் தவசு மாறி, இலட்சுமி போன பின்பு அக்கினி, கள்ளர், இராசா, ஆறு இவையிற்றினாலே செல்வம் போம்; இது அறிந்து உள்ள பொழுதே தன்மஞ்செய்வான் என்றவாறு. (10)

காளிங் :— எ - து கூத்து என்பதோர் காரணமாக மக்கள் ஈட்டம் வந்து கூடினாற்போலச் சிறிது நல்வினை என்பதோர் காரணமாகப் பொருளீட்டம் வந்துளதாய், மற்றும் கூத்து ஒழிவின் பின்னரே மக்கட் கூட்டம் பிரிந்தாற்போலச் செய்தவத்து இறுதிப் பின்னரே மற்று அப்பொருள் அழிந்து ஒழிதலும் அத்தன்மைத்து என்றவாறு.

விளிதல் என்பது ஒழிதல். குழாம் என்பது கூட்டம். (3)

**மேற்கோள்பகுதி :**

மயிலை:— கூத்தாட்டு அவைக்குழாத்து வரவு எற்று அற்று அவர் பெற்ற பெருஞ் செல்வத்து வரவு என எதிர்மறை எச்சம். (நன். 359.)

சுவாமி: — ''செய்வி என் வினையுள் செய்வினை சிலவே'' என்பதற்கு, போக்கும் அது விளிந்தற்று என்பது உதாரணம். (இ. கொ. 72.)

**ஒப்புமைப்பகுதி:**

''கோடியர் நீர்மைபோல முறைமுறை, ஆடுநர் கழியுமிவ் வுலகம்.''

—புறம், 29: 23-24.

**333. அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்**
**அற்குப ஆங்கே செயல்.** (ரு)

**உரைப்பகுதி :**

பரிமே:— அற்கா இயல்பிற்றுச் செல்வம் - நில்லாத இயல்பினை உடைத்துச் செல்வம்; அது பெற்றால் அற்குப ஆங்கே செயல் -

அதனைப் பெற்றால், அதனால் செய்யப்படும் அறங்களை அப்பெற்ற பொழுதே செய்க.

அல்கா என்பது திரிந்து நின்றது. ஊழுள்ள வழி அல்லது துறந்தாரால் பெறப்படாமையின் அது பெற்றால் என்றும், அஃதில்வழி நில்லாமையின் ஆங்கே என்றும் கூறினர். அதனால் செய்யப்படும் அறங்களாவன பயனோக்காது செயப்படும் கடவுட்பூசையும் தானமும் முதலாயின. அவை ஞானஹேதுவாய் வீடுபயத்தலின், அவற்றை அற்குப என்றும், செயல் என்றும் கூறினர். இவை இரண்டுபாட்டானும் செல்வ நிலையாமை கூறப்பட்டது.

*மணக் :— நில்லாத இயல்பை உடைத்துச் செல்வம். அதனைப் பெற்றால், அப்பொழுதே நிற்பனவாகிய அறங்களைச் செய்க என்றவாறு.*

*நிலையாமை மூன்று வகைப்படும்; செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என.* (2)

*பருதி :— எ - து செல்வம் ஒரு இடத்தில் தங்காது; தன்னிடத்தில் செல்வம் வந்தபோதே தன் ஆத்மாவுக்குத் தங்கும்படியாக அன்னதானம் செய்வான் என்றவாறு.* (9)

*காளிங் :— எ - து உலகத்து யாவரும் அறியச் செல்வமானது நிலையாத இயல்பினை உடைத்து; மற்று அச்செல்வத்தைத் தம் கைத்து உளதாகப் பெற்றால் அதனால் நிலைபேறுடையவாகிய மறுமைக் காரணங்களையும் அப்பொருள் பெற்ற அப்பொழுதே செய்க என்றவாறு.*

*அற்கா இயல்பிற்று என்பது நிலையாத இயல்பிற்று. அற்குப என்பது நிலைபெறுவன.* (4)

**ஒப்புமைப்பகுதி :**

"கிழவர் இன்னோர் என்னாது பொருள்தான்
பழவினைமருங்கின் பெயர்பு பெயர்பு உறையும் கலி. 21-10.

"நில்லாது செல்வம் நிலவார் உடம்பு அடைந்தார்
செல்லார் ஒருங்கென்று சிந்தித்து — நல்லார்
அருளுளம் புரிகுவ ராயின்
இருளறு சிவகதி எய்தலோ எளிதே." —யா. வி. 55, மேற்.

"துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும். —நாலடி. 2.

"யானை எருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும் — ஏனை

"வினையுலப்ப வேருகி வீழ்வர்தாம் கொண்ட
மனையாளை மாற்ருர் கொள." —நாலடி-3.

"அரையது துகிலே மார்பினது ஆரம்
முடியது முருகு நாறும் தொடையல்
புடையன பால்வெண் கவரியின் கற்றை
மேலது, மாலை தாழ்ந்த மணிக்கால் தனிக்குடை
முன்னது முரசு முழங்குந் தானை
இந்நிலை இனைய செல்வத் தீங்கிவர்
யாவ ரேயோ தேவ ரல்லர்
இமைப்பதும் செய்தனர் மாந்த ரேஎன
மயக்கம் நீங்கக் களிற்றுமிசை வந்தனர்
நெருந லின்றிவர் பசிப்பிணி காய்தலின்
உணங்கிய துணியும் உடுத்து
மாசுமிப் போர்த்த யாக்கையொடு
தாமே ஒருசிறை இருந்தனர் மன்னே." —ஆசிரியமாலை.

## 334. நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும் வாள துணர்வார்ப் பெறின். (ச)

**உரைப்பகுதி:**

**பரிமே:—** நாள் என ஒன்றுபோல் காட்டி ஈரும் வாளது உயிர் - நாளென்று அறுக்கப்படுவதொரு காலவரையறைபோலத் தன்னைக் காட்டி ஈர்ந்து செல்கின்ற வாளினது வாயது உயிர்; உணர்வார்ப் பெறின் -அ∴து உணர்வாரைப் பெறின்.

காலம் என்னும் அருவப்பொருள் உலகியல் நடத்தற்பொருட்டு ஆதித்தன் முதலிய அளவைகளால் கூறுபட்டதாக வழங்கப்படுவதல் லது தானுகக் கூறுபடாமையின் நாளென ஒன்றுபோல் என்றும், அது தன்னை வாளென்று உணரமாட்டாதார் நமக்குப் பொழுது போகா நின்றது என்று இன்புறுமாறு நாளாய் மயக்கலின் காட்டி என்றும், இடைவிடாது ஈர்தலான் வாளின்வாயது என்றும், அ∴து ஈர்கின்றமையை உணர்வார் அரியராகலின் உணர்வார்ப்பெறின் என்றும் கூறினர். உயிரென்னுஞ் சாதிஒருமைப்பெயர் ஈண்டு உடம்பின்மேல் நின்றது, ஈரப்படுவது அதுவே யாகலின். வாள் என்பது ஆகுபெயர். இனி இதனை நாளென்பதொரு பொருள்போலத் தோன்றி உயிரை ஈர்வதொரு வாளாம் என்று உரைப்பாரும் உளர். என என்பது பெயரன்றி இடைச்சொல்லாகலானும், ஒன்று போற்காட்டி என்பதற்கு ஒரு பொருட் சிறப் பின்மையானும், அது என்பது குற்றியலுகரம் அன்மையானும், அ∴து உரையன்மை அறிக.

மணக்:— நாளென்பது இன்பந் தருவதொன்று போலக் காட்டி உயிரை ஈர்வதொரு வாளாம்; அதனை அறிவாரைப் பெறின், என்றவாறு.

இஃது உயிரீரும் என்றமையால், இளமை நிலையாமை கூறிற்று. (4)

பருதி:—எ - து *நாளெனப் பேர் பெற்றிருக்கிற உயிர் அறுக்கும் ஈர்வாள் அறிவின் கண்ணால் பார்த்தால் ஈர்வாளாம்; அல்லது, ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்று தோன்றும் நாள் என்றவாறு. (4)

காளிங்:— எ - து உலகத்தோருக்கு நாளென்றுகொண்டு வேறே ஒன்றுளதுபோல் ஒருநெறி காட்டிச் செல்கின்றது யாதோ எனில் மற்றது மரத்தினது உருபு வேறுபட்டுக் கழியுமாறு அதனை ஈர்ந்து கொல்லும் ஈர்வாளாம்; எவ்விடத்து எனில் இதன் உண்மைப்பாட்டினை உற்றுணர் வாரைப் பெற்ற இடத்து என்றவாறு. (5)

## மேற்கோள்பகுதி:

தெய்வச்:— நாளென ஒன்றுபோல் காட்டி என்றவழி, என என் இடைச்சொல் பெயர் குறித்து நின்றது. (தொல். சொல். 254.)

## ஒப்புமைப்பகுதி:

"தோற்றஞ்சால் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்றம் அளந்துநும் நாளுண்ணும் — ஆற்ற
அறஞ்செய்(து) அருளுடையிர் ஆகுமின் யாரும்
பிறந்தும் பிறவாதார் இல்." —நாலடி. 7

"கருவிடை வந்த ஒருநாள் தொடங்கி
மறவா மறலி முறைபிறழ் பேழ்வாய்
அமிற்றலை யன்ன எயிற்றிடைக் கிடந்து. —கோயில் நான்மணி 8: 5-7

### 335. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
### மேற்சென்று செய்யப் படும். (ரு)

## உரைப்பகுதி:

பரிமே:— நாச்செற்று விக்குள் மேல் வாராமுன் - உரையாடா வண்ணம் நாவை அடக்கி விக்குள் எழுவதற்கு முன்னே; நல்வினை

* 'நாழிகை, நாள், மாதம், வருஷம் என்று சொல்லப்பட்டது ஆதித்தனுடைய பிரமாணத்தினாலே. அந்த நாள் என்கிறதைக்காட்டி உலகத்திலே உள்ள சீவன்களுடைய சரீரங்களை வாளாலே அறுத்துக்கொண்டு போகிறான் என்று எண்ணிக்கொள்வார்கள் அறிவுள்ளோர்கள். அறிவில்லாதார் நமக்குப் பொழுது போகிறது என்று சந்தோஷப்படுவார்கள். தங்கள் ஆயுசு மாண்டுபோகிறதை அறியார்கள். "வைகலும் வைகல்வரக் கண்டும் அஃது உணரார்...." (நாலடி. 39.) என்னும் செய்யுள் ஈண்டுக் கவனிக்கத்தக்கது.'

—கவிராஜபண்டிதர்.

மேற்சென்று செய்யப்படும் - வீட்டிற்கேதுவாகிய அறம் விரைந்து செய்யப்படும்.

மேல்நோக்கி வருதல் ஒரு தலையாகலானும், வந்துழிச் செய்தலே யன்றிச் சொல்லலும் ஆகாமையானும் வாராமுன் என்றும், அதுதான் இன்னபொழுது வரும் என்பது இன்மையின் மேற்சென்று என்றும், கூறினார். மேற்சேறல் மண்டுதல். நல்வினை செய்யுமாற்றின் மேல் வைத்து நிலையாமை கூறியவாறு.

மணக்:— நா வழங்காமல் செறுத்து விக்குளானது மீதூர்ந்து வருவதன் முன்னே, நல்வினையை மேல் விழுந்து செய்யவேண்டும், என்றவாறு.

இஃது உயிரானது கழிவதன் முன்னே நல்வினையைச் செய்ய வேண்டும் என்றது. (5)

பருதி:— எ - து நாக்குக் குழறி விக்கலும் வருமுன்னே, அறம் செய்வான்; பின்னை வசமல்ல; பொன்னும் பொரிவிளங்காயாம் என்று. (8)

காளிங்:— எ - து யாக்கையின்கண் உயிர் நிலையாமை இயல்பு ஆதலால் தமது நாவினைச் செற்றுக்கொண்டு விக்குளானது மேற்போந்து கழிவதன் முன்னே நல்வினைக்கண்ணே நெஞ்சு ஒருப்பட்டு மற்று அதனைக் காயத்தினாலும் மனத்தினாலும் வாக்கினாலும் மேலாகிய துறவறத்தின்கண் நின்று ஒழுகப்படும் என்றவாறு. (2)

**ஒப்புமைப்பகுதி:**

"இளமையும் நிலையாவாம் இன்பமும் நின்றவல்ல
வளமையும் அஃதேயால் வைகலும் துன்பவெள்ளம்
உளவென நினையாதே செல்கதிக்கு என்றும் என்றும்
விளைநிலம் உழுவார்போல் வித்துநீர் செய்துகொண்மின்," —வளையாபதி.

"புறந்திரைந்து நரம்பெழுந்து நரைத்தி நீ யுரையால் தளர்ந்து
அறம்புரிந்து நினைப்பது ஆண்மை அரிதுகாண். —சுந்தரர். திருப்புறம். 3.

**336. நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
*பெருமை உடைத்திவ் வுலகு. (சா)**

**உரைப்பகுதி :**

பரிமே :— ஒருவன் நெருநல் உளன் இன்று இல்லை என்னும் பெருமை உடைத்து - ஒருவன் நெருநலுளனாயினன் அவனே இன்று

* 'பெருமை பிறங்கிற்று உலகு' எனவும் பாடம்.

இல்லையாயினன் என்று சொல்லும் நிலையாமை மிகுதியுடைத்து, இவ் வுலகு - இவ்வுலகம்.

ஈண்டு உண்மை பிறத்தலையும், இன்மை இறத்தலையும் உணர்த்தி நின்றன. அவை பெண்பாற்கும் உளவாயினும், சிறப்புப்பற்றி ஆண் பாற்கே கூறினர். இந்நிலையாமையே உலகின் மிக்கது என்பதாம்.

**மணக்:—** ஒருவன் நேற்று உளனுயிருந்தான், இன்று இல்லையாயினன் என்று சொல்லும் பெருமையை இவ்வுலகம் உடைத்து என்றவாறு. (6)

இது யாக்கை நிலையாமை கூறிற்று.

**பருதி:—** எ - து நேற்றிருந்தான் இன்று செத்தான் என்னும் பெருமை உண்டு உலகுக்கு என்றவாறு. (3)

**காளிங்:—** எ - து ஒருவன் நேற்று இருந்தவன் நேற்று இல்லை என்றும், இன்று இருந்தவன் இன்று இல்லை என்றும் உரைக்கப்பட்ட நிலையாமையின் பெருமை உடைத்து இவ்வுலகம்; ஆதலால் மற்று இக் காயம் இறப்பதன் முன்னம் பிறப்பறுத்தற்கு எய்துவதாகிய துறவறம் இயற்றுக என்பது கருத்தாயிற்று என்றவாறு.

மற்று இவ்வுலகத்து உடலும் உயிரும் பொருளும் நிலையாமை தெரிந்த பெரியோர் இங்கனம் வருகின்ற பிறவியை அஞ்சித் துறவு இயற்றுவரன்றே வீட்டின்பங்கருதி; மற்று அதனால் இதன்பின்னரே அறிவிக்கின்றது [1] அதனை. (10)

## மேற்கோள்பகுதி :

**சிவஞான:—** உண்டுபோ வின்ருதல் இத்துணைப் பொழுது நசிக்குமென்றறியவாராது நெடுங்காலம் நிலைபெறுவனபோலத்தோன்றிக் காலம் வந்துழி அங்ஙனே கடிதில் மறைந்து போதல். 'நெருநல்......உலகு என்று ஓதியதும் இதுபற்றி என்க. (சிவஞானபோ. சூ. 6. அதி. 1.)

## ஒப்புமைப்பகுதி :

"பொன்றுதல் ஒருகாலத்தும் தவறுமோ புதுமைத்தன்றே
இன்றுளார் நாளைமாள்வார் புகழுக்கும் இறுதியுண்டோ. ---கம்ப.

இன்றுளார் நாளையில்லை யெனும் பொருள். ---அப். குறைந்த-1.

ஒன்றுமோரா துழிதரு மூமர்காள். ஷ ---மேலைத்திரு : 9.

---

1 அதனை என்றது துறவு என்ற அடுத்த அதிகாரத்தை.

**337.** **ஒருபொழுதும் வாழ்வ தறியார், கருதுப[1]**
**கோடியும் அல்ல பல.** **(எ)**

**உரைப்பகுதி :**

**பரிமே:—** ஒருபொழுதும் வாழ்வது அறியார் - ஒருபொழுதளவும் தம்முடம்பும் உயிரும் இயைந்திருத்தலைத் தெளியமாட்டார்; கோடியும் அல்ல பல கருதுப - மாட்டாதுவைத்தும், கோடியளவுமன்றி அதனினும் பலவாய நினைவுகளை நினையாநிற்பர் அறிவிலாதார்[2].

இழிவுசிறப்பு உம்மையால் பொழுது என்பது ஈண்டுக் கணத்தின் மேல்நின்றது. காரணமாகிய வினையினளவே வாழ்தற்கும் அளவாகலின், அஃதறியப்படாதாயிற்று. பலவாய நினைவுகளாவன பொறிகளான் நுகரப்படும் இன்பங்கள் தமக்கு உரியவாமாறும், அதற்குப் பொருள் துணைக்காரணமாமாறும், அது தம்முயற்சிகளான் வருமாறும், அவற்றைத் தாம் முயலுமாறும், அவற்றிற்குவரும் இடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், நீக்கி அப்பொருள் கடைக்கூட்டுமாறும், அதனைப் பிறர் கொள்ளாமல் காக்குமாறும், அதனுன் நட்டாரை ஆக்குமாறும், நள்ளாரை அழிக்குமாறும், தாம் அவ்வின்பங்கள் நுகருமாறும் முதலாயின. அறிவிலாரது இயல்பின் மேல்வைத்து நிலையாமை கூறியவாறு. இனிக் கருதுப என்பதனை அஃறிணைப் பன்மைப் பெயராக்கி உரைப்பாரும் உளர்.

**மணக் :—** ஒரு பொழுதளவும் தம்முயிர் நிலைநிற்கும் என்பதனை அறியாராயிருந்தும், தமது வாழ்நாளைக் கோடியுமல்ல, பலவாகக்கருதுவர் உலகத்தார், என்றவாறு

மேல் ஒருநாள் உளனுனவன் பிற்றை ஞான்று செத்தான் என்றார். ஈண்டு ஒருபொழுதளவும் உயிர் நிலையாகாது என்றார். (7)

**பருதி:—** எ - து ஒரு பொழுதும் யாக்கை நிலைநிற்கும் என்பது அறிவில்லை; இந்தச் சீவனுக்கு வேண்டின மூன்றுசையில்; அப்பரந்த எண்ணிக்கை கோடியும் அல்ல என்றவாறு. (2)

**காளிங்:—** எ - து இமைப்பொழுதளவில் சாதலும் பிறத்தலும் உயிர்களின் நிலையாமைக்கு இயல்பு எனினும் இவற்றின் இடைப்படு காலம் பெரிதாம் எனில் மற்றது தானும் உடம்போடு உயிர்வாழுங் காலம் ஒருபொழுதும் ஒருமாத்திரமும் துணிதல் அறியார்; மற்று இதன் நிலைமை

---

1 'கருதுவ' என்பது பருதியார் பாடம்.

2 'எண்பது கோடி நினைந்து எண்ணுவன' - நல்வழி. 28.

இவ்வாறுயினும் அளவிறந்த காலமெல்லாம் இருந்து வாழ்வதற்குச் செய்துகொள்ளக் கருதுவன ஒருகோடியுமல்ல பின்னும் பல; எனவே இக் கருத்துக் கொண்டு உண்டு வாழ்தல் அரிது என்றவாறு.

**உரைவிளக்கப்பகுதி** :

**நுண்:—** *''கருதுப'' என்பது உயர்திணைப் பன்மை. பகூாந்தரத் துள்ளும் ''வகரவீறுய்ப் பாடமோதி'' என்னுமையால் அஃறிணைப் பன்மைக்கு ''எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப'' (392) என்பதுபோல் பகரம் ஈருயிற்று.*

**மேற்கோள்பகுதி :**

**காரிரத்ன:—** *பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற. 251.)*

**338. குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே**
**உடம்போ டுயிரிடை நட்பு. (அ)**

**உரைப்பகுதி:**

**பரிமே:—** குடம்பை தனித்து ஒழியப் புள் பறந்தற்று - முன் தனியாத முட்டை தனித்துக் கிடப்ப அதனுள் இருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்துபோன தன்மைத்து, உடம்போடு உயிரிடை நட்பு - உடம்பிற்கும் உயிர்க்கும் உளதாய நட்பு.

தனித்து ஒழிய என்றதனுன், முன் தனியாமை பெற்றும். அஃதாவது கருவும் தானும் ஒன்றுப்ப்பிறந்து வேருந்துணையும் அதற்கு ஆதாரமாய் நிற்றல்; அதனுல் அஃது உடம்பிற்குவமையாயிற்று. அதினுள் வேற்றுமையின்றி நின்றேபின் புகாமல்போகலின், புள் உயிர்க்கு உவமை ஆயிற்று முட்டையுள் பிறப்பன பிறவும் உளவேனும், புள்ளையே கூறினர் பறந்துபோதல்தொழிலான், உயிரோடு ஒப்புமை எய்துவது அதுவேயாகலின். நட்பு என்பது ஈண்டுக் குறிப்புமொழியாய் நட்பின்றிப் போதல் உணர்த்தி நின்றது. சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முள் மாறுகலின் வினைவயத்தால் கூடியதல்லது நட்பில என்பது அறிக. இனிக் குடம்பை என்பதற்குக் கூடு என்று உரைப்பாரும் உளர்; அது புள்ளுடன் தோன்றுமையானும், அதன்கண் அது

மீண்டு புகுதல் உடைமையானும், உடம்பிற்கு உவமையாகாமை அறிக.

**மணக்:—** கூடு தனியே கிடக்கப் புள்ளுப் பறந்து போனாற் போலும்; உடம்போடு உயிர்க்கு உள்ள நட்பு என்றவாறு.

மேல் ஒருபொழுது என்று காலங்கூறினார்; ஈண்டு உயிர் வினைத்த பொழுது போம் என்றார். (8)

**பருதி:—** எ - து பட்சி முட்டையிட்டு வாழ்கிற கூடும் முட்டையும் போலும் உடலும் உயிரும்; ஆகையினாலே, யாக்கை உள்ள பொழுதே தன்மம் செய்வான் என்றவாறு. (6)

**காளிங்:—** எ - து இவ்வுலகத்துக் குருவி முதலிய பறவையானது தான் வாழும் கூடு தன்னையின்றி தனித்து ஆங்கு ஒழியப் பறந்து போகிய அத்தன்மைத்தே; மற்று யாதோ எனின் உடம்போடு உயிரின்கண் உளதாகிய உறவுபாடு என்றவாறு. (7)

குடம்பை என்பது புள் இயற்றும் கூடு.

## உரைவிளக்கப்பகுதி :

**நுண்:—** நட்பு என்பது ஈண்டுக் குறிப்புமொழியாய் நட்பின்றிப் போதல் உணர்த்தி நின்றது; 'கல்கறித்து நன் கட்டாய்' என்பதும் அது.

## ஒப்புமைப்பகுதி :

"... .... .... .... பராரை
அலங்க லஞ்சினைக் குடம்பை புல்லெனப்
புலம்பெயர் மருங்கிற் புள்ளெழுந் தாங்கு
மெய்யிவண் ஒழியப் போகி யவர்
செய்வினை மருங்கிற் செலீஇயர்இன் உயிரே. —அகம் 113:23-27.

"கேளாதே வந்து கிளைகளாய் இல்தோன்றி
வாளாதே போவரால் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து." —நாலடி. 30.

"விடம்பயில் எயிற்றரா வுரியும் விறுமை
குடம்பையும் தானெனுங் கொள்கைத் தேகொலோ
தடம்பயல் கூத்தரின் நடிக்கும் ஐவர்வாழ்
உடம்பையும் யானென உரைக்கற் பாலதோ. —திருவிளை:

"காண லாம்பர மேகட் கிறந்ததோர்
வாணி லாப்பொரு ளேயிங்கோர் பார்ப்பெனப்
பாணனேன் படிற்றுக்கையை விட்டுனைப்
பூணு மாறு அறியேன் புலன் போற்றியே." —திருவா. 48.

339. உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. (கூ)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** சாக்காடு உறங்குவது போலும் - ஒருவனுக்குச் சாக்காடு வருதல் உறக்கம் வருதலோடு ஒக்கும்; பிறப்பு உறங்கி விழிப்பது போலும் - அதன்பின் பிறப்பு வருதல் உறங்கி விழித்தல் வருதலோடு ஒக்கும்.

உறங்குதலும் விழித்தலும் உயிர்கட்கு இயல்பாய்க் கடிதின் மாறி மாறி வருகின்றாற்போலச் சாக்காடும் பிறப்பும் இயல்பாய்க் கடிதின் மாறிமாறி வரும் என்பது கருத்து. நிலையாமையே நிலைபெற்றவாறு அறிவித்தற்குப் பிறப்பும் உடன் கூறப்பட்டது.

**மணக் :—** *உறங்குவதனோடு ஒக்கும் சாக்காடு; உறங்கி விழிப்பதனோடு ஒக்கும் பிறப்பு என்றவாறு.*

*இது போன உயிர் மீண்டு பிறக்கும் என்பதூஉம், இறத்தலும் பிறத்தலும் உறங்குதலும் விழித்தலும் போல மாறிவரும் என்பதூஉம் கூறிற்று.* (9)

**பருதி:—** *எ - து நித்திரை போல மரணம்; விழிப்பது போலே பிறப்பு என்று அறிக என்றவாறு.* (5)

**காளிங் :—** *எ - து வாழும் யாக்கையில் கரணங்களின் ஒடுக்கம் போலும் மற்று அவ்யாக்கையது இறந்துபாடும்; இனி இதன் கொள்கையுள கரணங்கள் புலப்பட்டு இமைத்து விழித்தாற்போலும் பிறப்பும் என்றவாறு.*

*புக்கில் என்பது புக்குப்போகின்ற இல்லம். துச்சில் இருந்து என்பது குடியிருத்தல்.* (8)

**மேற்கோள்பகுதி :**

**சுவாமி:—** *வினைமுற்றுப்பெயர் தொழிற்பெயரில் வந்தமைக்கு 'உறங்குவது' என்பது மேற்கோள். (இ. கொ. 83.)*

**சிவஞான:—** *சிவியாவிற்பது என்பது 'உறங்குவது போலும்' என்புழிப்போலத் தொழிற்பெயர் மாத்திரையாய் நின்றது. (சிவஞானபோ. சூ. 3. அதி. 5.)*

**ஒப்புமைப்பகுதி :**

"கட்டுயில் அனந்தர் போலக் கதிகளுள் தோன்றுமாறும்
விட்டுயிர் போகு மாம் வீடுபெற் றுயரு மாறும்
உட்பட உணர்ந்த யானே உட்குழைந் துருகல் செல்லேன்
எட்பக வனைத்து மார்வம் ஏதமே இரங்கல் வேண்டா. —சீவக 1097

"பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்."
—மணி. ஆதிரை. 86 - 87.

"விழித்திமைக்கும் மாத்திரையன்றே ஒருவன்
அழித்துப் பிறக்கும் பிறப்பு. —நாலடி. 302.

"உறங்கி விழித்தாலொக்கும் இப்பிறவி." —சுந்தரர் - நெல்வாயில். 4.

**340. புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்**
**துச்சில் இருந்த உயிர்க்கு.** (ம)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு - வாதம் முதலியவற்றின் இல்லாய உடம்புகளுள் ஒதுக்கிருந்தே போந்த உயிர்க்கு; புக்கில் அமைந்தின்று கொல் - என்ஞான்றும் இருப்பதோர் இல் இதுகாறும் அமைந்தது இல்லைபோலும்.

அந்நோய்கள் இருக்க அமைந்த ஞான்று இருந்தும், வெகுண்ட ஞான்று போயும், ஒருடம்பினும் நிலைபெறாது வருதலால், துச்சிலிருந்த என்றார். பின் புறப்படாது புக்கேவிடும் இல் அமைந்ததாயின், பிறர் இல்களுள் ஒதுக்கிராது என்பதாம்; ஆகவே உயிரோடுகூடி நிற்ப தோர் உடம்பும் இல்லை என்பது பெறப்பட்டது. இவை ஏழுபாட்டா னும், முறையே யாக்கைகட்கு வரைந்த நாள் கழிகின்றவாறும், கழிந் தால் உளதாய நிலையாமையும். அவை ஒரோவழிப் பிறந்த அளவிலே இறத்தலும், ஒருகணமாயினும் நிற்கும் என்பது தெளியப்படாமையும், உயிர்நீங்கியவழிக் கிடக்குமாறும், அவற்றிற்கு இறப்பும் பிறப்பும் மாறிமாறி வருமாறும் அவைதாம் உயிர்க்குரிய வன்மையும் என்று, இவ் வாற்றால் யாக்கை நிலையாமை கூறியவாறு கண்டுகொள்க.

**மணக் :—** *தனது அல்லாத உடம்பினுள்ளே ஒதுக்குக் குடியா இருந்த உயிர்க்குப் போயிருப்பதற்கு இடம் அமைந்தது இல்லையோ? அமைந்ததாயின், இதனுள் இராது என்றவாறு.*

புக்கில் என்பது முத்தி ஸ்தானம். இது மேற்கூறியவற்றால் உயிர் மாறிப் பிறந்து வரினும் ஓரிடத்தே தவறும் என்பது கூறிற்று. (10)

**பருதி :—** எ - து துச்சில் என்பது ஒருத்தர் அளவிலே ஒதுக்குக் குடியிருத்கல்; இப்படி ஒதுக்குக் குடியிருந்த உயிர் தனக்கென்று ஒரு வீடு பெற விசாரிப்பன் என்றவாறு; வீடாவது, மோட்சம் என்றவாறு. (7)

**காளிங்:—** எ - து உடம்புகள்தோறும் குடியிருந்துவருகின்ற உயிர்க்கு மற்று இன்னும் இங்கனம் புக்குப்புக்கு ஒழிகின்ற யாக்கையானது நிலைபெறுது ஐயோ தான் என்றவாறு.

இதனுல் என்சொல்லியவாறோ எனில் உலகத்து அளவிறந்த காலமெல்லாம் அளவிறந்த யாக்கைகள் தோறும் பிறந்தும் இறந்தும் உழன்று திரிதற்குக் காரணமாகிய பேதமை நீங்கும் உணர்வுபெறுதற்கு உறுதவம் இயற்றும் ஒருப்பாடே இனித்தருவதுஎன்று பொருளாயிற்று என்றவாறு. (6)

## மேற்கோள்பகுதி :

**சிவஞான:—** புக்கில்போல் அன்று என்பது உணர்த்துதற்கு அருந் துயர்க்குரம்பை எனப்பட்டது. அது 'புக்கில்...உயிர்க்கு' என்பதனுன் அறிக. (சிவஞான. சிறப்பு)

# 35. துறவு

பரிமே :— அஃதாவது புறமாகிய செல்வத்தின் கண்ணும் அகமாகிய யாக்கையின் கண்ணும் உளதாம் பற்றினை, அவற்றது நிலையாமை நோக்கி, விடுதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

மணக்:— துறவாவது ஒருவன் தவம்பண்ணுகின்றகாலத்து யாதாயினும் ஒரு தொடர்ப்பாடு உளதாயினும், அதனைப் பற்றறத் துறத்தல். இது மயக்கமற்றார்க்கு வருவது ஒன்றாதலின், அதன் பின் கூறப்பட்டது.

பருதி :— துறவாவது நிலையாமை அறிந்தால் மூன்றுவகை ஆசையும் விட்டுத் துறவறத்திலே நிற்கவேணும் என்றவாறு.

**341.** **யாதனின் யாதனின் [1]நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் [2]இலன்.** (க)

**உரைப்பகுதி :**

பரிமே :— யாதனின் யாதனின் நீங்கியான்-ஒருவன் யாதொரு பொருளின் யாதொருபொருளின் நீங்கினான்; அதனின் அதனின் நோதல் இலன் - அவன் அப்பொருளால் அப்பொருளால் துன்பம் எய்துதல் இலன்.

அடுக்குக்கள் பன்மை குறித்து நின்றன. நீங்குதல் துறத்தல். ஈண்டுத் துன்பம் என்றது இம்மைக்கண் அவற்றைத் தேடுதலானும், காத்தலானும் இழத்தலானும் வருவனவும், மறுமைக்கண் பாவத்தான் வருவனவுமாய இருவகைத் துன்பங்களையும் ஆம். எல்லாப்பொருளையும் ஒருங்கே விடுதல் தலை, அஃதன்றி ஒரோவொன்றாக விடினும் அவற்றான் வருந் துன்பம் இலனாம் என்பது கருத்து.

மணக் :— எவன் யாதொன்றினின்றும் யாதொன்றினின்றும் நீங்கினான்; அவன் அதனளவு அதனளவு துன்பமுறுதலிலன் என்றவாறு. (5)

பருதி :— எ - து மூன்றுவகை ஆசைக்குள்ளே ஏதாகிலும் பற்றறாமல் அதற்குத்தக்க சுகம் உண்டு என்றவாறு. (1)

---

1 'நீக்கியான்' என்பதும் பாடம். 2 'நலன்' என்பது பருதியார் பாடம்.

காளிங்:— எ - து உலகுத்து மக்கட் பண்புடையான் ஒருவன் இரு வினையுள்ளும் தீவினைநீங்கி நூல்நெறி மரபாகிய நல்வினை இயற்றும் அன்றே; மற்று அவைதம்முளும் அரசு பொருள் மக்கள் அமரருலகு என்னும் சிறுசுவை விளைப்பனவாகிய வினைகள் யாதொன்றினின்றும் தொடர்புநீங்கித் துறவிக்கண் சென்றுன் மற்று அவன் அந்த அந்தப் பயனைப்பற்றித் துயருறுதல் அதனின் அதனின் இலன்; எனவே அந்த அந்தப் பயன் விளைத்தற்குக் காரணமாகிய அந்தந்த வினைகளின் முயற்சியை உடையனுதல் இல்லையாதலால் அவன் துறவியின்கண் முயல்வானும் என்று பொருளாயிற்று என்றவாறு. (1)

## மேற்கோள்பகுதி :

நச்:— இக்குறள் அருளொடு புணர்தலின் பின் துறவொழுக்கம் பிறத்தற்கு மேற்கோள். (தொல். பொருள். 76)

இளம்:— துறவாவது தன்னுடைய பொருளைப் பற்றறத்துறத்தல் என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 75.)

மயிலை:— இக்குறள் யாதனின் யாதனின் நீங்கியான் ஒருவன் நோதல் அதனின் அதனின் இலன் என எஞ்சிய பெயர்கொண்டு முடிதலின் பெயரெச்சமாயிற்று. (நன் 359.)

ஷை அருளொடு புணர்ந்த அகற்சியில் பிரமசரியக்காப்பின் விளைவுக்கு மேற்கோள். (தொல்-பொருள். 75.)

**342. வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபின்**
**ஈண்டியற் பால பல. (உ)**

## உரைப்பகுதி:

பரிமே:— துறந்தபின் ஈண்டு இயற்பால பல - எல்லாப்பொருள் களையும் துறந்தால் ஒருவர்க்கு இம்மைக்கண்ணே உளவாம் முறைமையையுடைய இன்பங்கள் பல; வேண்டின் உண்டாகத் துறக்க - அவ்வின்பங்களை வேண்டின், அவற்றைக் காலம்பெறத் துறக்க.

அவ்வின்பங்களாவன அப்பொருள்கள் காரணமாக மனமொழி மெய்கள் அலையாது நிற்றலானும், அவை நன்னெறிக்கண் சேறலானும் வருவன. இளமைக்கண் துறந்தான் அவற்றை நெடுங்காலம் எய்துமாகலின், உண்டாகத் துறக்க என்றார். இன்பங்கள் என்பதும் காலம்

என்பதும் வருவிக்கப்பட்டன. இம்மைக்கண் துன்பங்கள் இலவாதலே யன்றி இன்பங்கள் உளவாதலும் உண்டு என்பதாம்.

மணக்:— தன்னுயிர்க்கு ஆக்கம் உண்டாக வேண்டின், தன்னுடைமை எல்லாவற்றையும் துறக்க; துறந்தபின் இவ்விடத்தே இயலும் பகுதியன பல என்றவாறு. (7)

பருதி:— எ-து வேண்டின செல்வம் உண்டாயிருக்கத் துறக்க வேணும்; துறந்தபின், செனனம் இல்லை என்றவாறு. (8)

காளிங்:— எ-து முதற்சொன்ன நிலையாமையைக் குறிக்கொண்டு பிறவிக்கு வித்தாகிய வினையும் பயனும் என்பனவற்றை நுமக்கு இயன்ற விடுத்தலை விரும்புவீராயின் அதனையும் முற்சொன்ன உண்மையாகத் துறக்க; இங்கனம் துறந்ததற்பின் இவ்விடத்து மற்று அத்துறவற முயற்சியான் ஈண்டு ஆகற்பாலன பல என்றவாறு. (2)

**மேற்கோள்பகுதி :**

மயிலை:— உய்யவேண்டின் காலமுண்டாகத் துறக்க; துறந்த பின் இப்பிறப்பில் உய்யப்பாலன பல என வினையும் வினைக்குறிப்பும் கொண்டதற்கு மேற்கோள். (நன். 359.)

**343. அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்**
**வேண்டிய எல்லாம் ஒருங்கு. (ந.)**

**உரைப்பகுதி :**

பரிமே :— ஐந்தன் புலத்தை அடல்வேண்டும் - வீடு எய்துவார்க்குச் செவி முதலிய ஐம்பொறிகட்குரியவாய ஓசை முதலிய ஐம்புலன்களையும் கெடுத்தல்வேண்டும்; வேண்டிய எல்லாம் ஒருங்கு விடல்வேண்டும் - கெடுக்குங்கால் அவற்றை நுகர்தற்பொருட்டுத் தாம் படைத்தபொருள் முழுதையும் ஒருங்கே விடுதல் வேண்டும்.

புலம் என்றது அவற்றை நுகர்தலை, அது மனத்தைத் துன்பத்தானும் பாவத்தானுமன்றி வாராத பொருள்கள் மேலல்லது வீட்டுநெறியாகிய யோகஞானங்களில் செலுத்தாமையின் அதனை அடல்வேண்டும் என்றும், அஃது அப்பொருள்கண்மேல் செல்லின் அந்நுகர்ச்சி விறகு பெற்ற தழல்போல் முறுகுவதல்லது அடப்படாமையின், வேண்டிய எல்லாம் ஒருங்கு விடல்வேண்டும் என்றும் கூறினர்,

மணக்:— துறப்பார்க்குப் பொறிகள் ஐந்தினுக்கும் நுகர்ச்சியான ஐந்தினையும் கொல்லுதல் வேண்டும்; அதற்காகத் தாம் விரும்பின எல்லாவற்றையும் ஒருகாலத்திலே விடுதல் வேண்டும் என்றவாறு. (1)

பருதி:— எ - து ஐம்புலன்களையும் பொறிவழியிலே செல்லாமல் கெடுக்கவேணும்; ஐம்புலன் உணர்வுகளை விடவேணும் என்றவாறு. (6)

காளிங் :— எ - து இனி இதனுள் கருவியாகிய ஐம்புலன்களையும் துறவுநெறிக்குப் புறவழியாகிய ஐம்பொறிகளின் நுகர்ச்சியைப் பரவாமல் தனது உள்ளத்தால் செறுத்தல்வேண்டும்; மற்று அங்கனம் செறுத்தபின் அவ்வுள்ளந்தான் முன்னின்று விரும்புவதாகிய வேட்கைகளெல்லாம் ஒருதன்மைப் பட விடுதல் வேண்டும்; எனவே அவ்வுள்ளமானது தானும் ஒருவழிப்பட்டு நிற்கவேண்டும் என்பது பொருளாயிற்று என்றவாறு. (5)

## 344. இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை உடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து. (௪)

**உரைப்பகுதி :**

**பரிமே :**— ஒன்று இன்மை நோன்பிற்கு இயல்பாகும் - பற்றப் படுவதொருபொருளும் இல்லாமை தவஞ்செய்வார்க்கு இயல்பாம்; உடைமை பெயர்த்து மற்றும் மயலாகும் - அஃதன்றி, ஒன்றுயினும் உடைமை அத்தவத்தைப் போக்குதலான், மீண்டும் மயங்குதற்கு ஏதுவாம்.

இழிவுசிறப்பு உம்மை விகாரத்தால் தொக்கது. நோன்பு என்பதூஉம் மயல் என்பதூஉம் ஆகுபெயர். பெயர்த்ததலான் என்பது திரிந்துநின்றது. நோன்பைப் பெயர்த்தலான் என வேற்றுமைப் படுத்துக்கூட்டுக. எல்லாப் பொருள்களையும்விட்டு ஒரு பொருளை விடாதவழியும், அது சார்பாக விட்டன எல்லாம் மீண்டுவந்து தவத்திற்கு இடையீடாய் மனக்கலக்கஞ்செய்யும் என்பது கருத்து. இவை நான்கு பாட்டானும் எனது என்னும் புறப்பற்று விடுதல் கூறப்பட்டது.

மணக் :— யாதொருபொருளும் இலதாதல் தவத்திற்கு இயல்பாகும்; பொருளுடைமை மீண்டும் பிறத்தற்குக் காரணமான மயக்கத்தைத் தரும் என்றவாறு. (2)

பருதி:— எ - து இப்படியோ என்று கண்டும் ஆசையைவிடாத போது, ஆசை தொந்திக்கும் என்றவாறு. (8)

காளிங் :— எ - து உலகத்துத் துறப்போர் இங்ஙனம் முழுதுந் துறத்தல் கடன்தலால் மற்று இத்துறவிக்குச் சொல்லப்பட்ட யாதானும் ஒன்றினொடு மறந்தும் ஒருபற்றிலாமை டாது மற்றும் இதுவே மரபாகும்; மற்று அது அன்றி இவற்றில் ஒன்றின்கண் மறந்தாயினும் சிறிதோர் பற்றுண்டாயின் அப்பற்றுடைமை பின்னும் பெயர்த்து முன்னமயக்கத்திற்கே காரணமாகும் என்றவாறு. (7)

**மேற்கோள்பகுதி:**

காரிரத்ன:— பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற. 215.)

சுவாமி:— உயர்ந்த வினைகளெல்லாவற்றினுள்ளும் மிகவுயர்ந்த வினையாவது இரத்தலேளன்னும் அறிவுநூல்; என்பதற்கு மேற்கோள் (இ. கொ. 80.)

## 345. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல் உற்றார்க் குடம்பு மிகை. (ரு)

**உரைப்பகுதி :**

பரிமே :— பிறப்பு அறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை - பிறப்பறுத்தலை மேற்கொண்டார்க்கு அதற்குக் கருவியாகிய உடம்பும் மிகையாம், மற்றும் தொடர்ப்பாடு எவன் - ஆனபின் அதற்கு மேலே இயைபில்லனவும் சில தொடர்ப்பாடு உளவாதல் என்னும்.

உடம்பு என்ற பொதுமையான், உருவுடம்பும் அருவுடம்பும் கொள்ளப்படும். அவற்றுள், அருவுடம்பாவது பத்துவகை இந்திரிய உணர்வோடும் ஐவகை வாயுக்களோடும் காமவினை விளைவுகளோடுங் கூடிய மனம்; இது நுண்ணுடம்பு எனப்படும். இதன்கண்பற்று நிலையாமை உணர்ந்த துணையான் விடாமையின், விடுதற்குபாயம் முன்னர்க் கூறுப. இவ்வுடம்புகளால் துன்பம் இடையறுது வருதலை உணர்ந்து இவற்றுனுய கட்டினை இறைப்பொழுதும் பொறுது வீட்டின் கண்ணே விரைதலின், உடம்பு மிகை என்றார். இன்பதுன்பங்களான உயிரோடு ஒற்றுமை எய்துதலின், இவ்வுடம்புகளும் யான் எனப்படும். இதனுன் அகப்பற்று விடுதல் கூறப்பட்டது.

மணக்:— பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்பும் மிகையாயிருக்க, மற்றும் சில தொடர்ப்பாடு உளதாவது யாதினைக்கருதியோ? என்றவாறு. (3)

பருதி:— எ - து மூன்று வகை ஆசையும் விட்டு என்னபயன்? தேகம் அன்றோ தபசுக்கு அநேகம் பகையாவது என்றவாறு. (4)

காளிங்:— எ - து மற்று இப்பிறவியென்னும் துயரினை மறுத்தலை முயன்றுள்ளார்க்கு கீழ்ச்சொன்னவை அனைத்திலும் உளள தொடர்ச்சியை இனி இது அன்றி வேறும் ஒரு தொடர்ச்சிப்பாடு யாதுகொல்லோ? எனவே இதுவன்றி மற்றும் யாதும் இல்லை, அஃது யாதோ எனின்; தமது உடம்பு சீவர்க்குமிகை என்றவாறு. (4)

## மேற்கோள்பகுதி :

இளம்:— காமநீத்த பாலினுனும் என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 75.)

## ஒப்புமைப்பகுதி :

"மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல
உற்றுர்க் குடம்புமிகை இசையுள்வழி
பற்றுவினை யாய்ப் பலபல யோனிகள
அற்ருய் உழலும் அறுத்தற் கரிதே. —வளையா.

"வேதமும் வேதியர் அருளும் வெஃகலா
சேதனை மன்னுயிர் தின்னும் தீவினை
பாதகர் அரக்கர்தம் பதியின் வைகுதற்கு
ஏதிலன் உடலும் மிகைஎன் றெண்ணுவோய்." —கம்ப.

## 346. யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த உலகம் புகும். (சா)

## உரைப்பகுதி :

பரிமே :— யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் - தானல்லாத வுடம்பை யான் என்றும், தன்னுடையபு இல்லாத பொருளை எனது என்றுங் கருதி அவற்றின்கண் பற்றுச்செய்தற்கு ஏதுவாகிய மயக்கத்தைக் கெடுப்பான், வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் - வானோர்க்கும் எய்தற்கு அரிய வீட்டுலகத்தை எய்தும்.

மயக்கம் அறியாமை. அதனைக் கெடுத்தலாவது தேசிகர்பால் பெற்ற உறுதிமொழிகளானும் யோகப்பயிற்சியானும் அவை யான், எனது அன்மை தெளிந்து, அவற்றின்கண் பற்றைவிடுதல்.

சிறப்புனைம விகாரத்தால் தொக்கது. இதனின் இவ்விருவகைப பற்றினையும்விட்டார்க்கே வீடுளது என்பது கூறப்பட்டது.

மணக்:— யான் என்றும் எனது என்றும் நினைக்கின்ற மயக்கத்தை அறுக்கும் அவன், தேவர்க்கு மேலாகிய உலகத்தின் கண்ணே செல்லும் என்றவாறு. (9)

பருதி:— எ - து யான் என்றும், எனது என்றும் சொல்லுகின்ற செருக்கறுப்பான் புகும், வானோர்க்கு உயர்ந்த சிவலோகம் என்றவாறு. (5)

காளிங்:— எ - து இங்குச் சொன்ன உடலும் புலன்களும் உள்ளமும் ஆகிய ஒரு தொகைப்பாட்டினை யான என்று மயங்கு மயக்கமும், இனி மற்று இதனையும் கீழ்ச்சொன்ன மனைமக்கள் செல்வம் முதலியவற்றையும் எனது என்று மயங்கும் மயக்கமும் என இவ்விரண்டு மயக்கத்தையும் தேர்ந்து உணர்ந்து செலவறவிடுக்கும் அவனே வானோராகிய கடவுளர்க் கெல்லாம் மேற்பட்ட முழுப் பேரின்பமாகிய முத்தியைப் பெறுவன் என்றவாறு. (6)

**மேற்கோள்பகுதி :**

வெள்ளி: (முத்திபேருரை-பக்கம் 125)

**347. பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்**
**பற்றி விடாஅ தவர்க்கு. (எ)**

**உரைப்பகுதி :**

**பரிமே :—** பற்றினைப் பற்றி விடாதவர்க்கு - இருவகைப்பற்றினையும் இறுகப்பற்றி விடாதாரை, இடும்பைகள் பற்றி விடா - பிறவித் துன்பங்கள் இறுகப்பற்றி விடா.

இறுகப்பற்றுதல் காதல் கூர்தல். விடாதவர்க்கு என்பது வேற்றுமை மயக்கம். இதனால் இவை விடாதவர்க்கு வீடில்லை என்பது கூறப்பட்டது.

மணக்:— பொருள்களைப்பற்றி விடாதவரைத் துன்பங்கள் விடாதே பற்றிநிற்கும் என்றவாறு.

இது பொருள்களைத் துறவாக்கால் வினை கெடாது என்றது; (4)

பருதி :— எ - து மூன்று வகை ஆசையும் துறந்து, தவசு பண்ணும் போது, தவசு சடுதியிலே பலிக்கும்; அல்லது தவசு பலியாது என்றவாறு. (2)

காளிங்:— எ - து பற்றுகிய மனைமக்கள் செல்வம் முதலிய பல பற்றினையும் தமது உள்ளமானது தோய்ந்துகிடக்கின்ற காதலைக் கைக்கொண்டு விடாதிருக்கின்ற அறிவிலோர்க்கு, எஞ்ஞான்றும் தம்மைச் செறியப் பற்றிக்கொண்டு விட்டு நீங்காது; யாவை எனில் பிறவி முதலாகிய துயரங்கள் என்றவாறு. (3)

**348.** தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். (அ)

## உரைப்பகுதி :

**பரிமே** :— தீரத் துறந்தார் தலைப்பட்டார் - முற்றத்துறந்தார் வீட்டினைத் தலைப்பட்டார், மற்றையவர் மயங்கி வலைப்பட்டார் - அங்ஙனம் துறவாதார் மயங்கிப் பிறப்பாகிய வலையுட்பட்டார்.

முற்றத்துறத்தலாவது பொருள்களையும் இருவகை உடம்பினையும் உவர்த்துப் பற்றற விடுதல்; அங்ஙனம் துறவாமையாவது அவற்றுள் யாதானுமொன்றின்கட் சிறிதாயினும் பற்றுச்செய்தல். துணிவுபற்றித் தலைப்பட்டார் என்றும், பொய்ந்நெறி கண்டே பிறப்புவலையுள் அகப்படுதலின் மயங்கி என்றும் கூறினர்.

**மணக்**:— பற்றறத் துறந்தார் முத்தியைத் தலைப்பட்டார்; அல்லாதார் மயங்கிப் பிறப்பாகிய வலையிலே அகப்பட்டார் என்றவாறு.

இது மறுமைப்பயன் கூறிற்று. (8)

**பருதி**:— எ - து ஞானத்தாலே மேற்பட்டவர் மூன்றுவகை ஆசையும் துறந்தார்; ஞானமில்லாதார் மயங்கி ஆசை வலைப்பட்டார் என்றவாறு. (10)

**காளிங்**:— எ - து முன்னம் சொன்ன முத்தியின்கண் தலைப்பட்டோர் ஆவார் யாதொன்றின் மாட்டும் யாதும் ஒரு பற்றில்லாதவாறு திருந்தத் துறந்தவரே; மற்று ஏனையாரெல்லாம் அங்ஙனம் பற்றற மாட்டாது அறிவு மயங்கிய பிறவியாகிய பெருவலையுள்பட்டு செல்கின்றார் என்றவாறு. (8)

## ஒப்புமைப்பகுதி :

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர் என்று—சிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள் ளுவர்உரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல்." —நெஞ்சுவிடு. 24, 2-5.

349. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும். (௯)

**உரைப்பகுதி :**

பரிமே:— பற்று அற்றகண்ணே பிறப்பு அறுக்கும் - ஒருவன் இருவகைப்பற்றும் அற்றபொழுதே, அப்பற்றறுதி அவன் பிறப்பை அறுக்கும், மற்று நிலையாமை காணப்படும - அவை அருதபொழுது அவற்றால் பிறந்து இறந்து வருகின்ற நிலையாமை காணப்படும்.

காரணம் அற்றபொழுதே காரியமும் அற்றதாம் முறைமைபற்றி, பற்றற்ற கண்ணே என்றார்; *"அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்பதுஉம் அதுபற்றி வந்தது இவை இரண்டுபாட்டானும் அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டன.

மணக் :— ஒருவன் யாதொரு பொருளோடும் பற்றற்ற பொழுதே அது பிறப்பை அறுக்கும். அதனை விடாதபோது நிலையாமை காணப் படும் என்றவாறு.

இஃது எல்லாப்பற்றினையும் அறுக்கப் பிறப்பு அறும் என்றது. (6)

பருதி :— எ - து மூன்று வகை ஆசையுந் துறந்தபேர்க்குப் பிறப்பு இல்லை; இதில் ஒன்றிரண்டு துறந்தாலும், பிறப்பு உண்டு, கீழ்ப்படுத் தாது மேற்படுத்தும் என்றவாறு. (9)

காளிங் :— எ - து இங்ஙனமே பற்றற்ற இடத்து மற்று அப் பொழுதே அப்பற்றறுதியாகிய நல்துறவு தன் பிறப்பறுக்கும் எனவே முத்தியை எய்தும். மற்று ஏனைய எல்லாம் பற்றோடு வருதலால் அந்தந்தப் பொருள்பற்றிநின்ற நெஞ்சோடும் பிறந்தும் இறந்தும் திரிந்து உழல வேண்டுதலால் இந்த நிலையாமையே எப்பொழுதும் காணப்படும் இவனால்; எனவே, எஞ்ஞான்றும் முத்தியின்பம் காணமாட்டான் என்பது பொருள் ஆயிற்று என்றவாறு.

இனி இவ்வுலகத்து மக்கட் பிறந்தோரில் சிறந்தோராகிய சான்றோர் முன்னர் தம் குலத்கியல்பாகிய இல்லறம் இயற்றிப் பின்னர் மற்றதன் பயனாகிய துறவறமியற்றுதற்கு அதனை முனிந்து நீத்துப் போந்து துறவறம் இயற்றிய பின்னர் இத்துறவறத்தின் பெரும்பயனாகிய முத்தியின்பத்து முயன்றமைதல் இயல்பாதலால் இதன் பின்னரே மெய்யுணர்தல் என்னும் பெயரினன் அதனை அறிவிக்கின்றது. (10)

* திருவாய்மொழி, பதிகம். 2. பா. 5.

## ஒப்புமைப்பகுதி :

"பற்றவா வேரொடும் பசையறப் பிறவிநோய்
முற்றவா உணர்வுமேல் முடுகினர் அறிவுசென்று
உற்றவா னவனிருந்து யோகுசெய் தனனெனின்
சொற்றலா மறவதோ மற்றிதன் தூய்மையே." —கம்ப

"பற்றினைப் பற்றினாலே பற்றெனப் பற்றினாரைப்
பற்றுதான் இடும்பை நீருள் பரியட்டந்தன்னை ஆக்கும்
பற்றினைப் பற்றிலாமை பற்றெனப் பற்றினாரைப்
பற்றுவிட் டிடும்பைநீருள் பரியட்டம் ஒழிக்கும் கண்டீர்." —மேரு. 323.

**350. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.** (மு)

## உரைப்பகுதி :

**பரிமே :—** பற்று அற்றான் பற்றினைப் பற்றுக - எல்லாப் பொருளையும் பற்றிநின்றே பற்றற்ற இறைவன் ஒகிய வீட்டு நெறியை இதுவே நன்னெறி என்று மனத்துக்கொள்க; அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு - கொண்டு, அதன்கண் உபாயத்தை அம்மனத்தால் செய்க, விடாது வந்த பற்று விடுதற்கு.

கடவுள் வாழ்த்திற்கு ஏற்ப ஈண்டும் பொதுவகையால் பற்றற்றான் என்றார். பற்றற்றான்பற்று என்புழி ஆறுவது செய்யுட்கிழமைக்கண் வந்தது. ஆண்டுப் பற்று என்றது பற்றப்படுவதனை. அதன்கண் உபாயம் என்றது தியானசமாதிகளை. விடாதுவந்த பற்று என்பது அநாதியாய் வரும் உடம்பிற்பற்றினை. அப்பற்று விடுதற்கு உபாயம் இதனால் கூறப்பட்டது.

**மணக் :—** *பற்றறுத்தானது பற்றினைப் பற்றுக; அதனைப் பற்றுங்கால், பயன் கருதிப் பற்றாது பற்று விடுதற்காகப் பற்றுக என்றவாறு.*

*பற்றற்றான் பற்றுவது தியான சமாதி. பின் மெய்யுணர்தல் கூறுதலான், இது பிற்படக் கூறப்பட்டது.* *(10)*

**பருதி :—** *எ - து காரணவுபாதி எழுகாரியத்தில் பற்றற்றான் ஸ்ரீ பாதத்தைப் பற்றுக; இந்தப்பற்றினையே உறுதியாய்ப் பற்றுக;*

ஆத்மாவுக்கு உபாதியாகிய காரியமும் உபாதி ஏழும் விடவேண்டில் என்றவாறு. (7)

காளிங் :— எ - து ஒருவர் தமதுள்ளத்தால் பற்றுடையராக வேண்டும்; மற்று யாதினை எனின், முன்னஞ் சொன்ன முறைமையின் எப்பற்றும் அற்றோன் யாதோர் இன்பத்தைப்பற்றி நின்றான்; மற்று அதனைத் தானும் உறுதற்கு மற்று இனி முன்னம் தனது உள்ளத்தினால் முயல்வதாக வந்து பற்றினானன்றே அதன்பயன் முற்றுந்துணையும் அதனை முறுககின்று முயலுக; யாதற்கோ எனில், மற்றிதனால் வரும் இன்பம் அன்றி மற்று எப்பற்றும் விடுதற்கு என்றவாறு. (9)

## மேற்கோள்பகுதி :

பெருந்தே:— சொற்செறிவுடைமையால் சிலேட்டம் என்னும் உயிராயினமைக்கு மேற்கோள். (வீரசோ. 151 உரை.)

குணசா:— தலையாகு மோனைக்கு மேற்கோள். (யா. கா. 43.)

யா. வி. உரை:— மெய்மிக்கு வந்த செய்யுளுக்கு மேற்கோள். (சூ. 2.)

## ஒப்புமைப்பகுதி :

"உற்ற உதிரம் ஒழிப்பான் கலிங்கத்தை
மற்றது தோய்த்து கழுவுதல் என்னொக்கும்
பற்றின் ஞகிய பாவத்தை மீட்டும்
பற்றொடு நின்று பறைக்குறு மாறே." —வளையா.

"பலவும் பயனுள்ளன பற்று மொழிந்தேம்
• • •
நிலவும் பெருமானடி நித்தல் நினைந்தே." —சம்பந்தர், குரங்கணில் 6.

"செப்பற் கரிய பெருஞ்சீர்த்தி சிவனார் செய்ய கழல்பற்றி
எப்பற்றினையும் அறவெறிந்தார் எல்லை தெரிய ஒண்ணாதார்
மெய்ப்பத்தர்கள்பால் பரிவுடையார் எம்பிரானார் விறன்மிண்டர்."
—பெரிய, விறன் 4.

"எப்பற்றினையும் அறுத்தேறுகைத் தேறு வார்தாள்
மெய்ப்பற் றெனப்பற்றி விடாத விருப்பின் மிக்கார்." —ஷ மூர்த்தி. 8.

"பற்றை எறியும் பற்றுவரச் சார்பாயுள்ள பவித்திரையாம்."
—ஷ சண்டே 11.

"பற்றுங்கவை யற்றீர் பற்றும் பற்றாங்கது பற்றி." —திருவா. 50.8

## 36. *மெய்யுணர்தல்.

**பரிமே:—** அஃதாவது பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களானன்றி உண்மையான் உணர்தல். இதனை வடநூலார் தத்துவஞானம் என்ப. இதுவும் பற்றற்றான் பற்றினைப் பற்றிய வழி உளதாவது ஆகலின், அக்காரண ஒற்றுமை பற்றித் துறவின்பின் வைக்கப்பட்டது.

**மணக்:—** *மெய்யுணர்தலாவது எக்காலத்திலும் எவ்விடத்திலும் அழியாது நிற்கும்பொருள் இதுஎன உணர்தல். இது பற்றறத்துறந்தாரது உள்ள நிகழ்ச்சியாதலான், அதன்பின் கூறப்பட்டது.*

351. **பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்**
**மருளானு மாணுப் பிறப்பு.** (க)

**உரைப்பகுதி:**

**பரிமே:—** பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருளான் ஆம் - மெய்ப்பொருளல்லவற்றை மெய்ப்பொருள் என்று உணரும் விபரீத உணர்வானே உளதாம். மாணுப் பிறப்பு - இன்பமில்லாத பிறப்பு.

அவ்விபரீத உணர்வாவது மறுபிறப்பும், இருவினைப்பயனும், கடவுளும் இல்லை எனவும், மற்றும் இத்தன்மையவுஞ்சொல்லும் மயக்க நூல் வழக்குக்களை மெய்ந்நூல் வழக்கு எனத் துணிதல். குற்றியை மகன் என்றும் இப்பியை வெள்ளி என்றும் இவ்வாறே ஒன்றினைப் பிறிதொன்றாகத் துணிதலும் அது. மருள், மயக்கம், விபரீத உணர்வு, அவிச்சை என்பன ஒரு பொருட்கிளவி. நரகர். விலங்கு, மக்கள், தேவர் என்னும் நால்வகைப் பிறப்பினும் உள்ளது துன்பமேயாகலின், மாணுப் பிறப்பு என்றார். இதனால் பிறப்புத் துன்பம் என்பதூஉம், அதற்கு முதற் காரணம் அவிச்சை என்பதூஉம் கூறப்பட்டன.

**மணக்:—** *பொருளல்லாதவற்றைப் பொருளாகக் கொள்கின்ற மயக்கத்தினாலே உண்டாம் மாட்சிமையில்லாத பிறப்பு என்றவாறு.*

*இது மெய்யுணருங்கால் மயக்கங் காண்பனாயின், பிறப்புண்டாம் என்றது.* (2)

---

* மெய்யுணர்தல் என்றது 'சிவஞானம் அறிதல்' என்பது பழையஉரை.

பருதி:— ஏ - து உபதேசமில்லா யல்லாதவற்றைப் பொருள் என்று பிடித்த அஞ்ஞானம் செனனம் உண்டாக்கும் என்றவாறு. (10)

காளிங்:— எ - து கீழ்ச்சொன்னபடியே மெய்ப்பொருளினைப் பொய்ப்பொருளாகவும் பொய்ப்பொருளினை மெய்ப்பொருளாகவும் மயங்குகின்ற மயக்கத்தினால் வந்துளதாம்; யாதோ எனில் ஒருவகையாலும் மாட்சிமை இல்லாத பிறவியானது என்றவாறு. (4)

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— மாணாப் பிறப்பு - இன்பமில்லாப் பிறப்பு; நால்வகைப் பிறப்பு - நரகர் விலங்கு மக்கள் தேவர்; இவற்றை வடநூலார் தேவர் மக்கள் திரியக்கு ஸ்தாவரம் என வேறோதுவர்.

## மேற்கோள்பகுதி :

இளம்:— பொருளொடு புணர்ந்த பக்கத்திற்கு மேற்கோள். (தொல். பொருள். 75.)

## ஒப்புமைப்பகுதி :

"உள்பொருள் இதுவென உணர்தல் ஞானமாம்" —சிவக 2845.

"பொள்ளலிவ்வுடல் பொருள் என்று.

....சுந்தரர். ஆரூர் - தக்கேசி பர 6

**352. இருணீங்கி இன்பம் பயக்கும் மருணீங்கி**
**மாசறு காட்சி யவர்க்கு. (உ)**

## உரைப்பகுதி :

**பரிமே** :— மருள் நீங்கி மாசு அறு காட்சியவர்க்கு - அவிச்சையின் நீங்கி மெய்யுணர்வுடையராயினார்க்கு, இருள் நீங்கி இன்பம் பயக்கும் - அம்மெய்யுணர்வு பிறப்பினை நீக்கி வீட்டினைக்கொடுக்கும்.

இருள் நரகம். அஃது ஆகுபெயராய்க் காரணத்தின்மேல் நின்றது. நீங்கி எனத் தொடைநோக்கி மெலிந்துநின்றது; நீங்க என்பதன் திரிபு எனினும் அமையும். மருணீங்கி என்னும் வினையெச்சம் காட்சியவர் என்னுங் குறிப்புவினைப்பெயர் கொண்டது. மாசறு

காட்சி என்றது கேவலவுணர்வினை. இதனால் வீடாவது நிரதிசய இன்பம் என்பதூஉம், அதற்கு நிமித்தகாரணம் கேவலப் பொருள் என்பதூ உம் கூறப்பட்டன.

மணக்:— மயக்கத்தினின்று நீங்கிக் குற்றமற்ற அறிவுடையார்க்கு, அறியாமையாகிய இருள் நீங்க முத்தியாகிய இன்பம் உண்டாம் என்றவாறு.

இது மெய்யுணர்ந்தார்க்கு வினைவிட்டு முத்தி இன்பம் உண்டாமே என்றது. (7)

பருதி:— எ - து அஞ்ஞானமாகிய இருள் நீங்கிப் பேரின்பம் பெருக்கும்; மாசற்ற தரிசனம் கண்டவர்க்கு என்றவாறு. (2)

காளிங்:— எ - து தமது அறியாமையானது நீங்கி, மற்று அளவிறந்த இன்பமானது பயக்கும்; யார்க்கு எனின், மெய்ப்பொருளை வேறொன்றாகவும் வேறொன்றினை மெய்ப்பொருளாகவும் இங்ஙனம் மயங்கி நின்ற மயக்கம் நீங்கித் தெளிந்த உள்ளத்துக் குற்றமற்ற நல்லறிவுடையோர்க்கு என்றவாறு.

இருள் நீங்கி என்பது தாம் அறியாமை நீங்கி. மருள் நீங்கி என்பது மயக்கம் நீங்கி. மாசு என்பது குற்றம். காட்சி என்பது அறிவு. (2)

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— நீங்கி எனத் தொடை நோக்கி மெலிந்தது. நச்சினார்க்கினியரும், பெரும்பாணாற்றுப் படையுள், "காந்தளஞ் சிலம்பிற் களிறு கிடந்தாங்குப், பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன்" (372-3) என்பதற்கு, காந்தள் என்பதற்கு ஏற்பப் பாம்பணை என மெலித்தனர் என்க. பிறப்பிணை நீக்கி எனப் பிறவிணையாக்கியது காண்க. நீங்க என்பதன் திரிபு எனினும் அமையும்.

## ஒப்புமைப்பகுதி :

"கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினள்
பெற்றுக் கொடுத்த பெருமகன்போல் - முற்றத்
துறந்தார்க்கு மெய்யுணர்வு தோற்றுவதே இன்பம்
இறந்த வெலாம் துன்பமலாதில். —நன்னிக்கவி.

**353. [1]ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் [2]நணிய துடைத்து. (ங)**

**உரைப்பகுதி :**

**பரிமே :—** ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு - ஐயத்தினின்று நீங்கி மெய்யுணர்ந்தார்க்கு; வையத்தின் வானம் நணியது உடைத்து - எய்திநின்ற நிலவுலகத்தினும் எய்தக்கடவதாய வீட்டுலகம் நணித்தாதல் உடைத்து.

ஐயமாவது பலதலையாய உணர்வு. அ∴தாவது மறுபிறப்பும், இருவினைப் பயனும், கடவுளும் உளவோ இலவோ என ஒன்றில் துணிவு பிறவாவது நிற்றல்; பேய்த்தேரோ புனலோ கயிறோ அரவோ எனத் துணியாது நிற்பதும் அது. ஒருவாற்றால் பிறர்மதங் களைந்து தம்மதநிறுத்தல் எல்லாச் சமயநூல்கட்கும் இயல்பாகலின், அவை கூறுகின்ற பொருள்களுள் யாது மெய்யென நிகழும் ஐயத்தினை யோக முயற்சியுடையார் தம் அனுபவத்தான் நீக்கி மெய்யுணர்வாராகலின், அவரை ஐயத்தின் நீங்கித் தெளிந்தார் என்றும், அவர்க்கு அவ்வனுபவ உணர்வு அடிப்பட்டு வரவரப் பண்டை யுலகியலுணர்வு தூர்ந்துவருமாகலின் அதனைப் பயன்மேலிட்டு வையத்தின் வானம் நணியது உடைத்து என்றும் கூறினர்; கூறவே, ஐயவுணர்வும் பிறப்பிற்குக் காரணமாதல் கூறப்பட்டது.

**மணக்:—** *மெய்ப்பொருளை ஐயப்படுதலினின்று நீங்கித் துணிந்தவர்க்கு, இவ்வுலகத்தினும் மேலுலகம் நணித்தாம் தன்மை உடைத்து, என்றவாறு.*

*துணிந்த அறிவின் கண்ணது எல்லாவுலகும் ஆதலின், அவ்வறிவு உடையார்க்கு உலகம் ஒருங்குதோற்றுதலின், நணித்தாம் என்றவாறு. இது மெய்யுணர்வு எவ்விடமும் அறியும் என்றது.* (ரீ)

**பருதி:—** *எ - து சந்தேகமற உபதேசத்தில் நிலைமை கண்டார்க்குப் பூமியிலே இருக்கையிலே முத்தி பெற்றதற்கு ஒக்கும் என்றவாறு.* (3)

**காளிங்:—** *எ - து கீழ்ச்சொன்னபடியே உள்ளமானது உகந்து உணர்ந்த மெய்ப்பொருளை என்றும் இதன் தன்மை என்னைகொல் என்று*

---

1 "ஐயத்துள்" எனவும் பாடம். 2 "நணுமை" எனவும் பாடம்.

உள்ள ஐயப்பாட்டினின்று நீங்கி மற்று அதனை அதுவேயாகத் தெளிந்த பெரியோர்க்கு இவ்வையத்தின் நணுமைபோல் வானநணுமை உடைத்து என்றவாறு. (8)

**மேற்கோள்பகுதி :**

சிவஞான:— 'ஐயத்தினீங்கி' என நீக்கப்பொருள் விலத்திணை, இயங்குதிணை பண்பாதியின் வரும் என்றதில், ஆதி என்றதற்குக் கொண்ட பொருட்கு மேற்கோள். (நன். 299.)

இன்னிலை 43 பாட்டு.

**354. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே**
**மெய்யுணர் வில்லா தவர்க்கு.** (சு)

**உரைப்பகுதி :**

**பரிமே:—** ஐயுணர்வு எய்தியக்கண்ணும் பயம் இன்றே - செல்லப்படுகின்ற புலன்கள் வேறுபாட்டான் ஐந்தாகியவுணர்வு அவ்ற்றை விட்டுத் தம்வயத்ததாய வழியும், அதனாற் பயனில்லையே யாம்: மெய்யுணர்வு இல்லாதவர்க்கு - மெய்ப்பினையுணர்தல் இல்லாதார்க்கு.

ஐந்தாகியவுணர்வு மனம். அஃதெய்துதலாவது மடங்கி ஒருதலைப் பட்டுத் தாரணைக்கண்நிற்றல். அங்ஙனம் நின்றவழியும் வீடு பயவாமையின், பயமின்று என்றார். சிறப்பும்மை எய்துதற்கருமை விளக்கி நின்றது. இவை இரண்டுபாட்டானும் மெய்யுணர்வுடையார்க்கே வீடுளது என மெய்யுணர்வின் சிறப்புக் கூறப்பட்டது.

**மணக்:—** மெய் முதலாகிய பொறிகள் ஐந்தினானும் அறியப்படுவன எல்லாம் அறிந்தவிடத்தும், அதனான் ஒருபயன் உண்டாகாது; உண்மையை அறியும் அறிவிலாதார்க்கு, என்றவாறு. (1)

**பருதி:—** மெய், வாய், கண், மூக்கு, செவி இவற்றின் பொறியாவது சோத்திரம் தொக்கு சட்சு சிங்குவை ஆக்ராணம் என்கின்ற விடத்தும் இத்தன்மையாரது புலன்களைத் துறந்து பயனென்ன ? மெய்யுணர்வாகிய சிவஞானம் அறியாவிடில் என்றவாறு. (1)

**காளிங்:—** எ - து ஓசை முதலாகிய ஐம்புலன்களைத் தனித்தனி அறிந்து வருகின்ற செவிமுதலாகிய பொறி ஐந்தும் மற்றும் ஈண்டு

அருந்தவம் இயற்றி அமருலகு ஆளும் அமரர்க்கும் அவர் அவர் எய்துதல் அரிதாதலால். சிறிது நாள் சிற்றின்பத்தாராகிய மக்களாகப் பிறந்தார்க்கு எவ்வாற்ருனும் எய்தாது அன்றே! அஃதன்றி, இவர்க்கு அவை நிறைய, எய்தியக் கண்ணும் மற்றுண்டு ஒழிவன; ஆதலால், யாதுமொரு பயனில்லையே; யார்க்கு எனின்? மெய்ப்பொருளை உணரும் உணர்வில்லாத விரகு இல்லார்க்கு என்றவாறு. (1)

**மேற்கோள்பகுதி:**

**நச்:—** பொருளொடு புணர்ந்த பக்கம் - பக்கம் என்றதனுல் மெய்ப் பொருள் உணர்த்துதலும் கொள்க என்றதற்கு மேற்கோள். (தொல். பொருள். 76.)

**இளம்:—** பொருளொடு புணர்ந்த பக்கத்துக்கு மேற்கோள். (தொல். பொருள். 75.)

**காரிரத்ன:—** பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற. 251.)

**ஒப்புமைப்பகுதி :**

"ஐயுணர்வெய்தி மெய் தேறினர்." —சம்பந்தர். 293-6.

**355. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.** (ரு)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் - யாதொரு பொருள் யாதோரியல்பிற்ருய்த் தோன்றினும்; அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு - அத்தோன்றியவாற்றைக் கண்டொழியாது அப்பொருளின்கண் நின்று மெய்யாகிய பொருளைக் காண்பதே மெய் யுணர்வாவது.

பொருள்தோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து, நின்றவுண்மையைக் காண்பது என்றவாருயிற்று. அஃதாவது கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ்சேரல் இரும் பொறை என்றவழி அரசன் என்பதோர்சாதியும், சேரமான் என்ப தொரு குடியும், வேழநோக்கினையுடையான் என்பதோர் வடிவும், சேய் என்பதோர் இயற்பெயரும், மாந்தரஞ்சேரலிரும்பொறை என்பதொரு சிறப்புப் பெயரும், ஒருபொருளின்கண் கற்பனையாகலின், அவ்வாறு

உணராது, நில முதல் உயிரீருகிய தத்துவங்களின் தொகுதி என உணர்ந்து. அவற்றை நிலமுதலாகத் தத்தம் காரணங்களுள் ஒடுக்கிக் கொண்டு சென்றால், காரண காரியங்கள் இரண்டும் இன்றி முடிவாய் நிற்பதனை உணர்தலாம். எப்பொருள் என்ற பொதுமையான் இயங்கு திணையும் நிலைத்திணையுமாகிய பொருள்களெல்லாம் இவ்வாறே உண ரப்படும். இதனன் மெய்யுணர்வினது இலக்கணம் கூறப்பட்டது.

**மணக்:—** *யாதொரு பொருள் யாதொரு தன்மைத்தாயினும், அப் பொருளினுடைய உண்மையைத் தான் உண்மையாகக் காண்பது யாதொன்று அஃது அறிவாம், என்றவாறு.*

*மெய் என்பதூஉம் அறிவு என்பதூஉம் ஒன்று; என்னை? எக்காலத் தும் எவ்விடத்தும் ஒரு தன்மையாக அழியாது நிற்றலின், மெய்யாயிற்று; எல்லாப் பொருளையும் காண்டலால், அறிவாயிற்று.* (3)

**பருதி:—** *எ - து எப்பொருள் எது சொன்னலும் அந்தப்பொருளை உபதேசமாகக் காண்பது அறிவு என்றவாறு.* (5)

**காளிங்:—** *எ - து உலகத்து யாதானும் ஒரு பொருள் உண்மை நிகழாது வேறுபாடு உடையதாயினும் அப்பொருளை மெய்யென்று கருதாது மற்று அப்பொருளை உண்மைப் பொருளாகக் காணவல்லது யாது? மற்று அதுவே ஒருவர்க்கு அறிவானது என்றவாறு.* (6)

**மேற்கோள்பகுதி :**

**நச்:—** *எப்பொருள் எத்தன்மைத்தாயினும் என வரும் எகர வினவும் கொள்க. (தொல். சொல். 298.)*

பெருந்:— *விழுமியது பயத்தலுக்கு மேற்கோள்.* (வீரசோ. 180.)

*இன்னிலை 45.*

**356. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றீண்டு வாரா நெறி.** (சா)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** ஈண்டுக் கற்று மெய்ப்பொருள் கண்டார் - இம்மக்கட் பிறப்பின் கண்ணே உபதேசமொழிகளை அனுபவமுடைய தேசிகர்பால் கேட்டு, அதனன், மெய்ப்பொருளை உணர்ந்தவர், மற்று ஈண்டு வாரா நெறி தலைப்படுவர் - மீண்டும் இப்பிறப்பின்கண் வாராத நெறியை எய்துவர்,

கற்று என்றதனல், பலர்பக்கலினும் பலகாலும் பயிறலும், ஈண்டு என்றதனல், வீடு பேற்றிற்குரிய மக்கட்பிறப்பினது பெறுதற்கு அருமையும் பெற்ரும். ஈண்டு வாராநெறி - வீட்டுநெறி, வீட்டிற்கு நிமித்தகாரணமாய முதற்பொருளை உணர்தற்கு உபாயம் மூன்று; அவை கேள்வி, விமரிசம், பாவனை என்பன. அவற்றுள் கேள்வி இதனல் கூறப்பட்டது.

**மணக்:—** *இவ்விடத்தே மெய்ப்பொருளை அறிந்து தெளிந்தாரே அடைவார்; மீண்டு இவ்விடத்து வாராத வழியினை, என்றவாறு.* (8)

*கல்வியறிவால் அறிவை அறியப் பிறப்பறும் என்றது.*

**பருதி:—** *எ - து ஞான சாஸ்திரமே கற்று ஈண்டு உண்மை தெரிசித்து நிலைமையிலே நின்ருர், பிறவா நெறி பெறுவர் என்றவாறு.* (7)

**காளிங்:—** *எ - து உயர்ந்தோர் மெய்ப்பொருள் தெரிதற்கு வழங்கிய நூல்களைக் கசட றக்கற்றும் அதனுலே மெய்ப்பொருளைக் கண்டார் எய்து வர்; யாதினை எனில், மறித்து இவ்வுலகத்துவந்து பிறக்க வேண்டாத நெறியினை என்றவாறு.* (5)

**மேற்கோள்பகுதி :**

**சிவஞான:—** *கற்றகாரணத்தால் மெய்ப்பொருள் காண்டலும், காண்டல் காரணத்தால் வாராநெறி தலைப்படுதலும் விளங்கியவாறு காண்க. (கம்பரா - சங்கோத் - பக். 16.)*

**357. ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்**
**பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.** (எ)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** உள்ளம் ஒருதலையா ஓர்த்து உள்ளது உணரின் - அங்ஙனங்கேட்ட உபதேசமொழிப்பொருளை ஒருவனுள்ளம் அளவை களானும் பொருந்துமாற்ருனும் தெளிய ஆராய்ந்து அதனுன் முதற் பொருளை உணருமாயின், பேர்த்துப் பிறப்பு உள்ள வேண்டா - அவனுக்கு மாறிப் பிறப்பு உளதாக நினைக்கவேண்டா.

ஒருதலையா ஓர்த்து என இயையும். அளவைகளும் பொருந்து மாறும் மேலே உரைத்தாம். இதனுல் விமரிசம் கூறப்பட்டது.

மணக்:— உள்ளமானது உள்ள பொருளை ஆராய்ந்து ஒருதலையாக உணருமாயின், பின்னைப் பிறப்புண்டு என்று நினையாது ஒழிக என்றவாறு:

மெய்யுணர்ந்தவர் பிறப்பு உண்டு என்று நினையாது ஒழிக என்றது. (5)

பருதி:— எ - து அறிவின் வெள்ளத்தைத் திருவடியிலே செலுத்துமாகில் அவனுக்குப் பிறப்பு இல்லை என்றவாறு. (4)

காளிங்:— எ - து ஒருவனது உள்ளமானது ஒன்றை மற்றொன்றாகக் கருதி மயங்காது கீழ்ச்சொன்னபடியே ஓர்ந்துபார்த்து மற்று இணை இறந்த தலைமைப்பாடாக உள்ளதனை உள்ளுமாயின் பின்பு பெயர்த்து ஆராயவேண்டா பிறவியினை என்றவாறு.

ஒருதலை என்பது இணையிறந்த தலைமைப்பாடு. (7)

## மேற்கோள்பகுதி :

மயிலை:— உடம்போடு கூடிய உயிர்க்குணம் ஓர்ப்பு என்பதற்கு மேற்கோள். (நன். 451.)

## ஒப்புமைப்பகுதி :

கள்ளத்தைக் கழிய மனம் ஒன்றி நின்று
உள்ளத்தினுளியைக் கண்ட தென்னுள்ளமே. அப்பர் குறுந்.

### 358. பிறப்பென்னும் பேதைமை *நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்ப தறிவு. (அ)

## உரைப்பகுதி :

பரிமே :— பிறப்பு என்னும் பேதைமை நீங்க - பிறப்பிற்கு முதற் காரணமாய அவிச்சை கெட, சிறப்பு என்னும் செம்பொருள் காண்பது அறிவு - வீட்டிற்கு நிமித்த காரணமாய செவ்வியபொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெய்யுணர்வாவது.

பிறப்பென்னும் பேதைமை எனவும், சிறப்பு என்னும் செம்பொருள் எனவும், காரியத்தைக் காரணமாக உபசரித்தார். ஐவகைக் குற்றங்களுள் அவிச்சை ஏனைய நான்கிற்கும் காரணமாதல் உடைமையின், அச்சிறப்புப்பற்றி அதனையே பிறப்பிற்குக் காரணமாக்கிக்

*'நீங்கி' - என்பது காளிங்கர் பாடம்.

கூறினர். எல்லாப்பொருளினும் சிறந்தது ஆகலால், வீடு சிறப்பு எனப்பட்டது. தோற்றக்கேடுகள் இன்மையின் நித்தமாய், நோன்மையால் தன்னையொன்றுங் கலத்தல் இன்மையின் தூய்தாய்த், தானெல்லாவற்றையும் கலந்து நிற்கின்ற முதற்பொருள் விகாரமின்றி. எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாதல் பற்றி, அதனைச் செம்பொருள் என்றார். மேல் மெய்ப்பொருள் எனவும் உள்ளது எனவும் கூறியதூஉம் இது பற்றியென உணர்க. அதனைக் காண்கையாவது உயிர் தன் அவிச்சை கெட்டு அதனோடு ஒற்றுமையுற இடை விடாது பாவித்தல். இதனைச் சமாதி எனவும் சுக்கிலத்தியானம் எனவும் கூறுப. உயிர் உடம்பின் நீங்குங்காலத்து அதனால் யாதொன்று பாவிக்கப் பட்டது: அஃது அதுவாய்த் தோன்றும் என்பது எல்லா ஆகமங்கட்கும் துணிபு ஆகலின், வீடெய்துவார்க்கு அக்காலத்துப் பிறப்பிற்கேதுவாய பாவனை கெடுதற்பொருட்டுக் கேவலப்பொருளையே பாவித்தல் வேண்டுதலான், அதனை முன்னே பயிறலாய இதனின்மிக்க உபாயம் இல்லை என்பது அறிக. இதனால் பாவனை கூறப்பட்டது.

**மணக் :—** *பிறப்பாகிய அறியாமையினின்றுநீங்கப், பிறவாமையாகிய செவ்விய பொருளைக் காண்பது அறிவாம், என்றவாறு.*

*பிறவாமை சிறந்ததாதலின், சிறப்பு என்னப்பட்டது. தான் பிறந்தானாகவும் செத்தானாகவும் கருதுகின்ற அறியாமையை விட்டுத், தனக்குச் சாவில்லையாகவும் பிறப்பில்லையாகவும் தான் நிற்கின்ற நிலைமையைக் காண வேண்டும் என்றவாறாயிற்று.* (4)

பருதி :— *எ - து செனன மரண பேதைமை போம்படிக்கு ஞானம் என்னும்சிறப்பைக் காண்பது இயல்பு என்றவாறு.* (6)

**காளிங் :—** *எ - து உலகத்து, மக்களும் தேவரும் பிறவுமாகிய பிறப்பு என்பது ஒன்றுளது என்று கருதும் அறியாமை நீங்குமாறு, உலகத்தோர் நல்லனவாகக் கருதிவருகின்ற யாவையினும் தான் சிறந்ததும் மற்றும் தன்னிற் சிறந்ததும் பிறிதொன்று இன்மையான அதுவே, சிறப்பு உடையது என்று, மறைநூல்களும் மற்றும் பிறவும் இவை முழுதும் உணர்ந்தவரும் முனிவருள்ளிட்டோரும் எடுத்துச் சொல்லுகின்ற மெய்ப்பொருளினை இப்படிக் காணவல்லது யாது, மற்று அதுவே அறிவாவது என்றவாறு.*

**பேதைமை என்பது அறியாமை.** (3)

**மேற்கோள்பகுதி:**

பெருங் :— இது விரியுருவகத்திற்கு மேற்கோள், (வீரசோ. 160.)

**ஒப்புமைப் பகுதி?**

''பேதைமைத்தாய் வரும் பிறப்பை நீங்குவான்'' —கம்ப. மந்திரப் 33.

359. *சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய், (கூ)

**உரைப்பகுதி:**

**பரிமே** :— சார்பு உணர்ந்து சார்பு கெட ஒழுகின் - ஒருவன் எல்லாப் பொருட்கும் சார்பாய அச்செம்பொருளை உணர்ந்து இருவகைப் பற்றும் அற ஒழுகவல்லனாயின்; சார்தரும் நோய் அழித்து மற்றுச் சார்த்ரா - அவனை முன் சாரக்கடவனவாய் நின்ற துன்பங்கள் அவ்வுணர்வு ஒழுக்கங்களை அழித்துப் பின் சாரமாட்டா.

ஆகுபெயரால் சாருமிடத்தையும் சார்வனவற்றையும் சார்பு என்றார். ஈண்டு ஒழுக்கம் என்றது யோகநெறி ஒழுகுதலை. அஃது இயமம், நியமம், இருப்பு, உயிர்நிலை, மனவொருக்கம், தாரணை, தியானம், சமாதி என எண்வகைப்படும். அவற்றின் பரப்பெல்லாம் ஈண்டுரைப்பின் பெருகும்; யோகநூல்களுள் காண்க. மற்றுச் சார்தரா என இயையும். சாரக்கடவனவாய் நின்ற துன்பங்களாவன பிறப்பு அநாதியாய் வருதலின், உயிரான் அளவின்றி ஈட்டப்பட்ட வினைகளின் பயன்களுள், இறந்த உடம்புகளான் அனுபவித்தனவும், பிறந்தவுடம்பான் முகந்து நின்றனவும் ஒழியப் பின்னும் அனுபவிக்கக் கடவனவாய்க் கிடந்தன. அவை விளக்கின் முன் இருள் போல் ஞானயோகங்களின் முன்னர்க் கெடுதலான், அழித்துச் சார்தரா என்றார். இதனை ஆருகதர் உவர்ப்பு என்ப. பிறப்பிற்குக் காரணம் ஆகலான், நல்வினைப்பயனும் நோயெனப்பட்டது. மேல் மூன்று உபாயத்தானும் பரம்பொருளை உணரப் பிறப்பறும் என்றார். அஃதறும் வழிக் கிடந்த துன்பங்களெல்லாம் என்செய்யும் என்னும் கடாவை ஆசங்கித்து அவை ஞானயோகங்களின் முதிர்ச்சியுடைய உயிரைச் சார மாட்டாமையானும் வேறு சார்பு இன்மையானும் கெட்டு விடும் என்பது இதனால் கூறப்பட்டது.

* 'சார்வு' எனவும் பாடம்.

**மணக்** :—தன்னைச் சார்வனவற்றை அறிந்து அவையிற்றின் சார்வு கெட ஒழுகுவனாயின், அவ்வொழுக்கத்தினை அழித்துச் சார்தலைச் செய்யா; சாரக்கடவனவாய துன்பங்கள், என்றவாறு.

சார்பு - வினைச்சார்பு; கெட ஒழுகல் - காமம் வெகுளி மயக்கமின்றி மெய்யுணர்ச்சியான் ஒழுகுதல். இஃது உண்மையைக் கண்டு அக்காட்சியைத் தப்பாமல் முடிய நிற்பனாயின், சாரக்கடவதாய் நிற்கின்ற வினை சாராதே விட்டுப்போம் என்றது. (9)

**பருதி** :— எது - ஆத்மாவுக்குச் சார்பறிந்து செனனத்தைக் கெட வேணும் என்று நிலை பிடிப்பானாகில் இந்த நிலையை அழிக்கமாட்டாது என்றவாறு. (8)

**காளிங்** :— எ - து தனக்கு முத்திச் சார்வாம் முதல்வனை யறிந்து பிறப்பிற்குக் காரணமாகிய சார்வு கெடும்படி ஒழுகுவனாயின், மறித்துச் சாரா சார்ந்துவரும் பிறவிநோய்கள் என்றவாறு.

சார்வு என்பது உடம்பு. சார்வுகெட என்பது யான் என்றும் எனது என்றும் பற்றிவருகின்ற சார்வுக்கேடு. (9)

## உரைவிளக்கப்பகுதி :

**நுண்** :—அழித்துச்சார என இயையும் 'ஓர்த்துள்ளம்' என்பதனுள் (357) 'ஒரு தலையா ஓர்த்து' என்பதும் அது. சஞ்சிதம் ஆகாமியங்கள் கெடும் என்பதும் பிராரத்துவம் கெடாது என்பதும் காண்க.

## மேற்கோள்பகுதி:—

**இளம்**:— பொருளொடு புணர்ந்த பக்கத்திற்கு மேற்கோள் (தொல் - பொருள் 75)

**வெள்ளி**:— (முத்திநிச் - பேருரை பக். 28.)

இன்னிலை 44.

## ஒப்புமைப்பகுதி :

"சாறயர்ந்து இறைவற் பேணிச் சார்பறுத்து உய்தியென்று கூறினன்."
—சீவக, 1221

"சார்புணர்ந்து 'சார்பு கெடஒழுகின் என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம் - சார்பு
கெடஒழுகின் நல்ல சமாதியுமாம் தேகம்
படவருவ தில்லைவினைப் பற்று."
—திருக்களிற்றுப், 34

**360. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்**

**பரிமே:—** காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம் கெட - ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையார்க்கு விழைவு அவிச்சை என்னும் இக்குற்றங்கள் மூன்றனுடைய பெயருங் கூடக்கெடுதலான், நோய்கெடும் - அவற்றின் காரியமாய வினைப்பயன்கள் உளவாகா.

அநாதியாய அவிச்சையும், அதுபற்றி யான் என மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கு இதுவேண்டும் என்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கண் செல்லும் ஆசையும், அதுபற்றி அதன்மறுதலைக்கண் செல்லுங்கோபமும் என வடநூலார் குற்றம் ஐந்து என்றார். இவர் அவற்றுள் அகங்காரம் அவிச்சைக்கண்ணும் அவாவுதல் ஆசைக்கண்ணும் அடங்குதலான், மூன்று என்றார். இடையறாத ஞானயோகங்களின் முன்னர் இக்குற்றங்கள் மூன்றும் காட்டுத்தீ முன்னர்ப் பஞ்சுத்துய் போலும் ஆகலின், அம்மிகுதி தோன்ற இவை மூன்றன் நாமங்கெட என்றார். இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. கெடஎன்பது எச்சத்திரிவு. நோய் என்பது சாதியொருமை. காரணமாய அக்குற்றங்களைக் கெடுத்தார் காரியமாகிய இருவினைகளைச் செய்யாமையின், அவர்க்கு வரக்கடவ துன்பங்களும் இல்லை என்பது இதனல் கூறப்பட்டது. முன்கிடந்த துன்பங்களும் மேல் வரக்கடவ துன்பங்களும் இலவாதல் மெய்யுணர்வின் பயனாகலின், இவை இரண்டுபாட்டும் இவ்வதிகாரத்தவாயின. இவ்வாற்றானே மெய்யுணர்ந்தார்க்கு நிற்பன எடுத்தவுடம்பும், அது கொண்ட வினைப்பயன்களுமே என்பது பெற்றாம்.

**மணக்:—** *ஆசையும் வெகுளியும் மயக்கமும் என்னும் இவை மூன்றினது நாமம்போக, வினைபோம் என்றவாறு.*

*வினைகெடுதற்கு வழி இது என்று கூறுதலான், இது மெய் உணர்தலாயிற்று.* (10)

**பருதி :—** *எ - து ஆசையும், கோபமும், அஞ்ஞானமும் விட்டால் அச்செனனம் கெடும் என்றவாறு.* (9)

**காளிங் :—** *எ - து மற்று இங்குச் சொன்ன மெய்யுணர்வினால் முக்குணங்களின் விகாரம் விரிவாய் மற்று யாவரையும் மயக்கிவருகின்ற அவாவும், சினமும், மோகமும் என்று சொல்லப்பட்ட இவை மூன்றினது*

பெயரும் உட்படத் தன்கண் இல்லாதவாறு முன்னும் கெடவே, இவற்றின்வழி உளதாக ஒழுகுகின்ற பிறப்பு என்னும் அனைத்துநோயும் கெடும் என்றவாறு.

இனிக் கீழ்ச்சொல்லிய காமம் முதலிய மூன்றினும் காமம் என்பது ஒன்றினை அவாவுதலன்றே! மற்று அஃது எய்தாக்கால் வரும் வெகுளியும் அதனது முதிர்ச்சிக் கண் தனதுள்ளம் மயங்கும் மயக்கமும் என்னும் இவை இரண்டும் பிறவும் நிகழ்வதொன்றனை காமித்தலென்னும் அவாவினுலாதலால் கீழ்ச்சொன்ன மெய்யுணர்விற்குக் காரணமாகிய விவேகம் என்னுந் தெரிந்துணர்வினுன் முன்னம் அனைத்திற்கும் காரணமாகிய அவாவினை அறுக்கவே மற்றமெய்யுணர்வு என்னும் பேருணர்வு வந்து வெளிப்படும். ஆதலால் இவ்வுணர்வு இல்லோர்க்கும் இதனது நிகழ்ச்சிக்கேதுவாக அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம். (10)

## மேற்கோள்பகுதி :

நச் :— காமம் நீத்தபாலினுலும் : அங்ஙனம் துறவுள்ளம் பிறந்த பின்னர் எப்பொருட்கண்ணும் பற்றற்ற மிகுதிக்கு இக்குறள் உதாரணம் (தொல், பொருள். 77.)

இளம் :— ஷ ை (தொல். பொருள். 75.)

சிவஞான :— பஞ்சக்கிலேசத்தை மூன்ருய் அடக்கிக் காமம் வெகுளி மயக்கம் என்ருர் வள்ளுவனுரும். (சிவஞானபோ. சூ. 2. அதி. 2.)

## ஒப்புமைப்பகுதி :

"யாமேல் உரைத்த பொருள்கட் கெல்லாம்
காமம் வெகுளி மயக்கம் காரணம்" —மணி. பவத்திற 252 - 253

## 37. அவாவறுத்தல்.

பரிமே:— அஃதாவது முன்னும் பின்னும் வினைத்தொடர்பு அறுத்தார்க்கு நடுவு நின்ற உடம்பும், அதுகொண்ட வினைப்பயன்களும் நின்றமையின், வேதனைபற்றி ஒரோவழித் துறக்கப்பட்ட புலன்கள்மேற் பழைய பயிற்சிவயத்தான் நினைவு செல்லுமன்றே, அந்நினைவும் அவிச்சை எனப் பிறவிக்கு வித்தாம் ஆகலின், அதனை இடைவிடாது மெய்ப்பொருள் உணர்வான் அறுத்தல். அதிகார முறைமையும் இதனுனே விளங்கும்.

**மணக் :—** *அவாவறுத்தலாவது பொய்ப்பொருள்கள்மேற் செல்லும் ஆசையைத் தவிர்த்தல். முக்திக்குக் காரணமாக மெய்யுணர்தலே அமையுமாயினும், பின்னும் உடம்போடு நிற்றலின் தான் விட்ட பொருள்கள் மாட்டு ஆசைசெல்லின், மீண்டும் பிறப்பிற்குக் காரணமாம்; ஆதலால் இதனைத் தவிரவேண்டுமென்று எல்லாவற்றினும் பின் இது கூறப்பட்டது.*

**பருதி :—** *அவாவறுத்தலாவது, மூன்றுவகை ஆசையும் விடவேணும் என்றவாறு.*

**361. அவா என்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து (க)**

**உரைப்பகுதி :**

பரிமே:— எல்லாவுயிர்க்கும் எஞ்ஞான்றும் தவாப் பிறப்பு ஈனும் வித்து - எல்லாவுயிர்கட்கும் எக்காலத்தும் கெடாது வருகின்ற பிறப்பினை விளைவிக்கும் வித்து; அவா என்ப - அவா என்று சொல்லுவர் நூலோர்.

உடம்பு நீங்கிப்போங்காலத்து அடுத்தவினையும், அது காட்டுங் கதி நிமித்தங்களும், அக்கதிக்கண் அவாவும் உயிரின்கண் முறையே வந்து உதிப்ப, அறிவை மோகம் மறைப்ப, அவ் உயிரை அவ் அவா அக்கதிக்கண் கொண்டு செல்லுமாகலான் அதனைப் பிறப்பீனும் வித்து என்றும். கதிவயத்தான் உளதாய அவ்வுயிர் வேறுபாட்டினும் அவை தன்மை திரியும் உற்சர்ப்பிணி அவசர்ப்பிணி என்னும் காலவேறுபாட்டினும் அது வித்தாதல் வேறுபடாமையின் எல்லாவுயிர்க்கும் எஞ்

ஞான்றும் என்றும், இஃது எல்லாச் சமயங்கட்கும் ஒத்தலான் என்ப என்றும் கூறினர். இதனால் பிறப்பிற்கு அவா வித்தாதல் கூறப் பட்டது.

**மணக் :—** *எல்லாவுயிர்க்கும் எல்லா நாளும் கேடில்லாத பிறப்பைக் கொடுக்கும் விதையாவது ஆசை என்று சொல்லுவர் என்றவாறு.*

*இஃது ஆசை துன்பம் தருதலேயன்றிப் பிறப்பையும் தரும் என்றது.* (3)

**பருதி :—** *எ - து ஆசையாவது பிராணிகளுக்கெல்லாம் பிறப்பைக் கொடுக்கிற விதையாம் என்றவாறு.* (4)

**காளிங் :—** *எ - து இவ்வுலகத்து நல்வினைப் பயன்களை அவாவிச் செய்யுமிடத்து நல்லனவும் பற்றிது ஒழிந்த கொலை களவு கள் காமம் குறளை பொய் வஞ்சனை முதலிய தீயனவுமாய் இங்ஙனம் வருகின்ற எல்லா உயிர்க்கும் எக்காலமும் பிறிதொன்றினாலும் கேடில்லாத பிறவியை ஈனும் அவாவாகிய வித்து எனவே இதனைக் கருதற்குக் காரணம் மற்று இது ஒன்றுமே; பிறிதில்லை என்றவாறு.* (6)

## ஒப்புமைப்பகுதி :

"ஆர்வவேர் அரிந்து." —சீவக. 409. —பாகவதம் 1 - 2

## 362. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
## வேண்டாமை வேண்ட வரும் (உ)

## உரைப்பகுதி :

**பரிமே :—**வேண்டுங்கால் பிறவாமை வேண்டும் - பிறப்புத் துன்பமாதல் அறிந்தவன் ஒன்றை வேண்டின் பிறவாமை வேண்டும்; அது வேண்டாமை வேண்ட வரும் - அப்பிறவாமை தான் ஒரு பொருளையும் அவாவாமையை வேண்ட அவனுக்குத் தானே உண்டாம்.

அநாதியாகத் தான் * பிறப்புப் பிணி மூப்பு இறப்புக்களால் துன்பமுற்று வருகின்றமையை உணர்ந்தவனுக்கு ஆசை இன்பத்தின் கண்ணேயாகலின் பிறவாமையை வேண்டும் என்றும், ஈண்டைச் சிற்

* 'பிறப்பெனப் படுவது அக் கருமப்பெற்றியின், உறப்புணர் உளளம் சார்பொடு கதிகளின் காரண காரிய உருக்களில் தோன்றல், பிணி எனப்படுவது சார்பிற் பிறிதாய், இயற்கையிற் திரிந்துடம்பிடும்பை புரிதல் மூப்பென மொழிவது அந்தத்தளவும், தாக்குநிலையாமையின் தாந் தளர்ந் திடுதல், சாக்காடென்ப தருவுருத் தன்மை, யாக்கை விழ்கதிர் என மறைந்திடுதல்'— மணிமேகலை 30 ; 95 - 103. மற்றும் 30 : 115 - 118, 130 - 132, 145 – 146 , 167– 168, ஆகிய அடிகளிலும் காணலாம்.

றின்பங்கருதி ஒரு பொருளை அவாவின் அது பிறப்பீனும் வித்தாய்ப் பின்னும் முடிவில்லாத துன்பமே விளைத்தலின் அது வேண்டாமை வேண்ட வரும் என்றும் கூறினர். பிறவாமையின் சிறப்புக் கூறிப் பின் அது வரும் வழி கூறத் தொடங்குகின்றமையின். மற்று வினை மாற்றின் கண் வந்தது.

**மணக் :—** *வேண்டுங்கால் பிறவாமையை விரும்புதல் வேண்டும் அப் பிறவாமை; பொருளை விரும்பாமையை விரும்பத் தானே வரும் என்றவாறு.*

*இது பிறவாமையும் இதனாலே வரும் என்றது.* (9)

**பருதி :—** *எ - து ஒன்றையும் வேண்டக் கடவனல்லன் வேண்டினனுஞ்கில் பிறவா நெறியை வேண்டுவான் அல்லது ஆசையை வேண்டாமலிருந்தானாகிலும் வேண்டினது வரும் என்றவாறு.* (5)

**காளிங் :—** *எ - து ஒருவர்க்கு யாதானும் ஒன்றனையும் விரும்புமிடத்துப் பிறவாமையே விரும்பலாவது; இங்கனம் பிறவாமையை விரும்புமிடத்து அவா எவ்வாறும் வருவதில்லை ஆதலால், அவாவினை விரும்பாது ஒழியின், பிறவாமையாகிய முத்தி தானே விரும்பிவந்து எய்தும் என்றவாறு.* (8)

## ஒப்புமைப்பகுதி :

''விடும் வேண்டா விறலின் விளங்கினர்.'' —பெரிய. திருக்கூட். 8.

''வேண்டாதொன்றும் வேண்டாது மிக்க அன்பு மேவுதலே.''
—திருவா. பிரார்த்தனை 4.

''வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டின் அஃதொன்றுமே வேண்டுவது—வேண்டினது
வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டும் அவன்பால்.'' —திருக்களிற்றுப். 40

**363. வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை**
***ஆண்டும் அஃதொப்ப தில். (ந)**

## உரைப்பகுதி :

**பரிமே :—**வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை - ஒரு பொருளையும் அவாவாமையை ஒக்கும் விழுமிய செல்வம் காணப்

* 'யாண்டும்' என்பது காளிங்கர் பாடம்

படுகின்ற இவ்வுலகின்கண் இல்லை; ஆண்டும் அஃது ஒப்பது இல்-இனி அவ்வளவேயன்று, கேட்கப்படுகின்ற துறக்கத்தின்கண்ணும் அதனை ஒப்பது இல்லை.

மக்கள்செல்வமும் தேவர்செல்வமும் மேன்மேல் நோக்கக் கீழாத லுடைமையின், தனக்கு மேலில்லாத வேண்டாமையை விழுச்செல் வம் என்றும், அதற்கு இரண்டுலகினும் ஒப்பது எல்லை என்றும் கூறி னர், ஆகம அளவைபோலாது காட்சியளவை எல்லாரானும் தெளி யப்படுதலின். மக்கள்செல்வம் வகுத்து முற்கூறப்பட்டது. பிறவா மைக்கு வழியாம் எனவும், விழுச்செல்வமாம் எனவும். வேண்டாமை யின் சிறப்பு இவ்விரண்டு பாட்டானும் கூறப்பட்டது.

**மணக் :—** *அவாவின்மை போல மிக்க செல்வம் இவ்விடத்தில் இல்லை; அவ்விடத்திலும் அதனையொப்பது பிறிதில்லை என்றவாறு.*

*இஃது இதனின் மிக்கதொரு பொருளும் இல்லை என்றது.* (7)

**பருதி :—** *எ - து ஆசையற்ற செல்வத்திற்குப் பூலோகத்திலும் தெய்வலோகத்திலும் நிகரில்லை என்றவாறு.* (6)

**காளிங் :—** *எ - து அவா என்னப்பட்ட யாதொன்றினையும் விரும் பாமையாகிய இதனை ஒப்பதோர் விழுமிய செல்வம் இவ்விடத்தில்லை அதுவேயும் அன்றி மற்றும் எவ்விடத்தும் அதனை ஒப்பது ஒன்றும் இல்லை என்றவாறு.* (3)

**மேற்கோள்பகுதி :**

**காரிரத்ன:—** *பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள்.* (*மாற.* 251.)

**364. தூஉய்மை என்ப தவாவின்மை மற்றது**
**வாஅய்மை வேண்ட வரும்** (சு)

**உரைப்பகுதி :**

**பரிமே :—**தூஉய்மை என்பது அவாவின்மை - ஒருவர்க்கு வீடு என்று சொல்லப்படுவது அவாவில்லாமை; அது வாய்மை வேண்டவரும் - அவ்வவாவில்லாமைதான் மெய்ம்மையை வேண்டத் தானே உண்டாம்,

வீடாவது உயிர் அவிச்சை முதலிய மாசு நீங்குதலாகலின், அதனைத் தூய்மை என்றும், காரணத்தைக் காரியமாக உபசரித்துத் தூய்மை என்பது அவாவின்மை என்றும், மெய்ம்மையுடைய பரத்தை ஆகுபெயரான் மெய்ம்மை என்றும் கூறினர். மற்று மேலையதுபோல வினைமாற்றின்கண் வந்தது. வேண்டுதல் - இடைவிடாது பாவித்தல். அவா அறுத்தல் வீட்டிற்குப் பாம்பரையானன்றி நேரே ஏது என்பதூஉம் அது வரும்வழியும் இதனால் கூறப்பட்டன.

மணக் :— ஒருவருக்கு அழுக்கறுத்தலாவது ஆசை இன்மை; அவ்வாசையின்மை மெய் சொல்லுதலை விரும்பவரும் என்றவாறு.

இது பொருள்மேல் ஆசையில்லாதார் பொய் கூறாராதலின், மெய் சொல்ல அவாவின்மை வரும் என்று அவாவறுத்தற்குக் கருவி கூறிற்று. (5)

பருதி :— எ - து உபதேசமுறுவதில் பெறுவது ஆசையை விடுதல்; உபதேசம் உண்மையாகில் ஆசை வேண்டினது தரும் என்றவாறு. (3)

காளிங் :— எ - து ஒருவன் மனத் தூய்மை என்று சொல்லப் படுவது யாதோ எனில், யாதொன்றின்மாட்டும் அவா இல்லாமையே; மற்று அவ் அவாவானது இல்லாமைதான் யாதினால் வருவது எனில், மெய்ம்மையை விரும்ப வந்து எய்தும் என்றவாறு. (4)

**365. அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார்**
**அற்றாக அற்ற திலர். (ரு)**

**உரைப்பகுதி :**

பரிமே :— அற்றவர் என்பார் அவா அற்றார் - பிறவியற்றவர் என்று சொல்லப்படுவார் அதற்கு நேரே எதுவாகிய அவாவற்றவர்கள்; மற்றையார் அற்றாக அற்றதிலர் - பிறவேதுக்கள் அற்று அஃதொன்றும் அறாதவர்கள், அவற்றால் சில துன்பங்கள் அற்றதல்லது அவர்போல் பிறவியற்றிலர்.

இதனால் அவாவறுத்தாரது சிறப்பு விதிமுகத்தானும் எதிர்மறை முகத்தானும் கூறப்பட்டது.

மணக் :— பற்றற்றவரென்பார் ஆசையற்றவரே; ஆசையறாதவர் பற்றினை அறுத்தாராயினும், ஆசையற்றாரைப் போலப் பற்றுதல் இலர் என்றவாறு. (4)

பருதி :— செனனம் அற்ருர் என்பது அவா அற்ருரை. ஆசை விடாதாரைச் செனனம் விடாது என்றவாறு. (1)

காளிங் :—எ - து மற்ற ஈண்டுள்ள பொருள் மாடு பெண்டிர் புதல்வர் சுற்றம் நட்டோர் முதலாகிய அனைத்தினும் உள்ள அவா அற்றனர் என்று சான்ருேரால் சொல்லப்படுவார் யாரோ எனில் மற்று எப்பற்றும் காரணமாகிய அவாவினை அற்றவரே ஆசையற்றவராவார்; மற்றையார் துறவு மேற்கொண்டு அவா அருதார் என்றவாறு. (1)

366. அஞ்சுவ தோரும் அறனேஒருவனை
வஞ்சிப்ப தோரும்அவா. (௬)

## உரைப்பகுதி :

பரிமே :— ஒருவனை வஞ்சிப்பது அவா - மெய்யுணர்தலீருகிய காரணங்களெல்லாம் எய்தி அவற்ருன் வீடு எய்தற்பாலனுய ஒருவனை மறவி வழியால் புகுந்து பின்னும் பிறப்பின்கண்ணே வீழ்த்துக் கெடுக்க வல்லது அவா; அஞ்சுவதே அறன்-ஆகலான், அவ் அவாவை அஞ்சிக் காப்பதே துறவறமாவது.

ஒரும் என்பன அசைநிலை. அநாதியாய்ப் போந்த அவா ஒரோ வழி வாய்மை வேண்டலை ஒழிந்து பராக்கால் காவானுயின், அஃது இடமாக அவனறியாமல் புகுந்து பழைய இயற்கையாய் நின்று பிறப் பினை உண்டாக்குதலான், அதனை வஞ்சிப்பது என்ருர். காத்தலாவது வாய்மை வேண்டலை இடைவிடாது பயின்று அது செய்யாமல் பரி கரித்தல். இதனல் அவாவின் குற்றமும் அதனைக் காப்பதே அறம் என்பதூஉம் கூறப்பட்டன.

மணக் :— ஒருவனை வஞ்சனை செய்வது ஆசை; ஆதலால் அதனை அஞ்சுவதே அறம் என்றவாறு.

வஞ்சனை செய்தல் - நன்றி செய்வாரைப் போல முன்னே நின்று பின்னே தீக்கதியுள் உய்த்தல். இஃது ஆசையின்மை வேண்டும் என்றது. (1)

பருதி :— ஆசையை நினைத்தபோது பயப்படும் அறிவுடைமை. ஒருவர்க்குக் கொடுக்கின்றபோது வஞ்சனை செய்யும் ஆசை என்றவாறு.(2)

காளிங் :— எ - து இவ்வுலகின் கணத்தோடு பொருந்தி, அதனை இறந்த பெரியோரையும் பொருள் கருதி, வஞ்சிப்பதே சூழும் நெஞ்சில்

அவாவானது. ஆதலால் இதனைப் பெரிதும் அஞ்சத்தகுவதொன்றாக விசாரியும். எனவே, அவாவினை என்றும் அணையற்க என்று பொருளாம் என உணர்க என்றவாறு. (5)

**மேற்கோள்பகுதி :**

தெய்வச்: (தொல், சொல் : 258)

நச் :— அஞ்சுவதோரும் அறனே. ஒரும் அசைநிலை, (தொல். சொல். 258)

மயிலை :— ஒரும் என்பது அசைநிலை இடைச் சொல்லுக்கு மேற்கோள். (நன். 441.)

சங்கர :—எல்லா இடத்திலும் வரும் இடைச்சொற்களின் உதாரணம் அஞ்சுவதோரும் அறனே என்பது. (நன். 441.)

**367. அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை**
**தான்வேண்டும் ஆற்றான் வரும். (எ)**

**உரைப்பகுதி :**

பரிமே:— அவாவினை ஆற்ற அறுப்பின் - ஒருவன் அவாவினை அஞ்சித் துவரக்கெடுக்க வல்லனாயின்; தவாவினை தான் ஆற்றான் வரும் - அவனுக்குக் கெடாமைக்கு ஏதுவாகிய வினை தான் விரும்பு நெறியானே உண்டாம்.

கெடாமை பிறவித் துன்பங்கள் அழியாமை. அதற்கு ஏதுவாகிய வினை என்றது மேற்சொல்லிய துறவறங்களை. வினைசாதி யொருமை. தான் விரும்புநெறி - மெய்வருந்தாநெறி. அவாவினை முற்ற அறுத்தாற்கு வேறு அறஞ்செய்யவேண்டா, செய்தன எல்லாம் அறமாம் என்பது கருத்து. இதனால் அவாவறுத்தற் சிறப்புக் கூறப்பட்டது என்றவாறு.

மணக் :— ஆசையை மிகவும் போக்குவானாயின், கேடில்லாத வினை தான் வேண்டின நெறியாலே வரும், என்றவாறு. (6)

பருதி :—எ ∸ து ஆத்மாவுக்கு வினையான ஆசையை விடுப்பானாகில் தவமான காரியந்தான் நினைத்தபடியே வரும் என்றவாறு. (9)

காளிங் :— எ - து அவாவினை ஒன்றின்கண் வராது; ஒன்றின் கண் தவிராது; மற்றவையும் இங்கு செய்தவினை இறுதிக்கண் கெடும் என்பது கருதி. மற்றதனால் கேடில்லாத தேர்ச்சியாகிய தெளிவுணர்வானது பின்பு ஒரு வருத்தம் இன்றி, தான் நினைத்தாங்கே வந்தெய்தும் என்றவாறு.

ஆற்ற என்பது மிகவும். தவாவினை என்பது கெடாத விசாரம். (2)

368. அவாஇல்லார்க் கில்லாகும் துன்பம் அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும் (அ)

**உரைப்பகுதி:**

பரிமே:—அவா இல்லார்க்குத் துன்பம் இல்லாகும் - அவா இல்லாதார்க்கு வரக்கடவதொரு துன்பமும் இல்லை; அ∴து உண்டேல் தவாது மேன்மேல் வரும் - ஒருவற்குப் பிறகாரணங்களெல்லாம் இன்றி அ∴து ஒன்றும் உண்டாயின், அதனாலே எல்லாத் துன்பங்களும் முடிவின்றி இடைவிடாமல் வரும்.

உடம்பு முகந்துநின்ற துன்பம் முன்பே செய்துகொண்டதாகலின், ஈண்டுத் துன்பம் என்றது இதுபொழுது அவாவால் செய்துகொள்வனவற்றை. தவாதுமேன்மேல் வரும் என்றதனான், மூவகைத் துன்பங்களும் என்பது பெற்றும். இதனால் அவாவே துன்பத்திற்குக் காரணம் என்பது கூறப்பட்டது.

மணக் :— ஆசையிலார்க்குத் துன்பம் இல்லையாகும்; அஃது உண்டாயின், துன்பமானது கெடாது மேன்மேல் வரும் என்றவாறு. (2)

பருதி :— ஆசையற்றூர்க்குத் துன்பமில்லை ; ஆசையுள்ளவர்க்குத் துன்பம் மேன்மேலே வரும் என்றவாறு (7)

காளிங் :—எ - து அவாவின் தன்மை இதுவாகலால், மற்று இவ் அவா ஒன்றும் தமக்கில்லாதார் யாவர்: மற்றவர்கட்கு, இல்லையாகுந் துன்பமானது; ஆகலால் அ∴துண்டாமாகில் துன்பம் எஞ்ஞான்றும் கெடாதே மேன்மேலும் வந்து எய்தும் என்றவாறு. (7)

369. இன்பம் இடையறு தீண்டும் அவாஎன்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். (கூ)

**உரைப்பகுதி :**

பரிமே:— அவா என்னும் துன்பத்துள் துன்பம் கெடின்-அவா என்று சொல்லப்படுகின்ற மிக்க துன்பம் ஒருவற்குக் கெடுமாயின்,

ஈண்டும் இன்பம் இடையருது – அவன் வீடு பெற்ற வழியேயன்றி உடம்போடு நின்றவழியும் இன்பம் இடையருது.

துன்பத்துள் துன்பம் ஏனைத் துன்பங்களெல்லாம் இன்பமாக வருந் துன்பம். விளைவின்கண்ணேயன்றித் தோற்றத்தின்கண்ணும் துன்பம் ஆகலின், இவ்வாறு கூறப்பட்டது. காரணத்தைக் காரியமாக உபசரித்து அவா என்னும் துன்பத்துள் துன்பம் என்றும். அது கெட்டார்க்கு மனந்தடுமாருது நிரம்பி நிற்றலான் ஈண்டும் இன்பம் இடையருது என்றும் கூறினுர். இனி ஈண்டும் என்பதற்குப் பெருகும் என்று உரைப்பாரும் உளர். இதனுல் அவா அறுத்தார் வீட்டின்பம் உடம்பொடு நின்றே எய்துவர் என்பது கூறப்பட்டது.

*மணக் :—அவாவாகிய துன்பங்களுள்மிக்க துன்பம் கெடுமாயின் இன்பமானது இடையருமல் வந்து மிகும், என்றவாறு.*

*இ·.து இன்பமும் இதனுலே வரும் என்றது.* (8)

*பருதி :— எ - து ஆசையை விடுவானுகில் இன்பம் மேன்மேல் உயரும். துன்பத்துள் மனமில்லை என்றவாறு.* (8)

*காளிங் :— எ - து வீட்டின்பமாகிய முத்தி இடையருது நிரம்புவதாம் : அது யார்க்கோ எனில் எனைத்துவகைப்பட்ட துன்பங்களெல்லாவற்றுள்ளும் மிக்க கொடிதாகிய அவா என்னும் பெரிய துன்பத்துள் துன்பம் கெடின் அவர்க்கு என்றவாறு.*

*அவாவானது தானும் துன்பத்தைச் செய்து எல்லாத் துன்பத்துக்கும் காரணமாதலால் துன்பத்துள் துன்பம் என்முர்.* (9)

**370, ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே**
**பேரா இயற்கை தரும்.** (கo)

**உரைப்பகுதி :**

**பரிமே :—** ஆரா இயற்கை அவா நீப்பின் - ஒருகாலும் நிரம்பாத இயல்பினையுடைய அவாவினை ஒருவன் நீக்குமாயின்; அந்நிலையே பேரா இய்ற்கை தரும் - அந்நீப்பு அவனுக்கு அப்பொழுதே எஞ்ஞான்றும் ஒரு நிலைமையனும் இயல்பைக் கொடுக்கும்.

நிரம்பாமையாவது தாமேயன்றித் தம்பயனும் நிலையாமையின் வேண்டாதனவாய பொருள்களை வேண்டி மேன்மேல் வளர்தல். 'அவ் வளர்ச்சிக்கு அளவின்மையின், நீத்தலே தக்கதென்பது கருத்து. களிப் புக் கவற்சிகளும் பிறப்பு பிணி மூப்பு இறப்புக்களும் முதலாயின இன்றி உயிர் நிரதிசய இன்பத்ததாய் நிற்றலின், வீட்டினைப் பேரா இயற்கை என்றும், அஃது அவா நீத்தவழிப் பெறுதல் ஒருதலையாக லின் அந்நிலையே தரும் என்றும் கூறினர். *''நன்றாய் ஞானங் கடந்து போய் நல்லிந் திரியம் எல்லாமீர்த்; தொன்றாய்க் கிடந்த அரும்பெரும் பாழ் உலப்பில் அதனை உணர்ந்துணர்ந்து; சென்றாங்கின்பத் துன்பங் கள் செற்றுக் களைந்து பசை அற்றால்; அன்றே அப்போதே வீடும் அதுவே வீடுவீடாமே'' என்பதும் இக்கருத்தேபற்றி வந்தது. இந் நிலைமையுடையவனை வடநூலார் சீவன்முத்தன் என்ப. இதனால் வீடா வது இது என்பதூஉம் அஃது அவா அறுத்தார்க்கு அப்பொழுதே உளதாம் என்பதூஉம் கூறப்பட்டன.

**மணக்:—** *நிறையா இயல்பினையுடைய ஆசையை விடுவானாயின். அது விட்ட அப்பொழுதே அழியாத இயல்பினைத் தரும், என்றவாறு.*

*இயல்பாவது என்றும் ஒருபடிப்பட்டது. இது தன்னுடைய உருவத்தைப் பெறும் என்றது.* *(10)*

**பருதி :—** *எ - து அளவு காணப்படாத ஆசையை அளவு காண்பா னாகிய அறிவு குலையாது இன்பமே வரும் என்றவாறு.* *(10)*

**காளிங் :—** *எ - து ஒன்றினாலும் நிரம்பாத் தகுதியுடைய ஆசையை நீக்கவல்லனாயின் மற்று அப்பொழுதே எஞ்ஞான்றும் இடை பெயராது ஒருபடிபட்ட முக்தியின் இயல்பினைத் தரும் என்றவாறு.*

*தவத்து நெறியால் பற்றறுக்கவேண்டி ஒருப்பட்ட துறந்தோர்க்கும் மற்றும் அல்லாதார்க்கும் முன் செய்தமைந்த இருவினைகள் நீக்க முடியாமை யாக இன்பத்துன்பங்கள் அடர்ந்து நிகழ்ந்தனவேயாயினும் இது பற்றித் தாம் மேற்கொண்ட நற்குண நிலைமைகளின் வழுவி நிற்கத்தகாது என்று காட்டுதற்கு எழுகின்றது மேலையதிகாரம்.* *(10)*

---

* திருவாய்மொழி; பதிகம் 78. பா, 6.

**மேற்கோள் பகுதி :**

*நச் :— இது " நாலிருவழக்கில் தாபதபக்கமும் " என்பதில், அவா நீப்பின் என்பதற்கு முயல்வோர் எனப் பொருள் கண்டமைக்கு மேற்கோள். (தொல். பொருள், 75)*

### துறவறவியல் முற்றிற்று

**பரிமே:—** இவ்வாற்ருன் இம்மை மறுமை வீடு என்னும் மூன்றனையும் பயத்தற் சிறப்புடைத்தாய அறம் கூறினர்; இனிப் பொருளும் இன்பமும் கூறுவார், அவற்றின் முதற்காரணமாகிய ஊழின்வலி கூறுகின்ருர்.

## 38. ஊழ்.

பரிமே:— அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை தெய்வம், நியதி, விதி என்பன ஒருபொருட்கிளவி. இது பொருள் இன்பங்கள் இரண்டற்கும் பொதுவாய் ஒன்றனுள் வைக்கப்படாமை யானும், மேற்கூறிய அறத்தோடு இயைபுடைமையானும். அதனது இறுதிக்கண் வைக்கப்பட்டது.

மணக்:— ஊழாவது முன்பு செய்தவினை பின்பு விளையும் முறை! மேற்கூறிய அறப்பகுதியும் இனிக் கூறுகின்ற பொருட் பகுதியும் இன்பப் பகுதியும் முன் செய்த நல்வினையால் வருதலையும், இவற்றிற்கு மாறான பாவமும் வறுமையும் துன்பமும் தீவினையால் வருதலையும் அறியாதே அவை உலகத்தில் மக்கள் பலர் தமது முயற்சியால் வந்தன என்பரன்றே அதற்காக இது கூறப்பட்டது. ஒருவன் செய்த வினை தனது பயனை வழு வின்றிப் பயத்தல் அறத்தினுகுமாதலான் இஃது அறத்தின் இறுதிக்கண் கூறப்பட்டது.

பருதி :—ஊழாவது போன சென்மத்தின் வினைப்பயனைச் சொல்வி யது என்றவாறு.

**371. ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்**
**போகூழால் தோன்றும் மடி.**

**உரைப்பகுதி:**

பரிமே:— கைப்பொருள் ஆகுஊழால் அசைவின்மை தோன்றும் - ஒருவற்குக் கைப்பொருளாதற்குக் காரணமாகிய ஊழான் முயற்சி உண்டாகும்; போகு ஊழால் மடி தோன்றும் - அஃது அழிதற்குக் காரணமாகிய ஊழான் மடியுண்டாம்.

ஆகூழ், போகூழ் என்னும் வினைத்தொகைகள் எதிர்காலத்தான் விரிக்கப்பட்டுக் காரணப்பொருளவாய் நின்றன. அசைவு-மடி. பொரு ளின் ஆக்க அழிவுகட்குத் துணைக்காரணமாய முயற்சி மடிகளையும் தானே தோற்றுவிக்கும் என்பது கருத்து.

மணக் :— ஒருவனுக்கு ஆக்கங் கொடுக்கின்ற ஊழ் தோற்றினல் முயற்சி தோன்றும்; அழிவு கொடுக்கின்ற ஊழ் தோற்றினல் மடி தோன்றும் என்றவாறு.

இ.:.து ஆக்கத்திற்கும் கேட்டிற்கும் ஏதுவான முயற்சியும் முயலாமையுழ் ஊழால் வரும் என்றது. (1)

**பருதி:—** எ - து ஊழாவது, போன சென்மத்தில் செய்த நல்வினை தீவினை என்க; அது இரண்டு வகைப்படும்; அவையாவன ஆகிற ஊழ் என்றும், அழிக்கிற ஊழ் என்றும் எனக் கொள்க. ஆகிற ஊழ் புத்தியைத் தரும்; அழிக்கிற ஊழ் சோம்பினைக் கொடுக்கும். ஆகையால் ஆகிற ஊழைக் கொள்க என்றவாறு. (1)

**காளிங்:—** எ - து உலகத்து யாவர்க்கும் முன்னின்ற முறையாகுவதோர் ஆகூழினால் அவரவர் நெஞ்சின்கண் தோன்றுமதுயாதோ எனில், அதற்கு ஏற்ற மடியின்மை; இனி அவ்வாறன்றித் தம்மிடத்து எய்திய பொருளும் நீங்கிப் போகுவதோர் போகூழினால் அவரவர் நெஞ்சில் தோன்றும் மடியானது என்றவாறு. (1)

அசைவின்மை என்பது மடியின்மை.

## ஒப்புமைப் பகுதி ?

ஆகுஞ் சமயத்தார்க்கு ஆள்வினையும் வேண்டாவாம்
போகும் பொறியார் புரிவும் பயமின்றே,
ஏகல் மலைநாட என் செய்தாங் கென்பெறினும்
ஆகாதார்க் காகுவதில். —பழமொழி, 137

என்பது வேறு வகையால் ஊழை வலியுறுத்துகிறது.

## 372 பேதைப் படுக்கும் இழவூழ் *அறிவகற்றும் ஆகலூழ் உற்றக் கடை. (உ)

## உரைப்பகுதி :

**பரிமே:—**இழவு ஊழ் (உற்றக்கடை) அறிவு பேதைப் படுக்கும்- ஒருவனுக்கு எல்லா அறிவும் உளவாயினும் கைப்பொருள் இழத்தற்கு ஏதுவாகிய ஊழ் வந்துற்றவிடத்து அஃது அதனைப் பேதையாக்கும்; ஆகல் ஊழ்உற்றக்கடை அகற்றும் - இனி அவனறிவு சுருங்கியிருப்பினும் கைப்பொருளாதற்கு ஏதுவாகிய ஊழ் வந்துற்றவிடத்து அஃது இதனை விரிக்கும்.

கைப்பொருள் என்பது அதிகாரத்தான் வந்தது. இழவூழ், ஆகலூழ் என்பன இரண்டும் வேற்றுமைத் தொகை. உற்றக்கடை என்பது முன்னும் கூட்டப்பட்டது. இயற்கையானாகிய அறிவையும் வேறுபடுக்கும் என்பதாம்.

* "அழிவகற்றும்" எனவும் பாடம்.

மணக்:— கெடுக்கும் ஊழ் தோன்றினல் அறியாமையை உண்டாக்கும்; ஆக்கும் ஊழ் தோன்றினல் அறிவை விரிக்கும் என்றவாறு.

இ·து அறிவும் அறியாமையும் ஊழால் வரும் என்றது. (2)

பருதி:— எ - து ஆகிற ஊழ் அதிக புத்தியைத்தரும்; அழிக்கிற ஊழ் கெடுபுத்தியைக் கொடுக்கும் என்றவாறு. (2)

காளிங்:— எ - து எய்திய ஆக்கமும் இழத்தற்கு எல்லையாகிய இழவூழ் வந்து எய்தும் எனில் மற்றஃது இழத்தற்கு ஏய்ந்த பேதைமை உளதாக்கும். இனி அவ்வாறன்றி ஆகலூழ் வந்துற்ற இடத்தால் ஏய்ந்த முயற்சிக்கண் இயல்வதோர் அறிவு இடம்படுத்தும் எனவே துறவறிவும் பிற அறிவும் அவரவருள்ளத்து நிகழ்வது அவை அவற்றுக்கு அமைந்த விதியான் என்பது பொருள் என்றவாறு.

படுக்கும் என்பது உளதாக்கும். அறிவகற்றும் என்பது இடம் படுத்தும். (5)

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— உற்றக்கடை என்பது முன்னுங் கூட்டப்பட்டது. இழவூழ் ஆகலூழ் என இரண்டும் வேற்றுமைத் தொகை. வேற்றுமைத் தொகை என்றது இழத்தற்கேதுவாகிய ஊழ், ஆதற்கு ஏதுவாகிய ஊழ் என நான்காம் வேற்றுமைத் தொகையை.

## மேற்கோள் பகுதி :

சுட்டிச் சொலப்படும் பேரறிவி னர் கண்ணும்
பட்ட விருத்தம பலவானல்—பட்ட
பொறியின் வகைய கருமம் அதனல்
அறிவினை ஊழே யடும். ....பழமொழி' 228,

## 373. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்.

## உரைப்பகுதி :

பரிமே:—நுண்ணிய நூல் பல கற்பினும் - பேதைப்படுக்கும் ஊழுடையான் ஒருவன் நுண்ணிய பொருள்களை உணர்த்தும் நூல் பலவற்றையும் கற்ருனுயினும், மற்றும் தன் உண்மை அறிவே மிகும் - அவனுக்குப் பின்னும் தன்ஊழானுகிய பேதைமை உணர்வே மேற்படும்.

பொருளின் நுண்மை நூலின்மேல் ஏற்றப்பட்டது, மேற்படுதல் கல்வியறிவைப் பின்னிரங்குதற்கு ஆக்கிச் செயலுக்குத் தான்முற்படுதல். *"காதன்மிக்குழிக் கற்றவும் கைகொடா ஆதல் கண்ணகத் தஞ்சனம் போலுமால்" என்பதும் அது. செயற்கையானுகிய அறிவையுங் கீழ்ப்படுத்தும் என்பதாம்.

மணக்: நுண்ணியவாக ஆராய்ந்த நூல்கள் பலவற்றையும், கற்ருனாயினும், பின்னையும் தனக்கு இயல்பாகிய அறிவே மிகுத்துத்தோன்றும். என்றவாறு.

மேல் அறிவிற்குக் காரணம் ஊழ் என்ருர்: அஃது எற்றுக்கு? கல்வியன்றே காரணம் என்ருர்க்கு, ஈண்டுக் கல்வியுண்டாயினும் ஊழானுய அறிவு வலியுடைத்து என்ருர். (3)

பருதி:— எ - து சென்மாந்திர வினையாகிற ஆகிற ஊழ், அழிகிற ஊழைக் கல்வியினுலே வெல்லப்படாது; அது எப்படி என்ருல், அழிகிற ஊழாகில், எத்தனை கற்ருலும் அற்ப புத்தியைக் காட்டும் என்றவாறு.(7)

காளிங்:— எ - து நன்னெறி பெறுதற்குக் காரணமாகிய ஞானத்தைத்தரும் நுண்ணிய நூல்கள் பலவற்றையும் கற்ருரேயாயினும், அவ்வளவே தமது ஊழாய் மற்று அதன்பயன் எய்துதற்கு ஓர் ஊழ் முன்னமில்லை எனில் பின்னும் தன் உண்மையறிவே மிகும்; எனவே இந்நன்னெறி அறிதல் இன்றிப் பின்னும் தானனுபவித்தற்குரிய முறைவழி அறிவே மிக்குச் செல்லும். மற்றுஇவ் அறிவு எய்தாது என்று பொருள் என்றவாறு. (4)

## உரைவிளக்கப்பகுதி:

நுண்:— மற்றும் - பின்னும், பொருளது நுண்மை நூல்மேல் ஏற்றப்பட்டது. உண்மையறிவு - ஊழானுகிய பேதைமை உணர்வு.

## மேற்கோள் பகுதி:

காரிரத்ன:— பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள் (மாற. 251.)

## ஒப்புமைப்பகுதி :

"விதிவழி மதியெனப் புலந்தார்." ....திருவிளை. விருத்த. 10,

*சீவகசிந்தாமணி 1632.

374. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. (ச)

**உரைப்பகுதி :**

**பரிமே:—** உலகத்து இயற்கை இருவேறு - **உலகத்து** ஊழினுய இயற்கை இரண்டு கூறு, திருவேறு தெள்ளியராதலும் வேறு - ஆதலால் செல்வமுடையராதலும் வேறு அறிவுடையராதலும் வேறு.

செல்வத்தினைப் படைத்தலும் காத்தலும் பயன்கோடலும் அறிவுடையார்க்கல்லது இயலாவன்றே, அவ்வாறின்றி அறிவுடையார் வறியராகவும் ஏனையார் செல்வராகவும் காண்டலான், அறிவுடையராதற்கு ஆகும் ஊழ் செல்வமுடையராதற்கு ஆகாது; செல்வமுடையராதற்கு ஆகும் ஊழ் அறிவுடையராதற்கு ஆகாது என்றதாயிற்று. ஆகவே செல்வம் செய்யுங்கால் அறிவாகிய துணைக்காரணமும் வேண்டா என்பது பெற்றும்.

**மணக்:—** *செல்வமுடையாராதலும் தெள்ளியாராதலும் வேறு வேறு ஊழினுல் வரும்; ஆதலால். இரண்டு வகையாதல் உலகத்தியல்பு என்றவாறு.* (6)

**பருதி:—** *எ. து இரண்டு வகைப்படும் செல்வம்; எப்படியென்றுல், எட்டுவகையான செல்வமும், கல்வியும் என்றவாறு,* (8)

**காளிங்:—** *எ - து இருகூறுபட்டிருக்கும் உலகத்தார் ஊழாம் இயற்கை; எங்கனம் எனில் செல்வம் உண்டாதலும் ஒருநல்லூழின்கூறு. கல்வியால் தெளிந்த நல்லறிவுடையாராகலும் மற்றொரு நல்விதிக்கு அமைந்த கூறு. எனவே முன்னமே இல்லறத்தானுகலும் துறவறமியற்றிய வழித் தெளிந்த நல்லறிவுடைய ஞானத்தானுகலும் என இங்கனம் இரண்டு கூறுபடும் என்றவாறு.* (8)

அதிர்ஷ்டம் ஒருபக்கம் அறிவு ஒரு பக்கம் பழமொ.

375. நல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு. (ரு)

**உரைப்மகுதி :**

**பரிமே :—** செல்வம் செயற்கு - செல்வத்தை ஆக்குதற்கு, நல்லவை எல்லாம் தீயவாம் - நல்லவையெல்லாம் தீயவாய் அழிக்கும். தீயவும் நல்லவாம் - அதுவேயன்றித் தீயவை தாமும் நல்லவாய் ஆக்கும், ஊழ்வயத்தான்.

நல்லவை தீயவை யென்பன காலமும், இடனும், கருவியும், தொழிலும் முதலாயவற்றை. ஊழான் என்பது அதிகாரத்தால் பெற்றும். அழிக்கும் ஊழ் உற்றவழிக் காலம் முதலியநல்லவாயினும் அழியும். ஆக்கும் ஊழ் உற்றவழி அவை தீயவாயினும் ஆகும் என்பதாயிற்று ஆகவே காலம் முதலிய துணைக்காரணங்களையும் வேறு படுக்கும் என்பது பெற்றும்.

**மணக்:** செல்வம் உண்டாக்குவதற்குத் தனக்குமுன்பு தீதாயிருந் தன எல்லாம் நன்றும்; அச்செல்வத்தை இல்லையாக்குவதற்கு முன்பு நன்றாய் இருந்தன எல்லாம் தீதாம் என்றவாறு. (5)

**பருதி:—** எ - து ஆகிற ஊழ்வருங்காலம், அழிகிறகாரியத்தை யாக்கும்; அழிகிற ஊழ் ஆகிறகாரியத்தை அழிக்கும் என்றவாறு. (4)

**காளிங்:—** எ - து முன்னோர் ஊழினால் வந்துற்ற நல்லவையாகிய செல்வமெல்லாம் நிலைதடுமாறித் தீயனவாம்; அங்கனஞ் செய்வதோர் விதிக்கு; மற்று இனித் தீயன ஆகிய எல்லாம் நிலைதடுமாறியவாறே நல்லனவாகிய செல்வம் வந்துளதாம். மற்றும் இங்ஙனம் தாம் முன்னம் செய்த செயற்குத் தக்காங்கு என்றவாறு. (8)

## உரைவிளக்கப்பகுதி :

**நுண்:—** ஊழ், அதிகாரத்தால் வந்தது. இது வகுத்துக்கொண்ட அதிகாரம் என்க. அன்றியும் முற்கவியில் என்று அதிகாரப்பட்டால் அது பிற்கவிக்கு வருவதும் ஆம். எல்லாஅம் என அளபெடுத்துச் சொல்லுக.

## மேற்கோள்பகுதி :

**சேன:—** "நல்லவை" - இக்குறள் ஊழால் என அதிகாரமாதிய காரணம் பற்றி வந்ததற்கு மேற்கோள். (தொல். சொல். 22)

## ஒப்புமைப்பகுதி :

நல்வினையுடையகீரார் நஞ்சுணின் அமுதமாகும்
இல்லையேல் அமுதும் நஞ்சாம் இன்னதால் வினையினுக்கம் — சீவக.

அஞ்சுமிகு தீவினையினரமிழ்தும் நஞ்சாம்
நஞ்சு மமிழ்தாம் உரிய நல்வினையுள் மாதோ! — வில்லி பா.

"ஊழ்வினையுருத்த காலத்து உறுதவத்தின்ற நற்றாய்
விழ்முலை சுரந்தபாலும் உண்டபின் வெய்யநஞ்சாம்
ஆழ்கடல் பிறந்த நஞ்சும் உண்டபின் அமிழ்தாம் என்றால்
வாழிய மாந்தர் எல்லாம் இருவினை வயத்தர் மன்னோ." —பிரமோத்தர.

**376. பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்**
**சொரியினும் போகா தம.** (சா)

**உரைப்பகுதி :**

**பரிமே:**—பால் அல்ல பரியினும் ஆகாவாம் - தமக்கு ஊழல்லாத பொருள்கள் வருந்திக்காப்பினும், தம்மிடத்து நில்லாவாம்; தம உய்த்துச் சொரியினும் போகா - ஊழால் தமவாய பொருள்கள் புறத்தே கொண்டு போய்ச் சொரிந்தாலும், தம்மை விட்டேபோகா.

பொருள்களின் நிலையும் போக்கும் ஊழினன் ஆவதல்லது காப்பு இகழ்ச்சிகளான் ஆகா என்பதாம். இவை ஆறுபாட்டானும் பொருட்குக் காரணமாய ஊழின்வலி கூறப்பட்டது.

**மணக்:**— *தம்முடைய பகுதியல்லாதனவற்றை வருந்திக்காப்பினும் அவை தமக்கு ஆகா; தம்முடைய பகுதியாயினவற்றைக் கொண்டு சென்று சொரிந்து விடினும் அவைபோகா என்றவாறு.*

*இது முன்புள்ள செல்வம் காவற்படுதலும் களவுபோதலும் ஊழினலேயாம் என்றது.* (9)

**பருதி:**— *எ - து ஆகிறகாலத்தில் உடைமையைப் புறத்திலே போட்டாலும் போகாது; அழிகிற காலத்தில் உடைமையை எத்தனை பாதுகாத்தாலும் போம் என்றவாறு.* (3)

**காளிங்:**— *எ - து தாம் செல்வத்தைப் பெரிதும் காதலிப்பினும் தமக்குள்ளவர்க்கு ஆகாவாம் யாவை எனில் அதற்கு ஏய்ந்த ஊழுடைய அல்லாதன. மற்று இவ்வாறன்றி அகத்திருந்த பொருளையும் புறத்துக் கொண்டு சென்று கொடுப்பினும் போகா ஒருவாற்றால் புகுந்தெய்தும்; மற்று அவ்விதியால் தம்முடையன ஆதற்கு உரிய பொருள் என்றவாறு.* (9)

**உரைவிளக்கப்பகுதி :**

**நுண்:**— *பால் - ஊழ்; அஃது அதிகாரவரவில் ஒரு பொருட்கிளவியுள் காண்க.*

**மேற்கோள்பகுதி :**

**மயிலை:**— *ஆறும் வேற்றுமை அகரவுருபு பிதின் கிழமையில் வந்ததற்கு மேற்கோள்.* (நன். 299.)

**ஒப்புமைப்பகுதி :**

"ஆகும் சமயத்தார்க் காள்வினையும் வேண்டாவாம்
போகும் பொறியார் புரிவும் பயமின்றே
ஏகன் மலைநாட என்செய்தாங் கென்பெறினும்
ஆகாதார்க் காகுவ தில்." —பழமொழி.

"வேண்டினும் வேண்டா விடினும் விழுமிய உறற்பால
தீண்டா விடுதல் அரிது." பழமொ. 230

ஈண்டுநீர் வையத்துள் எல்லாரும் எத்துணையும்
வேண்டாமற் றிய விழைபயன் அல்லவை
வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
தீண்டா விடுதல் அரிது. நாலடி, 120.

மதியினை மலரச் சூழ்ந்து வருந்தித்தாம் படைக்கப் பட்ட
பதியினை நுகர்வ லென்று நினைத்தினி திருந்த போழ்திற்
பதியினைக் கலக்கிச் சென்று பறித்துயிர் பிறர்க்கு நீட்டும்
விதியினை விலகமாட்டார் மெலியவே யெளிய நீரார்
சூளா - சீய 96

ஆவது விதியெனின் அனைத்து மாயிடும்
போவது விதியெனின் எவையும் போகுமால்
தேவருக் காயினுந் தீர்க்கத் தக்கதோ
ஏவரு மறியொணு வீசற் கல்லதே
கந்த; சூரனமைச் 165

அலக்கணும் இன்பமும் அணுகு நாளிவை
விலக்குவம் என்பது மெய்யிற் றுகுமோ
விலக்கமுப் புரங்களை யெய்த வில்லியார்
தலைக்கலத் திரந்தது தவத்தின் பாலதோ
கம்ப; சடாயு 195

**377. வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி**
**தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.**

**உரைப்பகுதி :**

**பரிமே :—** கோடி தொகுத்தார்க்கும் - ஐம்பொறிகளான் நுகரப்படும் பொருள்கள் கோடியை முயன்று தொகுத்தார்க்கும்; வகுத்தான் வகுத்த வகையல்லால் துய்த்தல் அரிது – தெய்வம் வகுத்த வகையானல்லது நுகர்தல் உண்டாகாது.

ஒருயிர் செய்த வினையின்பயன் பிறிதோருயிரின்கண் செல்லாமல் அவ்வுயிர்க்கே வகுத்தலின், வகுத்தான் என்றார். *'. இசைத்தலும்

*தொல், சொல், 59,

உரிய வேறிடத்தான." என்பதனுன் உயர்திணையாயிற்று. படையா தார்க்கேயன்றிப் படைத்தார்க்கும் என்றமையால், உம்மை எச்ச உம்மை, வெறும் முயற்சிகளால் பொருள்களைப் படைத்தலல்லது நுகர்தலாகாது ; அதற்கு ஊழ் வேண்டும் என்பதாயிற்று.

மணக் :— விதானம் பண்ணினவன் விதானம் பண்ணின வகையினு னல்லது, கோடி பொருளை ஈட்டினவர்க்கும் அதனுல் வரும் பயன் கோடல் அருமையுடைத்து என்றவாறு.

இது பொருள் பெற்றுலும் நுகர்தற்கு ஊழ் வேண்டும் என்கிறது.

பருதி :— எ - து இவனுக்குப் பொசிப்பாகிய ஆகிறஊழ், அழிகிற ஊழ் என்னும் முறைமையிலே இவன் பொசிப்பதன்றியிலே இவனிடத் திலே கோடி தனம் இருந்தாலும் பொசிக்க ஒண்ணுது என்றவாறு. (6)

காளிங் :— எ - து அதனுல் முன்னஞ்செய்தார் செய்த வினைவகை யால் துய்த்தலல்லது மற்று கோடிபொருள் ஈட்டினுர்க்கும் அது கொண்டு துய்த்தல் அரிது. எனவே, அங்கனம் ஈட்டுதற்கு உரியர் தானம் முதலிய நல்வினை முன்செய்து மற்றது கொண்டு தான் நுகர்தர்க்கு வேண்டும் நல்வினை முன்னஞ்செய்யாரேல் ஈட்டினரேயாயினும் குறைவறத் துய்த்தல் அரிது என்றவாறு. (3)

## உரைவிளக்கப்பகுதி:

நுண் :— "இசைத்தலும் உரிய வேறிடத்தான" என்னும் சூத்தி ரத்துள் வேறுவாய்பாடு என்று உரைத்துக் 'காலம் உலகம்' என்ப வைக்குக் காலன் கொண்டான். உலகத்தார் பசித்தார் எனக் காட்டியதால் தெய்வம் என்பதற்கு வகுத்தான் என உயர்திணையாய்முழுதும் வேறு பட்டது.

**378.** துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின் (அ)

## உரைப்பகுதி:

பரிமே :—துப்புரவு இல்லார் துறப்பார்—வறுமையால் நுகர்ச்சி இல்லாதார் துறக்குங் கருத்து உடையராவர்; உறற்பால ஊட்டா கழியும் எனின்-ஊழ்கள் உறுதற்பாலவாய துன்பங்களை உறுவியாது ஒழியுமாயின்.

துறப்பார் என்பது ஆீற்று எதிர்கால முற்றுச்சொல். தம்மால் விடப்பெறுவன தாமே விடப்பெற்றுவைத்தும் கருத்து வேறுபாட்டால்

துன்ப முறுகின்றது ஊழின் வலியான் என்பது எஞ்சி நிற்றலின், மன் ஒழியிசைக்கண் வந்தது.

மணக் :— நுகரும்பொருள் இல்லாதார் துறக்க அமைவர்! தமக்கு வந்துறும் துன்பப்பகுதியானவை உருதுபோமாயின், என்றவாறு.

இது துறவறமானது ஊழினல் வரும் என்றது (7)

பருதி :— எ - து அழிகிற ஊழாகிற காலத்திலே, பொருள்மேலே ஆசையறப்பண்ணித் துறவறத்தில் நிற்கப்பண்ணும்; உடனேயழிகிற ஊழ்வந்தால் அத்துறவறத்தைக் கெடுத்து இல்லறமாக்கும் ஆகையால், ஆகிற ஊழ் அழிகிற ஊழ் என்று பாராமல் எப்போதும் போலிருப்பான் என்றவாறு. (9)

காளிங் :— எ - து தமது ஊழினல் வந்து எய்தற்பாங்கானவை பலபல நுகரவும் வந்து ஊட்டாவாய்க் கழியும் ஊழ் உளதாயின் மற்றிதனல் இங்கனம் துறப்பாராவார். மற்றுத் தாமுறுதல் தன்மையவாகிய ஊழானவை நுகர்வியாது ஒழியுமாயின் என்றவாறு.

துப்புரவு என்பது நுகர்வு. (2)

**379. நன்றுங்கால் நல்லவாக் காண்பவர் அன்றுங்கால்**
**அல்லல் படுவ தெவன். (௯)**

உரைப்பகுதி ;

**பரிமே :—** நன்று ஆங்கால் நல்லவாக் காண்பவர் - நல்வினை விளையுங்கால் அதன் விளைவாய இன்பங்களைத் துடைக்குந்திறன் நாடாது இவை நல்ல என்று இயைந்து அனுபவிப்பார், அன்று ஆங்கால் அல்லல் படுவது எவன் - ஏனைத்தீவினை விளையுங்கால் அதன் விளைவாய துன்பங்களையும் அவ்வாறு அனுபவியாது துடைக்குந்திறன் நாடி அல்லலுழப்பது என்கருதி.

தாமே முன் செய்துகொண்டமையானும், ஊட்டாது கழியாமையானும், இரண்டும் இயைந்து அனுபவிக்கற்பால; அவற்றுள் ஒன்றற்கு இயைந்தனுபவித்து ஏனையதற்கு அதுசெய்யாது வருந்துதல் அறிவன்று என்பதாம். இவை மூன்றுபாட்டானும் இன்பத்துன்பங்கட்குக் காரணமாய ஊழின்வலி கூறப்பட்டது.

மணக் :— நன்மைவரும் காலத்து நன்றாகக் காண்பவர் தீமைவரும் காலத்து அல்லற்படுவது யாதினுக்கு என்றவாறு.

இஃது அறிந்தவர் வருவன எல்லாம் இயல்பு என்று கொள்ள வேண்டும் என்றது. (8)

பருதி :— எ - து நல்வினை வருங்காலம் பிரியமா யிருக்கவும், அழிகிறஊழ் வந்த காலம் வருந்த ஒண்ணுது; ஆகிற ஊழ் என்று கொள்க என்றவாறு. (5)

காளிங் :— எ - து நல்விதியானே தமக்கு நன்குங் காலத்து அங்கனம் நல்லனவாகக் கண்டு வருகின்றவர் மற்று ஏனைஊழானே நன்மையல்லவாங்காலத்து அல்லலுழப்பது என்னை: எனவே இங்கனம் வரும் அல்லலும் அப்பொழுதைக்கு அது அல்லது பிறிதொன்று வந்து உதவாது என்பது பொருள் என்றவாறு. (6)

**உரைவிளக்கப்பகுதி :**

நுண் :— துறப்பார்; ஆர் ஈற்று எதிர்கால முற்று வினைச்சொல். அஃது ஒரு தொழிற்சொல்லே தன் எச்சப்பொருள்கொண்டு முடியும். அது பெயராகிய எழுவாயாதலும் வேற்றுமை ஏற்றலும் பெறும் என்க; அது "களித்தானை..........குளித்தானை" (929) "இரப்பார்க்கு ஒன்று ஈவார்மேல் நிற்கும் புகழ்" (232) எனவரும்.

**380.** **ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினுந் தான்முந் துறும்.** (ம)

**உரைப்பகுதி :**

**பரிமே :**— மற்றொன்று சூழினும் தான் முந்துறும் - தன்னை விலக்குதற்பொருட்டுத் தனக்கு மறுதலையாவதோர் உபாயத்தைச் சூழினும் தான் அவ்வுபாயமேயானும் பிறிதொன்றுனும் வழியாக வந்து அச்சூழ்ச்சியின் முற்பட்டு நிற்கும்; ஊழின் பெருவலி யா உள - அதனல் ஊழ்போல மிக்கவலியுடையன யாவையுள.

பெருவலி ஆகுபெயர். சூழ்தல் பலருடனும் பழுதற எண்ணுதல், செய்தற்கேயன்றிச் சூழ்தற்கும் அவதி கொடாது என்றமையின், உம்மை எச்சவும்மை. எல்லாம் வழியாக வருதல் உடைமையின், ஊழே வலியது என்பதாம். இதனுன் அவ்விருவகையூழின் வலியும் பொதுவாகக் கூறப்பட்டது.

**மணக் :**— ஊழினும் மிக்க வலியுடையன யாவை உள? பிறிதொன்றை ஆராயுங் காலத்தும், தான் முற்பட அவ்வாராய்ச்சிக்கு உடன் பட்டுநிற்கும் என்றவாறு. (4)

பருதி :— எ - து ஊழைப்போலே, பொல்லானில்லை; எப்படி என்றால், ஆகின்றகாலம், அழிகின்ற காலங்களிலே, தான் முன்னேவந்து நிற்கையால் என்றவாறு. (10)

காளிங் :— எ - து உலகத்து யாவர்க்கும் அவரவர் ஊழின் சிறந்த பெருவலியுடையன யாவை உள. எனவே யாவுமில்லை எனில், தமக்கு விதியினால் வருவது ஒழியத் தம் அவாவினால் வேறொன்று வரக்கருதினும் அஃதிறந்து மற்று அவ்விதியினால் வருவது தானே வந்து முந்துற்று நிற்கும் ஆதலால் என்றவாறு. (10)

## உரைவிளக்கப்பகுதி:

நுண் :— பெருவலி - பெருவலியை உடையன ; பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை என்னாது ஆகுபெயர் என்றார். 'பாயிரும் பனிக்கடல்'' என்னும் பரிபாட்டினுள், ''கயந்தலைக்கும்'' பண்புத்தொகைப் புறத்துவந்த அன்மொழி: ஈண்டு ஆகுபெயர் என்றார். இவ்வுரையாசிரியர் முன்னர் 'கனங்குழைக்கும்' (1081) இவ்வாறு உரைத்தார்.

இனித் ''தொடலைக் குறுந்தொடி'' (1135) என்பதனை உவமைத் தொகைப்புறத்து வந்த அன்மொழித்தொகை என்றாராதலால், '' ஐம்பாலறியும் பண்புதொகுமொழியும், மெய்யொருங்கியலுந் தொழில் தொகுமொழியும்'' என்னுஞ் சூத்திரவிதியால் பண்புத்தொகை வினைத்தொகைகளை ஒருமொழியாக்கி அஃது ஆகுபெயராய்வரும் எனவும், ''முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும், இருமொழிமேலும் ஒருங்குடனிலையலும், அம்மொழி நிலையாது அன்மொழிநிலையலும்'' என்னும் நியமவிதியாம் தொகைநிலைத் தொடர்மொழியாகிய இருமொழிக்கண் அன்றி ஒருமொழிக்கண் அன்மொழித் தொகை வாராது எனவும் கொள்வது இவ்வுரையாசிரியர் கருத்துப்போலும்.

இனிப் பண்புத்தொகை வினைத்தொகைகளின் புறத்து அன்மொழி வரும் என்னும் சூத்திரத்திற்கு எவ்வாறு கொள்வாரோ? எம்மனோர்க்கறிதல் அரிது என்க ''வேயின மென்றோள்'' என்னுங் கோவையாருள் ''பாயின மேகலை'' (282) என்பதனை, இச்சொற்கள் ஒரு சொன்னீர்மைப்படுதலின் ஆகுபெயரெனப்படும் என்றும், ''இயல் மன்னும் அன்பு'' என்னும் கோவையாருள் (365) மன்னும் அன்பு என்பதனைப் பெயரெச்சத்திற்கும் பெயர்க்கும் ஒருசொன்னீர்மைப்பாடுண்மையின் ஒரு சொல் என்றும், ''மாதுற்றமேனி'' (174) ஆகுபெயரென்றும் பேராசிரியரும் உரைத்தார்; அவை, தொகைநிலைத் தொடர்மொழி யாகலானும், ஆகுபெயரேயாக வேண்டும் என்க.

முதிராமுலை, முற்றாமுலை, உண்ணாமுலை, குடங்கையின்அகன்றவிழி, கை பரந்து வண்டிசைக்குங் கூந்தல் என்பன முதலியனவும் தொகாநிலைத் தொடர்மொழியாய் ஒருசொன்னீர்மைப்பாடாய் வருதலின் ஆகுபெயராம் என்பது.

இனித் தொல்காப்பியத்துள் மக்கட்சுட்டு என்பதனைப் பண்புத் தொகைப் புறந்துவந்த அன்மொழித் தொகை என்ற சேனாவரையர் உரைக்கு வழுக்காட்டி, இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆகுபெய ராயிற்று என்ற நச்சினார்க்கினியரும்; உயர்திணை அஃறிணை என்பவற்றை வினைத்தொகை பண்புத்தொகை ஆகுபெயராயின எனக் கூறினரல்லாது, ஆகுபெயர் அன்மொழித்தொகை ஒருசொல் இருசொல் என்றும் ஆகு பெயர்க்கும், அன்மொழித் தொகைக்கும் தம்முள் வேறுபாடு இன்னது என்றும் வரையறை கூறிற்றிலர்; ஆகையால் அவர் கருத்து எம்மனோர்க்கு அறிதல் அரிது என்க.

அறத்துப்பால் பரிமேலழகரையன் உரையுள், இரத்தினகவிராயன் எடுத்துச் சேர்த்த நுண்பொருண்மாலை முற்றிற்று.

## மேற்கோள்பகுதி :

மயிலை :— மற்று என்னும் இடைச்சொல் பிறிது என்னும் பொருளில் வந்தமைக்கு மேற்கோள். (நன். 432)

சங்கர :—ஊழலல்லாததொன்று என்னும் பொருள் தந்தமையின் பிறிது என்னும் பொருட்கண்வந்தது. நன். 433)

## ஒப்புமைப்பகுதி :

"வாழ்வினை நுதலிய மங்கலத்து நாள்
தாழ்வினை அதுவரச் சிரை சாத்தினன்
சூழ்வினை நான்முகத் தொருவற் சூழினும்
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ ?" —கம்ப. நகர் 163

"விதியது வலியினனும்." ௸ ஆரணிய. மாரீசன் 86

"வெம்சின விதியினை வெல்ல வல்லமோ." ௸ ஆரணிய. சடாயு 15

"விதலும் பிழைத்தல்தானும் விதிவழி யன்றி நம்மால்
ஆதலும் அழிவும் உண்டோ.'? பாரதம். 13ம். போ

"எவ்வக் துணையாய்ப் பொருள் முடிக்குந் தாளாண்மை
தெய்வ முடிப்புழி என்செய்யும்—மொய் கொண்டு
பூப் புக்கு வண்டார்க்கும் ஊர குறும்பியங்கும்
கோப்புக்குழிச் செய்வது இல் —பழமொழி. 227,

இவ்வகை தாதைகூற இரவிதன் பகைஞன் கேளா
உய்வகை-யில்லைபோலும் உணர்ந்தில னுரைத்ததொன்றும்

மெய்வகை விதியை யாரே வென்றவர் வினையிற்கேற்ற
செய்வகை செய்வே னென்னச் சிந்தைசெய்தினைய சொல்வான்
௸ சூரனமைச் 164

**அறத்துப்பால் உரை வளம் முற்றிற்று.**

# திருக்குறள் முதற்குறிப்பு அகராதி

## அறத்துப்பால்

[எண் பக்க எண்]


| | | | | | |
|---|---|---|---|---|---|
| அஃகாமை | 252 | அளவல்லசெய் | 378 | அன்றறிவாம் | 65 |
| அஃகியகன்ற | 250 | அளவறிந்தார் | 377 | ஆகூழால் | 474 |
| அகரமுதல | 3 | அளவின்கண் | 375 | ஆராவியற்கை | 471 |
| அகழ்வாரை | 224 | அறங்கூறான் | 255 | ஆற்றினொழுக்கி | 85 |
| அகனமர்ந்தீதலி | 150 | அறஞ்சொல்லும் | 259 | ஆற்றுவாராற்றல் | 305 |
| அகனமர்ந்து | 139 | அறத்தாறிது | 67 | இடனில் பருவத் | 293 |
| அஞ்சுவதோரும் | 468 | அறத்தாற்றின் | 83 | இணரெரி | 399 |
| அடக்கமமரருள் | 189 | அறத்தான் வருவ | 70 | இயல்பாகும் | 441 |
| அடல்வேண்டும் | 440 | அறத்திற்கே | 129 | இயல்பினான் | 84 |
| அந்தணரென் | 56 | அறத்தினூஉங் | 60 | இரத்தலின் | 310 |
| அமிழ்தினும் | 111 | அறவாழியந்த | 19 | இருணீங்கி | 450 |
| அருங்கேடன் | 282 | அறவினையாதெ | 414 | இருந்தோம்பி | 135 |
| அருட்செல்வம் | 328 | அறனழீஇ | 256 | இருமைவகை | 43 |
| அரும்பயனும் | 271 | அறனறிந்து | 253 | இருவேறுலகத்து | 478 |
| அருளல்ல | 340 | அறனாக்கம் | 238 | இருள்சேரிருவினை | 13 |
| அருளில்லார்க்கு | 333 | அறனியலா | 219 | இலமென்று | 249 |
| அருள்கருதி | 374 | அறனெனப் | 86 | இலர் பலர் | 357 |
| அருள்சேர்ந்த | 330 | அறனோக்கி | 263 | இலனென்று | 278 |
| அருள்வெஃகி | 251 | அறன்கடை | 213 | இலனென்னும் | 300 |
| அல்லலருளாள் | 332 | அறன்வரையான் | 223 | இல்லதெனில்ல | 93 |
| அல்லவை தேய | 155 | அறிவினால் | 407 | இல்வாழ்வான் | 73 |
| அவாவில்லார்க்கு | 470 | அறிவினுளெல் | 276 | இறந்தாரிறந்தார் | 402 |
| அவாவினை | 469 | அற்காவியல் | 426 | இறலீனும் | 253 |
| அவாவென்ப | 463 | அற்றவரென்பார் | 467 | இனியவுளவாக | 158 |
| அவிசொரிந்து | 346 | அற்றாரழிபசி | 306 | இனைத்துணைத் | 143 |
| அவ்வித்தழுக் | 241 | அன்பகத்தில்லா | 131 | இன்சொலாலீரம் | 149 |
| அவ்வியநெஞ்சத் | 244 | அன்பிலாரெல் | 123 | இன்சொலினிதீன் | 157 |
| அழுக்கற்றகன்ற | 245 | அன்பிற்கும் | 121 | இன்பமிடையறாது | 470 |
| அழுக்காறவா | 64 | அன்பின்வழிய | 134 | இன்மையுளின் | 227 |
| அழுக்காறுடை | 239 | அன்பீனுமார்வம் | 126 | இன்னாசெய்தா | 405 |
| அழுக்காறுடையா | 206 | அன்புமறனும் | 82 | இன்னாதிரக்கப் | 304 |
| அழுக்காறென | 243 | அன்புற்றமர்ந்த | 128 | இன்னாவென | 408 |
| அழுக்காற்றின் | 239 | அன்போடியைந் | 124 | ஈதலிசைபட | 313 |

ஈத்துவக்கும். 308
ஈன்றபொழுதிற் 117
உடைமையுள் 146
உண்ணாது 234
உண்ணாமையுள் 341
உண்ணாமை 343
உதவிவரைத் 167
உயிருடம்பின் 423
உரனென்னும் 45
உரைப்பார் 314
உலகத்தோடு 210
உள்ளத்தாலுள் 372
உள்ளத்தாற் 385
உள்ளியதெல் 401
உறங்குவது 435
உற்றநோய் 348
ஊருணிநீர் 289
ஊழிற்பெருவலி 484
எந்நன்றி 173
எப்பொருள் 454
எல்லார்க்கும் 193
எல்லாவிளக்கும் 390
எழுபிறப்புந் 108
எழுமையெழு 169
எளிதென 217
எள்ளாமை 370
எனைத்தானும் 409
எனைத்துணையர் 215
எனைப்பகை 279
என்பிலதனை 130
ஏதிலார்குற்றம் 263
ஏரினுழாஅர் 29
ஐந்தவித்தான் 47
ஐயத்தினீங்கி 452
ஐயுணர்வு 453
ஒத்ததறிவான் 289
ஒப்புரவினால் 295
ஒருபொழுதும் 432
ஒருமையுளாமை 194
ஒல்லும்வகை 61
ஒழுக்கத்தினெய் 208
ஒழுக்கத்தினொல் 206
ஒழுக்கத்துநீத் 40
ஒழுக்கமுடைமை 203
ஒழுக்கமுடைய 209
ஒழுக்கம் விழுப் 201
ஒழுக்காறாக் 236
ஒறுத்தாரை 229
ஒறுத்தார்க்கு 230
ஒன்றாகநல்லது 416
ஒன்றாவுலகத்து 316
ஒன்றானுந் 197
ஒன்னார்தெறலு 351
ஓர்த்துள்ளம் 456
கணைகொடிது 367
கண்ணின்று 258
கதங்காத்து 200
கள்வார்க்கு 379
களவினாலாகிய 373
களவின்கண் 374
களவென்னுங் 376
கறுத்தின்னா 404
கற்றதனாலாய 8
கற்றீண்டு 455
காக்கபொருளா 190
காமம் வெகுளி 461
காலத்தினாற் 162
குடம்பை 433
குணமென்னுங் 54
குழலினிது 114
கூத்தாட்டவை 425
கூற்றங்குதித்த 357
கெடுப்பதூஉங் 30
கெடுவல்யான் 183
கெடுவாக 184
கேடும்பெருக்க 182
கைம்மாறுவேண் 285
கொடுப்பதழுக் 240
கொலைவினையர் 422
கொல்லாமை 419
கொல்லான்புலா 346
கொன்றன்ன 172
கோளில் பொறி 21
சமன்செய்து 185
சாதலினின்னா 311
சார்புணர்ந்து 459
சிறப்பீனுஞ்செல் 58
சிறப்பீனுஞ் 403
சிறப்பொடு 36
சிறுமையுணீங்கிய 157
சிறைகாக்குங் 99
சிற்றின்பம் 249
சினத்தைப் 398
சினமென்னுஞ் 397
சீர்மைசிறப் 268
சுடச்சுடரும் 355
சுவையொளி 50
செப்பமுடைய 177
செயற்கரிய 48
செயற்பால 72
செயிரிற்றலைப் 345
செய்யாமற் 161
செய்யாமற்செற் 405
செல்லாவிடத் 394
செல்லிடத்து 393
செல்விருந்தோம் 142
செறிவறிந்து 191
சொல்லுகசொல் 272
சொற்கோட்டம் 186
தகுதியென 176
தக்கார்தகவிலர் 180
தந்தைமகற் 115
தம்பொருளென்ப 109
தம்மிற்றம் 116
தலைப்பட்டார் 445
தவஞ்செய்வார் 354
தவமறைந்து 362
தவமுந்தவம் 349
தற்காத்துத் 98
தனக்குவமையில் 17

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தன்னுயிர்க்கின்னு | 409 | நல்லாறெனப்படு | 417 | பற்றுக | 447 |
| தன்னுயிர்தானற | 356 | நல்லாறெனினும் | 299 | பாத்தூண்மரீஇய | 307 |
| தன்னுயிர்நீப்பி | 420 | நல்லாற்ருனடி | 329 | பிறப்பென்னும் | 457 |
| தன்னூன்பெருக் | 337 | நன்ருகுமாக்கம் | 421 | பிறர்க்கின்ன | 411 |
| தன்னெஞ்சறிவது | 383 | நன்ருங்கால் | 483 | பிறவிப்பெருங் | 23 |
| தன்னைத்தான் | 395 | நன்றிக்குவித்தா | 209 | பிறன்பழி | 260 |
| தன்னைத்தான்காத | 282 | நன்றிமறப்பது | 170 | பிறன்பொரு | 212 |
| தாளாற்றித் | 286 | நன்றேதரினும் | 178 | பிறன்மனை | 220 |
| தானந்தவம் | 37 | நாச்செற்று | 429 | புகழ்படவாழா | 322 |
| திறனல்ல | 231 | நாளெனவொன் | 428 | புகழ்புரிந் | 102 |
| தினற்பொருட் | 342 | நிலவரைநீள்புகழ் | 317 | புக்கிலமைந்தின் | 436 |
| தினைத்துணை | 165 | நிலையஞ்சி | 418 | புத்தேளுலகத் | 288 |
| தீப்பாலதான் | 278 | நிலையிற்றிரியாது | 192 | புறங்குன்றி | 365 |
| தீயவைசெய்தார் | 280 | நில்லாதவற்றை | 424 | புறங்கூறிப் | 257 |
| தீயவைதீய | 275 | நிறைமொழி | 52 | புறத்துறுப்பு | 132 |
| தீயினுற்சுட்ட | 198 | நிறையுடைமை | 228 | புறந்தூய்மை | 389 |
| தீவினையாரஞ்சார் | 274 | நீரின்றமையா | 38 | பெண்ணிற் | 94 |
| துப்பார்க்குத் | 26 | நுண்ணிய நூல் | 476 | பெறுமவற்றுள் | 106 |
| துறந்தாரிற் | 233 | நெஞ்சிற்றுறவார் | 364 | பெற்ருற்பெறின் | 101 |
| துறந்தார்க்குத் | 350 | நெடுங்கடலுங் | 34 | பேதைப்படுக்கும் | 475 |
| துறந்தார்க்குந் | 76 | நெருநலுளன் | 430 | பொய்ம்மையும் | 382 |
| துறந்தார்பெருமை | 42 | நோயெல்லாம் | 413 | பொய்யாமை | 388 |
| துறப்பார்மன் | 482 | பகச்சொல்லி | 261 | பொய்யாமையன் | 387 |
| துன்புறூஉந் | 153 | பகுத்துண்டு | 415 | பொருடீர்ந்த | 272 |
| துன்னியார் | 262 | பகைபாவமச்சம் | 218 | பொருணீங்கிப் | 332 |
| தூஉய்மையென் | 466 | படுபயன் | 248 | பொருளல்லவற் | 449 |
| தெய்வம்தொழா | 95 | படைகொண்டார் | 339 | பொருளற்ருர் | 334 |
| தெருளாதான் | 335 | பணிவுடையன் | 154 | பொருளாட்சி | 338 |
| தென்புலத்தார் | 78 | பயனில | 266 | பொறிவாயில் | 15 |
| தோன்றிற் | 320 | பயனில்சொற் | 269 | பொறுத்தலிறப் | 226 |
| நகையுமுவகை | 395 | பயன்மரம் | 291 | மகன்றந்தைக் | 119 |
| நடுவின்றி | 247 | பயன்றூக்கார் | 164 | மக்கள்மெய் | 112 |
| நத்தம்போற் | 319 | பரிந்தோம்பிக் | 202 | மங்கலமென்ப | 104 |
| நயனிலசொல்லி | 270 | பரிந்தோம்பிப் | 145 | மருந்தாகித் | 293 |
| நயனிலனென்ப | 267 | பரியினுமாகாவாம் | 480 | மலர்மிசையேகி | 10 |
| நயனீன்று | 156 | பல்லார்முனிய | 265 | மழித்தலுநீட்டலு் | 368 |
| நயனுடையான் | 294 | பழியஞ்சிப் | 80 | மறத்தல்வெகுளி | 398 |
| நயன்சாரா | 267 | பற்றற்றகண்ணே | 446 | மறந்தும் பிறன் | 278 |
| நலக்குரியார் | 222 | பற்றற்றேமென் | 363 | மறப்பினும் | 205 |
| நல்லவையெல்லா | 478 | பற்றிவிடா | 444 | மறவற்கமாசற்ருர் | 167 |

மற்றுந்தொடர்ப் 442
மனத்தது மாசாக 366
மனத்துக் கண் 63
மனத்தொடு 386
மனைத்தக்க 90
மனைமாட்சி 92
மன்னுயிரோம்பி 331
மிகுதியான்மிக்க 232
முகத்தானமர்ந் 151
மோப்பக்குழை 147
யாகாவாராயினும் 196
யாதனின் 438
யாமெய்யா 391
யானெனதென் 443
வகுத்தான்வகுத் 481
வசையிலா 324
வசையென்ப 322
வசையொழிய 325
வஞ்சமனத்தான் 359
வருவிருந்து 138
வலியார்முன் 336
வலியினிலைமை 361
வறியார்க்கொன் 297
வாணிகஞ்செய் 187
வாய்மையெனப் 381
வானின்றுலகம் 25
வானுயர்தோற்றம் 360
விசும்பிற்றுளி 33
விண்ணின்று 28
வித்துமிடல் 140
விருந்துபுறத்ததா 137
விழுப்பேற்றின் 237
விளிந்தாரின் 214
வீழ்நாள்படாமை 69
வேண்டற்க 252
வேண்டாமை 465
வேண்டியவேண் 352
வேண்டினுண்டா 439
வேண்டுங்கால் 464
வேண்டுதல் 12
வையத்துள் 88